JARJ
Jamal Academic Research Journal : an Interdisciplinary
அரபுத்தமிழ் இலக்கியங்கள் - Arabu Tamil Literature

Vol 4 -1 March 2023
Online Version: jmcjarj.org
ISSN (P) : 0973 - 0303
ISSN (O) : 2582 - 5941

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary

அரபுத்தமிழ் இலக்கியங்கள்

Arabu Tamil Literature

பதிப்பாசிரியர்கள்
முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்
ஹாஜி வாவு S.செய்யிது அப்துல் ரஹ்மான்
முனைவர் M.அப்துல் காதர்
முனைவர் S.சாமுவேல் ஆசீர் ராஜ்
திருமிகு கா.முகமது இஸ்மாயில்
முனைவர் மு.நசீர் அகமது
முனைவர் சே.சையது அபுதாகீர்

SINCE 1951
வெளியீடு :
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
தேசியத் தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி - 620 020, தமிழ்நாடு, இந்தியா

Vol – 4 No.1 – March – 2023
Online Version : www.jmcjarj.org

ISSN (P) : 0973–0303
ISSN (O) : 2582-5941

JARJ

JAMAL ACADEMIC RESEARCH JOURNAL : AN INTERDISCIPLINARY

அரபுத்தமிழ் இலக்கியங்கள்

Arabu Tamil Literature

<u>பதிப்பாசிரியர்கள்</u>

முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்

ஹாஜி வாவு S.செய்யிது அப்துல் ரஹ்மான்
முனைவர் M.அப்துல் காதர்
முனைவர் S.சாமுவேல் ஆசீர் ராஜ்

திருமிகு கா.முகமது இஸ்மாயில்
முனைவர் மு.நசீர் அகமது
முனைவர் சே.சையது அபுதாகீர்

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
தேசியத்தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் ‘A’ தரச் சான்று பெற்றது
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி – 620 020. தமிழ்நாடு, இந்தியா.

அரபுத்தமிழ் இலக்கியங்கள்

பதிப்பாசிரியர்கள் : **முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்**
ஹாஜி வாவு S.செய்யிது அப்துல் ரஹ்மான்
முனைவர் M.அப்துல் காதர்
முனைவர் S.சாமுவேல் ஆசீர் ராஜ்
திருமிகு கா.முகமது இஸ்மாயில்
முனைவர் மு.நசீர் அகமது
முனைவர் சே.சையது அபுதாகீர்

வகை : **பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள் தொகுப்பு**
(தமிழ் மற்றும் ஆங்கிலம்)

பக்கங்கள் : *400*

வெளியீடு : ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி *-20.*

அச்சாக்கம் : தி பிரிண்டிங் ஹவுஸ், திருச்சி *-23*

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary

ISSN (P) : 0973-0303

ISSN (O) : 2582-5941

Online Version : www.jmcjarj.org

Arabu Tamil Literature

Guest Editors : **Dr. A. Syed Zakir Hasan**
Haji Wavoo S. Syed Abdul Rahman
Dr. M.Abdul Khadar
Dr. S. Samuel Asir Raj
Mr. K.Mohamed Ismail
Dr. M.Nashir Ahamed
Dr. S.Syed Abuthahir

Subject : **Research Articles of an International Seminar**
(English and Tamil)

Pages : 400

Publication : Jamal Mohamed College (Autonomous)
Tiruchirappalli - 620 020.

Printing : The Printing House, Trichy -23.

Tel. No.: 0431 - 2331135
P.B.No. : 808

JAMAL MOHAMED COLLEGE (Autonomous)

COLLEGE WITH POTENTIAL FOR EXCELLENCE
Accredited (3rd Cycle) with 'A' Grade by NAAC
DBT Star College Scheme & DST - FIST Funded
(Affiliated to Bharathidasan University)
Since 1951
No.7, RACE COURSE ROAD, KHAJANAGAR, TIRUCHIRAPPALLI - 620020.
TAMILNADU, INDIA.
Website : www.jmc.edu
Email : principaljmc@ymail.com / princi@jmc.edu

டாக்டர் அ.கா.காஜா நஜீமுதீன்,
செயலர் & தாளாளர்



வாழ்த்துரை

இஸ்லாமிய சமயத்தின் வேத மொழியான 'அரபி' என்ற சொல்லிற்கு பண்பட்டது என்று பொருள் ஆகும். தமிழ்நாட்டில் குடியேறிய அரபு நாட்டு மக்கள் தமிழ் மொழியை 'அற்விய்யா' என்று குறிப்பிட்டு வந்துள்ளனர். அறிவையும் அறத்தையும் தன் இலக்கியங்கள் வாயிலாக வலியுறுத்தும் மொழி தமிழ் மொழி என்ற காரணத்தாலேயே தமிழ் மொழியை 'அற்விய்யா' என்று அழைத்துள்ளனர் என அறிகிறோம். மேலும் தமிழைக் கற்று அரபி மொழியை எழுத்து மொழியாகப் பயன்படுத்தி எண்ணற்ற அரபுத்தமிழ் இலக்கியங்களை இம்மக்கள் வழங்கினர்.

பொதுப் பயன்பாட்டில் அருகிவிட்ட இம்மொழி நடையை ஆவணப்படுத்தும் வகையில் அரபுத்தமிழ் இலக்கியப் பன்னாட்டுக் கருத்தரங்கை எம் கல்லூரி முதுகலைத் தமிழாய்வுத்துறை நெறியாளுகை செய்வதைப் பாராட்டி மகிழ்கிறேன். இக்கருத்தரங்கம் வெற்றிபெற மனமார்ந்த வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன். இப்பணியில் எம் கல்லூரியோடு கரம் கோர்த்துள்ள பிற உயர்கல்வி நிறுவனங்களுக்கு என் உளமார்ந்த நன்றிகளை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

டாக்டர் அ.கா.காஜா நஜீமுதீன்
செயலர் & தாளாளர்

Tel. No.: 0431 - 2331135
P.B.No. : 808

JAMAL MOHAMED COLLEGE (Autonomous)

COLLEGE WITH POTENTIAL FOR EXCELLENCE
Accredited (3rd Cycle) with 'A' Grade by NAAC
DBT Star College Scheme & DST - FIST Funded
(Affiliated to Bharathidasan University)

Since 1951

No.7, RACE COURSE ROAD, KHAJANAGAR, TIRUCHIRAPPALLI - 620020.
TAMILNADU, INDIA.

Website : www.jmc.edu
Email : principaljmc@ymail.com / princi@jmc.edu

ஹாஜி. எம்.ஜே.ஜமால் முஹம்மது
பொருளாளர்



வாழ்த்துரை

சங்க காலம் தொட்டே கடல்வழி வாணிபம் மூலமாகத் தமிழகத்தோடு தொடர்பில் இருந்த அராபியர்கள் இஸ்லாமிய மார்க்கம் தோன்றிய பின்னர் தமிழகத்தின் பெருவழிப்பாதையான கள்ளிக்கோட்டை – புலிகட் பகுதியில் பரவி வாழ்ந்து இஸ்லாமியக் கொள்கைகளை வளர்த்தனர். அவர்கள்தாம் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரபித்தமிழ் வரிவடிவத்தை உருவாக்கி தென்தமிழகத்திலும் இலங்கையிலும் அதனை நிலைபெறச் செய்தனர். சமயப் பாடச்சாலைகளில் போதனை மொழியாக அரபுத்தமிழைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறிகிறபோது இதன் முக்கியத்துவம் புலப்படுகிறது.

வழக்கொழிந்த மொழி நடை என்றாலும் பழஞ்சுவடுகளைப் பாதுகாப்பது கல்வியாளர்களின் சமூகக் கடமை என உணர்ந்து பன்னாட்டுக் கருத்தரங்கம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு வருவது உள்ளபடியே பாராட்டத்தக்கது. எம் கல்லூரி முதுகலைத் தமிழாய்வுத்துறையோடு இணைந்து அரபித்துறை, இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம் ஆகியவற்றோடு பிற பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஆகியன இணைந்து மேற்கொள்ளும் இம்முயற்சி வெற்றியடைய என் உளமார்ந்த வாழ்த்துகள்!

ஹாஜி. எம்.ஜே.ஜமால் முஹம்மது
பொருளாளர்

Tel. No.: 0431 - 2331135
P.B.No. : 808

JAMAL MOHAMED COLLEGE (Autonomous)

COLLEGE WITH POTENTIAL FOR EXCELLENCE
Accredited (3rd Cycle) with 'A' Grade by NAAC
DBT Star College Scheme & DST - FIST Funded
(Affiliated to Bharathidasan University)

Since 1951

No.7, RACE COURSE ROAD, KHAJANAGAR, TIRUCHIRAPPALLI - 620020.
TAMILNADU, INDIA.

Website : www.jmc.edu
Email : principaljmc@ymail.com / princi@jmc.edu

முனைவர் க.அப்துஸ் சமது
உதவிச் செயலர்

வாழ்த்துரை

இந்திய மொழியான இந்தி மொழியை அரபி வரிவடிவத்தில் எழுதியதனால் உருது மொழி வரிவடிவம் உருவானது போன்று தமிழ் மொழியை அரபி எழுத்து வடிவத்தில் எழுத ஆரம்பித்ததனால் அரபுத்தமிழ் உருவானது என்று கூறப்படுகிறது. ஏறத்தாழ நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட சமய நூல்கள் அரபுத்தமிழில் தோன்றியுள்ளன. காயல்பட்டினத்தில் அரபுத்தமிழ் மொழியில் பாமாலைகள் இயற்றப்பட்டுள்ளன. ஆண்களைவிட பெண்களே இம்மொழியில் அதிக புலமையுடன் இருந்து வந்துள்ளனர். கடித மொழியாகவும் இம்மொழிநடை பயன்படுத்தப்பட்டுள்ளது என்று அறிகிறபோது மொழியின் பண்டிதத்தன்மைக்கு அப்பால் மக்கள் மொழியாக இம்மொழிவழக்கு நடைமுறையில் இருந்து வந்துள்ளது என்பதை உணரமுடிகிறது.

இத்தகைய அரிய மொழி வடிவத்தை ஆவணப்படுத்தல் காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்து பல கல்வி நிறுவனங்களுடன் இணைந்து எம் கல்லூரி முதுகலைத் தமிழாய்வுத்துறை, அரபுத்துறை மற்றும் இஸ்லாமியத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம் ஒழுங்கு செய்யும் பன்னாட்டுக் கருத்தரங்கம் வெற்றிபெற என் வாழ்த்துகள்!

முனைவர் க.அப்துஸ் சமது
உதவிச் செயலர்

Tel. No.: 0431 - 2331135
P.B.No. : 808

Since 1951

JAMAL MOHAMED COLLEGE (Autonomous)

COLLEGE WITH POTENTIAL FOR EXCELLENCE
Accredited (3rd Cycle) with 'A' Grade by NAAC
DBT Star College Scheme & DST - FIST Funded
(Affiliated to Bharathidasan University)
No.7, RACE COURSE ROAD, KHAJANAGAR, TIRUCHIRAPPALLI - 620020.
TAMILNADU, INDIA.

Website : www.jmc.edu
Email : principaljmc@ymail.com / princi@jmc.edu

முனைவர் கா.ந.அப்துல் காதர் நிஹால்,
நிர்வாக உறுப்பினர் மற்றும் கெளரவ இயக்குநர்

வாழ்த்துரை

'அரபுத்தமிழ் எங்கள் அன்புத் தமிழ்' என மக்களால் நேசிக்கப்பட்டு வந்த மொழிவழக்கு அச்சுப் பொறிகளின் வரவுகள் காரணமாக மெல்ல மெல்ல செல்வாக்கு இழந்தது எனக் கூறப்படுகிறது. அரபுத்தமிழ் வழக்கில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் சாதாரண மக்களின் சொல் வழக்குகள் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை நாட்டில் முஸ்தபா ஆலிம் வலி அவர்கள் 'பதுகுர் ரஹ்மான் பி தப்சீர் இல் குரான்' எனத் திருக்குர்ஆனுக்கு விரிவுரை எழுதியுள்ளார் என அறிகிறபோது அந்நாட்டு மக்கள் இம்மொழி வழக்கிற்கு அளித்த முக்கியத்துவம் அறிய முடிகிறது. பொதுவாக இதன் பயன்பாடு குறைந்திருந்தாலும் சில சமயக் கல்லூரிகளில் அரபுத்தமிழ் கற்பித்து வருவதையும் குறிப்பிட்டாக வேண்டும். தொழுகை அழைப்பைக் குறிக்கும் 'பாங்கு' என்னும் பாரசீகச் சொல் 'வாங்கு' எனத் எனத் தமிழகக் கிராமப் புறங்களில் வழங்கப்படுகிறது. இச்சொல் அரபுத்தமிழ் வடிவம் என்பது குறிப்பிடத்தக்கது.

பல உயர்கல்வி மையங்கள் இணைந்து நெறியாளுகை செய்யும் இப்பண்பாட்டுக் கருத்தரங்கம் இன்றைய பேச்சு வழக்கில் கலந்துள்ள அரபுத்தமிழ்ச் சொற்களைக் கண்டறியும் முயற்சியை மேற்கொள்ளும் என நம்புகிறேன். அனைத்து வகையிலும் கருத்தரங்கம் வெற்றிபெற என் வாழ்த்துகள்!

முனைவர் கா.ந.அப்துல் காதர் நிஹால்
நிர்வாக உறுப்பினர் மற்றும் கெளரவ இயக்குநர்

Tel. No.: 0431 - 2331135
P.B.No. : 808

JAMAL MOHAMED COLLEGE (Autonomous)
COLLEGE WITH POTENTIAL FOR EXCELLENCE
Accredited (3rd Cycle) with 'A' Grade by NAAC
DBT Star College Scheme & DST - FIST Funded
(Affiliated to Bharathidasan University)
Since 1951
No.7, RACE COURSE ROAD, KHAJANAGAR, TIRUCHIRAPPALLI - 620020.
TAMILNADU, INDIA.
Website : www.jmc.edu
Email : principaljmc@ymail.com / princi@jmc.edu

முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன்
முதல்வர்

வாழ்த்துரை

அரபி மொழி எழுத்துகள் இருபத்து எட்டுடன் கூடுதலாக தமிழ்மொழி ஒலி அமைப்புடன் இயைந்த எட்டு எழுத்துகளுடன் சேர்த்து உருவான மொழி வழக்கே அரபுத்தமிழ் எனப்படுகிறது. அரபுத்தமிழ் வளர்ச்சிக்குக் காயல்பட்டின மக்களின் பங்களிப்பு மகத்தானது ஆகும். இங்கிருந்தே 'தப்சீர் பத்ஹுல் கரீம்', 'தப்சீர் பத்ஹுல் ரஹீம்' போன்ற பிரபல குர்ஆன் விரிவுரைகள் அரபுத்தமிழில் தோன்றியுள்ளன. இக்கருத்தரங்க ஏற்பாட்டில் எம் கல்லூரியுடன் இணைந்துள்ள திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மற்றும் காயல்பட்டினம் வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி ஆகியன கரம் கோர்த்துள்ளமை பொருத்தமான வரலாற்று நிகழ்வாகவே கருதுகிறேன்.

சென்னை புதுக்கல்லூரிக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்துறை சார்ந்த ஆய்வுக் களங்கள் மிகவும் வலியுறுத்தப்பட்டு வரும் இன்றைய சூழலில் இக்கல்லூரியின் முதுகலைத் தமிழாய்வுத்துறையுடன் அரபித்துறை மற்றும் இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம் இணைந்து செயலாற்றுவதை உளமாற பாராட்டி மகிழ்கிறேன். இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் பெயரளவில் அல்லாமல் செயலளவில் பன்னாட்டுக் கவனத்தை ஈர்க்கும் என உறுதியாக நம்புகிறேன், வாழ்த்துகள்!

முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன்
முதல்வர்

THE NEW COLLEGE

(AN AUTONOMOUS INSTITUTION AFFILIATED TO THE UNIVERSITY OF MADRAS
& ACCREDITED BY NAAC WITH 'A' GRADE IN THE 3rd CYCLE)
Sponsored by : THE MUSLIM EDUCATIONAL ASSOCIATION OF SOUTHERN INDIA (MEASI)

YA ALLAH
INCREASE MY KNOWLEDGE

"ASSOCIATION GARDENS", New No.147 / Old No.87, Peters Road, Royapettah, Chennai - 600 014. TAMIL NADU, INDIA.
Phone : +91 44 2835 1269 / +91 44 2835 0297

Dr. S. BASHEER AHAMED, M.A., M.Phil., B.Ed., Ph.D.
PRINCIPAL

நாள்: 09.03.2023

'இஸ்லாம் எங்கள் வழி இன்பத்தமிழ் எங்கள் மொழி' என்ற கொள்கையுடன் தமிழ்நாட்டில் வாழும் முஸ்லிம் மக்கள் தமிழின் வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றி வருகிறார்கள். இதற்கு சீறாப்புராணம் தொடங்கி இஸ்லாமிய சமயக் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் சான்றாகும். தமிழ்நாட்டில் தமிழ் மொழியைத் தங்கள் தாய் மொழியாகப் பேசி வந்த முஸ்லிம் மக்கள் அரபு மக்களுடனான வணிகத் தொடர்பினால் அரபு மொழியினைக் கற்றுக் கொண்டார்கள். அரபு தேசத்து வணிகர்களோ தமிழ் மொழியைப் பேசக் கற்றுக் கொண்டார்கள். அவர்கள் தமிழ் மொழியின் எழுத்து வடிவத்தைக் கற்றுக் கொண்டாலும் தங்கள் உணர்வுகளைத் தமிழ்ப் படிக்கத் தெரியாத அரபியேர்களுக்கு உணர்த்தும் வகையில் தமிழ் மொழியை அரபு மொழியின் வடிவத்தில் எழுதி உணர்த்தத் தொடங்கினார்கள். அதன் வளர்ச்சி நிலையே 'அரபுத் தமிழ்' என்னும் ஒரு இலக்கிய வடிவம் தோற்றம் பெறுவதற்குக் காரணமாக அமைந்தது. அத்தகைய சிறப்பு வாய்ந்த 'அரபுத்தமிழ்' இலக்கியங்கள் குறித்து உரையாடல் நிகழ்த்துவதும் ஆய்வு செய்ய வேண்டியதும் காலத்தின் கட்டாயம். இச்செயல்பாடு முஸ்லிம் மக்களின் பண்பாட்டுப் பின்புலத்தை அறிவதற்குப் பெரிதும் துணை நிற்கும்.

சென்னைப் புதுக்கல்லூரியின் தமிழாய்வுத்துறை இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சிக்குத் துணை நிற்கும் வகையில், பல்வேறு ஆய்வுகளை இன்றளவும் முன்னெடுத்துச் செல்கின்றது. பேராசிரியர்கள் அனைவரும் புதுக்கல்லூரிக்கும் தமிழ்த் துறைக்கும் அடையாளமாக விளங்கித் தமிழையும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களையும் வளர்த்தெடுத்து வருகின்றனர்.

THE NEW COLLEGE

(AN AUTONOMOUS INSTITUTION AFFILIATED TO THE UNIVERSITY OF MADRAS
& ACCREDITED BY NAAC WITH 'A' GRADE IN THE 3rd CYCLE)
Sponsored by : THE MUSLIM EDUCATIONAL ASSOCIATION OF SOUTHERN INDIA (MEASI)

YA ALLAH INCREASE MY KNOWLEDGE

"ASSOCIATION GARDENS", New No.147 / Old No.87, Peters Road, Royapettah, Chennai - 600 014. TAMIL NADU, INDIA.
Phone : +91 44 2835 1269 / +91 44 2835 0297

Dr. S. BASHEER AHAMED, M.A., M.Phil., B.Ed., Ph.D.
PRINCIPAL

1951 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் நாளில் தொடங்கப்பட்ட புதுக்கல்லூரி 72 ஆண்டுகளைக் கடந்தும் இன்றளவும் புதுப் பொலிவுடன் திகழ்ந்து வருகின்றது. கல்லூரியின் தமிழ்த் துறையும் அதே அளவிற்கு புதுமையுடன் விளங்கி வருகின்றது. சென்னையின் சுற்றுப்புறத்திலும் அயல் மாவட்டங்களிலும் உள்ள அடித்தட்டு முஸ்லிம் மாணவர்களுக்கு மட்டுமன்றி அனைத்துச் சமுதாய மாணவர்களின் கல்விச் சேவையை உயர்தர வசதிகளுடன் குறைந்தக் கட்டணத்தில் அளித்து வருகின்றது.

கல்லூரியின் சிறந்த உட்கட்டமைப்பையும் கல்விச் செயல்பாடுகளையும் கருத்தில் கொண்டு தேசிய தர மதிப்பீட்டுக் குழு 2023-ஆம் கல்வியாண்டில் புதுக்கல்லூரிக்கு A++ என்னும் தகுதியை வழங்கியுள்ளது. இது, கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் மென்மேலும் ஊக்கத்தை வளர்த்துள்ளதோடு அவர்களது செயல்பாட்டையும் விரிவுபடுத்தியுள்ளது. இதன் ஒரு பகுதியாகத் திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் முதுகலைத் தமிழாய்வுத்துறை இஸ்லாமியத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம், முதுகலை அரபுத்துறை,திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் சமூகவியல்துறை, திருநெல்வேலி சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியின் வரலாற்றுத் துறை மற்றும் காயல்பட்டினம் வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களுடன் சென்னைப் புதுக்கல்லூரியின் தமிழாய்வுத்துறை இணைந்து "அரபுத் தமிழ் இலக்கியங்கள்" என்னும் பொருண்மையிலான பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்துவதை எண்ணி பெருமகிழ்வு கொள்வதுடன் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

THE NEW COLLEGE
NEW No: 147, OLD No: 87,
PETERS ROAD,
ROYAPETTAH,
CHENNAI-600 014.

முதல்வர்
முனைவர் சே .பஷீர் அகமது
புதுக்கல்லூரி , சென்னை-14.

திருநெல்வேலி சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரித் தாளாளர் அல்ஹாஜ் த.இ.செ.பத்ஹுர் ரப்பானி அவர்களின் வாழ்த்துரை

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி, சென்னை புதுக்கல்லூரி, பாளையங்கோட்டை சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, காயல்பட்டிணம் வாவு வஜீஹா கல்லூரி ஆகிய கல்லூரிகளின் உதவியோடு திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் இணைந்து முன்னெடுத்துள்ள அரபுத் தமிழ் பன்னாட்டுக் கருத்தரங்கு சிறக்க என் இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இஸ்லாமிய மார்க்கத்தின் இனிய மொழியாகத் திகழும் அரபி மொழி உலகளாவிய அளவில் புகழ்மிக்க மொழியாக பண்பட்ட மொழியாகத் திகழ்கிறது. தமிழ் மொழியும் அரபு மொழியும், இலங்கை போன்ற நாடுகளில் இன்னும் பின்னிப்பிணைந்து மக்களால் பேசப்படும் பெருமைக்குரிய மொழிகளாகத் திகழ்கின்றன. அரபுத் தமிழில் எண்ணற்ற இஸ்லாமிய நூல்கள் வெளிவந்துள்ளன. அல்குர்ஆனின் விரிவுரைகள் அரபுத் தமிழ்மொழியில் காணக்கிடைக்கின்றன. இலங்கையில் அரபுத் தமிழ் அகராதிகளின் பயன்பாடு அதிகமாக உள்ளது. தமிழகத்திற்கும், அரபு நாடுகளுக்குமிடையே பன்னெடுங்காலமாகவே வணிகத் தொடர்புகள் இருந்த காரணத்தால் இரு பண்பாடுகளும் மொழி, சமூகம், பழக்கவழக்கம், வணக்க வழிபாடுகள், கல்வி, இலக்கியம் என்பதாக ஒன்றிணைந்து பயணித்தன. தேங்காய்ப்பட்டினம், காயல்பட்டினம், கீழக்கரை, அதிராமப்பட்டினம்,

நாகப்பட்டினம் ஆகிய கடற்கரை நகரங்களில் இஸ்லாமியரின் குடியேற்றங்கள் ஏற்பட்டதின் விளைவாக இருமொழிகளுக்குள் இணைப்பு ஏற்பட்டது. இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் திருக்குர்ஆன் கருத்துரைகளையும், நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் நபிமொழி செய்திகளையும், வலிமார்களின் வரலாறுகளையும் அரபுத் தமிழில் தந்தனர். திருக்குர் ஆனின் அரபுத் தமிழ் விரிவுரைகளான தப்சீர் பத்ஹுல் கரீம். தப்சீர் பத்ஹுல் ரஹீம் போன்ற நூல்கள் வெளிவந்து புகழ்பெற்றன. அரபுத் தமிழில் கி.பி. 1889 ஆம் ஆண்டில் "கஷ்பூர் ரான் பீ கல்பில் ஜான்" எனும் வார ஏடும், கி.பி.1906 ஆம் ஆண்டில் செய்தி விநோதம் எனும் பொருளில் "அஜாயிபுல் அக்பர்" எனும் வார ஏடும் வெளிவந்ததாக இந்து தமிழ் கட்டுரையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. மதரசாக்களில் இருமொழிகளும் பயன்படுத்தப்பட்டன. உலகில் 26 நாடுகளின் ஆட்சிமொழியாகத் திகழும் அரபு மொழியை சற்றொப்ப 31 கோடி மக்கள் உலகெங்கும் பேசிவருகின்றார்கள். உலகப் பல்கலைக்கழகங்களில் அரபு மொழி ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. தமிழகப் பல்கலைக்கழகங்களில் அரபுத் துறைகள் தொடங்கப்பட்டு, தமிழுக்கும் அரபு மொழிக்கும் இடையேயுள்ள தொடர்புகள் ஆராயப்பட வேண்டும். அழகு தமிழில் அரபுத் தமிழ் அகராதிகள் உருவாக்கப்பட வேண்டும். தமிழ் இலக்கியங்களை அரபு மொழிக்குக் கொண்டு செல்வதும், அரபு இலக்கியங்களைத் தமிழ் மொழிக்குக் கொண்டு வருவதும் இன்றைய தேவை. இதன் காரணமாகவே திருநெல்வேலி, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியில் அரபுத்துறை தொடங்கப்பட்டது போல் தமிழகத்தின் அனைத்து இஸ்லாமியக் கல்லூரிகளிலும் அரபுத் துறைகள் தொடங்கப்பட்டு அரபுத் தமிழ் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள் ஆய்வுக் கோவைகளாக வெளியாவதும் அம்முயற்சியில் நம் கல்லூரியும் ஒன்றிணைவதும் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

அல்ஹாஜ் த.இ.செ.பத்ஹுர் ரப்பானி,

கல்லூரி தாளாளர்,

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி,

ரஹ்மத்நகர், திருநெல்வேலி.

10/03/23

☎ : 95-4639-280900
Tele fax :954639-284499

WAVOO WAJEEHA WOMEN'S COLLEGE

OF ARTS & SCIENCE

(Run by : **Wavoo SAR Educational Trust**)

P.O.Box.:7, Tiruchendur Road, Kayalpatnam-628204, Thoothukudi Dist
e-mail:www.college@yahoo.co.in Website: www_col.com

PRESIDENT	VICE PRESIDENT	SECRETARY	ASST.SECTRETARY	TREASURER	ASST.TREASURER
Alhaj W.S.SEYED ABDUR RAHMAN	W.S.A.R.SHAHUL HAMEED B.E.,M.S.	W.M.M.MOHUTHAZEEM B.A.,(CS)	W.S.A.R. AHAMED ISHAQUE B.A.,	W.S.HABIBULLAH B.E.,	W.S.A.R.KATHEEJATHUL FATHIMA

வாழ்த்துரை

அல்ஹாஜ். வாவு. எஸ். ஏ. செய்யது அப்துர் ரஹ்மான்
கல்லூரி நிறுவனர் - தலைவர்

எல்லாப் புகழும் வல்ல இறைவன் ஒருவனுக்கே!

ஒரு காலத்தில் காயல்பட்டணம் உட்பட கடற்கரை நகரங்களில் செழித்தோங்கிய அரபுத் தமிழ் மொழி இன்று நூலகங்களில் வெறும் நூல்களாகவே அடைபட்டுக் கிடக்கின்றன. அதை ஆராய்ச்சி செய்து நூலாக, ஆய்வு இதழாக வெளியில் கொண்டு வருவது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. இதில் தென் தமிழகத்தில் அரபுத் தமிழின் பிறப்பிடமான காயல்பட்டிணத்தில் வங்கக் கடலோரம் அமைந்திருக்கும் வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியின் பங்களிப்பும் உள்ளது என்பதை அறிந்து நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். அல்ஹம்துலில்லாஹ்!

அரபுத் தமிழ் மொழி இக்கால மக்களிடம் செல்வாக்கு இழந்த ஒரு மொழியாக கருதப்பட்டாலும், தற்போது ஐந்து கல்வி நிறுவனங்கள் இணைந்ததால் ஆராய்ச்சி கருத்தரங்கமாக உருப்பெற்று இருப்பது மகிழ்ச்சிக்குரியது. அரபுத் தமிழ் இலக்கியங்களில் நிறைய தமிழ் இலக்கியங்கள் குறித்த சிந்தனைகள் அடங்கி உள்ளன என்பது போற்றுதலுக்குரியது. அது மென்மேலும் வளர இறைவனிடம் பிரார்த்திப்போமாக.. இந்த அரபுத் தமிழ் ஆராய்ச்சி கருத்தரங்கம் சிறக்க **மனம் நிறைந்த வாழ்த்துக்கள்! பாராட்டுக்கள்!!**

President
WAVOO WAJEEHA WOMEN'S COLLEGE
OF ARTS AND SCIENCE
Tiruchendur Road

பதிப்புரை

பிராமி வரி வடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ள காரணத்தினால் பண்டைய கல்வெட்டுக்களை ஆராயாமல் நாம் விட்டுவிடுவதில்லை. இந்த கல்வெட்டுகள் தான் பண்டைய தமிழரின் தொல் மரபிற்கு உறுதியான அடித்தளங்களாக விளங்குகின்றன. இந்த கோனத்திலிருந்தே அரபுத்தமிழ் வடிவத்தையும் நாம் அணுக வேண்டும். 'அரபுத்தமிழ்' தமிழின் 'போட்டித் தமிழ்' அல்ல, மாறாக 'பக்கத்தமிழ்'. தமிழகத்தில் குடியேறிய அரபியர் தமிழராக அடையாளம் மாற இணைப்புப் பாலமாக விளங்கிய மொழி வழக்கே அரபுத்தமிழாகும். இன்றைக்கும் அதன் சுவடுகள் ஆங்காங்கே மறையாமல் இருப்பதை ஆவணப்படுத்தும் முயற்சியே இப்பன்னாட்டுக் கருத்தரங்கம்.

இக்கருத்தரங்க நிகழ்வில் தமிழகத்தைச் சேர்ந்த கல்விப்புலம் சார்ந்த வல்லுநர்களுடன் மார்க்க அறிஞர்களும் பங்கெடுக்க முன்வந்துள்ளமை மிகவும் வரவேற்கத்தக்கது. தமிழகத்தைச் சார்ந்த பேராளர்களுடன் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியரும் பங்கெடுப்பது இக்கருத்தரங்கில் பன்னாட்டுத் தன்மையை உறுதிப்படுத்துகிறது. இம்முயற்சியில் இணைந்துள்ள **திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை; சென்னை, புதுக்கல்லூரியின் தமிழாய்வுத்துறை; திருநெல்வேலி, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியின் வரலாற்றுத்துறை; காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி** ஆகிய நிறுனங்களின் நிர்வாகிகள் மற்றும் பேராசிரியர்களை நன்றியுடன் நினைவு கூர்கிறோம். மேலும், **திருச்சி, ஜமால் முகமது கல்லூரியின் முதுகலைத் தமிழாய்வுத்துறை; இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்; முதுகலை அரபுத்துறை** ஆகியவை இத்தேடலில் இணைந்து பயணிப்பது மகிழ்வுக்குரிய நிகழ்வுகளாகும்.

ஜமால் முகமது கல்லூரியின் கல்விப்புலம் சார்ந்த பணிகளில் எப்போதும் பின்புலமாக உள்ள கல்லூரிச் செயலர் மற்றும் தாளாளர் **டாக்டர் ஏ.கே.காஜா நஜீமுத்தீன்**, பொருளாளர் **ஹாஜி எம்.ஜே.ஜமால் முகமது**, துணைச் செயலர் முனைவர் கே.ஏ.அப்துஸ் சமது, கௌரவ இயக்குநர் மற்றும் உறுப்பினர் **முனைவர் கே.என்.அப்துல் காதர் நிஹால்**, கல்லூரி முதல்வர் **முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன்**, துணை முதல்வர் **முனைவர் அ.முகம்மது இப்ராஹீம்**, கூடுதல் துணை முதல்வர் **முனைவர் எம்.முகம்மது சிஹாபுதீன்**, விடுதி நிர்வாக இயக்குநர் **முனைவர் கே.என்.முகம்மது பாசில்**, பெண்கள் விடுதி நிர்வாக இயக்குநர் **செல்வி ஜெ.ஹாஜிரா பாத்திமா** ஆகியோருக்கு நன்றிகள் உரியவை.

திருநெல்வேலி மனோன்மனியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் சமூகவியல்துறைத் தலைவர் **முனைவர் எஸ்.சாமுவேல் ஆசீர் ராஜ்,** சென்னை, புதுக்கல்லூரி **நிர்வாகத்தினர், முதல்வர்,** தமிழாய்வுத்துறைத் தலைவரும் கலைப்புல முதன்மையருமான **முனைவர் மு.அப்துல் ரசாக்,** திருநெல்வேலி சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியின் செயலர் **அல்ஹாஜ் த.இ.செ.பத்ஹுர் ரப்பானி,** மற்றும் முதல்வர் **முனைவர் சே.மு.அப்துல் காதர்,** காயல்பட்டணம் வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் செயலர் **ஹாஜி. வாவு M.M. மொகுதஷீம்,** மற்றும் துணைச்செயலர் **ஹாஜி. வாவு S.A.R. அஹமது இஸ்ஹாக் ஆலிம் M.A.அஸ்ஹரி** ஆகியோருக்கும் நனிநன்றி.

ஜமால் முகமது கல்லூரியின் தமிழ்த்துறை நிகழ்வுகளில் எப்போதும் பங்கேற்கும் **தமிழாய்வுத்துறைப் பேராசிரியர்கள்** அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பாக இக்கருத்தரங்கம் சிறக்க பல்லாற்றானும் உதவிய இஸ்லாமியத் தமிழ்ப்பண்பாட்டு ஆய்வு மைய ஒருங்கிணைப்பாளர் **திரு.கா.முகமது இஸ்மாயில்** அவர்களுக்கும், ஜமால் முகமது கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் **முனைவர் க.சிராஜுதீன், திரு. வீ.விஜய்** அவர்களுக்கும், இஸ்லாமியத் தமிழ்ப்பண்பாட்டு ஆய்வு மைய ஆய்வு உதவியாளர் **திரு. அ.ஜவஹர் பாஷா** அவர்களுக்கும், முனைவர் பட்ட ஆய்வாளர்களான **செல்வன் முஹம்மது ஆதில் முர்ஷித் ப.அ., செல்வன் ஷா. முஹம்மது அஸ்ரின்** ஆகியோருக்கும் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

எல்லா புகழும் இறைவனுக்கே!

முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்

ஹாஜி வாவு S.செய்யிது அப்துல் ரஹ்மான்
முனைவர் M.அப்துல் காதர்
முனைவர் S.சாமுவேல் ஆசீர் ராஜ்

திருமிகு கா.முகமது இஸ்மாயில்
முனைவர் மு.நசீர் அகமது
முனைவர் சே.சையது அபுதாகீர்

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி.

சமூகத்தில் வாழும் அடித்தட்டு மக்கள் குறிப்பாக சிறுபான்மைச் சமுதாய மக்கள் பயன்பெறும் வகையில் **ஹாஜி எம்.ஜமால் முஹம்மது சாஹிபு** மற்றும் **ஜனாப் என்.எம்.காஜாமியான் இராவுத்தர்** ஆகிய வள்ளல் பெருமக்களால் 1951-ஆம் ஆண்டு ஜமால் முகமது கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது. இது பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்ற அரசு உதவிபெறும் தன்னாட்சிக் கல்லூரி ஆகும். இக்கல்லூரியில் 25 இளநிலை மற்றும் 20 முதுநிலைப் பட்டப்படிப்புகள் உள்ளன. 19 துறைகள் ஆய்வுத் துறைகளாகத் திகழ்கின்றன. கல்லூரியில் பயிலும், மொத்த மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை சுமார் 12,000 ஆகும். மேலும், 145 அரசு ஊதியம் பெறும் பேராசிரியர்கள் உட்பட மொத்தம் 497 பேராசிரியர்கள் இக்கல்லூரியில் பணியாற்றி வருகின்றனர். இக்கல்லூரி, 1976 இல் வெள்ளி விழாவையும், 2001இல் பொன் விழாவையும் 2011இல் வைர விழாவையும் கொண்டாடி மகிழ்ந்தது. 2001இல் ‘NAAC’ குழுவால், ஐந்து நட்சத்திரத் தகுதியும், 2009-2016ஆம் ஆண்டு ‘A’ தகுதிக் கல்லூரியாகவும் அங்கீகரிக்கப் பெற்றது. 2020ஆம் ஆண்டு, DBT நட்சத்திர கல்லூரி அந்தஸ்துப் பெற்ற கல்லூரியாக செயல்பட்டு வருகிறது.

2011-2012 கல்வியாண்டு முதல் பல்கலைக்கழக மானியக் குழுவால் ‘**ஆற்றல் வளத் தனித்தகுதி**’ பெற்ற கல்லூரியாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்திய அரசு மனிதவள மேம்பாட்டுத் துறையின் கல்லூரித் தரவரிசைப் பட்டியலில் இக்கல்லூரி 2022ஆம் ஆண்டில் இந்திய அளவில் 79-ஆம் இடம் பெற்றது. இத்தகு சிறப்புகளைப் பெற்ற ஜமால் முகமது கல்லூரி, சமூகத்திற்கு உயர்கல்வியை வழங்கும் தன்மையால் சிறந்த நிர்வாகிகளையும், கல்வியாளர்களையும், அறிவியலாளர்களையும், ஆர்வலர்களையும், அறிவு மற்றும் ஆளுமைத் திறன்மிக்கோரையும், கணினி வல்லுநர்களையும் உருவாக்கி வருகிறது.

முதுகலைத் தமிழாய்வுத்துறை

கல்லூரித் தொடங்கப் பெற்ற 1951ஆம் ஆண்டு முதலே தமிழ்த்துறையும் இயங்கி வருகின்றது. 1979ஆம் ஆண்டு முதுகலை வகுப்புகளும் 2003-2004 கல்வியாண்டில் ஆய்வுப் படிப்புகளும் தொடங்கப் பெற்று முதுகலைத் தமிழாய்வுத்துறையாக இத்துறை பரிணமித்தது. இதுவரை 51 ஆய்வாளர்கள் முனைவர் பட்டத்தையும் 200 ஆய்வாளர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தையும் பெற்றுள்ளனர். பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் நடைபெறும் சிறப்புப் பொழிவுகள் மற்றும் பன்னாட்டு அளவிலான தேசிய, பன்னாட்டுக் கருத்தரங்குகள் மாணவர்களின் அறிவுப் பசியைப் போக்கும் வற்றாத ஊற்றுகளாக விளங்குகின்றன. இறையருட் கவிமணி கா.அப்துல் கபூர், பெரும்புலவர் சி.நயினார் முகம்மது, முனைவர் பீ.மு.மன்சூர் போன்ற துறையின் முன்னோடிகள் வாயிலாக ஜமால் முகமது கல்லூரி, முதுகலைத் தமிழாய்வுத்துறை பன்னாட்டு அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது எனில் மிகையாகாது.

இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்

தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு குறித்து ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு ஜமால் முகமது கல்லூரியில் இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம் என்னும் ஆய்வு இருக்கை 2017 டிசம்பர் மாதம் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்துறையின் மேனாள் உதவி இயக்குநரும், தமிழக முஸ்லிம்கள் வரலாறு குறித்த ஆய்வாளருமான புதுக்கோட்டை, முனைவர் ஜெ.ராஜா முகமது அவர்கள் இந்த ஆய்வு மைய இயக்குநராகப் பணியாற்றி வருகிறார். இந்த மையத்தில் பிரிட்டிஷ் நூலாகத்தாரின் நிதியுதவியுடன் கிழக்கு கடற்கரை இஸ்லாமிய மக்களின் கணக்கு வழக்குகள் குறித்து ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. அரபுத்தமிழ் இலக்கியங்களை மின் ஆவணமாக்கும் முயற்சியில் இந்த மையம் செயல்பட்டுவருகிறது.

முதுகலை அரபுத்துறை

1951ஆம் ஆண்டு கல்லூரி துவங்கப்பட்ட நாள் முதலே அரபுத்துறை இயங்கி வருகிறது. மொழிப் பாடத்திற்கென தொடங்கப்பெற்ற இத்துறை, இளங்கலை, முதுகலை எனத் தொடர்ந்து இன்று ஆய்வுத் துறையாக வளர்ந்து மிளிர்கிறது. இரு பாலர்களுக்கும் தனித் தனியே வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. துறையின் சிறப்பம்சமாகத் தமிழகத்திலேயே முதன் முதலாக 2007ஆம் ஆண்டு முதல், முதுகலைப் பட்டத்துடன் ஐவருட **'ஆலிம் ஸனத்'** என்னும் இஸ்லாமியியல் அறிவு புகட்டப்படுகின்றது. 2012ஆம் ஆண்டு அரபு மொழியுடன் கணினி பயன்பாட்டிற்கான வழிமுறைகளைக் (ADCAA) கற்றுத் தரப்படுகின்றன. இதுவரை 19 ஆய்வாளர்கள் முனைவர் பட்டத்தையும், 75 ஆய்வாளர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தையும் பெற்றுள்ளனர். **'இக்ர்ஃ. பிஸ்மி ரப்பிக்'** அரபுச் சங்கம் வாயிலாக மாணக்கர்களுக்குப் பேச்சுத் திறன், எழுத்துத்திறன் உருவாக்கப்பட்டு மாணவர்கள் பலர், பல்வேறு நாடுகளில் குறிப்பாக அரபு நாடுகளில் உயர் பதவிகள் வகிக்கின்றனர். பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்குகள் வருடந்தோறும் நடத்தப்படுகின்றன. குவைத் தேச அறநிலையத் துறை அமைச்சகத்தின் வாயிலாக வெளியிடப்பட்ட நாற்பத்தி ஐந்து பகுதி கொண்ட **'இஸ்லாமிய சட்ட கலைக் களஞ்சியம்'** நூலினை தமிழில் மொழிப்பெயர்க்கும் பணி துறை சார்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், சமூகவியல் துறை

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஒரு பன்முகத் தன்மை கொண்ட உயர் கல்வி நிறுவனமாகும். இது திருநெல்வேலி, தென்காசி, தூத்துகுடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்ட மக்களின் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்கிறது. இப்பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை உள்ளூர் மற்றும் தேசிய அளவில் முக்கியத்துவமாக உள்ள விசயங்களை ஆய்வு செய்ய குறிப்பாக தேர்ந்தெடுத்து செயல்படுகிறது. இத்துறை மாணவர்களுக்கு முற்போக்கு மற்றும் பகுப்பாய்வு சிந்தனைகளை ஊக்குவித்து தற்கால உலகறிவை அளித்து சமூகப் பிரச்சனைகளை தீர்க்கும் கடமை உணர்வு கொண்ட மாணவர்களை உருவாக்கும் குறிக்கோலுடன் செயல்படுகிறது. சமூக மற்றும் பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய உள்ளூர் சமூக மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த, இத்துறை, தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்துறை M.A., M.Phil., மற்றும் Ph.D போன்ற படிப்புகளை வழங்குகின்றது. இது இந்தியாவில் உள்ள முன்னணி பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயல்படுகின்றது.

சென்னை, புதுக்கல்லூரி, தமிழாய்வுத்துறை

சென்னையின் மையப்பகுதியான இராயப்பேட்டை பீட்டர்ஸ் சாலையில் அமைந்திருக்கும் புதுக்கல்லூரி ஜூன் 1951ஆம் ஆண்டு தொடங்கப்பெற்று, 71 ஆண்டுகள் கடந்து சிறப்பாக இயங்கி வருகிறது. பாலூர் கண்ணப்ப முதலியார் தொடங்கி பாண்டுரங்கன், சா.அமீது, தமிழன்பன், இன்குலாப், குளச்சல் சாகுல் அமீது, கம்பம் சாகுல் அமீது, அ.காதர் பாட்ஷா, ஹ.மு.நத்தர்ஷா, மு.இ.அகமது மரைக்காயர் மற்றும் மு.முகம்மது அலி ஆகியோர் தமிழ்த்துறைக்கு மட்டுமன்றி புதுக்கல்லூரிக்கும் அடையாளமாகத் திகழ்கின்றனர். தமிழில் முதலிடம் பெறும் மாணவருக்கு பேரா. பாண்டுரங்கரனார் பெயரில் பதக்கமும் காசோலையும் வழங்கப்படுகிறது. இதுமட்டுமன்றி மாணவர்களின் திறனை வெளிப்படுத்தும் வகையிலும் அதனை வளர்த்துக்கொள்ளும் வகையிலும் உமறுப்புலவர்

தமிழ்ப்பேரவை மற்றும் பேரா.இளங்கோவன் நினைவு அறக்கட்டளை மூலம் பேச்சுப்போட்டிகள் நடத்தப்படுகின்றன. புனிதவதி இளங்கோவன் நினைவு அறக்கட்டளை மூலம் கட்டுரைப்போட்டி நடத்திப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. சிங்கப்பூர் முஸ்தபா அவர்களால் தொடங்கப்பட்ட கவிஞர் மு.மேத்தா அறக்கட்டளை, முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் மு.கலீல் அகமது அவர்கள் தம் தந்தை பெயரால் தொடங்கிய கா.முகமது பாரூக் நினைவு அறக்கட்டளை ஆகியவற்றின் வழி சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்படித் தொடர்ந்து தமிழுக்கும் மாணவர்களின் வளர்ச்சிக்கும் தன் உழைப்பைக் கொடுத்துவரும் புதுக்கல்லூரியின் தமிழ்த் துறை இஸ்லாமிய இலக்கியத் தமிழ் வளர்ச்சிக்கும் துணை நின்று ஆய்வுகளை வளர்த்தெடுத்து வருகிறது.

திருநெல்வேலி, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, வரலாற்றுத்துறை

அறிவுத் திருநகர் ரஹ்மத் நகரில் 40 ஏக்கர் பரப்பளவில் 04.08.1971 அன்று, இமாம் ஷெய்கு சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களின் நற்பெயரில் தொடங்கப்பட்ட இக்கல்லூரியைச் சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியின் ஆட்சிக்குழு வழிநடத்துகிறது.

தேசியத் தர மதிப்பீட்டுக் கல்விக்குழுவின் மூன்றாவது சுற்றுத் தர மதிப்பீட்டில் 4.0 மதிப்பெண்ணுக்கு 3.40 எனும் உயர்மதிப்பெண் பெற்றுத் தரமான கல்லூரியாகத் திகழும் இக்கல்லூரி 2007-ஆம் ஆண்டு முதல் தன்னாட்சி பெற்று, 2018-ஆம் ஆண்டு முதல் ISO 9001:2015 எனும் சர்வதேசத் தரச்சான்று பெற்ற உயர்கல்லூரியாக உருப்பெற்றிருக்கிறது.

கல்லூரித் தொடங்கப்பட்ட 1971-ஆம் ஆண்டு முதலே இளங்கலை வரலாற்றுத்துறை இயங்கி வருகிறது. 1980-ஆம் ஆண்டு முதல் முதுகலை வரலாற்றுத் துறையாகவும், 2009-இல் இளம் முனைவர் பட்டம் வழங்கும் துறையாகவும், 2011-இல் முனைவர் பட்ட ஆய்வுத் துறையாகவும் வளர்ச்சிப் பெற்றுள்ளது. மேலும், 17 ஆய்வாளர்கள் முனைவர் பட்டத்தையும், 60 மாணவ மாணவியர் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தையும் பெற்றுள்ளனர்.

மாணவர்களின் திறமையை வளர்ப்பதற்காக **“சதக்கத் வரலாற்று மாணவர் அமைப்பு”** செயல்பட்டு வருகிறது. இவ்வமைப்பு மாணவர்களின் தலைமைப் பண்பையும், திறமையையும் வெளிக்கொணர வழிகாட்டி வருகிறது. வரலாற்று அறிவைக் கள அனுபவத்தின் மூலமாகப் பெறுவதற்காகத் தமிழகத்தில் உள்ள தொல்லியல் ஆய்வுக்களங்களான ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, கீழடி போன்ற தொல்லியல் களங்களுக்குச் சென்று நேரடியாக கற்றுக் கொள்வதற்கும் வாய்ப்புகளை வழங்குகிறது. மாணவர்களுக்கு மரபு நடைப்பயணம் மூலமாக வரலாற்றுணர்வை உள்வாங்குவதற்கான செயல்பாடுகளைச் செயல்படுத்தி வருகிறது.

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி,

காயல்பட்டணம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் சமூகப் பொருளாதார நிலையில் பின் தங்கிய பெண்கள் தரமான உயர் கல்வி பெற்றிடல் வேண்டும் என்ற உயரிய நோக்கில் வாவு S. A. R. *கல்வி அறக்கட்டளை 2005ம் ஆண்டு அல்ஹாஜ் வாவு* S. *செய்யிது அப்துர் ரஹ்மான் அவர்களால் தொடங்கப்பட்டது. இவ்வறக்கட்டளை வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியை 2006-2007-ஆம் கல்வியாண்டில் துவங்கி, காயல்பட்டினத்தில் கல்விப் பணியைத் தொடங்கியது. இன்று 1500 மாணவியர்கள் பட்டம் பெற்றுள்ளனர். 9 இளநிலைப் பட்டப்படிப்புகள், 4 முதுநிலைப் பட்டப்படிப்புகள், 1 பட்டயப்படிப்பு என இக்கல்லூரி பீடுநடைப் போட்டு இயங்கி வருகிறது.*

மாணவியரின் தனித்திறமைகளை வளர்க்கும் வகையில் **'Wajeeha Skill Academy'**-*யின் வாயிலாக* Tally, DTP, TNPSC *(அரசுத் தேர்வுப் பயிற்சி) தையல் பயிற்சி, கலைப்பொருட்கள் செய்தல், இருசக்கர, நான்கு சக்கர வாகனப் பயிற்சி, அதற்கான ஓட்டுநர் உரிமம் பெற்றுத் தருதல், சிலம்பம், கராத்தே முதலிய தற்காப்புக் கலைகளையும் குறைவான கட்டணத்தில் கற்றுக் கொடுக்கப்படுகிறது.*

நிறைவு விழா

நேரம்: மாலை 4.30 மணி

வரவேற்புரை

முனைவர் **மு. அப்துல் ரசாக்**
தமிழ்த்துறைத் தலைவர், மொழிப்புல முதன்மையர், புதுக்கல்லூரி, சென்னை

வாழ்த்துரை

அல்ஹாஜ் த.இ.செ. பத்ஹுர் ரப்பானி
செயலர், சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி

முனைவர் சே.மு. அப்துல் காதர்
முதல்வர், சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி

ஹாஜி. வாவு M.M. மொகுதஷீம், B.A., (C.S.)
செயலர், வாவு வஜீஹா வனிதையர் கலை & அறிவியல் கல்லூரி, காயல்பட்டணம்

ஹாஜி வாவு S.A.R. அஹமது இஸ்ஹாக் ஆலிம் M.A. அஸ்ஹரி (Egypt)
துணைச் செயலர், வாவு வஜீஹா வனிதையர் கலை & அறிவியல் கல்லூரி, காயல்பட்டணம்

கருத்தரங்க மதிப்புரை

முனைவர் எம். அப்துல் காதர்
அரபுத்துறைத்தலைவர், ஜமால் முகமது கல்லூரி

கருத்தரங்க நிறைவுப் பேருரை

பேராசிரியர், கலாநிதி. **எம்.எஸ்.எம். ஜலால்தீன்**
முன்னாள் பீடாதிபதி, ஓய்வுநிலைப் பேராசிரியர்,
இஸ்லாமிய கற்கை அரபு மொழிப்பீடம்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நன்றியுரை

திரு. **கா. முகமது இஸ்மாயில்**
கருத்தரங்க அமைப்புச் செயலர்
ஒருங்கிணைப்பாளர், இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்
இணைப்பேராசிரியர், முதுகலைத் தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி, திருச்சி–20.

ஆய்வமுதம் பருக!! **அனைவரும் வருக!**

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)

தேசியத்தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது .
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி - 620 020. தமிழ்நாடு, இந்தியா.

ஜமால் முகமது கல்லூரியின்
முதுகலைத் தமிழாய்வுத்துறை,
இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்,
முதுகலை அரபுத்துறை

திருநெல்வேலி,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின்
சமூகவியல் துறை

சென்னை, புதுக்கல்லூரியின்
தமிழாய்வுத்துறை

திருநெல்வேலி, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியின்
வரலாற்றுத்துறை

மற்றும்

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

(International Seminar)

அழைப்பிதழ்

பொருண்மை

அரபுத்தமிழ் இலக்கியங்கள்

(Arabu Tamil Literature)

நாள்	:	14-03-2023, செவ்வாய்க்கிழமை
நேரம்	:	காலை 9.30 மணி
நிகழிடம்	:	உசைனுதீன் குளிர்மை அரங்கம்
		ஜமால் முகமது கல்லூரி, திருச்சி - 20

தொடக்க விழா

நேரம்: காலை 9.30 மணி

வரவேற்புரை

முனைவர் **அ.சையத் ஜாகீர் ஹசன்**
தேர்வு நெறியாளர்
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
முதுகலைத் தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)

கருத்தரங்க நோக்கவுரை

முனைவர் **ஜெ.ராஜா முகமது**
இயக்குநர், இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)

கருத்தரங்கத் தலைமையுரை

முனைவர் **எஸ்.இஸ்மாயில் முகைதீன்**
முதல்வர், ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)

முன்னிலை மற்றும் வாழ்த்துரை

ஹாஜி. **எம்.ஜே.ஜமால் முஹம்மது பிலால்**
தலைவர்

டாக்டர் **அ.கா.காஜா நஜீமுதீன்,** D.Litt., USA
செயலர் மற்றும் தாளாளர்

ஹாஜி **எம்.ஜே.ஜமால் முஹம்மது**
பொருளாளர்

முனைவர் **க.அப்துஸ் சமது**
உதவிச் செயலர்

முனைவர் **கா.ந.அப்துல் காதர் நிஹால்**
நிர்வாகக்குழு உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குநர்

முனைவர் **அ.முகம்மது இப்ராஹீம்**
துணை முதல்வர்

முனைவர் **எம்.முகம்மது சிஹாபுதீன்**
கூடுதல் துணை முதல்வர்

முனைவர் **கா.ந.முகமது பாஜில்**
இயக்குநர் – விடுதி நிர்வாகம்

செல்வி **ஜே.ஹாஜிரா பாத்திமா**
இயக்குநர் – பெண்கள் விடுதி

தொடக்கவுரை

திரு. **கே.என். நேரு**
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு

கருத்தரங்க ஆய்விதழ்
வெளியிட்டுச் சிறப்புரை

திரு. **செஞ்சி கே.எஸ்.மஸ்தான்**
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு

கருத்தரங்க மையக் கருத்துரை (இணைய வழி)

முனைவர் **த. சுந்தரராஜ்**
விரிவுரையாளர்,
ஆசிய மொழிகள் & பண்பாடுகள் துறை, தேசியக் கல்விக்கழகம்
நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்

நன்றியுரை

முனைவர் **எஸ். சாமுவேல் ஆசீர் ராஜ்**
துறைத்தலைவர், சமூகவியல் துறை,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

கருத்தரங்க அமர்வுகள்

காலை 11.00 - 01.30 மணி
மதியம் 02.30 - 04.30 மணி

பொருளடக்கம்

வ. எண்	ஆய்வுத் தலைப்பு மற்றும் ஆய்வாளர் பெயர்	பக்க எண்
1.	அரபுத்தமிழ் கவிஞர் செய்யது மஸ்வூத் (ரஹ்) இன் அரபுத் தமிழ் இலக்கியங்கள் Dr. M. Abul Hasan & Dr. N.M.Ahamed Ibrahim	01-16
2.	அரபுத்தமிழ் வளர்ச்சியும் வீழ்ச்சியும் Dr. A.Abdul Wahid	17-27
3.	அரபுத் தமிழ் தப்ஸீர்கள்; ஓர் கண்ணோட்டம் முனைவர் எஸ். அப்துஸ் ஸமது நத்வி	28-35
4.	அடிப்படைச் சட்டங்களை எளிமைப் படுத்திய அஹ்காமுல் முஸ்லிமீன் முனைவர் A.M. அலி இப்ராஹீம் ஜமாலி	36-43
5.	வீழ்ச்சிக்கும் மீளெழுச்சிக்கும் மத்தியில் அர்வி / அரபுத் தமிழ் திரு செ. மு. அனீஸ் அஹ்மத்	44-52
6.	அரபு மலையாள இலக்கியத்தில் அரபுத்தமிழின் செல்வாக்கு Mr.B.Ansar	53-67
7.	அரபுத் தமிழ் இலக்கியத்திற்கு ஆலிம்களின் பெரும்பங்கு Dr.Hafiz K.A.Ahamadhullah Saqafi & Dr. A.Abdul Azeez	68-76
8.	அரபுத்தமிழ் இலக்கியங்கள் மௌலவி ஹா.அ.அஹ்மது அப்துல் காதிர் மஹ்ழரி	77-91
9.	அரபி மற்றும் தமிழ் வாக்கியங்களுக்கு மத்தியிலான ஒப்பீடு டாக்டர் அஹ்மது ஜபருல்லாஹ் நத்வி	92-99
10.	அரபுத் தமிழ் வளர்த்த லெப்பைமார்களும் கையெழுத்துப் பிரதிகளும் முனைவர் எஸ்.எ.உஸ்மான் அலி & முனைவர் எம்.அஹ்மதுல்லாஹ்	100-107
11.	அறபுத் தமிழ் தோற்றமும் முஸ்லிம்களின் சமூக - மத பங்களிப்பும் Movlavi B.M.Khaleelur Rahman Manbaee	108-120
12.	அரபுத் தமிழ் வளர்ச்சியும் வீழ்ச்சியும் மீளெழுச்சியும் Dr A.Shahul Hameed Baqavi & Jamali	121-133
13.	அறபுத்தமிழ்: மொழியும் இலக்கியமும் Dr D.Sundararaj	134-151
14.	ஆஹ்காமுல் முஸ்லிமீன் வலியுறுத்தும் மார்க்கக் கல்வி முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்	152-161
15.	அறபுத்தமிழ் : அறிந்தும் அறியாதவை : ஒரு பார்வை முனைவர் தக்கலை எம்.எஸ்.பஷீர்	162-169
16.	அறபுத் தமிழ் - தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி பேரா. கலாநிதி எஸ்.எம்.எஸ். மஸாஹிர்	170-181
17.	தமிழ் மொழியை அரபு மொழியுடன் ஒப்பிடுதல் முனைவர் வ.மாலிக்	182-186
18.	அரபு தமிழ்: தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி முனைவர் மு.முகமது ரபீக் & முனைவர் அப்துல் ஹை	187-194
19.	அரபுத்தமிழ் தோற்றமும், வளர்ச்சியும் திருமதி சே.அ.கா.முத்து மொகுதூம் பாத்திமா	195-210

20.	**அரபுத்தமிழ் - உருவாகியதும் சருகாகியதும்!** திரு அ.முஹம்மது அபூதாஹிர்	211-219
21.	**அரபுத் தமிழில் அருள்மறை குர்ஆனின் விரிவுரைகள் ஓர் ஆய்வு** முனைவர் அ.முஹம்மது அப்துல் காதர் ஹஸனி	220-231
22.	**அதபு நாமாவில் இஸ்லாமிய மாதங்கள்** திரு ஷா.முஹம்மது அஸ்ரின் & முனைவர் த.செல்வராசு	232-243
23.	**சிம்துஸ் ஸிப்யானில் உளூ தொடர்பான செய்திகள்** திரு முஹம்மது ஆதில் முர்ஷித் ப.அ & முனைவர் க.சிராஜுதீன்	244-252
24.	**அரபுத் தமிழ் இலக்கியங்கள் – ஓர்ஆய்வு** Dr A.Mohamed Ismail	253-259
25.	**அறபு மொழியின் தனிச்சிறப்பும் அறபுத் தமிழின் தோற்றமும்** Dr K.Maideen	260-266
26.	**காயல்பட்டணம் காமில் ஒலி ஸாம் ஷிஹாபுத்தீன் நாயகம் (றஹ்) அவர்களின் சின்ன ஹதீது மாணிக்க மாலை** Dr Mrs V.Rama & Dr Mrs K.Maheswari	267-277
27.	**"காயல்பட்டணம் காரண சரித்திரம்"- -*அரபுத் தமிழ் நூல்*- ஓர் ஆய்வு** Dr J.Raja Mohamed	278-292
28.	**இலங்கையில் அறபுத் தமிழ் தொடர்பான கருத்தாடல்கள்** பேரா. கலாநிதி எம்.எஸ்.எம் ஜலால்தீன்	293-308
29.	**அறபுத் தமிழ் கவிஞர்களின் வரலாற்று நோக்கல்** Mr A.Jawahar Basha & Dr A.Syed Zakir Hasan	309-323
30.	**இனிய அரபித் தமிழின் இன்றியமையாத் தேவை!** 'ஆலிம் கவிஞர்' *தேங்கை ஷற்புதீன் மிஸ்பாஹி*	324-331
31.	**ARWI LANGUAGE AND ITS COMPUTATIONAL PERSPECTIVE: ENCODING ISSUES AND SOLUTIONS** Dr K.M.A.Ahamed Zubair	332-353
32.	**WHY ARABIC - TAMIL HAS BECOME AN UNPERTURBED LANGUAGE IN RECENT DAYS** Dr L Noor Asma	354-357
33.	**அரபுத் தமிழ் பக்தி இலக்கியங்கள் வாயிலாக இஸ்லாத்திற்குப் புத்துயிர் ஊட்டியது அரபுத் தமிழ் கவிதைகள்** ஆலிமா ஆமினா பேகம் கைரிய்யா	358-370
34.	**இலங்கையில் "அறபு தமிழ்" ஊடாக அறபு மொழி கற்பித்தலில் ஓ.எம். பாஸி ஆலிமின் வகிபங்கு** Mr IM. Thalib	371-386
35.	**அரபுத் தமிழ் பக்தி இலக்கியங்கள் வாயிலாக இஸ்லாத்திற்கு புத்துயிர் ஊட்டியது - இஸ்லாமிய உரைநடை நூல்கள்** பேராசிரியர் A.ஷம்சுத்தீன் ஜமாலி	386-400

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023

Dr.M.Abul Hasan & Dr.N.M.Ahamed Ibrahim P:01-16

அரபுத்தமிழ் கவிஞர் செய்யது மஸ்வூத் (ரஹ்) இன் அரபுத் தமிழ் இலக்கியங்கள்

Arabic Tamil literature by the famous Arab Tamil poet Masood (Rah)

Dr. M. Abul Hasan[1], Dr. N.M.Ahamed Ibrahim[2]

1. Assistant Professor & Head, Department of Arabic , Sadakathullah Appa College, Tirunelveli -627011, Tamil Nadu, India. Email: abulhasanf@gmail.com
2. Associate Professor & Head, P.G. & Research Department of Arabic, The New College, Chennai- 600014, Tamil Nadu, India. Email: dr.nma.ibrahim@gmail.com

Abstract

The Arabic-Tamil poet Seyuthu Maswood is known as Seyuthu Maswoodu Fhani (Secondly as Seyuthu Maswood) in the line of Shaikhumars called Silsila on the Jishtiyya Sufisa road in Melapalayam town of Tirunelveli district.

He was the Shaykh of the Jishtiyya Tariqa and the Caliph of the Beloved Jamvu Ali (Shemali) Sakul Hameed Waliullah, who composed some of the best Arabic and Tamil literary spiritual poems. He was also an Arabic-Tamil writer and wrote his poems in Arabic-Tamil on many topics.

This article analyzes his Arabic-Tamil poetry with the following keywords.

Key Words : History of Melapalayam, Melapalayam Sufi Movements, Semali is performed by Masood Thani, Melapalayam Arabic Tamil literature, Masood Thani's Arabic-Tamil Gazetas, Arabic Tamil translations

ஆய்வுச் சுருக்கம்

செய்யது மஸ்வூது ஃதானி (இரண்டாம் செய்யது மஸ்வூத்) என்று திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம் மாநகரில் ஜிஷ்தியய்யா சூபிச வழியில் சில்சிலா எனும் ஷெய்குமார்களின் வரிசைத் தொடரில் அழைக்கப்படுபவர் அரபுத்தமிழ் கவிஞர் செய்யது மஸ்வூத் ஆவார்.

ஜிஷ்தியய்யா தரீக்காவின் ஷெய்கு ஆகவும், இறைநேசர் ஜம்வு அலி (சேமலி) சாகுல் ஹமீது வலியுல்லாஹ் அவர்களின் கலீஃபாவாகவும் திகழ்ந்த அவர், மிகச் சிறந்த அரபுத்தமிழ் இலக்கிய ஆன்மிக கவிதைகளைப் பாடியுள்ளார். அரபுத்தமிழ் எழுத்தாளராகவும் விளங்கிய அவர், தமது கவிதைகளைப் பல தலைப்புகளில் அரபுத்தமிழில் எழுதியுள்ளார்.

இக்கட்டுரை அவரின் அரபுத்தமிழ் கவிதைகளைப் பின்வரும் திறவுச் சொற்களில் அலசி ஆராய்கிறது.

திறவுச் சொற்கள்

- மேலப்பாளையம் வரலாறு
- மேலப்பாளையம் சூஃபிச இயக்கங்கள்

- சேமலி செய்யது மஸ்வூது ஃதானி
- மேலப்பாளையம் அரபுத்தமிழ் இலக்கியங்கள்
- செய்யது மஸ்வூது ஃதானி இன் அரபுத்தமிழ் கஸீதாக்கள்
- அரபுத்தமிழ் மொழிபெயர்ப்புகள்

ஆய்வு நோக்கம்

- மேலப்பாளையம் வரலாற்றினை எடுத்துக் கூறுதல்
- மேலப்பாளையம் சூபிச இயக்கங்களைத் தெளிவுபடுத்துதல்
- அரபுத்தமிழ் இலக்கியங்களில் அரபுத்தமிழ் கவிதைகளை அறிமுகப்படுத்துதல் – வெளிப்படுத்துதல்
- செய்யது மஸ்வூது ஃதானி இன் கவிதைகளை ஆராய்தல், வரலாற்றை அறியச் செய்தல்
- அரபுத்தமிழ் இலக்கியங்கள், இலக்கியவாதிகள், மொழிபெயர்ப்பாளர்களை வெளிக்கொணர்தல்

முன்னுரை

அகிலத்தார்களின் இறைவன் அல்லாஹ்வின் புகழ் ஓங்கட்டுமாக! அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மீதும், அவரின் தோழர்கள், குடும்பத்தார்கள், அவர்களைப் பின்பற்றியவர்கள், பின்பற்றியவர்களைப் பின்பற்றியவர்கள் மற்றும் நல்லோர்கள் எல்லோரின் மீது சாந்தியும் சமாதானமும் நிலவட்டுமாக!

தென்னிந்திய நகரங்களில் தற்போது முஸ்லிம்கள் அதிகமாகவும், அடர்த்தியாகவும் வாழும் நகரம் மேலப்பாளையம் ஆகும். இது சுமார் 1200 ஆண்டுகள் பழமை வாய்ந்த இஸ்லாமிய நகரமாகும். படித்தவர்கள், மார்க்க அறிஞர்கள், அரபு மொழி நூலாசிரியர்கள், அரபி மொழிக் கவிஞர்கள், அரபுத்தமிழ் நூலாசிரியர்கள், அரபுத் தமிழ் கவிஞர்கள், தூய தமிழ் புலவர்கள், நூலாசிரியர்கள், மார்க்க சொற்பொழிவாளர்கள், மார்க்க அறிஞர்கள் நிறைந்து வாழ்ந்த ஊர்.

மேலப்பாளையம் நகர மஜ்லிஸ் உலமா சபையின் 2018 ஆம் ஆண்டு கணக்கெடுப்புப்படி சுமார் 440 ஆலிம்கள் இவ்வூரில் உள்ளனர். அவர்களில் பலர், தமிழகம் முழுவதும் அரபி மதரசாக்களில் ஆசிரியர்களாகவும், பள்ளிவாசல் இமாம்களாகவும் பணியாற்றி வருகின்றனர். தற்போதைய தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபை தலைவர் மௌலவி பி.ஏ.காஜா முஈனுத்தீன் பாகவீ, எஸ்.டி.பி.ஐ கட்சியின் மாநிலத் தலைவர் எஸ். முபாரக் அவர்களும் இவ்வூரைச் சேர்ந்தவர்களே.

இவ்வூரில் வாழ்ந்த அரபுத்தமிழ் கவிஞர் சேமலி செய்யது மஸ்வூத் (ஃதானி) அவர்களைப் பற்றியும் அவரின் அரபுத்தமிழ் கவிதைகளையும் இக்கட்டுரையில் பார்ப்போம்.

மேலப்பாளையம் வரலாறு

வடக்கில் திருநெல்வேலி சந்திப்பும் (சுமார் 5கி.மீ), கிழக்கில் பாளையங்கோட்டையும் (சுமார் 4கி. மீ) வடமேற்கில் நெல்லை நகரம் (சுமார் 5 கி. மீ) இவ்வூரைச் சுற்றியுள்ள பகுதிகள் ஆகும். திருநெல்வேலி - பாபநாசம் சாலை இவ்வூரின் வழியாகத்தான் கடந்து செல்கிறது. கன்னியாகுமரி - திருநெல்வேலி நெடுஞ்சாலை இவ்வூரின் தெற்குப் பகுதியில் செல்கிறது. மேலும் திருநெல்வேலி புதிய பேருந்து நிலையமும் (சுமார் 1.5 கி. மீல்) மேலப்பாளையம் மண்டலத்தில் தான் உள்ளது.

இவ்வூரின் மேற்குப் பகுதியில் சிவப்பு நிறத்தில் குன்னத்தூர் மலை உள்ளது. மேலப்பாளையம் சார்ந்த நாட்டுப்புறக் கதைகளிலும், பழமொழிகளிலும் இம்மலை அதிகம் இடம்பெற்றுள்ளது.

ஆங்கிலேயர் காலத்தில் இவ்வூர் கீழவீரராகவபுரம் என்று அழைக்கப்பட்டது[1]. எனினும் பாளையக்காரர்களின் கோட்டைகள் இருந்த பாளையங்கோட்டையின் மேற்கே இருந்ததினால் மேலப்பாளையம் என்றும் அழைக்கப்பட்டது. இப்பெயர் நிலைத்து நின்றுவிட்டது.[2] மேலோர் வாழும் பாளையம் மேலப்பாளையம் என்றழைக்கப்பட்டதாக "ஊரும் பேரும்" நூலில் சேதுபிள்ளை கூறியுள்ளார்.[3]

தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள இவ்வூர் பழங்காலத்தில் மங்கை நகர், மங்கா நல்லூர் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டு வந்தது. பாண்டிய மன்னனின் பட்டத்து அரசியான சோழ இளவரசியின் பெயரால் சேரன்மகாதேவியில் இருந்து இன்றைய மேலப்பாளையம் வரையில் உள்ள பகுதி 'மங்கை நகர்' என்றழைக்கப்பட்டதாக வரலாற்று ஆய்வாளர் செ.திவான் கூறியுள்ளார்.[4]

மேலப்பாளையத்தில் முஸ்லிம்களின் முதல் குடியேற்றம் கி.பி. 811ஆம் ஆண்டில் ஏற்பட்டது. எகிப்து நாட்டில் இருந்து ஹிஜ்ரி 232 ஆம் ஆண்டு 40 பேர் கொண்ட குழுவினர் கேரளக் கடற்கரை கொச்சி வந்தனர். அவர்கள் நேர்வழிபெற்ற இறைத்தூதர் முகம்மது (ஸல்) அவர்களுக்குப் பின்பு இஸ்லாமிய உலகை ஆட்சி செய்த நேர்வழிபெற்ற நான்கு கலீஃபாக்களின் வாரிசுகள் ஆவர்.

அபூபக்கர் (ரழி), உமர் (ரழி), உஸ்மான் (ரழி), அலீ (ரழி) ஆகியோரின் சந்ததியினரான அவர்கள், கொல்லம் வழியாக தென்காசி வந்தனர். அவர்களில் சிலர்

அங்கு தங்கிக் கொண்டனர். மற்றவர்கள் தாமிரபரணி ஆற்றங்கரையோரம் வழியாக மேலப்பாளையம் வந்தடைந்தனர். சுமார் 11 நபர்கள் அங்கு தங்கிக் கொண்டனர். மற்றவர்கள் காயல்பட்டணம் மற்றும் கோட்டாறு பகுதிகளுக்கு புறப்பட்டுச் சென்றனர்.[5]

குடும்பத்தில் பிறந்த முதல் ஆண் குழந்தைக்கு சில குடும்பத்தினர், 'அபூபக்கர்' என்று பெயரிடுவதும், சில குடும்பத்தினர் 'உமர்' என்று பெயரிடுவதும், சில குடும்பத்தினர் 'உஸ்மான்' என்று பெயரிடுவதும், சில குடும்பத்தினர் வழி வழியாக 'அலீ' என்றும், 'அபுல் ஹசன்' என்றும் பெயரிடுவதை அவ்வூர்காரர்கள் வழிவழியாக செயல்படுத்தி வருகின்றனர். இன்றும் இவ்வழக்கம் உள்ளது.[6]

மேலப்பாளையம் சூஃபிச இயக்கங்கள்

தரீக்கா எனும் அரபிச் சொல் , தரீக் எனும் சொல்லில் இருந்து பிரிந்து வந்த சொல்லாகும். 'தரீக்' என்பதற்கு பாதை, வழி என்பது பொருள்.[7] பிற்காலத்தில் சூஃபிசத் தொடர்களுக்கு இப்பெயர் நிலையானது. அஹ்லுஸ் சுன்னா முஸ்லிம்களுக்கு இடையில் ஏராளமான சூஃபிசத் தொடர்கள் உள்ளன. அவற்றில் மிகவும் பிரபலமானவை அனைத்தும் மேலப்பாளையத்தில் இருக்கின்றன. கீழ்கண்ட சூஃபிச வழித்தொடர்கள் அவ்வூரில் உள்ளவை.

(அ) காதிரிய்யா சூஃபிச வழித் தொடர் (ஆ) காதிரிய்யா புகாரிய்யா சூஃபிச வழித் தொடர் (இ) காதிரிய்யா ஷத்தாரியயா சூஃபிச வழித் தொடர் (ஈ) காதிரிய்யா ஜிஷ்திய்யா சூஃபிச வழித் தொடர் (உ) ஷாதுலிய்யா சூஃபிச வழித் தொடர் (ஊ) இலாஹிய்யா சூஃபிச வழித்தொடர் (எ) நூரிஷா சூஃபிச வழித்தொடர்.

இவை ஒவ்வொன்றுக்கும் தைக்கா எனப்படும் ஆன்மிக தவச்சாலைகளும், ஷெய்கு எனப்படும் ஆன்மிகத் தலைவர்களும், அவரின் கலீஃபா (பிரதிநிதி)களும், பக்தர்களும் (முரீது) உள்ளனர். இத்தகைய ஆன்மிக சூஃபிச வழிகளில் ஒன்றான காதிரிய்யா ஜிஷ்திய்யா சூஃபிச வழித் தொடரின் செய்கு செய்யது மஸ்வூது ஃதானி யைப் பற்றியும் அவரின் அரபுத்தமிழ் கவிதைகளைப் பற்றியும் இவ்விடம் காணவுள்ளோம்.

சேமலி செய்யது மஸ்வூது ஃதானி

அரபுத்தமிழ் கவிஞர் செய்யது மஸ்வூது ஃதானி 1930 ஆண்டு, பசீரப்பா தெருவைச் சேர்ந்த சாகுல் ஹமீது லெப்பைக்கும் - செம்ம லெப்பை குடும்பத்தைச்

சார்ந்த காதர் ஃபாத்திமா வுக்கும் மூன்றாவது மகனாகப் பிறந்தார். இளமையில் கல்வி – கேள்விகளில் சிறந்து விளங்கிய அவர்,காதிரிய்யா ஜிஷ்திய்யா சூஃபிச வழியின் செய்கு ஆக இருந்த தமது தந்தையிடம் பைஅத் எனப்படும் பக்தருக்கான பிரமாண வாக்குமூலம் அளித்தார். தந்தையின் சூஃபிச வழியில் பற்றுடன் இருந்ததால் அவரின் தந்தையினால் கலீஃபா எனப்படும் பிரதிநிதி பட்டம் தரப்பட்டார்.

1955 ஆம் ஆண்டும் அவருக்கும் அவ்வூரில் உள்ள வெள்ளை கலீஃபா சாகிப் தெருவைச் சேர்ந்த முகம்மது அப்பாஸ் மகள் முகம்மது ஃபாத்திமாவுக்கும் திருமணம் நடந்தது. அவருக்கு மூன்று ஆண் மக்களும், இரண்டு பெண் மக்களும் பிறந்தனர்.

அவர்களில் இரண்டாமவர் செய்கு பஷீர் அகமது ஆலிம் தற்போது தந்தையின் சூபிச வழிக்கு ஷெய்கு ஆக இருந்து வருகிறார். அவரிடம் இக்கட்டுரையாளர்கள் இருவரும் நேரடியாகச் சென்று தகவல் சேகரித்தனர்.

பிரதி வெள்ளிக்கிழமை இரவு திக்ரு மஜ்லிசுக்குப் பின்பு செய்யது மஸ்வூது ஃதானி இன் அரபுத்தமிழ் கவிதைகள் வாரந்தோறும் ஒரு கசீதா (கவிதை தொகுப்பு) வீதம் பாடப்பட்டு வருகின்றது.

இவர் ஏன் இரண்டாம் செய்யது மஸ்வூது என்று அழைக்கப்படுகிறார்? எனில், காதிரிய்யா ஜிஷ்திய்யா ஆன்மிக வழித்தொடரில் கர்நாடக மாநிலம் குல்பர்கா நகரில் அடக்கம் செய்யப்பட்டுள்ள பன்தே நவாஸ் என்றழைக்கப்படும் முகம்மது இப்னு யூசுஃப் அல் ஹுஸைனி (ரஹ்) இன் மகனும், ஜிஷ்திய்யா வழித்தொடரில் அவரின் கலீஃபாவாகவும் திகழ்ந்த செய்யது மஸ்வூது (ரஹ்) காதிரிய்யா ஜிஷ்திய்யா ஆன்மிக வழித்தொடரில் அறியப்பட்டவர் ஆவார்.

கடையநல்லூர், சடைமலை, செங்கோட்டை அருகில் உள்ள வல்லம், கேரளாவில் உள்ள தென்மலை, தேங்காய் பாறை ஆகியவற்றில் தனித்து தவமிருந்து, தென்னகத்தில் இஸ்லாம் பரவ காரணமாக இருந்தவர். திவான் ஒலி, கோதரிசா பாவா என்று பல பெயர்களில் அவர் அழைக்கப்படுகிறார். அவர் தான் முதலாம் செய்யது மஸ்வூது. மேலப்பாளையத்தில் உள்ள அதாயிர் ரசூல் தவச்சாலையில் ’சில்சிலா’ எனப்படும் ஆன்மிக பெயர் தொடரில் இவரை செய்யது மஸ்வூது ஃதானி என்றழைக்கப்படுகிறது.

மேலப்பாளையத்தில் மொத்தம் நூற்றி எண்பத்தி மூன்று குடும்பங்கள் உள்ளன. இதில் ஒவ்வொரு குடும்பமும் குடும்பப் பெயர்களில் அறியப்படும்.[8] இவரின்

குடும்பப் பெயர் சேமலி ஆகும். இது ‘ஜம்வு அலீ’ என்ற அரபிச் சொல்லில் இருந்து மருவி வந்ததாகும். அலீ (ரழி) இன் கூட்டத்தார் என்பது இதன் பொருள்.

செய்யது மஸ்வூது ஃதானி 1978 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் நாள் (ஹிஜ்ரி 1398 ரஜப் பிறை 24-ல் மரணமடைந்தார். அன்னாரை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!

மேலப்பாளையத்தில் அரபுத்தமிழ் இலக்கியங்கள்

மேலப்பாளையத்தில் அக்காலத்தில் ‘அரபு இலக்கியவாதிகள்’, ‘தமிழ் இலக்கியவாதிகள்’, ‘அரபுத்தமிழ் இலக்கியவாதிகள்’, தமிழ், அரபி, அரபுத்தமிழ் எழுத்தாளர்கள், அரபுத்தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் என ஐவகை அறிஞர்கள் இருந்தனர். அச்சுத் தொழில் அவ்வளவு அறிமுகமில்லாததினாலும், பெரும் செலவு ஏற்படும் என்பதினாலும் இலக்கியவாதிகள் தங்களின் படைப்புகளை எழுதுவதற்கு எழுத்தாளர்களை நாடினர். இதனால் எழுத்தாளர்கள் உருவாயினர். இக்கட்டுரையாளர்களில் முதலாமவரின் தாய்வழிப்பாட்டனார் காசிலெப்பை அபுல் ஹசன், அக்காலத்தில் பிரபலமான அரபி மற்றும் அரபுத்தமிழ் எழுத்தாளராக திகழ்ந்துள்ளார். அவரின் அரபி எழுத்துக்கள் அங்குள்ள புலவர் தர்காவின் சுவர்களில் வரையப்பட்டுள்ளன. மேலும் அவரால் எழுதப்பட்ட அரபுத்தமிழ் புத்தகங்கள் அதாயிர் ரசூல் தைக்கா, கல்வத் நாயகம் தைக்கா, மகான் பஷீரப்பா தைக்கா ஆகியவற்றில் காணக்கிடைக்கின்றன.

அவ்வாறே அரபுத்தமிழ் பயன்பாட்டில் அருகியிருந்த காலத்தில் அரபுத்தமிழ் படைப்புகளை தூய தமிழ் வடிவத்தில் மாற்றும் பணிகள் நடந்தன. அச்சமயத்தில் அரபுத்தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் உருவெடுத்தனர்.

செய்யது மஸ்வூது இன் அரபுத்தமிழ் கசீதாக்கள்

ஈரடிகள் கொண்டு செய்யுள் அரபியில் பைத் எனப்படும். அதனை விட அதிகமாக நான்கடிகள், ஐந்தடிகள், ஆறடிகள், ஏழடிகள் கொண்டுள்ள செய்யுள்கள் கஸீதா எனப்படும்.[9]

கிஸ்ஸா, நாமா, படைப்போர், மசலா, முனாஜாத்து போன்ற இலக்கியங்கள் முஸ்லிம்கள் தமிழ் இலக்கியத்திற்கு அறிமுகப்படுத்தியவை. முஸ்லிம் அல்லாதவர்களால் இவ்வகை சிற்றிலயக்கியங்கள் இயற்றப்படவில்லை என்பது இவற்றின் சிறப்பை உணர்த்தும்.[10] மேற்கண்டவை தமிழ் இலக்கியங்கள். எனினும்

அவற்றில் அதிகமான இடங்களில் இஸ்லாமிய வழக்கு அரபுச் சொற்கள் பரந்து கிடக்கின்றன.

அரபுத்தமிழ் என்பது தமிழை அரபு வடிவத்தில் தமிழ் உச்சரிப்புக்கேற்ப சில எழுத்துக்களை உண்டாக்கியும், அரபியில் இல்லாத சில புள்ளிகளை அரபி எழுத்துக்களின் மேல் குறியிட்டும் தமிழை அறிந்து கொள்ள உதவும் பழங்கால எழுத்துக் கலையாகும்.

செய்யது மஸ்வூது ஃதானி இயற்றிய கஸீதாக்கள் அரபுத்தமிழில் எழுதப்பட்டன. அவரே அரபுத்தமிழ் எழுத்தாளராக இருந்தாலும் அக்காலத்தில் சிறந்த அரபுத்தமிழ் எழுத்தாளராகத் திகழ்ந்த காசிலெப்பை அபுல் ஹசன் மூலம் அரபுத்தமிழில் அழகுற எழுதப்பட்டது. அவரின் வீட்டிற்கு நேரெதிர் வீட்டில் குடியிருந்த சேமலி யூசுஃப் ராகமிட்டு பாடியுள்ளார். அவர் இயற்றிய கஸீதாக்கள் எனப்படும் அரபுத்தமிழ் கவிதைகள் ஆன்மிகத்தைப் பற்றியும் அகமியம் பற்றியும் பேசுபவை.

அவரின் கஸீதாக்கள் சுமார் ஏழு தலைப்புகளில் அமைந்துள்ளன. அவை பின்வருமாறு,

1. காஜாவே கண்முன் வாருங்கள்

இது ஐந்தடிச் செய்யுள். மொத்தம் இருபது செய்யுள்கள். ஜிஷ்திய்யா ஆன்மிக வழித்தொடரின் தலைவரான ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீரில் அடக்கம் செய்யப்பட்டுள்ள காஜா முஈனுத்தீன் ஜிஷ்தி (ரஹ்) குறித்து இதில் அவர் பாடியுள்ளார்.

“அஜ்மீரில் இலங்கும் நூரானியே
ஆலத்தில் ஜொலிக்கும் மெஞ்ஞானியே
கமலத்தில் இலங்கும் குத்பானியே
காஜாவே கண்முன் வாருங்கள் – எங்கள்
குத்பே கண்முன் வாருங்கள்”

என்று பாடலை தொடங்குகிறார்.

இறந்த போன இறைநேசர்கள், நபிமார்களின் ஆன்மாக்கள் சபைகளில் சமூகமளிக்கும் என்று நம்புவது ஜிஷ்திய்யா ஆன்மிக வழியின் நம்பிக்கை. அதனை இங்கு மெய்ப்படுத்தி அழைக்கின்றார் கவிஞர். இருபது பாடல்களும் காஜா முஈனுத்தீன் ஜிஷ்தி (ரஹ்) யை அழைப்பதாக அமைந்துள்ளன.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr.M.Abul Hasan & Dr.N.M.Ahamed Ibrahim P:01-16

செய்யுள்களில் அதிகமான இடங்களில் ஆன்மிக பொருளை உணர்த்தும் அரபிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பின்வரும் செய்யுள் இதற்கு உதாரணம்.

“மௌன நிஷ்டையில் இருக்கையில்
மவ்ஜூ தைத்தான் இழக்கையில்
கைதந்த ஷெய்கை கொண்டாடவும்
காஜாவே கண்முன் வாருங்கள் – எங்கள்
குத்பே கண்முன் வாருங்கள்”

இப்பாடலில் மௌன நிஷ்டை என்று கண்களை மூடி அல்லாஹ் என்ற நாமத்தை உச்சரித்தவாறு இருப்பதை குறிப்பிடுகிறார். மவ்ஜூத் என்றால், ஒரு மனிதனின் இருப்பு என்று பொருள். மவ்ஜூதை இழப்பது என்றால், தனித்திருந்து இறைநாமத்தை உச்சரித்து தன்னை இழந்து உலகை மறந்து இறைவனை அடைவது என்பதாகும். ஷெய்கு என்ற அரபிச் சொல் மெஞ்ஞான குருவை குறிக்கும்.

இருபதாவது செய்யுளில்,

“கவியினை சொன்ன ஜிஷ்திய்யா
கலீபா செய்யது மஸ்வூதை
காத்தருள் புரிந்திட வேண்டுமே
காஜாவே கண்முன் வாருங்கள் – எங்கள்
குத்பே கண்முன் வாருங்கள்”

முதல் செய்யுளின் கடைசி இரு அடிகள் எல்லா செய்யுள்களிலும் இடம்பெற்றுள்ளன. அடி ஒவ்வொன்றிலும் மூன்று சொற்கள் இடம் பெற்றுள்ளன. நான்காவது அடியான ’ காஜாவே கண்முன் வாருங்கள் – எங்கள்’ என்ற அடியில் மட்டும் நான்கு சொற்கள் இருக்கின்றது. அவ்வாறே எல்லா செய்யுள்களிலும் அரபிச் சொற்கள் உள்ளன. இது கவிஞரின் அரபிமொழிப் புலமையை உணர்த்துகிறது.

3. ஞான அருள் மாலை

இது தந்தையும் மெஞ்ஞான குருவும் ஆன ஷெய்கு சாகுல் ஹமீது வலியுல்லாஹ் அவர்களின் மீது இயற்றப்பட்ட செய்யுள். நான்கடிச் செய்யுளான இது முப்பத்து ஒன்று பாடல்களை கொண்டது.

குருவை புகழ்வதுடன் இறைவனிடம் பாதுகாவல் தேடுவதாக அமைந்துள்ள இது, பின்வருமாறு தொடங்குகிறது.

“அரும்பொரு ளாயுள்ள ஆண்டவனே
ஆலத்தில் பல்லுயிரை படைத்தவனே
திருவெனும் திருவா யுள்ளவனே
சிந்தித்தேன் எந்நாளும் காப்பாமே”

தனது குரு மெஞ்ஞானத்தையும் பரம்பொருளான அல்லாஹ்வையும் விளங்கிக் கொண்டதை இப்படி பாடுகிறார்.

“அஹதான அலி ஃபதில் ஆசைவைத்து
அமல் செய்யும் பொருளை தான்தெரிந்து
மீமில்லா அஹ்மதை வணங்கி கொண்ட
முர்ஷிது ஷாகுல் ஹமீதுவலியே ”

இப்பாடலில், அஹது என்ற அரபி சொல் ஒருவன் என்ற பொருள் கொண்டது. அதிலுள்ள முதல் எழுத்தான அலிஃப் என்ற எழுத்து 'உல்ஃபத்' என்ற சொல்லை குறிக்கின்றது. அதன் பொருள் பிரியம் வைத்தல் என்பதாகும்.

அஹது என்ற சொல்லில் மீம் என்ற எழுத்து இல்லை. அதில் மீம் சேர்த்தால் அஹ்மது என்று மாறும். அச்சொல், முகம்மது நபியை குறிக்கும். முர்ஷிது என்பதற்கு வழிகாட்டி என்று பொருள்.

இப்பாடலில் அல்லாஹ்வை அஹது என்றழைக்கும் அவர், அடுத்த பாடலில் ‘ஹுவ’ என்றழைக்கின்றார்.

“பகாவான பஹ்ருக்குள் பரியிருந்து
ஹுவென்னும் சிர்ரான வலம்புரிக்குள்
கிளம்பிடும் ஓசையை தான்கேட்ட
குருவான ஷாகுல் ஹமீதுவலியே”

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr.M.Abul Hasan & Dr.N.M.Ahamed Ibrahim P:01-16

பகா என்ற அரபி பதத்துக்கு தறிபடுதல் என்று பொருள். பஹ்ரு என்றால் கடல் என்று பொருள். பரியிருத்தல் – பதுங்கியிருத்தல்.

ஹூ என்பது பிரதிப் பெயர்ச்சொல். அவன் என்பது பொருள். இது இறைவனை குறிக்கின்றது. வலம்புரியினை காதில் வைத்து கேட்டால் ஹூ என்று சப்தம் கேட்கும். அது போன்று அடிவயிற்றில் இருந்து நெஞ்சினில் ஏறி 'ஹூ' என்ற மூச்சு விட்டு இறைநாமத்தை உச்சரித்து இறைவனை குரு அறிந்ததாக இப்பாடலில் குறிப்பிடுகிறார்.

இறைவனைப் புகழ்ந்து, அவனிடம் பாதுகாவல் தேடுவதாய் முதல் செய்யுளில் உள்ள நான்கடிகளும் உள்ளதால், அதற்கு 'காப்பு' என்று பெயரிடப்பட்டுள்ளது. கடைசி பாடலைத் தவிர்த்து மற்ற முப்பது பாடல்களும் கடைசி அடியில் 'ஷாகுல் ஹமீதுவலியே' என்றே முடிகின்றன.

பாடல்கள் அனைத்திலும் அரபிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

4. ஞான புகழ் மாலை

இத்தலைப்பில் முப்பது செய்யுள்களை பாடியுள்ளார். ஒவ்வொரு செய்யுளும் நான்கடிகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அடியிலும் நான்கு சொற்கள் ஆளப்பட்டுள்ளன. இது குருவும் தந்தையுமான ஷெய்கு ஷாகுல் ஹமீது வலியுல்லாஹ் (ரஹ்) மீது இயற்றப்பட்டதாகும். குருவின் குடும்பப் பெயர், தந்தை பெயர், மேலப்பாளையத்திலுள்ள ஜிஷ்திய்யா ஆன்மிகத் தொடரின் நீட்சியான கடையநல்லூரில் அடக்கம் செய்யப்பட்டுள்ள ஷெய்கு உதுமான் லெப்பை, மஅரிஃபத் எனும் அகமியத்தை குரு அடைந்தது, ஆன்மா, கல்பு எனும் வெளிமனது, நஃப்ஸ் எனும் உள்மனது, கருப்பை ஆகியவற்றினை இப்பாடல்கள் தெளிவுபடுத்தியுள்ளன.

இறைவனை துதித்து பாதுகாவல் பாடல்களை தேடியவராக தொடங்கியுள்ளார்.

"அஹதான ஆண்டவனே அரும்பொருளாய் உள்ளவனே
ஆலத்தில் பல்லுயிரை அழகாய் படைத்தவனே
எங்கும் நிறைந்தவனே என்னுக்குள் இருப்பவனே
எப்பொழுதும் சிந்தித்தேன் எந்நாளும் காப்பாமே"

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr.M.Abul Hasan & Dr.N.M.Ahamed Ibrahim P:01-16

மேலப்பாளையத்திற்கு ஜிஷ்திய்யா ஆன்மிக வழித்தொடரை கொண்டு வந்தவர் கடையநல்லூர் ஷெய்கு உதுமான் லெப்பை ஆவார். அவரைக் குறித்து இவ்வாறு பாடுகிறார்.

"சுஹுதாவில் சென்றுவிட்ட சமமான பிறவியான
ஷெய்குஉது மான்லெப்பை சாஹிபின் பீரொலியே
எப்போதும் தங்களுடன் இருந்துகொள்ள பிரியம்வைத்து
சுஹுூதில் அழைத்த ஷெய்கே ஷாகுல் ஹமீது வலியே"

பாடல்களின் இறுதியில் அல்லாஹ்வைப் புகழ்ந்து முகம்மது நபி மேல் சலவாத்து கூறி முடித்துள்ளார்.

5. பஷீர் அப்பா ஜெயமாலை

இது கவிஞர் மேலப்பாளையத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ள ஷெய்கு உதுமான் லெப்பை அவர்களின் நேரடி கலீஃபாவும், இறைநேசருமான மகான் முஷ்யித்தீன் பஷீர் அப்பா மீது இயற்றப்பட்டதாகும். முப்பது பாடல்கள் கொண்டது. ஒவ்வொரு பாடலும் எட்டு அடிகள் கொண்டது. ஒவ்வொரு அடியும் நான்கு சொற்கள் கொண்டது.

ஆசையுணர்வு கொண்ட உள்ள உள்ளத்தை ஆன்மாவில் அழித்து இறைவனுடன் அதனைப் பொருந்தி, ஆன்மாவின் யதார்த்தத்தை புரிந்து கொண்டதாக பஷீர் அப்பா மீது புகழ்மாலை சூட்டுகிறார். மகான் பஷீர் அப்பா குடும்பம், திருமணம், வஹ்தத்துல் உஜுூத், வஹ்தத்துஷ் ஷுஹுூது கொள்கை, முராகாபா எனும் இறைவனை நோட்டமிடுதல், முஷாஹதா எனும ◌கண்களை மூடி தியானித்தல் ஆகியவற்றை மிக நேர்த்தியாக விளக்கியுள்ளார்.

பாடல்களில் தொடக்கம் இறைவனைப் புகழ்ந்து பாதுகாவல் தேடுவதாக உள்ளது. இதற்கு காப்பு என்று தலைப்பிட்டுள்ளார்.

"அஹதியத்தில் இருளாகி அஹமதுவில் ஒளிவாகி
ஆதமாய் உருவாகி வெளியான ரஹ்மானே
முஹம்மதென்னும் கோலமாகி அஹமதென்னும் சூரத்தாகி
ஆதமென்னும் ரூபமாக வந்தவனே காப்பாமே
பாதினென்னும் தாத்தாகி பகாவாக எழுத்தாகி
பஷீராய் உருவாகி வந்தவனே காப்பாமே
பஷீராய் உருவாகி பூவுலகில் வந்தவனே
ஜெயமாலை உரைப்பதற்கு ஜெயகுருவே காப்பாமே"

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr.M.Abul Hasan & Dr.N.M.Ahamed Ibrahim P:01-16

கடைசிப் பாடல் இறைவனைப் புகழ்ந்து அவனிடம் மன்றாடி கேட்கும் வேண்டுதலாக அமைந்துள்ளது. அதில் தம்மைக் காக்குமாறு வேண்டி முடிக்கின்றார் கவிஞர்.

6. ஞான திருமணி மந்திரம்

இத்தலைப்பில் இருபத்தொன்பது செய்யுள்கள் உள்ளன. இது ஈரடிச் செய்யுள். ஒவ்வொரு அடியிலும் நான்கு சொற்கள் ஆளப்பட்டுள்ளன.

இறைவனின் திருநாமங்களில் ஒன்றாக கூறப்படும் 'ஹுவ' என்று இறைவனை விழிப்பதாக அமைந்துள்ளது. பாடல்கள் ஒவ்வொன்றும் யா ஹுவே என்று முடிகின்றது.

"ஆதியாய் அனாதியாய் ஜோதியாய் சொரூபமாய்
அஹ்மதாய் முஹம்மதாய் உடல்எடுத்தது யாஹுவே"

கடைசி அடியில் இவ்வாறு பாடுகின்றார்.

"அச்சரமில்லா இறையோனே ஐம்பத்தொன்றில் இருப்பவனே
கவிசொன்ன மஸ்வூதை காத்தருவாய் யாஹுவே"

இறைவனின் ஆதி, அந்தம், ஆன்மாக்களை படைத்தது, ஆன்மாக்களில் அவன் இருப்பது, காப்பது,மிஃராஜில் இறைவனை நபி கண்டது, மனிதனில் ஊதப்பட்ட ஆன்மா ஹுவென்று ஊதப்பட்டதாகக் கூறுவது, மனிதன் விடும் மூச்சும் ஹுவென்று அமைந்திருப்பது, வீசும் காற்றும் ஹுவென்று வீசுவது என்று பாடல்கள் முழுவதும் 'ஹுவ' என்ற சொல்லைக் குறித்து கூறப்பட்டுள்ளது. "முஃமினின் இதயம் அல்லாஹ்வின் அர்ஷ் (சிம்மாசனம்) என்பது நபிமொழி. அதனை உணர்ந்து, அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் இருப்பில்லை என்பதை விளக்கும் கொள்கை 'வஹ்ததுல் உஜுத்' கொள்கை. அதனை இதில் விவரித்துள்ளார்.

7. ஞான முப்பொருள் கவிகாப்பு

இத்தலைப்பில் இறைவனை புகழ்ந்து பாதுகாவல் தேடும் 'காப்பு' செய்யுள் எட்டு அடிகளைத் தவிர்த்து, ஐம்பத்து ஆறு செய்யுள்கள் உள்ளன. அவை அனைத்தும் ஈரடிச் செய்யுள்கள்.ஒவ்வொரு அடியிலும் நான்கு சொற்கள் அமைந்துள்ளன.

'நான் மறைபொருளாக இருந்தேன்' என்ற ஹதீசின் பொருளைக் கூறி தொடங்கும் செய்யுள் தொடங்கப்பட்டுள்ளது.

“ஆதி என்ற அரும்பொருள் அகதியத்து
அமா வென்னும் குன்துகன்சுல் மக்ஃபிய்யாமே ”

உடல், உள்ளம், உள்மனது, வெளிமனது, ஆன்மா, இறைவன், இறைவனை உணர்தல், அறிதல், காணுதல் ஆகியவற்றைப் பற்றி விரிவாக கவிதைகள் நெடுக பேசியுள்ளார் கவிஞர்.

“தன்னை அறிந்தவன் தன் இறைவனை அறிவான்” என்ற நபிமொழியின் கருத்து பாடல்கள் எங்கும் பிரதிபலிக்கின்றது. ஒவ்வொரு செய்யுளிலும் அரபி சொற்கள் கையாளப்பட்டுள்ளன. அரபிமொழி அறிந்தாலன்றி புரிதல் எளிதில்லை.

மனிதனின் ஆன்மாவுக்கு கருவரையில், கப்ரில், மறுமையில் இரவு- பகல் இல்லை என்று வர்ணிக்கும் கவிஞர், மூச்சான ஆன்மாவை முச்சந்தியில் (இரண்டு புருவங்களுக்கிடையான மூக்கில் மேல்பகுதி) நிறுத்தி மனதை நோட்டமிட்டால் அல்லாஹ்வைத் தவிர வேறு இல்லை என்று வெளிப்படும் என்கிறார்.

கடைசி செய்யுள் , கவிஞர் பாதுகாவல் தேடுவதாக அமைந்துள்ளது.

“கவிசொன்ன செய்யது மஸ்வூதை தான்
காத்தருள வேணுமே யா இலாஹி”

8. ஞானப் பிரகாச மணிச்சுடர்

இத்தலைப்பில் இருபத்தி ஆறு செய்யுள்கள் உள்ளன. அவை அனைத்தும் நான்கடிச் செய்யுள்கள். ஒவ்வொரு அடியிலும் நான்கு சொற்கள் உள்ளன.

“இறைவனின் முதல் படைப்பு முகம்மது நபியின் நூர்(வெளிச்சம்)” எனும் நபிமொழியின் கருத்தில் தொடங்கி, இறைவனிடம் பாதுகாவல் தேடுவதாக முதல் செய்யுள் அமைந்துள்ளது.

பாடல்கள் முழுவதிலும் இறைவனின் தாத் எனும் உள்ளமை, அந்த உள்ளமையை உள்வாங்குதல், உணர்தல் , அறிதல் ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளது. முஷாஹாதா எனும் தனிமை தவத்தையும், முராகபா எனும் நோட்டமிடுதலையும் எப்படி மேற்கொண்டு இறைவனை அறிய வேண்டும் ? என்று சாதாரண மக்களும் புரியும்படி விளக்கப்பட்டுள்ளது.

மனிதனுக்கு நான்கு கண்கள் உள்ளன. இரண்டு கண்கள் உடலிலும் இரண்டு கண்கள் இருதயத்திலும் உள்ளன என்பது திருக்குர்ஆன் விரிவுரையாளர் முஜாஹித் (ரஹ்) இன் கருத்து.[11]

இருதயத்தால் இறைவனை அறிதலையும் அகக்கண்களால் அவனை காண்பதையும் இச்செய்யுள்கள் விரிவாக எடுத்துரைக்கின்றன.

“நாட்டம் பெரும் நல்லோரே நோட்டமிடுவீரே
நேத்திரம் இரண்டைகொண்டு நிசத்தை காணுவீரே
மக்சூதை இடைவிடாமல் முகம் நோக்குவீரே
ஹக்களவில் முன்நோக்கி அருளை பெருவீரே
ஹக்கை கல்கில் ஒன்றாக்கி எகீனை பெருவீரே
மூன்று எகீன் தெரிந்துகொண்டால் முக்தி அடைவீரே
எறும்புமுதல் யானைவரை எப்படைப்பு களிலும்
முன்னவனை நிரப்பமாக்கி மோகம் கொள்ளுவீரே”

மனிதர்கள் ஆன்மாவில் முக்தியடையும் முழுவழிகளையும் படிப்படியாக இப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

இறுதியில் அல்லாஹ்வை புகழ்ந்து முகம்மது நபி சலவாத்து கூறி பாதுகாவல் தேடி முடிக்கின்றார் கவிஞர்.[12]

அரபுத்தமிழ் மொழிபெயர்ப்பாளர் தண்டன் சாகுல் ஹமீது

1985 – 1990 க்கும் இடைப்பட்ட காலத்தில் அரபுத்தமிழ் பயன்பாடு குறையத் தொடங்கியது. அரபுத்தமிழில் எழுதப்பட்டிருந்த செய்யது மஸ்வூது ஃதானி இன் அரபுத்தமிழ் பாடல்களை தூய தமிழில் மொழிபெயர்க்க முயற்சியெடுத்தார் அவரின் மகனும், தற்போதைய ஜிஷ்திய்யத்துல் காதிரிய்யா ஆன்மிக வழியின் ஷெய்குமான பஷீர் அகமது ஆலிம் சாகிபு.

மேலப்பாளையத்தின் பிரபல அரபுத்தமிழ் மொழிபெயர்ப்பாளர்களில் ஒருவர் தண்டன் சாகுல் ஹமீது (பிறப்பு 11.11.1949) ஆவார். ஒன்பதாம் வகுப்பு வரையில் படித்துள்ள இவர், செய்யது மஸ்வூது ஃதானியிடம் 1966 ஆம் ஆண்டு தமது 17 வது வயதில் ஏழாவது படித்தரத்தில் (மகாம்) பக்தருக்கான (முரீது) பைஅத் பிரமாணம் பெற்றார்.

1996 ஆம் ஆண்டு முழுநேரப் பணியாளராக அதாயிர் ரசூல் தைக்காவில் சேர்ந்தார். பழங்கால அரபுத்தமிழ் நூல்களை தமிழ் வடிவத்தில் மாற்றுவதில்

வல்லவரான அவரிடம் 'மெஞ்ஞானச் சுடர்' எனும் செய்யது மஸ்வூது ஃதானி இன் கவிதைத் தொகுப்பு நூல் அளிக்கப்பட்டது. சுமார் பதினான்கு நாள்களில் அதனை அவர் மொழிபெயர்த்தார். அசல் அரபுத்தமிழ் நூல் இன்னும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.[13]

இந்நூலை ஆய்வு செய்திடும் ஆய்வுக்கான பாதை திறந்தே உள்ளது. பாடல்கள் தமிழ் வடித்தில் மாற்றப்பட்டாலும் அரபுச் சொற்களும் , சூஃபிசம் சார்ந்த தமிழ் இலக்கியச் சொற்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளதால், தெளிவான உரையின்றி பாடல்களின் பொருளை உணர்வது கடினம்.

வரும் காலத்தில் இப்பாடல்களில் விரிவுரைப் பணிகளும், காசிலெப்பை அபுல் ஹசன் அரபுத் தமிழில் எழுதிய நூல்களை தமிழ் வடிவத்திற்கு மாற்றும் பணிகளும் நடைபெற வேண்டும்.

முடிவுரை

ஆன்மிக குரு செய்யது மஸ்வூது ஃதானி பாடி, அரபுத்தமிழில் எழுதப்பட்ட கவிதைகளை இக்கட்டுரை அலசி ஆராய்ந்துள்ளது. அவரின் பாடல்கள் இறைவன், உடல், உண்மை, உள்ளமை, ஆன்மா, குரு, வஹ்ததுல் உஜூத் கொள்கை ஆகியவற்றை குறித்து பேசியுள்ளது. அரபுத் தமிழ் கவிஞர்கள், எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் என முவ்வகை அறிஞர்களை இக்கட்டுரை அறிமுகப்படுத்தியுள்ளது.

கவிஞர் அரபுத்தமிழ் எழுத்தாளராக இருப்பினும் , அக்காலத்தில் அழகிய அரபுத்தமிழில் எழுதுபவரான காசிலெப்பை அபுல் ஹசனை வைத்து புத்தக வடிவத்தில் எழுதப்பட்டது. காசிலெப்பை அபுல் ஹசன், இக்கட்டுரையாளர்களில் முதலாமவரின் தாய்வழிப் பாட்டனார் ஆவார். அசல் தொகுப்பின் எழுத்துக்கள் கருப்பு நிறத்தில் உள்ளன. ஆங்காங்கு சிவப்பு நிறத்திலும் எழுதுப்பட்டுள்ளது.

அரபுத்தமிழ் இலக்கியங்கள் இன்னும பல பள்ளிவாசல்கள் மற்றும் தைக்காக்களில் பெட்டிகளில் பூட்டப்பட்டு கிடக்கின்றன. அவை அச்சடிக்கப்பட்டு வெளியுலகுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

அரபு, தமிழ், அரபுத்தமிழ் இலக்கியவாதிகளை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!

ஆதார நூல்கள் / துணை நூற்பட்டியல் :

1) தமிழ் விக்கிபீடியா
2) மேலப்பாளையம் வரலாறு , வெளியீடு- உஸ்மானிய்யா அரபிக்கல்லூரி 2017
3) மேற்கூறப்பட்ட ஆதார நூல்.
4) மேற்கூறப்பட்ட ஆதார நூல்.
5) Kalikoot –ISSN2278-764X , Dec -2020
6) நேரடி கள ஆய்வு
7) காமூசுல் முஹீத் அரபி அகராதி
8) மேலப்பாளையம் வரலாறு , வெளியீடு- உஸ்மானிய்யா அரபிக்கல்லூரி 2017
9) லிசானுல் அரப் (அரபி மொழி அகராதி)
10) மசலா கட்டுரை - இஸ்மி மாத இதழ் ஏப்ரல் -1982 சென்னை
11) முஸ்னதுல் ஃபிர்தவ்ஸ்- இமாம் தைலமீ
12) மெஞ்ஞானச் சுடர் , வெளியீடு – ஜம்வு அலி பஷீர் அகமது ஆலிம் ,1996
13) நேரடி கள ஆய்வு.

Reference :

1. Tamil Wikipedia.
2. Melapalayam History, Released by Usmaniya Arabic College, 2017.
3. Masalaa Article, Ismi Monthly Journal, Chennai. 1982.
4. Mushnathul Firdhos, Imam Thailaimi.
5. Mei Gnana sudar Publishers, Jamvu Ali Badhir Ahmed Alim, 1996.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr. A.Abdul Wahid P: 17-27

Since 1951

அரபுத்தமிழ் வளர்ச்சியும் வீழ்ச்சியும்

DEVELOPMENT AND DOWNFALL OF ARAB - TAMIL

Dr. A.Abdul Wahid
Assistant professor of Arabic,
Post graduate and research department of Arabic,
Jamal Muhammad college,
Tiruchirapalli - 620 020.
Email: abdulwahid626@gmail.com

முனைவர் அ.அப்துல் வாஹித்,
உதவி பேராசிரியர்,
முதுகலை மற்றும் அரபு
ஆய்வியல்துறை,
ஜமால் முகமது கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-620020.

Abstract:

` This article carries out studies related to the aspects of Origin and History of Arabic Language, the influence of Arabic language, its dominance over other languages with its strong reasons, its impact on Tamil and the global population, Islamic religious sentiments as a medium and object for its wide existence, the global status of Arabic, on other hand, the influence of Tamil, the enduring nature of the Tamil language, its effieciency to maintain its existence even if it bends and does not break, Arabic-Tamil definition, relationship between Arabic Language and Muslim people, the opinions of eminent scholars about Arabic-Tamil, the factors for the establisment of Arabic-Tamil, the origin of Arabic-Tamil, Tamil-Arabic sounds and its phonitics and its writing style, etc.

Keywords:

Arab -Tamil, Tamil-Arabic sounds, Necessity of Arab -Tamil, Indifference to Arab -Tamil, and Origin of orthography.

கட்டுரைச் சுருக்கம்

அரபு மொழியின் தோற்றம் மற்றும் வரலாறு, அரபு மொழியின் செல்வாக்கு, மற்ற மொழிகளின் மீது அது செலுத்திய ஆதிக்கம் மற்றும் அதற்கான வலுவான காரணங்கள், தமிழ் மற்றும் உலகளாவிய மக்கள் மீது அது ஏற்படுத்திய தாக்கம், அதற்கு ஏதுவாக இஸ்லாமிய மத உணர்வுகள் ஊடுபொருளாகவும் உருபொருளாகவும் அமைந்தமை, அரபு மொழியின் உலகளாவிய பயன்பாட்டு நிலை, தமிழ் மொழியின் செல்வாக்கு, தமிழ் மொழியின் வளைந்து கொடுக்கும் இயல்பு, வளைந்தாலும் உடைந்து விடாது தன் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளும் உறுதிப்பாடு, அரபுத்தமிழ் வரைவிலக்கணம், அரபுமொழிக்கும், முஸ்லிம்களுக்கும் இடையேயான உறவுநிலை, அரபுத்தமிழ் பற்றி பல்வேறு அறிஞர்களும் கூறியுள்ள கருத்துக்கள், அரபுத்தமிழின் தோற்றத்திற்கான காரணிகள், அரபித்தமிழின் தோற்றப்பின்னணி, தமிழ்-அரபுஒலி, எழுத்தமைப்புகள் முதலினத் தொடர்பான ஆய்வுகளை இந்தக் கட்டுரை முன்னெடுக்கின்றது.

கருச்சொற்கள்:

அரபுத்தமிழ், தமிழ்-அரபு ஒலிகள், அரபுத்தமிழின் அவசியம், அரபுத்தமிழ் மீதான அலட்சியம், இய்யெழுத்து முறையின் தோற்றம்.

முன்னுரை

அரபுத்தமிழ் என்பது தமிழை அரபு மொழியை பயன்படுத்தி அதாவது அரபுஎழுத்தை பயன்படுத்தி எழுதுவதாகும். அரபிகள் தென்னிந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளுக்கு வந்த பொழுது தமிழ்மொழி பேசும் மக்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். அதனால் தமிழ்மொழியை பேச கற்றுக் கொண்டனர். ஆனால் அவர்கள் பேசிய தமிழ்மொழியை எழுதத் தெரியாதவர்களாக காணப்பட்டனர். அதனால் தாம் அறிந்து வைத்திருந்த அரபு எழுத்தை பயன்படுத்தி தமிழை எழுதினர். அதனாலேயே அரபுத்தமிழ் உருவானது. அரபுத்தமிழ் என்பது ஒருமொழி அல்ல, அது ஓர் எழுத்துவடிவம் மட்டுமே.

அரபுத் தமிழைப் பற்றி ஆய்வு மேற்கொள்ளும் பொழுது, பேராசிரியர் எம் எஸ் எம் ஜலாலுதீன்[1] அவர்களின் கருத்தையும், அவர்கள் இது குறித்து மேற்கொண்ட ஆய்வையும், அந்த ஆய்வில் அவர்கள் பதிவிட்ட இன்னபிற தமிழ் அறிஞர்களின் கண்ணோட்டங்களையும், புறந்தள்ள முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

அரபுமொழியும் முஸ்லிம்களும்

அரபுத்தமிழின் தோற்றம் பற்றிய ஆய்வுக்கு முன்னோடியாக அரபுமொழி சர்வதேச ரீதியாகவும், குறிப்பாக இஸ்லாமிய உலகிலும் செலுத்திவருகின்ற மொழியியல், சமயரீதியாக தாக்கங்களை அறிந்து கொள்ளவேண்டியுள்ளது. மொழிகளை பொதுவாக மரபுரீதியாகவும், இனரீதியாகவும் வகைப்படுத்துவார்கள். இவ்வகையில் அரபுமொழி செமிட்டிக் மொழிக் குடும்பத்தின் தென்பிரிவு குழுவைச் சேர்ந்ததாகும்.[2]

அரபுநாட்டில் தோன்றிய இம்மொழி, மேற்கு ஆசியபகுதியில் உள்ள பல நாடுகளின் மக்களுக்கு தாய்மொழியாகவும் பிறநாடுகளில் உள்ள முஸ்லிம்களின் சமய, கலாச்சார மொழியாகவும் விளங்குகின்றது. இவ்வகையில் சுமார் 23 இஸ்லாமிய நாடுகளில் அரசு உத்தியோக பூர்வ முதன்மை மொழியாகவும், ஈரான், பாகிஸ்தான் போன்ற முஸ்லிம் நாடுகளில் இரண்டாந்தர உத்தியோக பூர்வ மொழியாகவும், சுமார் 39 கோடிக்கு மேற்பட்ட மக்களால் பேசப்படும் தாய் மொழியாகவும், உலகில் சுமார் 100 கோடிக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் சமய, கலாச்சார ரீதியாக மிகநெருக்கமான தொடர்பு கொண்ட மொழியாகவும் அரபுமொழி விளங்குகின்றது. எழுத்து வடிவில் அரபு இலக்கியம் சிமெட்டிக் மொழிக் குடும்ப இலக்கியங்களில் காலத்தால் பின்னரே தோன்றியதாகும். எனினும், பழமை பேணும்பாங்கு, சொற்றொகுதி பெருக்கம், செறிவான வார்த்தைவளம், தொடர்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr. A.Abdul Wahid P: 17-27

அமைப்பு தனித்தன்மை, வினை வடிவங்களின் விரிவு, சுருங்கிய வார்த்தையில் பெருகிய அர்த்தத்தைக் கொடுத்தல், ஆகியவற்றால் அமையும் சிறப்பின் காரணமாக பிற செமிட்டிக் மொழிகளையும் முந்தி நிற்கின்றது. [3]

செமிட்டிக்மொழிகளில் மிகவளர்ச்சி அடைந்த அரபுமொழி, வட அரபுமொழி, என இருவகைப்படுகின்றது. தென் அரபுமொழி யெமன் என்னும் தென்அரபுநாட்டின் பழமையான பேச்சுமொழியாக கிபி 600ஆம் ஆண்டு வரைவிளங்கியது. அப்பகுதியில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள சில கல்வெட்டுகளால் இம்மொழியின் தொன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது. மிகப் பழமையான அரபுமொழி கண்டு பிடிப்புகளாக கிமு 853-623ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடந்த ஒரு போரின் நினைவு சின்னங்களாக இப்பொழுது கிடைக்கின்ற 40 பெயர்கள் அடங்கிய கல்வெட்டுகள் காணப்படுகின்றன. [4]

இஸ்லாத்தின் தோற்றத்தோடு தென் அரபுமொழியின் ஆதிக்கம்குறைந்து, வட அரபுமொழியின் செல்வாக்கு அதிகரிக்க ஆரம்பித்தது. இதற்குரிய முக்கிய காரணம் அல்லாஹ்வின் அருள்மறையான புனித குர்ஆன் வட அரபு மொழியிலேயே அருளப்பட்டதாகும். இதனால் இஸ்லாமிய சமய, குர்ஆன் மொழியாக விளங்கும் வட அரபுமொழி, ஒப்பற்ற முறையில் உயர்ந்து வளர்ந்தது. கிடைக்கின்ற ஆதாரங்களின்படி புனித அல்குர்ஆன் அரபுமொழியின் தோன்றிய முதல் நூலாகும். அம்மொழியின் பின்னர் தோன்றிய இலக்கியங்களுக்கெல்லாம் அல்குர்ஆன் ஒரு முன்னோடியாக திகழ்கின்றது. இஸ்லாமிய நாடுகளில் மட்டுமின்றி முஸ்லிம்கள் பரவலாக வாழும் நாடுகளிலும்கூட முஸ்லிம்களின் தாய்மொழி எம்மொழியாக இருந்தபோதிலும், சமயமொழியாக அரபுமொழி தொடர்ந்து திகழ்ந்து வருகின்றது. குர்ஆன் அம்மொழியில் அருளப்பட்டுள்ளது இதற்கு முக்கிய காரணமாகும். 28 எழுத்துக்களை மாத்திரம் கொண்ட இந்த அரபிமொழி அத்தனை எழுத்துக்களையும் மெய் எழுத்துக்களாக கொண்டிருக்கின்றது. அவற்றின் மேலும், கீழும் சிறிய குறியீடுகளை அமைத்து, உயிரெழுத்து உருவாக்கப்பட்டுள்ளது. உயர்தனிச் செம்மைநிலை அடைந்து அரபுமொழியின் எழுத்து வழக்கிற்கும் பல வேறுபாடு உண்டு. இம்மொழி வலப்பக்கம் இருந்து இடப்பக்கமாக எழுதப்படுகின்றது.

இலங்கை, தென்னிந்திய முஸ்லிம்களின் சமய கல்வி கலாச்சார அம்சங்களோடு அரபுமொழி, வரலாற்று ரீதியாக மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளது. இந்நாடுகளில் அரபுகளின் வருகையைத் தொடர்ந்து அரபுமொழியின் அறிமுகம் ஏற்பட்டது. முஸ்லிம் சமூகத்தின் அல்குர்ஆனின் பிரவேசம் அரபுமொழியின் அவசியத்தை ஏற்படுத்தியது. இதன்காரணமாக இலங்கை தென்னிந்திய முஸ்லிம்கள் ஆரம்பகாலத்தில் இருந்தே அரபுமொழியோடு தொடர்புடையவர்களாக காணப்பட்டனர்.

இலங்கை, தென்னிந்திய முஸ்லிம்கள் தமது தாய்மொழியாக தமிழைக் கொண்டிருந்தபோதும், அவர்களின் சமய, கலாச்சார வாழ்வில் அரபுமொழி பெரும் செல்வாக்கை செலுத்தி வருகின்றது இஸ்லாத்தில் ஷரிஆ விதிகளுக்கு ஏற்ப, முஸ்லிம்கள் சமய அனுஷ்டானங்களிலும், நாளாந்த நடவடிக்கைகளின் ஒருசில அம்சங்களிலும், தினம் ஓதிவருகின்ற புனிதகுர்ஆனின் மூலம் அரபிமொழி இம்மக்களோடு இரண்டறக் கலந்துள்ளது.

மிகப்பெரும்பாலான முஸ்லிம்களுக்கு அரபுமொழி பேசத் தெரியாதெனினும், அவர்களது அன்றாட வாழ்வில் பொருள் உணர்வுடனும்,பொருள் உணர்வின்றியும் ஏராளமான அரபுச் சொற்களும், தொடர்களும், பயன்படுத்தப்படுகின்றன. முஸ்லிம்களின் அன்றாட வாழ்வில் அரபுமொழி பயன்பாட்டை பின்வரும் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்திக் கொள்ளலாம்.

1. சமய வழிபாடுகளிலும், சடங்குகளிலும், பொருள் உணர்வுடனும், பொருளுணர்வின்றியும் அரபுமொழி பயன்படுத்தப்படுதல்.
2. கலாச்சாரத் தனித்துவத்தை வெளிக்காட்டும் அடையாளமாக ஆட்களுக்கும், நிறுவனங்களுக்கும் அரபுமொழி பயன்படுத்தப்படுதல்.

   உதாரணம்: ஜமால் முஹமது கல்லூரி, பிஸ்மில்லாஹ் உணவுக்கடை.
3. சமய கலாச்சாரத் தேவைகளின் அடிப்படையில் அமைந்த அன்றாட செய்தித் தொடர்பு தேவைகளுக்காக அன்றாட மொழிபயன்பாட்டில் அரபுச் சொற்களும், தொடர்களும் பயன்படுத்தப்படுதல்.[5]

இவற்றைத்தவிர, அன்று முதல் பிரகாசித்த மத்தியகிழக்கு நாடுகளின் வேலைவாய்ப்பு, இலங்கை தென்னிந்திய தமிழ்மக்கள் மத்தியில் முக்கிய இடம் பெற்றுள்ளதாலும், மத்தியகிழக்கு நாடுகளுக்கு சென்றுவருகின்ற பெரும்பாலான தமிழ்முஸ்லிம் ஆண்களும் பெண்களும் கூட பேச்சுவழக்கிலான அரபுமொழியை ஓரளவு பேசக்கூடியவர்களாகவும் விளங்கக்கூடியவர்களாகவும் உள்ளனர்.

முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் அல்குர்ஆன் அரபுமொழியை இரண்டற கலக்க வேண்டிய தேவையை ஏற்படுத்துகின்றது. புனிதக்குர்ஆன் முஸ்லிம்களின் வாழ்வில் எத்தனை செல்வாக்கைகொண்டுள்ளது என்பதற்கு சான்று தேவையில்லை.

இதுமட்டுமின்றி தமிழகத்தில் ஆரம்பகாலங்களில் இருந்து செயல்பட்டு வந்த மக்தப் மற்றும் மதரஸாக்களை தொடர்ந்து 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் அரபுலகமதரஸாக்களின் பாடத்திட்டத்தின் அமைப்பில் அரபுமொழிகல்லூரிகள் பல நிறுவப்பட்டுள்ளன. அவற்றின் பாடத்திட்டங்களும், பயிற்றுமொழியும் முழுக்க அரபுமொழியாகவே உள்ளதால். அதில் ஏழு வருடம் எட்டு வருடம் கற்று வெளியாகும் ஆயிரக்கணக்கான மௌலவிமார்கள் உலமாக்கள் இன்றும் கிராமங்களிலும், ஊர்களிலும் பணியாற்றுகின்றனர்.[6]

இந்தியாவிலும் இலங்கையிலும் பள்ளிகளில் நீண்ட காலமாகவே அரபிமொழி கற்பிக்கப்பட்டு வருவதுடன், பல்கலைக்கழகங்களிலும் அரபு மொழித் துறைகள் இயங்கி வருகின்றன. அதில் ஆயிரக்கணக்கான பட்டதாரி மாணவர்கள் அரபு மொழியை ஒரு பாடமாகவும் சிலர் சிறப்பு படமாகும் கற்றும் பட்டம் பெற்று வெளியாகின்றனர். தமிழகம் மற்றும் இலங்கை போன்ற தமிழ்ப் பிரதேசங்களில் அரபுமொழி பெற்றுள்ள செல்வாக்கு மிகவும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் மொழியின் செல்வாக்கு

சுமார் 86 மொழிகளை உள்ளடக்கியுள்ள திராவிடமொழிக்குடும்பத்தில் பழமையான மொழி தமிழ்மொழியாகும். தமிழ்மொழிக்கு கடந்த 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியச் சான்றுள்ளது. நமது தமிழ்நாட்டைத் தவிர, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இந்தோனேசியா, கசித்தீவு, மொரிசியஸ், ஆகியநாடுகளிலும் தென்னாபிரிக்கா, பிரித்தானியா, டயானா, மடகாஸ்கர், போன்ற நாடுகளிலும் வாழ்கின்ற தமிழர்களாலும் தமிழ் பேசப்படுகின்றது. இந்தியாவில் மட்டும் ஏறத்தாழ 6.36% அதாவது 69,026,881 மக்கள் தமிழ்பேசுகின்றனர்.[7]

அரபுத்தமிழ் வரைவிலக்கணம்

அரபுத்தமிழ் பற்றிய வரைவிலக்கணம் இரண்டு வித்தியாசமான கருத்துக்களை உடையதாககாணப்படுகின்றது அவைபின்வருமாறு.

1. தமிழ்சொற்களை வாக்கியங்களை அரபுஎழுத்துக்களை பயன்படுத்தி எழுதுவதற்கு அரபுத்தமிழ் என்று கூறப்படும்.[8]

2. முஸ்லிம்களின் தமிழில் உரையாடலில் அல்லது தமிழ்வசன அமைப்பில் அரபுசொற்கள் எவ்விதமொழிபெயர்பும் இன்றி எழுதப்படுவதற்கும் அரபிதமிழ் என்று கூறப்படும். உதாரணமாக மவுத் மரணம், வக்த் நேரம்.

இலங்கை மற்றும் தென்னிந்திய முஸ்லிம்களின் பேச்சுவழக்கில் பல அரபு சொற்கள் இடம் பெற்றுள்ளன, அவற்றிற்கான தமிழ் சொற்கள் இருந்தும் அவ்வறபுச் சொற்களே கையாளப்படுவது கவனிக்கத்தக்கது. அரபுத்தமிழை அரபியிலேயே எழுதினார். அரபுமொழியில் இல்லாத ட, ச, ஞ, ப போன்றொதமிழ் ஒலிகளை குறிப்பதற்கு அரபு எழுத்துகளோடு விசேஷப்புள்ளிகளை சேர்த்து எழுதுவர்.[9] கலாநிதி, எம்.ஏ.எம்.சுக்ரி போன்றொர் இவ்விரண்டு வரைவிமக்களையும் ஏற்றுக்கொள்கின்றனர்.

கலாநிதி சுக்ரி அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார் கரையோர பிரதேசங்களிலும், தென்கிழக்கு இந்தியபிரதே சங்களிலும்,தமிழ்மொழி அரபு மொழியில் அரபுமொழியிலேயே தமிழுக்கு ஏற்ற முறையில் பொருத்தமான அரபுமொழி கருத்து அரபுமொழி அரபுமொழி கருத்து அமைவுகள் அமைவுகளுடன் எழுதப்பட்டு வந்தது இந்த புதியஎழுத்துவடிவமும் பெருமளவு அரசுசொற்கள்கலந்து

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr. A.Abdul Wahid P: 17-27

தமிழ்மொழியிலேயே எழுதப்பட்ட மொழிநடை அரபுத்தமிழ் என்று அறியப்படுகின்றது என்று கூறுகின்றார்.[10]

அதே நேரத்தில் அரபுத்தமிழ் என்பது அரபுலிபியில் வரிம்வடிவத்தில் எழுதப்பெற்ற தமிழ் ஆக்கங்களே என்ற கருத்தை மட்டும் பலர் ஏற்கின்றனர். உதாரணமாக எம்ஆர்எம் அப்துல் ரஹீம் தனது இஸ்லாமிய கலைக்களஞ்சியத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் தமிழ்நாட்டில் நிலையாக குடியமர்ந்த முஸ்லிம்கள் தமிழ் மக்களோடு மொழிவழியாக உறவுகொள்ளும் முற்பட்டனர், அதற்குவசதியாக அரபு எழுத்துக்களில் தமிழை எழுதலாயினர், கருத்து தமிழாகவும் எழுத்து அரபியாகவும் அமைந்தது மொழி தமிழாகவும் அமைந்தது இதுவே அரபுத்தமிழ் என்று அழைக்கப்படுகின்றது.[11]

பேராசிரியர் ஆர்.பி.எம்.கனி அவர்கள் அரபுத்தமிழ் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்,அரபிக்கும் தமிழுக்கும் பாலமாகவிளங்கியது அரபுத்தமிழ். லிபியால் அரபியாகவும் ஒலியால் தமிழாகவும் விளங்கியது இந்த அற்பசாதனம் .நாம் முன்னோர்களான மார்க்கஞான அறிஞர்களின் மேதமைக்கு இது ஒருசான்றாகும். அரபுத்தமிழ் புதிய ஒருமொழி அன்று அது தமிழ் தான் எனவே அது கண்ட இலக்கியமும் முற்றாக தமிழையேசாரும். அது இஸ்லாமிய தமிழ் இலக்கியம்தான். இதனால் தான் தமிழ் அச்சு வசதிகள் அதிகரித்த பின் இவற்றுள் பல தமிழ்லிபியில், சுத்த தமிழ் நூல்களாக வெளிவந்துவிட்டன. ஆரம்பித்தமிழில் வெளிவந்த நூல்களையேபடித்து பழக்கப்பட்டவர்களுக்காக பின்னர் தமிழ் எழுத்துக்களில் அச்சான சீறாப்புராண வசனம் போன்றபல நூல்கள் அரபுத்தமிழிலும் வெளியிடப்பட்டுள்ளன.[12]

அரபுத்தமிழில் தோற்றத்துக்கான காரணங்கள்

அரபுத்தமிழ் தோற்றத்துக்கான காரணங்கள் பலவாக காணப்படுகின்றன. அவைகளில்சில பின்வருமாறு. ,

1. **தென்னிந்திய,இலங்கை முஸ்லிம்களின் பிறமொழிப்பரீட்சையமை.**

தென்னிந்திய இலங்கை முஸ்லிம்கள் ஐரோப்பிய ஆட்சிகாலத்தில் கல்வியிலும் தொழில் வாய்ப்பிலும் ஏனைய சமூகங்களைவிட மிகப் பின்தங்கிய நிலையிலேயே காணப்பட்டதை புள்ளி விவரங்கள் தெளிவுபடுத்துகின்றன. ஐரோப்பிய ஆட்சியாளர்கள் மிஷனரி கல்வியை அறிமுகப்படுத்தினர், ஆனால் அந்த கல்விமுறை இந்த நாட்டின் சுதேசமக்களை கிறுத்துவ சமயத்திற்கு மாற்றும் செயலில் ஈடுபடுவதாக முஸ்லிம்கள் அறிந்திருந்தனர். தமது மதஒழுக்கத்திற்கு பங்கம் ஏற்பட கூடும் என்ற அச்சத்தின் காரணமாக பெரும்பாலான முஸ்லிம் பெற்றோர் தம் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பவும் கல்வி புகட்டவும் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. இந்த நூற்றாண்டின் ஆரம்பம்வரை முஸ்லிம்களின் எழுத்தறிவு

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr. A.Abdul Wahid P: 17-27

விகிதம் மிகவும் குறைவாகவே இருந்துவந்துள்ளது. எனினும் சமய கடமை காரணமாக அரபு எழுத்துக்களை வாசிக்க பலரும் அறிந்திருந்தனர் அவர்களுக்கு அரபுமொழிதெரியாது ஆனால் அரபுஎழுத்துக்களை வாசிக்கதெரியும் தமிழ் எழுத்துக்களை வாசிக்கத்தெரியாது ஆனால் தமிழ்தெரியும் ஆகவே தெரிந்த மொழியை தெரிந்த எழுத்துக்களை கொண்டு வாசிக்க கற்றுகொண்டனர். அவ்வாற அரபுத்தமிழ் உருவாகிவிட்டது.[13]

2. முஸ்லிம்களின் அரபு மொழிப்பற்று

இஸ்லாத்தில் ஆரம்பகாலத்தில்இருந்தே முஸ்லிம்கள் அரபுமொழிமீது அளவுகடந்த பற்றும் பினைப்பும்கொண்டிருந்தனர். அரபுமொழியை அவர்கள் மனமாரநேசித்தமைக்கானகாரணங்கள் 3 பின்வருமரு.

1.அரபுமொழி இறைத்தூதர் முஹம்மது நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மொழியாக திகழ்ந்தமை.

2.இஸ்லாத்தின்புனிதநூலான குர்ஆனின் மொழியாக விளங்குகின்றமை.

3.சுவர்கத்தின் மொழியாக முன்னறிவிப்புசெய்யப்பட்டமை.

இக்கருத்தை வலியுறுத்தும்வகையில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஹதீஸ் ஒன்று பின்வருமாறு காணப்படுகின்றது. மூன்று விடயங்களுக்காக அரபுமொழியை விரும்புங்கள் முதலாவது நான் அரபியாக இருக்கின்றேன் குர்ஆன் அரபு மொழியிலேயே அருளப்பட்டுள்ளது. மூன்றாவது சொர்க்கவாசிகளின் மொழி அரபாகும்.[14]

3. அரபுச்சொற்களை ஒலி, பொருட்சிதைவின்றி எழுதும் வாய்ப்பு.

அரபுத்தமிழை முஸ்லிம்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்த மற்றொரு காரணம் அரபுச்சொற்களை ஒலிசிதைவும் பொருட்சிதைவும் இன்றி எழுதுவதற்கு அரபுத்தமிழ் ஏதுவாக அமைந்தமை ஆகும்.

அரபுஒலிகளின் பலவற்றை தமிழ்எழுத்துக்களில் எழுதமுடியாது, அவ்வாறு எழுதினால் ஒலிச்சிதைவும்,பொருட்சிதைவும் ஏற்படுகின்றன.

உதாரணமாக அரபுமொழியில் உள்ள غ ، ق ، ك ، خ ، ح ஆகிய எழுத்துக்களுக்கு பதிலாக தமிழில் **கா** என்னும் ஓரெழுத்துமட்டுமே உண்டு. இந்த ஒரு எழுத்தைக்கொண்டு அரபுமொழியில் உள்ள மேற்கூறிய ஐந்து எழுத்துகளை குறிக்கவேண்டும், இதனால் ஒலி சிதைவுமட்டும் இன்றி பொருட்சிதைவும் ஏற்படுகின்றது. உதாரணமாக அரபுமொழியில் حلق ، خلق என்று இருசொற்கள் உள்ளன முதலாவதுசொல் படைத்தான் என்றும் இரண்டாவது சொல் சிதைத்தான் என்றும் பொருளைத்தரும். தமிழ் எழுத்துக்களை கொண்டு இவற்றை

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr. A.Abdul Wahid P: 17-27

பொருட்சிதைவின்றி எழுத முடியாது, ஆனால் அரபித்தமிழில் அரபு எழுத்துக்கள் அனைத்தும் இடம் பெறுவதால் பொருட்சிதைவை தவிர்த்துக்கொள்ளமுடிகின்றது.

அரபுத்தமிழ் வீழ்ச்சிக்கான காரணங்கள்

கிடைக்கின்ற ஆதாரங்களின்படி 19ம் நூற்றாண்டில் தமிழ்பேசும் முஸ்லிம்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றுத்திகழ்ந்த அரபுத்தமிழ், இருபதாம்நூற்றாண்டின் இறுதி அறைபகுதியில் படிப்படியாக வீழ்ச்சியடையத்தொடங்கியது. இப்போது அது ஒரு ஆய்வுப்பொருளாகமட்டும் மாறிவிட்டது குறிப்பிடதக்கது. பேராசிரியர் ஏ.எம்.ஏ.அஜிஸ் மற்றும் பேராசிரியர் எம்.எஸ்.எம். ஜலால்தீன் போன்ற அரபுத்தமிழில் ஈடுபாடு கொண்டசிலர், அரபுத்தமிழை காப்பாற்ற பல்வேறு ஆலோசனைகளை தெரிவித்து வழிகாட்டியபோதும், அரபித்தமிழ் முற்றாக வழக்கிழந்துவிட்டது. அரபுத்தமிழ் இலக்கியம் போதியளவு போற்றப்படாமலும், மக்கள்மத்தியில் பரப்பப்படாமலும் இருந்துவருவது வருந்தத்தக்கஒன்றாகும். இதன் காரணமாக முஸ்லிம்கள் மத்தியில் கூட அரபுத்தமிழ் இலக்கியத்தைப்பற்றிய அறிவு மிககுறைவாகவே இருந்துவருகின்றது. இந்த அவலநிலைக்கு காரணம் நாமேதாம். ஏனெனில் எமது இலக்கியத்தை நாமே தக்கவாறு போற்றாதிருக்கும்பொழுது முஸ்லிம்அல்லாதோர் இதனைபோற்றுவர் என்று எதிர்பார்ப்பது எப்படி.[15]

அரபுத்தமிழின் வீழ்ச்சியை அவதானித்து வந்த அஸீஸ் அவர்களின் மேற்படிகூற்றிலிருந்து அரபுத்தமிழ் வழக்கிழந்து போனமை அவரின் காலத்திலேயே பரவலாக உணரப்பட்டுள்ளது.

இவ்வாறு அரபுத்தமிழ் வழக்கிழந்தமைக்கான காரணங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1. தமிழில் அச்சுவகையான வசதிகள் பெருமளவு அதிகரிக்கத்தொடங்கியமை.

2. தமிழில் அதிகமான இஸ்லாமிய சட்ட, சமய, கலாச்சார, நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அரபுத்தமிழில் சாதிக்ககூடியவைகளை தமிழில் சாதிக்கமுடியும் என்று காரணத்தாலும், தமிழறிவு முஸ்லிம்கள் மத்தியில் சிறந்த நிலைமயை ஏற்படுத்தியதாலும் இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம்.[16]

மேற்படி அற்புதத்தமிழில் சாதிக்ககூடிய முழுவதையும் தமிழில் சாதிக்கமுடியும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல, ஏனெனில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டவாறு இஸ்லாமிய தவ்ஹீத், சரிஆ, போன்ற சமயகருத்துக்களை தெரிவிக்கின்ற சில அரபுச்சொற்களுக்கு இன்னும் தெளிவான தமிழ் மொழிபெயர்ப்பு இல்லை.

முஸ்லிம்களிடையே தமிழ்மொழியின் ஆதிக்கம் பரவியமை அரபுத்தமிழ் வழக்கிலந்தமைக்கு ஒருமறைமுக காரணமாக ஏற்றுக்கொள்ள முடியும். அதனால் புதிதாக அரபுத்தமிழில் நூல்கள் எதுவும் எழுதப்படவில்லை பழைய நூல்களை பேணி வரும் சிலரே இன்றும் அவற்றைபேணிவருகின்றனர். முஸ்லிம்களின் எழுத்தறிவு வீகிதம் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளமையால் இன்று பெரும்பாலான முஸ்லிம்கள் தமிழிலேயே நூல்களை வாசிக்கும் வழக்கம் உள்ளவர்களாக உள்ளனர்.

அத்தியாவசிய அரபுச்சொற்களை மட்டும் அரபு எழுத்தில் பயன்படுத்தி ஏனையவற்றை தகுந்ததமிழ் சொற்களை கொண்டே கையாளவேண்டும் என்றவகையில் முஸ்லிம்களின் மொழிக்கொள்கை நிகழ்ச்சி அடைந்துள்ளது.

தமிழ்நாட்டிலும் அரபுலகபாடத்திட்டங்கள் மதரஸாக்களில் அறிமுகமானதும் அரபுத்தமிழ் வழக்கிலந்தமைக்கான காரணங்களில் ஒன்றாக கருதப்படுகின்றது. இந்த மதரஸாவில் கற்பிக்கப்பட்ட பாடத்திட்டங்கள் நிசாமியா பாடத்திட்ட அமைப்பில் இடம்பெற்றுஇருந்தது எனவே அரபுமொழியை அதற்குரிய இலக்கிய, இலக்கண அந்தஸ்துடன் பயிலக்கூடிய பேசக்கூடிய சந்தர்ப்பம் அதிகரித்ததால், அரபுத்தமிழ் வழக்கிலந்தது.

இவ்வாறான மதரஸாக்களில் வடஇந்தியாவில் இருந்து வந்த அரபுத்தமிழுக்கு அந்நியமான ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் பாடங்களை போதித்ததால் அரபிதமிழ் வளர்ச்சியடையவில்லை.[17]

இவ்வாறு பல்வேறு நிகல்வுகளே அரபுத்தமிழ் வீழ்ச்சிக்கு காரணம் ஆகும்.

அரபுத்தமிழின் எழுச்சி, ஏற்றம் மீண்டும் ஏற்பட வேண்டும் என்ற குரல் வளமாக ஒழித்தபொழுதும் இன்றுவரை அதுவெறும் கூக்குரலாகவே இருந்துவருகின்றது. அரபுத்தமிழ் வலக்குழிந்ததுடன் பல்வேறு இடங்களில் சிதறிகிடக்கின்றன. அவற்றுல் பல அழிந்துவிடும் நிலைமைக்கு தல்லப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இதைமீட்பதற்கு முயற்சிமேற்கொள்ளபடாவிடின் முஸ்லிம்கள் மிகவிரைவில் அவர்களது மூதாதரிகளின் மிக்காத்திரமான கலாச்சாரபண்பாட்டு பங்களிப்பினை பிரதிபலிக்கும் ஒரு செல்வத்தினை இழந்துவிடுவர்.[18]

முடிவுரை

தீர்வு இல்லாத பிரச்சனை என்று ஒன்றுமில்லை என்பார்கள், அதற்கேற்ப அழிவின் விளிம்பில் கிடக்கும் அரபுத்தமிழை மீட்பதற்கும் சிறிதளவு யோசித்து அதன் மீது பெரிதளவு முயற்சித்தால் காரியங்கள் கைகூடும். அவ்வாறு எதிர்பார்கபடும் தீர்வுகள் பின்வருமாறு.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr. A.Abdul Wahid P: 17-27

1. அழிவு நிலையில் ஆங்காங்கே சிதறுண்டு கிடக்கும் அரபுத் தமிழ் நூல்களை ஒன்று திரட்ட வேண்டும். அதன் எழுத்துக்களை கணினி மையப்படுத்தி அச்சிட்டு வெளியிட வேண்டும்.

2. ஊக்கத்தொகை அறிவித்தாவது இஸ்லாமியர்களின் வீடுகளில் ஒளிந்து கிடக்கும் பாரம்பரியமான அரபு தமிழ் புத்தகங்களை வெளிக்கொண்டு வரவேண்டும்.

3. மதரஸாக்களில் அரபுத்தமிழில் எழுதவும் படிக்கவும் சிறார்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். ஏனென்றால் எவன் ஒருவன் அரபுத் தமிழை எழுதவும் படிக்கவும் கற்றுக் கொண்டானோ அவன் குர்ஆனை எழுதவும், ஓதவும் கற்றுக் கொண்டான் என்பது உறுதிப்பட்டுவிடும்.

4. அரபுத் தமிழுக்காகவே பிரத்தியேக பத்திரிகைகளையும் பதிப்பகங்களையும் நிறுவ வேண்டும்.

அரபு தமிழை ஆங்கிலம் இந்தி போன்ற மொழிகளின் மோகம் அடக்கி ஒடிக்கிவிட்ட போதும்கூட, இஸ்லாமிய பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் குர்ஆனை ஓத வேண்டும் என்ற அவாயிருக்கும் காலம்வரை அரபுத்தமிழை மீட்டெடுப்பது இலகு என்பதும், அதற்கான சாத்தியக்கூறு மிகுந்து காணப்படும் என்பதும், எந்த ஐயப்பாட்டிற்கும் இடமின்றி எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதே என்பதில் யாருக்கும் இரு வேறு கருத்து இருக்க முடியாது.

தாய் தமிழை காப்போம், ஆன்மீக அரபியை காப்போம், அதற்கு முத்தாய்ப்பாய் அரபுத்தமிழை முன்னின்று காப்போம்.

உசாத்துணை நூல்களும், அடிக்குறிப்புகளும்
Reference and Foot notes

1. முன்னாளலள் சிரேஷ்ட விரிவுரையாளர், இஸ்லாமிய கற்கை அரபு மொழி பீடம், தென் கிழக்கு பல்கலைக்கழகம், ஒலிவில், இலங்கை. அரபுத்தமிழ் ஒரு வரலாற்று நோக்கு, மருதமுனை.
2. வாழ்வியர் கலைக்களஞ்சியம் 1988 தொகுதி, 1 தஞ்சாவூர், தமிழ் பல்கலைக்கழகம், தமிழ்நாடு.
3. வாழ்வியர் கலைக்களஞ்சியம் 1988 தொகுதி, 1 தஞ்சாவூர், தமிழ் பல்கலைக்கழகம், தமிழ்நாடு.
4. Leiden E.J Brill (1986), TheEncyclopedia of Islam (NewEdition), Netherland,
5. நுஹமான் 1988 இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் அரபு மொழி பண்பாடு, மூன்றாவது அகில இந்திய தமிழ் ஆராய்ச்சி கழக மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு கட்டுரை, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

6. நுஹமான் 1988 இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் அரபு மொழி பண்பாடு, மூன்றாவது அகில இந்திய தமிழ் ஆராய்ச்சி கழக மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு கட்டுரை, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
7. https://en.wikipedia.org/wiki/_இப்னுஅப்பாஸ்
8. பேராசிரியர் சாமி ஆ.மா 1994 தமிழில் இஸ்லாமிய இதழ்கள், நவமணி வெளியீடு, சென்னை.
9. பேராசிரியர் சிவத்தம்பி 1994, தமிழ் இலக்கிய வரலாற்றில் இஸ்லாமிய தமிழ் இலக்கியங்கள் தமிழ் இலக்கியத்தில் மதமும், மானுடமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
10. ஏ.எம்.ஏ.அஜீஸ் 1963 இலங்கையில் இஸ்லாம், யாழ்ப்பாணம், இலங்கை.
11. Shukri M.A.M., (1986), "Muslims of Sri Lanka - A cultural Perspective", Muslims Of Sri Lanka, Jamiya Naleemiyah, Beruwala
12. அப்துல் ரஹீம், 1976 இஸ்லாமிய கலைக்களஞ்சியம், சென்னை.
13. கனி ஆர்.பி.எம் 1963 இஸ்லாமிய இலக்கிய கருவூலம், அருள் நூல் நிலையம், தென்காசி.
14. அரபுத்தமிழ் ஒரு வரலாற்று நோக்கு, 2017, MOFA Print Image, மருதமுனை,பேராசிரியர் எம் எஸ் எம் ஜலாலுதீன்.
15. அஸீஸ் ஏ.எம்.ஏ 1968 அரபு தமிழ் எங்கள் அன்புத் தமிழ், இஸ்லாமிய தமிழ் இலக்கிய சொற்பொழிவுகள், மருதமுனை.
16. சிவத்தம்பி 1994, தமிழ் இலக்கிய வரலாற்றில் இஸ்லாமிய தமிழ் இலக்கியங்கள் தமிழ் இலக்கியத்தில் மதமும், மானுடமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
17. Takya Suayb Alim, (1993), * Arwi and Origin and Development of Lisanul Arwi", Arabic, Persian in Sarandib and Tamil Nadu, Imamul Arus Trust, Madras, 1993.
18. சுக்ரி எம்.ஏ.எம் 1.11.1992 அரபுத் தமிழின் தோற்றமும் அதன் பண்பாட்டு பாரம்பரியமும், கட்டுரை, தினகரன் வார மஞ்சரி, லேக் ஹவுஸ்.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
முனைவர் எஸ். அப்துஸ் ஸமது நத்வி P: 28-35

بسم الله الرحمن الرحيم

அரபுத் தமிழ் தப்ஸீர்கள்; ஓர் கண்ணோட்டம்

A View *of* Arab Tamil Tafsirs

முனைவர் எஸ். அப்துஸ் ஸமது நத்வி,
உதவிப் பேராசிரியர், அரபி & இஸ்லாமிய இயலகம்,
பி.எஸ், அப்துர் ரஹ்மான் கிரசன்ட், பல்கலைக் கழகம்,
வண்டலூர், சென்னை,600048.
அலைபேசி; 9840699131
மின்னஞ்சல்; samadnadwi@crescent.education

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் பேசும் முஸ்லிம்களின் கலாச்சார பண்பாட்டுப் பாரம்பரியத்தின் ஒரு முக்கிய அம்சமாகத் தோன்றி வளர்ச்சியடைந்த அரபுத் தமிழில் எழுதப்பட்ட அரபுத் தமிழ் தப்ஸீர்கள் பற்றிய ஒரு சிறிய ஆய்வு தான் இக்கட்டுரை. தமிழகத்திலும், இலங்கையிலும் எழுதப்பட்ட அரபுத் தமிழ் தப்ஸீர்கள் பற்றிய ஒரு சுருக்கமான கண்ணோட்டத்தை இவ்வாய்வுக் கட்டுரை பிரதிபலிக்கிறது.

ஆரம்பத்தில் திருக்குர்ஆனுக்கு தமிழில் விளக்கவுரை எழுதக் கூடாது என மார்க்க அறிஞர்கள் அதிகம் வலியுறுத்தி வந்ததன் காரணமாக அரபுத் தமிழில் தப்ஸீர்களும் ஏனைய இஸ்லாமிய நூல்களும் வெளிவரலாயின. அவ்வாறு வெளிவந்த தப்ஸீர்களுல் ஒரு சிலவற்றைப் பற்றிய சுருக்கமான தகவல்கள் இவ்வாய்வுக் கட்டுரையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

திறவுச் சொற்கள்

தப்ஸீர், அரபுத் தமிழ், தென்னிந்திய, இலங்கை முஸ்லிம்கள், பத்ஹுர் ரஹ்மான், பீ தர்ஜுமத்தி தப்ஸீரில் குர்ஆன், புதூஹாதுர் ரஹ்மானிய்யா பீ தப்ஸீரி கலாமிர் ரப்பானிய்யா, தப்ஸீர் பத்ஹுல் கரீம், தப்ஸீரே அர்வி ; ஜுஸ்வு அம்மயத், கலாச்சார பண்பாட்டு வாழ்வு, ஆய்வு, தொன்மை.

Abstract

This article is a short study of the Arabic Tamil Tafseers written in Arabic Tamil, which appeared to be an important aspect of the cultural heritage of Tamil-speaking Muslims. This review presents a brief overview of the Arabic Tamil Tafseers written in Tamil Nadu and Sri Lanka.

In the beginning, religious scholars were insisting not to write commentaries on the Holy Quran in Tamil, so Tafseers and other Islamic texts were published in Arabic Tamil. Brief information about some of the Tafseers that have appeared are analyzed in this review.
Key Words : Tafseer, Arabic Tamil, South Indian, Sri Lankan Muslims, Badhur Rahman, Bi Tarjumati Tafseeril Qur'an, Buduhahadur Rahmaniyya Bi Tafseeri Kalamir Rabbaniyya, Tafseer Badhul Karim, Tafseer Arvi ; Jusvu Ammayat, Culture Culture Life, Study, Antiquity.

முன்னுரை

அரபுத் தமிழில் பல நூறு இஸ்லாமிய மார்க்க நூல்களும் பொதுவான நூல்களும் வெளிவந்துள்ளன என்பது அனைவரும் அறிந்த உண்மை. தமிழில் அச்சுக் கூடங்கள் அறிமுகமாகிய காலத்தில், மிகச் சில அரபுத் தமிழ் கல்லச்சு சாதனங்களே அறிமுகமாகி இருந்தன. அவற்றைக் கொண்டு அரபுத் தமிழில் தப்ஸீர் முதலிய நூல்களும் மாத இதழ்களும் வெளியிடப்பட்டன.

"அரபுத் தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்" என்ற நூலின் ஆசிரியர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"மொழி பெயர்ப்புகள் மட்டுமன்றி, தமிழகத்தில் குறிப்பாக காயல்பட்டணம், கீழக்கரை போன்ற இடங்களிலும் இலங்கையிலும் வாழ்ந்த அறிஞர்கள் பல்வேறு இஸ்லாமியக் கலைகள் சார்ந்த நூல்களை அரபுத் தமிழில் இயற்றினர். இலக்கணம், இலக்கியம், தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், அகாயித், தஸவ்வுப் போன்ற கலைகளைப் பற்றிய நூல்களைக் கூட செய்யுள் நடையில் எழுதுவது அக்கால மரபாக இருந்தது. அறிவு வளர்ச்சி குன்றிய பாமர மக்களைப் பொறுத்தளவில் அவர்களது உள்ளத்தில் கருத்துக்களைப் பதிய வைப்பதற்கு இலகுவான ஒரு முறையாக இது விளங்கியதே இதற்கு அடிப்படைக் காரணமாகும்."[1]

ஆய்வு நோக்கம்

தென்னிந்திய, இலங்கை முஸ்லிம்களால் தனித்துவமாக உருவாக்கப்பட்டு, பல நூற்றாண்டுகள் வளர்க்கப்பட்ட இம்மொழிக்கும் அதில் வெளியான நூல்களுக்கும், அதன் பல்வேறு ஆக்கங்களுக்கும் எந்த விதமான சிறப்பும், மதிப்பும் இல்லாமல் போய் விடக்கூடாது அல்லவா? எனவே, அம்மொழியில் தொகுக்கப்பட்டப் பல்வேறு ஆக்கங்களில் முதன்மையான ஆக்கமாக விளங்கும் தப்ஸீரைப் பற்றிய ஒரு சிறு குறிப்பு வரையப் பட வேண்டும் என்ற பேரவாவே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். ஏனென்றால், அதற்குப் பங்களிப்புச் செய்தவர்கள் பற்றிய வரலாறுகள் எதுவும் ஆவணப் படுத்தப் படாவிட்டால் முஸ்லீம் சமூகத்தின் வரலாறு தவறாக அமைந்து விடக்கூடும்.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வில் பகுப்பாய்வு அணுகுமுறையும், விளக்க முறை அணுகுமுறையும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேற்குறிப்பிட்டபடி, அரபுத் தமிழில் வெளிவந்த ஒரு சில தப்ஸீர் ஆக்கங்களைக் கீழே காண்போம்.

தப்ஸீர்த்துறை ஆக்கங்கள்

ஆரம்பத்தில் திருக்குர்ஆனுக்கு தமிழில் விளக்கவுரை எழுதக் கூடாது என மார்க்க அறிஞர்கள் அதிகம் வலியுறுத்தி வந்ததன் காரணமாக அரபுத் தமிழில் தப்ஸீர்களும் ஏனைய இஸ்லாமிய நூல்களும் வெளிவரலாயின. அவ்வாறு வெளிவந்த தப்ஸீர்களுல் கீழ்க்காணும் தப்ஸீர்கள் பற்றிய தகவல்களைச் சுருக்கமாக ஆய்வு செய்வோம்.

1. பத்ஹுர் ரஹ்மான் பீ தர்ஜமத்தி தப்ஸீரில் குர்ஆன் (فتح الرحمن في ترجمة تفسير القرآن)

ஹிஜ்ரி 1291இல் முதன் முதலாக திருக் குர்ஆன் தப்ஸீர், பம்பாயில் உள்ள மத்பஉல் ஹசனி அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்டது. இதனை அரபுத் தமிழிலே செய்தவர் ஷெய்கு முஸ்தபா ஆவார்.[2] ஹிஜ்ரி. 1252-1305/ கி.பி. 1836- 1887 வரை வாழ்ந்த இவரின் தந்தையின் பெயர் ஆதம் பாவா என்பதாகும். இவர் இலங்கையில் பேருவளையைச் சேர்ந்தவர்.[3] இலங்கையில் முதன் முதலாக அரபிகள் குடியேறிய இடமாகக் கருதப்படுகின்ற பேருவளையில் இருந்து முதல் அரபுத் தமிழ் தப்ஸீர் வெளியாகி இருப்பதென்பது மிகவும் பாராட்டுக்குரிய விஷயமாகும். ஷெய்கு முஸ்தபா அவரகளின் தப்ஸீரில் முதல் ஐந்து ஜுஸ்வுகள் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளன.

2. புதூஹாதுர் ரஹ்மானிய்யா பீ தப்ஸீரி கலாமிர் ரப்பானிய்யா

(فتوحات الرحمانية في تفسير كلام الربانية)

முதல் தப்ஸீர் வெளிவந்து ஐந்து ஆண்டுகளிலேயே, அதாவது ஹிஜ்ரி 1296 ஆம் ஆண்டில் காயல்பட்டணத்திலிருந்து ஒரு தப்ஸீர் வெளிவந்தது.[4] இதனை மாதிஹுர் ரஸூலின் பேரனின் மகனான பாளையம் ஹபீப் முஹம்மத் ஆலிம் அவர்கள் எழுதினார்கள். இது பம்பாய் ஹுசைனி அச்சகத்தில் ஹிஜ்ரி 1296/ கி.பி. 1878இல் அச்சிடப் பட்டது.[5]

இந்தத் தப்ஸீரை ஏ .எம்.ஏ . அஸீஸ் அவர்களின் பாட்டனார் வைத்திருந்தாதகவும் இதன் பிறிதொரு பிரதி கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில்

இருப்பதாகவும் அஸீஸ் அவர்களே குறிப்பிட்டுள்ளாரகள்.[6] இலங்கை, ஒலுவிலில் அமைந்துள்ள தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் அஷ்ரப் ஞாபகார்த்த தகவல் மையத்தில் (மத்திய நூல் நிலையம்) இதன் ஒரு பிரதி காணப்படுகிறது.[7]

3. தப்ஸீர் பத்ஹுல் கரீம் (تفسير فتح الكريم)

நூஹ் லெப்பை ஆலிம் இப்னு அப்துல் காதிர் (ஹி.1246-1323/ கி.பி.1830-1905) என்பவர் இந்தத் தப்ஸீரைக் கோர்வை செய்தார். இவர் இளைய நூஹ் (Nuh the Junior) என அழைக்கப் படுகின்றார். இது ஹி. 1299/ கி.பி.1881 இல் பம்பாயில் இரண்டு வால்யூம்களாக அச்சிடப்பட்டது. இந்தத் தப்ஸீர் பல இடங்களிலும் குறிப்பாக, இலங்கையில் பரவலாக காணக்கூடியதாக உள்ளது. ஜாமிஆ நளீமிய்யா இஸ்லாமியா நூல் நிலையத்தில் இதன் இரு வால்யூம்கள் காணப்படுகின்றன.[8]

4. பத்ஹுர் ரஹீம் பீ தப்ஸீரில் குர்ஆனில் கரீம் (فتح الرحيم في تفسير القرآن الكريم)

நூஹ் லெப்பை ஆலிம் இப்னு அப்துல் காதிர் என்ற மேற்குறிப்பிட்ட தப்ஸீர் ஆசிரியரே தனது தப்ஸீரைச் சிறிது சுருக்கியமைத்து பத்ஹுர் ரஹீம் என்ற பெயரில் வெளியீடு செய்தார். 1304 இல் பம்பாயில் பதிக்கப்பட்ட 288 பக்கங்கள் கொண்ட (ஆறு ஜுஸ்வுகள்) ஒரு பகுதியே தற்போது காணப்படுகின்றது.[9]

5. ரஹ்மத்துல் மன்னான் அலல் முதஅல்லிமீன மினல் வில்தான் (رحمة المنان على المتعلمين من الولدان)

இலங்கையைச் சேர்ந்த சுலைமான் இப்னு முகம்மத் என்பவர் மேலுள்ள தப்ஸீரை வெளியிட்டார். ஹிஜ்ரி.1315/ கி.பி.1897 அளவில் இது கொழும்பில் அச்சிடப்பட்டது.[10]

கலாநிதி எஸ்,எம்,எம், மஸாஹிர் இந்தத் தப்ஸீரைப் பற்றி தனது நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

“இந்நூல் கம்பலையைச் சேர்ந்த அஷ்ஷெய்க் ஏ.எஸ். நஜீப் மூலமாக இவ்வாய்வாளனுக்கு கிடைக்கப் பெற்றதாகும்.அதன் முன் அட்டை கிழிந்திருப்பதனால் வெளியிடப்பட்ட ஆண்டையும் இடத்தையும் அறிய முடியவில்லை. இதில் முழு "அம்ம" ஜுஸ்வுக்கான விளக்கமும் "சூரத்துல் பாத்திஹாவுக்கான விளக்கமும் தரப்பட்டுள்ளது.”[11]

6. அல் மனாபிஉத் தாம்மா பீ தப்ஸீரி அம்ம (المنافع التامة في تفسير عم)

"அம்ம" ஜுஸ்வுக்கான இந்தத் தப்ஸீரை எழுதியவரின் பெயர் இந்நூலில் எங்குமே குறிப்பிடப்படவில்லை. ஆனால் இதனைப் பதிப்பித்தவர்கள் ஹாஜி எம்.ஏ.ஷாஹுல் ஹமீது அண்ட் சன்ஸ் எனவும் சென்னை, திருவல்லிக்கேணி, ஷாஹுல் ஹமீதிய்யா அச்சகத்தில் அச்சிடப்பட்டதாகவும் இத் தப்ஸீரில் குறிப்புகள் உள்ளன.[12]

7. அல் ஜவாஹிருஸ் ஸலீமா (الجواهر السليمة)

நூஹ் இப்னு அப்துல் காதிர் (Nuh the Junior) அவர்கள் பத்ஹுல் மஜீத் பீ ஹதீதின் நபிய்யில் ஹமீத் என்ற ஹதீஸ் விளக்க நூலின் ஒரு பகுதியில் அல் ஜவாஹிருஸ் ஸலீமா என்ற நாமத்தின் கீழ் சூரத்துல் பாத்திஹா, சூரத்துல் அஃலா, சூரத்துல் காஷியா, ஆகியவற்றோடு சூரத்துல் லைலிலிருந்து கடைசி அத்தியாயம் வரையுள்ள அனைத்து சூறாக்களுக்கும் தனியான விளக்கம் ஒன்றை எழுதியுள்ளாரகள். இந்நூல் காலி, சோலையைச் சேர்ந்த அல்மத்ரசத்துல் ஸாவிய்யத்துல் மக்கிய்யா அரபுக் கலாசாலையில் காணப்படுகிறது. இது ஹிஜ்ரி 1295 இல் ஹஸனி அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது.[13]

8. தப்ஸீர் சூரத்துல் அஸ்ர் (تفسير سورة العصر)

இலங்கை கிழக்கு மாகாணம், சம்மாந்துறையைச் சேர்ந்த முஹம்மது அபூபக்கர் பின் முஹம்மது இப்ராஹிம் ஆலிம் அவரகளின் சூரத்துல் அஸ்ர் என்ற தனி அத்தியாய விளக்கமே இதுவாகும்.

இந்நூல் பற்றிய விளக்கமொன்றினை பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் முதுநிலை விரிவுரையாளர் எம்.ஐ. எம். அமீன் அவர்கள், பேருவளை நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகத்தின் முத்திங்கள் வெளியீடான "இஸ்லாமிய சிந்தனை" ஜூலை-செப்டம்பர், 2000 ஆம் இதழில் எழுதியுள்ளார்.[14]

9. தப்ஸீரே அர்வி; ஜுஸ்வு அம்மயத் (تفسير أروي : جزء عم يتساءلون)

இப்பெயர் கொண்ட அல்குர்ஆன் விளக்கத்தை இராமநாதபுரம் ப.வெ. காதிர் முஹையத்தீன் ஆலிம் ஸாஹிப் வெளியிட்டார். இது ஹிஜ்ரி 1330 ஆம் ஆண்டில் வெளிவந்தது.[15]

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303   ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023

முனைவர் எஸ். அப்துஸ் ஸமது நத்வி P: 28-35

10. துரருத் தபாஸீர் (درر التفاسير)

ஸய்யித் முஹம்மத் ஆலிம் சாஹிப் என்பவர் மேற்கூறப்பட்ட தப்ஸீரை உருவாக்கினார். இது ஹிஜ்ரி 1342 ஆம் ஆண்டிலேயே பதிப்பிக்கப்பட்டது[17]

தொகுப்புரை

இவ்வாய்வுக் கட்டுரையில் விவரிக்கப்பட்ட அரபுத் தமிழ் தப்ஸீர்கள் பற்றிய விளக்கங்களை மையமாக வைத்துப் பார்க்கும் பொழுது கீழ்க்கண்ட விஷயங்களை அறிந்து கொள்ள முடிகிறது.

அரபுத் தமிழைக் கையாண்ட அர்விப் பிராந்திய அறிஞர்கள் அதனை முதன்மையாக மார்க்க சேவைக்காக பயன்படுத்தியுள்ளார்கள் என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகிறது. குறிப்பாக குர்ஆனை மொழிபெயர்த்து, அதன் விளக்கத்தைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்குவதற்காகப் பல நூல்களைப் படைத்து பெரும் சேவையாற்றியுள்ளார்கள். இது அவ்வறிஞர்களின் மார்க்கப் பற்றையும், அரபுத் தமிழ் பொது மக்களிடத்தில் வியாபித்திருந்த நிலையையும் எடுத்தியம்புகிறது.

முஸ்லிம் அறிஞர்கள் தமது ஆக்கங்களுக்குப் பெயரிடும்போது எதுகை, மோனையில் அமைந்த, ஓசை நயம் கொண்ட அழகிய பெயர்களையே தெரிவு செய்துள்ளதைக் காண முடிகிறது. உதாரணமாக, ரஹ்மத்துல் மன்னான் அலல் முதஅல்லிமீன மினல் வில்தான், பத்ஹுர் ரஹீம் பீ தப்ஸீரில் குர்ஆனில் கரீம், புதூஹாதுர் ரஹ்மானிய்யா பீ தப்ஸீரி கலாமிர் ரப்பானிய்யா, பத்ஹுர் ரஹ்மான் பீ தர்ஜுமத்தி தப்ஸீரில் குர்ஆன் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இது அரபி மொழியின் தாக்கத்தினால் ஏற்பட்ட ஒரு விளைவாகும். இதே மரபு அரபு நூலாசிரியர்களால் இன்று வரை மேற்கொள்ளப்பட்டு வருவதை நம்மால் காணமுடியும்.

முடிவுரை

ஒரு காலத்தில் முஸ்லிம்களின் கலாச்சார பண்பாட்டு வாழ்வில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியும், பெரும் பங்களிப்பையும் செய்த உன்னதமான அரபுத் தமிழ் மொழி காலவோட்டத்தில் இன்று நலிவடைந்திருந்தாலும், அல்ல, அல்ல, கிட்டத்தட்ட ஒரு மரணித்த மொழியின் நிலையில் இருந்தாலும், அதனின் தொன்மையும் சிறப்பும் குறைத்து மதிப்பிட முடியாதவை.

அரபுத் தமிழ் மொழி பற்றிய ஆய்வுகளும், அம்மொழியில் வெளிவந்த ஆக்கங்கள் தொடர்பான ஆய்வுகளும், மிக அதிகமான முனைப்புடன் முன்னெடுக்கப் படவேண்டியுள்ளன. தென்னிந்திய, இலங்கை முஸ்லிம்களால் தனித்துவமாக உருவாக்கப்பட்டு, பல நூற்றாண்டுகள் வளர்க்கப்பட்ட இம்மொழியும் அதில் வெளியான நூல்களும், மாத இதழ்களும், பத்திரிக்கைகளும் எந்த விதமான பெருமானமும் இல்லாமல் போய் விடக்கூடாது. மேலும், அதற்குப் பங்களிப்புச் செய்தவர்கள் பற்றிய வரலாறுகள் எதுவும் ஆவணப் படுத்தப் படாவிட்டால் முஸ்லீம் சமூகத்தின் வரலாறு தவறாக அமைந்து விடக்கூடும்.

இந்நோக்கங்களை நிறைவு செய்வதற்காக ஒரு கருதரங்கமல்ல, மாறாக, பல சர்வதேச கருத்தரங்கங்கள் நடைபெற வேண்டும். இதன் மூலமாக, அரபுத் தமிழ் மொழியின் தொன்மையும், சிறப்பும் தமிழ் பேசும் நல்லுலகிற்கு உரக்க எடுத்துரைக்கப் படவேண்டும்.

துணை நூற்பட்டியல்

1. கலாநிதி எஸ், எம், எம், மஸாஹிர், அரபுத் தமிழும் அரபுத் தமிழ் ஆக்கங்களும், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் – ஒலுவில், டிசம்பர் 2018.
2. சுக்ரி, எம்.ஏ.எம். “அரபுத் தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்”, கொழும்பு; அம்சம் இன்டர்நேஷனல் (1997)
3. பொன்னுத்துரை, எஸ், இஸ்லாமும் தமிழும், கொழும்பு ; அரசு பதிப்பகம் (1975)
4. ஹஸன் மௌலானா, எஸ், ஏ, எஸ், இஸ்லாமிய தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள், கொழும்பு; அரசு வெளியீடு, (1968)
5. எம்.ஐ. எம். அமீன், இஸ்லாமிய சிந்தனை "ஜுலை-செப்டம்பர், 2000, தப்ஸீர் சூரத்துல் அஸ்ர்.

Reference :

1. Kalanithi S.M.M. Masagir, Arabu Tamilum Arabu tamil aakkangalum, Srilankan Southeast University, Oluvil. December 2018.
2. Sukri M.A.M, Traditional Culture in Arab Literature, Colombo, Amsam International, 1997.
3. Ponnuthurai.S, Islam and Tamil, Colombo, Govt. Publications. Edition 1975

4. Shu'ayb 'Alim. Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu, Madras: Imamul Arus Trust (1993)
5. Hasan Movlana S.A.S, Islamiya tamil ilakkiya Sorpolivugal, Govt. Publications. Edition 1968.
6. M.I.M. A,meen, Islamiya Sinthanai, , July-September 2000. Tafsir-Surath-ul-Asr.

அடிக்குறிப்புகள்

1. சுக்ரி, எம்.ஏ.எம்., அரபுத் தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம், ப. 26, 27 & 28

2. பொன்னுத்துரை, எஸ், இஸ்லாமும் தமிழும், ப.22

3. Tayka Shu'ayb, Arabic, Arwi, and Persion in Sarandib and Tamil Nadu, PP.277

4. பொன்னுத்துரை, எஸ், இஸ்லாமும் தமிழும், ப.22

5. Tayka Shu'ayb, Arabic, Arwi, and Persion in Sarandib and Tamil Nadu, PP.277

6. ஹஸன், செய்யிது, எஸ்,ஏ, இஸ்லாமிய தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள், ப. 33,34

7. கலாநிதி எஸ்,எம்,எம், மஸாஹிர், அரபுத் தமிழும் அரபுத் தமிழ் ஆக்கங்களும், ப.118.

9. கலாநிதி எஸ்,எம்,எம், மஸாஹிர், அரபுத் தமிழும் அரபுத் தமிழ் ஆக்கங்களும், ப.120.

10. Tayka Shu'ayb, Arabic, Arwi, and Persion in Sarandib and Tamil Nadu, PP.278.

11. Tayka Shu'ayb, Arabic, Arwi, and Persion in Sarandib and Tamil Nadu, PP.278.

11. கலாநிதி எஸ்,எம்,எம், மஸாஹிர், அரபுத் தமிழும் அரபுத் தமிழ் ஆக்கங்களும், ப.122.

13. கலாநிதி எஸ்,எம்,எம், மஸாஹிர், அரபுத் தமிழும் அரபுத் தமிழ் ஆக்கங்களும், ப.123.

14. கலாநிதி எஸ்,எம்,எம், மஸாஹிர், அரபுத் தமிழும் அரபுத் தமிழ் ஆக்கங்களும், ப.123.

15. எம்.ஐ. எம். அமீன், இஸ்லாமிய சிந்தனை"ஜூலை-செப்டம்பர், 2000, தப்ஸீர் சூரத்துல் அஸ்ர், ப.29-37.

16. பொன்னுத்துரை, எஸ், இஸ்லாமும் தமிழும், ப.23

17. பொன்னுத்துரை, எஸ், இஸ்லாமும் தமிழும், ப.23

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
முனைவர் A.M. அலி இப்ராஹீம் ஜமாலி P: 36-43

அடிப்படைச் சட்டங்களை எளிமைப் படுத்திய அஹ்காமுல் முஸ்லிமீன்

'Ahkaamul Muslimeen' which simplified the Basic Shariah Laws

மௌலவி அல் ஹாஃபிழ் முனைவர்

A.M. அலி இப்ராஹீம் ஜமாலி M.A., M.B.A., M.Phil., Ph.D.

உதவிப் பேராசிரியர், அரபி முதுகலை மற்றும் ஆய்வுத் துறை,

ஜமால் முஹம்மது கல்லூரி, திருச்சிராப்பள்ளி .

Abstract:

Arabut Tamizh is regarded as a great tool that carried the basic Islamic message to the Tamil speaking people across the globe. Thousands of books on Islamic sciences including Quranic exegesis, Prophetic traditions, Islamic Jurisprudence, Islamic doctrines were written in Arabic Tamilh. It is noteworthy that more than one hundred and fifty religious books have been published in Arabut Tamil. Especially, books like Faraidh Al Mumineen. Ahkamul Muslimeen, Maghaani, Simthus Sibyan were compiled in Arabic Tamil in order to explain the basic Islamic rules and regulations.

This brief article intends to explain about the one important book i.e. Ahkaamul Muslimeen that taught the basic Islamic principles, rules and regulations related to the young minds in the last century. It also explains the concepts, contents and the methodology of the book.

Keywords: Islamic fundamental laws – Arabut Tamizh Structure – Ahkaamul Muslimeen.

ஆய்வுச் சுருக்கம் :

உலகின் மூத்த மொழிகளில் ஒன்றான தமிழ் மொழிக்கும், இலக்கிய வளம் மிக்க அரபு மொழிக்கும் இடையே நிகழ்ந்த வணிக மற்றும் கலாச்சாரப் பிணைப்பின் மூலம்; தோன்றிய அருமையானதொரு மொழி வடிவம்தான் 'அரபுத் தமிழ்'. இது அறவி, சோனகத்தமிழ், முஸ்லிம் தமிழ் என்றும் அழைக்கப்படும்.

தமிழ் நாட்டில் இஸ்லாம் பரவிய போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட தமிழர்கள் தங்களின் தாய் மொழியான தமிழில் அளவளாவினர். அதே நேரத்தில் இஸ்லாமிய மார்க்கக்கடமைகளை நிறைவேற்றுவதற்கு அரபு மொழியைக் கற்றனர். பின்னர், தங்களது வணிகம் மற்றும் மார்க்கம் சார்ந்த பயன்பாட்டுக்காக இரண்டையும் இணைத்து ஒரு புதிய வடிவத்தை 'அரபுத்தமிழ்' எனும் பெயரில் உருவாக்கி பயன்படுத்தத் தொடங்கினர்.

இஸ்லாமிய சமயநெறி நூல்கள், சட்ட விளக்க நூல்கள், திருக்குர்ஆன் விரிவுரைகள் நபிமொழி விளக்கங்கள், இஸ்லாமியச் சிற்றிலக்கியங்கள், காப்பியங்கள் கடிதங்கள் என பல வடிவங்களில் அரபுத்தமிழ் வளர்க்கப்பட்டது. அரபுத் தமிழில் தப்ஸீர் (திருக்குர்ஆன் விரிவுரை), ஹதீஸ் (நபிமொழி), ஃபிக்ஹ் (இஸ்லாமிய சட்டவியல்), அகாயித் (கொள்கைகள்), தஸவ்வுப் (சூஃபித்துவம்) உள்ளிட்ட இஸ்லாமியக்கலைகள் சார்ந்த ஆயிரக்கணக்கான நூல்களும் வானவியல், தத்துவம், வரலாறு, மருத்துவம் போன்ற கலைகளுடன் தொடர்புடைய எண்ணற்ற நூல்களும் எழுதப்பட்டன. மார்க்க நூல்கள் மாத்திரமே ஏறத்தாழ நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்டவை அரபுத்தமிழில் வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஃபராயிளுல் முஃமினீன், அஹ்காமுல் முஸ்லிமீன், மஙானி, ஸிம்துஸ் ஸிப்யான் என பல்வேறு நூல்கள் மார்க்கச் சட்டங்களை விளக்குவதற்காகவே அரபுத்தமிழில் இயற்றப்பட்டன. இந்நூல்களை அதிகமான அளவில் பெண்கள் படித்து அதன்படி தம் வாழ்வில் ஒழுகி வந்தனர் என்பது முக்கியமாக நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம்.

காலப்போக்கில், இவற்றுள் பல நூல்கள் இன்றைய இன்டர்நெட் தலைமுறையினருக்கு கையில் கிட்டாமல் போய்விட்டன. எனினும், அந்நூல்களின் மகத்துவத்தையும், மாண்பையும் தற்போதைய இளைய சமுதாயம் மட்டுமல்லாது அனைவரும் அறிய வேண்டும் என்ற உயர்நோக்கில் மார்க்கச் சட்டங்களை எளிமையான முறையில் கற்றுக் கொடுத்த முக்கிய நூலான ‘அஹ்காமுல் முஸ்லிமீன்’ எனும் கிரந்தத்தின் வடிவமைப்பையும், மொழிநடையையும், அதன் பல்வேறு உள்ளடக்கங்களையும் சுருக்கமான முறையில் வழங்குவதே இவ்வாக்கத்தின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்: மார்க்கச்சட்டங்கள் - அரபுத்தமிழ் வடிவம்- அஹ்காமுல் முஸ்லிமீன்

நூல் அறிமுகம் / முன்னுரை :

அஹ்காமுல் முஸ்லிமீன் என்ற வார்த்தைக்கு ‘இஸ்லாமியர்களின் சட்டங்கள்’ என்று பொருள். பெயருக்கேற்ப இஸ்லாமிய மார்க்கச் சட்டங்களை அனைவரும் புரியும் வண்ணம் இயல்பான நடையில் இந்நூல் விளக்குகின்றது. இஸ்லாமிய மார்க்கத்தில் நான்கு வகையான மத்ஹபுகள் இருந்தபோதிலும், நமது தாய்த்திருநாட்டில் பெரும்பாலானோர் பின்பற்றக்கூடிய மத்ஹபுகள் ஹனஃபீ, ஷாஃபிஇ என இரண்டு மட்டுமே. ஆகவே, இரண்டு மத்ஹபுகளுக்கும் தனித்தனியாக ‘அஹ்காமுல் முஸ்லிமீன் - ஹனஃபீ’ மற்றும் ‘அஹ்காமுல் முஸ்லிமீன் - ஷாஃபிஇ’ என இரண்டு நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

மதுரை, திருச்சி, இராமநாதபுரம் உள்ளிட்ட ஊர்களில் வாழும் மக்கள் ஹனஃபி மத்ஹபைப் பின்பற்றக்கூடியவர்கள். கீழக்கரை, காயல்பட்டிணம், அதிராமபட்டிணம்

முதலான கடற்கரை ஓரம் அமைந்துள்ள ஊர்களில் வாழும் மக்கள் ஷாஃபிஇ மத்ஹபைப் பின்பற்றக் கூடியவர்கள். இது மட்டுமல்லாது, இலங்கையில் வாழும் பெரும்பாலான தமிழ் முஸ்லிம்களும் ஷாஃபிஇ மத்ஹபையே பின்பற்றுகின்றனர். எனினும், ஹனஃபி மத்ஹபைச் சார்ந்தவன் என்ற அடிப்படையில் நான் கற்ற 'அஹ்காமுல் முஸ்லிமீன் - ஹனஃபீ' எனும் நூலே இக்கட்டுரையின் கருப்பொருளாகும்.

இந்நூலின் ஆசிரியர் என்று ஒரு குறிப்பிட்டு யாரையும் சொல்ல இயலாது. அன்றைய காலத்தில் வாழ்ந்த இஸ்லாமிய அறிஞர்கள் இதைத் தொகுத்திருப்பர் என்று சொல்லப்படுகிறது. இந்நூலை சென்னையில் உள்ள ஷாஹுல் ஹமீது பதிப்பகம், மாஹீன் பதிப்பகம் முதலியவை வெளியிட்டுள்ளன. இன்று அதன் பிரதிகள் அச்சிடப்படுவதில்லை என்பது வருத்தத்திற்குரிய செய்தி. அறபுத்தமிழில் எழுதப்பட்டுள்ள இந்நூலை சென்னை திருவல்லிக்கேணி மொ.அ. ஷாஹுல் ஹமீது லெப்பை அவர்கள் சுருக்கமான வகையில் ஹனஃபீ மத்ஹபுக்கு அவசியமான சட்டங்களைச் சேர்த்து தமிழிலும் தமது ஷாஹுல் ஹமீது பதிப்பகத்தின் சார்பாக வெளியிட்டுள்ளார்.

இந்நூலின் உள்ளடக்கத்தையும், இஸ்லாமியச் சட்டங்களையும் ஒன்றன் பின் ஒன்றாகக் காணலாம்.

இறை நம்பிக்கை:

இந்நூலின் ஆரம்பமாக இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படைத் தத்துவமான ஏகத்துவத்தை விளக்கும் விதமாக ஐந்து கலிமாக்கள் பொருளுடன் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கடுத்து, கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பரம்பரை மற்றும் அவர்களது சிறப்புகள் குறித்தும் இரத்தினச் சுருக்கமாக கூறப்பட்டுள்ளது.

தொடர்ந்து, பிள்ளைகளுக்கு பெற்றோர் செய்ய வேண்டிய கடமைகள், கல்வியின் முக்கியத்துவம் எனும் தலைப்புகளில் சிறு பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில், திருமறை வசனங்கள் மற்றும் நபிமொழிகள் அரபியிலும் கூறப்பட்டு, அவற்றிற்கு பொருளும் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதைத் தொடர்ந்து, தீனுடைய மூன்று வகை கல்வி ஞானங்கள், ஷரீஅத்துடைய ஆகுமான காரியங்கள் ஐந்து, ஆகாத காரியங்கள் மூன்று, ஃபர்ளுடைய வகைகள் இரண்டு, இறை நம்பிக்கை எனும் ஈமானுடைய வகைகள், அதனுடைய நிபந்தனைகள், அல்லாஹ் உடைய ஆகுமான தன்மைகள், அவனுக்குக் கூடாத தன்மைகள், ஜாயிஸ் ஆன தன்மைகள், அவற்றின் கூறுகளில் ஹனஃபி மத்ஹபிற்கும் ஷாஃபிஇ மத்ஹபிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள், நபி என்ற

பதத்தின் விளக்கம், நபி உடைய தன்மைகள், மலக்குமார்களின் விளக்கம், வேதங்கள் குறித்த தெளிவு, மறுமை நாள் தொடர்பான தகவல்கள், இஸ்லாம் என்பதின் விளக்கம், அதனுடைய கடமைகள் என இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படையான செய்திகள் அனைத்தும் அழகிய முறையில் எளிய வகையில் வழங்கப்பட்டுள்ளது. கற்கக்கூடிய இளஞ்சிறார்கள் மனங்களில் பசுமரத்தாணியில் பதிந்தது போல இந்த விடயங்கள் பதியும் என்பதில் இருவேறு கருத்திற்கு இடமில்லை.

அங்கசுத்தி:

அடுத்ததாக, இஸ்லாமிய மார்க்கத்தின் இரண்டாவது கடமையான தொழுகையின் திறவுகோளான 'உளு' எனப்படும் அங்கசுத்தியை எவ்வாறு செய்வது என்பது தெளிவான வகையில் விளக்கப்பட்டுள்ளது. உளு உடைய வகைகள், அதனுடைய நிபந்தனைகள், கடமைகள், சுன்னத்துகள், தெளிவான வழிமுறை, செய்ய வேண்டிய காரியங்கள், செய்யக்கூடாதவைகள், உளுவை முறிக்கக் கூடிய செயல்கள், உளு இல்லாதவர்கள் செய்யக் கூடாத செயல்கள் என அனைத்து செய்திகளும் அடுக்கடுக்காக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, பெருந்துடக்கை நீக்கக்கூடிய குளித்தல் அல்லது குளிப்பு குறித்து விரிவான முறையில் இந்நூல் விளக்குகிறது. குளித்தல் என்பதற்கு 'முலுக்' எனும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. முலுக்கின் ஃபர்ளுகள், சுன்னத்துகள், அதனுடைய வழிமுறை, வகைகள் என ஒவ்வொன்றும் பாமரர்க்கும் புரியும் வண்ணம் எளிய நடையில் விளக்கப்பட்டுள்ளது.

மேலும், பெண்களுக்கு ஏற்படும் ஹைளு எனப்படும் மாதவிடாய், நிஃபாஸ் எனப்படும் பிரசவ விடாய் சம்பந்தமான சட்டங்கள் மிக விரிவான வகையில் விளக்கப்பட்டுள்ளது உண்மையில் நம்மை ஆச்சரியப்படுத்துகிறது. மருத்துவமும், தொழில் நுட்பமும் போட்டிப் போட்டுக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் கூட நம் இஸ்லாமியச் சகோதரிகள் இச்சட்டங்களைத் தெளிவான முறையில் அறிந்திருப்பது அரிது எனும் சூழ்நிலையில், சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த நம் முன்னோர்கள் இத்தனைத் தெளிவாக அரபுத்தமிழில் அத்தனைச் சட்டங்களையும் எழுதி வைத்துள்ளார்கள் என்பதைப் பார்க்கும் பொழுதுதான் 'புதுமை' எனும் பெயரில் நாம் தொலைத்த பல 'பழமை'களின் மகத்துவத்தையும், முக்கியத்துவத்தையும் உணர முடிகிறது.

அதனைத் தொடர்ந்து, சுத்தம் செய்வதற்குக் காரணியான தண்ணீர் மற்றும் அதன் வகைகள், அது தொடர்பான சட்டங்கள் குறித்தும், தண்ணீர் கிடைக்காத சூழ்நிலையில் செய்யவேண்டிய தயம்மும் குறித்தும், விரிவான முறையில்

விளக்கப்பட்டுள்ளது. அரபிக் கல்லூரிகளில் ஆலிம் பட்ட வகுப்பு மாணவர்களுக்குப் போதிக்கப்படும் இச்சட்டங்களை அக்காலத்தில் சாதாரண மக்தப் மத்ரஸாக்களில் பயிலும் மாணவ, மாணவிகளும் அறிந்;திருந்தார்கள் என்பதைக் காணும்போது ஆச்சரியம் ஏற்படுகிறது.

வணக்க வழிபாடு:

அடுத்ததாக, அன்றாட ஐந்து வேளைத் தொழுகையை நிறைவேற்ற வேண்டிய நேரங்கள், தொழக்கூடாத நேரங்களில் ஆரம்பித்து, தொழுகை உடைய சிறப்புகள், அதை விடுவதின் தண்டனைகள் என சிறிய பத்திகளில் விளக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து, தொழுகையின் ஃபர்ளுகள், வாஜிபுகள், சுன்னத்துகள், விரும்பத்தக்க செயல்கள், விரும்பத்தகாதவை, தொழுகையை முறிக்கும் காரணிகள் என தொழுகை தொடர்பான அனைத்து விடயங்களும் உள்ளங்கை நெல்லிக்கனி போல விளக்கப்படுகிறது. முக்கியமாக, தொழுகையின் ஒழுங்குமுறையும், வழிமுறையும் சரியான வகையில் சொல்லப்பட்டுள்ளது. இவற்றைக் கற்போர் தொழுகையில் தவறு செய்யவும் மாட்டர், வழி தவறியும் போக மாட்டர் என்பது திண்ணம்.

அதனைத் தொடர்ந்து, கூட்டுத் தொழுகையின் சிறப்புகள், தொழுகையை முன் நின்று நடத்தக் கூடிய இமாம் உடைய நிபந்தனைகள், தொழுக வைக்கத் தகுதியில்லாதவர்கள், ஸஃப் எனும் வரிசையின் ஒழுங்குகள், நஃபில் எனும் அதிகப்படியான தொழுகைகளின் சிறப்புகள், வித்ரு வாஜிப் எனும் இரவுத் தொழுகை, ரமளான் மாதம் செய்யக்கூடிய சிறப்பு மிக்க தராவீஹ் தொழுகையின் ஒழுங்குமுறை, தஹஜ்ஜுத் எனும் அதிகாலைத் தொழுகை, பிரயாணத் தொழுகை என பல்வேறு தொழுகைகளின் நேரம், ஒழுங்குகள், முறை என அனைத்து விடயங்களும் தெளிவான முறையில் விளக்கப்பட்டுள்ளன. வெள்ளிக்கிழமை அன்று தொழப்படும் ஜுமுஆ தொழுகைக்காக மட்டும் அதிக அளவில் விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. அது போலவே, இரண்டு பெருநாள் தொழுகையின் விபரங்களும் தரப்பட்டுள்ளன.

குறிப்பாக, ஒரு மனிதன் இறந்து விட்டால் அவனுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்வதற்காக நடத்தப்படும் ஜனாஸாத் தொழுகை, அத்தொழுகையின் ஒழுங்குமுறை, நிபந்தனைகள் அனைத்தும் எளிய நடையில், சிரமமல்லாத வகையில் வழங்கப்பட்டுள்ளது.

ஏழைவரி:

தொழுகையைத் தொடர்ந்து இஸ்லாமிய மார்க்கத்தின் முக்கியக் கடமையான ஜகாத் எனப்படும் ஏழைவரி குறித்த பாடம் எழுதப்பட்டுள்ளது. அதில் ஆரம்பமாக,

ஜகாத்துடைய முக்கியத்துவத்தை திருமறை, நபிமொழி வாயிலாக விளக்கிய பின்னர், ஜகாத் கடமையாகுவதற்குரிய நிபந்தனைகள், அதனுடைய அளவுகோல், ஜகாத் பெறவதற்கு தகுதியானவர்கள் என அனைத்து தகவல்களும் சுருக்கமான முறையில் அதே நேரத்தில் விளக்கமான வகையில் வழங்கப்பட்டுள்ளது.

நோன்பு:

ஒவ்வொரு முஸ்லிமும் ஆண்டில் ஒரு மாதம் நோன்பிருப்பது இஸ்லாமியக் கடமைகளில் ஒன்றாகும். அந்த ரமளான் மாத நோன்பு குறித்தும், அதனுடைய சிறப்புகள், சட்டங்கள், நோன்பின் வகைகள், நோன்பை முறிக்கும் காரியங்கள், முறிக்காத விடயங்கள், நோன்பை வேண்டுமென்றே முறித்தால் வழங்க வேண்டிய கஃப்பாரா எனும் தண்டப் பரிகாரம், அது தொடர்பான சட்டங்கள் என நோன்பு தொடர்பான அனைத்து செய்திகளும் அடுத்தத் தலைப்பின் கீழ் தெளிவான முறையில் தொகுக்கப்பட்டுள்ளன.

புனிதப்பயணம்:

நோன்பைத் தொடர்ந்து, இஸ்லாமியர்கள் உயர்வாக கருதக்கூடிய ஹஜ் எனும் புனிதப்பயணம் குறித்து எழுதப்பட்டுள்ளது. ஆரம்பமாக, ஹஜ் உடைய சிறப்புகள் குர்ஆன், ஹதீஸ் ஒளியில் விளக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, ஹஜ் ஒருவருக்கு கடமையாகுவதற்குரிய நிபந்தனைகள், ஹஜ் தொடர்பான சட்டங்கள், அதனின் ஒழுங்குகள், வாஜிபுகள், சுன்னத்துகள் என மிகத் தெளிவான முறையில் தொகுக்கப்பட்டுள்ளது. மேலும், உம்ரா உடைய சட்டங்களும், ஈதுல் அள்ஹா எனும் ஹஜ்ஜுப் பெருநாள் அன்று நிஸாப் எனும் அளவை தாண்டிய செல்வத்தை உடமையாக்கிய முஸ்லிம்கள் வழங்க வேண்டிய குர்பானி என்று சொல்லப்படும் உள்ஹிய்யாவின் சட்டங்கள் விளக்கப்பட்டுள்ளது.

இறுதியாக, கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஜியாரத் செய்வதின் சிறப்புகள் நபிமொழிகளின் வாயிலாக தெளிவாக்கபட்டுள்ளதுடன், ஈமான் ஸலாமத்திற்காக ஓத வேண்டிய துஆ ஒன்றுடன் இந்நூல் முடிவடைகின்றது.

இந்நூலின் இணைப்பாக, தக்மிலா அஹ்காமுல் முஸ்லிமீன் ஹனஃபீ என்ற பெயரில் ஐந்து கலிமாக்களில் ஆரம்பித்து, முக்கியமான துஆக்கள், நிய்யத்துகள் என அனைத்து முக்கியமான விடயங்களும் அரபியில் சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தலைப்பும் அரபுத்தமிழிலேயே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மொழிநடை:

அக்காலத்தில் புழக்கத்தில் இருந்த மொழி நடையே இந்நூலில் மிகுதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, 'பாத்திரமானவன்', 'பிசகற அறிந்து', 'வலுப்பமாகிய' 'வஸ்துக்களடங்கலின்', 'கருமங்கள்', 'ஆண் பெண் அடங்கல்', 'அடைய வளைதல்', 'ஒடுக்கத்து நாள்', 'துப்புறவு', 'அபம்', 'சரீரம்', 'பலவந்தம்', 'தலம்', 'வருசை', 'ரூபம்', 'அப்பேர்க்கொத்த', 'திரேகம்', 'திருவுளம்' , முதலான வார்த்தைப் பிரயோகங்களைச் சொல்லலாம். மேலும், வாக்கியம் முடிவடையும்போது 'திருத்தூதராயிருக்கும்', 'அவனுக்குடையதாயிருக்கும்', 'ஸப்பாயிருக்கும்' என அநேக இடங்களில் 'இருக்கும்' என்ற பிரயோகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அது போலவே, தம்யீஸ், தக்வீன், ஷரத்து, கிப்லா, பாலிக், வதீ, ஹைளு, நிஃபாஸ், ஜனாபத்து, நஜீஸ், ஹுக்மு, ருக்ன், ஹகீகி, ஃபஸாது, நிஸாபு முதலான அரபி வார்த்தைகள் அதிகமான இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அவ்வார்த்தையை சொல்லிப் பின் அதை விளக்கும் வண்ணமாக 'அதாவது' எனப் பொருள்படும் 'யஃனீ' என்ற அரபிப்பதமே வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நிறைவுரை:

அரபுத் தமிழும், அதில் இயற்றப்பட்ட நூல்களும் தமிழ் பேசும் முஸ்லிம்களின் மிகப்பெறுமதி வாய்ந்த ஒரு பண்பாட்டுப் பொக்கிஷமாகும். ஆனால், புதுமைகளைக் கைக்கொள்கிறோம் என்ற பெயரில் பழமையைத் தேவையற்றதாகக் கருதி ஒதுக்க ஆரம்பித்ததின் விளைவு, அரபுத்தமிழ் வழக்கொழிந்துவிட்டது.

அஹ்காமுல் முஸ்லிமீன் போன்ற அருமையான நூல்கள் கேட்பாராற்று, ஒதுக்கப்பட்டு கிட்டத்தட்ட பல அழிந்து விட்டன. சில அழியக்கூடிய நிலையில் உள்ளன. ஆகவே, அவற்றை ஒன்று திரட்டிப் பாதுகாக்கும் முயற்சி இன்றைய சூழ்நிலையில் அவசரமான அவசியமான ஒரு பணியாகும். அதனடிப்படியிலேயே இக்கருத்தரங்கம் நடத்தப்படுவதுடன், அதனையொட்டி அரிதான கருத்துகள் கொண்ட இம்மலரும் வெளியிடப்படுகிறது.

ஏக இறைவன் இச்சிறப்பான பணியை அங்கீகரிப்பானாக! இதில் ஈடுபடுவோரின் இம்மை, மறுமை வாழ்வில் அபிவிருத்தி செய்வானாக! ஆமீன்…

உசாத்துணை நூல்கள்:

1. அப்துர்ரஹீம் எம்.ஆர்.எம்., இசுலாமியக் கலைக்களஞ்சியம், யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், சென்னை.

2. அஸீஸ் எ எம் எ, அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ், ஜாமியா நளீமிய்யா, கொழும்பு, இலங்கை.
3. அஹ்காமுல் முஸ்லிமீன் - ஹனஃபீ, ஷாஹுல் ஹமீது பதிப்பகம், சென்னை.

Reference :

1. M.R.M.Abdul Rahim, Islamic Encyclopedia, Univelsal Publishers, Chennai.
2. A.M.A. Asees, Arabu tamil engal Anbu tamil, Jamiya Nalimiya, Colombo, Srilanka.
3. Ahkamul Muslimeen, Hanaqfi, Shahul Hameedh Publications, Chennai.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
செ.மு.அனீஸ் அஹ்மத் P: 44-52

வீழ்ச்சிக்கும் மீளெழுச்சிக்கும் மத்தியில் அர்வி / அரபுத் தமிழ்

Arwi / ArabuTamil between Extinction and Revival

செ. மு. அனீஸ் அஹ்மத் / S. M. Anees Ahmed
முதுகலை இரண்டாம் ஆண்டு, அரபுத் துறை, புதுக் கல்லூரி, சென்னை.
மின்னஞ்சல் முகவரி: aneesahmedsm@gmail.com
தொடர்பு எண்: +91 8144 533 623

Abstract

Arwi aka ArabuTamil is an Arabicized Tamil that had been widely used by Tamil Muslim community between the 8th to Mid of the 20th century AD. Literature produced in Arwi, covers a vast field of subjects like History, Creed, Medicine, Horticulture, Architecture Satire etc. Newspapers and magazines were also published in Arwi. The period between the 18th and 19th centuries was it's Golden Age. The political and social situations at the beginning of the 20th century and the difficulties faced in printing in Arwi led to its decline. Arwi's social status from its origin to its decline is studied here and the possibilities of uplifting Arwi into to the digital era are also discussed.

Keywords: Arwi, ArabuTamil, Tamil, Tamil Muslims, Arwi Muslims, Sonagar, Muslim Tamil

ஆய்வுச் சுருக்கம்

அர்வி அல்லது அரபு தமிழ் என்பது ஒரு அரபு மொழியாகும், இது கி.பி 8 முதல் 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை தமிழ் முஸ்லீம் சமூகத்தால் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. அர்வியில் தயாரிக்கப்பட்ட இலக்கியம், வரலாறு, நம்பிக்கை, மருத்துவம், தோட்டக்கலை, கட்டிடக்கலை நையாண்டி போன்ற பரந்த பாடங்களை உள்ளடக்கியது. செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகள் அர்வியில் வெளியிடப்பட்டன. 18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் அது பொற்காலம். 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசியல் மற்றும் சமூக சூழ்நிலைகள் மற்றும் அர்வியில் அச்சிடுவதில் எதிர்கொண்ட சிரமங்கள் அதன் வீழ்ச்சிக்கு வழிவகுத்தன. அர்வியின் சமூக நிலை அதன் தோற்றம் முதல் அதன் வீழ்ச்சி வரை இங்கு ஆய்வு செய்யப்படுகிறது மேலும் அர்வியை டிஜிட்டல் சகாப்தத்திற்கு உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகளும் விவாதிக்கப்படுகின்றன.

திறவுச் சொற்கள் : அர்வி, அரபுத் தமிழ், தமிழ் முஸ்லிம்கள், அர்வி முஸ்லிம்கள், சோனகர்கள், முஸ்லிம் தமிழ்,

முன்னுரை

அர்வி / அரபுத் தமிழ் என்றால் என்ன?

அர்வி அல்லது அரபுத் தமிழ் என்பது அரபு மொழியின் சொல் மற்றும் உச்சரிப்புத் தாக்கங்களையும், தமிழுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட கூடுதலான அரபு வரிவடிவ எழுத்துக்களையும் கொண்ட மொழி வழக்காகும்[1]. இதன் எழுத்து வடிவம் அரபு மொழியை ஒத்திருப்பதால் அரபிகளால் இதனை ஓரளவு வாசிக்க இயலும் ஆனால் புரிந்து கொள்ள இயலாது, தமிழர்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டால் ஓரளவு புரிந்து கொள்ள முடியும் ஆனால் வாசிக்க இயலாது[2].

அர்வி / அரபுத் தமிழின் தோற்றம்

அர்வி / அரபுத் தமிழ் உருவான காலத்தை வரையறுத்துக் கூறுவது சிரமமானது என்றாலும் அரபுத் தமிழில் இயற்றப்பட்ட பழமையான எழுத்துப் பிரதிகளைக் கொண்டு ஓரளவு யூகிக்கவியலும். கலாநிதி எ.எம்.எ அஸீஸின் கருத்தின் மூலம் அரபுத் தமிழ் கிபி 8ஆம் நூற்றாண்டு வரை பழமையானது[3] என்பதை அறிய முடிகிறது.

இஸ்லாம் தமிழுலகிற்கு அறிமுகமானபோது, அதனை ஏற்றுக் கொண்ட தமிழர்கள் இஸ்லாத்துக்கும் அரபு மொழிக்குமான நெருக்கத்தின் காரணமாக அரபு மொழியின் சில சொற்களை வழிபாட்டு காரணங்களுக்காக மனனமிட்டு மொழிய வேண்டியவர்களாகவும், குர்ஆனை ஓதுவதற்காக அரபு வாசிப்பைக் கற்க வேண்டியவர்களாகவும் ஆயினர். இருந்தபோதிலும் அவர்களின் பேச்சு மொழியாகத் தமிழே தொடர்ந்தது. இஸ்லாமிய கருத்துக்களை பொருள் சிதைவின்றி தமிழில் வெளிப்படுத்துவதில் காணப்பட்ட சிக்கலும், முஸ்லிம்களுக்கு ஓது பள்ளி / மக்தபுகளில் கிடைத்த இயல்பான அரபு வாசிப்பறிவும் அரபுத் தமிழின் தோற்றம் மற்றும் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது எனலாம்.

தமிழ்ச் சமூகத்தில் மட்டுமல்லாது இஸ்லாம் செழித்தோங்கிய உலகின் பல பகுதிகளிலும் அந்தந்த பிராந்திய மொழிகளை அரபு எழுத்துக்களில் எழுதும் வழமை காணப்படுகிறது. அரபு எழுத்துக்களை பயன்படுத்தி எழுதப்படும் மலாய் மொழி "ஜாவி" என்று அறியப்படுகிறது[4]. இந்திய மொழிகளில் உருது மட்டுமல்லாது மலையாளம், நவாயத்தி, காஷ்மீரி போன்ற மொழிகளிலும் அரபு எழுத்துக்களைக் கொண்டு எழுதும் வளமை காணப்படுகிறது.

அர்வி / அரபுத் தமிழின் அன்றைய சமூகநிலை

அரபுத் தமிழ் முஸ்லிம் சமூகத்தின் சமய விவகாரங்களுக்காக மட்டுமின்றி அச்சமூகத்தின் கல்வி மொழியாகவும், அன்றாட காரியங்களுக்கான பயன்பாட்டு மொழியாகவும் விளங்கியது. முஸ்லிம்கள் அரபுத் தமிழைப் பெரும்பான்மை கலாச்சாரத்தோடு தங்களது தனித்துவமான இஸ்லாமிய கலாச்சாரம் கலந்து விடுவதில் இருந்து பாதுகாக்கின்ற அரணாகவும், தங்களது கலாச்சாரத்தின் அடையாளச் சின்னமாகவும் கருதினர். அரபுத் தமிழில் சமய இலக்கியங்கள் மட்டுமின்றி எண்கணிதம், கட்டிடக்கலை, தோட்டக்கலை, வரலாறு, வானியல், மருத்துவம், பாலினவியல், புனைவிலக்கியம் போன்ற துறைகளில் பன்னூற்றுக்கணக்கான நூல்கள் இயற்றப்பட்டுள்ளது[5].

1870ல் சென்னை திருவல்லிக்கேணியில் இருந்து "அஜாஇபுல் அக்பார்" என்ற அரபுத் தமிழ் வார இதழ் வெளியானது. கொழும்பிலிருந்து "கஷ்புர்ரான் அன் கல்பில் ஜான்" என்ற வார இதழ் வெளியாகிக் கொண்டிருந்தது. இதைத் தொடர்ந்து தமிழகத்திலும் இலங்கையிலுமாக பல்வேறு பத்திரிகைகள் அரபுத் தமிழில் வெளிவந்தன[6].

பள்ளி தர்ஸ் (மத்றஸாக்) களிலும், ஓது பள்ளி (மக்தபு)களிலும் அரபுத் தமிழே பயிற்றுவிப்பு மொழியாகத் திகழ்ந்தது. தமிழ் எழுத்துக்களை அறிந்திடாத பலர் அரபுத் தமிழில் மாத்திரமே எழுத்தறிவு பெற்றிருந்தனர். பள்ளிக்கூட பொதுக் கல்வி பரவலாக்கப்படுவதற்கு முன்பு முஸ்லிம் சமூகத்தின் எழுத்தறிவை மேம்படுத்துவதற்கு அரபுத் தமிழ் பெரிதும் உதவியது.

அர்வி / அரபுத் தமிழ் பரவியிருந்த பிராந்தியங்கள்

அர்வி / அரபுத் தமிழ் மஅபர் (தமிழகம்) மற்றும் ஸரந்தீபில் (இலங்கை) பரவலாக வியாபித்திருந்துள்ளது[7]. தமிழகத்தின் கடற்கரையோர முஸ்லிம்களிடம் இருந்ததைப் போன்றே கடற்கரையோர நகர்கள் அல்லாத மற்ற உட்புற ஊர்களிலும் அரபுத் தமிழ் பரவலாக புழக்கத்தில் இருந்துள்ளது. ஹனபி சட்டவாக்க நூல்களும் அரபுத் தமிழில் பரவலாக காணக்கிடைப்பமை இதற்கு சான்றாக உள்ளது. பழைய வட ஆற்காடு வட்ட முஸ்லிம்கள் பரவலாக உருது மொழியை பயன்படுத்திக் கொண்டாலும் அவர்களிடையேயும் அரபுத் தமிழ் செழித்தோங்கியுள்ளது. வெள்ளாட்டி மசாலா, அர்வி முனாஜாத்து போன்ற அரபுத்தமிழ் நூல்கள் அந்தப் பகுதிகளில் இருந்து வெளியாகி உள்ளது. வாணியம்பாடி, ஆம்பூர் போன்ற ஊர்களில் அரபுத்தமிழ் அச்சுக் கூடங்களும் செயல்பட்டுள்ளது[8].

அர்வி / அரபுத் தமிழின் தற்போதைய சமூகநிலை

நூல் வெளியிடுதல், அன்றாட எழுத்துத் தேவைகள், கடிதங்கள் போன்றவற்றில் அரபுத் தமிழின் பயன்பாடு மறைந்தாலும் சில ஸூபித்துவ மரபு தரீக்கா ஓதல்களுக்காக அர்வி/அரபுத் தமிழ் நூல்கள் இன்றும் பயன்படுத்தப்படுகிறது.

அர்வி / அரபுத் தமிழின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

1. 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் தமிழக மத்றஸாக்கள் தங்களது பாடத்திட்டத்தில் வட இந்தியாவில் உருது மொழியின் பின்புலத்தில் வடிவமைக்கப்பட்ட தர்ஸ்-இ-நிஜாமி -ஐ சுவீகரித்துக் கொண்டமை தமிழக மத்றஸா பாடத்திட்டத்தில் அரபுத் தமிழின் தேவையை இல்லாமல் ஆக்கியது. வட இந்திய மத்றஸாக்களில் உயர் கல்விக்காக செல்வதற்கும் இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள முஸ்லிம்களுடன் தொடர்பு கொள்வதற்கும் உருது மொழியை துணைக் கொள்வது எளிதானதாக இருந்ததாலும் தமிழக மத்றஸாக்களில் அரபுத் தமிழ் மெல்ல வழக்கிழந்தது[9].
2. அரசாங்கத்தின் மூலம் பள்ளிக்கூடங்களில் தமிழ் வழி கல்வி பரவலாக்கப்பட்டது.[10] முஸ்லிம்கள் பிற தமிழ் மக்களுடன் தொடர்பு கொள்வதற்கு பயன்பட்டது. இதனால் அரபுத் தமிழை கற்பது என்பது கூடுதல் பளு என்கிற நிலை உண்டானது.
3. தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்கள் தமிழ் மொழித் தூய்மை பேணும் உணர்வுடன் அரபுத் தமிழைக் கடுமையாகச் சாடியமையும்[11], இஸ்லாமிய சீர்திருத்த வாதத்தின் பெயரில் அரபுத் தமிழுக்கு எதிராக செய்யப்பட்ட தீய பிரச்சாரங்களும் முஸ்லிம் மக்களிடம் அரபுத் தமிழ் பற்றிய தாழ்ந்த எண்ணத்தை உண்டாக்கியதோடு அதனை கற்பதிலிருந்தும் அவர்களை தூரமாக்கியது[12].
4. நூல்களை தமிழில் அச்சிட்டு வெளியிடுதல் எளிதான காரியமாக இருந்ததோடு, அரபுத் தமிழில் நூல்களை அச்சிடுதல் என்பது சிரமமானதும், செலவுமிக்கதாகவும் இருந்தது, இத்தகைய சிரமப்பாடு அரபுத் தமிழிலுக்கு பதில் தமிழில் நூல்களை வெளியிடுவதின் பக்கம் வெளியீட்டாளர்களை கொண்டு சென்றது[13].

இன வகைப்படுத்தலில் அரபுத் தமிழின் தாக்கம்

அரபுத் தமிழின் வீழ்ச்சிக்குத் தமிழ் தேசியவாத சிந்தனைகளின் வகிபாகமும் முக்கியமானது. வட இந்தியாவில் ஹிந்துஸ்தானி மொழி தேவனாகிரி மற்றும் அரபு-பாரசீக லிபிகளில் எழுதும் வளமை தொடர்ந்ததின் காரணமாக ஹிந்தி மற்றும் உருது என இரு மொழி பிரிவினராக மக்கள் பிரிந்தது போன்று தமிழ் சூழலில் ஏற்பட்டு அதன் மூலம் மொழிவாரி மக்கள் தொகையில் ஏற்படும் பின்னடைவை அஞ்சிய தமிழ் தேசியவாதிகளின் செயல்பாடுகளுக்கும் அரபுத் தமிழின் வீழ்ச்சியில் பங்கு இருந்தது என்பது புறமொதுக்க முடியாத உண்மையாகும்.

முனைவர் டார்ஸ்டன் சாச்சர் “தமிழ் தேசியவாதிகள் மொழி வழி தேசியவாதத்துக்கான சவாலாக அரபுத் தமிழை கருதினர்” [14] என்று குறிப்பிடுகிறார்.

அரபுத் தமிழின் வெற்றிடத்தில் உருது மொழி

அரபுத் தமிழ் எழுத்துக்கள் வழக்கிழந்ததால் தமிழ் சொற்களை அரபு லிபியில் எழுத வேண்டிவரும் சூழல்களில் உருது எழுத்துகளைப் பயன்படுத்தும் நடைமுறை ஏற்பட்டுள்ளது, உருது மொழியின் தாக்கம் தமிழ் முஸ்லிம்களின் தமிழ் எழுத்து நடையிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளது.

அரபு எழுத்து “ث” வுக்கு பகரமாகத் தமிழில் 'த' என்ற எழுத்து பயன்பாட்டில் இருந்தது. எ.கா: ஹதீது-நபிமொழி, உதுமான், தவாபு-வெகுமதி போன்ற சொற்கள் உருது மொழி வழி உச்சரிப்பின் தாக்கத்தால் தற்போது தமிழில் முறையே ஹதீஸ், உஸ்மான், ஸவாபு என்று எழுதப்படுகிறது.

அர்வி / அரபுத் தமிழின் மீளெழுச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகள்

20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரபுத் தமிழின் வீழ்ச்சி கடுமையாக உணரப்பட்டதன் விளைவாக இலங்கையிலும் தமிழகத்திலும் பல்வேறு வகையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. “அகில இலங்கை அரபுத் தமிழ் இயக்கம்” இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டு அரபுத் தமிழை தமிழ் முஸ்லிம்களின் தாய்மொழியாக அங்கீகரிக்க வேண்டும் என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு அது செயல்பட்டது. தமிழக மத்றஸாக்களில் மீண்டும் அரபுத் தமிழை பயிற்றுவிப்பு மொழியாகக் கொண்டு வருவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டது இருப்பினும் அவை எதிர்பார்க்கப்பட்ட அளவு வெற்றியைத் தரவில்லை[15].

இன்றைய கணினி யுகத்தில் அரபுத்தமிழை மீள்அறிமுகம் செய்வதற்கான சாத்தியப்பாடுகள் இருக்கின்றபோதிலும் அரபுத்தமிழ் சார்ந்த தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் காணப்படும் தேக்கநிலையும், தற்போது பயன்படுத்துவதற்கு சாத்தியப்படும் படியான வழிமுறைகளை பரவலாக்குவதில் நிலவும் கால தாமதமும் அரபுத் தமிழின் மீளெழுச்சியை தாமதப்படுத்துகிறது.

அர்வி / அரபுத் தமிழின் அவசியம்

ஒரு சமூகம் தனது மொழியை இழக்கும்போது, அந்த மொழியுடன் பிணைந்திருக்கும் கலாச்சார மரபுகளான பாடல்கள், புராணங்கள், கவிதைகள், உள்ளூர் வைத்தியம், சுற்றுச்சூழல் மற்றும் புவியியல் அறிவு, எளிதில் மொழிபெயர்க்க முடியாத மொழி நடத்தைகள் போன்றவற்றையும் இழக்கிறது. மேலும் அரபு மொழியின் உச்சரிப்புக்கு இணையான எழுத்துக்கள் தமிழில்

இல்லாததும் அரபு சொற்றொடர்களை மொழிபெயர்ப்பு செய்வதால் ஏற்படும் கருத்துச் சிதைவு ஏற்படுவதைத் தவிர்க்கவும் அரபு வார்த்தைகளை தமிழுக்கு எழுத்துப்பிழப்பு செய்வதிலும் இயலாமை காணப்படுவதாலும் தமிழ் முஸ்லிம் சமூகத்திற்கு அரபுத் தமிழ் இன்றும் அவசியப்படுகிறது.

யூனிகோடில் அர்வி / அரபுத் தமிழ்

யூனிகோட் என்கிற லாபநோக்கமற்ற நிறுவனம் உலக மொழிகளுக்கான எழுத்துக்கள் மற்றும் குறியீடுகளை வகைப்படுத்தி இணையத்தில் அந்த மொழிகளை பயன்படுத்துவதை சாத்தியப்படுத்துகிறது. ஆங்கிலம் தமிழ், அரபு உட்பட பல உலக மொழிகள் யூனிகோட் அட்டவணையில் இடம்பெற்றுள்ளன. முனைவர் தைக்கா ஷுஐப் அவர்கள் பட்டியலிட்டுள்ள அரபுத் தமிழ் அரிச்சுவடியில் அரபு எழுத்துக்கள் போக 11 எழுத்துக்களும், 1 குறியீடும் அரபுத் தமிழ் எழுத்துக்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் 8 எழுத்துக்கள் அரபு மொழிக்கான யூனிகோட் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுள்ளது, மீதமுள்ள “ங”, “க” -க்கு இணையான 2 அரபுத் தமிழ் எழுத்துக்களையும், “ெ◌” -க்கான 1 குறியீட்டையும் 2008ஆம் ஆண்டு பேராசிரியர் எம். ஐ. புகாரி அவர்கள் சமர்ப்பித்த கோரிக்கையின் அடிப்படையில் யூனிகோட் நிறுவனம் (Arabic Extended-A) அரபுத் தமிழ் எழுத்துக்களைச் சேர்த்துள்ளது. இன்னும் 1 அரபுத் தமிழ் எழுத்து யூனிகோடில் சேர்க்கப்பட வேண்டியுள்ளது. யூனிக்கோட்டில் அரபுத் தமிழ் எழுத்துக்கள் இடம்பெற்றிருந்தாலும் அதனை பயன்படுத்துவதில் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. அந்தச் சிக்கல்கள் களையப்படும் பட்சத்தில் இணையத்தில் அரபுத் தமிழில் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதும், அரபுத் தமிழ் எழுத்துக்களைக் கொண்டு நூல்களை அச்சிட்டு பதிப்பிப்பதும் எளிதில் சாத்தியப்படும்.

அர்வி / அரபுத் தமிழ் யூனிகோட் எழுத்துருக்களைப் பயன்படுத்துவதில் காணப்படும் சிக்கல்

அரபுத் தமிழ் எழுத்துக்களில் யூனிக்கோட்டில் இறுதியாகச் சேர்க்கப்பட்ட எழுத்துக்கள் சில தளங்களில் பெயர்ப்பு (Rendering) செய்யப்படுவதில் 3 விதமான சிக்கல்கள் காணப்படுகிறது.



Figure 1. அர்வி யூனிகோட் எழுத்துக்கள் எதிர்கொள்ளும் பெயர்ப்பு (**Rendering**) சிக்கல்கள்

1. எழுத்துக்கள் முழுவதுமாக பெயர்ப்பு (Rendering) ஆகாமல் இருப்பது.

இந்த சிக்கல் பெரும்பாலான தளங்களில் ஏற்படுகிறது. எனினும் மாற்று ஏற்பாடாக குறிப்பிட்ட எழுத்துக்களுக்குத் தேவையான புள்ளிகளை தனியாகச் சேர்த்துக் கொள்வதன் மூலம் அந்த எழுத்துக்களைத் தட்டச்சு செய்து கொள்ளலாம்.

2. முன்பின் எழுத்துக்களுடன் சேராமல் தனித்து இருப்பது.

இறுதியாகச் சேர்க்கப்பட்ட எழுத்துக்களின் தனித்த வடிவம் (Isolated Letter) MS Word போன்ற உரை ஆவண மென்பொருள்களில் பெயர்ப்பு (Render) ஆனபோதிலும் ஆரம்ப, நடு மற்றும் இறுதி நிலைகளில் முன்பின் எழுத்துக்களுடன் அவை சேர்வதில்லை.

3. சில எழுத்துக்கள் மட்டும் பெயர்ப்பு (Rendering) ஆகுதல்

இந்தச் சிக்கல் சில எழுத்துருக்களை (Fonts) பயன்படுத்தும் பொழுது மட்டும் ஏற்படுகிறது. அந்த எழுத்துக்களுக்கான எழுத்து வடிவங்கள் சேர்க்கப்படாமல் இருப்பது இதற்கு காரணமாக இருக்கலாம்.



Figure 2. வரைகலை மென்பொருள்களில் அர்வி எழுத்துக்களின் பெயர்ப்பு (Rendering) நிலை

அரபுத் தமிழ் எழுத்துக்களுக்கான தனித்த, ஆரம்ப, நடு மற்றும் இறுதி நிலைகளின் எழுத்து வடிவங்கள் சேர்க்கப்பட்ட எழுத்துருக்களை கூகுள் டாக்ஸ் போன்ற உரை ஆவண மென்பொருள்களிலோ அல்லது வரைகலை மென்பொருள்களிலோ பயன்படுத்த வேண்டிய எழுத்துக்களை உள்ளீடு செய்து PDF, JPG புகைப்படம் போன்ற மாறா வடிவத்தில் வெளியீட்டைப் பெற்று அவற்றை அச்சிட்டு கொள்ளலாம்.

அர்வி / அரபுத் தமிழ் ஆண்ட்ராய்டு விசைப்பலகை செயலி

மேற்கண்ட யூனிகோட் எழுத்துருக்களைக் கொண்டு ஆண்ட்ராய்டு இயங்குதலத்திற்கான அர்வி / அரபுத் தமிழ் விசைப்பலகைச் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது[16]. இதில் அரபு மற்றும் அரபுத் தமிழ் எழுத்துக்கள், ஹறகாத்துகள், எண்கள், இஸ்லாமிய எழுத்தாக்கங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் குறியீடுகள் ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளது. பெயர்ப்பு

(Rendering) செய்யப்படுவதில் சிக்கல் நீடிக்கும் அரபுத் தமிழ் எழுத்துக்களுக்கு, அரபு எழுத்தில் அரபுத் தமிழ் எழுத்துக்கு தேவையான புள்ளிகள் ஒட்டு சேர்த்து தனி எழுத்தாக வைக்கப்பட்டுள்ளது. அவ்வெழுத்துகளுக்கான அசல் யூனிகோட் எழுத்துக்கள் அவற்றின் பாப்-அப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

Figure 3. ஆண்ட்ராய்டு இயங்குதளத்திற்கான அர்வி / அரபுத் தமிழ் விசைப்பலகையின் அமைப்பு

மேற்கண்ட இந்த விசைப்பலகை செயலி முனைவர் தைக்கா ஷுஐப் அவர்கள் வழங்கியுள்ள அரிச்சுவடியில் இடம்பெற்றுள்ள எழுத்துக்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

முடிவுரை

அர்வி / அரபுத் தமிழை மீளெழுச்சி பெறச் செய்வதற்கான பரிந்துரைகள்

1. அரபுத் தமிழ் வாசிப்பதில் காணப்படும் பின் தங்கிய நிலையை கவனத்தில் கொண்டும், அதேவேளை அரபுத் தமிழ் இலக்கியங்களை மக்களுக்கு பயன்படும் விதத்தில் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் கருதி அரபுத் தமிழில் வெளிவந்த நூல்கள் மற்றும் வெளிவராத கையெழுத்து பிரதிகள் ஆகியவற்றை சேகரித்து தமிழ் மற்றும் அரபுத் தமிழ் எழுத்து வடிவங்களிலும் (Bilingual) நூல்களாக அச்சிட்டு வெளியிடுதல்.

2. தமிழகம் மற்றும் இலங்கையில் உள்ள மத்றஸாக்கள் மற்றும் சிறார்களுக்கான மக்தப்களிலும் அரபுத் தமிழைப் பயிற்றுவிப்பு மொழியாக மீள் அறிமுகம் செய்தல்.

3. அனைத்து விதமான நவீன தொழில்நுட்ப சாதனங்களிலும் அரபுத் தமிழை பயன்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறிந்து அதனை மக்களிடம் பரவலாக கொண்டு செல்லுதல்.
4. அரபுத் தமிழ் சஞ்சிகைகள், பருவ இதழ்களை மீண்டும் அறிமுகம் செய்வதோடு மாணவர்களுக்கிடயே அரபுத் தமிழில் கட்டுரைப் போட்டிகளையும் நடத்துதல்[17].
5. அரபுத் தமிழ் பற்றி ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகளோடு அதன் கவனிக்கப்படாத அம்சங்களையும் ஆய்வு செய்வதற்கு ஆய்வாளர்களை ஊக்குவித்து அரபுத் தமிழ் பற்றிய தெளிவானதும் முழுமையானதுமான தொகுப்பை உருவாக்கி வெளியிடுதல்.
6. சமூகவியல், அரசியல் மற்றும் மொழியியல் ரீதியாக அரபுத் தமிழை சுமுகமான முறையில் மீளெழுச்சி பெறச் செய்வதற்கான சாத்தியப்பாடுகளை கண்டறிதல்.

Acknowledgement

அர்வி / அரபுத் தமிழ் விசைப்பலகை செயலியை வடிவமைப்பதற்கு உதவிய தகவல் தொழில்நுட்ப பொறியாளர்கள் இப்ராஹீம் அன்சாரி மற்றும் முஹம்மது இஸ்மாயீல் ஆகியோருக்கு நட்பும், நன்றிகளும்!.

மேற்கோள்கள்

1 Origin, Development, Rise and Decline of Arabu-Tamil Language: Language as an Islamic Classifier
2 Arabic Tamil and Arabic Tamil articles, p 9
3 Azeez A.M.A, Arapu Thamil Enkal Anpu Thamil, p 6
4 Arwi Script of Tamil Language and Jawi Script of Malay Language: Script as Religious Entity and Cultural Heritage
5 Arabic, Arwi, and Persian in Sarandib and Tamil Nadu Tayka Shuayb, p 93
6 Arabic, Arwi, and Persian in Sarandib and Tamil Nadu Tayka Shuayb, p 103
7 Arabic, Arwi, and Persian in Sarandib and Tamil Nadu Tayka Shuayb, p 105
8 Arabic, Arwi, and Persian in Sarandib and Tamil Nadu Tayka Shuayb, p 105
9 Arabic, Arwi, and Persian in Sarandib and Tamil Nadu Tayka Shuayb, p 121, 122 & 123
10 Arabic Tamil and Arabic Tamil articles, p 82
1 Arabic Tamil and Arabic Tamil articles, p 82
2 Arabic, Arwi, and Persian in Sarandib and Tamil Nadu Tayka Shuayb, p 118
3 Arabic, Arwi, and Persian in Sarandib and Tamil Nadu Tayka Shuayb, p 121 & 122
4 From script to language: the three identities of ‘Arabic-Tamil’
5 Arabic, Arwi, and Persian in Sarandib and Tamil Nadu Tayka Shuayb, p 122
6 Arwi / ArabuTamil Keyboard Apk [Available at https://drive.google.com/file/d/1UwVZrrmUY-teody1V-vdTFaKbzw8m5WT/view?usp=drivesdk]
17 Arabic, Arwi, and Persian in Sarandib and Tamil Nadu Tayka Shuayb, p 125

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
B.Ansar P: 53-67

அரபு மலையாள இலக்கியத்தில் அரபுத்தமிழின் செல்வாக்கு

Influence of Arabu-Tamil on Arabi-Malayalam Literature

B. ANSAR
Centre for Islamic Tamil Cultural Research
Jamal Mohamed College, Trichy
Contact : 9362009225

Abstract

Arabic-Malayalam is a language of Muslims in Kerala, especially in Malabar region. The writing system of this languge is in Arabic script with Malayalam grammatical structure. Arabi-Malayalam literature has a distinct cultural identity, while at the same time remain closely linked to the practices of Mysticism. The style of this literature(Mappila literature) is highly influenced by the tradition of Arabic-Tamil literature. In the early Mappila literature borrowed lot of words from Arabic-Tamil. Mappila poets have taken meters and modes from Muslim Tamil songs. Research scholars mentioned that Arabic-Malayalam and literature is highly indebited to Arabic-Tamil. This research article explains the Influence of Arabic-Tamil on Arabic-Malayalam literature.

Key words

Arabu-Tamil, Arabi-Malayalam, Mappilappaattu, Muslim Tamil Literature, Mappila Literature, Arabi-Malayalam Literature, Arabu-Tamil Literature

ஆய்வுச் சுருக்கம்

அரபுத்தமிழுக்கும் அரபு மலையாளத்திற்கும் இடையேயான ஒற்றுமை என்பது இவ்விரு மொழிகளும் பிறந்த வரலாற்றுடன் மட்டுமன்றி பல நிலைகளிலும் ஒன்றுபட்டுள்ளது. இவ்விரண்டிற்கும் செழுமையான இலக்கிய மரபு உண்டு என்பதால் அவற்றை ஆய்வு செய்யும்போது அரபு மலையாள இலக்கியத்தில் அரபுத்தமிழ் மிகவும் செல்வாக்கு செலுத்தியிருப்பதை உணர முடியும். அவ்வகையில் அரபு மலையாளமும் அதன் செய்யுள் இலக்கியமும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

திறவுச் சொற்கள்

அரபுத்தமிழ், அரபு மலையாளம், மாப்பிளப்பாட்டு, முஸ்லிம் தமிழ் இலக்கியம், மாப்பிள்ளை இலக்கியம், அரபு மலையாள இலக்கியம், அரபுத்தமிழ் இலக்கியம்

ஆய்வு நோக்கம்

அரபு மலையாள இலக்கியத்தின் அடித்தளம் அரபுத்தமிழ் இலக்கியத்திலிருந்து எழுந்துள்ளதால் அதன் ஆய்வுகளை அரபுத்தமிழ் வரலாற்றிலிருந்து துவங்க வேண்டும் என்பது அரபு மலையாள ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது. எனவே இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்கான வழிவகைகளை அரபுத்தமிழ் ஆய்வாளர்கள் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக “அரபு மலையாள இலக்கியத்தில்

அரபுத்தமிழின் செல்வாக்கு” என்ற தலைப்பில் இந்த ஆய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

ஆய்வுச் சிக்கல்

அரபு மலையாளப் பாடல்களை இயற்றியவர்கள் பயன்படுத்திய தமிழ்ச் சொற்கள் நூல்களை மறுபதிப்பு செய்பவர்களாலும் விளக்கவுரை எழுதுபவர்களாலும் சமஸ்கிருத உச்சரிப்புக்கு ஏற்றவாறு அல்லது நவீன மலையாளத்திற்கு ஏற்றவாறு திருத்தம் செய்யப்பட்டு வருகிறது. இப்பாடல்களில் பழந்தமிழிலிருந்து திரிந்த சொற்கள் காணப்படுவதால் அவற்றை அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்படலாம்.

ஆய்வு முறையியல்

இங்கு கையாளப்படும் ஆய்வு முறையியல் என்பது இரண்டு இலக்கியங்களையும் ஒப்பீடு செய்யும் முறையாக இல்லை. அரபு மலையாள இலக்கியத்தில் அரபுத்தமிழின் செல்வாக்கு பற்றிய ஆய்வு என்பதால் அரபு மலையாள இலக்கியத்திலிருந்து மட்டுமே பாடல்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. தமிழ்ச் செல்வாக்கு கூடுதலாக உள்ள பாடல்களிலிருந்து மட்டுமே மேற்கோள் காட்டப்படுகிறது.

முன்னுரை

அரபு மலையாள இலக்கியம் என்பது கேரளாவின் மலபார் பகுதியில் தோன்றி வளர்ந்த மலையாள இலக்கியத்தின் கிளை இலக்கியமாகும். மலையாளமும் அரபும் தமிழும் கலந்த மொழிநடையிலிருந்து இவ்விலக்கியம் உருவெடுத்தது. இருபதாம் நூற்றாண்டின் மத்திய காலகட்டம் வரை செல்வாக்கு பெற்றிருந்த அரபு மலையாளத்தின் செழுமைக்கு இது சான்று பகர்கின்றது. மலையாள இலக்கிய வடிவமைப்பிலிருந்து மாறுபட்டு நிற்கும் இவ்விலக்கியம் அரபுத்தமிழ் இலக்கியத்துடன் நெருங்கிய பிணைப்பைப் பெற்றுள்ளது. இதன் செய்யுள் இலக்கியம் “மாப்பிளப் பாட்டுகள்” என்று அறியப்படுகிறது.

அரபு மலையாளம்

கேரளாவின் மலபார் பகுதி முஸ்லிம்களிடமிருந்து தோற்றம் பெற்றதால் இதை ’மாப்பிள மலையாளம்’ என்றும் கூறுவர். ‘மாப்பிள (மாப்பிள்ளை)’ என்பது மலபார் முஸ்லிம்களை மட்டுமன்றி தென் கேரள கிறிஸ்தவர்கள் சிலரையும் குறிக்கிறது. இவர்கள் தங்களை நஸறாணிகள் என்று கூறிக் கொள்வதால் ‘நஸறாணி மாப்பிள’ என்றும் அறியப்படுகின்றனர். எனினும் ‘மாப்பிள்ளை’ என்பது பொதுவாக மலபார் பகுதி முஸ்லிம்களைக் குறிக்கும் சொல்லாக உள்ளது.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
B.Ansar P: 53-67

அரபு மலையாளம் மலபாரில் தோன்றி வளர்ந்தாலும், தென் தமிழ் நாட்டின் குளச்சல் முதல் தென் கர்நாடகாவின் மங்களூர் வரையிலான நிலப்பகுதியிலும், இலட்சத்தீவுகளிலும் செல்வாக்குப் பெற்றிருந்தது. இது உருவான காலகட்டத்தை உறுதியாக வரையறுக்க இயலவில்லை. இஸ்லாம் கேரளாவில் பரவிய காலகட்டத்தில் தோன்றியிருக்கலாம் என்றும் ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம் என்றும் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. மலையாள மொழி உருவாக்கம் பெற்ற வரலாற்றுடன் ஒப்பிடும்போது இக்கருத்துக்கள் பலவீனமானதாகும். எனவே அரபு மலையாள வரலாற்றிற்கும் மலையாள மொழி உருவாக்கத்திற்கும் இடையிலான தொடர்பு முக்கியத்துவம் பெறுகிறது.

மலையாள மொழியின் தோற்றம்

மலையாளம் என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை நிலப்பகுதியைச் சுட்டிக்காட்டும் பெயராக இருந்தது. காலப்போக்கில் மொழியைக் குறிக்கும் பெயராக மாறிவிட்டது. பதினான்காம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கூறப்படும் 'லீலாதிலகம்' இம்மொழியை 'மலைநாட்டுத் தமிழ்' என்றே குறிப்பிடுகிறது. மலையாள எழுத்தாளர்கள் இதை கொடுந்தமிழ் என்றும் குறிப்பிடுவர்.

கொடுந்தமிழுடன் சமஸ்கிருதம் கலக்கப்பட்டு உருவான மணிப்பிரவாளம் உயர் சாதியினரின் மொழியாக இருந்தது. மதத்திலும் அரசியலிலும் இவர்கள் ஆதிக்கம் செலுத்தியதால் சேர அரசின் மொழியாகவும் மாறியது. சமஸ்கிருத உச்சரிப்பிற்கு ஏற்றவாறு இந்திய மொழிகளில் உருவாக்கப்பட்ட புதிய எழுத்துமுறை மலையாளத்திலும் புகுத்தப்பட்டதால் அந்த எழுத்துமுறை மலையாளத்தைத் தமிழிலிருந்து தூரமாக்கியது. தமிழ் இலக்கண விதிமுறைகளுடன் சமஸ்கிருத நடைமுறை இணைக்கப்பட்டு மலையாள இலக்கணம் வரையறுக்கப்பட்டது. தமிழ் ஐந்திலக்கண மரபினைத் தழுவி எழுதப்பட்ட 'லீலாதிலகம்' முதல் மலையாள இலக்கண நூலாக கருதப்படுகிறது.

"பிராமண சமூகத்தினரின் கலப்பு மொழியும், எளிய மக்களின் மலைநாட்டுத் தமிழும் சில நூற்றாண்டுகள் வரை வேறுபட்டிருந்தாலும் அரசியலிலும், பொருளாதாரத்திலும் கிடைத்த முக்கியத்துவத்தால் இந்தக் கலப்பு மொழியானது மக்களின் பேச்சு மொழியில் படிப்படியாக ஆதிக்கம் செலுத்தி துஞ்சத்து எழுத்தச்சன் காலத்தில் ஒன்றாகி மலையாளமாக உருவெடுத்தது" என்று மலையாள அறிஞர் இளம் குளம் குஞ்ஞன் பிள்ளை குறிப்பிடுகிறார். [1]

மலையாளம் தமிழிலிருந்து தன்னை விடுவித்து சுதந்திர மொழியாக மாறிய காலகட்டம் கி.பி. பன்னிரண்டாக இருக்கலாம் என்பது மொழியியல்

ஆய்வாளர்களின் கூற்றாக உள்ளது. எனினும் மலையாளம் தனி மொழியாக வளர்ச்சியடைந்து 500 ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என்பதே உண்மையாகும்.

மலையாளம் இளைய மொழியாக இருப்பதால் அரபு மலையாள வரலாற்றை மலையாள மொழி வரலாற்றுடன் தொடர்புபடுத்தி ஆய்வு செய்வதே பொருத்தமாக இருக்கும்.

கேரளாவில் அரபித்தமிழின் செல்வாக்கு

துஞ்சத்து எழுத்தச்சன் மலையாளத்தை செம்மைப்படுத்தி தனி மொழியாக மாற்றுவதற்கு முன்னரே அரபு மலையாள இலக்கியம் தோன்றிவிட்டது. எழுத்தச்சன் அத்யாத்ம இராமாயணம் எழுதுவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் முஹ்யித்தீன் மாலையை கோழிக்கோடு காழி முஹம்மது அவர்கள் இயற்றியுள்ளார். மாப்பிள்ளை முஸ்லிம்களின் மொழிநடையாக மலையாள வட்டார வழக்குடன் தமிழ் கலந்த கலப்பு மொழி அப்பகுதியில் பேசப்பட்டு வந்ததால் இம்மொழிநடையைத் தழுவியே முஹ்யித்தீன் மாலை இயற்றப்பட்டுள்ளது.

அரபு மலையாளம் தோன்றுவதற்கு முன்னர் அரபுத்தமிழ் இங்கு நடைமுறையில் இருந்தது. மக்களின் பேச்சு வழக்கு மலைநாட்டுத் தமிழிலிருந்து மலையாளமாக மாறிய சூழலில் அரபு மலையாளமும் உருவெடுத்தது. எனினும் அரபுத்தமிழும் அரபு மலையாளமும் சிறிய வேறுபாடுகளுடன் ஒன்றிணைந்து பயணித்து வந்தது. அரபு மலையாளத்தில் காணப்படும் அரபுத்தமிழ் செல்வாக்கிற்கு இதுவே முன்னோடியாகும். மலையாளம் தமிழிலிருந்து விடுவிக்கப்பட்டுத் தனி மொழியாக மாற்றப்பட்ட பின்னர் அரபு மலையாளமும் காலப்போக்கில் மாறுதல்களை அடைந்தது.

அரபுத்தமிழ் வரலாற்றை எழுதுபவர்கள் மொழிவழி மாநிலங்கள் உருவான பிறகு உள்ள தமிழக வரலாற்றுடன் சுருக்கி எழுதுவதால் இதன் வரலாறும் மறைந்து விடுகிறது. தென் கேரளாவில் எழுந்த அரபுத்தமிழ் பாடல்களை கவனத்தில் கொள்ளாமல் இருப்பதற்கு இதுவும் காரணமாகும். இப்பகுதிகளில் அரபு மலையாளம் பரவியிருந்தபோதும் பல ஊர்களிலும் இஸ்லாமிய அடிப்படைக்கல்வி அரபித்தமிழிலும் கற்பிக்கப்பட்டு வந்தது. அரபு மலையாளமும் அரபுத்தமிழும் இணைந்த பாடநடைமுறையும் இருந்தது. இருபதாம் நூற்றாண்டின் துவக்க காலம் வரை இந்நிலை நீடித்தது.

“மாப்பிள்ளை இலக்கிய மொழியின் வளர்ச்சியில் இலட்சத்தீவிற்கும் பங்குண்டு. தமிழகத்தின் காயல்பட்டினம், தேங்காய்பட்டினம் பகுதிகளும் இதில் அடங்கும். காதிரிய்யா தரீக்கத் தொடர்பான செயல்பாடுகள் கேரளாவிற்கு இந்த

ஊர்களின் வழியாக நடைபெற்று வந்தன" [2]. மாப்பிள்ளைக் கவிஞர்கள் பாடல்கள் இயற்றுவதில் புலமை பெறுவதற்காக இப்பகுதிகளுக்கு வந்து சென்ற குறிப்புகளும் உள்ளன.

சூஃபி தமிழ்ப் புலவர்களின் நூல்கள் கேரளக்கரையில் மிகுந்த செல்வாக்குடன் விளங்கியதால் அங்குள்ள இஸ்லாமிய கல்வி நிலையங்களில் தமிழ் மொழியைக் கற்றுக் கொடுப்பது வழக்கமாக இருந்தது. தமிழ்ப் புலமை பெறவும் செய்யுள் இயற்றும் விதிமுறைகளைக் கற்கவும் முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் உறுதுணையாக இருந்தனர். மாப்பிள்ளை இலக்கிய வளர்ச்சியில் இவர்களின் பங்களிப்பு இருந்ததால் அதன் தமிழ் மரபு காப்பாற்றப்பட்டது. மலையாள இலக்கியத்தில் சமஸ்கிருதம் ஆதிக்கம் செலுத்திய காலகட்டத்தில் இவ்விலக்கியம் தமிழ் மரபைப் பின்பற்றி பெருவளர்ச்சியடைந்தது. இதன் தமிழ் செல்வாக்கு குறித்த ஆய்வுகள் கேரள ஆய்வாளர்களிடம் தற்போது முக்கியத்துவம் பெற்றதாக மாறியுள்ளது. எனவே 'மாப்பிளப் பாட்டுகள்' குறித்த ஆய்வுகளை தமிழ் நாட்டிலிருந்து துவங்கவேண்டு மென்றும் வலியுறுத்துகின்றனர்.[3]

அரபுத் தமிழிலிருந்து அரபு மலையாளம் சுதந்திரமாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டதா என்ற கண்ணோட்டத்தில் ஆய்வுகளை மேற்கொள்வது கட்டாயமாகும். துவக்கத்தில் இரண்டு மொழிகளும் ஒன்றாகவோ அல்லது சிறிய வேறுபாடுகளுடனோ இருந்திருக்கலாம். அச்சக வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட எழுத்துச் சீர்திருத்தத்தில் எழுத்துமுறையில் வேறுபாடு வந்திருக்கலாம்.

அக்காலத்தில் அரபு மலையாளம் தெரிந்தவர்களால் அரபுத்தமிழை இலகுவாக வாசித்து விளங்க முடிந்தது. அரபுத்தமிழ் நூல்களை மொழிபெயர்க்காமல் அரபு மலையாள எழுத்துருவிலும் அச்சிட்டனர். முஹ்யித்தீன் மாலை போன்ற அரபு மலையாள நூல்கள் அரபுத்தமிழ் எழுத்துருவிலும் தமிழகத்தில் அச்சிடப்பட்டன.

வட கேரளாவின் காசர்கோடு மாவட்டத்திலுள்ள மொக்ரால் என்ற சிற்றூர் அரபுத் தமிழ் இலக்கியத்தையும் அரபு மலையாள இலக்கியத்தையும் போற்றி வளர்த்த ஊர்களில் ஒன்றாகும். இவ்வூர் அரபுத்தமிழ் வாசிக்கத் தெரிந்தவர்கள் நிறைந்த பகுதியாகத் திகழ்ந்தது. திருமணங்களிலும் பிற நிகழ்ச்சிகளிலும் இஸ்லாமியத் தமிழ் பாடல்களை இன்னிசைத்து மகிழ்வது இவர்களின் வழக்கமாக இருந்தது. இங்கு நடைபெற்ற கவியரங்குகளில் முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் தமிழகத்திலிருந்து சென்று பாடல்களை அரங்கேற்றி வந்தனர். மங்களூரில் நடைபெற்ற கவியரங்குகளிலும் இவர்கள் பங்கெடுத்தனர். கலைகளை ஊட்டி வளர்த்த மொக்ராலில் வீட்டுக்கொரு கவி என்று சொல்லும் அளவிற்கு இவ்வூர்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
B.Ansar P: 53-67

கவிஞர்களால் நிறைந்திருந்தது. இதனால் மொக்ரால் ‘இஷல் கிராமம்’ என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறது.

மாப்பிள்ளைப் பாட்டின் தமிழ் மரபு

இயல் என்ற தமிழ்ச் சொல்லிருந்து ‘இஷல்’ என்ற சொல் பிறந்ததாகக் கருதப்படுகிறது. மாப்பிள்ளைப் பாட்டின் விருத்தங்கள் பொதுவாக இஷல் என்றாலும் பாட்டின் அளவு, சந்தம், மட்டு, விருத்தம் முதலியன சேர்ந்த ஈணம் அல்லது தாளக்கட்டு பொதுவாக 'இஷல்' என்று கூறப்படுகிறது. நாட்டுப்புறப் பாடல்களிலிருந்தும் அரபுப் பாடல்களிலிருந்தும் தமிழ்ப் பாடல்களிலிருந்தும் பல இஷல்களை மாப்பிள்ளைப் பாட்டு எடுத்துக் கொண்டது.

“அரபுத்தமிழில் எழுதப்பட்ட ஸக்கூம் படைப்போரை அடியொற்றி 'ஸக்கூம் படப்பாட்டு’ என்ற நூல் அரபு மலையாளத்தில் எழுதப்பட்டது. மகாகவி மோயின் குட்டி வைத்தியர் போன்ற பல மாப்பிள்ளைக் கவிஞர்களும் ஸக்கூம் படப்பாட்டிலிருந்து பல இஷல்களை எடுத்துக்கொண்டனர். தமிழிலிருந்து எடுக்கப்பட்ட தளர் விருத்தம், தொடர் விருத்தம், பகர விருத்தம், சிறு விருத்தம், வண்ணம், திருப்புத் தமிழ், தமிழ்ப் பதம் முதலிய இஷல்கள் இந்நூலில் உண்டு”.[4]

மலையாளக் கவிஞர்கள் சமஸ்கிருதச் சொற்களை அதிக அளவில் பயன்படுத்துவது நடைமுறையாக இருக்க மாப்பிள்ளைக் கவிஞர்கள் தமிழ்ச் சொற்களை அதிக அளவில் பயன்படுத்தியுள்ளனர். மலையாள இலக்கியம் அறிந்திராத ஏராளமான தமிழ்ச் சொற்களை அரபு மலையாள இலக்கியத்தில் காண முடியும்.

”இறைவன், பரன், கோன், புகழ்ச்சி, வாழ்த்து, அரிகோர், வேந்தர், வரிசை, அண்டம், பொய், மெய், இன்பம், நெடில்(ஒட்டகம்), பட்டாங்கு, மகுடம், புவி, பார், நெறி, மரக்கலம், மடவி, கணவன், வள்ளல்,”.........போன்ற நூற்றுக்கணக்கான தமிழ்ச் சொற்கள் இதற்கு எடுத்துக் காட்டாகும்.

“மன்றாடுவீர், கூறினார்,அவர் சொன்னார், கோன் அவன் பொறுக்கும்,உரை கேட்டு, பொங்கியெழுந்து, போர் கழிந்து, இந்த தினம் தனில், மண்ணில் பிறந்து, இறைமனை எரிக்கக் கண்டு, அல்லும் பகலும்”... போன்ற மலையாள உச்சரிப்பிற்கு மாறுபட்ட ஏராளமான சொற்றொடர்களையும் காண முடியும்.

முஸ்லிம் தமிழ் இலக்கியம் சூஃபி வழியில் வேரூன்றி இருப்பது போல் அரபு மலையாள இலக்கியமும் அதே மரபில் செல்கிறது.இதன் முதன்மையான காவியமாகக் கருதப்படும் முஹ்யித்தீன் மாலை கோழிக்கோடு காஜியாக இருந்த

காழி முஹம்மது அவர்களால் கொல்ல வருடம் 782 (கி.பி.1607) இல் இயற்றப்பட்டது. மலையாள மொழியின் தந்தையாகக் கொண்டாடப்படும் துஞ்சத்து இராமானுஜ எழுத்தச்சன் அத்யாத்ம ராமாயணத்தை இயற்றுவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் முஹ்யித்தீன் மாலை இயற்றப்பட்டது. முஹ்யித்தீன் மாலையைத் தமிழ்ச் சுவை கொண்ட காவியம் என்பர்.

"முத்தும் மாணிக்கவும் ஒன்னாயி கோர்த்த போல்
முஹ்யித்தீன் மாலனெ கோர்த்தன் ஞான் லோகரே"

என்று மாலையின் காவிய மொழி பற்றி காழி முஹம்மது அவர்கள் பாட்டில் கூறியுள்ளார்.

"பதினான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'லீலாதிலகம்' தமிழ் மணியும் சமஸ்கிருத பவளமும் இணைந்த மணிப்பிரவாள காவியமாக இருப்பது போல் மலைநாட்டு மொழியான முத்தும் அரபி மொழியான மாணிக்கமும் கோர்க்கப்பட்டு உருவான காவியம்தான் முஹ்யித்தீன் மாலை"[5] என்று மாப்பிள்ளை இலக்கிய ஆய்வாளர் பாலகிருஷ்ணன் வள்ளிக்குன்னு அவர்கள் விளக்கமளிக்கிறார்.

"பாலிலே வெண்ணபோல் பைத்தாக்கி சொல்லுன்னன்
பாக்கியம் உள்ளவர் இதினெ படிச்சோவர்"

(முஹ்யித்தீன் மாலை)

"நயினார் முஹம்மதில் நின்றே ஸலவாத்தும்
நல்ல ஸலாமும் வழங்கணம் நீ அல்லாஹ்"

(பதர் மாலை)

"உதி பகலில் ஒக்கயும் நல் நோம்பதும் புடித்தெ
உறங்கிடாதெ ராவில் நிண்டு தொழுதிடும் ஸதத்தெ"

(நஃபீஸத் மாலை)

"பிஸ்மி துதிப்பேரும் துதியும் ஸலவாத்தும்
வேதாம்பர்க்காக்கி அதினால் துடங்குவான்"

(ரிஃபாயி மாலை)

மேற்கண்ட பாடல்கள் மொழிநடையிலும் உச்சரிப்பிலும் இலக்கண அமைப்பிலும் மலையாள இலக்கியத்திலிருந்து மாறுபடுகிறது.அரபு மலையாள இலக்கியத்தை மலையாள இலக்கியமாக ஏற்றுக் கொள்ள மலையாள அறிஞர்கள் தயங்குவதற்கு இது போன்ற உதாரணங்களைக் கூறமுடியும்.

முஹ்யித்தீன் மாலைக்குப் பிறகு ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டுகள் கழித்து குஞ்ஞாயின் முஸ்லியார் அவர்கள் இயற்றிய கப்பப்பாட்டு, நூல் மாலை, நூல்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
B.Ansar P: 53-67

மத்ஹ் முதலியன மாப்பிள்ளை இலக்கியத்தை முஸ்லிம் தமிழ் இலக்கியத்திற்கு இன்னும் நெருக்கமாக்கியது.

”கி.பி.1607 இல் இயற்றப்பட்ட முஹ்யித்தீன் மாலையில் இருபது விழுக்காடு தமிழ்ச் சொற்கள் இடம்பெற்றிருக்க நூல்மாலையில் அது எண்பது விழுக்காடாக மாறுகிறது. இக்கால தமிழ் அறிஞர்களுக்கு புலப்படாததும் பயன்பாட்டில் இல்லாததுமான ஏராளமான தமிழ்ச் சொற்கள் இதில் இடம்பெற்றுள்ளன. பிற சமுதாயக் கவிஞர்கள் அக்காலத்தில் வட்டார மொழியையும் சமஸ்கிருதத்தையும் தங்கள் பாடல்களில் பயன்படுத்தினர். ஆனால் குஞ்ஞாயின் முஸ்லியார் அரபுத்தமிழின் பரம்பரைத் தொடரில் தன்னை நிலைநிறுத்துகிறார். மாப்பிள்ளைச் சமூகத்தின் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்திய காதிரிய்யா தரீக்கத் தமிழ் வழியில் கேரளத்தை அடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.[6]

மாப்பிள்ளை இலக்கியத்தின் அடித்தளம் சூஃபி ஞானவழியில் கட்டமைக்கப்பட்டதால் தமிழக சூஃபி புலவர்களின் பாசறையில் இவ்விலக்கியம் வளம் பெற்றது. முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி(ரஹ்) அவர்களை முன்னிறுத்தி குஞ்ஞாயின் முஸ்லியார் இயற்றிய நூல் மாலையை இதற்கு எடுத்துக்காட்டாக கூறலாம். நூல் மாலை குறைவான மலையாளச் சொற்களுடன் தமிழ் நடையில் அமைந்துள்ளது.

”ஓதி ஓதி அறிந்ததே
உறவாலே ஊறி நிறைந்ததே
பூதி பூதி விளைந்ததே
புதுவாண்டெ போதம் அறிந்ததே
சாதிசேதி விரிந்ததே
சமயபொருள் வசிகண்டதே”

குருவிடம் நன்கு படித்து விளங்கிக் கொண்டால் ஊற்றிலிருந்து நீர் ஊறி வருவது போன்று ஞானம் பெருக்கெடுக்கும். அதிலிருந்து பலவித ஞானங்கள் விளைந்து புதுமையான அறிவுகள் பிறக்கும். இதன்மூலம் உள்ளம் விசாலமாகி அகப்பொருளை அறிய முடியும் என்பதே இப்பாடலின் மையக் கருத்தாகும்.

குஞ்ஞாயின் முஸ்லியார் நபி(ஸல்) அவர்களைப் புகழ்ந்து பாடிய ‘நூல் மத்ஹ்’ என்ற காவியம் அரபுத்தமிழ் காவியமோ என்று கருதும் அளவிற்கு தமிழ் நடையில் உள்ளது. இந்நூலில் எண்பது விழுக்காட்டிற்கும் மேல் தமிழ்ச் சொற்கள் இடம்பெற்றுள்ளது. இதன் அறிமுகவுரை தமிழில் துவங்குகிறது.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
B.Ansar P: 53-67



"ஆதிதன் அருளினால் பெருமான் வந்து அண்டம் ஏழும் கடந்து அர்ஷின்னு முடிநின்றே முஹம்மது நபியை காண்பதுக்கு என்னில் ஆசைக்கடல் பொங்கும். அதினால் இம்மத்ஹு நூல் மாலை பணிவதுக்கு அல்லாஹ்வே தாரும் உன்துணை காப்பு"

(அல்லாஹ்வின் அருளால் பெருமான் வந்து அண்டம் ஏழும் கடந்து அர்ஷ் வரை சென்ற முஹம்மது நபி (ஸல்) அவர்களை காண்பதற்கு எனக்கு ஆசைக்கடல் பொங்குகிறது. அதனால் இந்த நூல் மத்ஹ் மாலையை இயற்றுவதற்கு அல்லாஹ்வே துணை செய்வாயாக! நீயே காப்பு)

"மதனமணமுடி அழகும் நபியுட மத்ஹும் உரைசெய்து முடியுமோ
நதி இக்கடல் தனமறுத்து பலவகை தடித்து குடித்து உடன் ஒழுகுமோ
பதனம் புவிமலை உறவு பொரிப்பதும் பக ஒத்தெடுத்திடல் அடங்குமோ
மதத்தில் மழை சொரித்து அடங்கும் நபி குடமடித்தது ஒரு பொழுதடங்குமோ"

மதனமணிமுடியின் அழகையும் நபி(ஸல்) அவர்களின் புகழையும் உரைசெய்து முடிக்க முடியாது. நதியிலிருந்தும் கடலிலிருந்தும் நீரைப் பருகுவதால் அவை வற்றிவிடாது. மலையிலிருந்து ஊற்றெடுத்து வரும் நீரை தடுத்து நிறுத்த முடியாது. பெருமழை பெய்து அடங்கும் என்றாலும் நபி(ஸல்) அவர்களின் புகழ் கீர்த்திக்கு ஒரு பொழுதும் வரையறை இல்லை. (நூல் மத்ஹ்)

குஞ்ஞாயின் முஸ்லியார் இயற்றிய 'கப்பப்பாட்டு' என்ற கப்பல் பாட்டு அன்றைய மக்களின் நடைமுறை மொழியில் இருந்தாலும் தமிழின் செல்வாக்கிற்கு இதில் பஞ்சமில்லை.

"நாயன் என்னுன்னி நடப்போவர் எல்லாம்

நன்னாயி நினந்து மனம் வோர்த்து காமீன்
மாயம் ஒழித்து மனம் வோர்த்து கண்டால்
மந்தம் ஒழித்தேற்றம் முந்தி நடக்காம்
காயம் முழுத்து கறுத்துள்ள சிந்தா
காலா களங்கம் ஒழித்து துளங்கும்"

தங்களை நாயகர்களாகக் கருதி நடப்பவர்கள் நன்றாக சிந்தித்து மனதில் நிலை நிறுத்தவேண்டும். மனோ இச்சைகளை விட்டும் விலகி மனதை இறை சிந்தனையில் ஒருமுகப்படுத்தினால் பாவங்களை விட்டும் விலகி ஈடேற்றம் பெறலாம். உடல் இச்சைக்கு வழிப்பட்டு அதில் மூழ்கினால் உள்ளத்தில் கறுத்த பாவக்கறைகள் படிந்து களங்கப்படுத்தி அவனை அழித்துவிடும். (கப்பப்பாட்டு)

நூல் மத்ஹூம் நூல் மாலையும் அரபுத்தமிழ் காவியமோ என்று சொல்லும் அளவிற்கு தமிழால் நிறைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் இதில் ஆய்வுகளை மேற்கொள்ள முன்வரவேண்டும்.

அரபு மலையாள இலக்கியத்தைப் புகழின் உச்சத்திற்கு கொண்டு சென்றவர் மகாகவி மோயின் குட்டி வைத்தியர் ஆவார். இவருடைய பெரும்பாலான பாடல்களில் மலையாளச் சொற்கள் குறைவாகவும் தமிழ், அரபு மொழிச் சொற்கள் கூடுதலாகவும் இருக்கும். அத்துடன் இஷல் நயத்திற்காக சமஸ்கிருதம், ஃபார்ஸி, உருது, பியாரி முதலிய மொழிகளிலிருந்தும் சொற்கள் சேர்க்கப்பட்டிருக்கும். இவர் முதலில் இயற்றிய "பதறுல் முனீர் ஹுஸ்னுல் ஜமால்" என்ற காதல் காவியம் வரைமுறைகளுக்கு உட்பட்டு இயற்றப்பட்டிருப்பதால் அனைவரிடமும் புகழ் பெற்றுள்ளது. இக்காவியத்தின் துவக்கம் முஸ்லிம் தமிழ் இலக்கிய நடையுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளது.

"ஆதிதன் திருநாமத்தால் அடியன் இக்கவி துடர்த்தான்
நாதியான் புவி அமைத்தான் நாயனில் ஹம்து அணைத்தான்
காதிறின் திருபுறத்தால் ஹாத்திமுர்ரசூல் உதித்தான்
வேதியர்க்கவன் ஸலாத்தால் விரிகவெ ஸலாமுரைத்தான்"

இறைவனின் திருநாமத்தால் இக்காவியத்தை அடியேன் துவங்குகிறேன். இவ்வுலகைப் படைத்த நாயனான அல்லாஹ்வைப் புகழ்கின்றேன். அந்த வல்லமையாளன் இறுதி நபி(ஸல்) அவர்களை உதிக்கச் செய்தான். அந்த நபி(ஸல்) அவர்களின் மீது ஸலவாத்தும் ஸலாமும் உரைக்கின்றேன் என்பது இதன் உள்ளடக்கமாகும்.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
B.Ansar P: 53-67

மோயின் குட்டி வைத்தியர் இயற்றிய 'பத்றுல் குப்றா' என்ற 'பத்ர் கிஸ்ஸப்பாட்டு' கேரளாவின் கலை நிகழ்ச்சிகளில் அதிகமாக பாடப்படுகிறது. காலனியாதிக்கப் போராட்டங்களில் இப்பாடல்களின் செல்வாக்கினைக் கண்டு அஞ்சிய ஆங்கிலேயர்கள் இதற்குத் தடை விதித்தனர். 'படப்பாட்டு' என்ற படைப்போர் பாடல்கள் காலனியாதிக்க எதிர்ப்பாளர்களுக்கு உற்சாகத்தையும் காலனியாதிக்க ஆதரவாளர்களுக்கு அச்சத்தையும் அளித்ததே இது போன்ற ''படப்பாட்டுகள்" தடை செய்யப்படுவதற்கான முக்கிய காரணமாகும்.

"வாழ்த்தும் முத்து அணி கூட்டத்தாச திருதருள்
மஹ்மூதர் நபி வாழுன்னே
வாழ்க்கையும் வரிசை தரும் குடைதீனும்
மார்க்கவும் வளர் வீசுன்னே
தீர்த்தும் பூக்கு அனில சுகம்கொண்டு அரிகோரும்'
தீன் தீன் அம்மதம் பேசுன்னே
தீரத்தில் கித்தாலின்றெ ஆயத்தானதும்
திருநபிக்கு இறங்கி வன்னே"

அல்லாஹ் வாழ்த்தும் முத்து முஹம்மது (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் மதீனாவில் வாழ்ந்து வருகின்றனர். அதிகாரமும் வரிசை மிகுந்த தீனுல் இஸ்லாம் மார்க்கமும் வளர்ந்து வருகிறது. அந்த தீனை உறுதியாக பின்பற்றி அந்த வசந்தத்தில் நபித்தோழர்களும் தீனை பரப்புவதை விடாது செய்து வந்தனர். இந்நிலையில் போர் தொடர்பான வசனம் நபி(ஸல்) அவர்ளுக்கு இறக்கப்பட்டது. (பத்ர் கிஸ்ஸப்பாட்டு) மோயின் குட்டி வைத்தியரின் "மலப்புரம் கிஸ்ஸப்பாட்டு மதிநிதி மாலை" போன்ற நூல்களிலும் இத்தகைய நடையைக் காணவியலும்.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
B.Ansar P: 53-67

இஷல் தொங்கல்

”எத்தி நடந்தவர் மலயாளத்தில் இந்த கொடுங்கல்லூர் நகர் தானத்தில்
கத்தும் முடிவேந்தர் மணி தாஜுத்தீன் ஹாஜீ வசிய்யத்தும் குறியால் முந்தி
உத்தெ கொடுங்கல்லூர் முதல் மற்ற எல்லாம் ஓரோ தலம் நோக்கி பனா பைத்துல்லாஹ்
தெத்தாத் அரசர் சம்மதத்தால் இஸ்லாம் தீனை நடத்தினார் ஷரஅ நூலாம் ”

மலையாளக் கரையிலுள்ள கொடுங்கல்லூர் நகரத்தில் வந்திறங்கிய மாலிக் இப்னு தீனார் அவர்களின் தலைமையிலான குழுவினர் தாஜுத்தீன்(சேரமான் பெருமாள்) அவர்களின் இறுதி வேண்டுகோளை அரசரிடம் எடுத்துரைத்தனர்.அரசரின் அனுமதியோடு கொடுங்கல்லூரிலிருந்து பல ஊர்கள் வரை இவர்கள் மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்து பள்ளிவாசல்களைக் கட்டினர். (மலப்புரம் கிஸ்ஸா)

“அரபுத்தமிழ் பாரம்பரியத்திலிருந்து அரபு மலையாளம் ஆற்றல் பெற்றது என்பதற்கு பதினாறாம் நூற்றாண்டின் காழி முஹம்மது அவர்கள் முதல் பத்தொன்பதாம் ஆம் நூற்றாண்டின் மோயின் குட்டி வைத்தியர் வரை வந்த மாப்பிள்ளைக் கவிஞர்களின் படைப்புகள் எடுத்துக்காட்டாக உள்ளன.7 இம்மரபு இருபதாம் நூற்றாண்டின் துவக்க காலம் வரை நீடித்திருந்தாலும் நவீன மலையாளத்தின் சாய்மானத்தில் அரபு மலையாள இலக்கியம் அதன் உயிரோட்டமாக விளங்கிய தமிழ் மரபை இழந்தது.

முடிவுரை

மலையாள மொழியில் இல்லாத ஏராளமான பழந்தமிழ்ச் சொற்களும் தனிப்பட்ட உச்சரிப்புகளும் இலக்கண வேறுபாடுகளும் அரபு மலையாளத்தில் உண்டு என்பதற்கு அதன் இலக்கியம் சான்று பகர்கின்றது. எனவே

இவ்விலக்கியத்திற்கு உயிரோட்டமாக விளங்கிய அரபுத்தமிழ் குறித்த ஆய்வுகளை அறிஞர்கள் மேற்கொள்ள முன்வர வேண்டும். தமிழ் முஸ்லிம் புலவர்கள் ஏற்படுத்தியிருந்த வலுவான தொடர்புகளை மீண்டும் புதுப்பித்து வரலாற்றை மீட்க வேண்டும். மரபு சார்ந்த உறவுகளை வலுப்படுத்த இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் முன்வர வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1) KERALA CHARITHRAM SAMBAVANGALILOODE
 கேரள சரித்ரம் சம்பவங்ஙளிலூடெ, பி.சிவதாஸன், பக்கம் 29
2) ARABI-MALAYALAM MALAYAALATHINRE CLASSICAL BAAVANGAL
 அரபி மலயாளம் மலயாளத்தின்றெ கிளாசிக்கல் பாவங்ஙள், பி.எ. அபுபக்கர் பக்கம் 59,
3) VAIDYARUDA KAAVYA LOGAM
 வைத்யருட காவ்ய லோகம்,கெ.அபுபக்கர்,பக்கம் 27
4) MAPPILA PAATINRE VERUKAL THEDI
 மாப்பிளப்பாட்டின்றெ வேருகள் தேடி, ஹஸன் நெடியநாடு,பக்கம் 90
5) MAAPPILA BAASHA ARABI MALAYAALATHIL NINNU SHRESTA MALAYAALATHILLEKKU
 மாப்பிள பாஷ அரபி மலையாளத்தில் நின்னு ஸ்ரேஷ்ட மலயாளத்திலேக்கு பாலகிருஷ்ணன் வள்ளிக்குன்னு, பக்கம் 73
6) MAAPPILA SAAHITHYAVUM MALAYAALA BAAVANAYUM
 மாப்பிள சாஹித்யவும் மலயாள பாவனயும், வி. ஹிக்மத்துல்லாஹ் பக்கம் 80
7) MAAPPILA SAAHITHYAVUM MALAYAALA BAAVANAYUM
 மாப்பிள சாஹித்யவும் மலயாள பாவனயும், .வி. ஹிக்மத்துல்லாஹ் பக்கம் 69

Reference

1. ARABIC, ARWI AND PERSIAN IN SARANDIB AND TAMIL NADU, Tayka Shuayb Alim,Imamul Arus Trust,Chennai. 1993,
2. 155- VAGA MAULID KITHAAB (Arabi-Malayalam) (155 வக மவ்லிது கிதாப்), Ashrafi Book Center, Thirurangadi, Kerala
3. BADRUL KUBRA (Arabi-Malayalam)
 (பத்றுல் குப்றா மகாகவி மோயின் குட்டி வைத்தியர்), C:H.Mohamed & Sons, Thirurangadi, Kerala.Hijri 1405
4. MALAPPURAM KISSAPPAATTU MATHINITHI MAALAI (Arabi-Malayalam), (மலப்புரம் கிஸ்ஸப்பாட்டு மதிநிதி மாலை, மகாகவி மோயின் குட்டி வைத்தியர்),C:H.Mohamed & Sons, Thirurangadi, Kerala., Hijri 1403
5. BADRUL MUNEER HUSNUL JAMAAL (Arabi-Malayalam)
 (பத்றுல் முனீர் ஹுஸ்னுல் ஜமால், மகாகவி மோயின் குட்டி வைத்தியர்), C:H.Mohamed & Sons, Thirurangadi, Kerala.Hijri 1382

6. ISLAM VALARTHA TAMIL
(இஸ்லாம் வளர்த்த தமிழ்,ம.மு.உவைஸ்),உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,சென்னை, 1984

7. THENGAPATTANAMUM MAPPILLAI PPAATTUKALIN VERKALUM
(தேங்காய்பட்டணமும் மாப்பிள்ளைப் பாட்டுகளின் வேர்களும், தோப்பில் முஹம்மது மீரான்), எதிர் வெளியீடு,பொள்ளாச்சி, ஜூலை 2019

8. AARODUM CHOLLATHE
(ஆரோடும் சொல்லாதெ,தோப்பில் முஹம்மது மீரான்-மலையாளம்), Islamic Publishing Bureau,Kozhikode, Kerala,September 2015

9. ARABI-MALAYALAM MALAYAALATHINRE CLASSICAL BAAVANGAL
(அரபி மலயாளம் – மலயாளத்தின்றெ கிளாசிக்கல் பாவங்ஙள், பி.எ. அபுபக்கர்), Mahakavi Moyin Kutty Vaidyar Mappila Kala Academy , Kondotty, Kerala, September 2018

10. MAPPILA PAATINRE VERUKAL THEDI
(மாப்பிளப்பாட்டின்றெ வேருகள் தேடி,ஹஸன் நெடியநாடு), Vachanam Books, Kozhikode, Kerala, 2017 February

11. MAAPPILA SAAHITHYAVUM MALAYAALA BAAVANAYUM
(மாப்பிள சாஹித்யவும் மலயாள பாவனயும்,வி. ஹிக்மத்துல்லாஹ்) Book Plus,Chemmad, Thirurangadi, Kerala, November 2017

12. MAAPPILAPPATTU ORAAMUGA PADANAM
(மாப்பிளப்பாட்டு ஒராமுக படனம், பாலகிருஷ்ணன் வள்ளிக்குன்னு),Poonkavanam Publications, Kozhikode, Kerala. July1999

13. MAAPPILA BAASHA ARABI MALAYAALATHIL NINNU SHRESTA MALAYAALATHILLEKKU
(மாப்பிள பாஷ அரபி மலையாளத்தில் நின்னு ஸ்ரேஷ்ட மலயாளத்திலேக்கு), பாலகிருஷ்ணன் வள்ளிக்குன்னு, Vachanam Books, Kozhikode, Kerala, September 2018

14. ARABI-MALAYALAM PARYAAYA NIGANDU
(அரபி மலயாளம் பர்யாய நிகண்டு,இ.செய்னுத்தீன்) State Institute Of Languages, Thiruvananthapuram,June 1992

15. BADRUL KHUBRA
(பத்றுல் குப்றா- விளக்கம்,பி.கெ.அலி மவ்லவி கொடக்கல்லு), , Mahakavi Moyin Kutty Vaidyar Mappila Kala Academy , Kondotty, Kerala,2011 August

16. BADRUL MUNEER HUSNUL JAMAAL
(பத்றுல் முனீர் ஹுஸ்னுல் ஜமால் – விளக்கம், பி.கெ.அலி மவ்லவி கொடக்கல்லு),Mahakavi Moyin Kutty Vaidyar Mappila Kala Academy , Kondotty, Kerala, June 2011

17. MALAPPURAM PADAPPAATTU PAADAVUM PADANAVUM (மலப்புரம் படப்பாட்டு பாடவும் படனவும், பாலகிருஷ்ணன் வள்ளிக்குன்னு), Mahakavi Moyin Kutty Vaidyar Mappila Kala Academy , Kondotty, Kerala,March 2016

18. KUNJAAYIN MUSLIYAARUDE NOOL MADH KAVITHAYUM KAALAVUM
(குஞ்ஞாயின் முஸ்லியாருடெ நூல் மத்ஹ் கவிதயும் காலவும்),.பி.ஸக்கீர் ஹுஸைன்,Mahakavi Moyin Kutty Vaidyar Mappila Kala Academy, Kondotty, Kerala, September 2014

19. NOOL MAALA MOZHIYUM PORULUM
(நூல் மால, மொழியும் பொருளும்,பி.ஸக்கீர் ஹுஸைன்), Mahakavi Moyin Kutty Vaidyar Mappila Kala Academy,Kondotty, Kerala,October 2015

20. KAPPAPPAATTU ORU DHAARSHANEEKA PADANAM

(கப்பப்பாடு ஒரு தார்ஸனீக படனம், பி.ஸக்கீர் ஹுஸைன்) Mahakavi Moyin Kutty Vaidyar Mappila Kala Academy,Kondotty, Kerala,September 2014

21. VAIDYARUDA KAAVYA LOGAM
(வைத்யருட காவ்ய லோகம், கெ.அபுபக்கர்),Islamic Publishing Bureau, Kozhikode, Kerala, February 2007
22. KERALA CHARITHRAM SAMBAVANGALILOODE
(கேரள சரித்ரம், சம்பவங்ஙளிலுடெ, பி. சிவதாஸன்),Chintha Publishers, Thiruvananthapuram, Kerala, Kottayam, August 2007
23. MALAYAALAM MAATRAVUM VALARCHAYUM (மலயாளம் மாற்றவும் வளர்ச்சயும், கெ.எம். பிரபாகர வாரியர்), Vallathol Vidhyapeedam Sukapuram, Kerala
24. BAASHA PADANANGAL
(பாஷா படனங்ஙள், M.R.ராகவ வாரியர்),Sahithya Pravathaka Co-Operative Soceity Ltd, Kottayam , Kerala, April 2013
25. MALAYALAM BAASHAYUM SAAHITHYAVUM
(மலயாளம் பாஷயும் சாஹித்யவும், எஸ்.ராஜசேகரன்), Chintha Publishers, Thiruvananthapuram, Kerala, December 2010

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr.Hafiz K.A.Ahamadhullah Saqafi & Dr. A.Abdul Azeez P:68-76

IMMENESE CONTRIBUTION OF ALIMS TOWARDS ARAB TAMIL LITERATURE

அரபுத் தமிழ் இலக்கியத்திற்கு ஆலிம்களின் பெரும்பங்கு

1. Dr.Hafiz.K.A.AHAMADHULLAH SAQAFI M.A.,M.Phil.,PhD
Assistant Professor, Department of Arabic,
Sadakathullah Appa Arts and Science College, Rahmath Nagar, Tirunelveli.
e.mail: ahmadhtas1979@gmail.com, Mobile: 8122470507

2. Dr. A. Abdul Azeez MA., M Phil., B.Ed., SET., Ph.D.,
Assistant Professor, PG and Research Department of History
Sadakthullah Appa College Rahmath Nagar, Tirunelveli.
e.mail: azesahamed81@gmail.com, Mobile: 9629560146

Abstract:

If Arabic-Tamil has the pride that none of the classical languages have, it is not too much because even though it is our language, it unleashes the imaginary horses while telling its literary truth, and the strategy of attracting the attention of the reader by saying obscene words with double meanings - words directly or as leaf hiders can be seen in the way of reading, but we cannot find it in our Arabic-Tamil. The reason is that the phonetic form of the Arabic Tamil language is the mother tongue but the written form is the holy divine language, and the people who introduced it to the world as texts and verses and broke the sky in it are the good people who followed the Qur'an and Hadith. The first attempt of this International Seminar to add to the modern age the dedication of the players who stood in the vast field from Maktabu Subjects to Tafseer, Hadith, Fiqh, Ethics, Spirituality, Home Science, Children Care, History etc. Can be considered as international cups. Alhamdulillah!

Keywords : Sufi, Thaika , Vali, Lebbai, Sura , Hijiri, Immam, Madarasa, Maqtab, Mufti Munajath, Alim

முன்னுரை

செம்மொழிகள் இரண்டின் சங்கமத்தால் பிறந்த பிள்ளை மொழி என்ற பெருமையைத் தாங்கி நிற்கும் அர்வி மொழி இலக்கண - இலக்கியம் பயின்ற ஆன்றோர்கள் முதல் அடுப்பூதும் அன்னையர் வரை அனைவரின் நாவுகளிலும், பேனாக்களிலும் நடனமாடியக் காலம் மலையேறி அர்வி மொழியா...ஆ? என்று வியந்து!!! வலைதளங்களில் தேடிப் பார்க்கும் நிலை இன்றையத் தலைமுறைக்கு நேர்ந்துள்ளது. செம்மொழிகள் எவற்றிற்கும் கிடைக்காதப் பெருமை அரபுத்தமிழுக்கு உள்ளதென்றால் அது மிகையல்ல காரணம் எம்மொழியானாலும் தனது இலக்கிய நயத்தைக் கூறுமிடத்துக் கற்பனைக் குதிரைகளைக் கட்டவிழ்ப்பதையும், இருபொருள் தரும் ஆபாச வார்த்தைகளை - வாசகங்களை நேரடியாக அல்லது இலை மறைக்கனியாகக் கூறி படிப்பவரின் கவனத்தை ஈர்க்கும் யுக்தியையும் வாசிப்பின் வழிநெடுகிலும் பார்க்க முடியும். ஆனால் அன்புத்தமிழாம் நம் அரபுத் தமிழில் மருந்துக்கும் அதை நம்மால் காண முடியாது. காரணம், அரபுத் தமிழ் மொழியின் ஒலிவடிவம் அன்னை மொழியானாலும் வரிவடிவம் புனித இறைவேதமொழியாக இருப்பதும், அதை உரைகளாக, பாக்களாக இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தி அதில் விண்ணை முட்டியவர்கள் குர்ஆன் - ஹதீஸ்வழி நடந்த நன்மக்களுமே ஆவர்கள். அந்நல்லோர்கள் மக்தபு பாடங்கள் முதல் த.்ப்ஸீர், ஹதீது, ஃபிக்ஹு, பண்பியல், ஆன்மீகம், மனையியல், குழந்தைப் பராமரிப்பு, வரலாறு போன்ற அகண்ட மைதானத்தில் மார்க்கநெறி பிரளாமலும், அன்னைத் தமிழ் மணம்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr.Hafiz K.A.Ahamadhullah Saqafi & Dr. A.Abdul Azeez P:68-76

மாறாமலும் நிலைநின்று ஆடிய ஆட்டநாயகர்களின் அர்ப்பணிப்பை நவீன காலத்தோர்க்கு சேர்க்கும் இப்பன்னாட்டுக் கருத்தரங்கின் முதல் முயற்சியே, அம் மாமேதைகளின் ராஜவெற்றிக்கான மணிமகுடமாக, அரபுத்தமிழ் பொன் எழுத்துக்களுக்குக் கிட்டிய சர்வதேசக் கோப்பைகளாகவே கருதமுடிகின்றது. அல்ஹம்துலில்லாஹ்!

தப்ஸீர்

ஷேக் முஸ்தபா வலீ (ரஹ்) (1252-1305 AH/1836-1887AD) அவர்களின் பத்ஹுர்ரஹ்மான் ஃபீ தர்மத்தின் த.ஃப்ஸீரில் குர்ஆன் என்ற நூல் முதல் முதலில் வெளியான அரபுத்தமிழ் மொழிபெயர்ப்பாகும். இந்நூலில் கடைசி 5 அத்தியாயங்கள் 1291 AH /1874 AD -ல் 653 பக்கங்களுடன் வெளியிடப்பட்டன.[1]

புதூஹாத்தூர் ரஹ்மானிய்யா ஃபீ தர்ஜமத்தி தப்சீரி கலாமிர் ரப்பானிய்யா என்ற நூல் சதக்கத்துல்லாஹ் அப்பா ரஹ் அவர்களின் கொள்ளுப் பேரரான காயல்பட்டினம் ஹபீபு முஹம்மது ஆலிம் ரஹ் பெருந்தகையால் அரபுத் தமிழில் எழுதப்பட்டு, பம்பாய் ஹுசைனிய்யா பிரஸில் அச்சிட்டு ஹிஜ்ரி 1296/கிபி1878-ல் முதலில் வெளியிடப்பட்டது.[2] இந்நூலில் ஒவ்வொரு வரியின் அடியிலும் அந்தந்த வரியின் தமிழாக்கம் அரபுத் தமிழிலும், ஒவ்வொரு பக்கத்தின் ஓரத்திலும் விரிவான விளக்கங்கள் தொகுக்கப்பட்டு, பக்கத்தில் மூன்றில் ஒரு பகுதி அவ்விளக்கங்களால் நிரம்பியிருப்பது[3] இந்நூலின் தனிச்சிறப்பாகும். சதக்கத்துல்லாஹ் அப்பா ரஹ் அவர்களின் வழித்தோன்றலான ”சின்ன நூஹ்” என்கிற நூஹ் லப்பை ஆலிம் (ரஹ்) (ஹிஜ்ரி 1246-1323/கிபி 1830-1905) அவர்களால் எழுதப்பட்ட பத்ஹுல் கரீம் என்ற அரபு தமிழ் தப்ஸீர் முதலில் இரண்டு தொகுதிகளாகப் பம்பாயில் ஹிஜ்ரி 1299/கிபி1881 ஆம் ஆண்டு அச்சிடப்பட்ட இந்நூல்[4], தப்ஸீர் ஜலாலைனியின் நடையில், இப்னு அப்பாஸ் (ரலி), இப்னு அரபி (ரஹ்) இருவரின் குர்ஆன் விளக்கவுரைகளையும் ரூஹுல் பயான், காஸின் போன்ற விரிவுரையாளர்களின் கருத்துக்களையும் இது தாங்கியுள்ளது. புகழ் மிக்க இந்த விரிவுரையை அடிப்படையாக வைத்தே பின்னர் தமிழில் திருக்குர்ஆனுக்கு விளக்க உரைகள் எழுதப்பட்டன. காயல்பட்டணம் மஹ்தூம் பள்ளியில் நல்லடக்கம் செய்யப்பட்ட இவர்கள் எழுதிய பிற நூல்கள் பத்ஹுல் மஜீத், துஹ்பதுல் கிராம், நபஹாத்துல் அம்பர், மின் ஹதுல் ஜவாத், நபஹாத்துல் இத்ரிய்யா பீ-தர்ஜும தில் வித்ரிய்யா, பத்ஹுல் முயீனின் - அரபுத் தமிழ் மொழி பெயர்ப்பு போன்றவையாகும்[5]. மேலும் இவர்கள் இத் தப்ஸீரை சுருக்கி ஃபத்ஹுர் ரஹீம் என்ற ஆன்மீகக் கருத்துக்கள் நிறைந்த மற்றொரு தப்ஸீரைத் தொகுத்தார்கள். இது ஆறு பிரிவுகள் அடங்கிய 288 பக்கங்களில் ஹிஜ்ரி 1304 ல் மும்பையில் அச்சிடப்பட்டுள்ளது.[6] இலங்கைச் சுலைமான் இப்னு முஹம்மது (ரஹ்) அவர்கள் ரஹ்மத்துல் மன்னான் என்ற பெயரில் அரபுத் தமிழில் த.ஃப்ஸீர் எழுதியுள்ளார்கள்[7]. காயல்பட்டணம் ஹாபிழ் முஹம்மது அல்காஹிர் (ரஹ்) எழுதிய த.ஃப்ஸீர் கி.பி. 1884-ல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. காயல்பட்டணம் ஆலிம் பாழில் நூஹ் ரஹ் எழுதிய த.ஃப்ஸீர் கி.பி. 1911-ல் வெளியிடப்பட்டுள்ளது.[8]

அதேபோல் குர்ஆனில் சூரா யாசின், சூரா ரஹ்மான் போன்ற அத்தியாயங்கள் அரபுத் தமிழில் இந்தியா, இலங்கைத் தமிழ் முஸ்லிம்களிடம் இருப்பதைக் காணலாம். அல்லாமா யூசுப் வலீ (ரஹ்) அவர்கள் சிம்து சிப்யானில் யாசீன் சூராவுக்கு சுமார் 16 பக்கங்களிலும்[9], ஜவாஹிருல் யகீனில் க.ஃப், யாசீன், துகான், ரஹ்மான், வாகிஆ போன்ற சூராக்களை 136 பக்கங்களிலும் தப்ஸீர் செய்துள்ளார்கள்[10]. இமாம் ஷிஹாபுத்தீன் ரமலீ ரஹ் அவர்களின் ஃபாயிதத்துல் குர்ஆன் என்ற அரபு நூலை அரபுத் தமிழில் இலங்கை ஷேக் உஸ்மான் என்பவர்கள் மொழிபெயர்த்துள்ளார்கள் என்று கொழும்பைச் சார்ந்த கமாலுதீன் என்ற நூலாசிரியர் பெர்பெரைன் (டீநசடிநசலெ) என்ற தங்களின் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[11] கி.பி. 1923 (ஹிஜ்ரி 1342) -ல் அரபுத் தமிழ் மொழிபெயர்ப்பான துரருத் த.ஃபாஸீர், புதுநகரம் கதீப், ஸயீத் முஹம்மது ஆலிம் ஸாஹிப் அவர்களால் எழுதப்பட்டு, அதன் முதல் ஐந்து பகுதிகள் (ஜுஸ்வு) மட்டும் வெளியிடப்பட்டது. மற்ற பகுதிகள் வெளியிடப்பட்டதா என்பதை அறிய இயலவில்லை என்று தைக்கா ஷுஐப் ஆலிம் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.[12]

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
Dr.Hafiz K.A.Ahamadhullah Saqafi & Dr. A.Abdul Azeez P:68-76

ஹதீஸ்

ஹதீஸ் துறையில் அரபுத் தமிழ் இலக்கியத்தில் தமிழ் முஸ்லிம்களின் பங்களிப்பு அலாதியானதாகும். இமாம் சதக்கத்துல்லாஹ் அப்பா (ரஹ்) அவர்களின் இளைய சகோதரர் ஷாம் ஷிஹாபுதீன் வலீ (ரஹ்) (1044-1121A1/1634 - 1709 AD)[13] அவர்கள் அரபுத் தமிழில் ஆயிரத்துக்கதிகமானப் பாமாலைகளை இயற்றியுள்ளார்கள். அனேகப் பாமாலைகள் கையெழுத்துப் பிரதிகளாக இருந்து செல்லரித்து அழிந்துவிட்டன.[14] வெளிவந்துள்ளப் பாமாலைகளான ரஸூல் மாலை, அதபு மாலை, நெஞ்சறிவு மாலை, தோகை மாலை, பெரிய ஹதீது மாணிக்க மாலை, சின்ன ஹதீது மாணிக்க மாலை, நான்குயார்கள் மாலை, நாயதுல் இக்திஸார் மாலை, உலமா மாலை, நபிமாலை, ஸூரதுல்குர்ஆன் மாலை, புத்திமாலை, கல்யாண பித்அத்து மாலை, நஸீஹத்து மாலை, குத்பா மாலை, ஹனபி மத்ஹபு மாலை, ம.்.ரிபா மாலை, புகையிலை விலக்கு மாலை, அத்கான் மாலை, மின்ஹாஜ் மாலை, தன்பாக் மாலை, கந்தூரி பித்அத்து விலக்கு மாலை , மீறான் மாலை, ஹதீது மாலை போன்றவற்றில்,[15] சுமார் 1119 ஹதீஸ்களை முதன் முதலில் பெரிய ஹதீது மாணிக்க மாலையிலும், பின் 608 ஹதீஸ்களை சின்ன ஹதீது மாணிக்க மாலையிலும் பாமாலைகளாகத் அரபுத் தமிழில் யாத்தளித்துள்ளார்கள்.[16] அரபியிலும் அரபுத் தமிழிலும் பல நூல்களை எழுதியுள்ள மாப்பிள்ளை லப்பை ஆலிம் (ரஹ்) (1232-1316AH/1816-1898AD)[17] அவர்களின் படைப்புகளில் பத்ஹுஸ் ஸலாம், பத்ஹுத் தய்யான், பத்ஹுல் மதீன், மஙானீ, நஙீமத்துஸ் ஸாலிகீன், மனாகிபுல் மவாஹிபு, மவாஹிபுல் மஜீத், அஸ்றாறுஸ் ஸலாத், அஸ்கறுல் மவாயிழ், ராத்திபதுல் ஜலாலிய்யா, குத்பா நூறானிய்யா, குத்பா ராயிய்யா , மி.்.ராஜ் குத்பா, ஹத்யா மாலை, தலைபாத்திஹா, ம.்.ரி.்.பத்து தாலாட்டு, தோழிப் பெண்பதிகம்[18] போன்றவற்றில் நபி மொழிகளை அரபுத் தமிழில் பாமாலைகளாக தொகுத்து, அஹ்ஸனுல் மவாயிள் வ அஸ்யனுல் மலா.்.பிள் என்ற பெயரிட்டார்கள். அதன் 380 வசனங்களில், ஒவ்வொன்றும் ஒரு ஹதீஸின் கருத்தை உள்ளடக்கியுள்ளது. மேலும் மாப்பிள்ளை லப்பை ஆலிம் அவர்களின் ஹதீஸ்களின் பாமாலை மவ்இளதுன் முஸய்யனா வ முஎ.்.ப்பஎத்துன் முஹஸ்ஸனா என்ற 53 ஹதீஸ்களுள்ள அரபுத் தமிழ் கஸீதா கிபி 1951-ல் வெளியிடப்பட்டது.[19] என்று தைக்கா ஷுஜப் ஆலிம் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இமாம் பைஹகீ (ரஹ்) அவர்களின் ஷு.்.புல் ஈமான் என்ற நூல், கமாலுதீன் ஆலிம் புலவர் அவர்களாலும், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொன்மொழிகளில் 1777 ஹதீஸ்களுள்ள .்.பத்ஹுல் மஜீத் .்.பீ ஹதீஸிந் நபிய்யில் ஹமீது (ஸல்) என்ற ஹதீஸ் நூல் சின்ன நூஹ் ஆலிம் (ரஹ்) அவர்களாலும் அரபுத் தமிழில் உரைநடையாகவேத் தொகுக்கப்பட்டுள்ளன.[20] மேலும் ஆ.யு. ஷாஹுல் ஹமீது அண்ட் சன்ஸ் பதிப்பகத்தாரால் நுஸ்ஹதுல் ஹதீஸ் வ .்.பத்ஹுல் மஜீத் என்ற அரபுத் தமிழ் ஹதீஸ் நூல் 1983 ல் வெளியிடப்பட்டது. ஆனால் அந்நூல் ஆசிரியரின் பெயர் அச்சிடப்படவில்லை.[21]

பிக்ஹு

ஒவ்வொரு முஸ்லிமும் தன்னுடைய வாழ்க்கையில் இஸ்லாமிய மார்க்கச் சட்டத் திட்டங்களைப் பேணி நடப்பது கட்டாயக் கடமையாகும். எனவே அன்றிருந்த இஸ்லாமிய பேரறிஞர்கள் அனைத்து மக்களும் படித்து மார்க்கத்தைப் பேணி நடக்க வேண்டும் என்பதற்காக இஸ்லாமிய மார்க்கச் சட்டங்களை அரபுத் தமிழில் வழங்கி இஸ்லாமிய சமூகத்திற்குப் பல அர்ப்பணிப்புகளை செய்துள்ளார்கள். கீழக்கரைக்கு அருகிலுள்ள முதுகுளத்தூரைச் சார்ந்த முஹம்மது இப்ராஹீம் லப்பை அவர்கள் இயற்றிய அல்.்.பத்ஹுர் ரப்பானீ .்.பில் .்.பிக்ஹிந் நு.்.மானீ என்ற ஹன.்.பீ மத்ஹபுசட்ட அரபுத் தமிழ் நூல் ஹிஜ்ரி 1340 .்.கிபி 1921 -ல் வெளியானது.[22]

இமாம் ரா.்.பிஈ (ரஹ்) அவர்களின் கிதாபுல் முஹர்ரர் என்ற ஷா.்.பிஈ மத்ஹபு நூல், அரபுத் தமிழில் 500 பக்கங்களில் கையேட்டுப் பிரதியாக உள்ளது. ஆனால் நூல் ஆசிரியர் பெயர் அதில் குறிப்பிடப்படவில்லை.[23] ஜைனுத்தீன் மக்தூம் தங்கள் (ரஹ்) அவர்களால் எழுதப்பட்ட .்.பத்ஹுல் முஈன் என்ற ஷா.்.பிஈ மத்ஹபு அரபு நூல், மஹான்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr.Hafiz K.A.Ahamadhullah Saqafi & Dr. A.Abdul Azeez P:68-76

அஹ்மது முஹைதீன் அவர்களால் அரபுத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, மதராஸில் ஹிஜ்ரி 1384/கிபி 1964 இல் வெளியிடப்பட்டது.[24] மேலும் இதே நூலை அர்வி மு.ஃபஸ்ஸிர் நூஹ் லப்பை ஆலிம் (ரஹ்) அவர்களும் அரபுத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்கள்.[25] பிராமண ஐய்யராக இருந்து பின் இஸ்லாமைத் தழுவிய நெல்லிக்குப்பம் மௌலானா அப்துல் ரஹ்மான் (ரஹ்) அவர்கள் மதராசில் மதரஸா யூசுப்பியாவில் மார்க்கக் கல்வியைக் கசடறக் கற்று அரவி மொழிக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியதாகும். துஹ்.ஃபதுல் மு.ஃமினீன், ஸிராத்துந் நஜாத், சீரத்துல் குப்ரா, துஹ்.ஃபதுல் ஹிந்து, அல்-கவ்லுல் ஜமீல் போன்ற அவர்களின் அரும் படைப்புகளுள் ஹன.ஃபி மத்ஹபின் .ஃபத்வா நூலான .ஃபதாவா ஆலம்கீரி அரபு நூலை, அரபுத் தமிழில் மொழிபெயர்த்தமைக்கு இஸ்லாமிய தமிழ் சமூகம் பெரும் நன்றிக்கடன்பட்டுள்ளது. இவர்களது பெரும்பாலான படைப்புகள் இவர்களின் நெருங்கிய நண்பர் ஆ.யு.ஷாஹுல் ஹமீது அவர்களின் அச்சகத்திலிருந்தே வெளியாகியுள்ளன.[26]

மாப்பிள்ளை லப்பை ஆலிம் அவர்களின் .ஃபத்ஹுத் தய்யான் .ஃபீ .ஃபிக்ஹி கைரில் அத்யான் என்ற ஷா.ஃபிஈ மத்ஹபு அரபுத் தமிழ் நூல், ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு ஆப்ரிக்கா மற்றும் கிழக்கு நாடுகளில் முஸ்லிம்களின் பாடத்திட்டத்தில் இருந்துள்ளது.[27] மார்க்கச் சட்டத் திட்டங்கள் பற்றிச் சுருக்கமாக .ஃபத்ஹுல் மத்தீன், .ஃபத்ஹுஸ் ஸலாம், .ஃபத்ஹுத் தய்யான் ஆகிய நூல்களை அரபுத் தமிழ் எழுதிய இவர்கள் மனானீ என்ற விரிவான ஒரு நூலையும் எழுதினார்கள்.[28] அந்நூல் மனானீ முலஹித் திப்யான் .ஃபீ ஷரஹி மஆனி .ஃபத்ஹித் தய்யான் என்ற பெயரில் .ஃபத்ஹுத் தய்யானுக்கு விரிவுரையாக உள்ளது. இந்நூல் அரபு மலையாளத்தில் சி என் அஹ்மது மவ்லவி அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு Mahattaaya Maapillai Saahitya Paaramparyam (மதிப்பிற்கு மாப்பிள்ளையின் இலக்கிய பாரம்பரியம்) என்ற பெயரில் கேரளா - கோழிக்கோட்டில் அச்சிடப்பட்டுள்ளது.[29]

அஜ்மியான் ஆலிம் என்று பிரபலமான, பள்ளபட்டி மவ்லவீ முஹம்மது ஹுஸைன் ஆலிம் (1343/1924) அவர்கள் தொகுத்த ஸலாத்துல் முஸா.ஃபிர் என்ற அரபுத்தமிழ் நூல், ஹிதாயா, அத்துர்ருல் முக்தார், ஷரஹுல் விகாயா போன்ற பெரும்பெரும் அரபு நூல்களிலிருந்து தொகுக்கப்பட்ட ஹன.ஃபி நூல் ஆகும்.[30] இந்நூலாசிரியரின் கொள்ளுப்பேரர் குர்ஆனின் குரல் ஆசிரியர் முப்தி அஷ்ர.ஃப் அலி ஆலிம் ஆவார்கள்.

கீழ்க்கரை தைக்கா சாஹிபு வலீ (ரஹ்) அவர்களின் மாணவரும், சிறந்த மார்க்க மேதையும், இறைநேசருமான 19-ம்நூற்றாண்டில் அம்மாபட்டினத்தில் பிறந்த முஹம்மது யூசுப் லப்பை ஆலிம் அவர்கள் ஹன.ஃபீ சட்ட நூல்களில், பெரியவர்களுக்கு ஜவாஹிருல் யாகீன், சிறியவர்களுக்கு சிம்து சிப்யான் என்ற அரபுத் தமிழ் நூல்களையும் யவாகீதுல் .ஃபலாஹ், ஜவாஹிரும் ந.ஃபீஸா , ஷம்ஸுல் ஈமான் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்கள். [31]

"கொழும்பு ஆலிம்" என்று அழைக்கப்படும் செய்யது முஹம்மது (ரஹ்) அவர்கள் தொகுத்த துஹ்.ஃபதுல் அத்.ஃபால், மின்ஹத்துல் அத்.ஃபால் , ஷாபி - ஹனபி நூல்களும், தர்பியத்துல் அத்.ஃபால் .ஃபீ ரஸ்தில் அ.ஃமால் என்ற நூலும், முப்தி முஹம்மது தமீம் (ரஹ்) அவர்களின் உம்ததுஸ் ஸிப்யான் என்ற ஷா.ஃபிஈ மத்ஹபு நூலும், முதுகுளத்தூர் முஹம்மது இப்ராஹிம் (ரஹ்) அவர்களின் கி.ஃபாயத்துல் கில்மான் .ஃபீ திராயத்தில் ஈமான், பிஷாரத்துல் இக்வான் .ஃபீ கிராஅத்தில் குர்ஆன் என்ற இரு நூல்களும், ஷாம் ஷிஹாபுத்தீன் (ரஹ்) அவர்களின் ஸலாத்துல் அர்கான் என்ற நூலும், கீழக்கரை லப்பை கனீ ஸாஹிபு அவர்களின் தஸ்ஹீலுல் வில்தான் என்ற அகீதா மற்றும் .ஃபிக்ஹ் நூலும் மக்தப் மதரஸா குழந்தைகளுக்கான அரபுத் தமிழ் நூல்களாகும். [32]

அதிராம்பட்டினத்தில் "சூ.ஃபி ஹஜ்ரத்" என்று புகழ்பெற்ற ஷேக் அப்துல் காதிர் ஆலிம் (ரஹ்) (கி.பி.1855/1934) அவர்கள் அரபியிலும், அரபுத் தமிழிலும் இருபதுக்கும் மேற்பட்ட நூல்கள் இயற்றியுள்ளனர். அவற்றில், மஜ்மஉல் கவாயித், முக்தாருல் மஸாயில் என்ற அரபுத்தமிழ் .ஃபிக்ஹ் நூல்களில், மஜ்மஉல் கவாயித் பிரபலமானதாகும். அதில் மார்க்கச் சம்பந்தப்பட்ட எடை, நிறை, காலம் ஆகியவை பற்றித் தாமே அரபு நாடு சென்று நேரில் ஆராய்ச்சி செய்து குறிப்பிட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.[33] பாக்கியாத்துஸ்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr.Hafiz K.A.Ahamadhullah Saqafi & Dr. A.Abdul Azeez P:68-76

ஸாலிஹாத்தின் பட்டமளிப்பு விழாவில், ”நான் இன்று இரண்டு சட்ட நிபுணர்களை வெளியில் அனுப்புகிறேன்” என்று அ∴லா ஹஜ்ரத் (ரஹ்) பெருமிதம் கொண்ட இருவரில் ஒருவரான[34] வீரசோழன் நைனார் முஹம்மது ஹஜ்ரத் (ரஹ்) அவர்கள் அரபுத் தமிழில் ஜவாஹிருல் மஸாயில் என்ற அரிய ∴பிக்ஹ் நூலை எழுதியுள்ளார்கள்.[35]

மி∴ப்தாஊஹஸ் ஸுஃப்ஹான் என்ற அரபுத் தமிழ் ஹன∴பீ ∴பிக்ஹ் நூலும்,[36] நெல்லிக்குப்பம் மௌலானா அப்துல் ரஹ்மான் (ரஹ்) அவர்களின் இல்முல் ∴பராயிள் என்ற வாரிசு உரிமைச் சட்ட நூலும் [37] பள்ளிகொண்டா ஜியாவுதீன் அஹ்மத் அமானி ஹஜ்ரத் (கிபி 1893∴1968) அவர்களின் உம்தத்துல் அதில்லத் என்ற தொழுகைக்கான நேரம் கணக்கிடல் தொடர்புடைய நூலும், [38] ஷாம் ஷிஹாபுத்தீன் வலி (ரஹ்) அவர்களின் ஹனபி மத்ஹபு மாலை, குத்பா மாலை [39] நூல்களும் அரபுத் தமிழில் உள்ள ∴பிக்ஹ் நூல்களாகும்.

ஆன்மீகம் மற்றும் பண்பியல்

இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் இயற்றிய பிரபல அரபுப் பண்பியல் நூல்களான பிதாயத்துல் ஹிதாயாவை- நேர்வழியின் ஆரம்பம் என்ற பெயரிலும் மின்ஹாஜுல் ஆபிதீனை, மி∴ராஜுல் ஆரி∴பீன் ∴பீ தர்ஜமத்தி மின்ஹாஜில் ஆபிதீன் என்ற பெயரிலும் அரபுத் தமிழில் கீழக்கரை செய்யிது முஹம்மது ஆலிம் புலவர் அவர்கள் மொழிபெயர்த்துள்ளார்கள். இவ்விரு நூல்களில் இரண்டாவது நூல் ஷாஊஹல் ஹமீது அண்ட் பிரஸ் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.[40] இமாம் இப்னு ஹஜர் ஹைதமீ (ரஹ்) அவர்களின் அல் ஸவாஜிர் என்ற பிரபல ஆன்மீக நூல் தஸ்கியாதுல் ஹவாதிர் ∴பீ தர்ஜமத்தில் ஸவாஜிர் என்று அரபுத் தமிழில் கையேட்டுப் பிரதியாக உள்ளது. ஆனால் அதன் நூலாசிரியர் பெயர் அறியப்படவில்லை. [41]

ஷாம் ஷிஹாபுத்தீன் (ரஹ்) அவர்களின் ம∴ரி∴பத் மாலை, மின்ஹாஜ் மாலை போன்றவை சூபி சம்பந்தப்பட்ட அரபுத் தமிழ் நூல்களாகும்.[42] மேலும் இஸ்லாமியப் பண்பியல், மனையியல், குழந்தைகள் வளர்ப்பு குறித்த பெண் புத்தி மாலை, ம∴ரி∴பத் தாலாட்டு, திருமணங்களில் நடக்கும் அனாச்சாரங்களைச் சாடும் விதமாக கல்யாண பித்அத் மாலை பெண் வரதட்சணை கொடுமைக்கு எதிரான தோகையர் மாலை போன்றவற்றை அரபுத் தமிழில் அழகாய் இச்சமூகத்திற்கு வழங்கி உள்ளார்கள்.[43]

மாப்பிள்ளை லப்பை ஆலிம் (ரஹ்) அவர்களின் மனைவி பொன்னாலானக் காசு மாலை வேண்ட, இவர்கள் 33 செய்யுள்கள் கொண்ட[44] ஹதியா மாலை என்ற பெயருடன் பெண்களுக்கான அறிவுரைகள் அடங்கிய நூல் ஒன்றை எழுதி, “இது உடலுக்கு மட்டுமல்லாது ஆன்மாவுக்கும் ஆபரணமாகும்““ என்று கூறி அவருக்கு “ஹதியாச்’ (அன்பளிப்பு) செய்தார்கள். அவற்றைத் தவிர, அல்லாஹ்விடம் முனாஜாத் செய்யப்படும் தலைபாத்திஹா என்ற நூலும்,[45] பெற்றோர் தம் பெண் பிள்ளைகளுக்கு மார்க்கத்தோடு கூடிய சிறந்தக் கல்வியைத் தருவதின் அவசியம் குறித்து தோழிப்பெண் பதிகம் என்ற நூலும்,[46] ஷாஊஹல் ஹமீது அண்ட் ஸன்ஸ் வெளியீடுகளான. உஸ்மான் நைனார் லப்பை ஆலிம் புலவரின் மஜ்மூஅத் நாமா 6 பிரிவுகள், அய்யம்பேட்டை அப்துல் ரஸ்ஸாக் அவர்களின் கல்சர் நாமா -1888, அஹ்மத் லப்பை ஆலிமின், தாய் - மகள் ஏசல் -1929 நூல்களும்[47] அரபுத் தமிழில் பெண்களுக்கான உபதேசப் பாமாலைகளாகத் திகழ்கின்றன.

“தமிழகத்து ராபியத்துல் அதவிய்யா’’, “சூபிக்கவி ஆசியாம்மாள்’’, “மேல்வீட்டு உம்மா’’ என்றழைக்கப்பட்ட கீழக்கரை மணியெனுமோர் செய்யிது ஆசியாம்மாள் (ரஹ்) (1285-1369∴1868-1949)[48] அவர்களின் மெஞ்ஞானப் பாடல்களில் மெய்ஞ்ஞானத் தீப இரத்தினம், மாலிகா இரத்தினம் ஆகியன அரபுத் தமிழில் அச்சிடப்பட்டுள்ளன. அவற்றுள் 14 பாடல்கள் தொகுக்கப்பெற்று”சூபி ஞானி செய்யிது ஆசியா உம்மாவின் மெய்ஞ்ஞானப் பாடல்கள்’’ என்ற நூலாக இத்ரீஸ் மரைக்காயரால் தமிழில் பதிப்பிக்கப்பட்டது.[49] இம்மெய்ஞ்ஞானத் தீபரத்தினத்தில் பைத்துகள், முனாஜாத்துகள், கண்ணிகள், வணக்கங்கள், கும்மி, மழைப்பாட்டு, மாலைகள், இன்னிசை, அடைக்கலம், ஆனந்தக் களிப்பு, பிரார்த்தனை, தாலாட்டு எனும் தலைப்புக்களில் பாடல்களின் கரு உருப்பெற்றுள்ளன.[50]

ஆன்மீகம் பாடும் அரபுத் தமிழ் பாமாலையான கீழக்கரை பனீ அஹ்மது மறைக்காயரின் மகனார் சையத் முஹம்மது அவர்களின் நூர் நாமா, [51] இறைக் காதலையும், நபிக் காதலையும் பேசும், மாப்பிள்ளை லப்பை ரஹ் அவர்களின் ம.ஃரி.ஃபத் ஆராட்டு, மவத்தது ரப்பில் பைத்தி .ஃபீ மஹப்பத்தி அஹ்லில் பைத்தி [52] என்ற நூல்களும், கீழக்கரை தைக்கா ஸாஹிபு வலீ (ரஹ்) அவர்களின் ஷரீஆத் மாலை , தரீகத் மாலை, ஹகீகத் மாலை என 40 நீண்ட செய்யுள்கள் கொண்ட அரபுத் தமிழ் ஆன்மீக மாலைகளும், [53] தமிழகத்தில் போர்ச்சுகீசியத் தாக்கத்திற்குப் பின் முதலில் எழுதப்பட்ட மெஞ்ஞானப்பா, தக்கலை பீர்முஹம்மது வலீ (ரஹ்) (984-1075.ஃ.1576-1664) அவர்களின் ம.ஃரி.ஃபத் மாலை, திருநெறிநீதம் ஆகிய பாக்கள் சூ.ஃபிய ஆழ்ந்தக் கருத்துக்களை எடுத்தியம்பும் அரபுத் தமிழ் நூல்களாகும்.[54]

அகீதா

இஸ்லாமிய கொள்கைகளை எடுத்துக் கூறும் துஹ்.ஃபத்து இளாமில் .ஃபவாயிதி .ஃபீ நிளாமில் அகாயித் என்ற அரபுத் தமிழ் நூல் நபிகளாரின் பாரம்பரியத்தில் வந்த மகான் முஹ்மூது தீபி (ரஹ்) அவர்கள் இயற்றியதாகும். இந்நூல் இமாம் கஸ்ஸாலி (ரஹ்), இமாம் ஷெய்குல் அக்பர் இப்னு அரபி (ரஹ்) போன்றோரின் அரபு மூல நூல்களிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூலின் கடைசி பிரதி மஜீதிய்யா - பிரஸ், மதராஸ் மூலம் அச்சடிக்கப்பட்டு முப்தி முஹம்மது தமீம் அவர்களால் ஹிஜ்ரி1329 ஃ கிபி 1911- இல் வெளியிடப்பட்டுள்ளது.[55] மேலும் இவர்களின் துஹ்.ஃபத்துல் கிராம் .ஃபீ இன்ஜாரில் மராம் என்ற அரபுத் தமிழ் நூல் 3 தொகுதிகளாக வந்துள்ளன. [56] காயல்பட்டினம் ஸு.ஃபீ ஹஜ்ரத் (1332.ஃ.1402) துஹ்.ஃபதுல் முர்ஸலாத் என்ற இஸ்லாமியக் கொள்கை நூல் அரபுத் தமிழ் உலகில் மிகவும் பிரபலமாகும்.[57]

வரலாறு

ஷாம் ஷிஹபுத்தீன் வலீ (ரஹ்) அவர்களின் ரஸூல் மாலை என்ற நூல், சீரத்து இப்னு ஷிஷாம் என்ற அரபு நூலிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட அரபுத் தமிழ் நூலாகும். [58] “புலவர் நாயகம்” என்று பிரபலமான காயல் பட்டினம் ஷெய்கு அப்துல் காதிர் நைனா லப்பை (ரஹ்) (1269.ஃ.1852) அவர்கள் சீராபுராணத்தை அரபுத் தமிழில் அப்படியே மொழிபெயர்த்தார்கள். மேலும் முஹம்மது இப்னு உமர் வாகிதீ (ரஹ்) அவர்களின் .ஃபுதூஹூஷ் ஷாம் என்ற அரபு நூலை, அரபுத் தமிழில் 3 காண்டங்களாக ஆக்கியுள்ளார்கள் [59] (287.ஷீ.அ) அபூ இஸ்ஹாக் அஹ்மது ஸ.ஃலப் (ரஹ்) அவர்களின் அல்-அராயிஸ் என்ற அரபு நூலை, சின்ன நூஹ் ஆலிம் (ரஹ்) அவர்கள், கஸஸுல் அன்பியா என்ற தலைப்பில் அரபுத் தமிழில் சிறந்த வரலாற்று நூலாக ஆக்கித் தந்துள்ளார்கள்.[60] மாப்பிள்ளை லப்பை ஆலிம் (ரஹ்) தங்களின் மவாஹிபுஜ் ஜைன் என்ற வரலாற்று நூலை, அவர்களே அரபுத் தமிழில் மொழிபெயர்த்து தங்களின் ‘பரக்காத்’ பிரஸ்ஸில் அச்சிட்டுள்ளார்கள்.[61]

மாதிஹுர் ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) சதகத்துல்லாஹ் அப்பா அவர்களின் இலக்கியப் படைப்புகளில், அரபுத் தமிழில் ஒரேயொரு நூலை மட்டும் மொழிபெயர்த்துள்ளார்கள். ஹஜ்ரத் அப்துல் காதிர் ஜீலானீ (ரலி) அவர்களின் சரித்திரம் கூறும் அலீ ஷத்நவ்.ஃபீ (ரஹ்) அவர்கள் எழுதியப் பாஹ்ஜத்துல் அஸ்ரார் என்ற அரபு நூலை தர்ஜமத்துல் பஹ்ஜத் என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார்கள். இதே நூலை, ஷாம் ஷிஹாபுத்தின் வலீ (ரஹ்) அவர்கள் முஹைதீன் மாலை என்ற பெயரில் அரபுத்தமிழில் பாடலாக இயற்றியுள்ளார்கள்.[62] ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் வரலாற்றைப் பேசும், இமாம் அப்துல் காதிர் அர்பலீ (ரஹ்) அவர்களின் த.ஃப்ரீஜுல் காதிர் .ஃபீ மானாகிபிஷ் ஷைகி அப்தில் காதீர் என்ற அரபு நூலை, முஹம்மது சதகத்துல்லாஹ் லப்பை அவர்கள் அரபுத் தமிழில் பாமாலைகளாக வடித்துள்ளார்கள். இதன் ஒரு பிரதி கீழக்கரை மவாலியா மதரசாவில் உள்ளது என்று தைக்கா ஷுஐப் ஆலிம் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.[63] ஷெய்கு முஹம்மது அத்தார் அவர்களின் தத்கிரத்துல் அவ்லியா வை அரபுத் தமிழில் சின்ன நூஹ் ஆலிம் அவர்கள் உரை வடிவிலும், நாகூர் ஷாஹுல் ஹமீது நாயகம் (ரஹ்), அவர்களின் மகனார் யூசுப் வலீ ஆகியோரின் சரித்தரம் குறித்த கஸீதா

ராய்யா அலா கன்ஜ ஸவாயிய்யா என்ற நூலும் மற்றும் வேறு இரு கஸீதாக்களையும் சென்னை காழீ விகாயத்துல்லாஹ் அவர்களும்,[64] ஆனந்தக் களிப்பு என்ற கஸீதாவை செய்யது முஹம்மது புகாரீ தங்கள் மீது காயல் முஹம்மது லப்பை ஆலிம் அவர்களும் அரபுத் தமிழில் பாடியுள்ளார்கள்.[65]

முடிவுரை

இவ்வளவு இஸ்லாமியக் கலைகளிலும், அக்கலைசார் நூல்களிலும் நாம் கண்டதும் குறைவு கண்டதில் விட்டதும் குறைவே என்பதைக் கருத்தில் கொண்டு அரபுத் தமிழ் மணம் பரப்பிய அச்செம்மல்களின் சீரியப் பணி குறித்த விரிவான ஆராய்ச்சிகளுடனே, அவர்களின் நற்பணி தொடர எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு நல்லருள் புரிவானாக. ஆமீன்!

ஆதாரநூல்கள்:

1. Dr.தைக்கா ஷுஐப் ஆலிம், Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu - English, வெளியீடு: இமாமுல் அரூஸ் ட்ரஸ்ட், சென்னை, 1993, ப.275,276.
2. மேலது, ப. 277
3. ஹாபிஸ் எம்.கே.செய்யிது அஹ்மது - தமிழ் மணம் பரப்பிய காயல் செம்மல்கள், அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய 3-வது மாநாட்டுச் சிறப்பு மலர், ஜனவரி 1978. வெளியீடு இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம், திருச்சிராப்பள்ளி. ப.23
4. Dr.தைக்கா ஷுஐப் ஆலிம், Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu - English, வெளியீடு: இமாமுல் அரூஸ் ட்ரஸ்ட் சென்னை, 1993, ப.277.
5. எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் - இஸ்லாமியக் கலைக் களஞ்சியம், பாகம் 3 , யுனிவர்சல் பப்ளிஷர்ஸ் சென்னை, அக்டோபர் 2006, ப.668
6. Dr.தைக்கா ஷுஐப் ஆலிம், Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu - English, வெளியீடு: இமாமுல் அரூஸ் ட்ரஸ்ட், சென்னை, 1993, ப.277, 278
7. ---- 278
8. ஹாபிஸ் எம்.கே.செய்யிது அஹ்மது - தமிழ் மணம் பரப்பிய காயல் செம்மல்கள், அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய 3-வது மாநாட்டுச் சிறப்பு மலர், ஜனவரி 1978. வெளியீடு இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம், திருச்சிராப்பள்ளி. ப.23
9. அல்லாமா முஹம்மது யூசுப் வலீ (ரஹ்) - ஸிம்துஸ் ஸிப்யான், ப.365
10. அல்லாமா முஹம்மது யூசுப் வலீ (ரஹ்) - ஜவாஹிருல் யாகீன், பல.292
11. Dr.தைக்கா ஷுஐப் ஆலிம், Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu - English, வெளியீடு: இமாமுல் அரூஸ் ட்ரஸ்ட், சென்னை, 1993, ப. 281
12. ---281
13. ---281
14. ஹாபிஸ் எம்.கே.செய்யிது அஹ்மது - தமிழ் மணம் பரப்பிய காயல் செம்மல்கள், அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய 3-வது மாநாட்டுச் சிறப்பு மலர், ஜனவரி 1978. வெளியீடு இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம், திருச்சிராப்பள்ளி. ப.22
15. ----- ப.23
16. Dr.தைக்கா ஷுஐப் ஆலிம், Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu - English, வெளியீடு: இமாமுல் அரூஸ் ட்ரஸ்ட், சென்னை, 1993, ப.282
17. ---282

18. ஹாபிஸ் எம்.கே.செய்யிது அஹ்மது - தமிழ் மணம் பரப்பிய காயல் செம்மல்கள், அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய 3-வது மாநாட்டுச் சிறப்பு மலர், ஜனவரி 1978. வெளியீடு இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம், திருச்சிராப்பள்ளி. ப.38
19. Dr.தைக்கா ஷுஐப் ஆலிம், Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu - English, வெளியீடு: இமாமுல் அரூஸ் ட்ரஸ்ட், சென்னை, 1993, ப.282
20. ----282
21. ----283
22. ----284
23. ----284
24. ----165
25. எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் - இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் பாகம் 3 , யுனிவர்சல் பப்ளிஷர்ஸ் சென்னை, அக்டோபர் 2006, ப.668
26. Dr.தைக்கா ஷுஐப் ஆலிம், Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu - English, வெளியீடு: இமாமுல் அரூஸ் ட்ரஸ்ட், சென்னை, 1993, ப.285
27. ---159
28. எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் - இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் பாகம் 4 , யுனிவர்சல் பப்ளிஷர்ஸ் சென்னை, அக்டோபர் 2006, ப.268
29. Dr.தைக்கா ஷுஐப் ஆலிம், Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu - English, வெளியீடு: இமாமுல் அரூஸ் ட்ரஸ்ட், சென்னை, 1993, ப.160
30. ---285
31. எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் - இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் பாகம் 4 , யுனிவர்சல் பப்ளிஷர்ஸ், சென்னை, அக்டோபர் 2006, ப.378
32. Dr.தைக்கா ஷுஐப் ஆலிம், Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu - English, வெளியீடு: இமாமுல் அரூஸ் ட்ரஸ்ட், சென்னை, 1993, ப.163
33. எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் - இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் பாகம் 3 , யுனிவர்சல் பப்ளிஷர்ஸ் சென்னை, அக்டோபர் 2006 ப.396
34. ---பாகம் 3, ப.673
35. Dr.தைக்கா ஷுஐப் ஆலிம், Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu - English, வெளியீடு: இமாமுல் அரூஸ் ட்ரஸ்ட், சென்னை, 1993, ப.105
36.
37. Dr.தைக்கா ஷுஐப் ஆலிம், Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu - English, வெளியீடு: இமாமுல் அரூஸ் ட்ரஸ்ட், சென்னை, 1993, ப.285
38. ---204
39. எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் - இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் பாகம் 4, யுனிவர்சல் பப்ளிஷர்ஸ் சென்னை, அக்டோபர் 2006 ப.378
40. Dr.தைக்கா ஷுஐப் ஆலிம், Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu - English, வெளியீடு: இமாமுல் அரூஸ் ட்ரஸ்ட், சென்னை, 1993, ப.283, 284.
41. ---284

42. ஹாபிஸ் எம்.கே.செய்யிது அஹ்மது - தமிழ் மணம் பரப்பிய காயல் செம்மல்கள், அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய 3-வது மாநாட்டுச் சிறப்பு மலர், ஜனவரி 1978. வெளியீடு இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம், திருச்சிராப்பள்ளி. ப.23
43. Dr.தைக்கா ஷுஐப் ஆலிம், Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu - English, வெளியீடு: இமாமுல் அரூஸ் ட்ரஸ்ட், சென்னை, 1993, ப.162, 163.
44. ஹாபிஸ் எம்.கே.செய்யிது அஹ்மது - தமிழ் மணம் பரப்பிய காயல் செம்மல்கள், அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய 3-வது மாநாட்டுச் சிறப்பு மலர், ஜனவரி 1978. வெளியீடு இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம், திருச்சிராப்பள்ளி. ப.38
45. எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் - இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் பாகம் 4, யுனிவர்சல் பப்ளிஷர்ஸ் சென்னை, அக்டோபர் 2006 ப.270
46. Dr.தைக்கா ஷுஐப் ஆலிம், Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu - English, வெளியீடு: இமாமுல் அரூஸ் ட்ரஸ்ட், சென்னை, 1993, ப.163
47. ---163
48. ---524
49.
50. சூஃபியா ஆசியா உம்மா- மெய்ஞான தீபரத்தினம், அரபுத்தமிழ்.
51. Dr.தைக்கா ஷுஐப் ஆலிம், Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu - English, வெளியீடு: இமாமுல் அரூஸ் ட்ரஸ்ட், சென்னை, 1993, ப.453
52. ---441
53. ---454
54. ---453, 494
55. ----283
56. எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் - இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் பாகம் 4, யுனிவர்சல் பப்ளிஷர்ஸ், சென்னை, அக்டோபர் 2006 ப.263
57. Dr.தைக்கா ஷுஐப் ஆலிம், Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu - English, வெளியீடு: இமாமுல் அரூஸ் ட்ரஸ்ட், சென்னை, 1993, ப.201
58. -----286
59. ---287
60. ---287
61. ---288
62. ----288
63. ----289,
64. ----289, 290
65. ஹாபிஸ் எம்.கே.செய்யிது அஹ்மது - தமிழ் மணம் பரப்பிய காயல் செம்மல்கள், அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய 3-வது மாநாட்டுச் சிறப்பு மலர், ஜனவரி 1978. வெளியீடு இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம், திருச்சிராப்பள்ளி. ப.42

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303   ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
மௌலவி ஹா.அ.அஹ்மது அப்துல் காதிர் மஹ்ழரி P: 77-91

அரபுத்தமிழ் இலக்கியங்கள்

Arabic Tamil literature

மௌலவி ஹா.அ.அஹ்மது அப்துல் காதிர் மஹ்ழரி
நிறுவனர் - முஅஸ்கருர் ரஹ்மான் மகளிர் அரபிக் கல்லூரி,
காயல்பட்டணம்

H.A.Ahamed Abdul Kader mahlaree
Founder - Muaskarur Rahman Women's Arabic College
kayalpatnam

ஆய்வுச் சுருக்கம்

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் இஸ்லாமிய அறிஞர்கள் மற்றும் புலவர்கள் பல நவீனங்களை படைத்துள்ளனர். எட்டாம் நூற்றண்டின் ஆரம்பத்தில் தமிழ் மொழியை அரபி எழுத்தில் எழுதக்கூடிய ஒரு வழியைக் கண்டுபிடித்து அதற்கு அரபுத்தமிழ் என பெயரிட்டனர். இன்றைய காலத்தில் தங்லீஷ் என்று தமிழ் வாசகத்தை ஆங்கில எழுத்தில் எழுதுவதற்கு இந்த அரபுத்தமிழ் உருவாக்கமே காரணமாக அமைந்தது எனலாம். வணிகத் தொடர்பிலும், மார்க்க அனுஷ்டானங்களிலும், இலக்கியத் துறையிலும் அரபுத்தமிழ் பயன்படுத்தப்பட்டது. இஸ்லாமிய தமிழ் இலக்கியவாதிகள், கவிஞர்கள் அரபுத்தமிழிலும் பல இலக்கியங்கள், காவியங்களை உருவாக்கி அரபுத்தமிழிற்கு புத்துயிர் ஊட்டினர். அத்தகைய அற்புதமான அரபுத்தமிழ் இலக்கியங்கள் பற்றியும் அவற்றை சமூகத்திற்கு தந்த இலக்கியவாதிகள், கவிஞர்கள் ஆகியோரின் வாழ்க்கை குறிப்புகளையும் இக்கட்டுரை தன்னகத்தே கொண்டுள்ளது.

திறவுச் சொற்கள் : இஸ்லாம், இலக்கியம், அரபுத்தமிழ்

Abstract

Islamic scholars and poets have created many innovations in the fields of theatre, music and drama. At the beginning of the 8th century they invented a way to write it. It may be that this Arabic-Tamil formation was the reason for writing the Tamil word Tanglish in English script today. Arabic-Tamil was used in business communication, religious ceremonies and literature.

Tamil language in Arabic script and named it Arabic Tamil. Islamic Tamil writers and poets also created many literatures and epics in Arabic Tamil and revived Arabic Tamil. This article itself contains the biographical notes about such wonderful Arabic Tamil literature and the writers and poets who gave them to the society.

Key words : Islam, Literature, Arabic and Tamil

முன்னுரை

இலக்கிய வளமிக்க தமிழ் மொழிக்கும் பாரம்பரிய மிக்க அரபு மொழிக்கும் இடையே நிகழ்ந்த வணிக மற்றும் கலாச்சார பிணைப்பாக தோன்றிய புதிய மொழி தான் அரபுத்தமிழ். இது லிசானுல் அர்வி, அர்வி மொழி என்றழைக்கப்பட்டது. தமிழகத்திற்கும் அரபு நாடுகளுக்கும் இடையே உள்ள தொடர்பு மிகத் தொன்மையானது. தென் தமிழகத்திலும்

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023

மௌலவி ஹா.அ.அஹ்மது அப்துல் காதிர் மஹ்ழரி P: 77-91

இலங்கையிலும் அரபுக் குடியேற்றங்கள் தோன்றிய போது அவர்கள் அப்பகுதியில் வழக்கில் உள்ள தமிழ் மொழியை எதிர்கொண்டனர். தமிழகத்தில் இஸ்லாம் பரவிய போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட தமிழர்கள் இஸ்லாமிய மதக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அரபி மொழியறிவு தேவைப்பட்டது. தமிழ் நாட்டில் குடியேறிய அரபிகள் தமிழைக் கற்றுக் கொண்டதுடன் இஸ்லாமிய மார்க்க சட்டங்களை அரபுத் தமிழில் எழுதத் தொடங்கினர். .அரபு இலக்கிய பாரம்பரியமும் தமிழிலக்கியப் பாரம்பரியமும் ஒன்றிணைந்து அரபுத்தமிழ் இலக்கியங்கள் புதிதாய் பரிணமித்தது. இத்தகைய அறிய பொக்கிஷங்கள் இன்றளவும் பாதுகாக்கப்பட்டு நமது அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்ல வேண்டும் எனும் நன்னோக்கில் அரபுத் தமிழ் இலக்கியங்களைப் பற்றி ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அரபுத் தமிழ் இலக்கியங்கள்

எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய இம்மொழி மரபு பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை மிகச் சிறந்த வளர்ச்சி பெற்றது. இவ்வாறு வளர்ச்சியடைந்த இம்மொழியில் உரைநடையிலும் கவிதையிலும் பல்வேறு கலைகளைத் தழுவிய எண்ணற்ற ஆக்கங்கள் உருவாகின. கஸீதா - பாடல்கள், தஃக்மீஸ் – இரண்டடி பாக்களை ஐந்தடி பாக்களாக மாற்றுவது, மர்ஃதிய்யா – இரங்கல் பா, மத்ஹுல் – புகழ் பா போன்ற அரபிலக்கியங்களின் வகைகளையும் முஸ்லிம்கள் அரபுத்தமிழ் கவிதைகளில் பயன்படுத்தினர். கட்டுரைகள், கவிதைகள், முனாஜாத் –இறைவனோடு பேசுவது போன்ற வேண்டல், பைத்துகள் – பொதுவான பாடல்கள், புதினம், சிறுகதை, பாமாலை போன்ற காவியங்கள் அரபுத் தமிழில் ஏராளமாய் காணப்பட்டன. தஃப்ஸீர் – திருக்குர்ஆன் விரிவுரை, ஹதீஃத் – நபிமொழி விளக்கம், ஃபிக்ஹு – இஸ்லாமிய சட்டவியல், அகாயித் – கொள்கை, தசவ்வுஃப் - ஆன்மீகம் போன்ற கலைகளைப் பற்றிய நூல்களைக் கூட செய்யுள் நடையில் எழுதுவது அக்கால மரபாக இருந்தது. இஸ்லாமிய கலைகள்சார்ந்த நூற்றுக்கணக்கான நூல்களும் வானவியல், தத்துவம், வரலாறு, மருத்துவம் போன்ற கலைத் தொடர்புடைய எண்ணற்ற நூல்களும் எழுதப்பட்டன. தமிழகத்திலும், இலங்கையிலும் பல அறிஞர்களாலும் அதிக அளவில் அரபுத் தமிழ் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. கி பி 19 ஆம் நூற்றாண்டை அரபுத் தமிழின் பொற்காலம் எனக் கூற வேண்டும். அந்த நூற்றாண்டில் தான் அரபுத் தமிழில் அதிகமான அரபுத் தமிழ் இலக்கியங்கள் உருவாகின. அந்த அடிப்படையில் அரபுத் தமிழ் இலக்கியங்களின் தொகுப்புகளை பின் வருமாறு வகைப்படுத்தலாம்.

அரபுத் தமிழின் புகலிடங்கள்

18 நூற்றாண்டில் தென் தமிழகத்தில் காயல்பட்டினம், கீழக்கரை, தொண்டி, மேலப்பாளையம் போன்ற ஊர்களிலும், இலங்கையின் பல பகுதிகளிலும் அரபுத் தமிழ் முத்திரை பதித்து வளர்ச்சி கண்டது. கிபி 1970 இல் இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகர்தாவிலும், தாய்லாந்திலும் அரபுத் தமிழ் பரவியுள்ளது.[1] காயல்பட்டினத்தைச் சார்ந்த அஷ்ஷெய்க் உமர் வலியுல்லாஹில் காஹிரி அவர்கள் சுமித்ரா தீவில் இஸ்லாமிய பிரச்சாரம் செய்ததால் அங்கும் அரபுத் தமிழ் வளர்ச்சியடைந்திருக்கிறது[2]

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
மௌலவி ஹா.அ.அஹ்மது அப்துல் காதிர் மஹ்ழரி P: 77-91

அரபுத் தமிழ் அறிஞர்கள்

அரபுத் தமிழில் ஆயிரத்திற்க்கு மேற்பட்ட நூல்கள் வெளிவந்தன. சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த காயல்பட்டினத்தைச் சார்ந்த ஹாஃபிள் அமீர் வலிய்யுல்லாஹ் எனும் சூபி அறிஞர் அரபுத் தமிழ் வளர்ச்சியில் முனைப்புடன் செயல்பட்டார் என்பதை புகழ்பெற்ற இஸ்லாமிய புலவரான கண்ணகுஹுமது மொகுதூம் முஹம்மது புலவர் தீன் நெறி விளக்கம் எனும் தனது நூலிலுள்ள ஒரு பாடலில்

வெள்ளிய அரபுத் தமிழ் உண்டாக்கிய
மேன்மை ஹாபில் அமீர் வலி

எனக் கூறுகிறார்.[3] லண்டனில் உள்ள இந்திய அலுவலக நூல் நிலையத்தில் காணப்படும் 15 ஆயிரம் நூல்களில் 60 அரபுத் தமிழ் நூல்கள் உள்ளன. இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் உள்ள சுவடிக் கூடத்தில் எண்ணற்ற அரபுத் தமிழ் நூல்கள் உள்ளன. [4] தமிழகத்திலும் இலங்கையிலும் அரபுத் தமிழின் வளர்ச்சியில் அளப்பெரும் பங்காற்றிய அறிஞர் பெருமக்களின் பெயர் பட்டியல்

* ஷெய்க் முஸ்தபா நாயகம் - இலங்கை
* ஷெய்க் முஹம்மத் லெப்பை கசாவத்தை ஆலிம் - இலங்கை
* ஷெய்க் ஜமாலுத்தீன்
* ஷெய்க் முஹியத்தீன் மேனா ஹாஜியார் - கோட்டாறு தமிழ்நாடு
* ஷெய்க் மதீனா சாஹிப்
* செய்யித் முஹம்மத் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் நாயகம் கீழக்கரை
* சாம் ஷிஹாபுதீன் வலிய்யுல்லாஹ் காயல்பட்டினம்
* ஷெய்க் அப்துல் காதிர் நெய்னா லெப்பை புலவர் நாயகம்
* ஷெய்க் முஹம்மத் சதக்கத்துல்லாஹ் நாயகம்
* ஷெய்க் நூஹு லெப்பை இப்னு அப்துல் காதிர்
* ஷெய்க் உமர் வலியுல்லாஹில் காஹிரி நாயகம்

ஹதீஃத் துறை இலக்கியங்கள்

இஸ்லாமிய அறிஞர்கள் ஹதீஃத் தொடர்பான எண்ணற்ற நூல்களை அரபுத் தமிழில் செய்யுள் வடிவில் எழுதியுள்ளனர். அவற்றை கீழ்வருமாறு பட்டியலிடலாம்.

பெரிய ஹதீஃத் மாணிக்க மாலை:

காயல்பட்டணத்தைச் சார்ந்த சாமு ஷிஹாபுத்தீன் வலிய்யுல்லாஹ் நாயகம் அவர்கள் இதனைத் தொகுத்தார்கள். 1119 ஹதீஃத் களை இரண்டடியாகக் கொண்ட செய்யுளின் அமைப்பில் மொழிபெயர்த்து பெரிய ஹதீஃத் மாணிக்க மாலை எனும் நூலைத் தொகுத்தார்கள். [5]

சின்ன ஹதீஃத் மாணிக்க மாலை

அருள் நபியின் திருவாக்கிலிருந்து மக்களுக்கு தேவையான நபிமொழிகளை கவி வடிவில் தொகுத்து தந்தவர்கள் சாமு ஷிஹாபுத்தீன் வலியுல்லாஹ் ஆவார்கள். 608

ஹதீஃத்களை கொண்ட இத்தொகுப்பு சின்ன ஹதீஃத் மாணிக்க மாலை என அழைக்கப்படுகிறது.[6]

அஹ்ஸனுல் மவாயிள் வ அஸ்யனுல் மலாபிள்

இது இமாமுல் அரூஸ் என அழைக்கப்படும் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் ஹதீஃத் தொகுப்பாகும். 380 ஹதீஃத்களை கவிதை அமைப்பில் அரபுத் தமிழில் இயற்றினார்கள். ஹிஜ்ரி 1290 (கி.பி 1873) இல் தொகுக்கப்பட்டது.

மௌயிளதும் முஸைய்யனா வ முலப்பளதும் முஹஸ்ஸனா

இதுவும் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களால் தொகுக்கப்பட்ட ஹதீஃத் நூலாகும். 53 ஹதீஃத்கள் கஸீதா வடிவில் இயற்றப்பட்டுள்ளது. ஹிஜ்ரி 1371 (கி.பி 1951) இல் கலாநிதி அஷ்ஷெய்கு ஷுஐப் ஆலிம் அவர்களால் வெளியிடப்பட்டது.[7]

ஷுஅபுல் ஈமான்

இமாம் பைஹகீ அவர்களின் ஷுஅபுல் ஈமான் எனும் மூல நூலை அடிப்படையாகக் கொண்டு மொழியாக்கம் செய்யப்பட்டது. ஹிஜ்ரி 999 ஆம் ஆண்டு நம்பிக்கையின் கிளைகள் என்ற பெயரில் ஜமாலுத்தீன் புலவர் அவர்கள் தமிழாக்கம் செய்தார்கள். ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெண்பாக்களினாலும் விருத்தப் பாக்களினாலும் ஆனது.[8]

ஃபத்ஹுல் மஜீத்

காயல்பட்டணத்தைச் சார்ந்த நூஹு அப்துல் காதிர் என்பவர் 1077 ஹதீஃத்களை மொழிபெயர்த்து அரபுத் தமிழில் ஃபத்ஹுல் மஜீத் எனும் பெயரில் வெளியிட்டார்கள்.[9]

அர்பயீன ஹதீஃதும் உரையும்

40 ஹதீஃதுகளையும் அதற்கான உரையையும் உள்ளடக்கி சுமார் 21 பக்கங்களில் கையெழுத்திலான சிறு நூலை இலங்கையைச் சார்ந்த அஷ்ஷெய்கு முஹம்மத் லெப்பை எனும் கசாவத்தை ஆலிம் அவர்கள் இயற்றினார்கள்.[10]

புகழ் பெற்ற ஹதீஃது தொகுப்பான மிஷ்காதுல் மசாபீஹ் எனும் நூல் ஹாஃபிள் அப்துர் ரஹ்மான் என்பரால் ஹிஜ்ரி 1331 இல் மின்ஹாதுல் மசாபீஹ் ஃபீ தர்ஜமதி மிஷ்காதுல் மசாபீஹ் எனும் பெயரில் அரபுத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

ஃபிக்ஹுத் துறை இலக்கியங்கள்

இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களை கவி வடிவில் தொகுக்கப்பட்டு மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்த எண்ணற்ற சட்ட காவியங்கள் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் பரவிக் கிடந்தன.

தக்கஷரூத்

இஸ்லாத்தின் அடிப்படை சட்டங்களை மிக எளிய முறையில் மக்கள் விளங்கிக் கொள்ள சலாதுல் அர்கான் என்னும் இம்மாலை சாமு ஷிஹாபுதீன் வலியுல்லாஹ் நாயகம் அவர்களால் இயற்றப்பட்டது. தொழுகை, உழு, குளிப்பு, நஜீஸ் - அசுத்தம் போன்றவற்றின் சட்ட திட்டங்கள் இவற்றில் அடங்கியுள்ளது. இந்த நூல் காயல்பட்டணத்தில் மதரஸாக்களில் இன்றும் படித்துக் கொடுக்கப்படுகிறது.

அத்துடன் கீழக்கரை தைக்கா சாஹிப் அவர்கள் 40 தலைப்புகளில் சிறிய கவிதை அமைப்பில் நூல்களை தொகுத்துள்ளார்கள். தொழுகை மாலை, சகாத் மாலை, சதகா மாலை,

நோன்பு மாலை, ஹஜ்ஜு மாலை போன்ற ஃபிக்ஹு கலைத் தொடர்பான காவியங்களை படைத்துள்ளார்கள்.[11]

மனானி

அரபுத் தமிழில் எழுதப்பட்ட ஷரீஅத் சட்ட நூல்களில் மிக முக்கியமான பங்கு வகிப்பது மனானி எனும் நூலாகும். ஆலிமுல் அரூஸ் என்ற மாப்பிள்ளை லெப்பை ஆலிம் நாயகம் அவர்கள் இதனை கோர்வை செய்தார்கள். அரபி மதரஸாக்களில் இந்நூல் படித்துக் கொடுக்கப்பட்டு இஸ்லாமிய பெண்கள் ஃபிக்ஹு சட்டங்களை முழுமையாக அறிய முடிந்தது. அத்துடன் ஃபத்ஹுத் தையான், ஃபத்ஹுல் மதீன், ஃபத்ஹுஸ் ஸலாம் எனும் மார்க்க சட்ட நூல்களையும் வெளியிட்டிருந்தார்கள்.[12]

அல் ஃபத்ஹுர் ரப்பானி எனும் ஹனஃபி மத்ஹபைத் தழுவிய சட்ட நூலை முதுகுளத்தூரைச் சார்ந்த முஹம்மத் இப்ராஹீம் அவர்கள் இயற்றினார்கள்.

துஹ்ஃபதுத் தாமியீன்

ஷாபிஈ மத்ஹபின் சட்ட நூலாகிய ஃபத்ஹுல் முயீன் எனும் அரபு நூலை அரபுத் தமிழில் மொழிபெயர்த்து தந்தவர்கள் காயல் பட்டணத்தைச் சார்ந்த ஷைகுல் காமில் அஹ்மத் முஹியத்தீன் செண்டு ஆலிம் அவர்கள். இந்நூல் அரபி அறியாதோரும் அறிந்துக் கொள்ளும் வகையில் தமிழ் பேசும் மக்களுக்கு ஓர் அறிய பொக்கிஷமாகும். கி.பி 1964 இல் இந்நூல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டது.[13] அரபுத்தமிழ் அறியாத மக்களுக்கு இந்நூல் துஹ்ஃபா என்ற பெயரில் மௌலவி ஹா. அ. அஹ்மது அப்துல் காதிர் மஹ்ழரி அவர்களால் தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

யவாகீதுல் ஃபலாஹ்

திருமண சட்டங்களை விளக்கும் அரபுத்தமிழ் நூலை உலகிற்கு தந்தவர்கள் யூஸுஃப் இப்னு காதிர் அவர்கள். அல் ஈழாஹ் ஃபீ இல்மின் நிகாஹ் எனும் திருமண சட்டங்கள் பற்றிய நூலை எழுதியவர் இலங்கையைச் சார்ந்த அ. க. இஸ்மாயில்[14] அவர்கள்.

கேரளத்தை சார்ந்த அ. முஹம்மது கண்ணு அவர்கள் இயற்றி கொழும்பு முஸ்லிம் நேசன் அச்சுக் கூடத்தில் பதிப்பித்த 50 கடமைகள் பற்றி பேசும் கம்சீன் பரிமல மாலை எனும் மாலை இஸ்லாமிய சட்டங்களைப் பற்றி கூறுகிறது. இவை தவிர தொழுகை அடவு, அஹ்காமுல் முஸ்லிமீன் ஷாபியிய்யா, அஹ்காமுல் முஸ்லிமீன் ஹனபிய்யா போன்ற நூல்களும் ஃபிக்ஹு துறையைச் சார்ந்த நூல்களாகும்.

சிம்துஸ் சிப்யான்

அன்றைய காலத்தில் மக்தப் மதரஸாக்களில் சிறுவர்களுக்கு திருக்குரானுடன் மார்க்க சட்டங்களை விளக்கும் எளிய நூலாக **சிம்துஸ் சிப்யான்** எனும் அரபுத் தமிழ் நூல் கற்றுக் கொடுக்கப்பட்டது. இந்நூல் ஆசிரியர் அஷ்ஷெய்கு முஹம்மத் யுசுஃப்புல் ஹனஃபி அவர்கள்.

கொழும்பு ஆலிம் என்ற செய்து முஹம்மது ஆலிம் அவர்களின் துஹ்ஃபதுல் அத்ஃபால், மின்ஹதுல் அத்ஃபால் போன்ற இஸ்லாமிய சட்ட திட்ட நூல்களும் அக்காலத்தில் சிறுவர்களுக்குரிய பாடத் திட்டமாக இருந்தது.

அகீதா துறை இலக்கியங்கள்

இஸ்லாம், ஈமான் பற்றிய நம்பிக்கை கோட்பாடுகளை விளக்கும் நூல்களையும் அரபுத் தமிழில் இயற்றி மாபெரும் தொண்டாற்றியுள்ளனர் அக்கால இஸ்லாமிய அறிஞர்கள்.

மீஸான் மாலை

ஷெய்கு முஸ்தபா நாயகம் இப்னு பாவா ஆதம் அஸ்ஸெய்லானி எனும் இலங்கையைச் சார்ந்த மார்க்க அறிஞரால் கிபி 868 இல் இயற்றப்பட்ட இம்மாலை அக்கால இலங்கை முஸ்லிம்களிடம் இருந்த பித்அத்துக்களை நீக்கி தௌஹீதெனும் ஏகத்துவத்தை நிலைநாட்ட பெரிதும் உதவியது. தொங்கல்பா எனும் வகையைச் சார்ந்த 148 பாடல்களைக் கொண்டது இந்த மீஸான் மாலை[15] இது இலங்கையின் அச்சுத் துறையில் வெளியிடப்பட்ட முதலாவது அரபுத் தமிழ் நூலாகும்.

இலாமுல் ஃபவாஇத் ஃபீ நிழாமில் அகாயித்

இமாம் கஸ்ஸாலி (ரஹ்), இமாம் முஹியத்தீன் இப்னு அரபி (ரஹ்) ஆகியோரின் நூல்களை அடியொற்றி அஷ்ஷெய்கு மஹ்மூத் தீபி (ரஹ்) அவர்களால் எழுதப்பட்ட இந்நூல் கிபி 1911 இல் சென்னை மஜீதிய்யா அச்சகத்தில் வெளியிடப்பட்டது.[16]

அந்நஸாயிஹுஸ் சாதிகா ஃபீ ரத்தி அக்வாலுஸ் ஸனாதிகா

விதண்டாவாதிகளின் வழிகேட்டுக் கொள்கைகளை விட்டும் ஈமானைப் பாதுகாப்பதற்கு அஹ்லுஸ் சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கைகளை விளக்கும் அரிய பொக்கிஷ நூலாக இது திகழ்கிறது. தேவிபட்டணத்தில் பிறந்து இலங்கை காலியில் வாழ்ந்து வந்த முஹம்மத் அப்துர் ரஹ்மான் இப்னு முஹம்மது யூஸுஃப் அவர்கள் இந்நூலை அரபுத் தமிழில் இயற்றினார்கள்.

ஹத்யா மாலை

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் நாயகம் அவர்களால் இயற்றப்பட்ட இந்நூல் பல அரிய உபதேசங்களையும் கொள்கை கோட்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது. பொன் மாலைக் கேட்ட தன் மனைவிக்கு அறிவுக் களஞ்சியமாம் 33 பாடல்களைக் கொண்ட நல்லுபதேச நூல் ஒன்றை கோர்வை செய்து இந்த மாலை 4 இரத்தினங்கள் பதித்த 10 பொற்காசுகள் உள்ள அற்புத மாலையாகும் . இது உடலுக்கு மட்டுமல்ல உள்ளத்திற்கும் அழகைக் கொடுக்கும் என மனைவியிடம் கூறி இம்மாலையை அன்பளிப்பு செய்தார்கள். அதுவே ஹத்யா மாலை எனும் அரபுத்தமிழ் நூலாகும்.[17]

அகீததுல் இஸ்லாமியா

இக்கொள்கை விளக்க நூல் செய்யித் முஹம்மத் அப்துல் காதிர் மல்கரி அவர்களால் அரபுத் தமிழில் இயற்றப்பட்டது.

இவைத் தவிர கீழக்கரை தைக்கா சாஹிப் வலி நாயகம் அவர்களால் ஹகீகத் மாலை, மஃரிஃபா மாலை, வசிய்யத் மாலை, தக்வா மாலை ஆகிய அரபுத் தமிழ் அகீதா நூல்கள் கோர்வை செய்யப்பட்டன.[18]

வரலாற்றுக் காவியங்கள்

ஈருலகத் தலைவர் இரஸூல் நபிகளார் சல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை காவியமாக வடித்துத் தந்தவர்கள் ஏராளம். அவற்றுள் அரபுத் தமிழின் பங்கும் அளப்பெரியது.

ரஸூல் மாலை

இப்னு ஹிஷாமின் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை சரிதையை ரஸூல் மாலை என்னும் பெயரில் அரபுத் தமிழில் கோர்த்துத் தந்தவர்கள் காயல் பட்டினம் சாமு ஷிஹபுத்தீன் வலிய்யுல்லாஹ் நாயகம் அவர்கள். இது காயல்பட்டணம், கீழக்கரை போன்ற ஊர்களில் பெண்கள் மனனமிட்டு பாடக்கூடிய ஓர் வரலாற்றுக் காவியமாகும்.[19]

முபாரக் மாலை

இலங்கை காலியைச் சார்ந்த காதிர் ஷம்சுத்தீன் புலவர் அவர்கள் கண்மணி நபிகளின் வரலாற்றை முபாரக் மாலை எனும் பெயரில் தொங்கல் பைத்தில் அரபுத் தமிழில் இயற்றினார். 1388 பாக்கள் கொண்ட இக்கோவை 1881 ம் ஆண்டு வெளியிடப் பட்டது.[20]

கிதாபு ஸீரதி ரஸூலில்லாஹ்

கண்மணி நபிகளாரின் வரலாறு கூறும் இந்நூலை அஷ்ஷெய்கு மஹ்மூத் தீபி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் அரபுத் தமிழில் இயற்றினார்கள்.

ஸூபுஹான மௌலித் எனும் நபிகளின் வரலாறு கூறும் மௌலித் காவியம் அரபுத் தமிழில் முதர்ஜிமி சுபுஹான மௌலித் எனும் பெயரில் மொழிபெயர்க்கப்பட்டது.

சீறாப்புராணம்

திருநபியின் திருசரிதம் கூறும் தலைசிறந்த படைப்பாகிய உமறுப் புலவரின் **சீரா புராணம்** எனும் காவியத்தை காயல்பட்டணத்தைச் சார்ந்த **புலவர் நாயகம் அஷ்ஷெய்கு அப்துல் காதிர் நைனா லெப்பை** அவர்கள் அரபுத் தமிழில் மொழிபெயர்த்தார்கள். இவர்கள் அர்வி மொழியில் அதிகமான சிறிய பாக்களை உருவாகியுள்ளார்கள்.[21]

மவாஹிஃபுல் மக்கிய்யா

மேலப்பாளையத்தைச் சார்ந்த முஹம்மத் கௌஸ் என்ற அரபுத் தமிழ் கவிஞர் எழுதிய நபி சரித்திர காவியம் 1887 இல் மும்பையில் பிரசுரிக்கப்பட்டது.[22] நூருன் நாமா எனும் காவியமும் நபிகளாரின் வரலாற்றைக் கூறும் நூலாகும்.

கவிதை நடை இலக்கியங்கள்

பத்ரு மாலை

ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு நடைபெற்ற புனித பத்ருப் போரில் கலந்துக் கொண்ட 313 பத்ரு சஹாபாக்களின் திருநாமங்களைக் கூறி இறைவனிடம் அருள் வேண்டும் இந்நூல், கோட்டாறு புலவர் சுலைமானுல் காதிரி என்பவரால் 1936 இல் அரபுத் தமிழில் இயற்றப்பட்டது.[23]

தலை ஃபாத்திஹா

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் நாயகம் அவர்கள் கோர்வை செய்த இம்மாலை கண்மணி நாயகம் சல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருமை மகளார் அன்னை ஃபாத்திமா நாயகி அவர்கள் மீது பாடப்பட்டது. ஆலிமுல் அரூஸ் அவர்கள் இலங்கை சென்ற போது அவர்களின் சீடர்களில் சிலர் அவர்களிடம் பெண்களுக்கு ஏற்படும் பிரசவ வருத்தம் இலகுவாக என்ன செய்யலாம்? எனக் கேட்ட போது தலை ஃபாத்திஹா எனும் பெயரில் நபிமார்கள், வலிமார்கள், அன்னை ஃபாத்திமா நாயகி அவர்களின் புகழ், வாழ்க்கை சரிதைகள் நபிகளாரின் மனைவிமார்களை கொண்டு வஸீலா உதவி தேடும் இப்பாடலை எழுதிக் கொடுத்து ஒரு பெண் கற்பமாகி ஒன்பதாம் மாதம் ஓதி வந்தால் பிரசவ வருத்தம்

இலகுவாகும் என்று சொன்னார்கள். தமிழகத்திலும், இலங்கையிலும் பெண்களால் பாடப்பட்டு இறையருள் தேடும் வஸீலா பைத்தாகும். பெண்களுக்கு ஏற்படும் பிரசவ வேதனையை இலகுவாக்க இவை ஓதப்படுகிறது.[24] இலங்கை வாழும் முஸ்லிம்கள் மத்தியில் புகழ் பெற்று விளங்குகிறது.

முஹியத்தீன் மாலை

ஹழ்ரத் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி நாயகம் அவர்களின் வரலாறுகளை அர்வி கவிதைகளில் மொழிபெயர்த்து முஹியத்தீன் மாலையை தந்தவர்கள் ஷாம் ஷிஹாபுத்தீன் வலியுல்லாஹ் அவர்கள்.

ஷாதுலி இரத்தின மாலை

ஷாதுலியா தரீகாவின் சிறப்பினைக் கூறும் இந்நூல் இலங்கை அ.லெ. ஹமீத் என்பவரால் 1913 ஆம் ஆண்டு வெளிவந்தது. இதன் தமிழாக்கம் 1982 இல் வெளி வந்தது.[25]

ரமலான் மாலை

இலங்கை வெலிகாமத்தை சார்ந்த அப்துல் காதிர் ஆலிம் அவர்களது ரமலான் மாலை இலங்கையின் முக்கியமான இலக்கிய படைப்பாகும்.[26]

அதபு மாலை

காயல்பட்டினம் சாம் ஷிஹாபுத்தீன் வலிய்யுல்லாஹ் நாயகம் அவர்களால் இயற்றப்பட்ட இம்மாலை ஒரு முஸ்லிம், மார்க்க சட்டத் திட்டங்களை எப்படி பின்பற்ற வேண்டும் என்பதனை வரையறுத்துக் காட்டுகிறது.

சாமு ஷிஹாபுத்தீன் வலிய்யுல்லாஹ்

காயல்பட்டினத்தில் ஷெய்கு சுலைமான் வலிய்யுல்லாஹ் நாயகத்தின் ஐந்து ஆண்மகன்களில் நான்காவது மகனாக பிறந்த இவர்கள் தமிழிலும், அரபியிலும், அரபுத் தமிழிலும் கவி இயற்ற வல்லவராக திகழ்ந்தார்கள்.

சாமு சிஹாபுத்தீன் வலிய்யுல்லாஹ் அவர்கள் ஆயிரம் பாமாலைகளை இயற்றியதாக வரலாறு கூறுகிறது. இஸ்லாமிய ஞானம் பெற்ற இவர்கள் தொழுகைக்கான வழிமுறைகள், இஸ்லாமிய சட்ட திட்டங்கள், தீன் நெறி உணர்த்தும் ஒழுக்கக் கோட்பாடுகள், நபிகளாரின் வாழ்வை சுட்டும் நிகழ்சிகளைப் பற்றி பெருமளவில் அரபுத் தமிழில் பாடி இருப்பதோடு சமுதாயத்தில் ஊடுருவி இருந்த அனாச்சாரங்களை திருத்தியும், மக்களுக்கு அறிவுரை கூறியும் இஸ்லாமிய மக்களிடையே காணப்படும் வரதட்சனைக் கொடுமை, கந்தூரியின் பெயரால் நடக்கும் பித்அத்துக்களை சாடும் சீர்திருத்தப் பாடல்களையும் உள்ளடக்கிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாமாலைகளை அரபுத் தமிழில் எழுதி குவித்துள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அவர்கள் இயற்றிய மாலைகளில் சில

1. **ரஸூல் மாலை,**
2. **அதபு மாலை,**
3. **நெஞ்சரிவு மாலை**
4. **தோகை மாலை**
5. **பெரிய ஹதீஸ் மாணிக்க மாலை**
6. **சின்ன ஹதீஸ் மாணிக்க மாலை**
7. **நான்கு யார்கள்**

8. **காயத்துல் இக்திசார் மாலை**
9. **உலமா மாலை**
10. **நபி மாலை**
11. **ஸீரதுல் குர்ஆன் மாலை**
12. **பெண் புத்தி மாலை**
13. **கல்யாண பித்அத்து மாலை**
14. **நசீஹத் மாலை**
15. **குதுபா மாலை**
16. **ஹனஃபி மத்ஹப் மாலை**
17. **ஃமஃரிபா மாலை**
18. **புகையிலை விலக்கு மாலை**
19. **அர்கான் மாலை**
20. **மின்ஹாஜ் மாலை**
21. **தன்பாக் மாலை**
22. **பித்அத்து விலக்கு மாலை**
23. **மீரான் மாலை**
24. **ஹதீஃத் மாலை**
25. **மக்கா மாலை**

முனாஜாத்

அல்லாஹ் முனாஜாத், காரண முனாஜாத், ஹக்கு பேரில் முனாஜாத் என முஸ்லிம் புலவர்கள் பலராலும் முனாஜாத் பாடல்கள் பக்திச் சுவையுடன் பாடப்பட்டுள்ளது. மதுரை தமிழ் சங்க புலவராகிய செய்யிது முஹம்மத் ஆலிம் புலவரின் முனாஜாத் மாலை என்ற நூலில் 12 முனாஜாத்துக்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

உரைநடை இலக்கியங்கள்

கிஸ்ஸா எனும் சரித்திரம்

கதிஜா நாயகி சீவிய சரித்திரம், நாலிமாம் சரிதை, தமீம் அன்சாரி கிஸ்ஸா ஆகியவை அரபுத் தமிழ் உரைநடை இலக்கியங்களில் கிஸ்ஸா வகையைச் சார்ந்ததாகும்.

காயல்பட்டினம் காரண சரித்திரம்

காயலின் சரிதையைக் கூறும் இந்நூல் காயல்பட்டினம் பாளையத்து லெப்பை ஆலிம் அவர்களால் இயற்றப்பட்டது.[27]

தஃப்ஸீர்கள்

ஆரம்பக் காலத்தில் எழுதப்பட்ட திருமறை விரவுரைகள் அனைத்தும் அரபுத் தமிழிலேயே எழுதப்பட்டுள்ளன. திருக்குர்ஆனிற்கு தமிழில் விளக்க உரை எழுதக்கூடாது என்று மார்க்க அறிஞர்கள் தடை விதித்த போது அரபுத் தமிழில் எண்ணற்ற தஃப்ஸீர்கள் வெளிவரத் தொடங்கின.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
மௌலவி ஹா.அ.அஹ்மது அப்துல் காதிர் மஹ்ழரி P: 77-91

ஃபத்ஹுர் ரஹ்மான் ஃபீ தர்ஜமதி தஃப்ஸீருல் குர்ஆன்

அரபுத் தமிழில் முதலாவதாக எழுதப்பட்ட தஃப்ஸீர் இமாமுஸ் ஸைலான் செய்கு முஸ்தபா நாயகம் இப்னு பாவா ஆதம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் ஃபத்ஹுர் ரஹ்மான் ஃபீ தர்ஜமதி தஃப்ஸீருல் குர்ஆன் எனும் பெயரில் ஹிஜ்ரி 1291-ல் நான்கு பாகங்களில் வெளியானது. இத்தப்ஸீர் நெதர்லாந்தின் லைடன் பல்கலைகழகத்தின் ஆவணக்காப்பத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.[28]

ஷெய்க் முஸ்தபா நாயகம் அவர்கள் இலங்கையைச் சார்ந்த மாபெரும் பேரறிஞர் ஆவார்கள். இவர்கள் அரபுத்தமிழ் வரலாற்றில் தலை சிறந்த படைப்பாளர். முதல் தஃப்ஸீரை அரபுத் தமிழில் தந்தவர். மிகச் சிறந்த மொழிபெயர்ப்பாளர். அரபி மொழியிலிருந்து அரபுத் தமிழில் இவர் மொழிபெயர்த்த நூல்கள்

ஃபவாரிகுல் ஹிதாயா

ஸபீனதுன் நஜாஹ்

ஃபவாயிதுல் அகாயித்

காதிரிய்யதுன் நபவிய்யா எனும் சூபித்துவ அமைப்பிற்கு தலைவராக இருந்து சமூகத்திற்கு அளப்பெரும் பணியாற்றியவர். மாபெரும் இஸ்லாமிய சேவை புரிந்த இவர்கள் புனித ஹஜ் கடமை ஆற்ற சென்ற போது அங்கே மரணித்து மக்காவில் ஜென்னதுல் முஅல்லாவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளர்கள்.

ஃபத்ஹுல் கரீம்

காயல்பட்டினத்தைச் சார்ந்த நூஹு லெப்பை இப்னு அப்துல் காதிர் அவர்கள் இயற்றிய இத்தஃப்ஸீர் இரண்டு பாகங்களாக கிபி 1881 இல் மும்பையில் பிரசுரிக்கப்பட்டது. ஃபத்ஹுர் ரஹீம் எனும் தஃப்ஸீரும் இவர்களால் எழுதப்பட்டது. இவர்கள் இளைய நூஹு என்று அழைக்கப்பட்டார்கள்.

நூஹு லெப்பை ஆலிம்

காயல்பட்டினத்தைச் சார்ந்த இவர்கள் அரபுத் தமிழ் இலக்கியத் துறையில் மாபெரும் சேவையாற்றியவர்கள். அரபுத் தமிழில் தஃப்ஸீர் உட்பட ஏராளமான படைப்புகளை தந்துள்ளனர். கஸீததுல் புர்தா தர்ஜமா, ஃபத்ஹுல் மஜீத், நஃபஹாத்துல் இத்ரிய்யா ஃபீ ஷரஹில் வித்ரிய்யா, அர்கானுத்தீன், கஸஸுல் அவ்லியா, ஜவாஹிருஸ் ஸலீமா போன்ற எண்ணற்ற நூல்களை அரபுத் தமிழில் தொகுத்தளித்து முஸ்லிம் சமுதாயத்திற்கு மாபெரும் தொண்டாற்றியுள்ளர்கள்.

ஃபுதூஹாதுர் ரஹ்மானியா

காயல்பட்டணத்தைச் சார்ந்த மாதிஹுர் ரஸூலின் பேரரான ஹபீப் முஹம்மத் ஆலிம் அவர்கள் அரபுத்தமிழில் தாம் எழுதிய தஃப்ஸீருக்கு ஃபுதூஹாதுர் ரஹ்மானியா என்று பெயரிட்டனர். அதில் திருகுர்ஆன் வசனங்களுக்கு வெளிப்படை, அந்தரங்கமான இரு பொருளும் கொடுக்கப்பட்டுள்ளன. இத்தப்ஸீர் 1879 இல் மும்பையில் பிரசுரிக்கப்பட்டது.[29]

ஹமதுல் மன்னான்

இலங்கையைச் சார்ந்த சுலைமான் இப்னு முஹம்மத் அவர்கள் எழுதிய இத்தஃப்ஸீர் கி.பி 1897 இல் கொழும்பில் வெளியிடப்பட்டது.

மெய்ஞான நூல்கள்

அப்துல் காதிர் சாஹிப் அவர்களின் ஷம்ஸுல் மஃரிஃபா, மாப்பிள்ளை லெப்பை ஆலிம் நாயகம் அவர்களின் ஙனிமதுஸ் ஸாலிகீன், காயல்பட்டினம் முஹம்மத் லெப்பை ஆலிம் அவர்களின் ஆனந்தக் களிப்பு, சின்ன உவைஸ்னா ஆலிம் அவர்களின் ஹகீகத் மாலை, இலங்கையைச் சார்ந்த சித்தி லெப்பை என்னும் அறிஞரின் அஸ்ராருல் ஆலம் எனும் இஸ்லாமிய ஆன்மீகம் பற்றி எழுதப்பட்ட மெஞ்ஞான நூல்களும் அரபுத் தமிழில் இயற்றப்பட்டுள்ளது. ஆழமான தத்துவக் கருத்துக்களை வெளியிடும் அளவிற்கு மிக வளர்ச்சியும், வளமும் உள்ள மொழிநடையாக அரபுத்தமிழ் விளங்குவதை இது மிகச் சிறப்பாக உணர்த்துகிறது.[30]

பெண் சூபிக் கவிஞர்

பெண் சூபிக் கவிஞர்களில் ஒருவராகக் கருதப்படும் கீழக்கரையைச் சார்ந்த செய்யிது ஆசியா உம்மா அவர்கள் எழுதிய **மெய்ஞான தீப இரத்தினம்** எனும் அரபுத் தமிழ் நூல் மெய்ஞான சிந்தனைக் களஞ்சியமாகும். இறைவன், நபிகள் நாயகம், அபூபக்கர் நாயகம், கல்வத்து நாயகம், அஜ்மீர் ஆண்டகை, ஹஸன் ரலியல்லாஹ் அன்ஹு, ஹுஸைன் ரலியல்லாஹ் அன்ஹு, பல்லாக் வலி, முஹியதீன் ஆண்டகை, சாஹுல் ஹமீத் ஆண்டகை, ஆரிஃப் நாயகம், மற்றும் பிள்ளை தாலாட்டு, அடைக்கலம், பிரார்த்தனை, போன்ற 85 தலைப்புகளில் கன்னி, விருத்தம், ஆனந்தக் களிப்பு, கும்மி, வெண்பா, பதிகம் மாலை ஆகிய பல வகைகளில் அரபுத்தமிழில் பாடியுள்ளார்கள்.[31]

முதல் நாவல்

முதல் வரலாற்று நாவல் மதீனதுன் நுஹாஸ் எனும் தாமிர பட்டணமே!

ஆலிமுல் அரூஸ் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் கிபி 1858 இல் எழுதிய மதீனதுன் நுஹாஸ் தாமிரப்பட்டணம் எனும் நாவல் தான் இந்தியாவில் தமிழ் வரலாற்றில் முதல் இஸ்லாமிய நாவல் என ஆய்வுகள் கூறுகிறது. இந்நூல் முஹம்மத் சுலைமான் என்பவரால் கி.பி 1900 ஆம் ஆண்டு கொழும்பில் முதன் முதலாக வெளியிடப்பட்டது. பாகிர் யஸீத் இப்னு மலிக் அத்தாயி என்பார் ஃபாரசீக மொழியில் எழுதிய நாவலைத் தழுவி இது எழுதப்பட்டுள்ளது.[32]

இமாம் ஆலிமுல் அரூஸ் - மாப்பிள்ளை லெப்பை ஆலிம் நாயகம்

இவர்கள் கி.பி 1816 இல் காயல்பட்டினத்தில் பிறந்தார்கள். தந்தை செய்து அஹ்மத், தாயார் பெயர் ஆமினா, மாதிஹுர் ரஸூல் சதக்கத்துல்லாஹில் காஹிரி அவர்களின் வமிச வழியில் பிறந்த இவர்கள் சிறு வயதில் கீழக்கரையில் குடியேறினர். அரூஸியா மதரஸாவின் தலைவராக திகழ்ந்த இவர்கள் இலங்கையிலும், தமிழகத்திலும் ஆற்றிய மார்க்க சேவை மிக மகத்தானது. இலங்கையில் 355 பள்ளிவாசல்களை நிறுவினர். எண்ணற்ற அரபு, அரபுத் தமிழ் கிரந்தங்களை இச்சமூகத்திற்கு அர்பணித்துள்ளனர்.

அரபுத் தமிழில் பிற நூல்கள்

மஹ்மூது தீபி அவர்களின் துஹ்ஃபதுல் கிராம் ஃபீ இன்ஜாருல் மராம் எனும் அரபுத் தமிழ் நூல் 3 தொகுதிகளாக வெளியிடப்பட்டது. உமர் வலியுல்லாஹில் காஹிரி அவர்களின் மெஞ்ஞான புலம்பல். சாமு ஷிஹாப்தீன் ஆலிம் அவர்களின் மழை பைத் காயல்பட்டினம், கீழக்கரை பகுதிகளில் மழை தேடி பாடப்படுகிறது. ஹபீப் முஹம்மத் அவர்களின் மதாயிஹிர் ரஸூல் நபிகளாரின் புகழ் கூறும் காவியமாகும். 4 பாகங்களை கொண்ட அரபுத் தமிழ் அகராதியை உருவாக்கியவர் ஹகீம் முஹம்மத் அப்துல்லாஹ் சாஹிப் அவர்கள். ஆலிமுல் அரூஸ் அவர்களின் ராதிபதுல் ஜலாலியாவில் உள்ள “என்னை ஆளும் வல்லோனே” எனும் அரபுத்தமிழ் பாடல் இறை வேண்டல் பாடலாகும். மதீனாவின் ரவ்லா ஷரீபில் எழுதப்பட்டுள்ள “யா செய்யிதீ யாரசூலல்லாஹ்” எனும் கஸீதா அரபுத் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. மராகிபுல் மவாஹிப் ஃபீ மனாகிபி உலில் மதாஹிப் எனும் நூல் நான்கு இமாம்களின் வாழ்க்கை சரிதைக் கூறும் நூலாகும். உமர் வலியுல்லாஹில் காஹிரி அவர்களின் அல்லாஹ் முனாஜாத் அஹ்மத் முஹியதீன் ஆலிம் அவர்களின் மஜ்லிஸ் சலவாத் ஷெய்கு தாவூத் வலியுல்லாஹ் மௌலித் இவைகள் அரபுத் தமிழ் நூல்களாகும்.

இதழ்கள்

கிபி 1889 ஆம் ஆண்டில் “ கஷ்புர் ரான் ஃபீ கல்பில் ஜான்” என்ற வார ஏடும், கி.பி 1869 ஆம் ஆண்டு “அல்லாமத் லன்காபூரி” எனும் பத்திரிக்கையும், கி.பி 1882 இல் “முஸ்லிம் நேசன்” எனும் செய்தித் தாளும் கொழும்பிலிருந்து வெளியாகின. கி.பி 1906 ஆம் ஆண்டு சென்னையிலிருந்து “அஜாயிபுல் அக்பார்” என்ற ஒரு வார ஏடு வெளிவந்தது.[33]

அரபுத் தமிழ் இலக்கியங்களின் இன்றைய நிலை

கிபி எட்டாம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டு வரை அரபுத் தமிழ் சிறப்புற்று விளங்கியது. பொதுவாக ஆண்களை விட பெண்கள் தாம் இதை அதிகமாக எழுத படிக்க தெரிந்திருந்தனர். அக்காலத்தில் கடிதங்கள் கூட அரபுத் தமிழில் எழுதப்பட்டன. தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் இம்மொழி பிரபல்யமாக இருந்தது. அச்சுப் பொறி, கணினி பயன்பாடு வந்த போது இதன் வளர்ச்சி சரியத் தொடங்கியது.தமிழகம் மற்றும் இலங்கையில் ஒரு சில மதரஸாக்களில் மட்டுமே அரபுத் தமிழ் மூலமாக மார்க்க கல்விகள் கற்றுக் கொடுக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் இதில் பல பார்ஸி, உர்து மொழி கலந்துவிட்ட போதும் இலங்கையில் அரபுத் தமிழ் நிலை குலையாது நீடித்திருந்தது. மிகப் பெரிய அறிவு பொக்கிஷத்தை தொலைக்கிறோம் என்பதை அப்போது மக்கள் அறியாமல் இருந்ததால் இன்று இம்மொழி அழிவின் விளிம்பில் நிற்கிறது. அதைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மார்க்க அறிஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அரபுத் தமிழ் குறித்த ஆய்வுகளை மதரஸாக்களும், பல்கலைக் கழகங்களும் மேற்கொண்டு அதை தற்கால சமுதாயத்திற்கு வழங்குவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுத்தால் நமது அறிய பொக்கிஷமான அரபுத் தமிழை மீட்டெடுக்க முடியும் என்பது உறுதி. காயல்பட்டினம் முஅஸ்கருர் ரஹ்மான் மகளிர் அரபிக் கல்லூரியில் சிறமிகளுக்கு அரபுத் தமிழில் எழுதவும் படிக்கவும் தற்போது சிறப்பான பயிற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
மௌலவி ஹா.அ.அஹ்மது அப்துல் காதிர் மஹ்ழரி P: 77-91

நிறைவுரை

பாரம்பரியமிக்க அரபி, தமிழ் ஆகிய இரு மொழிகளின் கூட்டாக திகழும் அரபுத் தமிழ் இஸ்லாமிய மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்று சொன்னால் அது மிகையன்று. இஸ்லாமிய சமய நெறி நூல்கள், மார்க்க சட்டங்கள், திருக்குர்ஆன் விளக்கங்கள், இஸ்லாமிய சிற்றிலக்கியங்கள், காப்பியங்கள், கடிதங்கள், வாயிலாக அரபுத் தமிழ் வளர்ந்தது. முஸ்லீம்கள் மற்றுமின்றி, தமிழ் மக்களோடு ஒன்றிணைந்த இம்மொழியும் அதன் இலக்கியங்களும் நம் அடுத்த தலைமுறையினருக்கும் கிடைக்க வேண்டும் என்பதே நமது பேரவாவாகும். அதற்காக பாடுபடுவது நம் ஒவ்வொருவர் மீதும் கடமை என்பதை உணர்த்தி இவ்வாய்வுக் கட்டுரை நிறைவடைகிறது.

அடிக்குறிப்புகள்

1. The rise and Decline of Arabu- Tamil Language for Tamil Muslims
2. அரபுத் தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம் - Cultural heritage of Arabic Tamil
3. தமிழ் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள் - Tamil Islamic literary forms
4. The Identity of the Tamil Muslim
5. அரபுத் தமிழின் பண்பாட்டு பாரம்பரியம் - Cultural heritage of Arabic Tamil
6. Thaika Shuayb, Arabic,Arwi and Persion in sarandip and tamil nadu
7. Thaika Shuayb, Arabic,Arwi and Persion in sarandip and tamil nadu
8. அரபுத் தமிழும் அரபுத் தமிழ் ஆக்கங்களும் - Arabic Tamil and Arabic Tamil compositions
9. Thaika Shuayb, Arabic,Arwi and Persion in sarandip and tamil nadu
10. அரபுத் தமிழும் அரபுத் தமிழ் ஆக்கங்களும் - Arabic Tamil and Arabic Tamil compositions
11. Thaika Shuayb, Arabic,Arwi and Persion in sarandip and tamil nadu
12. அரபுத் தமிழும் அரபுத் தமிழ் ஆக்கங்களும் - Arabic Tamil and Arabic Tamil compositions
13. Thaika Shuayb, Arabic,Arwi and Persion in sarandip and tamil nadu
14. இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாச்சாரமும் - History and Culture of Sri Lankan Muslims
15. இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாச்சாரமும் - History and Culture of Sri Lankan Muslims
16. Thaika Shuayb, Arabic,Arwi and Persion in sarandip and tamil nadu
17. ஹத்யா மாலை - Hatya Mala
18. அரபுத் தமிழும் அரபுத் தமிழ் ஆக்கங்களும் - Arabic Tamil and Arabic Tamil compositions
19. அரபுத் தமிழும் அரபுத் தமிழ் ஆக்கங்களும் - Arabic Tamil and Arabic Tamil compositions

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
மௌலவி ஹா.அ.அஹ்மது அப்துல் காதிர் மஹ்ழரி P: 77-91

20. அரபுத் தமிழும் அரபுத் தமிழ் ஆக்கங்களும் - Arabic Tamil and Arabic Tamil compositions

21. Thaika Shuayb, Arabic,Arwi and Persion in sarandip and tamil nadu

22. Thaika Shuayb, Arabic,Arwi and Persion in sarandip and tamil nadu

23. அரபுத் தமிழும் அரபுத் தமிழ் ஆக்கங்களும் - Arabic Tamil and Arabic Tamil compositions

24. அப்துர் ரஹ்மான் கல்முனை - பிரசவ வேதனையை இலகுவாக்கும் தலை பாத்திஹா

25. தென்னிலங்கை முஸ்லிகளின் மதச் சார்பான இலக்கிய முயற்சிகள் - Pro-Religious Literary Efforts of Southern Muslims

26. தென்னிலங்கை முஸ்லிகளின் மதச் சார்பான இலக்கிய முயற்சிகள் - Pro-Religious Literary Efforts of Southern Muslims

27. காயல்பட்டணம் காரண சரித்திரம் – பாளையத்து லெப்பை ஆலிம் - Kayalpatnam Causal History – Palayathu Lebbai Alim

28. The rise and Decline of Arabu- Tamil Language for Tamil Muslims

29. The rise and Decline of Arabu- Tamil Language for Tamil Muslims

30. தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள் - Islamic Literary Forms in Tamil

31. தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள் - Islamic Literary Forms in Tamil

32. First Islamic Novel of India – Dr Zubair

33. The rise and Decline of Arabu- Tamil Language for Tamil Muslims

துணைநின்ற நூல்கள்

1. மணவை முஸ்தபா (1986)தமிழ் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள், மணவை பப்ளிகேசன் சென்னை - Manavai Mustafa (1986) Tamil Islamic Literary Forms, Manavai Publication Chennai.

2. கலாநிதி எஸ். எம். எம். மஸாஹிர் (2018) அரபுத் தமிழும் அரபுத் தமிழ் ஆக்கங்களும் ஜெசா கிராபிக்ஸ் மருதமுனை - Kalanidhi S. M. M. Masahir (2018) Arabic Tamil and Arabic Tamil Productions Jesa Graphics Maruthamunee

3. இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாச்சாரமும் - History and Culture of Sri Lankan Muslims

4. மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஹத்யா மாலை - Mappillai Lebbai Aalim Hatya Mala

5. அப்துர் ரஹ்மான் கல்முனை - பிரசவ வேதனையை இலகுவாக்கும் தலை பாத்திஹா – Abdur Rahman Kalmunai - Thalai Patiha which eases labor pains
6. சுமையா எம்.எஸ். & ரமீஸ் எம்.ஏ.எம். தென்னிலங்கை முஸ்லிகளின் மதச் சார்பான இலக்கிய முயற்சிகள் - Sumayya M.S. & Ramees M.A.M. Pro-Religious Literary Efforts of Southern Muslims
7. பாளையத்து லெப்பை ஆலிம் (1947)காயல்பட்டணம் காரண சரித்திரம் மஜீதிய்ய பிரஸ் சென்னை - Palayathu Lebbai Aalim (1947) Kayalpatnam Karana Saritram Majithiya Press Chennai
8. Dr. K,M,A, Ahamed Zubair (2019) First Islamic Novel of India – Dr Zubair
9. Dr. K.M.A. Ahamed Zubair (2014) The rise and Decline of Arabu- Tamil Language for Tamil Muslims
10. Dr.Thaika Shuayb Alim (1993) Arabic,Arwi and Persion in sarandip and tamil nadu

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
டாக்டர் அஹ்மது ஜபருல்லாஹ் நத்வி P: 92-99

அரபி மற்றும் தமிழ் வாக்கியங்களுக்கு மத்தியிலான ஒப்பீடு

Comparison between the Sentences of Arabic and Tamil

டாக்டர் அஹ்மது ஜபருல்லாஹ் நத்வி,

துணைப் பேராசிரியர்,

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி

Abstract:

Sahabahs who came to Kerala from Oman developed the skills of writing Tamil words using Arabic script. Their aim was that the Tamil people should also learn through the Arabic script. Thus, the influence of Arabic language was seen more in Tamil. As an expression of this evidence Arabic words are found in Tamil language. This article examines the similarities and differences between Arabic and Tamil sentences in this language mix.

Key words:

Arabic Language, Tamil Language, Comparison, Subject, Predicate, Noun, Verb

ஆய்வுச் சுருக்கம்

ஓமண் நாட்டிலிருந்து கேரளா வந்த ஸஹாபாக்கள் அரபி எழுத்துக்கள் மூலம் தமிழ் வார்த்தைகளை எழுதும் திறன்களை உருவாக்கிக் கொண்டனர். அரபு எழுத்து மூலம் தமிழ் மக்களும் அறிய வேண்டுமென்பது அவர்களின் நோக்கமாக இருந்தது. இதனால் அரபு மொழியின் தாக்கம் தமிழில் அதிகமாகக் காண்ப்பட்டது. இதன் வெளிப்பாடாக அரபு மொழி வார்த்தைகள் தமிழ் மொழியில் காணப்படுகின்றன. இந்த மொழிக்கலப்பில் அரபி மற்றும் தமிழ் வாக்கியங்கள் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

திறவுச்சொற்கள்

அரபுமொழி, தமிழ்மொழி, ஒப்பிடுதல், எழுவாய், பயனிலை, பெயர்ச்சொல், வினைச்சொல்.

முன்னுரை

இஸ்லாம் நபி முஹம்மது [ஸல்] அவர்களின் காலத்திலேயே இந்தியாவுக்கு வந்துவிட்டது. சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் காலத்திலேயே அரேபியர்கள் வியாபார விஷயமாக இந்தியாவுக்கு வருகை தந்து விட்டார்கள். நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் மக்காவில் குறைஷியர்களின் வேண்டுகோளை ஏற்று,

அல்லாஹ்வின் உதவியால் வானத்தில் காணப்பட்ட சந்திரனை இரண்டாகப் பிளந்தார்கள். சந்திரனின் ஒரு பகுதி கிழக்கிலும் மறு பகுதி மேற்கிலும் சாய்ந்து தென்பட்டது. இந்த அற்புதத்தை கேரளாவிலிருந்து கண்ட சேர மன்னர்களில் ஒருவரான சேரமான் பெருமாள் என்பவர் மக்காவுக்குச் சென்று நபி முஹம்மது[ஸல்] அவர்களைச் சந்தித்து இஸ்லாத்தை ஏற்றார். அவர் இந்தியாவுக்குத் திரும்பி வரும் போது மாலிக் பின் தீனார் [ரலி] போன்ற சில ஸஹாபாக்களையும் தன்னுடன் அழைத்து வந்தார். இடையில் ஓமன் நாட்டின் ஹள்ர மௌளத் பகுதியில் இறந்து விட்டார். அவருடன் வந்த ஸஹாபாக்கள் கேரளா வரை வந்து பள்ளிவாசலைக் கட்டினார்கள். மறுபுறம், திருக்குர்ஆனும் திரு நபி[ஸல்] அவர்களின் பொன்மொழிகளும் அரபியில் உள்ளதால் அம்மொழியைக் கற்கவும் பரப்பவும் முஸ்லிம்கள், குறிப்பாக, மார்க்க அறிஞர்கள் ஆர்வமாக இருந்தார்கள். அரபி எழுத்துக்கள் மூலம் தமிழ் வார்த்தைகளை எழுதும் திறன்களை உருவாக்கினார்கள். அதன் மூலம் அரபி எழுத்துக்களை தமிழ் மக்களும் தமிழ் வாசகங்களை அரபு மக்களும் அறிய வேண்டுமென்பது அவர்களின் நோக்கமாக இருந்துள்ளது. குறிப்பாக, இஸ்லாமிய சட்டதிட்டங்கள் அரபு தமிழ் மொழியில் கொண்டு வரப்பட்டன. இதனால் அரபு மொழியின் தாக்கம் தமிழிலும் தமிழ் மொழியின் தாக்கம் அரபியிலும் மிகப் பெரிய அளவில் ஏற்பட்டது. தமிழ் மொழியில் பல அரபுமொழி வார்த்தைகள் காணப்படுகின்றன.

ஒப்பிடுதல் [Comparison]

அரபுமொழி வாக்கியங்களும் தமிழ் மொழி வாக்கியங்களும் வித்தியாசனமானவையாகும். காரணம், அரபு மொழி “சாமிய்யா” [Semitic] மொழி வகையைச் சேர்ந்ததாகும். தமிழ் மொழி திராவிட வகையைச் சேர்ந்ததாகும். இக்கட்டுரையில் அரபுமொழி மற்றும் தமிழ்மொழி ஆகிய இரு மொழிகளின் வாக்கியங்களுக்கு மத்தியில் ஒப்பிடுதல் [Comparison] செய்யப்படுகிறது.

அரபுமொழியை மில்லியன் கணக்கான மக்கள் பேசி வருகிறார்கள். அது சர்வதேச மொழிகளில் ஒன்றாகும். அரபுமொழியின் ஒவ்வொரு எழுத்துக்கும் கூட தனிப்பட்ட சிறப்புகள் உள்ளன.

தமிழ் மொழியும் பழங்கால மொழிகளில் ஒன்றாகும். திராவிட வகையைச் சேர்ந்த இம்மொழியை தமிழ்நாடு மற்றும் இலங்கை போன்ற பல நாடுகளில் பேசப்படுகிறது.

இமாம்களின் கருத்துகள்

ஒவ்வொரு மொழிக்கும் தனிப்பட்ட வாக்கிய அமைப்புகள் உள்ளன. மனிதன் தனது உள்ளத்தில் உருவாகும் கருத்துக்களை மொழியின் மூலம் வெளிப்படுத்துகின்றான். அரபிமொழி வாக்கியங்களை இமாம் முபர்ரத் [ரஹ்] அவர்கள் இரண்டு வகையாகப் பிரிக்கின்றார்கள். 1. வினைச் சொல் வாக்கியம் 2. பெயர் சொல் வாக்கியம். இமாம் ஜமக்ஷரீ [ரஹ்] அவர்கள் அரபி வாக்கியங்களை நான்கு வகையாகப் பிரிக்கின்றார்கள்: 1. வினைச் சொல் வாக்கியம் 2. பெயர் சொல் வாக்கியம் 3. நிபந்தனை வாக்கியம் 4. காலம் மற்றும் இடத்தைச் சுட்டிக் காட்டும் வாக்கியம். இமாம் இப்னு ஹிஷாம் [ரஹ்] அவர்களோ அரபி வாக்கியங்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளார்கள்: 1. வினைச் சொல் வாக்கியம் 2. பெயர் சொல் வாக்கியம் 3. நிபந்தனை வாக்கியம்

இவ்வகையில் அரபு மொழியின் வாக்கிய அமைப்பு தனிப்பட்ட சிறப்புமிக்கதாகும்.

அரபு மொழியில் இரு வகை வாக்கியம்

தமிழ் மொழியில் பெயர் சொல் வாக்கியம் மட்டுமே காணப்படுகிறது. ஆனால் அரபு மொழியில் வினைச் சொல் வாக்கியம், பெயர்ச் சொல் வாக்கியம் என இரு வகை வாக்கியங்களும் காணப்படுகின்றன. தமிழில் பெயர்ச்சொல் வாக்கியம் பெயர்ச் சொல்லுடன் ஆரம்பமாகிறது. செய்பொருள் [Subject], செயப்படுபொருள் [Object] வினைச் சொல் [Verb] எனும் அமைப்பில் தமிழ் வாக்கியங்கள் உள்ளன. தமிழ் மொழி வாக்கியங்களில் வினைச் சொல்லாகிறது செயப்படுபொருளை அடுத்து உடனடியாக நிகழ்கிறது. அரபு மொழி வாக்கியங்களில் போன்று தமிழ் மொழி வாக்கியங்களில் வினைச் சொல்லை முதலாவதாகக் கொண்டு வருவது தவறானசட செயலாகும். எனவே, செய்பொருள், செயப்படுபொருள் அடுத்து வினைச் சொல் என்ற வரிசையில் தான் தமிழ் மொழி வாக்கியங்கள் இருக்க வேண்டும், முதலில் வினைச் சொல் பின்பு செய்பொருள் பின்பு செயப்படுபொருள் எனும் வரிசையில் இருக்காது.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
டாக்டர் அஹ்மது ஜபருல்லாஹ் நத்வி P: 92-99

வினைச் சொல்

அரபி மொழி வாக்கியங்களைப் பொருத்த வரை வார்த்தைகளில் வினைச் சொல்லுக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. அதுதான் சக்தி வாய்ந்ததாகவும், செய்பொருளுக்கு [Subject] ரஃபவு எனும் உயிர் அடையாளத்தையும் [Vowel Sign] செயப்படுபொருளுக்கு [Object] நஸப் எனும் உயிர் அடையாளத்தையும் வழங்குவதாகவும் அது உள்ளது. பொதுவாக, வாக்கியத்தை அமைப்பதில் வினைச் சொல்லுக்கு மிகுந்த முக்கியத்துவமுண்டு என்றால், அரபுமொழியைப் பொருத்த வரை வினைச் சொல் வாக்கியம், பெயர்ச் சொல் வாக்கியம் ஆகிய இரண்டையும் அமைப்பதில் வினைச் சொல் முக்கியப் பங்கு வகிக்கிறது. செயல் மற்றும் செயல் நடைபெற்றக் காலத்தை வழங்குவது வினைச் சொல்லாகும்.

Subject and Predicate [எழுவாய், பயனிலை]

அரபு மொழி வாக்கியத்தின் எழுவாய், பயனிலை ஆகிய இரண்டிற்கும் மத்தியில் தொடர்பை ஏற்படுத்த தனிப்பட்ட வார்த்தை எதுவும் பயன்படுத்தப்படுவதில்லை. எழுவாய் ஆனது பயனிலையுடன் சேர்ந்து வரும். ஆனால் தமிழ் மொழி வாக்கியம் இதற்கு மாறானதாகும். தமிழ் மொழியில் எழுவாய் மற்றும் பயனிலைக்கு மத்தியில் தொடர்பை ஏற்படுத்தக் கூடிய ஒரு வினைச் சொல் இருப்பது அவசியமாகும். உதாரணமாக, தமிழ் மொழியில் “மேசையானது சுத்தமாக இருக்கின்றது” எனக் கூறுகிறோம். இவ்வாக்கியத்தில் “மேசையானது” எனும் வார்த்தை எழுவாய் ஆகும். “சுத்தமாக” என்பது பயனிலை ஆகும். “இருக்கின்றது” என்பது இரண்டுக்கும் மத்தியில் தொடர்பை ஏற்படுத்துகின்ற வினைச் சொல் ஆகும். ஆனால் அரபி மொழியில் இதே வாசகத்தை வினைச் சொல் இல்லாமல் கூற முடியும். உதாரணமாக, **الطاولة نظيفة**

[அத்தாவிலத் நளீஃபத்துன்] இவ்விரு அரபி வார்த்தைகளில் முதல் வார்த்தை [வலப்பக்கத்தில் உள்ளது] எழுவாய் ஆகும். இரண்டாவது வார்த்தை [இடப்பக்கத்தில் உள்ள வார்த்தை] பயனிலை ஆகும். இவ்விரண்டுக்கும் மத்தியில் தொடர்பை ஏற்படுத்தும் மற்றொரு வார்த்தை இல்லை. இது அரபு மொழியின் சிறப்பாகும்.

செய்பொருள் [Subject] அரபு மொழியிலும் தமிழ் மொழியிலும்

தமிழ் வாக்கியத்தில் செய்பொருளானது எப்போதும் வாக்கியத்தின் ஆரம்பத்தில் இருக்கும். அரபு வாக்கியத்தில் செய்பொருளானது வினைச் சொல்லை அடுத்து உடனடியாக வரும். அதன் உயிர் அடையாளம் [Vowel Sign] ரஃபவு ஆக இருக்கும். அரபி வாக்கியத்தில் செய்பொருள் ஒன்று, தெளிவான பெயர்ச்சொல்லாக இருக்கும். உதாரணமாக:

كتب المدرس

[கதபல் முதர்ரிசு] பொருள்: ஆசிரியர் எழுதினார் என்பதாகும். வலது பக்கத்திலுள்ள **كتب** [கதப] என்பது வினைச்சொல்லாகும். அதன் பொருள் எழுதினார் என்பதாகும். இடது பக்கத்திலுள்ள **المدرس** [அல்-முதர்ரிசு] என்பது செய்பொருளாகும். அதன் பொருள் ஆசிரியர் என்பதாகும்.

சிலவேளை, செய்பொருளானது வினைச்சொல்லில் மறைந்து பிரதிப்பெயர்ச் சொல்லாகவும் [Pronoun] இருக்கும். உதாரணமாக:

ذهب متأخرا

இவ்வாக்கியத்தின் பொருள்: “அவன் தாமதமாகச் சென்றான்” என்பதாகும். இதில் வலது பக்கத்தில் உள்ள “தகப” எனும் வார்த்தை வினைச்சொல்லாகும். அதன் பொருள் அவன் சென்றான் என்பதாகும். இவ்வினைச் சொல்லில் செய்பொருளானது “ஹுவ” [அவன்] எனும் பிரதிப் பெயர்ச்சொல் வடிவில் மறைவாக உள்ளது. இடது பக்கத்திலுள்ள வார்த்தையின் பொருள் “தாமதமாக” என்பதாகும்.

சிலவேளை செய்பொருள் வெளிப்படையாகத் தெரிகின்ற பிரதிப் பெயர்சொல்லாகவும் வரும். உதாரணமாக:

قرأت الكتاب

[கரஃதுல் கிதாப] இவ்வாசகத்தின் பொருள்: நான் புத்தகத்தைப் படித்தேன் என்பதாகும். இதில் வலது பக்கத்திலுள்ள **قرأت** [கரஃது] என்பது வினைச் சொல்லாகும். இவ்வினைச் சொல்லின் இறுதியில் உள்ள “து” என்பது வெளிப்படையாகத் தென்படும் பிரதிப் பெயர்ச்சொல்லாகும். அதுதான் செய்பொருளும் ஆகும். இடது பக்கத்திலுள்ள “அல்-கிதாப” என்பது செயப்படுபொருளாகும். அதன் பொருள்: புத்தகத்தை என்பதாகும்.

அரபுமொழி வாசகத்தில் சிலவேளை வினைச் சொல்லை அடுத்து உடனடியாக வர வேண்டிய செய்பொருள் தனது இடத்தை விடுத்து வேறு இடத்திலும் வரலாம். எனினும் அது தனது இலக்கணக் கடமையைச் சரியாகச் செய்யும். உதாரணமாக:

أكرم محمدا حامد [அக்ரம முஹம்மதன் ஹாமிதுன்]

இவ்வாசகத்தின் பொருள்: "ஹாமித் எனும் பெயருடைய நபர் முஹம்மது எனும் பெயருடைய நபருக்குச் சங்கை செய்தார்" என்பதாகும். இவ்வாசகத்தில் வலது பக்கத்திலுள்ள முதல் வார்த்தை "அக்ரம" என்பதாகும். அதுதான் வினைச் சொல்லாகும். அதன் பொருள்: சங்கை செய்தான் என்பதாகும். அடுத்து உள்ள "முஹம்மதன்" என்பது செயப்படுபொருளாகும். அதன் பொருள் முஹம்மது என்ற நபருக்கு என்பதாகும். இறுதியில் உள்ள "ஹாமிதுன்" என்பது செய்பொருளாகும். அதன் பொருள் ஹாமித் என்ற நபர் என்பதாகும். இவ்வாசகத்தில் ஹாமித் எனும் செய்பொருள் வினைச் சொல்லை அடுத்து உடனடியாக வராமல் முஹம்மது எனும் செயப்படுபொருளை அடுத்து வந்துள்ளது. ஆனால் தமிழ்மொழி வாசகத்தில் செய்பொருளின் இடம் ஒருபோதும் மாறாது.

தனிப்பட்ட வார்த்தை

அரபுமொழியின் சிறப்பம்சங்களில் ஒன்று, அதன் சில தனிப்பட்ட வார்த்தைகள் முழு வாக்கியத்தின் பொருளையும் கொடுக்கும். இச்சிறப்பு தமிழ்மொழிக்கு இல்லை. உதாரணமாக:

ساعدناه [சாஅத்னாஹு]

இது ஒரேயொரு வார்த்தை தான்; ஆனால் இதன் பொருள்: "நாங்கள் அவனுக்கு உதவி செய்தோம்" என்பதாகும். ஒரு வாக்கியத்தின் பொருளை ஒரேயொரு அரபி வார்த்தைத் தருகிறது.

பிரதிப் பெயர்ச்சொற்கள் [Pronouns]

மேலும், தமிழ்மொழியில் பிரதிப் பெயர்ச்சொற்கள் [Pronouns] எப்போதும் வெளிப்படையாகத் தென்படுவதாகவே இருக்கும். வினைச்சொல்லில் மறைந்து வராது. ஆனால் அரபி வாசகத்தில் பிரதிப் பெயர்ச்சொற்கள் வினைச் சொல்லில் மறைந்தும் இருக்கும்; வெளிப்படையாகத் தென்படுவதாகவும் இருக்கும்.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
டாக்டர் அஹ்மது ஜபருல்லாஹ் நத்வி P: 92-99

அரபி மற்றும் தமிழ் வாக்கியத்தில் செயப்படுபொருள்

செயப்படுபொருள் என்பது ஒரு பெயர்ச்சொல்லாகும். செய்பொருளின் செயல் யார் மீது விழுகிறதோ அதுதான் செயப்படுபொருள் என்பதாகும். அரபுமொழியில் அதற்கான சரியான இடம் செய்பொருளை அடுத்த இடமாகும். அதன் உயிர் அடையாளம் [Vowel Sign] நஸப் என்பதாகும். செயப்படுபொருள் சிலவேளை வெளியில் தென்படுகின்ற பெயர்ச்சொல்லாக இருக்கும். உதாரணமாக:

يحب حامد محمدا [யுஹிப்பு ஹாமிதுன் முஹம்மதன்]

மேற்கண்ட வாக்கியத்தின் பொருள்: “ஹாமித் என்பவர் முஹம்மது என்பவரை விரும்புகிறான்” என்பதாகும். இவ்வாக்கியத்தில் வலப்பக்கதிலுள்ள முதல் வார்த்தை “யுஹிப்பு” என்பது வினைச் சொல்லாகும். அதன் பொருள் “விரும்புகிறான்” என்பதாகும். அதனை அடுத்து உள்ள ஹாமிதுன் என்பது செய்பொருளாகும். அதனை அடுத்து உள்ள முஹம்மதன் என்பது செயப்படுபொருளாகும்.

அரபிமொழியில், சிலவேளைகளில். செயப்படுபொருள் வினைச் சொல்லுடன் இணைந்து வெளிப்படையாகத் தென்படுகின்ற பிரதிப் பெயர்ச் சொல்லாகவும் செய்பொருளை விட முந்தியதாகவும் வரும். உதாரணமாக:

هداك الله [ஹதாகல்லாஹ்]

இவ்வாசகத்தின் பொருள்: அல்லாஹ் உனக்கு நேர்வழி காட்டுவானாக! என்பதாகும். இதில் வலது பக்கத்திலுள்ள முதல் வார்த்தை “ஹதா” என்பது வினைச்சொல்லாகும். அதன் பொருள்: “நேர்வழி காட்டுவானாக” என்பதாகும். அதனையடுத்து உள்ள ஒரேயொரு எழுத்து “க” என்பது செயப்படுபொருளாகும். அதனை அடுத்து உள்ள “அல்லாஹ்” எனும் வார்த்தை செய்பொருளாகும், “க” எனும் செயப்படுபொருள் அதனை அடுத்து உள்ள செய்பொருளுடன் ஒட்டி வந்துள்ளதால் “கல்லாஹ்” என வாசிக்கப்படுகிறது. உண்மையில் இது “ஹதாக அல்லாஹ்” என இருக்க வேண்டும். சிலவேளைகளில், செயப்படுபொருளானது, வினைச்சொல் மற்றும் செய்பொருளை விட முந்தியதாகவும் வெளியில் தெரிகின்ற பெயர்ச் சொல்லாகவும் இருக்கும். உதாரணமாக:

اياك نعبد [இய்யாக நஃபுது]

மேற்கண்ட வாசகத்தின் பொருள்: இறைவா! உன்னையே நாங்கள் வணங்குகிறோம் என்பதாகும். இதில் வலது பக்கத்திலுள்ள “இய்யாக” எனும் வார்த்தையின் இறுதியில் “க” எனும் எழுத்து உள்ளது. அதுதான் செயப்படுபொருளாகும். வெளிப்படையாகத் தெரிகின்ற பிரதிப் பெயர்ச்சொல்லாக உள்ளது. அதனை அடுத்துள்ள “நஃபுது” எனும் வார்த்தை வினைச் சொல்லாகும். அதில் “நாங்கள்” எனும் செய்பொருள் மறைந்து உள்ளது. அரபிமொழியில் செயப்படுபொருளானது செய்பொருளை விடவும் வினைச் சொல்லை விடவும் முந்தி வந்தால் அதற்கு இலக்கிய ரீதியில் பல நோக்கங்கள் உள்ளன. அவ்வாறே, அரபி மொழி வாக்கியங்களில் செயப்படுபொருளானது ஒன்றாக இருக்கலாம்; ஒன்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலும் இருக்கலாம்.

தமிழ் வாக்கியத்தில்

தமிழ் வாக்கியத்தில் செயப்படுபொருளானது செய்பொருளை அடுத்து உடனடியாகவோ அல்லது உடனடியாக அல்லாமலோ வரும். மேலும் வினைச் சொல்லுக்கு முன்பாகவும் வரும். உதாரணமாக: “சிறுவன் கதையொன்றை வாசித்தான்” இதில் “சிறுவன்” என்பது செய்பொருள் ஆகும். “கதையொன்றை” என்பது செயப்படுபொருளாகும். “வாசித்தான்” என்பது வினைச் சொல் ஆகும்.

முடிவுரை

தமிழ் மற்றும் அரபிமொழி வாக்கியங்களுக்கு மத்தியிலான ஒப்பீடுகளைப் பற்றி இன்னும் அதிகமாக விவாதிக்க முடியும் கட்டுரை மிகப் பெரியதாக ஆகி விடும் என அஞ்சியதால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம். எல்லா வல்ல இறைவன் வளமிக்க இவ்விரு மொழிகளிலும் பாண்டித்தியம் பெறும் பாக்கியத்தை நம்மனைவருக்கும் தந்தருள்வானாக!

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
முனைவர் எஸ்.எ.உஸ்மான் அலி & முனைவர் எம்.அஹ்மதுல்லாஹ் P: 100-107

அரபுத் தமிழ் வளர்த்த லெப்பைமார்களும் கையெழுத்துப் பிரதிகளும்

Lebbaimars and Manuscripts developed by Arabic Tamil

முனைவர் எஸ்.எ. உஸ்மான் அலி & முனைவர் எம். அஹ்மதுல்லாஹ்
உதவிப் பேராசிரியர், அரபி & இஸ்லாமிய இயலகம், பி.எஸ், அப்துர் ரஹ்மான்
கிரசன்ட் பல்கலைக் கழகம், வண்டலூர், சென்னை, 600048.
அலைபேசி; 9094416420, 9444143573
மின்னஞ்சல்; usmanali@crescent.education ahamedullah@crescent.education

ஆய்வுச் சுருக்கம்:

அரபு மொழி நம் மார்க்க மொழி, அது ஓர் உலகச் செம்மொழி, ஏறக்குறைய 50 நூற்றாண்டுகளின் வரலாற்றுக்குச் சொந்தமான இலக்கியத்தை தன்னுள் கொண்டுள்ள தரணியின் தன்னிகரில்லா மொழி, மொழிகளுக்கெல்லாம் தலையாய மொழி, மொழிகளில் மிகச் சிறந்த, தெளிவான, விசாலமான உள்ளடக்கத்தை கொண்ட உலகம் போற்றும் மொழி, எளிய முறையில் மனங்களில் ஊடுருவக்கூடிய ஏற்ற மிகுந்த மொழி.

இதோ தமிழ் என் அன்னைமொழி; அதுவும் ஓர் உலகச் செம்மொழி, எறக்குறைய 25 நூற்றாண்டுகளாக உலகில் தலைநிமிர்ந்து நிற்கும் ஒப்பற்றமொழி, திராவிட மொழிகளில் பரப்பளவில் பரந்த மொழி, தற்போது உலகளவில் தன்னுடைய இலக்கியங்களைப் போற்றும் பார் போற்றும் மொழி.

இத்தகையச் சிறப்பு மிக்க, நீண்ட கால இலக்கியப் பாரம்பரியமிக்க அரபு மொழிக்கும், இலக்கிய வளமிக்க தமிழ் மொழிக்கும் மத்தியில் பாலமாக விளங்கியதுதான் "லிஸானுல் அருவி" என்று சொல்லக்கூடிய "அரபுத் தமிழ்" என்னும் கலப்பு மொழியாகும். இந்த அரபுத்தமிழ் மூலம் இஸ்லாமிய போதனைகளை நம்முடையச் சான்றோர்கள் குறிப்பாகக் காயல்பட்டிணம், கீழக்கரைச் சார்ந்தவர்கள் பாமர மக்ககளுக்கு போதித்துள்ளனர்.

அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் அரபுத் தமிழின் புகலிடமான காயல்பட்டிணத்தின் பெண்மக்கள் இந்த அரபுத்தமிழில் கற்பதில் காட்டிய ஆர்வம், அதற்கான அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்திற்கும், அவர்கள் "இல்லம் தோறும் இனிமையாகக் காட்சியளிக்கக்கூடிய இஸ்லாமிய போதனைகளின் கையெழுத்துப் பிரதிகளே" சாட்சியாகும். இந்த கையெழுத்துப் பிரதிகளுக்கு அடித்தளமாக விளங்கியது லெப்பைமார்கள் நடத்திய குருகுலக்கல்வி முறையாகும். அது பற்றி சுருக்கமான தகவல்களே பகிர்வதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

திறவுச் சொற்கள்: லெப்பைமார்கள், கையெழுத்துப் பிரதிகள், காயல்பட்டிணம்.

Abstract

Arabic language is our religious language. It is a world classic language. It is an independent language that contains literature belonging to the history of almost 50 centuries. It is the chief language of all languages. It is a language that is admired by the world with the best, clearest and widest content of languages. It is a language that is easy to penetrate minds.

Here Tamil is my mother tongue. It is also a world classic, a unique language that has stood upright in the world for about 25 centuries, a language with a wide area among the Dravidian languages, and now a language that admires its literature worldwide.

The mixed language called "Arabic Tamil" which can be called "Lizanul Aruvi" is the bridge between such special, long-standing literary tradition of Arabic language and literary rich Tamil language. Through this Arabic-Tamil, our saints have taught Islamic teachings to the lay people, especially those from Kayalpattinam and Keejakara.

Especially the interest shown by the women of Kayalpattinam, the haven of Arabic Tamil in Tamil Nadu, to learn this Arabic Tamil, and all the efforts they have taken for it, They are "manuscripts of Islamic teachings that can be beautifully displayed in every home" is a testimony. The foundation of these manuscripts was the gurukula education system conducted by the Leppimaars. The purpose of this study is to share brief information about it.

Key Words : Labbais, Manuscripts, Kayalpattinam

முன்னுரை:

தமிழகத்திற்கும் அரபு நாடுகளுக்கு தொடர்பு மிகவும் தொன்மையானது. இந்த தொடர்பு சங்க காலத்திலிருந்தே இருந்தது என்பதற்கானச் சான்றுகள் வரலாற்று குறிப்புகளில் காணப்படுகிறது.

தமிழகத்தில் இஸ்லாம் பரவிய போது தமிழர்கள் பலர் இஸ்லாத்தை தங்களுடைய மார்க்கமாக ஏற்றுக் கொண்டார்கள். இதனால் தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்ட இம்மக்களுக்கு இஸ்லாத்தின் புனித வேதமான குர்ஆனை கற்பதற்கு அவசியம் ஏற்பட்டது. குர்ஆனோ அரபு மொழியாக அருளப்பட்டு இருந்தது.

இதனால்தான் அரபு மொழி, குர்ஆனின் மொழியாக பரிணமித்து இஸ்லாமிய பண்பாடு கலாச்சாரத்தோடு ஒன்றாக கலந்து இருக்கிறது. மேலும் அரபு மொழியை இஸ்லாமிய மக்கள் கண்ணும் கருத்துமாய் போற்றி வருகின்றனர். அதன் மீது ஒரு தனி அன்பு கொண்டுள்ளனர். இச்சுழலில் புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்களும் அரபு மொழியைக் கற்றனர்.

இஸ்லாத்தை புதிதாக ஏற்றவர்களிலும், பரம்பரையாக இஸ்லாத்திலிருந்து வந்தவர்களிலும் சிலருக்கு இஸ்லாமிய போதனைகளைக் கற்பிப்பது மற்றும் புரிய வைப்பதில் தொய்வு ஏற்பட்டது. ஏனைனில் அவர்களுக்கு அரபு எழுதுக்களை

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
முனைவர் எஸ்.எ.உஸ்மான் அலி & முனைவர் எம்.அஹ்மதுல்லாஹ் P: 100-107

வாசிகத் தெரிகிறது, ஆனால் அரபு மொழியை விளங்கத் தெரியாது, தமிழ் எழுத்துக்களை வாசிக்கத் தெரியவில்லை ஆனால் தமிழ் மொழியை விளங்க முடியும்.

இந்த நிலைமையை அறிந்த இஸ்லாமியச் சான்றோர்கள் மற்றும் லெப்பைமார்கள் அவர்களுக்கு இஸ்லாமிய போதனைகளை போதிப்பதற்காக அவர்கள் எடுத்துக் கொண்ட ஓர் ஆயுதமே இந்த அரபுத் தமிழ். ஆக தெரிந்த மொழியை, தெரிந்த எழுத்துக்களைக் கொண்ட மொழியால் வாசிக்கப் பயிற்றுவித்தல் என்பது எளிதானது. இந்த முறையில் பாமர மக்ககளின் உள்ளங்களிலும், இஸ்லாத்தை எற்றவர்களின் உள்ளங்களிலும் இஸ்லாமிய போதனைகள் வெகுவாக ஊடுருவியது,

இந்தக் காரணி அரபுத் தமிழின் தோற்றத்திற்கான காரணங்களில் ஓர் வலுவானக் காரணியாகும், இதற்குச் சான்றாகத்தான், முஸ்லிம் ஊர்களில் உள்ள வீட்டு பெண்களிடம் "இஸ்லாமிய போதனைகள் அரபுத் தமிழில் அணிவகுத்து இருப்பதைக் காண்கிறோம். இவ்வாறாகத் தோன்றியது தான் அரபுத் தமிழ்" ஆகும்.

இதுமட்டுமல்லாமல் ஆரம்பக்கால மார்க்க அறிஞர்கள் மற்றும் லெப்பைமார்கள் இஸ்லாமிய மார்க்கச் சிந்தனை சம்பந்தப்பட்ட திருமறைக்கான விரிவுரைகள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லுரைகள், அவர்களை ஆதாரமாகக் கொண்ட நடைமுறை விளக்கங்கள் அரபு எழுத்தில் மட்டுமே எழுதப்பட வேண்டும் என்ற கருத்து நெடுங்காலமாக நிலவி வந்தது. எனவே இக்காரணியும், நாம் மேற் சொல்லப்பட்ட காரணிக்கு வலுச் சேர்க்கிறது.

அரபுத் தமிழ்:

அரபுத் தமிழ் என்பது எழுத்துருவில் அரபியாகவும், உச்சரிப்பில் தமிழாகவும் விளங்கிய அற்புத புதுத்தமிழ் மொழியாகும்.

தமிழ் மொழியின் உயர்மெய்களான ள, ங, ன, ட ஆகிய எழுத்துக்களுக்குக்கேற்ற உச்சரிப்புக் கொண்ட எழுத்துக்கள் அரபு மொழியில் இல்லாததால் இந்தத் தமிழ் எழுத்துக்களுக்கு பொருத்தமாக ஒலிக்கின்ற அரபு எழுத்துக்களுக்கு முன்னும், பின்னும் மேலும், கீழும் குறியீடுகளைச் சேர்ந்து தக்க ஒலியை உண்டாக்க பயன்படுத்ததினர். இதனால் அரபு எழுத்துக்கள் 28 யிலிருந்து 36 ஆக உயர்ந்தது.

இந்த முறையில் அரபுச் சொற்கள் ஒலிச் சிதைவும், பொருட் சிதைவும் இன்றி எழுதவதற்கு அரபுத் தமிழ் வாய்ப்பாக அமைந்தது. இதனால் அரபுச் சொற்களின் முக்கியமானச் சொற்கள் அரபு மூல உச்சரிப்பு குன்றாமல் அவைகளின் இயல்பான வளமையும் மென்மையும் இணைந்து அப்படியே தமிழில் ஒலித்தன.

இத்தகைய சிறப்பு மிக்க அரபுத் தமிழை பயன் படுத்தி தமிழக ஆலிம் பெருமக்கள் குறிப்பாக காயல்பட்டிணம், கீழக்கரையைச் சார்ந்த சான்றோர்கள்

மற்றும் லெப்பைமார்கள் இஸ்லாமிய தகவல்கள் சார்ந்த நூல்களான குர்ஆன் விளக்கவுரை, ஹதீஸ், பிக்ஹ், அகாயித், தஸவ்வுஃப், அக்லாக் என்னும் மார்க்க ஒழுக்க சம்பந்தப்பட்ட நூற்கள், ஜீவிய சரிதைகள், மெய்ஞ்ஞான நூல்கள் என்று பல்வேறு வகையில் நூற்றுக்கணக்கான நூற்களை தொகுத்தனர்.

அதில் குறிப்பாக காயல்பட்டிணத்தைச் சார்ந்த மாதிஹுர் ரஸூலின் பேரன் மகனான ஹபீபு முஹம்மது ஆலிம் (புதூஹாத்துர் ரஹ்மானிய்யா பீ தப்ஸீர் கலாமிர் ரப்பானிய்யா), காயல்பட்டிணம் நூஹ் லெப்பை இப்னு அப்துல் காதிர் (தப்ஸீர் பத்ஹுல் கரீம்), பேர்ணாம்பட்டைச் சார்ந்த மௌலவி புர்ஹானுத்தீன் (தப்ஸீருல் குர்ஆன் பீ அஹ்ஸனில் குர்ஆன்) கீழக்கரையில் அடங்கியுள்ள மாப்பிள்ளை லெப்பை ஆலிம் என்னும் ஸையிது முஹம்மது லெப்பை (பத்ஹுத் தையான், மகானி, பத்ஹுல் மதீன், பத்ஹுஸ்ஸலாம்) மௌலவி அப்துர் ரஹ்மான் (இல்முல் பராயிள்-பாகப் பிரிவினை பற்றியது), காயல் முஹம்மது லெப்பை ஆலிம் (மனாஸிக்குல் ஹஜ்), காயல் பளுலுல்லாஹ் ஹபீப் முஹம்மது ஆலிம் (நான்கு மத்ஹபு விளக்கம்), ஹாபீஸ் முஹம்மது அப்துர் ரஹ்மான் (மின்ஹாஜில் மஸாபீஹ் பீ தர்ஜுமத்தில் மஸாபீஹ்) ரவணசமுத்திரத்தைச் சார்ந்த ஆலிம் ஜீலானில் பக்கீர் (மஜ்மூஉல் ஜவாஹிர் பீ மதாயிஹில் முஸ்தபா வல் அகாபிர்) போன்ற எண்ணற்ற உலமாக்கள் அரபுத் தமிழ் நூற்களை இயற்றியுள்ளனர்.

லெப்பைமார்கள்:

மேற் கூறபட்ட மேன்மைமிகு உலமாக்களைப் போன்று, தமிழகத்தில் அரபுத் தமிழின் ஊற்றாம் காயல்பட்டிணத்தில் “லெப்பைமார்கள்” என்று அன்புடன் அழைக்கப்படும் ஹஜ்ரத்மார்கள் இஸ்லாமிய போதனைகளை அரபுத் தமிழில் அழகாக கற்றுக் கொடுத்துள்ளார்கள். இதற்கு காயல் வீடுகளில் அலங்காரமாக காட்சி அளிக்கக்கூடிய அரபுத் தமிழ் ஏடுகள் என்னும் கையெழுத்துப் பிரதிகளே தக்கச் சான்றாகும்.

பள்ளிக்கூடம்:

அன்றையக் காலத்தில் லெப்பைமார்களின் வீடுகள், கல்விக் கூடமாக காட்சியளித்தது. இஸ்லாமியப் போதனைகளை கற்க வரக்கூடியவர்கள் இந்த லெப்பைமார்கள் வீடுகளில் வந்து கற்கவேண்டும். இந்த வீடுகளை அவர்கள் “பள்ளி” என்றே அழைப்பார்கள். ஆண்களுக்கு ஆண்கள், பெண்களுக்கு பெண்கள் என்று தனித் தனியாக லெப்பைமார்கள் இருந்துள்ளார்கள்.

இந்தப் பள்ளிகள், உலகக் கல்விக் கூடங்கள் நடைபெறும் நாட்களில் காலை, மாலை, இரவு என மூன்று நேரங்களில் நடைபெறும். உலகக் கல்வி கூடங்கள் நடைபெறாத நாட்களில் நாள் முழுவதும் நடைபெறும். யார் இந்த நாட்களில்

லெப்பைமார்களின் வீடுகளுக்குச் சென்று படிக்கிறார்களோ அவர்களுக்கு அவர்ரவர் வீடுகளிலிருந்து மதிய உணவுகள் வந்து விடும்.

அன்றையக் நாட்கள், மின்சாரம் வந்த ஆரம்பக் காலம் என்பதால் சில லெப்பைமார்கள் வீடுகளில் மின்சாரம் இல்லை. இதனால் கற்க வரக்கூடிய மாணவர்கள் ஒவ்வொருவரும் இரவு நேரம் பள்ளிக்கு வீட்டிலிருந்து தனித்தனியாக ஹரிகேன் விளக்குகளை கொண்டு சென்று, லெப்பையை சுற்றி வட்டமாக அமர்ந்து அந்த வெளிச்சத்தில் படிப்பார்கள். இது கிட்டத்தட்ட குருகுலக் கல்வியை அப்படியே பிரதிபலித்தது.

அரபுத் தமிழ் அவசியம்:

அன்றையக் காலத்தில் காயல்பட்டிணத்தில் அரபும், அரபுத்தமிழும் கற்கக் கூடிய அவசியம் எல்லா மக்களுக்கும் எற்பட்டது. ஏனென்றால் குர்ஆனுடைய மொழியான அறபியைத் தவிர வேறு கல்வி முறை அவர்களுக்குத் தெரியாது. எனவே தமிழை மட்டும் கற்றுக் கொண்ட இஸ்லாமிய மக்களைப் பார்ப்பதே அரிதாக இருந்தது. தமிழை மட்டுமே கற்றுயிருந்தால் அது அவர்களுக்கு மத்தியில் அந்தஸ்து குறைவாக கணிக்கப்பட்டது. எனவே லெப்பைமார்கள் அரபுத் தமிழின் மூலம் குர்ஆன் விளக்கவுரை, ஹதீஸ்கள் மற்றும் மார்க்கச் சட்டங்களை கற்பித்தார்கள். இந்த அரபுத் தமிழுக்கு அன்றையக் காலத்தில் “கோப்பேஷ்” என்று சொல்லப்படும்.

கற்பிக்கும் முறை:

லெப்பைமார்கள் ஆரம்பத்தில் அரபுத் தமிழை கற்பிப்பதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட ஆயுதம் மரப்பலகை தான். அவர்கள் அரபுத் தமிழ் எழுதுவதற்க்கு பேனா போன்ற வடிவில் மூங்கிலில் சீவப்பட்ட எழுதுக்கோலைக் கொண்டு, பலகையில் தமிழ் அரபுத் தமிழ் எழுதுக்களை எழுதி கொடுப்பார்கள். அந்த எழுத்துக்களை அப்போதே சரளமாக எழுதி ஒப்புவித்து விட்டால் பள்ளியில் (லெப்பை வீட்டில்) வைத்துவிட்டு சென்றுவிடுவார்கள். அதை வகுப்பில் உள்ள மூத்தமாணவர்கள் அல்லது மாணவிகள் அதைக் கழுவி மறுநாள் “மாலா” என்று சொல்லப்படும் சுண்ணாம்பு போன்ற பொருளைக் கொண்டு தேய்த்து காய வைத்துவிடுவார்கள். இவ்வாறு அதை மறுநாள் எழுதுவதற்கு தயார் செய்துவிடுவார்கள்.

அன்றைய தினமே அரபுத் தமிழ் எழுத்துக்களை ஒப்புவிக்காமல் வந்தால், அந்த மரப்பலகையை மாணவ, மாணவிகள் அவரவர் வீடுகளுக்கு எடுத்துச் சென்று, படித்துவிட்டு மறுநாள் வந்து லெப்பையிடம் ஒப்புவிப்பார்கள். அவர்களின் ஒப்புவிப்பு சரியாக இருந்து விட்டால், லெப்பைமார்கள் அந்த மரப்பலகையில் ”நன்று” என்பதற்கு அடையாளமாக வட்டம் போடுவார்கள். பிறகு அதை தண்ணீரால் கழுவி அன்றைய வகுப்பில் எழுதுவதற்கு தோதுவாக மாலா என்ற சுண்ணாம்பை தடவி வைப்பார்கள். இவ்வாறாக ஒவ்வொரு நாளும் அரபுத் தமிழின் எழுத்துக்களை

புரியவைப்பார்கள். அரபுத்தமிழ் எழுதுக்களை சரளமாக கற்ற பிறகு அந்த எழுத்துக்களின் மூலம் இஸ்லாமிய போதனைகளையும் லெப்பைமார்கள் கற்றுக் கொடுத்தார்கள்.

இவ்வாறாக அரபுத் தமிழைக் கற்றுக் கொண்ட பெண்மக்கள் காயல்பட்டிணத்தில் அதிகம். அவ்வாறு லெப்பைமார்களிடம் அரபுத் தமிழைக் கற்றுக் கொண்டு, இஸ்லாமிய போதனைகளில் மிகச் சிறந்து விளங்கிய இரண்டு பெண்மணிகளின் கையெழுத்துப் பிரதிகளை ஆய்வு செய்யும் பாக்கியம் என்னுடைய மாணவர் மூலம் கிடைத்தது, அப்பெண்மக்களின் பெயர்கள் A.T பீனா சலீமா, அன்னாரின் சகோதரி மர்ஹூமா A.T பீனா நூர்ஜஹான்.

பீனா A.T குடும்பத்தினர்:

காயல்பட்டிணம் குத்துக்கல் தெருவைச் சேர்ந்த P.M.K அஹ்மது தாஹிர், பாலயம் பாத்திமா கதீஜா தம்பதியருக்கு பிறந்தவர்கள் தான் அம்மையார் பீனா A.T சலீமா (வயது 74) மற்றும் அன்னாரின் சகோதரி மர்ஹூமா பீனா A.T நூர்ஜஹான்.

இவர்கள் லெப்பைமார்களிடம் அரபுத் தமிழைக் கற்று அதனை தங்களுடைய ஏடுகளில் கையெழுத்தாக எழுதி பதிவு செய்துள்ளார்கள். அவர்களின் அரபு, அரபுத் தமிழ் மற்றும் தமிழ் எழுத்துக்கள் மிகத் தெளிவாக அச்சிடப்பட்டதைப் போன்று இருந்தது. இது என்னுடைய புருவங்களை உயர்த்தியது. 20க்கும் மேற்பட்ட ஏடுகளை இவர்கள் கைகளால் எழுதி இருப்பது, மனங்களை பரவசம் அடையச் செய்தது.

அந்த கையெழுத்துப் பிரதிகளில் குர்ஆன், ஹதீஸ்கள், பிக்ஹ் என்னும் மார்க்கச் சட்டங்கள், நபிமார்கள், சஹாபாக்கள், இமாம்கள் பற்றிய அவசியமான, முக்கியமான குறிப்புகள், பராஅத், ஆஷுரா நாளின் சிறப்புகள் மற்றும் துஆக்கள், அறிவும், ஒழுக்கமும் சம்பந்தமான சொற்றொடர்கள், அதற்கான விளக்கங்கள், ஈமானுடைய பர்ளுகள், அதனுடைய முக்கியத்துவங்கள், கத்முல் குர்ஆன் துஆக்கள் மற்றும் இறைநேசர் ஸிஹாபுத்தீன் (ரஹ்) அவர்கள் எழுதிய ஹதியா மாலை, ஸலாத்துல் அர்கான் மாலை போன்றவை அடங்கும்.

இவ்வாறு காயல்பட்டிணத்தைச் சார்ந்த லெப்பைமார்கள், குர்ஆன், ஹதீஸ்களில் பரந்து விரிந்து காணப்படும் விளக்கங்கள் நற்போதனைகள் மற்றும் அறநெறிகளை எவ்வித ரசனைகளும் மாறாமல் அரபு மொழி படிக்க தெரிந்த தமிழ் மக்களுக்கு, அரபுத் தமிழில் தொகுத்தளித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம்

லெப்பைமார்கள் அரபியையும், தமிழையும் வளர்த்தத்தோடு அரபுத் தமிழையும் அழிவினின்றும் பாதுகாத்தார்கள்.

முடிவுரை:

அரபு மொழியை மார்க்க மொழியாகவும், தமிழைத் தாய் மொழியாகவும் கொண்ட இந்த லெப்பைமார்களின் தலையாயப் பணி என்பது அவர்களின் புனித நூலான குர்ஆன் மற்றும் தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் செயல்பாடுகளின் மேன்மையை பற்றி உலகறிய எடுத்துரைப்பதுதான்.

அந்த வகையில் தமிழ் அறிந்து அரபு மொழியை வாசிக்கத் தெரிந்த பாமர மக்களும், இஸ்லாத்தை புதிதாக ஏற்றவர்களும் முழுமையாக இஸ்லாத்தை அறிய வேண்டும் என்ற நன்னோக்கில் அவர்கள் எடுத்த முயற்சியின் விளைவு தான் அரபுத் தமிழாகும். இவ்வாறு அவர்கள் அரபு தமிழை வளர்ப்பதில் காட்டிய பணி மகத்தானது.

இந்த லெப்பைமார்கள் அரபுத் தமிழில் கற்றுக் கொடுத்த இஸ்லாமிய போதனைகளை விடாமுயற்சியுடன் தங்களுடைய பல்வேறு வீட்டு பணிகளுக்கு மத்தியில், ஏடுகளில் பதிவு செய்து இன்றைய தலைமுறையும் பார்த்து இன்புறச் செய்த காயல் பெண்மக்களின் சமுதாயப்பணி பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரியது.

என்றாலும் அரபுத் தமிழை கற்ற மக்கள் “யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்ற திருமூலரின் சொற்றொடரை பறைசாற்றும் வகையில் தங்களுடைய தலைமுறைகளுக்கும், சந்ததிகளுக்கும் அதனை கற்றுக் கொடுத்து, அரபுத் தமிழை உயிர்ப்பிக்க வேண்டும் என்பதே இந்த ஆய்வின் வேண்டுதலாகும்.

காயல் இல்லங்களில் பரவி கிடக்கிற அரபுத் தமிழ் கையேடுகளை ஒன்று சேர்த்து, இஸ்லாமிய ஒளியில் தலைப்பிட்டு, கோர்வை செய்து அச்சடித்து வெளியிட வேண்டும் என்பதும் இந்த ஆய்வின் தலையாய வேண்டுதலாகும்.

இவ்வாறு செய்வதன் மூலம் அரபுத் தமிழ் உயிர் பெறுவது மட்டுமல்ல, தமிழ், அரபு மொழிக்கு மத்தியில் இது பாலமாக அமையும் என்பதிலும், இந்த பழமையான உறுதியான பாலத்தில் தமிழ் மற்றும் அரபு உலகச் செம்மொழிகளின் மேன்மை உலகம் முழுவதும் பரவும் என்பதிலும் எவ்வித ஐயமும் இல்லை.

“சிறக்கட்டும் தமிழ் மொழி!” “வெல்லட்டும் அரபு மொழி!” “வளரட்டும் அரபுத் தமிழ் கூட்டு மொழி!”.

துணை நூற்கள்:

1. தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள், மணவை முஸ்தபா மீரா பப்ளிகேஷன், இரண்டாவது பதிப்பு, சென்னை, 1995.
2. அரபுத் தமிழும் அரபுத் தமிழ் ஆக்கங்களும், கலாநிதி எஸ், எம், எம், மஸாஹிர், முதல் பதிப்பு சமூகவியல் ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், டிசம்பர் 2018.
3. பீனா ஏ.டி சலீமாவின் கையெழுத்துப் பிரதிகள், காயல்பட்டிணம், 1966.
4. பீனா ஏ.டி நூர்ஜகான் கையெழுத்துப் பிரதிகள், காயல்பட்டிணம், 1966.

Reference :

1. Arabic Arwi, and Persian in Sarandib and Tamil Nadu, Dr. Thayka Shuayb Alim, Imamul Arus Trust, Madras, First Edition, 1993.
2. A Structure of Islamic Litratures, Manavai Mustafa Meera Publications, Chennai. Second edition – 1995.
3. Kalanithi S.M.M. Masagir, Arabu Tamilum Arabu tamil aakkangalum, Srilankan Southeast University, Oluvil. December 2018.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Movlavi B.M.Khaleelur Rahman Manbaee P: 108-120

The origin of Arabut Tamil And the socio-religious contribution of Muslims

அறபுத் தமிழ் தோற்றமும் முஸ்லிம்களின் சமூக - மத பங்களிப்பும்

Moulavi B. M. Khaleelur Rahman Manbaee, M.A., M.Phil.
Imam: Masjid Thaqwa, Madrasa Bilal
65/5, Duming Kuppam, Santhome,
Mylapore, Chennai- 600 004
✆ 944431 4976 / 84282 79249

Abstract:

Arabic, originated as a commercial language in Tamil Nadu, blossomed later into a source of spiritual quest for Muslims. Later, this Arvi language called Arabic Tamil was developed by those who reached the highest level of spirituality and spread it every nook and corner of Tamil Nadu. Arabic Tamil is a new culture that emerged in Tamil Nadu, the abode of the world's oldest civilization. This article has discussed in detail about the way it was formed, the period, the people who created it, Arabic Tamil language style, and what the other countries wherein languages like Arabic Tamil have been developed. Islamic Tamil literature exists in two forms, " Arabic Tamil works and Tamil traditional works". In these aspects there have been many talks about Arabut Tamil works also.

Key Words:

Madrasathul mavali, The base does not change, All requirements, Mezan, The tenderness period, Fatwa, Circular case, Kashpuran Fee Qalbil Jan,

ஆய்வுச்சுருக்கம்

தமிழ்நாட்டின் வணிக மொழியாக உருவான அறபு மொழி, பிற்காலத்தில் இஸ்லாமியர்களுக்கு ஆன்மீகத் தேடலாக மலர்ந்தது. பிற்காலத்தில் இந்த அறபுத் தமிழ் என்றழைக்கப்படும் ஆர்வி மொழி ஆன்மிகத்தில் உயர்ந்த நிலையை அடைந்தவர்களால் வளர்க்கப்பட்டு தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் பரவியது. உலகின் தொன்மையான நாகரிகத்தின் உறைவிடமான தமிழகத்தில் உருவான புதிய பண்பாடே அறபுத் தமிழ். அது உருவான விதம், காலம், உருவாக்கிய மக்கள், அறபுத் தமிழ் மொழி நடை, அறபுத் தமிழ் போன்ற மொழிகள் வளர்ந்த பிற நாடுகள் எவை என இக்கட்டுரை விரிவாகப் பேசியுள்ளது. இஸ்லாமிய தமிழ் இலக்கியம் "அறபுத் தமிழ் படைப்புகள் மற்றும் தமிழ் பாரம்பரிய படைப்புகள்" என இரண்டு வடிவங்களில் உள்ளது. இந்த இரண்டிலும் அறபுத் தமிழ்ப் படைப்புகள் குறித்தும் பல பேச்சுக்கள் வந்துள்ளன.

திறவுச் சொற்கள்:

அச்சரம், நாளாந்த தேவைகள், தொன்மை காலம், வட்டார வழக்கு

முன்னுரை

தமிழ்நாட்டில் வணிக மொழியாகத் தோன்றிய அறபு மொழி, பிற்காலத்தில் முஸ்லிம்களின் ஆன்மிகத் தேடலுக்கான தோற்றுவாயாக மலர்ந்தது. பின்னர் ஆன்மிகத்தின் உச்ச நிலையை அடைந்தவர்களால் அறபுத் தமிழ் எனும் அர்வி மொழி உருவாகி பட்டி தொட்டி எங்கும் பரவியது. உலகின் ஆகப் பழமையான நாகரீகம் தோன்றியத் தமிழ்நாட்டில் புதிய கலாச்சாரமாக உருவெடுத்ததுதான் அறபுத் தமிழ். இது உருவான விதம், காலம், உருவாக்கியவர்கள் குறித்தும் அறபுத் தமிழ் மொழி நடை , அறபுத் தமிழ் போன்ற மொழிகள் எந்தெந்த நாடுகளில் உருவாகி இருக்கின்றன என்பது குறித்தும் இந்த கட்டுரையில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. இஸ்லாமிய தமிழ் இலக்கியம், "அறபுத் தமிழ் ஆக்கங்கள், தமிழ் மரபு வழி ஆக்கங்கள்" என இரு வடிவங்களில் இருக்கிறது. இவற்றில் அறபுத் தமிழ் ஆக்கங்கள் குறித்தும் பேசப்பட்டுள்ளது.

இரண்டு செம்மொழிகளில் இருந்து உருவான அறபுத் தமிழ்

கிரேக்கம், சமஸ்கிருதம், இலத்தீன், பாரசீகம், அறபு, எபிரேயம், சீனம், தமிழ் ஆகிய எட்டு மொழிகள் உலகின் செம்மொழிகளாகும்.

இந்த எட்டு செம்மொழிகளில் அறபு, தமிழ் ஆகிய இரண்டின் மூலமாக உருவான கிளை மொழிதான் அறபுத் தமிழ் எனும் அர்வி. கி.பி 8 ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்திலும் இலங்கையிலும் சிறார்கள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து தரப்பு இஸ்லாமியர்களாலும் அங்கீகரிக்கப்பட்டிருந்த அன்பு மொழி.

தமிழ் மொழி சொற்களால், அரபி மொழி எழுத்து வடிவில் உண்டானது தான் அர்வி. அறபு ஓசைகளாலும் இலக்கிய நடையாலும் தமிழ் மொழிக்கு மேலும் செழிப்பைத் தேடித்தந்த மொழி அறபுத் தமிழ்.

1982 ஆம் ஆண்டில் கீழக்கரை மதரஸத்துல் மவாலிக்கில் நடைபெற்ற அறபுத் தமிழ் மாநாட்டில் சமர்ப்பித்த ‘தமிழும் அறபும் - ஓர் ஒப்பு நோக்கு’ எனும் தலைப்பில் அமைந்த கட்டுரையில் தமிழ் பேசும் முஸ்லிம்கள் தான் அரபியைத் தோற்றுவித்தனர் என்று க. அப்துல் கபூர் அவர்கள் கூறினார்கள்.

தமிழ்நாட்டில் குடியேறிய அரபிகள் தமிழைக் கற்றுக் கொண்டதுடன் அதனை அரபி எழுத்துக்களால் எழுதினர். இதுவே அறபுத்தமிழ் என்று அழைக்கின்றோம்.

அரேபியர்கள் தான் அரபியைத் தோற்றவித்தனர் என்று சேக் உசேனும், சையது அகமதுவும் கூறுகின்றனர்.

மேற்கண்ட இரண்டு கருத்துக்களையும் அ.மா. சாமி அவர்கள் எழுதிய தாவுத்ஷா இலக்கியம் பக்கம் 18 - 22 , நஹியா, ஏ.எம். அஸீஸுைம் தமிழும், பக்கம் 37 - 53 விலும் குறிப்பிடுகின்றனர்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே தமிழக மக்களோடு அரபியர்களுக்கு வணிகத் தொடர்பு இருந்தது.

எனவே தமிழகம் வந்த அரேபியர்கள் தமிழர்களோடு வியாபார ஒப்பந்தங்கள் சம்பந்தமாக பேசிக் கொள்ளும் போது தமிழக வியாபாரிகளின் பெயர்கள், அவர்கள் விலாசம், தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களின் பெயர்கள் ஆகியவற்றை அரேபியர்கள் தம் அறபு மொழியில் தம் நினைவில் இருப்பதற்காக எழுதி வைத்துக்கொண்டார்கள்.

வணிகம் என்பதால் தமிழர்களில் சிலர் அரபி மொழியை அச்சரம் பிசகாமல் பேசக் கற்றுக் கொண்டதோடு எழுதவும் கற்றுக் கொண்டார்கள்.

இரு மொழி சாராருக்கும் புரியும் படியான பொருட்களின் பெயர்ச் சொற்களும் (சந்தன மரம் ஏலக்காய் - سندن مرم ، ييلكاي)

மனிதர்களின் பெயர்களும் - (ராமசாமி , ஜெயபால் ரத்தினம் رام سامی، جيبال رتتنم) அறபு மொழியிலேயே எழுதிக் கொண்டார்கள்.

இந்நிலையில் இஸ்லாம் மார்க்கம் தமிழகத்தைத் தழுவியதும் அதை அறபு மொழியிலேயே எதிர்கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்திலும், ஏற்கனவே அறபு மொழியை எழுத தெரிந்திருந்த தமிழர்கள் மார்க்க விஷயங்களைத் தமிழ் சொற்களில் அறபு எழுத்து வடிவில் எழுதத் தொடங்கினார்கள்.

எனவே அறபு மொழி வாசிக்கவும் தமிழ் மொழி பேசவும் தெரிந்த தமிழ் முஸ்லிம்கள் அறபுத் தமிழில் அழகுற எழுதத் தொடங்கினார்கள்.

இந்த அர்வி மொழி தமிழ்நாட்டில் காயல்பட்டினத்தில் முதன் முதலில் உருவானது என்றே அனேக எழுத்தாளர்கள் கூறுகிறார்கள்.

அறபுத் தமிழ் உருவானதற்கு நல்லதொரு காரணத்தை மவ்லவி, தைக்கா ஷுஐப் ஆலிம் அவர்கள் கூறுகிறார்கள்.

“தமிழ் முஸ்லிம்கள் தமிழன் என்ற அடிப்படையான அடையாளத்தை இழந்து விடாமல், அதே சமயம் தம் மார்க்கக் கலாச்சாரத்தை காத்துக் கொள்ள வேண்டிய

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Movlavi B.M.Khaleelur Rahman Manbaee P: 108-120

அவசியத்தை உணர்ந்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு கை கொடுத்ததும், கலாச்சாரத்தை காத்துக் கொள்ளும் கேடயமாகத் திகழ்ந்ததும் அறபுத்தமிழ் எனும் அர்வி. தங்கள் சமயத்துடன் ஒத்துவராத சமய இலக்கியங்களைப் படிப்பதிலிருந்து தமிழ் முஸ்லிம்களை அறபுத்தமிழ் காப்பாற்றியது".

அறபுத்தமிழ் என்பது வெறும் அறபு எழுத்துக்களால் மட்டும் எழுதப்பட்ட தமிழ் மட்டுமல்ல. நூற்றுக்கணக்கான தூய அறபுப் பதங்கள் அதில் கலந்திருந்தன. சமயப் போதனை மற்றும் சமயத் தேவைகளுக்காக மட்டுமன்றி நாளாந்த தேவைகளுக்காகவும் இந்த மொழியை முஸ்லிம்கள் பயன்படுத்தினர். வர்த்தக நடவடிக்கைகள், சொத்துப் பரிமாற்றம், பள்ளிவாசல் அறிவித்தல்கள், அழைப்பிதழ்கள், மீசான் கல்வெட்டுக்கள், கடிதங்கள், நூல்களில் எழுதப்படும் குறிப்புக்கள் உட்பட பல சமூகச் செயற்பாடுகளுக்கு அர்வி முஸ்லிம்கள் அறபுத் தமிழைப் பயன்படுத்தினர்.

அறபு மொழி வார்த்தையின் பொருளை, முழுமையாக வெளிப்படுத்தும் தமிழ் சொற்கள் கிடைக்காததாலும், அறபு மொழி வார்த்தையின் பொருளை முழுமையாக வெளிப்படுத்தாத வார்த்தைக்கு பகரமாக ஓரளவு நிகரான தமிழ் வார்த்தை கிடைத்த போதும் மன நிறைவு பெறாத இஸ்லாமியர்கள் தேர்ந்தெடுத்த வழி தான் அறபுத் தமிழ் எனும் அர்வி. அதேநேரம் அவர்கள் தம் கலாசாரப் பண்பாட்டுத் தனித்துவம் பாதுகாக்கப்படுவதற்காகவும் அறபுத் தமிழைத் தோற்றுவித்தனர்.

அறபு எழுத்துக்களில் எழுதப்பட்ட அறபுத் தமிழ் நூல்கள், தமிழ் எழுத்துக்களில் எமுதப்பட்ட தமிழ் நூல்களை விடப் புனிதமானது என்று எண்ணிய பாமர மக்களும் இஸ்லாமியரிடையே இருந்த காலம் அது. ஆழமான இஸ்லாமிய ஆன்மீக விசயங்களுக்கும், இஸ்லாம் மார்க்க கருத்துகளை சரியாகக் குறிப்பிடுவதற்கும் அறபுச் சொற்களையே முஸ்லிம்கள் தொன்மைக்காலம் முதல் பயன்படுத்திப் பழகி இருந்தனர்.

எனவேதான் திருக்குர்ஆனுக்கு மொழிபெயர்ப்போ, விளக்க உரைகளோ அறபு அல்லாத மொழிகளில் எழுதப்படக்கூடாது என்கிற கருத்தாக்கம் அன்று வாழ்ந்த உலமாக்களால் மக்களிடையே (1920 கள் வரை கூட) ஃபத்வா வழங்கப்பட்டிருந்தது.

அதனால் தமிழ் ஓசையில், அறபு லிபி - எழுத்து முறையில் திருக்குர்ஆன் ஹதீஸ் மற்றும் மார்க்கச் சட்டங்கள் அறபுத் தமிழில் எழுதப்பட்டது. அல்லாஹ்வின் வேதமான திருக்குர்ஆனின் கருத்தையும், நபிகள் நாயகம் மொழிந்த ஹதீஸ்களின் கருத்தையும், ஆன்மிக கருத்துக்களையும் தெளிவாகத் தெரியவும் புரியவும் பயன்படும் மொழி அறபு மொழி தான் என்பதில் முற்கால முஸ்லிம்கள் உறுதியாக இருந்தார்கள்.

ஆன்மிகத்தில் மேம்படவே அல்லாஹ், ரசூல் மற்றும் ஷாஹ் வலியுல்லாஹ் திஹ்லவி, இமாம் கஸ்ஸாலி போன்றவர்கள் காட்டிய ஆன்மிக வழிகாட்டுதல்களை அறிய அவர்களின் மொழியான அறபு மொழியை முஸ்லிம்கள் கற்றுத் தேறினார்கள். தாம் அறிந்த ஆன்மிகக் கருத்துக்களை வெளிப்படுத்த அறபு மொழி எழுத்து வழியாக தமிழ் ஓசையில் எழுதப்பட்டதுதான் அர்வி - அறபுத் தமிழ்.

எனவே முஸ்லிம்களின் ஆன்மிக மொழி அறபுத் தமிழ். அறபுத் தமிழில் தஸவ்வுப் என்னும் இஸ்லாமிய ஆன்மிகவியல் எழுதப்பட்ட நூல்களில் சித்திலெப்பையின் 'அஸ்ராருல் ஆலம்' மிக முக்கிய இடம் பெறுகின்றது. ஆழமான தத்துவக் கருத்துக்களை வெளியிடும் அளவிற்கு மிக வளர்ச்சியும் வளமும் ஆழமும் உள்ளமொழி நடையாக அறபுத் தமிழ் விளங்கியதை இது மிகச் சிறப்பாக உணர்த்துகின்றது.

பாரம்பரியத்தை பாதுகாக்காத மனிதர்கள், தன் பண்பையும், மாண்பையும், மேம்பாட்டையும் இழந்து விடுவார்கள் என்பது வரலாறு. முற்கால தமிழக இஸ்லாமியர்கள், அறபுத் தமிழ் வழியாக தமக்கென ஓர் இலக்கிய பாரம்பரியத்தை உருவாக்கி இருந்தார்கள்.

தமிழ்நாட்டு அறபுத் தமிழில் ஃபார்ஸி, உருது, ஆகிய மொழிச் சொற்கள் கலந்து இருந்தது. ஆனால் இலங்கையில் சிங்கள வார்த்தைகளோ இதர மொழிச் சொற்களோ இணையவில்லை. அறபு மொழியின் கிளை மொழி தான் அறபுத் தமிழ். இதற்கென தனி இலக்கணம் இல்லை. ஆனாலும் தனித்தனியே இரண்டு மொழிக்கும் இலக்கணம் உண்டு.

அர்வி மொழிக்கு தமிழ் மொழியின் இலக்கண அமைப்பே பேணப்பட்டது. அறபுத் தமிழ் நூல்களில் நிறுத்தக் குறிகளின் பயன்பாடு அறவே இல்லை. அது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. முற்றுப்புள்ளி, காற்புள்ளி, அரைப்புள்ளி, கேள்விக் குறி போன்ற அடிப்படையானக் குறிகள் எதுவும் அறபுத் தமிழ் நூல்களில் உபயோகிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், இவை எதுவும் இல்லாமல் நிறைவான கருத்தை அறபுத் தமிழ் வழியாக வழங்கப்பட்டு வந்தது என்பது இன்றும் நம்மை பிரமிப்பில் ஆழ்த்துகிறது.

இந்து மதத்தினர் தம் மதம் சார்ந்த கருத்துகளை வெளிப்படுத்த சில சொற்களை வழக்கமாக பேசியும் எழுதியும் வருவார்கள். அவ்வாறான தமிழ் சொற்களை அறபுத் தமிழில் பயன்படுத்தக் கூடாது என்கிற எழுதப்படாத விதி இருந்தது. அதை அந்தந்த கால எழுத்தாளர்கள் பின்பற்றி இருக்கிறார்கள்.

அறபுத் தமிழ் நூல்களில் முஸ்லிம்களின் பேச்சு மொழி, முஸ்லிம்களின் வட்டார வழக்குச் சொற்களையும் எழுத்தாளர்கள் எழுதி இருக்கிறார்கள். இவ்வாறான

சொற்கள் தமிழ் சொற்களாகவே இருந்தாலும் முஸ்லிமல்லாதவர்கள் தம் நூல்களிலோ பேச்சுவழக்கிலோ உபயோகித்தது இல்லை என்றும் தெரியவருகிறது.

அறபுத் தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் தமிழ் எழுத்தறிவு குறைந்த வாசகர்களின் மதத் தேவையை நிறைவு செய்ய எழுந்தவை என்ற வகையில் அவை பெரிதும் பேச்சு நடையை ஒட்டியே அமைந்திருந்தன. இஸ்லாம் மார்க்கம் எங்கெல்லாம் பரவியதோ அங்கெல்லாம், அறபு மொழியும் கூடவே பரவியது. உலகின் 26 நாடுகளில் அறபு மொழி ஆட்சி மொழியாக இருக்கிறது. அவற்றில் 50 கோடி மக்களுக்கு அறபு மொழி அவர்களின் அன்னை மொழியாகத் திகழ்கிறது.

அர்வி - பெயர் வரக் காரணம்

தெலுங்கு மொழி பேசுவோர் தமிழ்நாட்டை 'அருவர் நாடு, என அழைத்தனர். மேலும் கலிங்கத்துப் போரில் சோழர் படையைக் கண்ட தெலுங்கு நாட்டுச் சேனை 'அருவர்', 'அருவர்' (தமிழர் தமிழர்) என அஞ்சி நடுங்கினர் எனக் கலிங்கத்துப் பரணி குறிப்பதாக பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தம் 'தமிழகம் ஊரும் பேரும்' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

எனவே தமிழ் மொழி பேசுவோரை 'அருவர்' என அழைத்த தெலுங்குநாட்டார் முஸ்லிம்களையும் 'அருவர்' என அழைத்திருக்கலாம் எனவும், அவர்கள் பேசும் அறபும், தமிழும் கலந்த மொழியானது அருவி என அழைக்கப்பட்டிருக்கலாம் எனவும் சில ஆய்வாளர்கள் கூறுவதாக கால்டுவெல் - Caldwell அவர்கள் தன் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் நூலில் குறிப்பிடுகிறார். எ.எம்.எ.அஸீஸ் அவர்கள் கூறுகிறார்கள். இலங்கை முஸ்லிம்களும், தமிழ்நாட்டு முஸ்லிம்களும் ‘அர்வி’ முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

இரு நாட்டு முஸ்லிம் மக்களிடையே சமயம், மொழி, பண்பாடு ஆகியவற்றில் காணப்படும் அதிக அளவிலான சமமான தன்மைகளின் ஒருமைப்பாட்டை ‘அர்வி’ என்ற சொல் குறிக்கிறது. மேலும், அர்வி - சப்தமில்லாதது (ஒலியில்லாதது) என்பதற்கு ‘அரவமில்லாமல்’ என்று கூறுவர். அப்படி அரவம் இல்லாமல் உருவான மொழிதான் அர்வி.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Movlavi B.M.Khaleelur Rahman Manbaee P: 108-120

அறபுத் தமிழ் போன்ற மொழிகள்

அறபுத் தமிழுக்கு முன்னோடியாக இருப்பது அறபு வங்காள மொழியாகும். இதைப் பற்றி இப்னு கல்தூனும் தம்முடைய உலக வரலாற்று நூலில் குறிப்பிடுகிறார். இதற்கு முன்னர்த் தென் கிழக்கு ஆப்ரிக்காவில் தன்சானியா நாட்டில் சுவாகிலி மொழி, அரபி எழுத்துக்களினால் எழுதப்பட்டு வந்தது.

மலேசியாவிலும் Jawi script, جاوي "சாவி" மொழி அரபி எழுத்துக்களால் தாம் எழுதப்பட்டு வருகிறது. 1869ஆம் ஆண்டளவில் 'அலாமத் லங்காபுரி' (இலங்கைத் தீவின் செய்திகள்) என்ற பெயரில் அறபு மொழியில் எழுதப்பட்ட ஆனால் மலாய் மொழியிலான ஒரு பத்திரிகை வெளியானது. இதில் கையாளப்பட்டுள்ள மொழியை நாம் அறபுத் தமிழ் போன்ற 'அறபு மலாய்' என அழைக்கலாம்.

துருக்கி மொழி துவக்கத்தில் அரபி லிபியில் தான் எழுதப்பட்டு வந்தது, பின்னர் முஸ்தபா கமால் காலத்திலயே அதனை உரோம லிபியில் எழுதும் பழக்கம் புகுத்தப்பட்டது. உஸ்பெக் மொழியும் அரபி லிபியிலயே எழுதப்பட்டு வந்தது. இப்போது ரோம லிபியில் எழுதப்பட்டு வருகிறது. கேரளத்திலும் அறபு மலையாளத்தில் பல நூல்கள் வெளியாகி உள்ளது. இந்திய மொழியான இந்தியை அரபி எழுத்துக்களில் எழுதத் துவங்கியதன் விளைவாகவே உருது தோன்றியது.

அந்தந்த மொழிக்கென அந்தந்த எழுத்து முறை எங்கெல்லாம் இருக்கின்றதோ அங்கெல்லாம் இப்பொழுது அறபு மொழி வடிவத்தில் இருந்த எழுத்துக்கள் மாறிவிட்டது. இந்தியாவின் மேற்கு மற்றும் தெற்கு கடற்கரையில் உள்ள சிந்தி, தமிழ், குஜராத்தி, மலையாளம், தெலுங்கு மற்றும் பெங்காலி ஆகிய மொழிகள்கூட அறபு எழுத்துக்களால் எழுதப்பட்டு வந்து. இப்படி உலகம் முழுவதிலும் நாற்பதுக்கும் மேற்பட்ட மொழிகள் அறபு எழுத்து வடிவில் எழுதப்பட்டு வந்தது.

அறபுத் தமிழ் நூல்கள்

தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட அறபுத் தமிழ் நூல்கள் கையேட்டுப் பிரதிகளாக இருந்திருக்கலாம். அவற்றில் 600க்கும் மேற்பட்ட நூல்கள் அச்சு ஏறி இருக்கலாம் என கணிக்கப்படுகிறது.

அவற்றில் லண்டனிலுள்ள இந்திய அலுவலக நூல் நிலையத்தில் காணப்படும் பதினையாயிரம் நூல்களில் அறுபது அறபுத் தமிழ் நூல்கள் இருக்கின்றன. இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் உள்ள சுவடிக் கூடத்தில் எண்ணற்ற அறபுத் தமிழ் நூல்கள் உள்ளது.

இன்றும் இலங்கையில் இருநூறு அறபுத் தமிழ் நூல்கள் பாதுகாப்பாக இருப்பதாக எம். ஏ. நுஃமான் கூறுகிறார்.

முறையாக படித்து பாகவி, நூரி, அரூஷி போன்ற பட்டங்கள் பெற்ற ஆலிம்களும், மக்கா மற்றும் மதீனா சென்று, ஹரம் ஷரீஃபில் முறையாக கல்வி பயின்ற ஆலிம்களும் கூட அறபுத் தமிழ் - அர்வி மொழியில் நூல்கள் எழுதி இருக்கிறார்கள். கடந்த நூற்றாண்டில் பலர் இப்பணியை செய்து இருக்கிறார்கள்.

கி. பி.1889 ஆம் ஆண்டில் "கஷ்பூர் ரான் பீ கல்பில் ஜான்" என்ற ஒரு வார ஏடும், கி. பி. 1906 ஆம் ஆண்டில் சென்னையிலிருந்து "அஜாயிபுல் அக்பார் (செய்தி வினோதம்) என்று ஒரு வார ஏடும் வெளிவந்துள்ளது.

மீதான் மாலை என்பது 1868 ஆம் ஆண்டில் அறபுத் தமிழில் எழுதி வெளியிடப்பட்ட ஒரு கவிதை நூலாகும். இதுவே இலங்கையின் தமிழ் அச்சிடல் வரலாற்றில் அச்சிடப்பட்ட முதலாவது நூலாகும். இதை இலங்கையைச் சேர்ந்த இஸ்லாமிய அறிஞர் செய்கு முஸ்தபா வலியுல்லா அவர்கள் எழுதினார்கள். 19ஆம் நூற்றாண்டில் நிலவிய மார்க்க முரண்பாடுகளைக் கிளித்தெறிவதிலும், உண்மை நெறியை மக்கள் உள்ளங்களில் பரப்புவதிலும் இக்கவிதை நூல் முக்கிய இடம்பெற்றது.

அரைகுறை அறிவோடு அறநெறி விளக்கம் கொடுக்க முயன்ற பலரது தவறான கருத்துக்களை இந்நூல் விளக்கி, மக்களுக்கு தெளிவான இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடு பற்றி விளக்கம் அளிக்கும் நூலாக அமையப் பெற்றது.

பேருவளையைச் சேர்ந்த செய்கு முஸ்தபா வலியுல்லா என்பவர் அறபுத் தமிழில் எழுதிய மீஸான் மாலை எனும் நூல் 1868 இல் வெளியானது. 1878 இல் சா. சேகுத்தம்பி எழுதிய சீறா நாடக மன்ற காரண மாலை எனும் 184 பக்கத் தமிழ் நூல் சென்னை மனோன்மணிய விலாச அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு வெளியானது. 5

இமாமுல் அரூஸ் என அழைக்கப்படும் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் மதீனதுந் நுஹாஸ் என்ற பெயரில் அறபுத் தமிழில் ஒரு நாவலை எழுதியுள்ளார்கள். பாக்கிர் யெஸீத் இப்னு மலிக் அர்தாயீ என்பவர் பாரஸீக மொழியில் எழுதிய நாவலைத் தழுவி இது எழுதப்பட்டுள்ளது.

மாப்பிள்ளை லெப்பை ஆலிமின் இந்நூல் ஹிஜ்ரி 1318 கி.பி. 1900 ஆம் ஆண்டளவில் முஹம்மத் சுலைமான் என்பவரால் இலங்கையில் பிரசுரிக்கப்பட்டது. அறபுத் தமிழில் எழுதப்பட்ட இந்நாவலை எம்.கே.ஈ மௌலானா அவர்கள் 1979 ஆம் ஆண்டு தமிழில் வெளியிட்டார்கள்.

இந்தோனேசியாவின் தலைநகரான ஜகர்த்தாவில் உள்ள இந்தோனேசியக் கையெழுத்துப் பிரதிகளை உள்ளடக்கிய நூல் நிலையத்தில்1807 ஆம் ஆண்டு

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Movlavi B.M.Khaleelur Rahman Manbaee P: 108-120

பதிப்பிக்கப்பட்ட முஸ்லிம் மருத்துவம் பற்றிய ஒரு நூல் மலாய், பாரசீகம், அறபுத் தமிழ், அறபு ஆகிய நான்கு மொழிகளிலும் எழுதப்பட்டுள்ளது.

அறபுத் தமிழின் பிரயோகம் மலாய், பாரஸீகம் போன்ற ஏனைய மொழிகளோடு இணைந்து பயன்படுத்தப்பட்டதை இது உணர்த்துகின்றது. கொழும்பு ஆலிம் அவர்கள் இளஞ்சிறார்களுக்கு சன்மார்க்கத்தின் அடிப்படைகளை விளக்கும் பல நூல்களை அறபுத் தமிழில் எழுதினார்கள். இவற்றுள் 'துஹ்பதுல் அத்பால்', 'மின்ஹாதுல் அத்பால்' ஆகிய இரண்டு நூல்களும் குறிப்பிடத்தக்கது. அச்சு இயந்திரம் பிரபல்யமாகிய பின்னர் அறபுத் தமிழ் அறபு லிபியிலிருந்து தமிழில் எழுதப்படும் மரபு தோன்றியது.

அறபுத் தமிழ் நூல்களில் மிகுதமாக தமிழ் சொற்களையே பயன்படுத்தப்பட்டிருந்தாலும் சுமார் 20/25 சதவீத அறபுச் சொற்களையும் பயன்படுத்தி இருக்கிறார்கள். அப்படி அறபுத் தமிழ் நூல்களில் பரவிக் கிடந்த தமிழ் சொற்கள் 550க்கும் அதிகமாக இருக்கலாம் என கணிக்கப்படுகிறது.

உதாரணமாக, இந்த வகையில் 'இன்காரு' செய்கிறார்கள் (மறுக்கிறார்கள்), முராதாவது (கருத்தாவது), மௌத்து (மரணம்), ஷக்கு (சந்தேகம்). மஈஷத்து (வாழ்வு), வக்து (நேரம்), யெஃனி (அதாவது), ஆஹிறத்து (மறுமை), துன்யா (இம்மை) குப்ஃர் (இறை) நிராகரிப்பு), ஷிர்க் (இணை வைத்தல்), ஹத்து (எல்லை), ஹயாத்து (வாழ்க்கை), அமல் (செயல்), இஷாரத்து (சுட்டிக் காட்டுதல்), வுஜூத் (இருப்பு) போன்ற சொற்கள் இவ்விலக்கியங்களில் மிகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1963 களில் எழுத்தாளர் இலங்கை கனி அவர்களின் கணக்கெடுப்பின்படி செய்யுளிலும் உரை நடையிலும் அமைந்த இருநூறுக்கும் மேற்பட்ட அறபுத் தமிழ் நூல்கள் இதுவரை நமக்கு கிடைத்திருக்கின்றன என்று பேராசிரியர் எம். ஏ. நுஃமான் அவர்கள் கூறுகிறார்கள்.

1937 களுக்கு பின்னர் அறபுத் தமிழ் நூல்கள் புதிதாக அச்சேறுவதும், அறபுத் தமிழில் புதிய நூல்கள் எழுதப்படுவதும் முற்றிலும் நின்று விட்டது.

அறபுத் தமிழ் ஆசிரியர்கள் நுட்பமான அறிவு படைத்தவர்கள்

அல் துஹ்ஃபதுல் ஸமதிய்யா ஃபீ தர்ஜுமதி அல்ஃபாழில் அரபிய்யா - காமூசுல் அர்வி அறபுத் தமிழ் அகராதி எனும் நூலை ஹிஜ்ரி 1336 (1920) களில் வெளியிட்ட முஹம்மது ஹனீப் (பாகவி) பின் அலீ லெப்பை முதுகலத்தூர் அவர்களைப் பற்றி ஒரு சுவாரசியமான செய்தியை சொல்லி முடிவுக்கு வருகிறேன்.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Movlavi B.M.Khaleelur Rahman Manbaee P: 108-120

மவ்லவி, முஹம்மது ஹனீப் பாகவி அவர்கள் வேலூர் அல்பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் அறபுக் கல்லூரியில் அஃலா ஹள்ரத் அவர்களிடம் பயின்று பட்டம் பெற்ற ஆலிம்களில் ஒருவர். மிகவும் திறமையானவர். ஃபிக்ஹு - மார்க்கச் சட்ட துறையில் வல்லுனர். மலேசியாவில் இரண்டுப் பெண்களை திருமணம் செய்து ஏககாலத்தில் சந்தோசமாக வாழ்ந்து வந்த பெரும் தொழில் அதிபர் ஒருவர் ஏதோ ஒரு கோபத்தில் தன் இரு மனைவியருக்கும் முத்தலாக் விட்டு விட்டார்.

பின்னர் அதை எண்ணி வருந்தினார். மீண்டும் இரண்டு மனைவியரோடு வாழ ஆசைப்பட்டார். அதற்கு ஏதேனும் வழி உண்டா என தெரிந்து கொள்ள அன்று மலேசியாவில் இருந்த ஆலிம்கள் அனைவரிடமும் தன் சூழ்நிலையைச் சொல்லி சட்டம் கேட்டார். அனைவரும் ஒருமித்த குரலாக, "நீங்கள் முத்தலாக் சொல்லி விட்டீர்கள்! அதனால் உங்கள் மனைவியரோடு நீங்கள் சேர்ந்து வாழ முடியாது" என அழுத்தம் திருத்தமாக சொல்லிவிட்டார்கள்.

ஆனாலும் அவர் தனக்கு ஏதேனும் நற்செய்தி கிடைக்காதா? என்கிற எதிர்பார்ப்போடு மார்க்கம் தெரிந்த மனிதர்களிடமெல்லாம் ஆலோசனைக் கேட்டு வந்தார். அப்பொழுது ஒரு ஆலிம், "மவ்லவி, முஹம்மது ஹனீப் பாகவி அவர்கள் குறித்து சொல்லி, 'இவரிடம் நீங்கள் சட்ட ஆலோசனைப் பெற்றால் உங்கள் பிரச்சனைக்குத் தீர்வு கிடைக்கக்கூடும். ஆனால் அவர் தமிழ்நாட்டில் இருக்கிறார்" என்று சொன்னார்.

உடனே அந்த செல்வந்தர் மவ்லவி, முஹம்மது ஹனீப் பாகவி ஹள்ரத் அவர்களுக்கு விவரமாக ஒரு கடிதமும் உடனே கப்பலில் புறப்பட்டு வருவதற்கான டிக்கெட்டும் எடுத்து அனுப்பி இருந்தார். ஹள்ரத் அவர்களும் கடிதத்தைப் படித்து சூழ்நிலையைப் புரிந்து கொண்டு உடனே கப்பலில் புறப்பட்டுச் சென்றார்கள். செல்வந்தரைச் சந்தித்து விபரங்கள் கேட்டார். அவரும் சொன்னார்.

ஹள்ரத் அவர்கள் சொன்னார்கள். "தாங்கள் விரும்பியதுப் போன்றத் தீர்ப்பை நான் சொல்லுகிறேன். ஆனால், தாங்கள் சொன்னதை எனக்கு எழுதித் தர வேண்டும். அதேபோல் நான் இதற்கான சட்டத்தை சொல்லுகிற நாளில், மலேசியாவில் இருக்கிற ஆலிம்கள் அனைவரும் ஒரு இடத்தில் ஒன்று கூட்டப்பட வேண்டும். அவர்களிடையே உங்கள் கேள்விக்கான பதிலை நான் தெரிவிப்பேன். அதே நேரம் எனக்கு மூன்று பவுன் நகை வழங்க வேண்டும்"

செல்வந்தர், ஹள்ரத் அவர்களின் அனைத்து கோரிக்கைகளையும் ஏற்று, ஒரு நாளில் ஆலிம்கள் அனைவரையும் ஒன்று கூட்டினார்கள். அவர்களிடையே ஹள்ரத் அவர்கள் வந்து நின்றதும், குழுமி இருந்த ஆலிம்களில் பெரும்பாலானவர்கள்,

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Movlavi B.M.Khaleelur Rahman Manbaee P: 108-120

"முத்தலாக் சொன்ன ஒருவருக்கு தாங்கள் எப்படி சாதகமான தீர்ப்பு வழங்க முடியும்?" என்று கேட்டார்கள். சிலர் அந்த வினாவோடு பார்த்தார்கள்.

சிலர், இந்த ஆலிம் சவாலான கேள்விக்கு சாதகமான பதிலை எப்படி சொல்லப் போகிறார்? என்கிற ஆவலில் அமைதியாகக் காத்திருந்தார்கள். அப்பொழுது ஹள்ரத் அவர்கள், செல்வந்தர் எழுதிக் கொடுத்திருந்த வினாவை அங்கே சபையில் வாசித்துக் காட்டினார்கள்.

"என் மனைவி இருவரும் என்னை கோபப்படுத்தியதால், உங்கள் இருவருக்கும் முத்தலாக் கொடுத்து விட்டேன் வெளியேச் செல்லுங்கள்" என்று கடிதத்தை வாசித்து விட்டு ஹள்ரத் அவர்கள் சொன்னார்கள். இரண்டு மனைவியருக்கும் சேர்த்து மூன்று தலாக் என்று சொன்னால், அது ஆளுக்கு ஒன்றரை தலாக் என்கிற விகிதப்படியில் சேரும். அரை தலாக் விடுவதற்கு மார்க்கத்தில் இடமில்லை என்பதால் ஆளுக்கு ஒரு தலாக் மட்டுமே சென்றடையும். எனவே அவர் தன் மனைவி இருவருக்கும் ஆளுக்கு ஒரு (ரஜஈ) - தலாக் மட்டுமே கொடுத்திருப்பதாக நாம் கணக்கில் கொள்ள வேண்டும்; எனவே இவர் தன் மனைவியோடு சேர்ந்து வாழலாம்" என்றுச் சொன்னார்கள்.

அங்கிருந்த ஆலிம்கள் அனைவரும் அதனைக் கேட்டு மெய்சிலிர்த்துப் போனது மட்டுமின்றி ஹள்ரத் அவர்களை கட்டி அணைத்தும், முஸாஃபஹா - கைலாகு செய்தும், நெற்றியில் முத்தமிட்டும் ஆரவாரம் செய்தார்கள்.

செல்வந்தர் தாம் வாக்களித்தது போல் மூன்று பவுன் தங்க நாணயத்தைக் கொடுத்தார். ஹள்ரத் அவர்கள் அதைப் பெற்று கொண்டு, அங்கிருந்த தேவை உடைய ஆலிம்களுக்கு அப்பொழுதே தர்மம் செய்துவிட்டு நாடு திரும்பினார்கள்.

இந்தத் தகவலை ஹள்ரத் அவர்களின் உறவினரும், பேரன் உறவு முறையுள்ள மவ்லவி, எஸ். அஹ்மது பஷீர் சேட் மன்பயீ ஹள்ரத் அவர்கள் என்னிடம் சொன்னார்கள்.11.

முடிவுரை

அறபுத் தமிழில் வெளியிடப்பட்ட கருத்துகள் யாவும் இஸ்லாம் மார்க்க சம்பந்தமாக இருந்தாலும் அதிலும் கூட அந்தந்தக் காலகட்டத்தின் கலாச்சாரமும், அந்தந்தக் காலகட்டத்தின் வரலாறும், பூலோக அமைப்பும் அதில் இலை மறை காயாக காணக் கிடைக்கிறது. எனவே அந்த இலக்கியங்களை பாதுகாக்க வேண்டியது நம் கடமை. முற்காலத்தில் இஸ்லாமிய எழுத்தாளர்களால் எத்தனையோ இலக்கிய நூல்கள் தமிழ் மொழியில் எழுதப்பட்டிருந்தது. அவற்றில் அறபு, ஃபார்ஸி, உருது மொழிச் சொற்கள் கலந்து இருந்ததால் முஸ்லிம் அல்லாதவர்களிடம் அந்த

இலக்கிய நூல்கள் செல்வாக்குப் பெறாமல் போனது. அதனால் பல இஸ்லாமிய எழுத்தாளர்கள் பெயர் வெளியே தெரியாமல் போய்விட்டது. பல அரிய கருத்துகளும், கொள்கைகளும் தமிழ் இலக்கிய அரங்கில் அவற்றுக்குரிய மரியாதை பெறாமல் போய்விட்டது. அன்றும் இன்றும் ஆண்களைவிட பெண்கள்தான் அறபுத் தமிழை அதிகமாக எழுதப் படிக்க தெரிந்திருந்தார்கள். 13.

இன்று தமிழ்நாட்டில் முஸ்லிம்களிடத்தில் இந்நூல்களைப் படிக்கும் ஆர்வம் அற்றுப்போய் விட்டது. எனினும் இலங்கை வாழ் முஸ்லிம்களிடம் இது இன்றும் மதிப்புடன் விளங்குகிறது. "அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ்" என்று இதனை அங்குள்ள முஸ்லிம்கள் போற்றுகின்றனர். எனவே அறபுத் தமிழ் நூல்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவை அனைத்தும் தமிழ் மொழிக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும். தமிழ்நாட்டில் இஸ்லாமியர்களுக்கென தனி ஒரு பெரு நூலகம் இல்லை. ஒரு நூலகத்தை உருவாக்கி அங்கே அறபுத் தமிழ் நூல்கள் உட்பட இஸ்லாமியர்களால் எழுதப்பட்ட அனைத்து நூல்களும் ஒரே இடத்தில் பாதுகாக்கப்பட வேண்டும்.

அறபுத் தமிழ் குறித்த இந்த ஆய்வை, ஜமால் முகமது கல்லூரி முன்னெடுத்து செய்திருப்பது பாராட்டுக்குரியது. இன்னும் இது போன்ற பல இஸ்லாமிய துறைச் சார்ந்த ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். அதற்கு ஜமால் முகமது கல்லூரி முன்மாதிரியாக திகழும் என எதிர்பார்க்கிறேன்.

ஆதார நூல்கள்:

1. அறபு தமிழ் எங்கள் அன்பு தமிழ் - எ.எம்.எ. அஸீஸ் பக்கம் 6.
2. மு. அப்துல்காதர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஹாஜி கருத்த ராவுத்தர் ஹவுதியா கல்லூரி, உத்தமபாளையம், தேனி மாவட்டம். மற்றும் "இராமநாதபுர மாவட்ட இசுலாமியத் தமிழிலக்கிய மாநாட்டுச் சிறப்பு மலர் 1982, பக்.54-57."
3. தமிழக வரவலாற்றில் பெரம்பலூர் - ஆசிரியர்: ஜெயபால் இரத்தினம். பக்கம் 31, 51.
4. உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு 2016 ஆய்வுப் பொன்விழா சிறப்பு மலர். வெளியீடு இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம் கொழும்பு
5. பேராசிரியர் எம். எம். உவைஸ் நினைவு மலர்.
6. எம்.ஏ.நுஃமான் அடிப்படை தமிழ் இலக்கணம்.
7. எஸ்.எம். எம். மஸாஹிர் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு சிறப்பு மலர். பக்கம் 116.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Movlavi B.M.Khaleelur Rahman Manbaee P: 108-120

8. தமிழகத்தின் தலைசிறந்த ஆலிம்கள் பக்கம் 6 - 11.
9. Arabic Arwi and Persian in sarandib and Tamilnadu , Dr. tayka Shuayb Alim
10. Arabic and Persian in Carnatic, prof . Mohammed Yousuf Kokan Umari
11. அல்துஹ்ஃபதுஸ் ஸமதிய்யா ஃபீ தர்ஜுமதி அல்ஃபாழில் அரபிய்யா - ஆசிரியர்: முஹம்மது இப்ராஹிம் ஃபாஸில் பாகவி பின் ஹஸன் லெப்பை ஆலிம், முதல்வர் & பேராசிரியர், மதரஸா மன்பவுல் ஹஸனாத் முதுகளத்தூர். நூல் வெளியான ஆண்டு ஹிஜ்ரி: 1336 வெளியீடு: ஷாஹுல் ஹமீதியா மதராஸ்.
12. எம். ஆர். எம். அப்துர் ரஹீம், இஸ்லாமியக் கலைக்களஞ்சியம், பாகம் ஒன்று.
13. சுக்ரி, எம்.ஏ.எம். (1997). அறபுத்தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்", அம்சம் இன்டர்நெஷனல் கொழும்பு.

Reference Books:

1. Arabuth Tamil yaggal anbut Tamil - A.M.A. Azeez page 6.
2. M. Abdul khader Assistant Professor, Department of Tamilnadu, Haji karutta Rauthar Houthiya College, Uttampalayam, Theni District. And "Ramanathapura mavatta Islamiyat Tamil Elakkiya Manattu Sirappu Malar 1982, page.54-57."
3. Tamizaha Varalarril Perambalur , Author: Jayapal Ratnam. Page 31, 51.
4. Ulaga Islamiya Tamil Elakkiya Manadu 2016 Aayvu Ponviza Sirappu Malar, Published by : Sri Lanka Islamiya Aayvagam, Colombo .
5. Professor M. M. Uwais, Ninaivu Malar.
6. M.A. Numan , Adippadai Tamil Elakkanam.
7. S.M.M. Masahir, Ulaga Islamiya Tamil Elakkiya Manadu 2016 Aayvu Ponviza Sirappu Malar, page 116.
8. Tamizahattin Talai Siranda Aalimgal, Page 6 - 11.
9. Arabic Arwi and Persian in Sarandib and Tamilnadu, Dr. Tayka Shuayb Alim
10. Arabic and Persian in Carnatic, prof. Mohammed Yousuf Kokan Umari
11. Al Tuhfatus Samadiyyah Fee Tarjumati Alfazil Arabiyya - Author : Muhammad Ibrahim Fazil Baqavi Bin Hasan Lebbai Aalim, Principal & Professor, Madrasah Manba ul Hasanat Mudkalathur. Year of Publication Hijri: 1336 Publisher : Shahul Hamidiya Madras.
12. M. R. M. Abdur Raheem, Eslamiyak kalaik kalangiyam , Part one
13. Shukri, M.A.M. (1997). Arabut Tamizin Panpattup Parampariyam, Amsam International Colombo,

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr A.Shahul Hameed Baqavi & Jamali P: 121-133

Arab-Tamil: Growth, fall and Rise

அரபுத் தமிழ் வளர்ச்சியும் வீழ்ச்சியும் மீளெழுச்சியும்

A. SHAHUL HAMEED Baqavi, Jamali, M.A., M.Phil., P.hD
Assistant Professor (Arabic Dept.), Sadakathullah Appa College (Autonomous)
Rahmath Nagar, Tirunelveli-11
✆ 95001 21131 / 99418 21131
Email: shahbaqavi@gmail.com

Abstract:

The Arabs had a problem with Tamil, a Dravidian language, because their language Arabic was a Semitic language that had no connection with Tamil. Therefore, a link language called 'Arabic Tamil' (Lisan al-Arwi) was developed in Tamil Nadu. It synthesized the two languages, with Tamil written in an adapted Arabic script. This helped the Arab settlers in Tamil Nadu to learn Tamil through the Arabic script. Arab Muslim traders and local Tamil converts to Islam came into closer contact through this link language. The Arwi language and literature provided a kind of platform for Islamic teachings and learning. This language, which developed to facilitate communication between Arab settlers and Tamil Muslims in southern India and Sri Lanka, was widely spoken from the 8th to the 19th century. There are only a few people left who know Arabic-Tamil. The advent of modern printing put an end to the spread of the Arwi language.

Key Words: Dravidian, Arabi-Tamil language, Fathul Misr, Child, Darul Islam, School, Holy Quran, Old, Monologues, Praise, Story.

ஆய்வு சுருக்கம்:

அரேபியர்களுக்குத் திராவிட மொழியான தமிழை பயன் படுத்துவதில் பிரச்சனை இருந்த காரணத்தால், தமிழகத்தில் 'அரபி தமிழ்' (அர்வி) என்ற இணைப்பு மொழி உருவானது. இது இரண்டு மொழிகளையும் ஒருங்கிணைத்தது. தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் அரேபிய குடியேற்றக்காரர்களுக்கும் தமிழ் முஸ்லிம்களுக்கும் இடையே தொடர்பு கொள்ள வசதியாக உருவாக்கப்பட்ட இந்த மொழி 8 ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டு வரை பரவலாகப் பேசப்பட்டது. நவீன அச்சுக் கலை வருகை ஆர்வி மொழியின் பரவலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இவற்றை விரிவாக பேசுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

திறவுச் சொற்கள்:

திராவிடம், லிஸானுல் அர்வி, பத்ஹுல் மிஸ்ர், பாலர், தாருல் இஸ்லாம், மத்ரஸா, குர்ஆன், புராணம், முனாஜாத்து, திருப்புகழ், கிஸ்ஸா.

முன்னுரை:

வரலாறு படிக்காத சமூகம் வரலாறு படைக்காது என்பர். நமது முன்னோர்களின் கலாசார பண்பாட்டுப் பாரம்பாரியத்தின் ஒரு முக்கிய அம்சமாகத் தோன்றி வளார்ச்சியடைந்த அரபுத்தமிழ் என்பதும்கூட நம்மவர்களின் நேற்றைய வரலாறுதான் என்பதை நாம் நினைவில் நிறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அரபுத் தமிழைக் குறிப்பதற்கு முஸ்லிம்கள் பயன்படுத்திய 'லிஸானுல் அர்வி' எனும் அரபுத் தமிழின் தோற்றத்திற்கான வரலாறுகளை பற்றி விரிவாகவும் மிக ஆழமாகவும் நாம் விளக்குவதால் நம் முன்னோர்கள் இஸ்லாமிய மூலத்தை நம்மிடம் கொண்டு வந்து சேர்க்க அவர்கள் எடுத்த முழு முதல் முயற்சியே அரபுத் தமிழின் துவக்கம்தான் என்பதனை நாம் அறிந்து கொள்ளலாம். முஸ்லிம்களின் கலாசார, பண்பாட்டு வாழ்வில் மிகுந்த பங்களிப்பைச் செய்த அரபுத்தமிழ் காலவோட்டத்தில் சலிவடைந்ததற்கான காரணங்களையும் அதனை எழுச்சி பெறச் செய்வதற்காக பலராலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பொதுவாக நோக்குமிடத்து அரபுத் தமிழின் தோற்றம், வளர்ச்சி, வரலாற்றுப் பங்களிப்பு, அதன் கலாசாரப் பண்பாடு பற்றிய கட்டுரைகள் பலராலும் அவ்வப்போது எழுதப்பட்டபோதும் அரபுத்தமிழைப் பற்றிய வரைவிலக்கணம், அதன் தோற்றம், வளர்ச்சியை மிக விரிவாக நாம் அறிந்து கொள்ள வேண்டிய தேவையொன்று நம்முள்ளன.

அரபுத்தமிழ் என்ற ஓர் அருமையான மொழி இன்று பெரும்பாலும் பயன்பாட்டில் இல்லை. அதனை வாசித்தறியக்கூடிய மனிதர்களும் மிக அரிதாகவே இன்றுள்ளனர். அம்மொழியில் இன்று ஆக்கங்கள் எதுவும் வெளிவருவதாகவும் தெரியவில்லை. கிட்டத்தட்ட ஒரு மரணித்த மொழியின் நிலையிலேயே அரபுத்தமிழ் காணப்படுகின்றது. ஆனாலும் அரபுத்தமிழின் தொன்மையும் சிறப்பும் குறைத்து மதிப்பிட முடியாதவை. அம்மொழி பற்றிய ஆய்வுகளும் அம்மொழியில் வெளிவந்த ஆக்கங்கள் தொடர்பான ஆய்வுகளும் மிக அதிகமாகச் செய்யப்பட வேண்டியுள்ளன. தென்னிந்திய முஸ்லிம்களால் தனித்துவமாக உருவாக்கி, பல நூற்றாண்டுகள் வளர்க்கப்பட்ட இம்மொழியும் அதில் வெளியான நூல்களும், பத்திரிகைகளும் ஆக்கங்களும் காலத்தால் போற்றத்தக்கவையே.

அரபுத்தமிழ் தோன்றிய காலமும் வளர்ச்சியும்

முஸ்லிம்களின் முதன்மொழித் தொடர்பில் அரபு மொழியும், தமிழும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. பழமையும் வளமும் மிக்க செம்மொழிகளான தமிழும், அரபும் மொழியியல் அறிஞர்களால் உலக முதன்மொழிகள் எனப் பாராட்டப்பெற்றதாகும்.

“இந்தியர், எகிப்தியர், லிபியர், யூதர், அரேபியர்க்கு மிகப் பழங்காலத்தில் ஒரு பொதுத் தாய்மொழி இருந்திருத்தல் வேண்டும்" என்ற சுவாமி சங்கரானந்தரின் கணிப்பும், மத்திய கிழக்கு நாடுகளில் தொல் பழங்காலத்தில் பழைய எலாமிய திராவிட மொழிக் குடும்பம் வாழ்ந்ததாகக் கூறும் டேவிட்மெக் அல்பினின் கருத்தும், “காஸ்பியன் கடற்பகுதியிலிருந்து சிந்துவெளிப் பகுதிக்குக் குடியேறிய திராவிடர்களே சிந்துவெளி நாகரிகத்தைப் படைத்தவர்கள்" என்ற என்.வி. குரோவின் கருத்தும், சுமேரிய-சிந்துவெளி எழுத்துக்களிடையே ஒப்புமை உள்ளதாகக் கூறும் எல்.ஏ. வேடலின் கருந்தும் திராவிட “இனத்தின் பரப்பினைச் சுட்டியமைவதாகும். இதுகாறும் கூறியவற்றால் திராவிடத் தமிழ், செமிட்டிக் அரபு மொழிகளிடையே ஏற்பட்ட தொடர்பும், உறவும் வரலாற்றுக்கு முற்பட்ட தொன்மை மிக்கது எனலாம்.

அரபுத்தமிழ், அரபுமொழியின் வரிவடித்தில் எழுதப்பட்டது; தமிழின் பேச்சுவழக்கு நடையில் எழுதப்பட்டது. மிகுதியான அரபுச்சொற்களின் கலப்போடு எழுதப்பட்டது. அரபுநாட்டிலிருந்து புதிய சமயம் பரப்பத் தமிழகம் வந்த அரபிகள். இஸ்லாமிய சமய உண்மைகளைத் தமிழ் முஸ்லிம்களுக்கு எடுத்து விளக்குவதற்கு அரபுத்தமிழ் இன்றியமையாத தேவையாயிற்று. அரபுமொழி அறிந்த மார்க்க அறிஞர்கள் - புதிதாகத் தமிழகம் வந்தவர்கள் - தமிழ் இலக்கிய வழக்கைக் கற்றுக் கொள்ளாமலே - மக்கள் தமிழை எப்படிப் பேசினார்களோ அப்படியே எழுதுவதற்கு அரபுத்தமிழ் வாய்ப்பை வழங்கியது. மேலும் புனிதத் திருமறை அல்குர்ஆனின் விளக்கங்களை வேறுமொழிகளில் எழுதும்போது கருத்து மாறுபட வாய்ப்பு இருந்தமையால், மொழியாக்கம் செய்வது தவிர்க்கப்பட்டது.

வணிக சமய சமூகத் தொடர்பால் ஏற்பட்ட அரபு - தமிழ் மொழிக்கலப்பு தமிழின் வளர்ச்சிக்கு எவ்வகையிலும் தடையாக அமையவில்லை. தமிழும் அரபும் ஒன்றையொன்று அரவணைத்துக் கொண்டு மூலமுதல் தொடர்பினை உறுதிப்படுத்திக் கொண்டதால் வணிக சமூக வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் பாதை உருவானது. "மொழித்தூய்மையில் பற்றுள்ளவர்கள்கூட இவற்றை நீக்கிவிட இயலாதபடி வேரூன்றிவிட்டன; அன்றாட பேச்சு வழக்கிலும் நிலைத்துவிட்டன்” என, தமிழில் அரபுச் சொற்கள் கலப்பு பற்றிய டாக்டர். வ.அய். சுப்பிரமணியத்தின் கூற்று அரபு - தமிழ் மொழிக் கலப்பின் நிலையை விளக்குவதாக உள்ளன.

அரபியும் பார்சியும் துர்க்கியும் இந்தியில் ஆதிக்கங் கொண்டதின் விளைவாக உருதுமொழி உருவாயிற்று. ஆனால் அரபு - தமிழ் மொழிகளின் அரவணைப்பு புதுமொழியின் உருவாக்கத்திற்கு வழிவகுக்கவில்லை. மாறாக வரிவடிவ ஒலிவடிவ ஒட்டுமொழி நெறியொன்றினை வளரச் செய்தது குறிப்பிடத்தக்கது.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr A.Shahul Hameed Baqavi & Jamali P: 121-133

அரபு லிபியில் எழுதப்பட்டு தத்தம் சுய ஒலியன்களுக்குரிய குரல் கொடுக்கின்ற தமிழ், மலையாளம் வங்காளம், சிங்களம். பஞ்சாபி, சிந்தி, கன்னடம் போன்றவை. ஒட்டுமொழிக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன. அரபுத்தமிழ், அரபுமலையாளம், அரபுவங்காளம், அரபுசிங்களம், அரபுபஞ்சாபி, அரபிசிந்தி அரபுகன்னடம் என்ற இந்த ஒட்டு லிபி ஒலி மொழிகளில் அரபு - தமிழ் உறவினைப்போல் காலத்தால் முந்தியதாக அரபுத்தமிழ் அமைவது காணலாம்.

தமிழக அரசியல் சமய சமூக வணிகமொழி இலக்கியத் துறைகளில் முஸ்லிம்கள் தொடர்பால் ஏற்பட்ட மாற்றங்கள் பற்பல. இலக்கியத்தில் மரபினைப் பேணி எல்லா தமிழ் வடிவங்களிலும் எண்ணற்ற பனுவல்களைப் படைத்தளித்த முஸ்லிம்கள், தமக்கேயுரிய தனிச்சிறப்புமிக்க வடிவங்களையும் அறிமுகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. அரபுப் பண்பாட்டினைக்கூட தாம் வாழும் தமிழ்நிலத்தின் பண்பாடாகத் தன்வயப்படுத்திய துணிவும் பரந்த மனப்பான்மையும் முஸ்லிம் அறிஞர்களுக்கே உரிய இயல்பாகத் திகழ்வதாகும். சமயக் காழ்ப்பும் வெறுப்புமின்றி இலக்கியம் யாத்ததுபோல், மொழி வழக்கிலும் திசைச்சொற்களாகப் புகுந்த அரபுச் சொற்களை இயன்ற அளவில் தமிழ் உச்சரிப்பிற்கேற்ப அமைத்து தாய்மொழிப்பற்றைப் பேணிக்கொண்டது குறிப்பிடத்தக்கது. தேவை கருதி கலந்த அரபு, பார்சி, துருக்கிச் சொற்களால் உருவான நவீன மணிப்பிரவாள முஸ்லிம் தமிழ் வழக்கினை தாய்மொழியின் தனித்துவம் சிதையாமல் அரபு வரிவடிவில் அமைத்து ஒரு புதிய ஒலி - லிபி ஒட்டுமொழியாக உருப்பெறச் செய்த பெருமையும் முஸ்லிம்களுக்கே உரியது எனலாம். அரபு லிபியும் தமிழ் ஒலியும் கலந்தமைந்த அரபுத்தமிழ் தோன்றிய வரலாறு அராபிய முஸ்லிம் சமூக சமய வணிக வரலாற்றுத் தாக்கம் பெற்றமைவதாகும்.

செமிட்டிக் அரபுமொழி பேசுகின்ற அராபிய வணிகர்களும், திராவிடத் தமிழ்மொழி பேசுகின்ற சேரநாட்டு மக்களும் முதலில் வணிகம் காரணமாகவும், பின்னர் திருமணத் தொடர்பு காரணமாகவும் இரண்டறக் கலந்து பழகியது காரணமாக விளைந்த மொழிக்கலப்பே, பின்னர் நாளடைவில் 'அரபுத்தமிழ்' எனும் ஒட்டுமொழி தோன்றுவதற்குரிய சூழ்நிலை ஏற்படுத்தியது.

அரபும் தமிழும் ஒன்றையொன்று தழுவிக் கலந்த ஒரு மணிப் பிரவாள நடை புதிதாகத் தோன்ற இது காரணமாயிற்று. தாங்கள் தற்காலிகமாக அரபகம் செல்லும்போதும், இங்கு தங்கியிருக்கும் போதும் வணிகத் தொடர்புகளுக்காகக் குறிப்புக்கள், பட்டியல்கள், கடிதங்கள் தயாரிக்க அரபு - தமிழ் கலந்த இந்த மணிப்பிரவாள நடையை முதன் முதலில் இணையொலி மொழிமாற்று வடிவ முறையில் அரபியில் எழுதும் முயற்சியில் ஈடுபட்டனர். வணிகக் குடும்பத் தேவை

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr A.Shahul Hameed Baqavi & Jamali P: 121-133

கருதி காலத்தின் கட்டாயச் சூழ்நிலையில் அரபுத் தமிழ் சமுதாயத்தின இணக்கத்தில் எழுந்த இந்த மொழிமாற்று வடிவ முறையே, நாளடைவில் அரபுத்தமிழ் எனும் ஒலி-லிபி ஒட்டுமொழியின் உறுதியான கால்கோலிற்கும் உருவாக்கத்திற்கும் துணை நின்றது.

தமிழில் ஓரளவு அனுபவமும் பயிற்சியும், அரபு மொழியில் தேர்ச்சியும் பெற்ற தொடக்ககால அரபு முஸ்லிம் வர்த்தகர்கள், தமிழில் தேர்ச்சி பெற்ற புதிய முஸ்லிம்களின் துணையுடன் ஏற்கனவே வழக்கிலிருந்த இணையொலி மொழிமாற்று வடிவ முறையைச் செப்பனிட்டு அரபுத்தமிழ் ஒட்டுமொழியை உருவாக்கினர். இதனால் அரபு, தமிழ் மொழிகளை வாசிக்கத் தெரிந்த எல்லா முஸ்லிம்களும் பயன்பெறலாயினர். திருக்குர்ஆன் மொழியின் வடிவில் சமயநெறி விளக்க நூல்கள் எழுதப்பட்டதால் புனிதமான பேணப்பட்டதும், ஆன்மீக உணர்வு பேணப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இஸ்லாமியத் திருமறையின் விளக்க உரைகள் அரபுத் தமிழிலேயே எழுதப்பட்டன. காயல்பட்டினத்தில் தோன்றிய மூன்று திருமறை விளக்க உரைகள் (தப்ஸீர்கள்) புகழ் பெற்றவை. ஹிஜ்ரி 1296ல் காயல்பட்டினம் ஹபீப் முகம்மது ஆலிம் அவர்களால் செய்யப்பட்ட திருமறை விளக்க உரையில் திருமறை வாசகங்கள் பெரிய எழுத்தில் தாளின் மத்தியில் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஒவ்வோர் அடியின் கீழும் அந்தந்த அடியின் தமிழாக்கம் அரபுத்தமிழில் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு பக்கத்தின் ஓரங்களிலும் விரிவான விளக்கங்கள் அரபுத் தமிழில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பக்கத்தின் மூன்றின் ஒரு பகுதி இவ்விளக்கங்களால் நிரம்பியிருக்கின்றது. அடுத்து கி.பி. 1884லும், 1911லும் இரண்டு அரபுத்தமிழ் திருமறை விளக்க உரைகள் காயல்பட்டினத்தில் தோன்றின.

அரபுத்தமிழ் இலங்கையிலும் தமிழகத்திலும் 8 ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரையில் முஸ்லிம் மக்களுக்கிடையில் பெருவழக்குப் பெற்றிருந்தது. அச்சுக்கலை பெருவழக்கில் வந்தபோது அரபுத் தமிழ் நூல்கள் தமிழ் லிபியில் எழுதப்பட்டன. கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டுவரை கையெழுத்துக் கலையில் வளர்ந்த அரபுத்தமிழ், பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை சமயநெறி நூல்கள், சட்டவிளக்க நூல்கள் திருக்குர்ஆன் விரிவுரைகள், ஹதீஸ் விளக்கங்கள், இஸ்லாமிய சிற்றிலக்கியங்கள், காப்பியங்கள், கடிதங்கள் என அச்சுக்கலை வடிவங்களாகவும் ஆட்சி செலுத்தியது குறிப்பிடத்தக்கது.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr A.Shahul Hameed Baqavi & Jamali P: 121-133

அரபுத் தமிழின் வீழ்ச்சி

மிகச் சிறப்பான முறையில் வளர்ந்திருந்த அரபுத்தமிழ் மொழி காலவோட்டத்தில் அதன் செழிப்பை இழந்து, கவனிபாரற்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. இதனை எம். எம். எம். மஹ்ரூபின் அரபுத்தமிழ் பற்றிய பகுப்பாய் விளக்குகின்றது. 20ஆம் நூற்றாண்டின் முதல் காற்பகுதியில் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் அரபுத்தமிழின் நிலை வீழ்ச்சியை நோக்கிச் சென்றது. பொருளாதார, சமூக ரீதியான எழுச்சி இதனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. பொதுக்கல்வி பெருமளவில் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் உள்ளதாக மாறியதோடு ஆங்கிலத்தின் முக்கியத்துவமும் மறுக்க முடியாததாக இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் அரபுத்தமிழ் என்ற மேலுமொரு மொழியைக் கற்பது முடியாததாக இருந்தது. நூல்கள் அச்சிட்டு வெளியிடுதல் என்பது செலவுமிக்க ஒரு துறையாக உருமாறியது.

கையெழுத்துக்களால் எழுதி பிரதிகளைப் பரப்புவது என்பது தொடர்ந்தும் நிலை பெறவில்லை. வாசகர்களும் வாசிப்பு முறைமையும் மாறிவிட்டன. இதனைத் புத்தகங்களை அச்சிட்டு பிரசுரித்தல் என்பது சிரமமான காரியமாக மாற்றமுற்றது. பிரபல்யமான கல்வியியலாளராகவும், முஸ்லிம் தலைவராகவும் இருந்த ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள், அரபுத்தமிழிழான ஆக்கங்கள் தொடர்பாக சமூகத்தின் கவனயீனத்தைக் கவலையுடன் எடுத்துக் கூறுகின்றார். ஷெய்க் முஹம்மத் லெப்பை ஆலிம் (கஸாவத்தை ஆலிம் புலவர்) அரபுத்தமிழில் எழுதிய பத்ஹுல் மிஸ்ர் என்ற புத்தகத்தைப் பற்றிப் பேசுகையில் அவர், “இந்நூல் ஷெய்க் முஹம்மத் பின் முஹம்மத் அல்முஇஸ் என்பவரின் அரபு மொழியிலான நூலை மையமாக வைத்து உருவாக்கப்பட்டது என்பதை யாரும் அறியார். அது வெளியிடப்பட்டபோது அதனை இலங்கை முஸ்லிம்கள் கவனத்தில் எடுக்கவுமில்லை” என்கிறார்.

1940களின் மத்தியில் இலங்கையின் கல்வி, பாலர் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை இலவசம் என்றானபோது அரபுத் தமிழ் மேலும் காணாமற்போயிற்று. 1950, 1960களில் அரபுத்தமிழ் ஆக்கங்களின் இருப்பு நம்பிக்கையற்ற நிலையை உருவாக்கியது. அரபுத் தமிழுக்காகப் போராடியோரும் கூட, தமிழில் (எழுத்திலும் பேச்சு வழக்கிலும்) இஸ்லாமிய வார்த்தைகளை (துருக்கிய, பாரசீக, அரபிய) அதிகம் பயன்படுத்த வேண்டும் எனக் கோரினர். ஆனால் ஏனைய தமிழ்ப் பாவனையாளர்கள் அதனை நிரந்தரமாகக் கட்டுப்படுத்தத் தொடங்கினர்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டிலும் தென்னிந்தியாவில் பல அரபுக் கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டன. இவை அரபு மொழியையும் இஸ்லாமிய மார்க்கக் கலைகளையும் மாணவர்களுக்கு வழங்கியது. அவர்கள் அக்கலைகளைக் கற்று, அக்கல்லூரிகளிலிருந்து வெளியானதும் சமூகத்தில் கண்ணியமிக்க மார்க்க அறிஞர்களாக

மதிக்கப்பட்டனர். இவர்கள் அரபுத்தமிழ் பற்றிய எந்த அறிவையும் பெறாததினால் அதுபற்றிய எந்த யோசனையும் அற்றவர்களாகவே அவர்கள் இருந்தனர். முஸ்லிம் சமூகத்திற்கு மார்க்கக் கல்வியைப் புகட்டுவதற்குரிய அடிப்படை ஊடகமாக இருந்த அரபுத்தமிழ் இவர்களின் தலைமுறையோடு மங்கி மறைந்துவிட்டது.

உள்நாட்டில் இருந்த அரபுக் கலாசாலைகள் தவிர வெளிநாட்டு மாணவர்கள் அரபுமொழியைக் கற்கை மொழியாகக் கொண்ட, அரபு நாடுகளில் உள்ள அரபுப் பல்கலைக்கழகங்களில் கற்றுத் தேர்ந்தனர். அதேவேளை உள்நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் அரபுமொழி உரிய இடத்தைப் பிடித்திருந்தது. இவர்கள் அரபுத்தமிழைப் புறக்கணித்தனர் என்பது மட்டுமன்றி நேரடியாக, அரபுமொழியைத் தத்தமது நாடுகளில் உயிர்ப்பிப்பதற்கும் வளர்ப்பதற்கும் பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்ளலாயினர். இதுவும் அரபுத் தமிழின் வீழ்ச்சிக்குத் துணையாக அமைந்தது.

அரபுத் தமிழில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் பேச்சு வழக்கிலுள்ள சாதாரணச் சொற்களாக இருந்ததாலும் இதனுடைய நடையும் பழங்காலத்ததாயிருந்ததாலும் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் முஸ்லிம் தமிழ் எழுத்தாளர்கள் இதனை வன்மையாகத் தாக்கினர்; இழித்தும் கூறினர். அரபி மத்ரஸாக்களில் இது வழக்கொழிந்ததால் தமிழ் நாட்டில் முஸ்லிம்பொதுமக்களிடத்திலும் பெண்களிடத்திலும் இந்நூற்களைப் படிக்கும் ஆர்வம் அற்றுப் போய்விட்டது. இதே நிலையை நாம் இலங்கையிலும் காணலாம்.

தமிழ் நாட்டிலும் ‘தாருல் இஸ்லாம்’ போன்ற இதழ்கள் அரபுத் தமிழைக் கடுமையாக எதிர்த்து வந்தன. 1975இல் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கம் வெளியிட்ட ‘நூல் விமர்சனம்’ என்ற நூலில்கூட அரபுத் தமிழைக் கடுமையாக எதிர்த்திருக்கிறார்கள். “எதிர்ப்புக்கள் இல்லாவிட்டாலும், அரபுத் தமிழ் தானே மங்கத் தொடங்கிவிட்டது. அது வடமொழி போன்று எழுத்து மொழி மட்டுமே. அரபி தெரிந்தவர்கள் மட்டுமே எழுதவும் படிக்கவும் முடியும். இந்து சமயத்துக்கு வடமொழி போன்று, கிறிஸ்தவ சமயத்துக்கு இலத்தீன் போன்று, சில தமிழ் இஸ்லாமிய ஞானிகளின் மொழியாக அரபுத் தமிழ் இருந்ததே தவிர, அதுமக்கள் மொழியாக இல்லை” என அ.மா. சாமி குறிப்பிடுகின்றார்.

அரபுத் தமிழ் முஸ்லிம் பொதுமக்களின் அங்கீகாரத்தைப் பெற்ற, பரவலாக்கப்பட்ட மொழியாகச் செயற்படவில்லை என்ற கருத்து ஏற்கத்தக்கதல்ல. நாம் முன்னைய பகுதிகளில் குறிப்பிட்டது போன்று முஸ்லிம்களுக்கும் அரபுமொழிக்குமிடையிலான இறுக்கமான தொடர்பு காரணமாக முஸ்லிம்கள் அரபை வாசிக்கக் கற்றிருந்தனர். எனவே, அவர்களது தாய்மொழியான தமிழை வாசிக்கத் தெரியாதிருந்தாலும் அவர்கள் அரபுமொழியை வாசிப்பர். ஆகவே அரபு லிபியில் எழுதப்பட்ட தமிழை அவர்களால்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr A.Shahul Hameed Baqavi & Jamali P: 121-133

வாசிப்பதற்குச் சிரமமாக இருக்க முடியாது. அதேவேளை ஒரு சமூகத்தில் எழுத்தாளர்கள் பெரும்பான்மையாக இருப்பதில்லை. ஒரு சிலரே எழுத்துக்கலை வரப் பெற்றவர்களாயிருப்பர். இந்த இயற்கைத் தன்மையோடு இணைந்ததாகவே அரபுத் தமிழை எழுதும் வல்லமை கொண்ட ஒரு சிலர் தமது ஆக்கங்களை வெளிக் கொண்டுவந்தபோது அவற்றின் வாசகர்களும் சமூகத்தில் மலிந்தே காணப்பட்டிருக்க வேண்டும்.

அரபுத் தமிழ் ஆதரவாளர்களே கூட பின்பு இஸ்லாமிய சமய நூல்களை சுத்தத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதை ஆதரிக்கத் தொடங்கிவிட்டார்கள். திருக்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்பு பற்றி இலங்கை ஏ.எம்.ஏ. அஸீஸ் கூறும் போது, “சமீப காலத்தில் ஜனாப் அப்துல் ஹமீத் பாகவி அவர்களின் திருக்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்பு இஸ்லாமிய இலக்கிய உலகில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தி இருப்பதுடன், முஸ்லிம் அல்லாதார் இடையே அவர்களுக்கும் திருக்குர்ஆனுக்கும் இடையே நேரடித் தொடர்பை ஏற்படுத்தி வைக்க ஒரு சாதனமாகவும் அமைந்திருக்கும் தன்மையால் மிக மிகப் போற்றுதற்குரிய ஒன்றாகும்” என்கின்றார்.

அரபுத் தமிழ் இன்று பொதுவாக வழக்கிழந்து விட்டது எனலாம். புதிதாக அரபுத் தமிழ் நூல்கள் எதுவும் எழுதப்படுவதில்லை. பழைய நூல்களைப் பேணிவரும் சிலரே இன்று அவற்றைப் பயன்படுத்துகின்றனர். முஸ்லிம்களின் எழுத்தறிவு வீதம் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளமையால் இன்று பெரும்பாலான முஸ்லிம் ஆண்களும் பெண்களும் தமிழிலேயே நூல்களை வாசித்து விளங்கும் ஆற்றல் உள்ளவர்களாக உள்ளனர். மார்க்கம் பற்றிய மனப்பான்மையும் இப்போது விரிவடைந்துள்ளது. குர்ஆன் மொழிபெயர்ப்புக்களுக்கு அதுபற்றிய விரிவுரைகளும் விளக்கவுரைகளும் பொதுவான சமய நூல்களும் தமிழிலேயே வெளிவர வேண்டியது அவசியம் என்ற கொள்கை இப்போது வேரூன்றிவிட்டது. அத்தகைய பிரசுரங்கள் தற்போது ஏராளமாக வெளிவந்துள்ளன. அத்தியாவசிய அரபுச் சொற்களைக் கையாள வேண்டும் என்ற வகையில் முஸ்லிம்களின் மொழிக் கொள்கையும் நெகிழ்ச்சியடைந்துள்ளது. சமீப காலத்தில் வெளிவந்துள்ள இஸ்லாமிய சமய சம்பந்தமான வெளியீடுகள் இதையே உணர்த்துகின்றன. இவ்வாறு அரபுத் தமிழின் தோற்றத்துக்குக் காரணமாய் இருந்த அம்சங்கள் நீங்கியமையே அதன் மறைவுக்குக் காரணமாயிற்று எனலாம்.

இன்றைய நவீன கல்வி முறையில் காணப்படும் பாடத்திட்டத்தின் சுமை காரணமாக தற்கால முஸ்லிம் பிள்ளைகளுக்கு அர்வி படிப்பதற்கு அவகாசம் இல்லாமலிருக்கிறது.

சமய ரிதியாக சரியான அமைப்பில் வழிகாட்டப்படாத முஸ்லிம் எழுத்தாளர்களின் நியாயமற்ற ஆரவாரத்தினால் முஸ்லிம்களின் விலைமதிக்க முடியாத முதுமையான இந்த அழகிய மொழி கிட்டத்தட்ட மொத்தமாக இழக்கப்பட்டுவிட்டது. மேலே கண்டவற்றை

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr A.Shahul Hameed Baqavi & Jamali P: 121-133

அடிப்படையாகக் கொண்டு அரபுத் தமிழின் வீழ்ச்சிக்கான காரணங்களைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

- அரபுமொழியின் செல்வாக்கு அதிகரித்தமை.
- இஸ்லாமிய மார்க்கம் தொடர்பான நூல்கள் அரபு மொழியிலும் தாராளமாக வெளிவரத் தொடங்கியமை.
- அரபு மத்ரஸாக்களிலும் குர்ஆன் மத்ரஸாக்களிலும் அரபுத்தமிழ் வழக்கிழந்தமை.
- அரசாங்கப் பாடசாலைகளில் தமிழ்மொழி மூலமான கல்வி முறை ஆரம்பிக்கப்பட்டு, ஆங்கிலத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டதுடன் முஸ்லிம்களின் எழுத்தறிவு வீதம் அதிகரித்தமை.
- நூல்களை அச்சிட்டு வெளியிடுதல் மிகச் சிரமமான காரியமாக மாறியதோடு, கையெழுத்துப் பிரதிகளின் மூலம் பெருமளவிலான நூல்களை வெளிக்கொண்டு வர முடியாமலிருந்தமை.
- முஸ்லிம் தமிழ் எழுத்தாளர்கள் அரபுத்தமிழைக் கடுமையாகச் சாடியமையும் தமிழ்மொழித் தூய்மை பேணும் உணர்வு ஓங்கியமையும். வடமொழி எழுத்துக்களான (ஷ, ஜ, ஹ) என்னும் எழுத்துகள் தமிழில் கூடுதலாகப் பயன்படுத்தப் பட்டமையினால் அரபுச் சொற்களை தமிழில் எழுதுவதற்கு இலகுவாயிருந்தமை.

அரபுத் தமிழ் மீண்டும் எழுச்சி பெற..

அரபுத்தமிழை மீண்டும் உயிர்ப்பித்து, முஸ்லிம் மக்களின் அன்றாட மொழியாக அதனை எழுச்சி பெறவைப்பதற்கு மூதறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ், முனைவர் தைக்கா ஷுஐப் போன்றோர் பல ஆலோசனைகளை முன்வைத்துள்ளனர். அவற்றை தொகுத்துக் கீழ்வருமாறு கூறலாம்.

அரபுத்தமிழ் இலக்கியக் கோவையை உருவாக்குதல். புராணம், நாயகம், கலம்பகம், முனாஜாத்து, அந்தாதி திருப்புகழ், ஞானப்பாட்டு ஆகியவற்றின் சிறந்த பகுதிகளை மட்டுமல்லாமல், நாடகம், சிந்து, தாலாட்டு, கும்மி, படைப்போர் ஆகியவற்றின் பகுதிகளுடன் புராண வசனம், மார்க்க ஒழுக்கம், கிஸ்ஸா முதலிய வசன நூல்களின் பகுதிகளையும் உள்ளடக்கியதாக இது அமைதல் வேண்டும்.

அரபுத்தமிழில் சிறுவர் இலக்கிய இதழ்களை வெளியிடுதல். வருங்கால தலைமுறையினருக்கு நாம் அளிக்கக்கூடிய முழுவதும் எமது கலாசாரப் பாரம்பரியமே. இதன் அருமை பெருமைகளை அவர்கள் அறிந்து கொள்வதற்குச் சிறுவயதிலிருந்தே பயிற்சியளித்தல் அவசியம். இதற்கேற்ற சிறுவர் இலக்கியங்கள் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில், அரபுத்தமிழில் வெளிவருதல் அவசியம். இந்நூல்கள் ஆங்கில மொழியில் ஏற்பட்டுள்ள நூல் அமைப்பு, அச்செழுத்து, வடிவம் முதலான

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr A.Shahul Hameed Baqavi & Jamali P: 121-133

முன்னேற்றங்களை அனுசரித்தனவாக உருவாக்கப்படல் இன்றியமையாததாகும். நமக்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள அனைத்து அச்சிடப்பட்டுள்ள அர்வி நூல்களையும் சேகரித்து, மீள் பதிப்புச் செய்யப்படுவதோடு, வெளியிடப்படாது கையெழுத்துப் பிரதிகளாக இருப்பவற்றை ஒன்று சேர்த்து அவற்றை அச்சில் ஏற்றுவது. அர்வி மொழியை உயிர்ப்பிப்பதன் அவசியத்தையும் அது முஸ்லிம்களின் வாழ்வியலில் ஏற்படுத்தும் மேன்மையையும் விளக்கி சிறியளவிலான துண்டுப் பிரசுரங்களைப் பதிப்பித்து இலவசமாக வெளியிடுதல்.

மதசார்பான, மதசார்பற்ற அனைத்து அர்வி நூல்களையும் கவர்ச்சியான அமைப்பில் மீள்பதிப்புச் செய்வதோடு, அவற்றைப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுத்தல். அர்வி பேசும் பிரதேசங்களின் பல பகுதிகளிலும் அர்வியை கற்கை மொழியாகக் கொண்ட பாலர் பாடசாலைகளையும் ஆரம்பப் பாடசாலைகளையும் நிறுவுதல். தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் உள்ள அனைத்து மத்ரஸாக்களிலும் அர்வியை கட்டாய பாடமாக்கப்படுதல். மொழிபெயர்ப்புக் கலையை ஊக்குவித்தல். அரசாங்க முஸ்லிம் ஆசிரியர் பாடசாலைகளில் இதற்கு சிறப்பிடம் அளிக்கப்படுதல்.

அர்வி இதழ்கள், பருவ இதழ்களை மீண்டும் அறிமுகம் செய்வதோடு மாணவர்களுக்கிடையே அர்வியில் கட்டுரைப் போட்டிகளையும் நடத்துதல். கவிதை, நாடகம் என இதன் பரப்பையும் படிப்படியாக அதிகரித்துச் செல்ல முடியும். கல்விமான்களும் கல்வி கற்கும் மாணவர்களும் தங்களுக்கிடையிலான கடிதத் தொடர்புகளை அர்வி மொழியில் வைத்துக் கொள்வதற்கு ஊக்குவித்தல். இலட்சியபூர்வமான திறனாய்வை மேற்கொள்ளல். அரபுத் தமிழின் புனருத்தாரணத்துக்கு அத்தியாவசியமான அம்சங்கள் பற்றி மிகுந்த சிரத்தையுடன் ஆராய்தல் அவசியம். பழைய அரபுத்தமிழ் நூல்களின் பதவுரைகளிலும் பொழிப்புரைகளிலும் மட்டுமே காலத்தை விரயமாக்காது, இலக்கியத் தராதரம், சாராம்சம், ஒப்பியல் ஆய்வு ஆகியவற்றிலும் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் கவனம் செலுத்துதல்.

அர்விப் பிரதேசங்களில் அர்வியை வளர்த்தல், அதன் முக்கியத்துவம் போன்றவற்றை உணர்வூட்டுவதற்காக விரிவுரைகள், கூட்டங்கள், மாநாடுகள் நடத்தல். தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் வாழும் முஸ்லிம்கள் தற்காலத்தில் அர்வி மொழியைப் புறக்கணிப்பதைக் கைவிட்டு, அவர்களது நாளாந்த செயற்பாடுகளில் கையாளத் தூண்டுகோள் வழங்குதல். காலப்போக்கில் அரபுத் தமிழின் வளர்ச்சிக்கேற்ப, அரசாங்க அனுசரணையுடன் பொதுக்கல்விச் செயற்பாடுகளுக்குள் அதனை உள்வாங்குதல்.

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr A.Shahul Hameed Baqavi & Jamali P: 121-133

முடிவுரை:

செமித்திய (Semetic) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த அரபுமொழி தொன்மையான மொழிகளுள் ஒன்றாகும். "இஸ்லாத்தின் தோற்றத்துக்கு முன்னர் அரபுத் தீபகற்பத்தில் வழக்கிலிருந்த, சிறந்த வளர்ச்சியைக் கண்டு இலக்கிய வளம் மிக்க ஒரு மொழியாகக் காணப்பட்ட அரபு மொழியானது இஸ்லாத்தின் தோற்றத்தின் பின்னர் குர்ஆனின் மொழியாகப் பரிணமித்து, இஸ்லாமியப் பண்பாட்டின் வளர்ச்சியோடு இஸ்லாமியக் கலைகளின் மொழியாக மாறியது."

எல்லா முஸ்லிம்களும் அரபிமொழி மீது ஒரு தனி அன்பு ஏற்படக் காரணம். புனித நபி (ஸல்) அவர்களின் மொழி அரபி. புனித திருக்குர்ஆன் அரபி மொழியில் இருக்கிறது. சொர்க்கத்தின் மொழி அரபி." இதனாலேயே "உலக முஸ்லிம்கள் இஸ்லாத்தையும் அரபுமொழியையும் முதுகெழும்பாகப் பெற்றுள்ளனர்". இத்தொன்மை மொழியும் அழகுத் தமிழ்மொழியும் ஈருடல் ஓர் உயிராக இணைந்த அரபுத் தமிழையே நமது முன்னோர்கள் உருவாக்கி, பயன்படுத்தி, பயன்பெற்று, பாதுகாத்து நம்மிடம் விட்டுச் சென்றுள்ளனர். அழகு அரபிமொழியும் இன்பத் தமிழ்மொழியும் காலத்தால் பல்வேறு நவீனமயம் அடைகின்றபோது தொன்மையை பாதுகாத்து, வருங்கால தலைமுறையினருக்கு கடத்துவது நமது பொறுப்பாகும். ஆகவே, மொழி புலமையாளர்கள் அரபுத்தமிழ் மொழியை நவீனப்படுத்த வேண்டிய மாபெரும் பணியினைப் போர்க்கால அடிப்படையில் கையிலெடுக்க முன்வர வேண்டும். இப்பணியானது, மார்க்கத்திற்கும் இரண்டு பழம்பெரும் செம்மொழிகளுக்கும் செய்யும் அருந் தொண்டாகும். தவறும் பட்சத்தில் முஸ்லிம் சமூகத்தின் வரலாற்றுத் தவறாக அது அமைந்துவிடக்கூடும். அன்பாளன் அல்லாஹ் அருள்புரியட்டும்..

உதவிய நூல்கள்:

1. ஆர்.பி.எம். கனி-இஸ்லாமிய இலக்கியக் கருவூலம்.
2. அப்துற்றஹீம், இஸ்லாமியக் கலைக்களஞ்சியம். தொகுதி ஒன்று.
3. ம. முகம்மது உவைஸ், பீ.மு. அஜ்மல்கான் இஸ்லாமிய இலக்கிய வரலாறு தொகுதி ஒன்று.
4. டாக்டர். செ. பசுலு முஹியித்தீன் – அரபுத்தமிழ்.
5. டாக்டர் க.த. திருநாவுக்கரசு - சிந்துவெளி எழுத்து வடிவங்கள்.
6. பேராசிரியர். கா. அப்துல்கபூர் - இஸ்லாமிய இலக்கியம்.

7. பேராசிரியர், மு. அப்துல் கரீம் - இஸ்லாமும் தமிழும்.
8. டாக்டர், கா. சிவத்தம்பி -தமிழ் இலக்கியத்தில் மதமும் மானிடமும்.
9. டாக்டர். வ. அய். சுப்பிரமணியம் - சில கட்டுரைகள்.
10. எம்.எம். மீரான்பிள்ளை 'அரபுத்தமிழ் தோற்றமும் வளர்ச்சியும், 13-வது அகில இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்கு ஆய்வுக்கோவை.
11. சாமி, அ.மா. (1994). தமிழில் இஸ்லாமிய இதழ்கள், சென்னை: நவமணி பதிப்பகம்.
12. நுஃமான், எம்.ஏ, இன்கிலாப், 'அரபுத்தமிழ் - ஒரு விபரண ஆய்வு'.
13. அஸீஸ்; ஏ.எம்.ஏ, அரபுத்தமிழ் எங்கள் அன்புத் தமிழ்.
14. சுக்ரி, எம்.ஏ.எம். (1997). "அரபுத்தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்", அம்சம் இன்டர்நெஷனல், கொழும்பு.
15. மணவை முஸ்தபா, (1991). இஸ்லாமிய கலைக் களஞ்சியம், சென்னை: மீரா பதிப்பகம்.

1. R.P.M. Gani, Islamiya Ilakkiyak Karuwoolam.
2. Abdur Raheem, Islamiyak kalaikalanjiyam, Part-I.
3. M. Mohammed Uwais, P.M. Ajmal Khan, Islamiya Ilakkiya Varalaaru, Part-I.
4. Dr. S. Fazru Mohyideen, Arab-Tamil.
5. Dr. K.D. Thirunavukkarasu, Sinduveli Yezhuttu Vadivangal.
6. Prof. K. Abdul Gafoor, Islamiya Ilakkiyam.
7. Prof. M. Abdul Kareem, Islamum Ilakkiyamum.
8. Dr. K. Sivatthambi, Tamil Ilakkiyathil Madamum, Maanidamum.
9. Dr. V.I. Subiramaniyam, some Articles.
10. M.M. Meeran Pillai, Arab-Tamil Thorramum Valarshiyum, (13th All India University Tamil Writers Seminar –Research institute).
11. Swami A.M. (1994), Tamilil Islamiya Idhalgal, Chennai. Nawamani Pathippagam.
12. Nuaman, M.A. Ingilab, Arab-Tamil – (Descriptive Study).
13. Azeez A.M.A., Arab-Tamil Engal Anbut Tamil.

14. Shukri M.A.M., (1997), Arabut Tamilin Panpaatthup Paarampariyam, Amsam International, Colombu.
15. Manavai Musthafa, (1991), Islamiyak kalaikalanjiyam, Chennai, Meera Pathippagam.

In English:

- Heras - Studies in Proto Indo Meditteranean Culture.
- Scott Elliot - The Lost Lemuris.
- Alexander Gundartov - The Riddles of Three oceans.
- Vincent A Smith - The Early History of India.
- Dr. Tarachand - Influence of Islam on Indian culture.
- V.R.R. Dhishtar-Prehistoric India.
- T.R. Sesha Iyengar - Dravidian India.
- Dr. Sunith Kumar Chatterji - The Origin and Development of the Bengali Language.
- J.C. Ghosh - Bengali Literature.
- Tayka Shu’ayb, Arabic, Arwi, and Persion in Sarandib and Tamil Nadu.
- Mahroof, M.M.M, Islamic Studies, Vol. 32, Number 2, “Arabic-Tamil in South India and Sri Lanka: Language as Mimicry”.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr D.Sundararaj P: 134-151

Since 1951

Arabuttamil: Language and Literature

அறபுத்தமிழ்: மொழியும் இலக்கியமும்

Dr. D. SUNDARARAJ
Lecturer, Asian Languages & Cultures Academic Group,
National Institute of Education,
Nanyang Technological University, Singapore - 637616.

Abstract:

This paper describes the Arabic tamil, a social dialect of the Tamil Muslim community. First, it explores the grammatical structure of Arabic Tamil. How Arabic Tamil's alphabets were created by Muslim Tamil scholars and how they defined the Arabic script for non-Arabic sounds like the special character of Tamil 'zha'. then describes the Arabic Tamil literature shortly, and finally describes the historical background and the role of Islam and the Quran in the origin and development of Arabic Tamil.

Keywords:

Arabuttamil, Grammer, Origin, Literature.

ஆய்வுச் சுருக்கம் :

தமிழ் முஸ்லீம் சமூகத்தின் சமூகப் பேச்சு வழக்கான அரபுத்தமிழ் பற்றி இக்கட்டுரை விவரிக்கிறது. முதலில், அரபுத்தமிழ் இலக்கண அமைப்பை ஆராய்கிறது. முஸ்லீம் தமிழ் அறிஞர்களால் அரபுத்தமிழ் எழுத்துக்களை எவ்வாறு உருவாக்கினார்கள் மற்றும் அரபு அல்லாத ஒலிகளுக்கு அரபு எழுத்துக்களை எவ்வாறு வரையறுத்தார்கள் என்பது தமிழின் சிறப்பு எழுத்து போன்றது. பின்னர் அரபுத்தமிழ் இலக்கியத்தைச் சுருக்கமாக விவரிக்கிறது, இறுதியாக வரலாற்று பின்னணி மற்றும் அரபுத்தமிழ் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் இஸ்லாம் மற்றும் குர்ஆனின் பங்கு என்ன என்பதை விவரிக்கிறது.

குறிப்புச் சொற்கள் : அரபுத் தமிழ், இலக்கணம், தோற்றம், இலக்கியங்கள்

முன்னுரை :

தமிழ் ஒலிகளை அறபு எழுத்துருவில் எழுதும் முறையை 'அறபுத்தமிழ்' என்று அழைக்கிறார்கள். இந்த மொழிவடிவத்தை தமிழ் இஸ்லாமியர்களின் வழக்கிலிருந்த ஒரு கிளை மொழி என்று வகைப்படுத்துவர். இந்த மொழி வடிவத்தை "அறபுத்தமிழ்" என்று அழைக்கலாமா? அல்லது "அரபுத்தமிழ்" என்று அழைக்கலாமா? என்கிற குழப்பம் தமிழில் உண்டு. இரு வகையிலும் அழைக்கலாம் என்று பொதுவாகக் கூறுபவர்களும் உண்டு. ஆனால் 'அறபுத்தமிழ்' என்கிற மொழி வடிவமே, ஒலித்துல்லியத்தை வலியுறுத்தியதால் பிறந்ததாகும் என்பதை நாம்

மறந்துவிடக்கூடாது. இவ்விரு வடிவங்களில் எது துல்லியமான வடிவம் என்பதை மூன்று அணுகுமுறைகள் வழி ஆராய்ந்தேன்.

முதலில். அறபு, தமிழ் ஆகிய இரு மொழிகளில் இன்று கிடைக்கும் முதல் மரபிலக்கணங்களான அல்-கிதாபு (கி.பி.800), தொல்காப்பியம் (கி.மு.300) ஆகிய இரு இலக்கணங்களும் தத்தம் மொழியின் ஒலிகளுக்கு, குறிப்பாக /ر/, /ற/-என்னும் ஒலிக்கு வரையறுக்கும் ஒலிப்பிடம், ஒலிப்புமுறை முதலியவற்றை ஒப்பிடுதல். இரண்டாவதாக, தமிழ் ஒலிகளை அறபு எழுத்தில் எழுதும் 'அறபுத்தமிழ்' என்னும் மொழிவடிவத்தில், தமிழில் உள்ள றகரம், ரகரம் ஆகிய ஒரு ஒலிகளுக்குரிய அறபு எழுத்துக்களை ஒப்புநோக்குதல். மூன்றாவதாக, தற்கால மொழியியல் நோக்கில் தமிழ், அறபு அறிஞர்கள் தத்தம் மொழியில் உள்ள இந்த அதிர்வொலிகளுக்குக் (ر - ற) கொடுக்கும் ஒலியியல் விளக்கங்களை, உலக ஒலியியல் அகரவரிசையின் பின்னணியில் அணுகுதல்.

இம்மூன்று அணுகுமுறைகளின் வழி, அறபியில் உள்ள / ر /-விற்கு ஒலிப்பிடம், ஒலிப்புமுறை முதலிய ஒலியியல் கூறுகளின் வழி மிகப்பொருத்தமாக இருப்பது / ற / என்னும் தமிழ் ஒலிதான் என்பதை நிறுவியிருக்கிறேன் (த. சுந்தரராஜ், *அறபும் தமிழும்* 2018). எனவே இந்த மொழிவடிவத்தை "அறபுத்தமிழ்" என்று அழைப்பதே பொருத்தமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

'அறபுத்தமிழ்' என பொதுவாக அறியப்பட்டாலும், சிறுபான்மையாகவும் சுருக்கமாகவும் 'ஆற்வி'/ 'ஆர்வி' (Arwi) என்ற பெயரிலும் இது வழங்கப்படுகிறது.

'ஆற்வி' என்ற பதத்தின் பொருள் என்ன? என்பதை துல்லியமாக ஆராய்வதற்குப் போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை. கி.பி.4-ஆம் நூற்றாண்டில் இந்தோனேஷியாவில் ஜாவனிஸ் மொழியை பல்லவ (கிரந்த) எழுத்தில் எழுதும் வழக்கம் இருந்தது. அவ்வடிவத்தை 'காவி' (Kawi) என்று அழைத்தனர். அதே போன்று மலேசியாவில் மலாய் மொழியை அறபு எழுத்துருவில் எழுதும் வடிவத்தை 'ஜாவி' (Jawi) என்று அழைத்தனர். அறபுத்தமிழ் தமிழகம் மட்டுமன்றி இலங்கை உள்ளிட்ட சில தென்கிழக்கு நாடுகளிலும் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, 'ஆர்வி' (Arwi) என்னும் பெயர் அறபுத்தமிழுக்கு தென்கிழக்காசிய நாட்டினர் வழங்கிய பெயராக இருக்கக்கூடும்.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr D.Sundararaj P: 134-151

அறபுத்தமிழ் தோற்றத்திற்கான காரணங்கள்:

பலநூற்றாண்டுகள் தமிழ் முஸ்லீம்களின் உன்னதமான மொழியாக விளங்கிய அறபுத்தமிழின் தோற்றத்திற்கான காரணங்களை இங்குக் காண்போம்.

1.இஸ்லாமியர்கள் அனைவரும் குற்ஆனை அறபு மொழியிலேயே வாசிக்க (ஓதல்) வேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறது. இதனால் இஸ்லாமியர் அனைவரும் அறபு எழுத்துக்களை அறிந்தவர்களாக இருக்கிறார்கள்.

2.குற்ஆனுக்குரிய விளக்க உரைகள் (தஃப்ஸீற்) அறபு எழுத்தைத் தவிர வேறு எழுத்துருவில் (லிபியில்) எழுதக்கூடாது எனும் கட்டுப்பாடு. ‘1920-லும் அடுத்து வந்த ஆண்டுகளிலும் கூட, இந்த தஃப்ஸீற்கள் தமிழ் லிபியில் எழுதப்படலாகாது என்று வாதாடி வந்தார்கள்’

3.குற்ஆனை அறபு மொழியிலேயே ஓதுவது எவ்வளவு புனிதமோ அதே போன்று, இஸ்லாம் மார்க்கம் சார்ந்த கருத்துக்களையும் அறபு எழுத்துருவில் படைப்பதை புனிதமாகக் கருதினர்.

4.அறபுச்சொற்களை அறபியல்லாத பிற எழுத்துருவில் எழுதினால் துல்லியமான ஒலிபெயர்ப்பாக அமையாது, பிழையான உச்சரிப்பை உருவாக்கும். அறபுப்பெயர்கள், அறபுக் கலைச்சொற்களை பிழையின்றி தெளிவாக உச்சரிக்க வேண்டுமெனில் அறபு எழுத்துக்களில் வாசிப்பதே சிறந்தது என்ற எண்ணம் தமிழ் இஸ்லாமியர்களிடம் இருந்தது. “குற்ஆனை நிதானமாகவும் தெளிவாகவும் ஓதவேண்டும்”[1] - என்று குற்ஆனே நெறிப்படுத்துகிறது.

இஸ்லாமிய மார்க்க நூல்களை பிழையின்றி வாசிப்பது இஸ்லாமியர்களின் அடிப்படைக் கடமை என்பதற்கு மிகச்சிறந்த வரலாற்றுச்சான்று, அறபு மொழியின் முதல் இலக்கண ஆசிரியரான ஸீபவைஹிக்கும் (பாரசீகர்), இஸ்லாமிய மார்க்க அறிஞரான அல்-பஸ்றிக்கும் (அறேபியர்) இடையில் உருவான மனக்கசப்பு.[2]

5. அறபு மொழி குற்ஆனின் மொழியாகவும், முஹம்மது நபி பேசிய மொழியாகவும் இருப்பதால் இஸ்லாமியர்கள் அறபு மொழியைப் புனித மொழியாகக் கருதினர்.

மேற்கண்ட காரணங்களே அறபுத்தமிழ் தோற்றத்திற்கான அடிப்படை ஆகும். தமிழ் இஸ்லாமியர் மட்டுமன்றி இஸ்லாம் மதத்தைப் பின்பற்றும் அறேபியரல்லாத இஸ்லாமியர் அனைவரும் அறபு எழுத்துருவை பயன்படுத்துவதற்கான பொதுக்காரணங்கள் இவைகளேயாகும்.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr D.Sundararaj P: 134-151

அறபுத்தமிழின் மொழி அமைப்பு:

அறபு மொழியினைப் புனிதமாகக் கருதிய தமிழ் இஸ்லாமிய அறிஞர்கள், தமது தாய் மொழியான தமிழை, அறபு எழுத்துக்களில் எழுதத் தொடங்கியதால் உருவானதே அறபுத்தமிழ். அறபுத்தமிழின் எழுத்துமுறை அறபு முறையில் அமைவதால், அதன் நெடுங்கணக்கும் அறபு மொழி போன்றே மெய்யெழுத்து நெடுங்கணக்கில் (Consonantal Alphabets) இருக்கின்றது. இதனை Abjads அல்லது Consonantal Alphabets என்பர். இந்நெடுங்கணக்கில் மெய்யெழுத்துக்கள் மட்டுமே இடம்பெறும். சில மொழிகளில் (அறபு, ஃபாற்ஸி) பெரும்பான்மையான மெய்யெழுத்துக்களோடு சில உயிர் எழுத்துக்களும் இடம்பெறும். உயிரொலிகளைக் குறிக்க தனிக்குறியீடுகளைப் பயன்படுத்துவர். தமிழின் அசையெழுத்து (Alpha syllabary அல்லது Syllabic alphabets) முறையினை அறபுத்தமிழ் பின்பற்றவில்லை. அகரவரிசைப்படி முதலில் உயிரும், பின்பு மெய்யும் அமையும் முறையே அசையெழுத்து முறையாகும்.

அறபுத்தமிழ் நெடுங்கணக்கில், அறபு எழுத்துக்கள் 28+1=29-ம், தமிழின் சிறப்பு ஒலிகளுக்காக அறபுத்தமிழறிஞர்கள் உருவாக்கிய பதினொரு எழுத்துக்களும் சேர்த்து மொத்தம் நாற்பது எழுத்துக்கள் உள்ளன. மேலும், உயிரொலிகளைக் குறிக்க ஐந்து குறிகளும் (அறபுக்குறிகள்-3, தமிழின் சிறப்பு உயிரொலிகளுக்காக அறபுத் தமிழறிஞர்கள் உருவாக்கிய குறிகள்-2), ஒற்றைக் குறிக்க ஒரு குறியும், ஒலிகளின் இரட்டிப்புத் தன்மையினைக் குறிக்க ஒரு குறியும், ا [ā]-வின் நெடில் தன்மையினைக் குறிக்க ஒரு குறியும் உள்ளன.

தமிழ் ஒலிகளுக்கு நேர் இணையாக உள்ள அறபு ஒலிகளின் எழுத்துக்களை அப்படியே தமிழ் ஒலிகளுக்குப் (எடு: ல்[l]-ل [l]) பொருத்தினர். பல தமிழ் ஒலிகளுக்கு நேர் இணையான ஒலிகள் அறபியில் இல்லை. அதனால், அறபு எழுத்து முறையிலேயே புதிய எழுத்துருக்களையும், குறிகளையும் அறபுத்தமிழ் அறிஞர்கள் உருவாக்கினர். இப்புதிய எழுத்துருக்களையும், குறிகளையும் உருவாக்க வேண்டிய கட்டாயம் உயிர் எழுத்து, மெய் எழுத்து ஆகிய இரு நிலைகளிலும் ஏற்பட்டது.

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr D.Sundararaj P: 134-151

அறபுத்தமிழ் நெடுங்கணக்கு

வ. எண்	அறபுத் தமிழ் எழுத்து	தமிழ் ஒலி பெயர்ப்பு	ரோமன் ஒலி பெயர்ப்பு
1.	ا	அ	a
2.	ب	ப்^{3}	b
3.	ت	த்	t
4.	ث	த்^{2} / ஃத்	ṯ / th
5.	ج	ஜ்	j
6.	چ	ச்	c
7.	ح	ஹ்^{2}	ḥ
8.	خ	க்ஹ்	ḫ
9.	د	த்^{3}	d
10.	ڊ	ட்^{2}	ṭh
11.	ڍ	ட்^{4}	ḍh
12.	ذ	ஃஜ்^{3}	z/s
13.	ر	ற்	ṟ
14.	ڔ	ர்	r
15.	ز	ஃஜ்^{1}	z
16.	س	ஸ்	s
17.	ش	ஷ்	š
18.	ص	ஸ்^{2}	ṣ
19.	[illegible]	ள்	ḷ
20.	ض	ஃட்/ட்^{3}	ḍ
21.	ڞ	ழ்	ḻ
22.	ط	ட்	ṭ
23.	ظ	ஃஜ்^{2}	ẓ
24.	ع	அய்	ay
25.	ڠ	ங்	ṅ
26.	غ	க்^{3}	ġ
27.	ف	ஃப்	f
28.	ڣ	ப்	p
29.	ق	க்^{5}	q
30.	ك	க்^{2}	kh
31.	ڬ	க்	k
32.	ل	ல்	l
33.	م	ம்	m
34.	ن	ந்/ன் (2)	n/ṉ
35.	ڹ	ண்	ṇ
36.	ڽ	ஞ்	ñ
37.	ة	ஹ்	h
38.	و	வ்	w/v
39.	ي	ய்	y

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr D.Sundararaj P: 134-151

அறபுத்தமிழ் எழுத்து உருவாக்கம்:

முதலில் தமிழ்ச்சொற்களை எழுதுவதற்க்குப் பயன்படும் பதினெட்டு தமிழ் மெய்யெழுத்துக்களுக்கு இணையான அறபு எழுத்துக்களை அறபுத்தமிழ் அறிஞர்கள் உருவாக்கினர். ஒலிப்பிடம், ஒலிப்புமுறை ஆகியவற்றில் தமிழ் மெய்யொலிகளுக்கு இணையாகவும் பொருத்தமாகவும் இருக்கும் அறபு ஒலிகளின் அறபு எழுத்தை அப்படியே தமிழ் ஒலியை எழுதப் பயன்படுத்தினர். அவ்வாறு இணையில்லாத தமிழின் சிறப்பு ஒலிகளை (எழுத்துக்களை) எழுதுவதற்கு அறபு எழுத்துருவிலேயே சிறப்புக் குறியீடுகளை இட்டு புதிய அறபு எழுத்துக்களை தமிழ் மொழிக்காக உருவாக்கினர். தமிழ் மெய்யெழுத்துக்களுக்கு இணையான அறபு எழுத்துருக்களை பின்வரும் அட்டவணை விவரிக்கிறது.

வ. எண்	தமிழ் எழுத்துக்கள்	தமிழ் ஒலிகளுக்கு நேர் இணையான அறபு எழுத்துக்கள்	ரோமன் ஒலிபெயர்ப்பு
1.	க்	ك	k
2.	ங்	ڠ	ṅ
3.	ச்	چ	c
4.	ஞ்	ڽ	ñ
5.	ட்	ڊ	ṭ
6.	ண்	ڹ	ṇ
7.	த்	ت	t
8.	ந்	ن	n
9.	ப்	ڤ	p
10.	ம்	م	m
11.	ய்	ي	y
12.	ர்	ڔ	r
13.	ல்	ل	l
14.	வ்	و	v
15.	ழ்	ض	l̲
16.	ள்	[illegible]	ḷ

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr D.Sundararaj P: 134-151

17.	ற்	ر	ṟ
18.	ன்	ن	ṉ

மொழிக்குடும்ப வேறுபாடுகளைக் கடந்து தமிழுக்கும் அறபுக்கும் பொதுவாக உள்ள எட்டு மெய்யொலிகளுக்கு, அறபு மொழியில் உள்ள அதே இன ஒலிகளின் எழுத்துருவை அப்படியே தமிழ் ஒலிகளுக்குப் பொருத்தினர். இதில் ந்,ன் ஆகிய இரு ஒலிகளுக்கும் ஒரே அறபு எழுத்துருவைப் பயன்படுத்தினர். பின்வரும் அட்டவணை அதை விவரிக்கிறது.

வ. எண்	தமிழ் எழுத்து	அறபு எழுத்து	ஒலி வடிவம்	அறபுத்தமிழ்ச் சொல்	தமிழ் ஒலிபெயர்ப்பு
1.	க்[2]	ك	kh		**காத்து**
2.	த்	ت	t		**து**வக்குறேன்
3.	ம்	م	m		**மூ**வாயிரம்
4.	ய்	ي	y		அவனுடை**ய**
5.	ல்	ل	l		இரவி**ல்**
6.	வ்	و	v		அ**வ**ன்
7.	ற்	ر	ṟ		அ**றி**வித்தான்
8.	ந் / ன்	ن	n / ṉ		**நான்**

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr D.Sundararaj P: 134-151

அறபு மொழியில் இல்லாத, தமிழின் சிறப்பு ஒலிகளுக்கு அறபுத்தமிழ் அறிஞர்கள் உருவாக்கிய அறபு எழுத்துக்களே அறபுத்தமிழின் சிறப்பு எழுத்துக்களாகும். இவ்வகையில் ஒன்பது மெய்யெழுத்துக்கள் உள்ளன.

தமிழின் சிறப்பு ஒலிகளுக்காக அறபுத்தமிழறிஞர்கள் உருவாக்கிய அறபு எழுத்துக்கள்

வ. எண்	தமிழ் எழுத்துக்கள்	அறபு எழுத்துக்கள்	ரோமன் ஒலிபெயர்ப்பு
1.	க்	ڮ	k
2.	ங்	ڠ	ṅ
3.	ச்	چ	c
4.	ஞ்	ڽ	ñ
5.	ட்	ڊ	ṭ
6.	ண்	ڹ	ṇ
7.	ப்	ڣ	p
8.	ர்	ڔ	r
9.	ழ்	ض	l̠
10.	ள்	ڝ	ḷ

அறபுத்தமிழ் சிறப்பு எழுத்துக்களின் உருவாக்கம்

வ. எண்	ஃபார்ஸியோ - அறபு எழுத்து	ஒலிவடிவம் (அறபு, ஃபார்ஸி மொழிகளில்)	அறபுத் தமிழுக்கென புதிதாய் இணையும் புள்ளிக் குறியீடுகள்	புதிய வரிவடிவம் (அறபுத் தமிழில்)	இணையான தமிழ் ஒலி/எழுத்து	தமிழ் ஒலி வடிவம்	அறபுத்தமிழ்ச் சொல் (தமிழ் ஒலிபெயர்ப்பு)
1.	ك	kh	.	ڮ	k	க	ڣُوكَامَلْ போகாமல்

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr D.Sundararaj P: 134-151

Since 1951

2.	ع	ay	∵	ڠ	ங்	ṅ	(வெகுஜனங்கள்)
3.	چ	c	-	چ	ச்	c	(சென்ற)
4.	ن	n	..	ڽ	ஞ்	ñ	ڽايرو-
5.	د	d	.	ڊ	ட்	ṭ	(நாடு)
6.	ن	n	.	ڹ	ண்	ṇ	(மண்டபத்திற்)
7.	ف	f	.	ڤ	ப்	p	(பச்சையப்பன்)
8.	ر	r̲	.	ڔ	ர்	r	(ஒருவன்)
9.	ض	ḍ	.	ڞ	ழ்	l̲	(வியாழம்)
10	ص	ṣ	.	ڝ	ள்	ḷ	(வெள்ளிக் கிழமையன்று)

மேற்கண்ட அட்டவணையில் மூன்றாவதாக வரும் چ [c] எனும் ஒலி அறபியில் இல்லை, ஃபாற்ஸியில் உண்டு (ஃபாற்ஸி நெடுங்கணக்கில் ஏழாவது எழுத்து). அது தமிழ்ச் 'ச' [c]-வுக்கு நேர் இணையாக இருப்பதால், அறபுத்தமிழ் அறிஞர்கள் அப்ஃபாற்ஸி எழுத்துருவை அப்படியே அறபுத்தமிழில் கையாண்டார்கள். இதே ஃபாற்ஸி எழுத்து (چ) ஃபாற்ஸியோ-அறபு எழுத்துருவில் எழுதப்படும் பல மொழிகளில் உள்ள [c] இன ஒலிகளைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இது (چ) உருதுவில் [che]-வாகவும் (உருது நெடுங்கணக்கில் எட்டாவது எழுத்து),

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr D.Sundararaj P: 134-151

காஷ்மிறியில் [č]-வாகவும் (காஷ்மிறி நெடுங்கணக்கில் ஏழாவது எழுத்து), ஸிந்தியில் [cē]-வாகவும் (ஸிந்தி நெடுங்கணக்கில் பதினாறாவது எழுத்து), பஞ்சாபியில் [che]-வாகவும் (ஷாமுக்ஹி நெடுங்கணக்கில் எட்டாவது எழுத்து), கொங்கணியில் [cha]-வாகவும் (கொங்கணி நெடுங்கணக்கில் ஏழாவது எழுத்து), மலாயில் [ca]-வாகவும் (ஜாவி நெடுங்கணக்கில் ஆறாவது எழுத்து) உச்சரிக்கப்படுகிறது.

[ta] (ட) - என்னும் தமிழ் ஒலிக்கு, ‘ڊ’-என்னும் ஃபாற்ஸியோ-அறபு எழுத்தைக் கையாள்கின்றனர். அதேபோன்று இரட்டித்து வரும் [ṭta] (ட்ட) – என்னும் வடிவத்தைக் குறிக்க ‘ڍ’-என்னும் ஃபாற்ஸியோ-அறபு எழுத்தைக் கையாள்கின்றனர். ‘ட’-வின் இரட்டிப்புத் தன்மைக்கு மட்டும் தனி எழுத்துருவை உருவாக்கியிருக்கிறார்கள். இவ்விரு எழுத்துக்களும் ஃபாற்ஸி நெடுங்கணக்கிலோ, அறபு நெடுங்கணக்கிலோ இல்லை. ஆனால், ‘ڊ’-என்னும் எழுத்து ஸிந்தியில் [da]-என்னும் ஒலியையும் (ஸிந்தி நெடுங்கணக்கில் இருபத்தியிரண்டாவது எழுத்து), கொங்கணியில் [dda]-என்னும் ஒலியையும் (கொங்கணி நெடுங்கணக்கில் பதினாறாவது எழுத்து) குறிக்கப் பயன்படுத்துகின்றனர். அதே போன்று ‘ڍ’-என்னும் எழுத்தை ஸிந்தியில் [dh]-என்னும் ஒலியை (ஸிந்தி நெடுங்கணக்கில் இருபத்தி நான்காவது எழுத்து) குறிக்கப் பயன்படுத்துகின்றனர்.

பிற மொழிச்சொற்களை, குறிப்பாக தமிழ் இஸ்லாமியர்களின் வழக்கில் புழங்கும் அறபுச்சொற்களையும், நெடுங்காலமாக தமிழ்ச் சமூகத்தின் வழக்கில் உள்ள பிராகிருதம், சமஸ்கிருதம், பாரசீகம், உருது, ஆங்கிலம் முதலிய பிற மொழிச்சொற்களையும் துல்லியமான ஒலி அமைப்போடு எழுதுவதற்காக பல அறபு எழுத்துருக்களை இஸ்லாமியத் தமிழ் அறிஞர்கள் அறபுத்தமிழில் கையாண்டனர். அவ்வாறு கையாளப்பட்ட எழுத்துக்கள் இருபத்து ஒன்று. இது தமிழ் மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கையை விட அதிகம். தமிழ் இஸ்லாமியர்களின் வழக்கில் மட்டுமல்லாமல், பொதுத்தமிழ் வழக்கிலும் கலந்திருந்த பிற மொழிச்சொற்களின் ஆதிக்கத்திற்கு இது மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள், அறபுத்தமிழ் முதலியவற்றில் உள்ள தமிழ் மற்றும் பிற மொழிச்சொற்களின் விகிதங்களை இதன் மூலம் மதிப்பிடலாம். “மணிப்பிரவாளம் – அறபுத்தமிழ்: ஓர் ஒப்பீடு” என்னும் அடுத்த கட்டுரை இது குறித்து விரிவாகப் பேசுகிறது.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303   ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr D.Sundararaj P: 134-151

அறபு முதலிய பிறமொழிச்சொற்களை தமிழில் துல்லியமாக உச்சரிப்பதற்காக அறபுத்தமிழ் அறிஞர்கள் பயன்படுத்திய அறபு எழுத்துக்கள்

வ.எண்	அறபுத் தமிழ் எழுத்து	தமிழ் ஒலிபெயர்ப்பு	ரோமன் ஒலி\பெயர்ப்பு
1.	ب	ப³	b
2.	ث	ஃத²	ṯ
3.	ج	ஜ	j
4.	ح	ஹ²	ḥ
5.	خ	க்ஹ	ḫ
6.	د	த³	d
7.	ذ	ஃத³	ḍ
8.	ز	ஃஜ¹	z
9.	س	ஸ	s
10.	ش	ஸ¹	š
11.	ص	ஷ	ṣ
12.	ض	ஃட³	ḍ
13.	ط	ட	ṭ
14.	ظ	ஃஜ²	ẓ
15.	ع	அய்	’/ai
16.	غ	ஃக⁴	ġ
17.	ف	ஃப	f
18.	ق	க⁵	q
19.	ة	ஹ	h
20.	ڊ	ட்ட	ṭta

அட்டவணையில் இறுதியாக வரும் ட்ட [ṭta] ஒலிக்குரிய அறபு எழுத்தை (ڊ) அறபுத்தமிழ் அறிஞர்கள் புதிதாக உருவாக்கினர்.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr D.Sundararaj P: 134-151

இவ்வெழுத்தின் உருவாக்கம்:

அறபு எழுத்துக்கள்	ஒலிவடிவம் (அறபு மொழியில்)	அறபுத் தமிழுக்கென புதிதாய் இணையும் புள்ளிக் குறியீடுகள்	புதிய வரிவடிவம் (அறபுத் தமிழில்)	தமிழ் ஒலி வடிவம்	தமிழ் வரி வடிவம்	அறபுத் தமிழ்ச்சொல் (தமிழ் ஒலிபெயர்ப்புடன்)
د	d	..	ڊ	ṭta	ட்ட	 கொடுக்கப்பட்டது

உயிரொலிகள்:

தமிழில் பன்னிரெண்டு உயிர்கள் உள்ளன. அறபியில் ஆறு உயிர்கள் உள்ளன. அறபு மொழியின் ஆறு உயிர்க்குறிகளையும் அப்படியே தமிழில் உள்ள அவ்வின உயிர்களுக்குப் பொருத்தினர். இக்குறியீடுகளைப் பின்பற்றித் தமிழின் மற்ற ஆறு உயிர்களுக்கும் புதிய குறியீடுகளை அறபுத்தமிழறிஞர்கள் உருவாக்கினர். அறபுக்கும், தமிழுக்கும் பொருத்தமாக உள்ள ஆறு உயிர் குறிகள்:

ஜபிர் (zaber) - ◌َ - அ [a] ஜெர் (zer) - ◌ِ - இ [i]
பெஷ் (pesh) - ◌ُ - உ [u] ◌َا - ஆ [ā]
◌ِي - ஈ [ī] ◌ُو - ஊ [ū]

குற்றுயிரைக் குறிக்கும் அறபுப்பெயர்களான ஃபத (Fatha); கஸ்ற (Kasra); தம்ம-(Dhamma) ஆகியவற்றிற்குப் பதிலாக, முறையை ஜபிர் (zaber); ஜெர் (zer); பெஷ் (pesh) என்னும் ஃபாற்ஸி (பாரசீகச்) பெயர்களையே அறபுத்தமிழறிஞர்கள் கையாண்டனர்.

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303   ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr D.Sundararaj P: 134-151

/எ/, /ஏ/-என்னும் தமிழ் உயிரொலிகளைக் குறிக்க ‘ٖ’ – என்னும் புதிய குறியைப் பயன்படுத்தினர். ‘எ’ எனும் உயிரைக் குறிக்க, ي–யின் அடியில் இக்குறியை இட்டு எழுதினர். ‘ஏ’-என்னும் நெடிலைக் குறிக்க இரண்டு ي-யைப் பயன்படுத்தி, அதில் முதல் ى-யின் அடியில் இக்குறியை இட்டனர்.

எடு:

يٖنَّيْ - என்னை

يٖيٖكَانْتَ - ஏகாந்த

‘ஒ’ என்னும் உயிர்க்கு ‘உ’ [u] வின் குறியை (ٗ) தலைகீழாக (ٖ), எழுத்தின் (l) மேல் இட்டு எழுதினர். ‘ஓ’- விற்கு ‘ஊ’-வின் முறையிலேயே و-வோடு இக்குறியை இணைத்து எழுதினர்.

أٖضٖفّٖيٖنْ - ஒளிப்பேன்

‘ஐ’,‘ஔ’-ஆகிய இரு இணையுயிர்களுக்கும், ‘ஈ’, ‘ஊ’ - என்னும் நெட்டுயிர்களின் முறையிலேயே அறபுத்தமிழ் எழுத்துருக்களை உருவாக்கினர்.

◌َ(அ) + ي (இ) = يَ (ஐ);

◌َ(அ) + و (உ) = وَ (ஔ)

மாத்திரை அடிப்படையில் இரு குற்றுயிர்களைக் கூட்டி நெட்டுயிரை உருவாக்கும் தமிழ் முறைப்படியே, அ+இ=ஐ; அ+உ=ஔ – என்று இரு இணையுயிர்களுக்கான எழுத்துருக்களை உருவாக்குகின்றனர் அறபுத்தமிழ் அறிஞர்கள்.

தமிழ் ஒலிகளுக்கான ஃபாற்ஸியோ-அறபு எழுத்துக்களை உருவாக்குகையில், ஃ பாற்ஸியோ-அறபு எழுத்துக்களின் வரிவடிவத்தை அப்படியே வைத்துக்கொண்டு, அவ்வரிவடிவத்தின் மேல் அல்லது கீழ், ஒலிவேறுபாட்டைக் குறிக்கும் புள்ளிக் குறியீடுகள் இடுவதை மரபாகக் கொள்கின்றனர். இம்மரபை அறபு மொழியிலிருந்து பெறுகின்றார்கள்.

அறபு மொழியில் ஒலிவேறுபாடுகளை துல்லியமாகக் குறிக்கும் புள்ளிக்குறியீடுகளும் (∵ .. . ̊ ͇ ◌ٌّ(, குற்றுயிர்களைச் சுட்டும் தனிக் குறியீடுகளும் (◌ُ◌َ◌ِ) கி.பி.7-ஆம் நூற்றாண்டில் அறிமுகமாயின. குற்ஆனை அதன் மூலமொழியில்

(அறபியில்) தவறில்லாமல் வாசிப்பதற்கும், அதன்பொருளைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கும் இக்குறியீடுகள் இன்றியமையாதவையாக விளங்கின. இந்த ஒலித்துல்லியம் அல்லது ஒலித்தூய்மை புனிதமாக உருவெடுத்து அறபு மொழியையும், அறபு எழுத்தையும் (ஃபாற்சியோ-அறபு எழுத்து) இஸ்லாமியரிடம் பரப்பியதோடு, அவர்களின் அடிப்படை மார்க்கக் கடமையாகவும் மாறியது. எனவே இஸ்லாம் மூலம் அறபுமொழியைப் பரவலாக்கியதில் இக்குறியீடுகளுக்கும் முக்கியப்பங்கு உண்டு.

அறபுத்தமிழ் இலக்கியங்கள்

அறபுத்தமிழ் கி.பி.9-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே தமிழ் இஸ்லாமியர்களின் வழக்கில் இருந்தாலும்,[i] 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தான் செல்வாக்குப்பெறத் தொடங்கியது. [ii] அதன்பின்பு தான் அதிகமான அறபுத்தமிழ் நூல்கள் தோன்றின. ஆனால் அதற்கு முன்பே தமிழ் எழுத்துருவில் தோன்றிய இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் பிரபலமடைந்திருந்தன.

அறபுத்தமிழ் இஸ்லாம் மார்க்கம் சார்ந்த இலக்கியங்களை வளர்த்தது. அறபுத்தமிழில் தோன்றிய முதல் இலக்கியம் குற்ஆனின் விளக்கவுரையாகும். இதனை அறபியில் தஃப்ஸீற் (Tafsīr) என்றழைப்பர். அதனைத் தொடர்ந்து முஹம்மது நபியின் வாழ்க்கை வரலாறு, இஸ்லாம் மார்க்கச் சட்டங்கள், இலக்கியக் கதம்பம் முதலியன தோன்றின. அறபுத்தமிழ் இலக்கியக் கதம்பம் எனும் வகையில் தமிழ்ச்சிற்றிலக்கிய வகைகளான மாலை, குறம், அம்மானை, தாலாட்டு, கலம்பகம், அந்தாதி, கும்மி, சிந்து முதலியனவும், அறபு இலக்கிய வகைகளான கிஸ்ஸா, நா(னா)மா, மஸலா, முனாஜத்து, படைப்போர் முதலியனவும் அடங்கும். அறபு,தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் உள்ள இவ்வகை இலக்கிய வடிவங்களைப் பின்பற்றி, இஸ்லாம் மார்க்கச் சட்டங்கள், முஹம்மது நபி பற்றிய புகழுரைகள் போன்றவற்றை அறபுத்தமிழ் அறிஞர்கள் படைத்தனர்.

கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை அறபுத்தமிழில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் அதிகமாகப் படைக்கப்பட்டன. இஸ்லாமியர்களின் புனித நூலான குற்ஆனை, 1876-இல் ஹபிப் முகமது ஆலிம் சாஹேப் முதன் முதலில் அறபுத்தமிழில் மொழிபெயர்த்தார். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அதாவது 1910, 1929 (ஏ.கே.அதுல் ஹமீது சாஹேப்), 1931 (தாவூத் ஷா) ஆகிய ஆண்டுகளில் தான் குற்ஆன் தமிழ் எழுத்தில்

மொழிபெயர்க்கப்பட்டது. [iii] மேற்கண்ட நான்கு மொழிபெயர்ப்புகளுமே நேரடியாக அறபிலிருந்து அல்லாமல், ஆங்கிலத்தின் வழி பெயர்க்கப்பட்டன.

"அலாமத் இலங்காபுரி" (1869,கொழும்பு), "அஜாயிபுல் அக்பார்" (1870,சென்னை), "முஸ்லிம் நேசன்" (1882-1889,இலங்கை), "கஷ்ஃபுல்றான் அன் கல்பில்ஜான்" (1889, கொழும்பு) முதலிய வார இதழ்கள் அறபுத்தமிழில் வெளிவந்தன. அறபுத்தமிழ் தமிழகத்தில் மட்டுமன்றி இலங்கையில் இருந்த தமிழ் முஸ்லிம்களிடமும் பெரும் வழக்காய் இருந்தது. தமிழகத்தில் வழங்கிய அறபுத்தமிழுக்கும் இலங்கையில் வழங்கிய அறபுத் தமிழுக்கும் இடையில் சிறு வேறுபாடு உண்டு. அது, பிற மொழிச்சொற்களின் கலப்பாகும். கி.பி.15 முதல் 17-ஆம் நூற்றாண்டு வரை இந்தியா முகலாயர் ஆட்சியின் கீழ் இருந்த போது, தமிழில் கலந்த ஃபாற்ஸி, உற்து, ஹிந்துஸ்தானி சொற்கள், அப்போது தமிழகத்தில் வழங்கிய அறபுத்தமிழிலும் அதிகமாகப் புழங்கின. ஆனால், இலங்கையில் வழங்கிய தமிழிலும், அறபுத்தமிழிலும் ஃபாற்ஸி,உற்து,ஹிந்துஸ்தானிச் சொற்களின் கலப்பு குறைவு.

அறபுத்தமிழ் - இஸ்லாம் – அறபுமொழி

தமிழ் இஸ்லாமிய மரபில் 'அறபுத்தமிழ்' என்னும் மொழிவடிவத்தை உருவாக்கியதிலும், பல்வேறு இலக்கிய வகைகள் வழி அவ்வடிவத்தை வளர்த்தெடுத்ததிலும் இஸ்லாம் மார்க்கத்திற்கு முக்கியப்பங்குண்டு. கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பின்பு தான் அறபு மொழி உலகம் முழுவதும் செல்வாக்குப் பெறுகிறது. அதற்கு அடிப்படைக்காரணம் இஸ்லாமின் பரவல். இஸ்லாமின் அடையாளமாக அறபு மொழி உருவெடுத்த பின்பு இஸ்லாமை ஏற்ற உலகின் பல்வேறு மொழிச்சமூகங்களும் அறபுமொழி அடையாளத்தையும் உள்வாங்கின. இஸ்லாமை ஏற்ற உலக சமூகங்கள் அனைத்தும் தம் மொழி அடையாளத்தில் அறபு மொழியையும் இணைத்துக்கொண்டனர்.

இஸ்லாமின் வருகையால் அறபு மொழியில் இரு முதன்மையான போக்குகள் உருவாகின.

ஒன்று, உலகின் பல்வேறுபகுதிகளில் வாழ்ந்த இஸ்லாமியர்கள் அறபுமொழியை தன் தாய்மொழியோடு இணைத்து, அறபுத்தமிழ், அறபுமலையாளம், ஜாவி, ஸ்வாகிலி போன்ற மொழிவடிவங்களை கிளைக்கவைத்தனர். இந்தப்போக்கு இரு மொழிகளின் வழி இரு பண்பாடுகளுக்கும் ஓர் இணக்கத்தை உருவாக்கியது.

அறபுத்தமிழும் தமிழர்களுக்கும் அறபியர்களுக்கும் இடையில் ஒரு கலாச்சார இணக்கத்தை உருவாக்கியது. மற்றொன்று அறபு மொழி கற்ற அறபியறல்லாத இஸ்லாமியர்களும் அறபுமொழிக்கும் இலக்கியத்திற்கும் முக்கியப்பங்களிப்பு செய்தனர். இவ்வகைப் பங்களிப்பு செய்தவர்களில் முதன்மையானவர்கள் பாரசீகர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கி.பி.எட்டாம் நூற்றாண்டில் ஈராக்கின் பஸறா (பஸறஹ்) ஒரு இஸ்லாமியக் கல்வி மையமாக விளங்கியதால், அறபுயரல்லாத பிற நாட்டு இஸ்லாமியரும் அங்குக் குடிபெயர்ந்தனர். ஈராக்கில் வாழ்ந்த அறபு அறிஞர்களில் இருவகையுண்டு. அறபியை தாய்மொழியாகக் கொண்டவர்கள், பாரசீக மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்கள். பாரசீக மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்களில் பலர் தன் இளம் வயதில் ஈரானிலிருந்து ஈராக்கிற்கு குடிபெயர்ந்தவர்கள். அக்காலகட்டத்தில் (கி.பி.600) இஸ்லாமியர்களின் கலாச்சார மையமாகத் திகழ்ந்த பஸறாவிற்கு இடம்பெயர்ந்த இஸ்லாமியர்கள் இவர்கள். இந்த பாரசீக முஸ்லீம்கள் அறபு இலக்கணம், தத்துவம், இறையியல், மருத்துவம் முதலிய துறைகளில் மிகச்சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளனர். அறபு தத்துவவாதியான இப்னு ஸீனா, அறபு இறையியல் அறிஞரான அல்-க்ஹஜலி, அறபு மருத்துவ அறிஞரான அல்-றஜி முதலிய பல அறிஞர்களும் பாரசீகத்தைச் சார்ந்தவர்கள் தான்.

அறபு இலக்கணத்தின் மூல கர்த்தாவாகவும், அறபு மொழிக்கு மிகச்சிறந்த இலக்கணம் வகுத்து இலக்கணப் பேராசானாக விளங்கும் ஸீபவைஹி, அறபு இலக்கண மரபில் தன்னிகரற்றவராகத் திகழ்ந்து, பிற்கால அறபு மொழியறிஞர்களுக்கு ஆதர்சமாக விளங்குகிறார். உலக இலக்கண மரபில் அரிதாகக் காணப்படும் விளக்குமுறையான தொடர்-சொல்-எழுத்து என்னும் முறைமையில் அறபுமொழியை விளக்குகிறார். இன்றைய பதிப்பில் தொள்ளாயிரம் பக்கங்களில் விரியும் அளவிற்கு விரிவாகவும் விளக்கமாகவும் அறபு மொழியை ஆராய்கிறார்.

அறபி-பாரசீக கலாச்சாரத்தின் இணைப்புப் பாலமாகவும் ஸீபவைஹி விளங்கினார். அவரது அல்-கிதாபு, அறபியரல்லாதவரின் நோக்கில் அறபு மொழியையும், குற்ஆனையும் அணுகுகிறது. அதனால் மத்திய கிழக்கு நாடுகளிலும், வட ஆப்பிரிக்காவிலும் அறபு மொழி பேசும் அறபியரல்லாதவர்களுக்கு இன்றும் ஸீபவைஹி ஆதர்சமாக விளங்குகிறார். அறபு மொழி கற்றுக்கொடுக்கும் ஒரு நிறுவனத்தின் பெயர் “Sibaway institute”, இந்த நிறுவனம், “நாங்கள் பிரபல அறபு அறிஞரான ஸீபவைஹியின் அணுகுமுறையில் குற்ஆனிய அறபியைக் கற்றுக் கொடுக்கிறோம்” என்று குறிப்பிடுகிறது. எகிப்தின் தலைநகர் கைரோவிலிருந்து

இயங்கும் "Study Arabic In Egypt" என்னும் நிறுவனம் அற்பியரல்லாதோர்க்கு அறபி கற்றுத்தரும் தன் நிறுவனத்தின் ஒரு பிரிவிற்கு "ஸீபவைஹி மையம்" (Sibawayh Center) என்று பெயர் சூட்டியிருக்கிறது. இன்று மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்க நாடுகளில் அறபு கற்றுக்கொடுக்கும் சில நிறுவனங்கள் "அறேபியர் போன்று அறபு மொழி பேச கற்றுக்கொடுக்கிறோம்" (Speak Arabic As Native) என்ற வாசகத்தோடு, அறபு மொழியை ஆய்ந்த பாரசீகர்களான (பிறமொழியினர்) ஸீபவைஹி, அல்-க்ஹலீல் இப்ன் அஹ்மத் ஆகியோரின் பெயரையும், அவர்களின் கற்பனை உருவத்தையும் பயன்படுத்துகின்றன. ஜோர்டானைச் சார்ந்த"Arabic Lessons Jordan"-என்னும் அறபு மொழி கற்றுக்கொடுக்கும் நிறுவனம் தன்னுடைய விளம்பரத்தில் அல்-க்ஹலீலின் கற்பனை உருவத்தை ஓவியமாகத் தீட்டியிருக்கிறது. மொராக்கோவைச் சார்ந்த "Sibawayhi Repository for Arabic Language Learning" என்னும் நிறுவனம் ஸீபவைஹியின் கற்பனை உருவத்தை ஓவியமாக வரைந்து தன் இணையதளத்தில் பயன்படுத்துகிறது.

யுனெஸ்கோ (UNESCO), ஸீபவைஹியின் 1250-வது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் அக்டோபர் 09, 2010-அன்று, "கலாச்சார இணக்கத்தை ஊக்குவிப்பதில் ஸீபவைஹி மற்றும் அவரது மொழியியல் ஆய்வின் பங்கு" என்னும் பொருண்மையில் ஒரு மாநாட்டை ஈரானில் நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

அடிக்குறிப்புகள்

1 குற்ஆன் (73: 4)

2 பஸறாவிற்கு வந்த ஸீபவைஹி முதலில் இஸ்லாமிய மார்க்கச்சட்டங்களையே படிக்கத் தொடங்கினார். அதற்காக இஸ்லாமிய மார்க்க அறிஞரான ஹமாத் பின் ஸலாமஹ் பின் தினாற் அல்-பஸ்றியிடம் (இ.784) மாணவனாகச் சேர்ந்தார். அவரிடம் மார்க்கக் கல்வி பயின்றுகொண்டிருக்கையில் ஆசிரியரான அல்-பஸ்றிக்கும், மாணவரான ஸீபவைஹிக்கும் சிறு மனஸ்தாபம் (மனச்சடவு) ஏற்பட்டது. "மா மின் அஹதின் மின் அஷபி இல்ல மன் சிதுல அஹத்து அலைஹி லய்ஸ அபா அல் தர்தாய்" - என்னும் ஹதீத்தை அல்-பஸ்றி சொல்ல, அதை ஸீபவைஹி திரும்ப சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது லய்ஸ அபா (laysa abā) என்பதை, லய்ஸ அபூ (laysa abū) என ஸீபவைஹி தவறாக உச்சரிக்க, ஆசிரியரான அல்-பஸ்றிக்கு கோபம் வந்தது. அத்தவறான உச்சரிப்பு பொருள்குற்றத்தை உருவாக்குவதோடு, ஹதீத்தை அறபியில் பிழையின்றி உச்சரிக்க வேண்டும் என்னும் மார்க்கக்கொள்கையை ஏளனம் செய்வதாகவும் அல்-பஸ்றி நினைத்தார். அதனால் அவர் ஸீபவைஹியிடம் கடுமையாக நடந்துகொண்டார்.(து. சுந்தரராஜ், *அறபும் தமிழும்*, 90)

3 தைகா ஷுஜப் ஆலிம் (1993)

4 டார்ஸ்டன் ஷாச்சர் (2001: 59)

5 எச். முனவர்ஜன் (2016: 213)

References

1. AMA Assis (1963: 27)
2. Quran (73:4)
3. Coming to Basra, Seebawaihi first began to study Islamic religious laws. For that he joined the Islamic scholar Hamad bin Salamah bin Dinat al-Basri (d. 784) as a student. While studying religious education with him, Al-Basri, the teacher, and Seebawaihi, the student, had a minor heartbreak. Al-Basri said the hadith, "Ma min ahadin min ashabi illa man sidula ahatu alaihi laisa aba al-dardai" – and Zebawaihi was repeating it. At that time, Al-Basri, the teacher, got angry when Seebawaihi mispronounced Laysa abā as Laysa abū. Al-Basri felt that such pronunciation constituted a material offense and mocked the doctrine of the infallibility of reciting hadith in Arabic. So he behaved harshly towards Seepawaihi. (D. Sundararaj, Arapum Tamilum, P. 90)
4. Tayka Shuayb Alim (1993)
5. Torston Tschacher (2001: 59)
6. H. Munavarjan (2016: 213)

தரவுகள்:

அப்துல் கறீம்,மு.அறபுத்தமிழ், *இஸ்லாமும் தமிழும்,*

அப்துல்லாஹ் பாஷா மன்பஈ, வி.கே.எ. 2008. அறபுத்தமிழ் வரலாறு,*அல்பயான் ஆண்டு மலர்*, ,பக்.107-109.

அஸிஸ்,எ.எம்.எ. *அறபுத்தமிழ் எங்கள் அன்புத்தமிழ்.*

கனி, ஆர்.பி.எம். 2007. அறபுத்தமிழ் இலக்கியம்,*இஸ்லாமிய இலக்கியக் கருவூலம்*, நேஷனல் பப்ளிஷர்ஸ்,சென்னை, பக்.322-333.

சுந்தரராஜ், 2018. *அறபும் தமிழும்*, காலச்சுவடு பதிப்பகம்.

__________2022. *தொல்காப்பியமும் அல்-கிதாப்பும்*, காலச்சுவடு பதிப்பகம்.

பசுலுமுகியிதீன்,செ. 1985. *அறபுத்தமிழ்*, பசுமை பதிப்பகம், நாகர்கோயில், பக்.39.

மீரான் பிள்ளை, திருமலர்.எம்.எம். *அறபுத்தமிழ் தோற்றம் - ஓர் ஆய்வு.*

முகம்மது பாகவி,பி.எம்.பீர். *அறபுத்தமிழ் இலக்கியங்கள் ஓர் ஆய்வு.*

Abdullah Y.Samarah. 2011 "Arabic linguistics and Sibawayhi", *International Journal of Academic Research*, vol.3, no.2.

Al-Nassir, A.A. 1993. *Sibawayhi the Phonologist:A critical study of the phonetics and phonological theory as presented in his treatise Al-Kitab.*

Aryeh Levin. 2000. "Sībawayhi", *History of the language sciences: An International Handbook on the Evolution of the Study of Language from the Beginnings to the Present* (Ed. Sylvain Auroux, E.F.K.Koerner, Hans-Josef Niederehe and Kees Versteegh).

Carter, M.G. 2004. *Sibawayhi*, Oxford press, New Delhi.

Karin C. Ryding. 1998. *Early medieval Arabic: Studies on Al-Khalil Ibn Ahmed*.

Kees Versteegh. 2001. *The Arabic Language*, Edinburgh University Press.

Munavarjan. H. 2016. "Arabuttamil as The Linguistic Legacy of the Tamil Muslims", *International Journal of Science and Humanities*, Volume 2, Number 1: January - June, pp.211-216.

Nasser Saleh Al-Mansour. 2001. "A Brief History of Arabic Linguistics", *Linguistica communicatio* (International Journal of General Linguistics),vol.11,No.1-2.

Tayka Shuayb Alim. 1993. *Arabic, Arwi and Persian in Sarandib and Tamilnadu*. Madras: Imâmul 'Arûs Trust.

Torsten Tschacher. 2001. *Arwi (Arabic-Tamil)-An Introduction*, pp.72.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன் P: 152-161

ஆஹ்காமுல் முஸ்லிமீன் வலியுறுத்தும் மார்க்கக் கல்வி

Deeniyath Education emphasized in Ahkaamul Muslimeen

முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்,
இணைப்பேராசிரியர் & தலைவர் ,
முதுகலைத் தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி (த), திருச்சி-20
profhasan27@gmail.com +91 9442740254

Abstract:

Sixth Sense is exclusive for human beings. By utilizing this sense, the best creation of the globe, the human beings should prepare themselves of their present and life after death. This sense is designed by the education. Ahkaamul Muslimeen is an Arabic Tamil Book Edited by Shahul Hameed. The important factors of Religious Education said in Ahkaamul Muslimeen is compared with Al-Qura'An and Al Hadeeth in this Research Article.

ஆய்வுச்சுருக்கம்

ஆறாவது அறிவு மனிதர்களுக்கு மட்டுமே. உலகின் சிறந்த படைப்பான இந்த உணர்வைப் பயன்படுத்தி, மனிதர்கள் தங்களின் நிகழ்காலம் மற்றும் மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கைக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த உணர்வு கல்வியால் வடிவமைக்கப்பட்டுள்ளது. அஹ்காமுல் முஸ்லிமீன் என்பது ஷாஹுல் ஹமீத் தொகுத்த ஒரு அரபுத் தமிழ் புத்தகம். அஹ்காமுல் முஸ்லிமீனில் கூறப்பட்டுள்ள மார்க்கக் கல்வியின் முக்கியமான காரணிகள் இந்த ஆராய்ச்சிக் கட்டுரையில் அல்-குரான் மற்றும் அல் ஹதீஸுடன் ஒப்பிடப்படுகிறது.

திறவுச்சொற்கள்

அஹ்காமுல் முஸ்லிமீன், அல்-குரான், அல் ஹதீஸ், தீன், ஷரீஅத், தரீகத், ஹகீகத், மஃரிபத்
Ahkaamul Muslimeen, Al-Qura'An, Al Hadeeth, Shariah, Tariqat, Haqiqat, Maaribat

முன்னுரை:

உலகில் வாழும் அனைத்து உயிரினங்களிடம் இருந்து மனிதனைத் தனிப்படுத்திக் காட்டுவது, அவனிடமுள்ள ஆறாம் அறிவான பகுத்தறிவாகும். அப்பகுத்தறிவைப் பெருக்கி உலக வாழ்விலும், மறுமை வாழ்விலும் மனிதனுக்குத்

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன் P: 152-161

துணைபுரிவதாகக் கல்வி விளங்குகிறது. கல்வியானது மாணவப் பருவத்தோடு முடிந்துவிடும் நிகழ்வு அல்ல. அது மனிதனின் இறப்புவரை அவனைப் பின் தொடரும் முடிவுகளற்ற தொடர் நிகழ்வாகும். அக்கல்வியின் முக்கியத்துவம் குறித்து அரபுத்தமிழ் நூலான அஹ்காமுல் முஸ்லிமீனில் இடம்பெற்றுள்ள செய்திகளை இறைமறையான அல்குர்ஆன் வசனங்களையும், நபிகளாரின் பொன்மொழிகளைக் கொண்டுள்ள ஹதீஸ்களையும் துணையாகக் கொண்டு விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

தீன் - விளக்கம்:

'தீன்' எனும் அரபுச் சொல்லிற்கு நெறி, மார்க்கம், வழி எனப் பல பொருள்கள் உள்ளன. இச்சொல்லானது ஷரீஅத், தரீகத், ஹகீகத், மஃரிபத் ஆகிய நான்கு அம்சங்களில் ஹகீகத், மஃரிபத் என்ற இரண்டையும் ஒன்றாக்கி மூன்று அம்சங்களையும் உள்வாங்கிய சொல்லாக விளங்குகிறது.

"இன்னத் தீன இன்தல்லாஹில் இஸ்லாம்" (திட்டமாக தீனென்பது இஸ்லாமென்னும் வழிபாடாயிருக்கும்)[1]

என்ற இறைமறை வசனத்தில் தீன் என்னும் சொல்லுக்கு நெறி, வழி, மார்க்கம் ஆகிய மூன்று பொருள்களுமே பொருந்தி வருவதைக் காணமுடிகின்றது. மேலும், இச்சொல்லுக்கு ஆஹ்காமுல் முஸ்லிமீனில் வழிபாடு, விளக்கம், கூலி என மூன்று வகையான பொருள்கள் கூறப்பட்டுள்ளன. அம்மூன்றும் ஒன்றிணைந்ததே தீன் எனவும் கூறப்பட்டுள்ளது. இதனை,



"தீன் என்னும் சொல்லுக்கு முப்பொருளுண்டு. முதலாவது வழிபாடு, இரண்டாவது விளக்கம், மூன்றாவது கூலி; ஆக முப்பொருளையும் பொதிந்ததுதான் தீனென்னும் மார்க்கமாகும்"[2]

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன் P: 152-161

என்பதால் அறியலாகிறது. மேலும், தீன் என்பதற்கு ஈமான் (உண்மை கொள்ளல்), இஸ்லாம் (வழிபாடு), தௌஹீது (ஓர்மைக் கொள்கை), மஃரிபா (இறையை அறிதல்) ஆகிய நான்கும் தூண்களாக இருப்பதாக ஆஹ்காமுல் முஸ்லிமீனில் குறிப்பிடப்பட்டுள்ளது.



“தீனென்னு மெடுப்புக்கு நான்கு றுக்னுகளெனும் தூண்களுண்டு. அதில் ஒன்னாவது, ஈமான் என்னும் உண்மை கொள்ளுதல். இரண்டாவது வழிபாடு என்னும் இஸ்லாம். மூன்றாவது ஓர்மைபடுத்துதல் என்னும் தௌஹீது. நாலாவது அல்லாஹுு தஆலாவை அறியுதலென்னும் மஃரிபா. இந்த நாலும் கூடிதான் தீன் என்றாச்சு”[3]

தீன் கல்வியும் துன்யா கல்வியும்:

கல்வி என்றால் உலகக் கல்வி (துன்யா கல்வி), மார்க்கக் கல்வி (தீன் கல்வி) என இஸ்லாமியர்களால் காலங்காலமாகப் பிரித்துப் பார்க்கப்பட்டு வருகிறது. அனைத்து விதமான கல்வியும், அதனைக் கற்பதற்கான ஞானமும் இறைவனிடமிருந்தே மனிதனுக்கு வருகின்றன. நபி(ஸல்) அவர்கள் பயனற்ற கல்வியை விட்டும் இறைவனிடம் பாதுகாப்பு தேடினார்களே தவிர கல்வியைப் பிரித்துப் பார்க்கவில்லை.

“வகுர் ரப்பி ஜித்னி இல்மா” (இறைவா! கல்வி ஞானத்தை எனக்கு அதிகப்படுத்துவாயாக!” என்றும் நீர் பிரார்த்தனை செய்வீராக!)[4]

என்ற இறைவசனமானது மார்க்கக் கல்வி, உலகக் கல்வி எனக் குறிப்பிட்டுக் கூறாமல் கல்வி கற்பதற்கான அறிவு என்றே கூறுகிறது. எனவே, பயனுள்ள கல்வியைக் கற்பதற்குரிய ஞானத்தை அதிகப்படுத்த வேண்டித் தன்னிடம்

பிரார்த்திக்குமாறு நபி(ஸல்) அவர்களுக்கு இறைவன் கட்டளையிட்டான் என்றே கொள்ள வேண்டும்.



“மார்க்க அறிவைப் பெறுவது ஒவ்வொரு முஸ்லிமான ஆண் பெண் மீதும் கடமை”[5]

“இல்மை படிக்கிறது ஆண், பெண் அடங்கள் பேரில் விதியாகிறது”[6]

என ஆண்கள், பெண்கள் என்ற பாலின வேறுபாடின்றி அனைத்து மக்களும் அறிவைப் பெருக்கும் கல்வியைக் கற்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. எனவே, இவற்றின் அடிப்படையில் பயனுள்ள கல்வி, பயனற்ற கல்வி எனக் கல்வியைப் பகுத்துக் கொண்டு பயனுள்ள அனைத்து கல்வியையும் இருபாலர்களும் கற்க வேண்டும் என வலியுறுத்தப்படுவது தெளிவாகிறது. ஏனெனில் கல்வி ஒன்று தான்,

“வெள்ளத்தால் போகாது, வெந்தணலால்
வேகாது; வேந்தராலும்
கொள்ளத்தான் இயலாது; கொடுத்தாலும்
நிறைவொழியக் குறைவுபடாது.
கள்ளர்க்கோ மிக அரிது; காவலோ
மிக எளிது; கல்வி என்னும்
உள்ளத்தே பொருள் இருக்க உலகெல்லாம்
பொருள்தேடி உழல்வது ஏனோ?”

(மு. திருமலை முத்துப்பிள்ளை, விவேகசிந்தாமணி பா.எண். 87)

என்பதிலிருந்து தெளிவாகிறது.

அதுமட்டுமின்றி,

"உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே" **(புறம். 183)**

நமக்கு கல்வி கற்றுதரும் ஆசிரியருக்கு எவ்வித துன்பமும் நேராமல் காக்க வேண்டும், அளவில்லாத பொருள் கொடுத்தேனும் கல்வி கற்க வேண்டும், ஒரே வயிற்றில் பிறந்தவராயிருந்தாலும் தாயியும் கல்வியில் சிறந்த அறிவியல் சிறந்த மகன் இளையவாய் இருப்பினும் அவனுக்கே முக்கியத்துவம் கொடுப்பாள், கல்வியறிவில் சிறந்த ஒருவனின் அறிவுறுத்தலின் படியே அரசனும் செயல்படுவான், கல்வியில் சிறந்த ஒருவன் நான்கு பிரிவில் கீழ்நிலையில் இருப்பவனாய் இருந்தாலும், மேற் பிரிவை சார்ந்த ஒருவனும் அவனிடமே கல்வி கற்பான்

கல்வியின் சிறப்பை இந்த பாடலை விட வேறு எந்த நூலிலும் கூறப்படவில்லை இரத்தின சுருக்கமாய் பொருள் புதிந்த இந்த பாடலை பாடியவர் சிறந்த புலவர் மட்டுமல்ல சிறந்த மன்னன், வட நாட்டு ஆரிய மன்னன் ஒருவரை இவர் வென்ற காரணத்தினாலோ என்னவோ இவர் "ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் " என்று சிறப்பிக்கப்படுகின்றார்

இத்துடன், உலகப்பொதுமறையாம் வள்ளுவம்,

“கற்க சகடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக” **(குறள். 391)**

என்று கல்வியின் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறது.

வானவர்களின் தலைவரான ஜிப்ரீல் அவர்கள் வாயிலாக இறைவன் முஹம்மது நபி அவர்களுக்கு முதல் முதலாக அனுப்பிய வஹி (இறைச்செய்தி) அல் அலக் அத்தியாயத்தின் முதல் ஐந்து வசனங்களாகும்.

“இக்ரா பிஸ்மி ரப்பிகல்லதீ ஃகலக்” ((யாவற்றையும்) படைத்த உம்முடைய இறைவனின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக)[7]

மேற்கண்ட முதல் வசனத்தைக் கூர்ந்து நோக்கும்போது **‘ஓதுவீராக’** என்னும் பொருளுடைய **‘இக்ரா’** எனும் சொல்லே முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு இறைவனிடம் இருந்து கிடைத்த முதல் சொல்லாகிறது. இச்சொல்லோடு தொடர்புடைய **‘குர்ஆன்’** என்னும் சொல்லுக்கு **‘ஓதுதல்’** அல்லது **‘ஓதப்பட்டது’** எனப்

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023

முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன் P: 152-161

பொருள் கொள்ளப்படுகிறது. இங்கு ஓதுதல் என்பது குர்ஆன் வாசகங்களை முன்வைத்து சொல்லப்பட்டாலும் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் **‘ஓதல்’ (தொல்.நூ. 975, 976)** எனும் சொல் **‘கல்வி’** என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. கல்வி கற்றவரால் அல்லது கல்வியைக் கற்றுக் கொடுப்பவரால் மட்டுமே ஓதவோ, படிக்கவோ, வாசிக்கவோ முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, கல்வியை இன்றியமையாமையை வலியுறுத்தும் வகையிலேயே இறைத்தூதருக்கு **‘ஓதுவீராக’** என்ற சொல் முதன் முதலில் இறக்கி அருளப்பட்டது உறுதியாகிறது.

மேலும், இவ்வத்தியாயத்தில் ஓதுவீராக என்ற சொல் இரு முறையும், கற்றுத்தந்தான் என்ற சொல் இரு முறையும் இடம்பெற்றுள்ளது. அல்குர்ஆனிலிருந்து முதன்முதலாக இறக்கப்பட்ட ஐந்து வசனங்களிலேயே நான்கு முறை கல்வி தொடர்பான வாசகம் இடம்பெறுகிறதென்றால் கல்வியின் இன்றியமையாமையை எந்த அளவிற்கு அல்குர்ஆன் முன்னிலைப்படுத்துகிறது என்பதை அறியமுடிகிறது.

தீன் கல்வி மூன்று வகைப்படும்

இஸ்லாம் மார்க்கத்தை அறிவதற்கான தீன் கல்வியை அகீதா (ஈமான் பற்றிய பாடம்), மஸாயில் (ஹலால், ஹராம் சட்டங்கள் பற்றிய பாடம்), ஸீரா (வரலாறு பற்றிய பாடம்), ஆதாப் (ஒழுக்கங்கள் பற்றிய பாடம்), அஹ்லாக் (நற்பண்புகள் பற்றிய பாடம்) என ஐந்து வகைகளாக வகைப்படுத்துவர். இந்த ஐந்து வகைகளையும் அஹ்காமுல் முஸ்லிமீன் ஃபிக்ஹ், குர்ஆன் மற்றும் தப்ஸீர், ஹதீஸ் ஆகிய மூன்று வகையில் அடக்கிக் கூறுகிறது.



“முதலாவது ஃபிக்ஹ்வுடைய இல்மு, அதாவது ஏவலின்னது, விலக்கலின்னது, பர்ளின்னது, வாஜிபின்னது, ஹலாலின்னது ஹராமின்னது என்று விலங்கி அறிகிறதாயிருக்கும். இரண்டாவது குர்ஆன் ஷரீஃபுடைய மஃனா, அதன் தப்ஸீருடைய பயானை அறிகிறதாயிருக்கும். மூன்றாவது, நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீஸை அறிகிறதாயிருக்கும்”[8]

இஸ்லாமிய மார்க்கத்தில் சில செயல்கள் அனுமதிக்கப்பட்டும், தவிர்க்கப்பட்டும் தடைசெய்யப்பட்டும், விரும்பப்பட்டும், வெறுக்கப்பட்டும், கட்டாயமாக்கப்பட்டும், விதிவிலக்காக்கப்பட்டும் உள்ளன. இது தொடர்பான விதிகளையும் சட்டங்களையும் பேசும் பாடமே **‘ஃபிக்ஹ்’** எனப்படும். இதனை அறிவதும், குர்ஆன் மற்றும் அதன் உரைகளை (தப்ஸீர்கள்) அறிவதும், இறைத்தூதரான முஹம்மது நபி (ஸல்) அவர்கள் சொன்னவை, செய்தவை, ஏவியவை, விலக்கியவை, தோழர்கள் செய்யும்போது அதனைத் தடுக்காமல் ஒப்புக்கொண்டவை ஆகியன பதிவு செய்யப்பட்டுள்ள பொன்மொழிப் பேழைகளை (ஹதீஸ்கள்) அறிவதும் தீன் கல்வியில் அடங்கும். ஹதீஸ்களிலும் ஸஹீஹ் (ஆதாரப்பூர்வமானவை), மவ்ளூவு (இட்டுக்கட்டப்பட்டது), மத்ரூக் (விடப்படுவதற்கு ஏற்றது), ளயீப் (பலவீனமானது) என நான்கு வகைகள் உண்டு. எனவே, இவற்றைப் பகுத்தறிந்துத் தீன் கல்வியைக் கற்பது இஸ்லாமியர்களின்மீது கடமையாகவுள்ளது.

தீன் கல்வியில் பெற்றோரின் பங்கு:

மார்க்கத்தில் கூறப்பட்டுள்ள நன்மை, தீமை, கடமை ஆகியவற்றைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பது ஒவ்வொரு பெற்றோரின் பேரிலும் இஸ்லாம் கட்டாயமாக்கியுள்ளது. இக்கடமையில் இருந்து பெற்றோர் தவறும்போது, அக்குழந்தை வளர்ந்து பெரிதாகி இஸ்லாமிய நெறியில் இருந்துத் தவறி இம்மை வாழ்விலும் மறுமை வாழ்விலும் துன்பத்தை அடைய நேரிடும். எனவே, இம்மை வாழ்விலும், மறுமை வாழ்விலும் சிறந்து விளங்க தீன் கல்வியைக் குழந்தைகளுக்குப் போதிப்பது பெற்றோரின் கடமையாகிறது என்பதை ஆஹ்காமுல் முஸ்லிமீன் வலியுறுத்துகிறது.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன் P: 152-161



“பிள்ளைகளுக்கு சிறுவயதிலேயே குர்ஆன் ஷரீஃப், ஈமான், இஸ்லாம் முதலிய தீனுடைய இல்ம்களை கற்பிக்கிறதும், தொழுகை, நோன்பு முதலிய இபாதத்துகளை கொண்டு போகிறதும் தாய், தகப்பன் முதலிய சவரட்சணைக்காரர்கள் பேரில் வாஜிபாயிருக்கும்”[9]

மேலும், கல்வியைக் கற்றுக் கொடுப்பவருக்கும், கற்றுக் கொண்டவருக்கும் கிடைக்கும் நன்மைகள் குறித்து நபிகளார் நவின்ற பொன்மொழியாக அனஸ் (ரலி) அறிவித்துள்ள செய்தியையும் கூர்ந்து நோக்கத்தக்கதாகிறது.

“கல்வியைக் கற்றுக் கொடுப்பவருக்கு அதைக் கொண்டு செயல்படுபவரின் நன்மை கிடைக்கும். எனினும் செயல்பட்டவரின் நன்மையில் எதுவும் குறைக்கப்ப மாட்டாது”[10]

கல்வியைத் தேடிப் பயணித்தல்:

கல்வி கற்பதற்கு எல்லைகளைக் கடந்து செல்வதை இஸ்லாம் அனுமதிக்கிறது. இதனால்தான் **“சீனம் சென்றும் சீர்கல்வி பெறுக”**[11] என நபிகளார் நவின்ற பொன்மொழி காணக் கிடைக்கின்றது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லைகள் பல கடந்து கல்வியைத் தேடிப் பெறுவதை ஊக்குவித்தார்கள். இதனை,

“கல்வியைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கட்டாயக் கடமை”[12]

என்ற நபிகளாரின் பொன்மொழி இஸ்லாமிய மார்க்கம் கல்வியை ஊக்குவிப்பதை உறுதிசெய்கிறது. மேலும்,

“எவர் கல்வியைத் தேடிப்புறப்பட்டாரோ அவர் அல்லாஹ்வின் பாதையில் உள்ளவர் ஆவார். திரும்பி வரும் வரையில்!”[13]

“ஒருவர் கல்வியைத் தேடி ஒரு பாதையில் நடந்து சென்றால், சுவனத்தை நோக்கிச் செல்லும் பாதையை அல்லாஹ் அவருக்கு இலகுவாக்கிக் கொடுக்கிறான்”[14]

என ஒரு நாட்டில் இருந்து கல்வியைத் தேடி வேறு நாட்டிற்குச் சென்றவருக்கு அவர் திரும்பி தன் நாட்டிற்கு வரும்வரை இறைவன் பாதையில் உள்ளதாகவும், சுவர்க்கத்தின் பாதையை அவனுக்கு இறைவன் இலகுவாக்குவதாகவும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளதைப் புஹாரி, முஸ்லிம், திர்மிதி போன்ற ஷஹீஹான ஹதீஸ் நூல்களால் அறியமுடிகிறது.

முடிவுரை:

தீன் என்பது குறித்தும், தீன் கல்வியின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கமாகவும் விரிவாகவும் ஆராயப்பட்டுள்ளது. கல்வி கற்பதற்குப் பாலின பாகுபாடோ, அகவையோ, எல்லைக் கட்டுப்பாடோ இல்லை என்பது அறியலாகிறது. குழந்தைகளுக்கு மார்க்க அறிவைக் கொடுப்பது பெற்றோர்களுக்கு மட்டுமல்ல கற்றோருக்கும் கடமையாகிறது தெளிவாகிறது. இவ்வாறு அரபுத் தமிழ் நூலான அஹ்காமுல் முஸ்லிமீனில் கல்வி தொடர்பாக இடம்பெற்றுள்ள செய்திகளும், கருத்துகளும், அறிவுரைகளும் அல்குர்ஆன் வசனங்களோடும், முஸ்லிம், திர்மிதீ, இப்னு மாஜா ஆகிய ஷஹீஹான (ஆதாரப்பூர்வமான) ஹதீஸ் நூல்களில் இடம்பெற்றுள்ள நபிகள் நாயகத்தின் பொன்மொழிகளோடும் தேவையான இடங்களில் ஒப்பிட்டு எடுத்தாளப்பட்டு தீன் கல்வியின் இன்றியாமையினை இக்கட்டுரை வாயிலாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

சான்றெண் விளக்கம்:

1. அல்குர்ஆன்: 3:19
2. ஆஹ்காமுல் முஸ்லிமீன், ப.13
3. மேலது, ப.14
4. அல்குர்ஆன்: 20:114
5. திர்மிதீ: 218, அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி)
6. ஆஹ்காமுல் முஸ்லிமீன், ப.17
7. அல்குர்ஆன்: 96:1
8. ஆஹ்காமுல் முஸ்லிமீன், ப.9

9. மேலது, ப.7
10. இப்னு மாஜா: 240, அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி)
11. இஸ்லாமும் தமிழும், ப.87
12. இப்னு மாஜா: 224, அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி)
13. திர்மிதீ - 220, அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி)
14. முஸ்லிம் - 7028, அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி)

முதன்மை நூல்:

1. ஷாஹுல் ஹமீது (ப.ஆ), அஹ்காமுல் முஸ்லிமீன் (ஷாபிஇய்யா), ஷாகுல் ஹமீதிய்யா அச்சியந்தர சாலை, சென்னை, சுத்தப் பதிப்பு: 1947

துணைநின்ற நூல்:

1. அப்துல் கறீம்.மு, இஸ்லாமும் தமிழும், ஆயிஷா பதிப்பகம், உத்தமபாளையம் - 625 533, முதற்பதிப்பு: 2005.

துணைநின்ற இணையதளங்கள்:

1. https://sunmarkam.blogspot.com
2. http://www.tharjuma.com
3. https://quranandhadis.com/ta/category/muslim/
4. https://quranandhadis.com/ta/category/ibn-majah/
5. https://quranandhadis.com/ta/category/tirmidhi/

Text Books & Websites References:

1. Shahul Hameed (Edi), *Ahkaamul Muslimeen (Shaffiyia), Achiyenthira Road, Chennai, Suthta Pathippu, 1947.*
2. Abdul Kareem M, Islamum Thamizhum, Aayisha Pathippagam, Uthampalayam, 625 533, First Edition 2005.
3. https://sunmarkam.blogspot.com
4. http://www.tharjuma.com
5. https://quranandhadis.com/ta/category/muslim/
6. https://quranandhadis.com/ta/category/ibn-majah/
7. https://quranandhadis.com/ta/category/tirmidhi/

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023

முனைவர் தக்கலை எம்.எஸ்.பஷீர் P: 162-169

The Known and unknown of Arabic Tamil – A View

அறபுத்தமிழ் : அறிந்தும் அறியாதவை : ஒரு பார்வை

முனைவர் தக்கலை M.S. பஷீர்,

இயக்குநர், இசுலாமிய தமிழியல் ஆய்வகம், நாகர்கோவில்.

9952092893

Abstract

Tamil is the mother of Dravidian Language. It is the seed of Arabic Semitic Language. Tamil and Arabic are ancient languages which exist and develop from more than 3000 years ago. Over 200 languages are written in Roman script. More than 70 languages are written in Cyrillic and 25 Languages in Arabic scripts. In India, Devanagari is written in 12 fonts, Konkani in 5 fonts and Punjabi in 3 fonts.

Key Words: Arabic, Tamil, Dravidian Languages, Old Scripts.

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் திராவிட மொழிகளுக்குத் தாய். மேலும் அரபி செமிட்டி மொழிகளுக்கு வித்து. தமிழும் அரபியும் ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முன், வாழ்ந்து வளர்ந்து வரும் தொன்மையான செம்மொழிகள். உரோமன் எழுத்துருவில் 200 மொழிகளை எழுதுகின்றனர். இதுபோன்று சிரில்லிக் எழுத்துருவில் 70 மொழிகளையும், அரபு எழுத்துருவில் 25க்கு அதிகமான மொழிகளையும் எழுதுகின்றனர். இந்தியாவில் தேவநாகரி எழுத்துருவில் 12 மொழிகளையும், கொங்கணி மொழியை 5 எழுத்துருவிலும், பஞ்சாபியை 3 எழுத்துருக்களிலும் எழுதுகின்றனர்.

திறவுச் சொற்கள் : அரபு, தமிழ், திராவிட மொழிகள், எழுத்துரு.

அரபுத்தமிழின் காலம்

வரிவடிவத்தில அரபு எழுத்துமுறை, ஒலி வடிவத்தில் தமிழ் ஒலிகளை பின்பற்றி எழுதுவது அரபுத்தமிழ் (தமிழ் ஒலிகளை அரபு எழுத்தில் எழுதுவர்). அரபுத்தமிழ், அரபு மலையாளம், அரபு வங்காளம், அரபு பஞ்சாயி, அரபி சிந்தி, அரபி கன்னடம் எனத் தோன்றியவற்றுள் அரபுத் தமிழ் மூத்தது என்பர். இதுபோன்று ஸ்வாஹிலி, ஜாவி, சோமாலி, மலாய், அரபு சிங்களம் போன்ற மொழிகளிலும் அரபு வரிவடிவினைப் பெற்றுள்ளது.

இன்றைய காலக்கட்டத்தில், அரபுத்தமிழ் பற்றிய ஆய்வில் அதிகம் ஈடுபட்டுள்ளவர்களாக ஜெர்மன் நாட்டு அறிஞர் டார்ஸ்டன் தாட்சர்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
முனைவர் தக்கலை எம்.எஸ்.பஷீர் P: 162-169

(ஹைடெல்பெர்க் பல்கலைக்கழகம்) அவர்களும் புதுதில்லி, ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக, இந்திய மொழிகள் மையம், தமிழ்ப் பரிவு, முனைவர் பட்ட ஆய்வாளர், திரு த.சுந்தராஜ், அவர்களும் குறிப்பிடத்தக்கவர்களாவர். இப்பணியை சிலர் தமிழகத்திலும் இலங்கையிலும் தொட்டும், தொடராமல் நிறுத்திவிட்டனர். அபூ எழுதிய அரபி மலையாள சாகித்திய சரித்திரம் போன்று, அரபுத் தமிழ் முழு ஆய்வாக இன்றளவும் மலரவில்லை என்பது பெருங்குறையே.

இலங்கை, தமிழகம்

இலங்கையிலும், தமிழகத்தில் கீழக்கரை, காயல்பட்டணம், கோட்டாறு போன்ற சில ஊர்களிலும் அரபுத்தமிழை வளர்த்தனர். குறிப்பாக அரபுத் தமிழை வளர்த்த பெருமை பெண்டிருக்கே உரியது. அவர்களது ஈடுபாடும் ஆர்வமும் அரபுத் தமிழில் அதிகமாக இருந்தன.

அரபுத்தமிழ் ஏன் தோன்றியது?

1) திருக்குர்ஆனை அரபு மொழியிலேயே ஓத வேண்டும்.
2) அரபு எழுத்துக்களை முஸ்லீம்கள் அனைவரும் அறிந்திருந்தனர்.
3) அரபு ஒலிகளைப் பிற மொழி எழுத்துருவில் எழுதினால் உச்சரிப்பு தெளிவு பெறாது என்பதால் பெரும்பான்மையான குர்ஆன் விளக்கங்கள் கூட அரபு மொழியில்தான் எழுதப்பட்டிருந்தன.
4) குர்ஆனை அரபுமொழியிலேயே ஓதுவது என்ற கட்டாயம் எவ்வளவு சிறந்ததோ, புனிதமானதோ, உயர்ந்ததோ அதனைப் போன்று இஸ்லாமிய மார்க்கக் கருத்துக்கள் அனைத்தையும் அரபு மொழியில் உருவாக்குவதே உயர்ந்ததாகவும், புனிதமாகவும் கருதப்பட்டது.
5) மேலும், அரபுப் பெயர்கள், கலைச் சொற்கள் முதலியவற்றைச் சரியாக ஒலிக்க வேண்டுமெனில் அரபு எழுத்துக்களில் படிப்பதே உயர்ந்தது எனக் கருதினர்.
6) “திருக்குர்ஆனை அமைதியாகவும் தெளிவாகவும் ஓத வேண்டும்.” (திருக்குர்ஆன் ***73:4.*** ***7)*** அறபுமொழி திருக்குர்ஆனின் மொழி, நபிகள் நாயகம் பேசிய மொழி அரபி என்பதால் தமிழ் முஸ்லிம்கள் அரபுமொழியை புனிதமாக உயர்வாகக் கருதினர்..

திருக்குர்ஆன், இஸ்லாம் மார்க்கம் பற்றிய கருத்துக்களை தமிழ் முஸ்லிம்கள் அறிய, தெரிய, உணர, படிக்க முஸ்லிம் அறிஞர்கள் தோற்றுவித்தது அரபுத்தமிழ்.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
முனைவர் தக்கலை எம்.எஸ்.பஷீர் P: 162-169

அரபுத்தமிழ் நெருங்கணக்கில் 40 எழுத்துக்கள் உள்ளன. இவற்றை 4 வகைகளாகக் கூறுவர்.

1. தமிழ் ஒலிகளை எழுதப் பயன்படும் எழுத்துக்கள்.
2. தமிழில் உள்ள மாற்றொலிகளை எழுதப் பயன்படும் அரபு எழுத்துக்கள்
3. தமிழில் உள்ள கிரந்த எழுத்துக்களை எழுதப் பயன்படும் அரபு எழுத்துக்கள்.
4. தமிழ் ஒலிகளை எழுதப் பயன்படாத அரபு எழுத்துக்கள்.

அரபுத் தமிழ் நெடுங்கணக்கில் அரபு எழுத்து 28+1=29 உள்ளன. தமிழின் சிறப்பு ஒலிகளுக்காக அரபுத் தமிழறிஞர்கள் 11 எழுத்துக்களை உருவாக்கியுள்ளனர். ஆக மொத்தம் 40 எழுத்துக்களைக் கொண்டுள்ளது அரபுத்தமிழ். இதில் மொழியியல் ஆய்வு செய்துகொண்டுள்ள திரு.த.சுந்தராஜன் அவர்களின் ஆய்வுகள் விரைவில் வெளிவந்தால் மேலும் பல அரிய செய்திகளை அறியலாம்.

அரபுத் தமிழ் நூல்கள்

அரபுத் தமிழ் நூல்கள் பல தலைப்புகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக அவற்றை,

1) தப்ஸீர், திருக்குர்ஆன் விளக்கவுரைகள், 2) மார்க்கச் சட்டங்கள், 3) செய்யுள், 4) உரைநடை, 5) அகராதிகள், 6) செய்யுளின் விளக்கங்கள், 7) சூஃபிஸம், 8) குத்பா பேருரைகள், 9) கடிதங்கள், அழைப்பிதழ்கள் எனப் பிரிக்கலாம்.

நூற்றுக்கதிகமான அரபுத் தமிழ் நூல்கள் உள்ளன. அரபுத்தமிழில் குர்ஆன் விளக்கவுரைகள் சிறப்பு பெற்றவை. அவற்றுள்

1. கி.பி. 1874ல் ஷெய்கு முஸ்தஃபா ஆலிம் (பேருவளை – இலங்கை பத்ஹுர் ரஹ்மான், ஃபிதர்ஜிமதி தஃப்ஸீரில் குர்ஆன் தோன்றியது) (பேருவளை ஷெய்கு முஸ்தஃபா ஆலிம் அவர்களின் பிற அரபுத் தமிழ் நூல்களாவன- மர்தியாயா இரங்கற்பா 2) பவாரிகுல் ஹுதாயா அரபிமொழி மார்க்கச் சட்ட நூலை சஹ்லுத் தவ்லா என்ற மூல நூலிலிருந்து அரபுத் தமிழ் ஆக்கியது 3) இப்னு நபாதா உடைய முதலாவது குத்பாவுக்கு அரபுத் தமிழ் உரை 4) ஸபீனத் துன்னஜாத் நூலை அரபுத் தமிழில் மொழி பெயர்த்தனர். 5) இஹ்யாவில் உள்ள “பவாயிதுல் அகாயித்” என்ற பாடத்தை அரபுத் தமிழாக்கினர்.
2. காயல்பட்டணம் ஹபீபு முஹம்மது ஆலீம் (1876) அவர்களின் பதூஹாதுர் ரஹ்மானிய்யா பீ – தப்ஸீரி கலாமிர் ரப்பானிய்யா.

3. 1886-ல் தப்ஸீர் பத்ஹீர் ரஹீம் என ஹபீப் முஹம்மது ஆலீம் (காயல்பட்டணம்) அவர்களின் உரை.
4. தப்ஸீர் பத்ஹீல் கரீம் (1881) நூஹ் லெப்பை இப்னு அப்தில் காதிர் ஆலிம் (காயல்)
5. பேரணாம்பட்டு, மௌலவி புர்கானுத்தீன் “தப்ஸீருல் குர்ஆன் ஃபீ அஹ் ஸானில் குர்ஆன்”.
6. “தாயுர்துர் ரஹ்மான்” தஜ்வீது குர்ஆன் முஹம்மது அப்துல் ரஹ்மான்.
7. முதுகுளத்தூர் ஹாஜி முஹம்மது இப்ராஹீம் அவர்களின் பஷாரத்துல் இக்வான் ஃபீர் ஹீர்ரத்தில் குர்ஆன் (1920) என முதன் முதலில் திருக்குர்ஆனுக்கு அரபுத் தமிழில் விளக்கங்கள் தோன்றியது மிக பெருமைக்குரிய சிறப்பாகும்.

செய்யுள்

1. ஷேக் முஸ்தஃபா (பேருவளை) அவர்களின் மீஸான்மாலை (1968).
2. இலங்கை கஸவாத்தை முஹம்மது லெப்பை இப்னு ஷேக் அஹமத் ஆலிமின் தீன்மாலை
3. ஜமாலுத்தீன் புலவரின் “சுஹ்புல் ஈமான்” (1863)

தொன்மையான முஸ்லிம் தமிழ் இலக்கியங்கள் பல முதன் முதலில் அரபுத் தமிழில் எழுதப்பெற்றவை என்பது பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவை அச்சாக்கம் பெற்ற பின்னரே பலராலும் அறியப்பெற்றன.

ஹதியா மாலையும் அரபுத் தமிழிலிருந்து பின் தமிழாக்கம் செய்யப் பெற்றது. இன்றைக்கு ஹதியா மாலையை தமிழாய்வாளர் நண்பர் தார்ஸ்டன் ஜெர்மானிய மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.

கோட்டாறு மேனா ஹாஜியார் ஒலி என்னும் செய்கு முஹ்யுத்தீன் (1786-1874) அரபுத் தமிழில் ஜம் ஹுஃத்துமாலை, கப்பல் முனாஜாத்து, காதிரிய்யா தரீகா றாத்தீப், கத்தமுல் குர்ஆனுடன் பாடியுள்ளார்.

மேனா ஹாஜியாரின் இளைய சகோதரர் “ரஜபு அப்பா” என்னும் காலி அப்பா செய்கு முஹம்மதுல் காதிரியின் அரபுத்தமிழ் “தம் ஹீத்து மாலை” கையெழுத்துப் பிரதியாகவே இருக்கிறது.

செய்கு மதினா சாகிபுவின் பல பாடல்கள் அரபுத் தமிழில் அச்சாக்கம் பெற்றன. சில கையெழுத்துப் பிரதியாக இன்றும் உள்ளன.

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023

முனைவர் தக்கலை எம்.எஸ்.பஷீர் P: 162-169

அல்லாமா மாப்பிள்ளை லெப்பை ஆலிமின் (1815-1896) ஏராளமான செய்யுள், உரைநடை அரபுத் தமிழ் நூல்களைப் படித்து ஆலிம்கள் அறிஞர் ஆனோர் பலர்.

காயல்பட்டணம் ஷாம் ஷிஹாபுத்தீன் (ஒலி) அவர்களின் அரபுத்தமிழ் தொண்டும் நினைவு கூறத்தக்கது.

இலங்கையில் கொழும்பு ஹஸரத் என்னும் அல்லாமா சையத் முஹம்மது ஆலிம் ஒலூ, தொழுகை பற்றி அரபுத் தமிழ் பாக்கள், இயற்றியுள்ளார். இவர் 'தர்பிய்யத்துல் அத்பால்' என்னும் மன்றம் அமைத்து 'துஹ்பத்துல் அத்பால்' என்னும் எளிய அரபுத் தமிழ்ப் பாடல்களை உரையுடன் வெளியிட்டார். அரபுத் தமிழில் பல மழை பைத்துக்களும் பாடியுள்ளார்.

அண்மையில் கீழக்கரை ஆசியாம்மாவின் அரபுத் தமிழ் ஞானப் பாடல்களின் தொகுப்பினை தமிழ்ப்படுத்தி நூலாக்கம் செய்துள்ளார்.

அரபுத் தமிழ் இதழ்கள்

1. அலாமத் இலங்காபுரி (1896)
2. கஷ்ஃபுர்ரான் (1886)
3. அஜாய்புல் அக்பாற் (1906) போன்ற அரபுத் தமிழ் இதழ்களும் குறிப்பிடத்தக்கவை.

பிக்ஹு (சட்டங்கள்) இஸ்லாமியச் சட்டங்களில்...

1. அஹ்காமுல் முஸ்லிமீன்
2. சிம்துஸ் ஸிப்யான்
3. மாப்பிள்ளை லெப்பை ஆலிமின் 'மஙானி' (கீழக்கரை அல்ஹாஜ் ஷாகுல் ஹமீது ஆலிம் ஜமாலி அவர்களால் தமிழ்ப்படுத்தி பதிப்பாசிரியராக வெளியிடப் பெற்றது.)

   மெய்ஞ்ஞான சக்கரவர்த்தி தக்கலை பீர்முகம்மது சாஹிப் (ஒலி) அவர்களின் 1.ஞானரத்தினக் குறவஞ்சி, 2. திருமெய்ஞ்ஞானச் சர நூல், 3. ஆனந்தக்களிப்பு அரபுத்தமிழில் இன்றைக்கு கிடைத்துள்ளன.

1. நூஹ் ஒலியின் வேதபுராணம்
2. புதூகுஷ்ஷாம்
3. குணங்குடியார் பாடல்கள் ஆகியனவும் அரபுத்தமிழில் உள்ளன.

முடிவுரை

அரபுத்தமிழ் பற்றிய விரிவான ஆய்வு நூல் வெளிவர வேண்டும் என்பது இன்றைய அத்தியாவசியமாக உள்ளது. ஆய்வு செய்கிற அளவில் ஆய்வுக் களன்கள் அமைந்துள்ளன. அரபு, தமிழ் இரண்டிலும் துறை போகியவர்கள் இவ்வாய்விற்கு முன்வர வேண்டும். பல நூல்களை எனது இனிய நண்பர், செர்மானியத் தமிழறிஞர், டாக்டர் டார்ஸ்டன் சேகரித்து வைத்துள்ளார்கள். இலண்டனிலுள்ள இந்திய அரசு அலுவலக நூலகத்தில் 60 நூல்கள் இருக்கின்றன என்கின்றனர். மேலும் இவற்றையெல்லாம் தேடுதல், திரட்டுதல், தொகுத்தல், வகுத்து பகுத்து ஆய்வு செய்தல், தமிழாக்கம் செய்தல் போன்ற பணிகள் இன்றைய இன்றியமையாத அரும்பணியாக நம்முன் நிற்கின்றன.

விளக்கம்: மேற்பார்வை நூல்கள், கட்டுரைகள்

1. பசுலுமுகியித்தீன் செ.டாக்டர் அரபுத்தமிழ், பசுமைப் பதிப்பகம், நாகர்கோவில் (1985)
2. Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu – Afdalul Ulama. Dr.Tayka Shuayb Alim 1993.

கட்டுரைகள்

1. ஷாகுல் அமீது ஆலிம் ஜமாலி அல்ஹாஜ் கா.செ.மு. அரபுத்தமிழ் தேவை தோற்றம், தேய்வு, மனாருல் ஹுதா, அக். நவ. 2003.
2. திருமலர் மீரான்பிள்ளை, அரபுத் தமிழின் தோற்றம் ஓர் ஆய்வு – கருத்தரங்கக் கோவை கீழக்கரை இஸ்லாமியத்தமிழ் இலக்கிய மாநாடு.
3. மௌலவி எம்.பீர் முஹம்மது பாகவி. அரபுத்தமிழ் இலக்கியங்கள் ஓர் ஆய்வு – இஸ்லாமியத்தமிழ் இலக்கிய மாநாடு, மலர், கீழக்கரை.
4. அப்துற் றஹீம், அரபுத்தமிழ், இஸ்லாமியக் கலைக்களஞ்சியம், பக்.414, சென்னை.
5. தோப்பில் முஹம்மது மீரான், அரபுத்தமிழ் இலக்கியங்கள், சமநிலை சமுதாயம், ஏப்ரல் 2000.
6. மௌலவி, அப்துல்லாஹ் பாஷா மன்பஈ, அல்பயான், ஆண்டு மலர். 2009.

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
முனைவர் தக்கலை எம்.எஸ்.பஷீர் P: 162-169

7. A.S.Thajudeen, Ph.D. Research Scholar, JNU. New Delhi Contribution of Tamil Nadu Scholars to Arabic Studies, World Classical Tamil Conference, Coimbatore.
8. Dr.Uwise, Arabic Tamil Literature P.229-240 Muslim Contribution to Tamil Literature, Kilakarai Islamic Tamil Conference, 1990.
9. செய்யிது மௌலானா எஸ்.ஏ.ஆர்.எம். இஸ்லாமும், தமிழும், இலக்கிய சங்கமம். 1. அரபுத் தமிழ் இலக்கியம். பக். 154, 158. இஸ்லாமிய இலக்கியக் கழகம், மருதமுனை, 2005.
10. அஸீஸ்.எம்.எம்.ஏ.இலங்கையில் இஸ்லாம். "அரபுத்தமிழ் எங்கள் அன்புத்தமிழ். பக்.89-100. இலங்கை 1963, 2007.
11. அஸீஸ், எம்.எம்.ஏ.இஸ்லாமியத் தமிழிலக்கியச் சொற்பொழிவுகள் 1966. அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ் இலங்கை (பக். 25-38) 1963, 2007.
12. கனி ஆர்.பி.எம். இஸ்லாமிய இலக்கியக் கருவூலம், அரபித் தமிழ் இலக்கியம் (பக். 322, 333), சென்னை 2007.
13. த.சுந்தராஜ், "அறமும் தமிழும்" காலச்சுவடு பதிப்பகம் (2018), நாகர்கோவில்.

Reference:

1. Pasulugiyideen Se.Dr., Arabu Tamil, Pasumai Pathipagam, Nagorkovil (1985)
2. Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu – Afdalul Ulama. Dr.Tayka Shuayb Alim 1993.
3. Shahul Hameed Alim Jamali Alhaj K.S.M., Arabu Tamil devai Thodram, Deivu, Manarul Hudha, October. November 2003.
4. Thirmalar Meeran Pillai, Arabu Tamilin Thodram Oor Aaivu – Karuthranga Kovai Keelakarai Islamiya Tamil Ilakiya Manadu.
5. Moulavi M.Peer Mohamed Paakavi, Arabu Tamil Ilakiyangal Oor Aaivu – Islamiya Tamil Ilakiya Manadu, Malar, Keelakarai.
6. Abdur Rahim, Arabu Tamil, Islamiya Kalai Kalanjyam, P.414, Chennai.
7. Thoppil Mohamed Meeran, Arabu Tamil Ilakiyangal, Samanilai Samuthayam, April 2000.
8. Moulavi, Abdullah Basha Manpaee, Al payan, Aandu Malar, 2009.
9. A.S.Thajudeen, Ph.D. Research Scholar, JNU. New Delhi Contribution of Tamil Nadu Scholars to Arabic Studies, World Classical Tamil Conference, Coimbatore.

10. Dr.Uwise, Arabic Tamil Literature P.229-240 Muslim Contribution to Tamil Literature, Kilakarai Islamic Tamil Conference, 1990.
11. Seyyad Moulana S.A.R.M. Islamim Tamilum, Ilakiya Sangamam 1. Arabu Tamil Ilakiyam, p.154,158. Islamiya Ilakiya Kalagam, Maruthamunai, 2005.
12. Azees.M.M.A., Ilangayil Islam, "Arabu Tamil Yengal Anbu Tamil", p.89-100, Srilanka 1963, 2007.
13. Azees, M.M.A., Islamiya Tamililakiyach Sorpolivugal 1966. Arabu Tamil Yengal Anbu Tamil, Sri Lanka (pp. 25-38), Chennai 2007.
14. Kani R.P.M. Islamiya Ilakiya Karuvulam, Arabu Tamil Ilakiyam (pp. 322-333), Chennai 2007.
15. T.Sundaraj, "Aramum Tamilum" Kalachuvadu Pathipagam (2018), Nogarkovil.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
பேரா. கலாநிதி எஸ்.எம்.எஸ். மஸாஹிர் P: 170-181

அறபுத் தமிழ் - தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி
Origin, Growth, Decline of Arab Tamil

பேராசிரியர், கலாநிதி எஸ்.எம்.எம். மஸாஹிர்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
mazahirsmm@seu.ac.lk

அறபுத் தமிழின் வரைவிலக்கணம்

அறபுத் தமிழ் என்ற மொழி மரபுக்கு பிரதானமாக இரு வரைவிலக்கணங்கள் வழங்கப்படுகின்றன. **தமிழை அறபு லிபியில் எழுதுதல் அறபுத் தமிழாகும்.**

இவ்வரைவிலக்கணத்தை கூறவரும் மணவை முஸ்தபா, “மொழி தமிழாகவும் எழுத்து அரபியாகவும் அமைந்ததுவே ‘அறபுத் தமிழ்’ என அழைக்கப்படுகிறது” (மணவை முஸ்தபா, 1991) என்கின்றார். பேராசிரியர் எம். ஏ. நு.ஃமான், “அறபு வரிவடிவில் எழுதப்பட்டுள்ள முஸ்லிம் தமிழின் ஒரு வகை மொழியே (ஏயசநைவல) அறபுத் தமிழ் எனப்படுகின்றது” (நு.ஃமான்) என்று கூறுகின்றார். “அரபு மொழி எழுத்துக்களைக் கொண்டு தமிழை எழுதுவது தான் ‘அரபுத் தமிழ்’ ஆகும். அதாவது ‘அம்மா’ என்பதை ‘AMMA’ என்று எழுதுவது போன்று, அரபு எழுத்துக்களைக் கொண்டு தமிழை எழுதினார்கள்” (சாமி, 1994) என அ. மா. சாமி என்ற ஆய்வாளர் விளக்குகின்றார். மேலே சுட்டிக் காட்டப்பட்ட அறிஞர்களின் கருத்துப்படி தமிழை அறபு மொழி அட்சரத்தில் எழுதுவதே அறபுத் தமிழ் எனக் கொள்ளப்படல் வேண்டும் எனத் தெரிகிறது.

அறபு வரிவடிவத்தைப் போலவே, தமிழ் வரிவடிவத்தில் அறபுச் சொற்களைக் கலந்து எழுதுதலும் அறபுத் தமிழாகும்.

இவ்வரைவிலக்கணத்தை ஏ. எம். ஏ. அஸீஸ், எம். ஐ. எம். அமீன் போன்றோர் முன்வைக்கின்றனர். கலாநிதி எம். ஏ. எம். சுக்ரியும் இக்கருத்தைக் கொண்டுள்ளார்.

இவ்வரைவிலக்கணத்தை விளக்கவரும் பேராசிரியர் எம். ஏ. நு.ஃமான் அவர்கள், பின்வருமாறு எழுதுகின்றார். “இஸ்லாத்துக்கும் அறபு மொழிக்கும் இடையே உள்ள பிரிக்க முடியாத உறவு காரணமாக, பண்பாட்டுத் தேவை கருதி, முஸ்லிம் தமிழில் சமய, பண்பாட்டுத் துறை சார்ந்த நூற்றுக்கணக்கான அறபு மொழிச் சொற்கள் கடன் வாங்கப்பட்டுள்ளன. முஸ்லிம் தமிழை தமிழர் பேசும் தமிழில் இருந்து வேறுபடுத்தும் முக்கிய பண்புக் கூறுகளுள் ஒன்றாக இது அமைகின்றது. இதன் காரணமாகவே முஸ்லிம் தமிழை அறபுத் தமிழ் என்றும் சிலர் அழைப்பர். அதாவது அறபுச் சொற்கள் கலந்த தமிழையே அறபுத் தமிழ் என்பர். ‘இலங்கை முஸ்லிம்களின் வரலாறு’ என்னும் கட்டுரையில் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் இது பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். ‘இலங்கை முஸ்லிம்களில் பெரும்பாலானோர் தமிழையே பேசுகின்றனர். ஆனால், இலங்கை முஸ்லிம்களின் பேச்சு வழக்கிலும், தென் இந்திய முஸ்லிம்களின் பேச்சு வழக்கிலும் பல அறபுச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுக்கான தமிழ்ச் சொற்கள் இருந்தும் அவ்வறபுச் சொற்களே கையாளப்படுவது கவனித்தற்பாலது. எனவே, முஸ்லிம்களின் தமிழ் வழக்கினைக் குறிப்பிடுவதற்கு அறபுத் தமிழ் என்ற வழக்குக் கையாளப்படுகின்றது. முன்னர் அறபுத் தமிழை அறபியிலேயே எழுதினர். அறபு மொழியில் இல்லாத ட, ச, ங, ப தமிழ் ஒலிகளைக் குறிப்பதற்கு அறபு எழுத்துக்களோடு விசேஷ புள்ளிகளைச் சேர்த்து எழுதுவர். இக்காலத்தில் அறபுத் தமிழ் அதிகமாகத் தமிழிலேயே எழுதப்படுகிறது’ இக்கூற்றில் இருந்து, அறபு, தமிழ் ஆகிய எந்த வடிவத்தில் எழுதப்பட்டாலும் அறபுச் சொற்கள் கலந்த தமிழையே அறபுத் தமிழ் என்று

அஸீஸ் கருதுகின்றார் என்பது தெளிவு. இக்கருத்தே அவரது வேறு சில கட்டுரைகளிலும் காணப்படுகின்றது.” (நு.ஃ.மான்).

தமிழில் அறபுச் சொற்களைச் சேர்த்து எழுதும் அமைப்பை அறபுத் தமிழ் எனக் கூறப்படுவதற்கான பின்னணியையும் இணைத்து எம். ஐ. எம். அமீன் அவர்கள் பின்வருமாறு விளக்குகின்றார்கள்.

“தமிழ் அச்சுக் கூடங்கள் பரவலாகிய போது முஸ்லிம்கள் தம் ஆக்கங்களை அச்சேற்றும் வசதி கருதி, அறபு எழுத்துக்குப் பதிலாக தமிழ் எழுத்துக்களை உபயோகித்துப் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் அச்சிட்டு வெளியிட்டனர். இதனால் அறபுத் தமிழ் என்பது அறபு எழுத்திலே எழுதப்பட்ட தமிழைக் குறிக்கின்றதா அல்லது தமிழ் எழுத்துக்களைக் கையாண்டு முஸ்லிம்களால் எழுதப்பட்ட தமிழையும் குறிக்கின்றதா என்ற மயக்கம் ஏற்படுவது இயற்கையே. தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தி, தமிழ் மொழி மூலம் முஸ்லிம்கள் வெளியிட்ட ஆக்கங்களையும் முஸ்லிம் அறிஞர்கள் அறபுத் தமிழ் என்றே வழங்கினர்.” (அமீன், 2000).

இவ்விரு வரைவிலக்கணங்களையும் ஆய்வு செய்த பேராசிரியர் எம்.ஏ. நு.ஃ.மான் பின்வருமாறு கூறுகின்றார். “அறபுத் தமிழ் பற்றிய பொதுவான கருத்து இரண்டாவது வரைவிலக்கணத்திலிருந்து வேறுபட்டது. கடந்த நூற்றாண்டுகளில் (19ஆம் நூற்றாண்டு) பல்வேறு காரணங்களால் முஸ்லிம்கள், தமிழ் மொழியைத் தமிழ் எழுத்துக்களில் எழுதியதோடு அறபு எழுத்துக்களிலும் எழுதி வந்தனர். அவ்வாறு அறபு எழுத்தில் எழுதப்பட்ட தமிழே அறபுத் தமிழ் என்று பொதுவாக வழங்கப்படுகின்றது.” (நு.ஃ.மான்) இக்கருத்தே பொருத்தமானதாகவும் தெரிகிறது. அதற்குக் கீழ்வரும் நியாயங்களை முன்வைக்கலாம்.

- அறபுத் தமிழின் தோற்ற, வளர்ச்சிக் கால கட்டங்களில் அறபு எழுத்துக்களில் அமைந்த தமிழுக்கே அறபுத் தமிழ் எனப் பிரயோகிக்கப்பட்டது. அச்சியந்திர வளர்ச்சி, முஸ்லிம்களின் கல்வி முன்னேற்றம், கையால்வதன் இலகுதன்மை போன்ற வெளிக் காரணங்களினாலேயே தமிழ் அட்சரங்களுள் அறபு கலந்து எழுதப்படும் தமிழுக்கு அறபுத் தமிழ் எனப்படல் வேண்டும் என்ற சிந்தனை தோன்றியது. மாறாக அறபுத் தமிழின் உள்ளக வளர்ச்சியாகவோ மாற்றமாகவோ இதனைக் கருத முடியாது. அத்தோடு மிக அண்மைக் காலம் வரையிலும் அறபு லிபியில் அமைந்த அறபுத்தமிழை வாசிப்போரும் எழுதுவோரும் இருந்து வந்துள்ளனர். அதனால் அம்மொழி மரபு வழக்கொழிந்து விட்டதாகக் கருதவும் முடியாது.

- தமிழ் மொழியை அறபு எழுத்துக்களில் எழுதுவது முஸ்லிம் கல்விமான்களால் மிகவும் தீட்சண்யமாகத் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டது. அது இலங்கை, தென்னிந்திய முஸ்லிம்களுக்கேயுரிய தனித்தன்மை வாய்ந்த ஒரு மொழி மரபாகும். அறபிகளுக்கு அதனை ஒருவாறு வாசிக்கலாம். ஆனால் விளங்க முடியாது. தமிழர்களுக்கு அதனை வேறு யாராவது வாசித்தால் ஓரளவு விளங்கலாம். ஆனால் வாசிக்க முடியாது என்ற இந்தத் தனித்துவம் அறபு லிபியில் அமைந்த தமிழுக்கே உண்டு. இதனை அறபுச் சொற்கள் கலந்த தமிழுக்குப் பயன்படுத்தினால் அதன் தனித்துவம் இல்லாமற்போகும்.

- தமிழ் மொழியில் பல்வேறு மொழிகளையும் சேர்ந்த வேற்று மொழிச் சொற்கள் கலந்துள்ளன. விரும்பியோ விரும்பாமலோ எந்த ஒரு வளர்ந்து செல்லும் மொழியும் அந்நிய மொழிக் கலவையை அங்கீகரித்தேயாக வேண்டியுள்ளது. ஆக, தமிழில் வேற்று மொழிச் சொற்கள் கலக்கும் போதெல்லாம் அம்மொழியின் தமிழ் எனக் கொள்வது பொருத்தமானதாகத் தெரியவில்லை. அப்படியாயின் பாரசீகத் தமிழ், ஆங்கிலத் தமிழ், டச்சுத் தமிழ், சிங்களத் தமிழ் என்றெல்லாம் பெயரிட

வேண்டியேற்படும். அப்படியான ஒரு மரபு தமிழில் இதுகாலவரை வளர்க்கப்படவுமில்லை.

- முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பேணுகின்ற வகையில், இஸ்லாமிய அகீதா, ஷரீஆ, ஒழுக்கவியல் வரையறைகளுக்கு உட்பட்ட வகையில் முஸ்லிம்களால் உருவாக்கப்படும் அறபுச்சொற்கள் கலந்த இலக்கிய ஆக்கங்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் எனக் கூறுவதே பொருத்தப்பாடுடையதாகும். அவ்வாறான இலக்கியப் படைப்புகள் இஸ்லாத்தின் அடிப்படை வரையறைகளையும் கட்டுக்கோப்புகளையும் மீறி அமையுமாயின் அதனை முஸ்லிம் தமிழ் இலக்கியம் எனப் பெயரிட்டு அழைக்க முடியும். இதுவன்றி, ஒரு தனித்துவமான மொழி மரபுக்காகப் பயன்படுத்திய 'அறபுத் தமிழ்' என்ற பிரயோகத்தை இஸ்லாமியத் தமிழ் அல்லது முஸ்லிம் தமிழுக்குக் கையாள்வது நுணுக்கமான ஒரு செயற்பாடாகத் தெரியவில்லை.

அறபுத் தமிழின் தோற்றமும் வளர்ச்சியும்

அறபுத் தமிழ் தோன்றி வளர்ந்த சரித்திரத்தையும் அதனோடு தொடர்பான, அதில் பாதிப்பேற்படுத்திய பல்வேறு விடயதானங்களையும் நாம் இப்பகுதியில் ஆராயவுள்ளோம்.

அறபுத் தமிழ் எப்போது தோன்றியது என்ற வினாவுக்கு விடை பெறுவது சிரமமானதாகக் காணப்படுகின்றது. இது பற்றி எம். ஐ. எம். அமீன் அவர்கள், "அறபு எழுத்தைக் கையாண்டு அறபுத் தமிழை முஸ்லிம்கள் எப்பொழுது எழுத ஆரம்பித்தார்கள் என்று சரியாகக் கணித்துக் கூறுவதற்கான சான்றுகள் இதுகால வரை ஆய்வாளர்களுக்கு கிடைக்கவில்லை" (அமீன், 2000) என்கின்றார். எஸ். ஏ. செய்யிது ஹஸன் மௌலானா கீழ்வரும் விளக்கங்களைத் தருகின்றார். "அறபுத் தமிழின் தோற்றமும் வளர்ச்சியும், வீழ்ச்சியும் தளர்ச்சியும் ஆகிய அம்சங்கள் பற்றி அற்ப சொற்ப தகவல்களே இன்று எமக்குக் கிடைக்கின்றன. அறபுத் தமிழை ஸ்திரமான முறையில் மீண்டும் அரியாசனத்திலிருத்த வேண்டுமானால், அதன் பிறப்பு வளர்ப்பையோ இக்காலத்திலும் இதற்கு முந்திய தசாப்தங்களிலும் அது நலிந்து மெலிந்தமைக்கான ஏதுக்களையோ புறக்கணிக்கலாகாது. ஒரு வகையில், இலக்கியச் சிறப்பம்சங்களை ஆராய்வதிலும் இவ்வம்சங்கள் முக்கியமானவை." (செய்யிது ஹஸன், 1968).

"8ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் வழக்கிலிருந்த அறபுத் தமிழ்ச் சுவடிகளை உலகெங்குமுள்ள தொல் பொருட்சாலைகளில் தேடி, விஞ்ஞான முறைப்படி வகைப்படுத்தி, காலக்கிரமமான சரித்திரப் பின்னணியில் நோக்கினால் அறபுத் தமிழின் தோற்றம் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளலாம்." (செய்யிது ஹஸன், 1968).

ஹிஜ்ரி 2ஆம் நூற்றாண்டிலேயே (கி.பி. 8ஆம் நூற்றாண்டு) அரபுத் தமிழ் தோன்றியது என்று முனைவர் தைக்கா ஷுஐப் கூறுகிறார். இலங்கையில் 15ஆம் நூற்றாண்டில் அரபுத் தமிழ் புழக்கத்தில் இருந்தது என்று போர்த்துக்கீசிய தளபதி ஓடரடோ பார்பசா என்பவர் எழுதி வைத்திருப்பதாகவும் அவர் மேற்கோள் காட்டுகின்றார் (சாமி, 1994).

அர்வியின் தோற்றம் பற்றி இரு முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. பேராசிரியர் கே. அப்துல் கபூர் போன்ற சிலர், இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் வாழ்ந்த தமிழ் பேசும் முஸ்லிம்களே அதனை உருவாக்கினார்கள் என்ற கருதுகோளைக் கொண்டுள்ளனர். ஹாபிஸ் ஸையித் அஹ்மத் போன்ற வேறு சில அறிஞர்கள், இம்மொழியை அறபிகளே ஏற்படுத்தினர் எனக் கூறுகின்றனர் (Shu'ayb, 1993). இதே கருத்து வேறுபாட்டைக் கூறும் அ. மா. சாமி பின்வருமாறு தனது கருத்தை உறுதிப்படுத்துகின்றார்.

“தமிழ் கற்ற அரபிகள் அல்லது அரபு கற்ற தமிழ் முஸ்லிம்கள் அரபுத் தமிழை தோற்றுவித்து இருப்பார்கள் என்று பொதுவாகக் கருதப்படுகின்றது. ஒரு மொழியைப் பேசக் கற்றுக் கொள்வது எளிது. எழுதக் கற்றுக் கொள்வது கடினம். அரபி அறிந்த தமிழ் முஸ்லிம்களுக்கு தமிழை அரபியில் எழுதிப்படிக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ் முஸ்லிம் பெண்களும் பழக்கத்தின் காரணமாக திருக்குர்ஆனைக் கூட அரபியில் ஓதப் பழகியிருந்தார்கள். எனவே, தமிழைப் பேச மட்டும் பழகிக் கொண்ட அரபிகளே, தங்களுக்குத் தெரிந்த அரபி எழுத்துக்களைக் கொண்டு தமிழை எழுதத் தொடங்கியிருக்க வேண்டும். அதுவே அரபுத் தமிழாக வளர்ச்சியடைந்திருக்கும்.”

ஏ. எம். ஏ. அஸீஸும், “எழுத, வாசிக்கத் தெரிந்திருந்த அரபு எழுத்துக்களில், புதிதாகப் பேசப் பழகிக் கொண்ட தமிழை எழுதியது அரபுத் தமிழின் தொடக்க நிலை” என்று கூறுகின்றார் (சாமி, 1994) ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் மேலே சுட்டிய கருத்தை, “அறபு மக்கள் தமது மொழியை மறந்து காலக்கிரமத்தில் அறபுத் தமிழ் எனும் ஒன்றினை உருவாக்கிக் கொண்டார்கள்” (நுஹியா, 1991) என்று தெளிவாகக் கூறுகின்றார். இக்கருத்தின் அடிப்படையில் பார்க்கும் போது அறபுத் தமிழ் இஸ்லாம் தென்னாசியாவில் பரவத் தொடங்கிய காலகட்டங்களில், சில வேளை இஸ்லாம் அறிமுகமாவதற்கு முன்பு கூட தோன்றியிருக்க முடியும்.

அறபுத் தமிழ், தமிழ் பேசிய முஸ்லிம்களாலேயே உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற கருதுகோளைப் பலப்படுத்தும் வகையில் கலாநிதி எம். ஏ. எம். சுக்ரியின் கீழ்வரும் கருத்துக்கள் அமைந்து காணப்படுகின்றன.

“அரபுத் தமிழின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்த வரலாற்றுக் காரணிகளை நாம் விளக்குதல் அவசியமாகும். இஸ்லாம் தென்னிந்தியாவில் தமிழ் பேசும் முஸ்லிம்கள் மத்தியில் பரவிய போது இவ்வாறு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் தொடர்ந்தும் தமிழ் மொழியையே பேசினர். ஆனால் இஸ்லாத்திற்கும் அரபு மொழிக்குமிடையில் நிலவிய இறுக்கமான தொடர்பு காரணமாக அவர்களது நாளாந்த மதக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அரபு மொழியறிவு அவசியமாகியதால் நிச்சயம் அவர்கள் அரபு மொழியை வாசிப்பதற்கு பயின்றிருத்தல் வேண்டும்.”[57]

“காலப்போக்கில் மதக் கோட்பாடுகள், கிரியைகளோடு தொடர்புடைய சில கருத்துப் பதங்களைப் பொறுத்தளவில் அவற்றில் அறபுப் பதங்களுக்கு இணையான தமிழ்ப் பதங்களைப் பெறுவதில் சில இடர்பாடுகள் இருப்பதை அவர்கள் உணர்ந்தனர். தமிழ் மொழியானது இந்து கலாசாரப் பாரம்பரியத்தோடு இணைந்த ஒரு மொழியாகக் காணப்பட்டதால் இஸ்லாமியக் கோட்பாடுகளோடு இணைந்த கருத்துப் பதங்களைத் தமிழில் புலப்படுத்த முனையும் போது அதற்குப் பொருத்தமான, இஸ்லாமிய சிந்தனை மரபோடு இணைந்த சொற்கள் தமிழில் காணப்படாததை அவர்கள் உணர்ந்தனர். சிலபோது அத்தகைய கருத்துக்களைப் புலப்படுத்த துணைபுரியும் தமிழ்ப் பதங்கள் அரபியில் அவை உணர்த்தும் மூலக் கருத்தைச் சிதைக்கும் வகையில் அமைந்திருப்பதையும் அவர்கள் அவதானித்தனர். உதாரணமாக: அல்லாஹ், நபி, ரசூல், ஆகிரா, மலாஇகா, ஜின், ஸாத், ஸிபாத், வுஜூத் போன்ற அரபுப் பதங்களுக்கு இணையான சொற்கள் தமிழில் இல்லை. மேலும் இவை போன்ற அரபு வார்த்தைகளில் பொதிந்துள்ள ஆழமான கருத்துக்களை இன்னொரு மொழியில் புலப்படுத்தலும் சாத்தியம் அன்று.”[57]

இத்தகைய ஒரு வரலாற்றுச் சூழ்நிலையிலேயே முஸ்லிம்கள் தமிழ் மொழியை அதன் இலக்கண அமைப்பை முற்றிலும் பேணி, அரபி லிபியில் எழுதும் முறையைத் தோற்றுவித்ததோடு இஸ்லாமியக் கோட்பாடுகளுடனும் மதக் கிரியைகளுடனும் தொடர்புடைய அரபுப்பதங்களை தமிழ் மொழியோடு இணைத்துப் பிரயோகிக்க ஆரம்பித்தனர். இவ்வாறு சில

வரலாற்றுச் சூழ்நிலைகள் காரணமாக அரபு மொழிக்கும் தமிழ் மொழிக்குமிடையில் ஏற்பட்ட இணைப்பினடியாக அரபுத் தமிழ் என்ற மொழி தோன்றி, வளர ஆரம்பித்தது. அரபுத் தமிழில் தமிழ் மொழியின் இலக்கண அமைப்பு பேணப்பட்ட அதே நேரத்தில் அது அரபியில் எழுதப்பட்டு, அரபுச் சொற்கள் அதில் பெருமளவு பயன்படுத்தப்பட்டன (சுக்ரி, 1997).

மேற்கூறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் அறபுத் தமிழின் தோற்றக் காலம் இஸ்லாம் தமிழ் நாட்டில் காலூன்றியதன் பின்னரே அமைந்திருக்க முடியும். ஏனெனில் இஸ்லாமிய செயற்பாடுகளை அமுல்படுத்தும் போது ஏற்பட்ட இடர்பாடுகளைக் களைவதனை நோக்கமாகக் கொண்டே இம்மொழி மரபு வடிவமைக்கப்பட்டுள்ளது.

அறபுத் தமிழ் தோன்றி வளர்ந்ததற்கான காரணங்கள்

மேலே விவரிக்கப்பட்ட வரலாற்று, சமய, சமூகவியல் ரீதியான பின்னணிகளை மையமாக வைத்து நோக்கும் போது, அறபுத் தமிழ் தோன்றி வளர்வதற்கு ஏதுவாகிய காரணங்கள் இருக்க வேண்டும். இத்துறையில் பல்வேறு கோணங்களில் அணுகி ஆய்வு செய்த அறிஞர்கள் பல காரணங்களை இதற்கு முன்வைக்கின்றனர். அவற்றைக் கீழ்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

- தமிழ் எழுத்தறிவில்லாத பெரும்பாலான பாமர முஸ்லிம்களுக்குச் சமய அறிவையூட்டுவதற்கு அது வாய்ப்பாக இருந்தமை.

- இந்த நூற்றாண்டின் (20ஆம் நூற்றாண்டு) ஆரம்பம் வரை முஸ்லிம்களின் எழுத்தறிவு வீதம் மிகவும் குறைவானதாகவே இருந்து வந்துள்ளது. 1910ஆம் ஆண்டில் இலங்கை முஸ்லிம்களில் எழுத வாசிக்கத் தெரிந்தோர் ஆண்கள் 6.5%மும், பெண்கள் 1.9மூமும் மட்டுமே. (இதே ஆண்டில் இலங்கையில் எழுத வாசிக்கத் தெரிந்தோர் மொத்தம் ஆண்கள் 40.4மூ, பெண்கள் 10.6%) எனினும் மதக்கடமை காரணமாக அறபு எழுத்துக்களை வாசிக்கப் பலரும் அறிந்திருந்தனர். அவர்களுக்கு அறபு மொழி தெரியாது. ஆனால் அறபு எழுத்துக்களை வாசிக்கத் தெரியும். தமிழ் எழுத்துக்களை வாசிக்கத் தெரியாது. ஆனால் தமிழ் தெரியும். ஆகவே தெரிந்த மொழியைத் தெரிந்த எழுத்துக்களைக் கொண்டு வாசிக்கப் பயிற்றுதல் எளிதானது. இவ்வகையிலேயே அறபு எழுத்துக்களைப் பயன்படுத்தித் தமிழ் நூல்கள் எழுதப்பட்டிருக்கலாம் (நு.ஃ.மான்).

- குர்ஆன் விளக்கவுரைகள் (தப்ஸீர்கள்) அறபு எழுத்தில் மட்டுமே எழுதப்பட வேண்டும் என்ற கருத்து சமய அறிஞர்கள் மத்தியில் நெடுங்காலமாக நிலவி வந்தமை.**"1920இலும் அடுத்து வந்த ஆண்டுகளிலும் கூட தப்ஸீர்கள் தமிழ் லிபியில் எழுதப்படலாகாது என்று வாதாடப்பட்டு வந்தது" என ஏ. எம். ஏ. அஸீஸ் கூறுகின்றார்.** குர்ஆனோடு சம்பந்தப்பட்ட விசயங்கள் அறபு எழுத்துக்களிலேயே இருக்க வேண்டும் என்ற மனப்பான்மை அறபுத் தமிழின் தோற்றத்துக்கு ஒரு வலுவான காரணியாக இருந்திருக்க முடியும். அறபு எழுத்தைக் குர்ஆன் எழுத்து என்றே சாதாரண முஸ்லிம்கள் அழைக்கின்றனர். இன்றும் அறபு எழுத்துக்கு முஸ்லிம்கள் ஒரு புனிதத் தன்மையைக் கற்பித்து வருகின்றனர். அறபு எழுத்து நிலத்தில் கிடந்து காலில் மிதிபடுவது பாவம் என்று அவர்கள் கருதுகின்றனர். அறபு மொழியில் கிதாப் என்ற சொல்லுக்கு புத்தகம் என்பதே பொருள். ஆனால் முஸ்லிம்களைப் பொறுத்தவரை அறபு எழுத்தில் எழுதப்பட்ட நூல்களே கிதாப் என வழங்கப்படுகின்றன. ஏனையவற்றையே புத்தகம் என்பர். இதுவும் அறபு எழுத்துக்கு அவர்கள் கொடுத்த முக்கியத்துவத்தை உணர்த்தும் (நு.ஃ.மான்).

- அறபுச் சொற்களை ஒலிச் சிதைவும் பொருட்சிதைவும் இன்றி எழுதுவதற்கு அறபுத் தமிழ் வாய்ப்பாய் அமைந்தமை.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023

Since 1951

பேரா. கலாநிதி எஸ்.எம்.எஸ். மஸாஹிர் P: 170-181

➢ அறபு ஒலிகளில் பலவற்றைத் தமிழ் எழுத்துக்களில் எழுத முடியாது. அவ்வாறு எழுதினால் ஒலிச் சிதைவும் பொருட்சிதைவும் நிகழ்கின்றன. உதாரணமாக: அறபு மொழியில் உள்ள ق ه ح خ ك ஆகிய எழுத்துக்களுக்குப் பதிலாக தமிழில் க என்னும் ஓர் எழுத்து மட்டுமே உண்டு. தமிழில் வழக்கில் உள்ள கிரந்த எழுத்தாகிய ஹ வையும் சேர்த்தால் இவ்விரு எழுத்துக்களைக் கொண்டே அறபு மொழியில் உள்ள மேற்காட்டிய ஐந்து எழுத்துக்களையும் குறிக்க வேண்டும். இதனால் ஒலிச்சிதைவு மட்டுமன்றி பொருட்சிதைவும் நிகழ்கின்றது. உதாரணமாக: அறபு மொழியிலே حلق خلق என்னும் இரு சொற்கள் உள்ளன. முதலாவது சொல் படைத்தான் என்றும் இரண்டாவது சொல் சிரைத்தான் என்றும் பொருள்படும். (அழிந்தான் என்ற பொருள் தரும் هلق என்ற சொல்லும் உண்டு) தமிழ் எழுத்துக்களைக் கொண்டு இவற்றைப் பொருட்சிதைவின்றி எழுத முடியாது. ஆனால் அறபுத் தமிழில் அறபு எழுத்துக்கள் அனைத்தும் இடம் பெறுவதனால் இதைத் தவிர்த்துக் கொள்ள முடிகின்றது. இவ்வகையில் அறபுத்தமிழின் தோற்றத்துக்கு இதையும் ஒரு காரணமாகக் கொள்ளலாம் (நு.்.மான்).

முஸ்லிம்களின் சமய, சமூக ரீதியான தனித்துவத்தைப் பேணுவதற்கு அறபுத் தமிழ் அத்தியாவசியமாக அமைந்தமை.

➢ தமிழ் மொழியில் உள்ள சமய சிந்தனைகள் சார்ந்த பதங்களுக்குள் பெருமளவானவை இந்து சமயக் கலாசாரத்துடன் தொடர்புடையவை. அப்பதங்களை முஸ்லிம்கள் கையாண்டு இஸ்லாமியக் கருத்தை விளக்க முற்பட்டாலும் தமிழ் பேசும் மக்கள் அவற்றை வழக்கமாக எப்பொருளில் புரிந்து கொண்டார்களோ, அதே பொருளிலேயே தமிழ் பேசும் முஸ்லிம்களும் புரிந்துகொள்வர். ஆதலால் அப்பதங்களை உபயோகித்து தாம் கூறவிரும்பும் கருத்துக்களை முஸ்லிம் படைப்பாளர்களால் புலப்படுத்த முடியாது போகலாம். இதனால், இஸ்லாம் குறித்துக்காட்ட விரும்பும் தனக்கேயுரிய நம்பிக்கைகளையும் ஆழமான கருத்துக்களையும் புலப்படுத்த அறபுப் பதங்களை உபயோகித்தனர். இத்தகைய அறபுப் பதங்களுட் சில, பிரிதொரு மொழியில் மொழிபெயர்க்க முடியாதளவு ஆழமான கருத்துக்களையும் உள்ளடக்கியுள்ளன. இறைவனைக் குறிக்கப் பயன்படும் அறபுச் சொல்லான ‘அல்லாஹ்’ எனும் பதம் இதற்குச் சிறந்ததொரு உதாரணமாகும். இப்பதத்தைச் செவிமடுக்கும் ஒரு முஸ்லிம் புரிந்து கொள்ளும் கருத்தை, இறைவனைக் குறிக்கும் எந்தத் தமிழ்ப் பதத்தாலும் வழங்க முடியாது (அமீன், 2000). ‘நபி’ என்னும் அறபுச் சொல்லைத் ‘தீர்க்கதரிசி’ என்று மொழி பெயர்த்தாலும் ‘பனா’ என்னும் அறபுச் சொல்லை ‘நிலையற்றவை’ என்று மொழிபெயர்த்தாலும் அவற்றுள் பொதிந்துள்ள இஸ்லாமிய எண்ணக்கருவை முழுமையாக அவை எடுத்துக் காட்டா.

எனவே, இஸ்லாமிய பரிபாஷைச் சொற்கலான அவை இரண்டும் அதே வடிவில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் இடம் பெறலாயின. அவ்விரண்டு அறபுச் சொற்களும் அவற்றுக்குரிய தமிழ் மொழிபெயர்ப்புச் சொற்களைவிட சீரமைப்பில் குறுகியவையாகவே உள்ளன. கவிதைக்கு அதே உருவம் வாய்ப்பாக உள்ளது (உவைசு, 1983).

தமிழ் மொழியில் அறபுத் தமிழ் கலப்பதை அங்கீகரிக்காமல் இருந்தமை.

➢ ஏ. எம். ஏ. அஸீஸ் அறபுத் தமிழின் தோற்றத்திற்கு வித்தியாசமான ஒரு காரணத்தை முன்வைக்கின்றார். அதாவது முஸ்லிம்களின் தமிழ் மொழியில் சுத்தமான தமிழ்ச் சொற்களின் இடத்தில் அவற்றுக்கு நிகரான அநேகம் அறபிச் சொற்கள் இடம் பெற்றுள்ளன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பண்டிதர்களும் மொழித் தூய்மை வேண்டுவோரும் இந்த அறபிச் சொற்களை ஏற்க மறுத்ததன் விளைவாக அறபுத் தமிழ் என்பது தோன்றலாயிற்று என்கிறார் அவர் (நஹ்றியா, 1991).

உலகப் பொதுமையை உருவாக்குவற்காக வேண்டியமைந்தமை.

- சி. நயினார் முகம்மது வேறொரு காரணத்தையும் எடுத்தாளுகின்றார். அது பற்றி அவர் விளக்குகையில், "பார்சி, துருக்கி, மலாய், பெர்பெர், சோமாலி, உர்து முதலிய உலக நாடுகள் பலவற்றில் வழங்கும் மொழிகளெல்லாம் அறபி எழுத்தினை ஏற்றுள்ளன. ஆதலால், உலகப் பொதுமை கருதி அறபி எழுத்துக்களைத் தமிழ் முஸ்லிம்களும் கொண்டிருக்கலாம்" என்கின்றார்.
- அறபு - தமிழ் மொழிகளில் பிறமொழிகளை அணைத்துச் செல்லும் தாராளத் தன்மையும் இயல்பும் காணப்படுகின்றமை
- 'இந்தியப் பண்பாட்டில் இஸ்லாமிய இலக்கியத்தின் பங்கு' என்னும் கட்டுரையில் பேராசிரியர் கா. அப்துல் கபூர் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார். "மொழிக் குடும்பத்துள் 'செமிட்டிக்' குழுவைச் சார்ந்தது அறபு மொழி. திராவிடச் குழுவைச் சார்ந்தது தமிழ் மொழி. இவ்விரு மொழிகளும் பல்கோடி மக்களால் பேசப்படுகின்ற உயிரோட்டமுள்ள உயர் தனிச் செம்மொழிகள். காலத்தின் வேகத்திற் சிக்கிக் கவினிழக்காமல், எளிமையும், இனிமையும், பழமையும், புதுமையும், வளப்பமும், வனப்பும் செறிந்திலங்கும் இம்மொழிகளிடையேயுள்ள அடிப்படை ஒப்புவமைகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. பிறமொழிகளின் ஆதிக்கத்தால் தம் தனித் தன்மைகளை இழந்து விடாமல் பிறமொழிச் சொற்களுக்கேற்ற பொருத்தமான சொற்களை உருவாக்குவதில் அறபியும் தமிழும் தனிக் கருத்துச் செலுத்துகின்றன. பிறமொழிப் பெயர்களைக்கூட தம்மியல்புகளுக்கேற்ப மாற்றியமைத்துப் பயன்படுத்தும் தன்மையையும் இம்மொழிகளில் காணலாம். இவ்விரு மொழிகளிடையேயுள்ள பல்வேறு ஒற்றுமைகள் காரணமாக, அறபுத் தமிழ் என்னும் ஒரு புதுமொழியே உருவாகியுள்ளது" (ஜெமீல், 1997(Ed.).

அறபுத் தமிழின் வளர்ச்சியும் முதிர்ச்சியும்

மேற்போந்த காரணிகளால் முஸ்லிம்களால் உருவாக்கப்பட்ட அறபுத் தமிழ் மொழி என்னும் விருட்சம், முஸ்லிம் அறிஞர்களின் இலக்கிய, சமய முயற்சிகளால் உரமிடப்பட்டு, ஆழமாக வேர்விட்டு, அகலமாக கிளை பரப்பி வளர்ந்தது.

"அரபுத் தமிழானது கால ஓட்டத்தில் மிகப் பிரபலமாகப் பயன்படுத்தப்பட்டு தமிழ் பேசும் முஸ்லிம்களின் கலாசார, பண்பாட்டு மொழியாக வளர்ச்சியடைந்தது. முஸ்லிம்கள் தமிழ் மொழியை அவர்களது கருத்து வெளிப்பாட்டுக்கு ஒரு சாதனமாகப் பயன்படுத்தும் அதேநேரத்தில் அவர்களது கலாசாரப் பண்பாட்டுத் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கு அரபுத் தமிழ் துணை புரிந்தது" என்கின்றார் கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி (1997) அவர்கள்.

பொதுவாக ஆண்களைவிடப் பெண்கள்தாம் இவ்வரபுத் தமிழை அதிகமாக எழுதப்படிக்கத் தெரிந்திருந்தனர். அக்காலத்தில் கடிதங்கள் கூட அரபுத் தமிழில் எழுதப்பட்டு வந்தன. தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் இது பிரபல்யமாக இருந்தது. தமிழ் நாட்டில் இதில் பல ∴பார்ஸி, உர்துச் சொற்கள் கலந்துவிட்ட பொழுது இலங்கையில் இது தன்நிலை குலையாது இருந்தது. கி. பி. 8ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரை அரபுத் தமிழ் சிறப்புற்று விளங்கியது (அப்துர் றஹீம், 1976).

இலங்கையில் அறபுத் தமிழின் நிலைப்பாட்டை விளக்க முனைந்த ஏ. எம். ஏ. அஸீஸ், குர்ஆன் பள்ளிக்கூடங்களில் அறபுத் தமிழே கல்வி மொழியாக இருப்பதைக் குறித்துச் சொன்னார்.

“மக்தப் (مكتب) என்னும் பெயர் முஸ்லிம் உலகில் வெகு பிரசித்தமானதெனினும் இலங்கையில் அது பிரபல்யம் பெற்றதாகத் தெரியவில்லை. இலங்கையில் ‘மக்தப்’ என்பதற்குப் பதிலாக குர்ஆன் பள்ளிக்கூடம் என்ற பெயரே உபயோகிக்கப்பட்டது. ‘மக்தப்’பில் அறபு மொழியே போதனா மொழியாகப் பயன்படுத்தப்பட்டது. குர்ஆன் பள்ளிக் கூடத்திலோ அறபுத் தமிழ் போதனா மொழியாக விளங்கிற்று. அறபுத் தமிழில் ஆசிரியர் ‘லெப்பை’ என அழைக்கப்படுகின்றார். அறபியில் ‘முஅல்லிம்’ என்பர். தென் இந்தியாவில் ‘முஅல்லிம்’ (معلم) என்ற சொல்லே வழக்கிலிருப்பதாக அறிகின்றேன்.” (நுஹியா, 1991).

அரபுத் தமிழ் காலப்போக்கில் மிகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு, தமிழகத்திலும் இலங்கையிலும் வாழ்ந்த முஸ்லிம்களின் தாய்மொழியாகவும் கலாசார, பண்பாட்டு வெளிப்பாட்டுக்கான ஊடகமாகவும் மிகச் சிறப்பான வளர்ச்சியைக் கண்டது (சுக்ரி, 1997).

அறபுத் தமிழின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்ததாகக் கருதப்பட்ட 20ஆம் நூற்றாண்டில் கூட அதன் சிறப்பையும் உயர் தன்மையையும் சீர்தூக்கிப் பார்த்த அறிஞர்கள், அதனை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற கோஷத்தை முன்வைத்தனர். “எங்கள் பாஷை அறபுத் தமிழாகும்” என்று முதுபெரும் அரசியல்வாதி சேர். ராஸிக் பரீத் அவர்களும், “அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ்” என மூதறிஞர் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களும் குரலெழுப்பினர் (நுஹியா, 1991).

அறபுத் தமிழின் இன்னுமொரு முக்கிய சந்தர்ப்பம் மரணச் சடங்கோடு சம்பந்தப்பட்டதாகும். சிலவேளை இறந்தவரின் பெயர், வேறு சில தகவல்கள் நடுகல்லில் குறிக்கப்பட வேண்டிய தேவையிருந்தது. ஹிஜ்ரி 137 (கி.பி. 755) என்று திகதியிடப்பட்ட, அறபுத் தமிழில் எழுதப்பட்ட, ஒரு நடுகல் காலியில் (இலங்கையின் தெற்கில் உள்ள ஒரு முக்கிய நகர்) கண்டெடுக்கப்பட்டது. இதுவும் அறபுத் தமிழ்ப் பாவனைக்குத் தூண்டுதல் அளித்துள்ளது (ஆயாசழழகஇ 1993)

அடுத்த அம்சம் தனிப்பட்ட பாவனையாகும். நாட்குறிப்பு, வியாபாரத் தகவல்கள், குறிப்புகள், வியாபாரப் பங்குதாரர், தொழிளாலர்களுடனான தகவல்கள், பள்ளிவாசலின் முன்னால் தொங்கிவிடப்படுகின்ற அறிவித்தல்கள், தனிப்பட்ட அழைப்பிதழ்கள், பிரத்தியேகமான கடிதங்கள் போன்றவை அறபுத் தமிழில் அமைந்திருந்தன (Mahroof, 1993).

அறபுத் தமிழின் ஏனைய உபயோகங்களாக சங்கைமிக்க அல்குர்ஆன், ஹதீஸ், இலக்கிய மொழிபெயர்ப்புக்கள், கவிதை, உரை நடை அமைப்பிலான ஆக்கங்கள், அறபுத் தமிழ் அகராதிகள், கலைக் களஞ்சியங்கள் போன்றவை உருவாக்கப்பட்டுள்ளமையைக் குறிப்பிடலாம் (ஆயாசழழகஇ 1993).

17ஆம் நூற்றாண்டளவில் முஸ்லிம் புலவர்கள் தமிழில் தங்களுடைய தனித்துவமான இலக்கிய மாண்பைக் கட்டியெழுப்பியிருந்தனர். நாம் முன்பு சுட்டிக்காட்டிய பல்சந்தமாலையிலிருந்து தொடர்ந்து, யாகூப் சித்தர் எனத் தன்னை அழைத்துக் கொண்ட வண்ண பரிமள புலவர் ‘ஆயிரம் மசாலா’ அல்லது ‘அதிசய புராணம்’ என்பதை ஏறத்தாள 1572இல் உருவாக்கினார். ஆலிம் புலவர் மிகுராசு மசாலா (மி.ஃராஜ் மசாலா) என்ற கவிதைத் தொகுப்பை 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் வெளிக் கொணர்ந்தார். 1673இல் பீர் முஹம்மத் என்ற கவிஞர், திரு நெறி காட்டு என்ற கவிதை நூலையும் இயற்றினார். ஒரு முஸ்லிமால் எழுதப்பட்ட முதல் காப்பியமாக ‘கனகாபிஷேக மாலை’ 1648இல் கனகவிராயர் என்று அழைக்கப்பட்ட ஷேக் நெய்னாரின் காப்பியம் விளங்குகின்றது. வரிசை முஹிதீன் புலவர் ‘சகூன் படைகள்’ என்ற ஆக்கத்தை 1686இல் இயற்றினார் (Mahroof, 1993).

19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் தென்னிந்தியாவில் இருந்து முஸ்லிம் பிரசாரகர்களின் இலங்கைக்கான வருகையைத் தொடர்ந்து இங்கு அறபுத் தமிழ் ஊக்கம் பெற்றது. அவர்கள் இலங்கையில் பள்ளிவாசல்களை நிர்மாணித்தல், தரீக்காக்களின்

கிளைகளை ஸ்தாபித்தல், இலங்கையின் உள்நாட்டுப் பகுதியில் வாழும் முஸ்லிம்களுக்கு வழிகாட்டுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டனர். இத்துறையில் முக்கிய நபராக நாம் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் எனப் பிரசித்தி பெற்றுள்ள, சையித் முஹம்மத் பின் அஹ்மத் லெப்பை அவர்களைக் குறிப்பிடலாம். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள காயல்பட்டணத்தில் 1817இல் பிறந்தார். 1835இல் இலங்கைக்கு வந்தார். அவர் தனது விஜயத்தின் வர்த்தக நோக்கங்களைக் கைவிட்டுவிட்டு, இஸ்லாமிய அழைப்பு முயற்சிகளில் இலங்கையில் ஈடுபடத் தீர்மானித்தார். கொழும்பில் மாத்திரம் ஆறு பள்ளவாசல்களையும் இலங்கையின் தெற்குப் பிராந்தியத்தில் ஏழு பள்ளி வாசல்களையும் நிர்மாணிக்க உதவினார். இவர் அறபுத் தமிழில் இஸ்லாமிய சட்டம், கிரியைகள் பற்றிய அநேக நூல்களை எழுதினார். மகானீ (المغاني), பத்ஹுத் தையான் (فتح الديان) , பத்ஹுஸ் ஸலாம் (فتح السلام) , பத்ஹுல் மதீன் (فتح المتين) , கனீமதுஸ் ஸாலிஹீன் (غنيمة الصالحين) போன்றன அவற்றுள் சிலவாகும். மாப்பிள்ளை லெப்பை ஆலிமினால் கவரப்பட்டு வளர்ந்தவராக கொழும்பைச் சேர்ந்த ஷெய்க் அப்துர் ரஹ்மான் பின் மீரான் லெப்பையைக் (கொழும்பு ஆலிம்) குறிப்பிடலாம் (Mahroof, 1993).

இதனைத் தொடர்ந்து இலங்கையிலும் பல ஆக்கங்கள் வெளிவரத் தொடங்கி, அச்சில் பதிக்கப்பட்டன. அவற்றுள் சங்கை மிக்க அல்குர்ஆன் விளக்கங்கள் (தப்ஸீர்), இஸ்லாம் அதன் செயன்முறை அமைப்புப் பற்றிய விளக்கங்கள் என பல நூல்கள் அமைந்தன. அவற்றுள் பின்வருவன முக்கியமானவையாகும்:

- இலங்கை பேருவளையைச் சேர்ந்த ஷெய்க் முஸ்தபா (ரழி) அவர்களின் மீஸான் மாலை (1868)
- ஷெய்க் முஸ்தபா (வலி) அவர்களின் மேலுமொரு ஆக்கமான, கண்ணியமிக்க அல்குர்ஆனுக்கு உரிய விளக்கம், பத்ஹுர் ரஹ்மான் தர்ஜமதி தப்ஸீரில் குர்ஆன்) (فتح الرحمن ترجمة تفسير القرآن. (பேருவளை, 1873)
- ஷெய்க் முஹம்மத் லெப்பை ஆலிம் (கஸாவத்தை ஆலிம் அப்பா)வின் தீன்மாலை (கண்டி, 1878)
- ஷெய்க் அப்துர்ரஹ்மான் இப்னுல் ஹகீம் ஹாஜி மீரா மரிக்கார் அல்மக்தூமியின் வடவிலக ஆராட்டு. (கொழும்பு, 1899) (Mahroof, 1993).

இக்காலப்பகுதியில் வாழ்ந்த புத்திஜீவிகள் அறபுத் தமிழை வளர்த்தெடுத்துச் செல்ல முடியும் என்ற எண்ணத்தோடு பாரிய பங்களிப்புக்களைச் செய்தனர். மிக முக்கிய சட்டத்தரணியாக விளங்கிய முஹம்மத் காசிம் சித்தி லெப்பை போன்றோர் இதில் முன்னிலை வகித்தனர். அவர் அறபு இலக்கணம் தொடர்பாக 112 பக்கங்கள் கொண்ட துஹ்பதுந் நஹ்வு என்ற நூலை 1892ஆம் ஆண்டு அறபுத் தமிழில் வெளியிட்டார் (ஆயாசழழகஇ 1993).

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே அறபுத் தமிழ் அகராதிகளைத் தொகுக்கும் பணி துவங்கியிருக்கிறது. முதல் அறபு - அறபுத் தமிழ் அகரமுதலி மௌலவி முஹம்மத் இப்றாஹீம் என்பவரால் 1913இல் வெளியிடப்பட்டது. இவர் தமிழ் நாடு, இராமநாதபுரத்தைச் சேர்ந்தவர் (Mahroof, 1993).

அறபுத் தமிழின் வீழ்ச்சி

மிகச் சிறப்பான முறையில் வளர்ந்திருந்த அறபுத் தமிழ் மொழி காலவோட்டத்தில் அதன் செழிப்பை இழந்து, கவனிபாரற்ற நிலைக்குத் தள்ளப்பட்டது.

20ஆம் நூற்றாண்டின் முதல் காற்பகுதியில் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் அறபுத் தமிழின் நிலை வீழ்ச்சியை நோக்கிச் சென்றது. பொருளாதார, சமூக ரீதியான எழுச்சி

இதனைத் தடுத்து நிறுத்த முடியவில் லை. பொதுக்கல்வி பெருமளவில் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் உள்ளதாக மாறியதோடு ஆங்கிலத்தின் முக்கியத்துவமும் மறுக்க முடியாததாக இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் அறபுத் தமிழ் என்ற மேலுமொரு மொழியை கற்பது முடியாததாக இருந்தது (Mahroof, 1993).

நூல்கள் அச்சிட்டு வெளியிடுதல் என்பது செலவுமிக்க ஒரு துறையாக உருமாறியது. கையெழுத்துக்களால் எழுதி பிரதிகளைப் பரப்புவது என்பது தொடர்ந்தும் நிலை பெறவில்லை. வாசகர்களும் வாசிப்பு முறைமையும் மாறிவிட்டன. இதனைத் தொடர்ந்து அறபுத் தமிழில் புத்தகங்களை அச்சிட்டு பிரசுரித்தல் என்பது சிரமமான கைங்கரியமாக மாற்றமுற்றது (Mahroof, 1993).

பிரபல்யமான கல்வியியலாளராகவும் முஸ்லிம் தலைவராகவும் இருந்த ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள், அறபுத் தமிழிலான ஆக்கங்கள் தொடர்பான சமூகத்தின் கவனயீனத்தைக் கவலையுடன் எடுத்துக் கூறுகின்றார். ஷெய்க் முஹம்மத் லெப்பை ஆலிம் (கஸாவத்தை ஆலிம் புலவர்) அறபுத் தமிழில் எழுதிய பத்ஹுல் மிஸ்ர் என்ற புத்தகத்தைப் பற்றிப் பேசுகையில் அவர், “இந்நூல் ஷெய்க் முஹம்மத் பின் முஹம்மத் அல்முஇஸ் என்பவரின் அறபு மொழியிலான நூலை மையமாக வைத்து உருவாக்கப்பட்டது என்பதை யாரும் அறியார். அது வெளியிடப்பட்ட போது அதனை இலங்கை முஸ்லிம்கள் கவனத்தில் எடுக்கவுமில்லை” என்கிறார் (Mahroof, 1993).

1940களின் மத்தியில் இலங்கையின் கல்வி, பாலர் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை இலவசம் என்றான போது அறபுத் தமிழ் மேலும் காணாமற் போயிற்று (Mahroof, 1993).

1950, 1960களில் அறபுத் தமிழ் ஆக்கங்களின் இருப்பு நம்பிக்கையற்ற நிலையை உருவாக்கியது. அறபுத் தமிழுக்காகப் போராடியோரும் கூட, தமிழில் (எழுத்திலும் பேச்சு வழக்கிலும்) இஸ்லாமிய வார்த்தைகளை (துருக்கிய, பாரசீக, அறபிய) அதிகம் பயன்படுத்த வேண்டும் எனக் கோரினர். ஆனால் ஏனைய தமிழ்ப் பாவனையாளர்கள் அதனை நிரந்தரமாகக் கட்டுப்படுத்தத் தொடங்கினர். தமிழ் (சிங்களமும்) 1960களில் கற்கை மொழியாக மாறியதும் தமிழறிவு பெரும்பாலான முஸ்லிம்களுக்குக் கிடைக்கக் கூடியதாக மாறியது. இதனால் நாட்டார் வழக்கிலிருந்த இஸ்லாமியச் சொற்களைக் கூட அகற்றி அதற்கீடான தனித் தமிழ்ச் சொற்களை அமைக்கின்ற முயற்சி இடம்பெற்றது.

1882இல் பிரித்தானிய அரசு (அப்போது எகிப்தைக் கைப்பற்றியிருந்த நாடு) அறாபி அல்மிஸ்ரியையும் அவரது ஆதரவாளர்களையும் இலங்கைக்கு நாடு கடத்தியது. இவர் இலங்கையில் அறாபி பாஷா எனப்பட்டார். பிரித்தானியருக்கு எதிரான குழுவின் தலைவராகச் செயற்பட்ட இவரது இலங்கை வாசம் 1901 வரை நீடித்தது. அக்காலத்தில் அவர் அறபு மொழியின் செல்வாக்கை உயர்த்துவற்குப் பெரிதும் பாடுபட்டார். இந்த வசீகரமான பிரசாரமே சிலவேளை அறபுத் தமிழின் தேய்வுக்கு காலாய் அமைந்தது (Mahroof, 1993).

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டிலும் இலங்கை, தென்னிந்தியாவில் பல அறபுக் கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டன. இவை அறபு மொழியையும் இஸ்லாமிய மார்க்கக் கலைகளையும் மாணவர்களுக்கு வழங்கியது. அவர்கள் அக்கலைகளைக் கற்று, அக்கலாநிலையங்களில் இருந்து வெளியானதும் சமூகத்தில் கண்ணியமிக்க மார்க்க அறிஞர்களாக மதிக்கப்பட்டனர். இவர்கள் அறபுத் தமிழ் பற்றிய எந்த அறிவையும் பெறாததனால் அதுபற்றிய எந்தப் பிரக்ஞையும் அற்றவர்களாகவே அவர்கள் இருந்தனர். முஸ்லிம் சமூகத்திற்கு மார்க்கக் கல்வியைப் புகட்டுவதற்குரிய அடிப்படை ஊடகமாக இருந்த அறபுத் தமிழ் இவர்களின் தலைமுறையோடு மங்கி மறைந்து விட்டது.

உள்நாட்டில் இருந்த அறபுக் கலாசாலைகள் தவிர சுதேச மாணவர்கள் அறபு மொழியை கற்கை மொழியாகக் கொண்ட, அறபு நாடுகளில் உள்ள அறபுப் பல்கலைக் கழகங்களில் கற்றுத் தேர்ந்தனர். அதே வேளை உள்நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் அறபு மொழி உரிய இடத்தைப் பிடித்திருந்தது. இவர்கள் அறபுத் தமிழைப் புறக்கணித்தனர் என்பது மட்டுமன்றி அறபு மொழியை தத்தமது நாடுகளில் உயிர்ப்பிப்பதற்கும் வளர்ப்பதற்கும் பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்ளலாயினர். இதுவும் அறபுத் தமிழின் வீழ்ச்சிக்குத் துணையாக அமைந்தது.

அறபுத் தமிழில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் பேச்சு வழக்கிலுள்ள சாதாரணச் சொற்களாக இருந்ததாலும் இதனுடைய நடையும் பழங்காலத்ததாயிருந்ததாலும் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் முஸ்லிம் தமிழ் எழுத்தாளர்கள் இதனை வன்மையாகத் தாக்கினர்; இழித்தும் கூறினர் (அப்துர் றஹீம், 1976).

அரபி மத்ரஸாக்களில் இது வழக்கொழிந்ததால் தமிழ் நாட்டில் முஸ்லிம் பொதுமக்களிடத்திலும் பெண்களிடத்திலும் இந்நூற்களைப் படிக்கும் ஆர்வம் அற்றுப் போய்விட்டது (அப்துர் றஹீம், 1976). இதே நிலையை நாம் இலங்கையிலும் அவதானிக்கலாம்.

அரபுத் தமிழ் ஆதரவாளர்களே கூட பின்பு இஸ்லாமிய சமய நூல்களை சுத்தத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதை ஆதரிக்கத் தொடங்கிவிட்டார்கள். திருக்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்பு பற்றி இலங்கை ஏ. எம். ஏ. அஸீஸ் கூறும் போது, “சமீப காலத்தில் ஜனாப் அப்துல் ஹமீத் பாகவி அவர்களின் திருக்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்பு இஸ்லாமிய இலக்கிய உலகில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதுடன், முஸ்லிம் அல்லாதார் இடையே அவர்களுக்கும் திருக்குர்ஆனுக்கும் இடையே நேரடித் தொடர்பை ஏற்படுத்திவைக்க ஒரு சாதனமாகவும் அமைந்திருக்கும் தன்மையால் மிக மிகப் போற்றுதற்குரிய ஒன்றாகும்” என்கின்றார் (சாமி, 1994).

அறபுத் தமிழ் இன்று பொதுவாக வழக்கிழந்து விட்டது எனலாம். புதிதாக அறபுத் தமிழ் நூல்கள் எதுவும் எழுதப்படுவதில்லை. பழைய நூல்களைப் பேணிவரும் சிலரே இன்று அவற்றைப் பயன்படுத்துகின்றனர். முஸ்லிம்களின் எழுத்தறிவு வீதம் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளமையால் இன்று பெரும்பாலான முஸ்லிம் ஆண்களும் பெண்களும் தமிழிலேயே நூல்களை வாசித்து விளங்கும் ஆற்றல் உள்ளவர்களாக உள்ளனர். மதம் பற்றிய மனப்பான்மையும் இப்போது விரிவடைந்துள்ளது. குர்ஆன் மொழி பெயர்ப்புக்களுக்கு அது பற்றிய விரிவுரைகளும் விளக்கவுரைகளும் பொதுவான சமய நூல்களும் தமிழிலேயே வெளிவர வேண்டியது அவசியம் என்ற கொள்கை இப்போது வேரூன்றி விட்டது. அத்தகைய பிரசுரங்கள் தற்போது ஏராளமாக வெளிவந்துள்ளன. அத்தியாவசிய அறபுச் சொற்களைக் கையாள வேண்டும் என்ற வகையில் முஸ்லிம்களின் மொழிக் கொள்கையும் நெகிழ்ச்சியடைந்துள்ளது. சமீப காலத்தில் வெளிவந்துள்ள இஸ்லாமிய சமய சம்பந்தமான வெளியீடுகள் இதையே உணர்த்துகின்றன. இவ்வாறு அறபுத் தமிழின் தோற்றத்துக்குக் காரணமாய் இருந்த அம்சங்கள் நீங்கியமையே அதன் மறைவுக்குக் காரணமாயிற்று எனலாம் (நு.ஃ.மான்).

இன்றைய நவீன கல்வி முறையில் காணப்படும் பாடத்திட்டத்தின் சுமை காரணமாக தற்கால முஸ்லிம் பிள்ளைகளுக்கு அர்வி படிப்பதற்கு அவகாசம் இல்லாமலிருக்கிறது. சமய ரீதியாக சரியான அமைப்பில் வழிகாட்டப்படாத முஸ்லிம் எழுத்தாளர்களின் நியாயமற்ற ஆரவாரத்தினால் முஸ்லிம்களின் விலை மதிக்க முடியாத முதுசமான இந்த அழகிய மொழி கிட்டத்தட்ட மொத்தமாக இழக்கப்பட்டு விட்டது. இது ‘உலமா’க்கள் எனப்படுகின்றவர்களின் புறக்கணிப்பினாலும் கவனயீனத்தினாலும் ஏற்பட்டது. அவர்களும் கூட இம்மொழியை அறிந்து கொள்ளவில்லை (Shu’ayb, 1993).

இவ்வாறான ஒரு துரதிஷ்ட நிலை அறபுத் தமிழ் மொழிக்கு ஏற்பட்டாலும் கூட இலங்கையில் சில பகுதிகளில் இம்மொழியை அழியாமல் பாதுகாப்பதற்கான முனைப்புகள் இடம்பெற்று வருகின்றன. ஆரம்ப அல்குர்ஆன் மாணவர்களுக்கு அல்குர்ஆனைப் பாராயனம் செய்யப் பயிற்றுவிக்கும் போதும் அறபுக் கல்லூரிகளில் பாடத்திட்ட அமைப்பின் போதும் அறபுத் தமிழுக்கு போதிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருவதோடு பழைய அறபுத் தமிழ் நூல்களை டிஜிட்டல் வடிவில் மீள்பதிப்பாக்கம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலை அறபுத் தமிழ் விரும்பிகளுக்கு நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளது.

உசாத்துணைகள்:

1. அப்துற் றஹீம், (1976). *இஸ்லாமிய கலைக்களஞ்சியம்*, முதலாம் தொகுதி, சென்னை: யுனிவர்சல் பப்ளிஷர்ஸ் அன்ட் புக் செல்லர்ஸ்
2. அமீன், எம்.ஐ.எம்., (2000). *இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் 1870-1915*, ஹெம்மாதகம: அல்ஹஸனாத் பதிப்பகம்
3. உவைசு, ம.மு., (1983). *தமிழ் இலக்கிய அறபுச் சொல் அகராதி*, மதுரை: காமராசர் பலகலைக்கழகம்
4. சாமி, அ.மா., (1994). *தமிழில் இஸ்லாமிய இதழ்கள்*, சென்னை: நவமணி பதிப்பகம்
5. சுக்ரி, எம்.ஏ.எம்., (1997). அறபுத் தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம், *அம்சம் இன்டர்நெஷனல்,* கொழும்பு: அம்சம் இன்டர்நெஷனல் (பிரை) லிமிடட்
6. மணவை முஸ்தபா, (1991). *இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்*, சென்னை: மீரா பதிப்பகம்
7. நயினார் முஹம்மது, சி, *நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சிகள்*, “அறபுத் தமிழ்”
8. நஹியா, ஏ.எம்., (1991). *அஸீஸுன் தமிழும்*, நிந்தவூர்: இக்ர.். வெளியீட்டகம்
9. நு.்.மான், எம்.ஏ, அறபுத் தமிழ் - ஒரு விபரண ஆய்வு, *இன்கிலாப், Vol-4*|
10. ஜெமீல், எஸ்.எச்.எம். (Ed.) (1997). *அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள்*, கொழும்பு: முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கலாசார சமய அலுவல்கள் அமைச்சு
11. Mahroof, M.M.M., (1993). Arabic Tamil in South India and Sri Lanka: Language as Mimicry, *Islamic Studies*, 32-2, Islamabad: Islamic Research Institute, International Islamic University
12. Shu’ayb ‘Alim, (1993). *Arabic, Arwi and Persian in Serandib and Tamil Nadu*, Madras: Imamul Arus Trust

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
முனைவர் வ.மாலிக் P: 182-186

தமிழ் மொழியை அரபு மொழியுடன் ஒப்பிடுதல்

Comparition of Tamil and Arab Languages

முனைவர் வ.மாலிக்,
தமிழ்த்துறைப் பேராசிரியர்,
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி
ரஹ்மத்நகர், திருநெல்வேலி - 627011

Abstract:

Tamilkudi was the oldest village that appeared before the time when stone and earth appeared. Their first language is Tamil. The purpose of this article is to compare Tamil, which has such pride, with the older Arabic language. Development of Tamil Language, Development of Arabic Language A feature of the essay is to compare the grammatical literature in Tamil and Arabic.

Key words: Specialties of Tamil Language - Specialties of Arabic Language -Tamil grammar books -Arabic Grammar Texts-Copies of Tamil Law Books

ஆய்வுச்சுருக்கம்

கல்லும் மண்ணும் தோன்றும் காலத்திற்கு முன்பாகவே தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி. அவர்களின் முதல் மொழியாகத் திகழ்வது தமிழ் மொழியாகும். இத்தகு பெருமையைக் கொண்ட தமிழ்மொழியை பழமையான அரபு மொழியோடு ஒப்பிடுவது இந்த கட்டுரையின் நோக்கமாகும். தமிழ்மொழியின் வளர்ச்சி, அரபு மொழியின் வளர்ச்சி, தமிழ், அரபு மொழியில் உள்ள இலக்கண இலக்கியங்களை ஒப்பிட்டுக் காட்டுவது கட்டுரையின் அம்சமாகும்.

முன்னுரை

> **"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
> **இனிதாவது எங்கும் காணோம்" – சுப்பிரமணிய பாரதி.**

Classical Language என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக, தமிழில் செம்மொழி எனும் சொல்லைப் பயன்படுத்துவது வழக்கில் வந்துவிட்டது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மொழியியல் துறை பேராசிரியர் டாக்டர். ஜான் மைக்கல் அகஸ்தியன், ஒரு செம்மொழியாக பல்கலைக்கழகங்களில் போதிக்கப்படவல்ல அனைத்து அம்சங்களுமே தமிழ் மொழிக்கு உள்ளதென்று கூறினார்.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
முனைவர் வ.மாலிக் P: 182-186

தமிழ்மொழியின் தோற்றம்

தமிழின் தோற்றம், இலக்கிய வரலாற்றின் அடிப்படையில் நோக்கும் போது கி.மு.வைக் கொண்டுள்ளது. கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றைக் கொண்டுள்ளது தமிழ் மொழி. இதற்கு சான்று "தொன்மை மொழிகளின் முடிசூடா ராணி" என்ற சிறப்பாகும். செம்மொழிகளிலேயே அது தனித்த பல சிறப்புகள் கொண்டது. மற்ற எல்லா செம்மொழிகளுக்கும் முன்னதாக இலக்கண நூல்களை கொண்டது தமிழ்மொழி.

வரலாற்று அறிஞர் ஸ்காட் எலியட் தமது "இழந்த இலமூரியா" எனும் நூலில் மனித நாகரிகத்தின் தொட்டில் என மூரியாவைக் குறிப்பிடுகிறார். கிமு 5 ஆம் நூற்றாண்டில் பாபிலோனுக்கும் கிமு 7ஆம் நூற்றாண்டில் அசரிய நாட்டுக்கும், கிமு 9ஆம் நூற்றாண்டில் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கும் தமிழகத்தில் இருந்து பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட குறிப்புகள் தமிழில் உள்ளன. இவ்வாறு தமிழ்மொழியின் தோற்றம் பற்றி பல்வேறு கருத்துக்குள் நிலவுகின்றன.

இலக்கண இலக்கிய வளர்ச்சி

தமிழில் காலந்தோறும் புதிது புதிதாக இலக்கண நூல்களும் இலக்கியச் செல்வங்களும் தோற்றுவிக்கப்பெற்று அதன் வளம் தொடர்ந்து பெருகிக் கொண்டிருக்கிறது. தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், இலக்கண விளக்கம், முத்து வீரியம், யாப்பருங்கலம், தண்டியலங்காரம், மாறனலங்காரம் என மொழி இலக்கிய அமைப்புக்களை விவரிக்கின்ற இலக்கண நூல்கள் முழுமையாகவும் பகுதியாகவும் உள்ளது.

சங்கநூல்கள், நீதிநூல்கள், காப்பியநூல்கள், பக்தி நூல்கள், அறிவியல் தமிழ், உரைநடை, இக்காலத்தமிழ், இணையத்தமிழ் என காலத்திற்கேற்ப தமிழ் மொழியின் வளர்ச்சி புதிய புதிய பரிமாணங்களாகத் திகழ்கிறது. இத்தகையச் சிறப்பு மிக்கத் தமிழை அரபி மொழியோடு ஒப்பிடுவது சாலச்சிறந்தது.

அராபியமொழி தோற்றம்

அரேபியர்களின் தாய் மொழியாகவும், சுமார் 100 கோடி மக்களின் இரண்டாம் இயங்கு மொழியாகவும் அரபி விளங்குகிறது. பலரும் நினைப்பது போல அரபி எனப்படும் அரபுமொழி இசுலாமிய வரலாறு தொடங்கும். கி.பி. 622இல் தோன்றியது அல்ல. அரபி மொழிக்கு கிட்டதட்ட இரண்டாயிரம் ஆண்டு பாரம்பரியம் உண்டு என வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். கி.மு. 5ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த பாலைவன பாறைகளில் அராபிய எழுத்து வடிவங்கள் உள்ளன.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
முனைவர் வ.மாலிக் P: 182-186

இலக்கண - இலக்கியம்

அரபுமொழி தமிழைப் போலவே தூயமொழி அமைப்பையும் கூடவே பேச்சு வழக்கு, வட்டார வழக்கு கொண்டது. அரபி இடமிருந்து வலமாக அன்றி, வலமிருந்து இடமாக எழுதப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அராபிய மொழி மூன்றே உயிரெழுத்து வடிவங்களையும் 28 மெய்யெழுத்துக்களையும் கொண்டதென்று சொல்கிறார்கள். தொண்டை மற்றும் நாவின் இறுதியிலிருந்து கிளம்பும் ஒலி வடிவங்கள் கொண்டவை மற்ற சார்பெழுத்துக்கள் உலகின் கடினமாமன இலக்கண முறைகளில் ஒன்று அரபி மொழி இலக்கணம் என்று சொல்வார்கள்.

அரபு இலக்கணம், அரபு இலக்கியம், அரபிக்கவிதைகள், அரபி உரைநடை, தற்கால இலக்கியம், சூஃபி இலக்கியம், நாடோடி இலக்கியம், அரபி நாடகம், அரபு நாவல், அராபியச் சிறுகதைகள் என தமிழ் மொழி போலவே மிகப்பெரிய பரந்துப்பட்ட காலம் கொண்டது அரபு மொழியாகும்.

தமிழ் அராபிய இலக்கியங்கள் - ஓர் ஒப்பீடு

வருடம்

கி.மு.3ஆம் நூற்றாண்டு, கி.மு.500, கி.பி.100, கி.பி.500, கி.பி.600, கி.பி.900, கி.பி. 6ம் நூற்றாண்டு, கி.பி. 7ம் நூற்றாண்டு, 8ஆம் நூற்றாண்டு, கி.பி. 9ஆம் நூற்றாண்டு, கி.பி. 11ம் நூற்றாண்டு, 12ம் நூற்றாண்டு, கி.பி.15ம் நூற்றாண்டு, கி.பி. 17ம் நூற்றாண்டு, கி.பி.18ம் நூற்றாண்டு கி.பி. 19ம் நூற்றாண்டு, மற்றும் இந்த நூற்றாண்டு வரையிலும் உள்ள இலக்கிய இலக்கணங்களை நூற்றாண்டின் அடிப்படையில் அரபு இலக்கியத்தோடு ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது.

காலம்

சங்க காலம், சங்கம் மருவிய காலம், இருண்ட காலம், பல்லவர் காலம், சோழர்காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம் என காலத்தை அடிப்படையாகக் கொண்டும் தமிழ் இலக்கண இலக்கியங்களை அரபு இலக்கியத்தோடு ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது.

தமிழ்மொழியின் இலக்கண இலக்கியங்கள்

தொல்காபியம், சங்க இலக்கியம், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், (திருக்குறள் முதலான நீதி நூல்கள்), சிலப்பதிகாரம், மணிமேகலை, நாயன்மார் ஆழ்வார்களின் பக்திபாடல்கள், காரைக்கால் அம்மையார் பாடல்கள், முதல் மூவர் தேவாரம் - மாணிக்கவாசகர் – திருவாசகம், -ஞானமணி, இறைபணி களவியம், நாலாயிர திவ்வியப்பிரபந்தம், புறப்பொருள், வெண்பாமாலை -சீவகசிந்தாமணி, நந்திக்கலம்பகம், உலா நூல்கள், யாப்பருங்கலங்காரிகை, குண்டலகேசி, நளவெண்பா, கலிங்கத்துப்பரணி, பெரியபுராணம், கம்பராமாயணம் போன்ற காப்பியங்கள், தூது, குறவஞ்சி முதலான சிற்றிலக்கியங்கள், வில்லி பாரதம், சீராப்புராணம் தல புராண நூல்கள் பிள்ளைத்தமிழ், தாயுமானவர் பாடல்கள், சதகங்கள் தேம்பாவணி இரட்சணிய யாத்திரிகம் பிரதாப முதலியார் சரித்திரம், பெத்லகேம் குறவஞ்சி இராமனின் பாடல்கள் மனோன்மணீயம் தற்கால இலக்கியமான நாவல், சிறுகதை, நாடகம் மற்றும் இணையத்தமிழ் போன்றவை அரபு மொழியிலும் உள்ளது.

அரபு இலக்கண இலக்கிய நூல்கள்

மெசபடோமியாவின் அரபி எழுத்து வடிவங்கள் கொண்ட பாறை செய்திகள், பாலஸ்தீன அரபி மொழியிலிருந்து உபமொழியாக அரபியின் தோற்றம் எனும் வரலாற்றாளர் தம் கூற்று, திருக்குறளுக்கு முந்தைய அரபிக் கவிதைகள் வசனங்கள் தூதுப்பாடல்கள் இம்ரு சூல்-குலே போன்ற கவிகளின் நாடோடி காலம், புனித குரான் - முகம்மது நபிக்கு இறைவனால் அருளிச் செய்யப்படுதல், துருக்கியில் பெர்ஸிய இலக்கியத்தின் தோற்றம், கந்தாஸ் எனும் வகை பக்தி இசைப்பாடல்கள், கித்தாப்-அல் அகானி கவிதை நூல், உமர் இபுன் அபி-ரபியாவின் காதல் கவிதைகள், உம்மயாது பேரரசு கவிதைகளை ஆதரித்தல், அல் முத்தா நபியின் காலம் மற்றும் படைப்புகள், அபுல் அல் அல் மாரியின் தத்துவ நூல்கள், அராபிய இரவுகள் (கதை தொகுதி), அபாம் அல் அரபு பழங்குடியினரின் கதைகள் தொகுதி, இஸ்லாமிய வரலாற்று நூல்கள், சுஃபியிஸ இஸ்லாம் நூல்கள், அல்-த பாரியின் அன்னல்ஸ் உலக வரலாறு உலக நிகழ்வு கி.பி. 914 வரை தொகுக்கப்பட்டன. ஆனால் நூல் வெளிவந்தது 15ம் நூற்றாண்டில்தான், எகிப்திலிருந்து நவீனத்துவம் இசுலாமிய நுழைதல், அரசாட்சி நுணுக்கங்கள் (Principles of Government) முதலான நூல்கள்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
முனைவர் வ.மாலிக் P: 182-186

காஸிம் இமினின் தத்துவங்கள், நவீன கதை கவிதை நூல்கள், இஸ்லாமிய வரலாற்று நூல், நாக்யும் மாஃபவுஸ் உசெய்ன் ஹெய்க்கல் முகம்மது தாய்மூர் கலீல் கிப்ரான் போன்ற எழுத்துச் சிற்பிகளின் தோற்றம் மற்றும் அரபு நாடகம், அரபுக் கவிதை, அரபு இணையமொழி போன்றவை அரபு மொழியில் உள்ளது.

முடிவுரை

அரபி மொழியின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் தமிழ் மொழியோடு ஒப்பிடும் போது இரண்டு மொழிகளில் ஒரே ஒரு வேறுபாடு உள்ளது. தமிழ் ஒரு குறிப்பிட்ட மதத்தால் வளர்க்கப்பட்டதல்ல. ஒழுங்குமுறை மொழியும் அல்ல என்பதாகும்.

பயன்படுத்திய நூல்

1. இரா.நடராசன், செம்மொழிகள், ஸ்நேகா, 348, டிடிகே சாலை, இராயப்பேட்டை, சென்னை.
1. R.Nadarajan, Classical Language, Sneka, 348, DDK Salai, Rayapet, Chennai

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
முனைவர் மு.முகமது ரபீக் & முனைவர் அப்துல் ஹை P: 187-194

அரபு தமிழ்: தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி
Arabic Tamil: Origin, Development, Decline

முனைவர் மு. முகமது ரபீக் & முனைவர் அப்துல் ஹை
உதவி பேராசிரியர்கள், அரபிக் &இஸ்லாமிய துறை
பி. எஸ். அப்துர் ரஹ்மான் பல்கலை கழகம்,
வண்டலூர் , சென்னை.

Dr Mohamed Rafiq & Dr Abdul Hai
Asist Profs Arabic & Islamic studies
B.S.A University, Chennai.

ஆய்வுசுருக்கம்

தமிழ்நாடு மற்றும் இலங்கை முஸ்லிம்களின் பாரம்பரிய அடையாளங்களில் மிக முக்கிய பங்கை அரபு தமிழ் பெறுகிறது. பல நூற்றாண்டுகளாக இப்பகுதியிலுள்ள முஸ்லிம்கள் இம்மொழியை தங்களின் துணைமொழியாக பயன்படுத்தியுள்ளனர் செமிட்டிக் மொழியும், திராவிட மொழியும் கலந்ததன் மறு உருவமே இம்மொழி. அரபு தமிழே தனியாக ஒரு மொழியின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது மேலும் பல நூற்றாண்டுகளாக இம்மொழி மக்களுள் ஊடுருவி, தவிர்க்க முடியாத சக்தியாக திகழ்ந்துள்ளது. மேலும் யுனஸ்கோ (UNESCO) அரபு தமிழை உலக மொழிகளில் ஒன்றாக அங்கீகரித்துள்ளது, குறிப்பாக இது முஸ்லிம்களின் பிரத்யோக மொழியாக போனது இம்மொழியில் கலை அறிவியல் சார்ந்த பல்வேறு துறைகளில் அரியவகை நூல்கள் வெளியாயின,அத்துறைகளின் எண்ணிக்கை மட்டுமே 31யை கடக்கிறது, இதன் இலக்கிய நடையை முதல் முதலில் தோற்று வித்தவர் அமீர் வலி என்ற சூபி ஆவார், 8ம் நூற்றாண்டுக்கும் 19ம் நூற்றாண்டுக்குப் இடைப்பட்ட காலப்பகுதி அரபு தமிழின் பொற்காலமென கருதப்படுகிறது, 19ம் நூற்றாண்டின் இறுதிவரை அரபுதமிழ் ஓர் பெரும் சகாப்தத்தை உருவாக்கியது. அதன் பாரம்பரியம் தொன்றுதொட்டு தலைமுறை தலைமுறையாக கட்டுக்காக்கப்பட்டுவந்தது. நாடெங்கும் பரவியிருந்தது, இந்நிலையில் இம்மொழி படிப்படியாக பின்நோக்கி செல்லலானது.

Abstract

Arabic Tamil plays a very important role in the traditional identities of the Muslims of Tamil Nadu and Sri Lanka. For centuries Muslims in the region have used this language as their secondary language, it is a combination of Semitic and Dravidian languages. Arabic Tamil itself has gained recognition as a language in its own right, and over the centuries it has permeated the people and has become an inescapable force.

UNESCO has recognized Arabic Tamil as one of the world languages, especially since it became the exclusive language of Muslims, it's notable that the rare books in various fields related to art and science were published in this language, the number of these fields alone exceeds thirty one. The first person who sowed this literary style was a Sufi named Amir Vali.

The period between the nineteenth and twentieth centuries is considered to be the golden age of Arabic Tamil, and till the end of the 19th century, Arabic Tamil formed a great era. Its tradition has been touched and preserved from generation to generation. It was spread all over the country, but the language gradually went backwards.

Key words:

Arab tamil, a combination of Semitic and Dravidian languages, world languages, Amir Vali, secondary language.

முக்கிய சொற்கள்:

அரபு தமிழ், கலவைமொழி, மஃபர், ஹபீஸ் அமீர் வலி, முனைவர் தி.கா. ஷுஐபைப், காயல்பட்டிணம், கீழக்கரை.

அரபுதமிழ்:

அரபு தமிழ் அரபியர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையேயான கலாச்சார தொடர்பின் வெளிப்பாடேயன்றி வேறில்லை. அரபியில் (لسان الاروي) அர்வி மொழி என்று அழைக்கப்படுகிறது. இது எழுத்து வடிவில் அரபு மொழியிலும், ஒலி வடிவில் தமிழ் மொழியிலும் உருவகம் பெற்றதாகும். அரபு எழுத்துக்களை ஆங்கிலத்தில் Madarasa Mohammed Masjid என்று எழுதுவதுபோல்.

அரபுதமிழின் தோற்றம் :

அரபு தமிழ் தோன்றிய துல்லியமான காலத்தை சுட்டிக்காட்ட உறுதியான ஆதாரம் எதுவுமில்லை. ஆனால் ஹிஜ்ரி 8ம் நூற்றாண்டிலிருந்து பயன் பாட்டில் வந்ததாக சில அறிஞர் பெருமக்களின் கருத்துக்கள் தெரிவிக்கின்றன.

அரபு தமிழ் போன்ற கலவைமொழி முதன் முதலில் தமிழ்நாட்டில் உருவானதல்ல, மாறாக அரபு வங்காளத்தை முன்னோடியாக வைத்து உருவாக்கம் பெற்றது. ஆரம்ப காலத்தில் கிழக்கு ஆப்ரிக்க மக்கள் இஸ்லாத்தை தழுவிய சமயம் அவர்களின் தாய்மொழியான 'சுவாஹிலியை' அரபியில் எழுத ஆரம்பித்தார்கள். மேலும் மலாய் மொழி அந்நாட்டு மக்களுக்கு அரபு மொழி வடிவில் எழுதப்பட்டு 'ஜாவி' என்று. பெயரிடப்பட்டது.

முனைவர் ஹமீதுல்லாஹ் Introduction of Islam என்ற புத்தகத்தில் கூறியதாவது; ஆங்கில மொழி அரபு மொழி வடிவில் எழுதப்பட்டது, அரபு தமிழ் தமிழ்நாட்டிற்கு புதிய வரவன்று. மாறாக அது ஈடற்ற இஸ்லாம் கற்றுத்தந்த

அற்புதமான நெறிபாட்டின் வெளிப்பாடாகும். மேலும் கிழக்கிலிருந்து மேற்கு வரை பரவியுள்ள முஸ்லிம்கள் தனித்துவமான அரபிமொழி மீது கொண்ட அபரிவிதமான நேசத்தின் விளைவாகும்.

அரபு தமிழ் உருவான வரலாறுப் பற்றி உலமாக்களிடம் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. தமிழ்நாடு மற்றும் இலங்கை முஸ்லிம்களே வியாபார நோக்கத்திர்க்காக இந்த மொழியை நிறுவியதாக சிலர் கூறுகின்றனர். இன்னும் சிலர் அல்ஹபிஸ் சையத், அஹமத் ஷேக் ஹுசைன் மற்றும் பலர்: அரபியர்கள் தான் அரபு தமிழ் மொழியை முதன் முதலில் தமிழ்நாட்டில் தோற்று வித்ததாக கருதுகின்றனர்.

தனித்துவம் பெற்ற தனிமொழி:

அரபு தமிழே தனியாக ஒரு மொழியின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது. இக்கூற்றுக்கு வலுசேர்க்க உருது மற்றும் இந்தி மொழியை ஆதாரமாக முன் வைக்கிறார்கள், இவ்விருமொழிகளும் இந்தியாவின் முக்கிய மொழிகளில் இடம் பெற்றிருப்பதையும், அதே சமயம் இவ்விரண்டும் ஹிந்துஸ்தானி எனப்படும் புராதான மொழியிலிருந்து பிரிந்து தனி மொழியாக உருவெடுத்ததையும் ஆதாரமாக முன்வைக்கிறார்கள். இந்தியில் சமஸ்கிருத மொழியின் வார்த்தைகளும், உருது மொழியில் அரபு மற்றும் ஃபாரஸி வார்த்தைகளும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. இதுபோல் அரபு தமிழில் அரபி வார்த்தைகள் பரவலாக பங்குபெற்றுள்ளன. மேலும் யுனஸ்கோ (UNESCO) அரபு தமிழை உலக மொழிகளில் ஒன்றாக அங்கீகரித்துள்ளது.

மேலும் பல நூற்றாண்டுகளாக இம்மொழி மக்களுள் ஊடுருவி, தவிர்க்க முடியாத சக்தியாக திகழ்ந்துள்ளது. குறிப்பாக இது முஸ்லிம்களின் பிரத்யோக மொழியாக போனது, அதிலும் மஃபர் (கடற்கரை நகரங்களான) காயல்பட்டிணம், கீழக்கரை, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற நகர மக்களின் வாழ்வோடு ஒன்றன கலந்துவிட்டது.

அரபு தமிழ் 40 எழுத்துக்களை கொண்டது அதில் 28 அரபி எழுத்துக்களும் தமிழின் உச்சரிப்புக்கு ஏற்றாற்போல 12 அதிகப்படியான எழுத்துகளும் சேர்க்கப்பட்டிருக்கும். இவை அரபியில் தமிழ் உச்சரிப்புக்கு நெருக்கமான எழுத்துகளின் மேல் ஒன்றோ இரண்டோ அல்லது மூன்று நுக்தாகளை வைத்துஅமையபெற்றிருக்கும்.

தமிழ்பேசும் உலகிற்கு அரபு தமிழ் இலகுவானதாக அமைந்தது, ஏனெனில் இது 40 எழுத்துக்கள் மட்டுமே கொண்டது, ஆனால் தமிழ் மொழியோ 247 எழுத்துக்களை கொண்டது.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023

Since 1951

முனைவர் மு.முகமது ரபீக் & முனைவர் அப்துல் ஹை P: 187-194

அரபு மொழியல்லாத அதிகபடியான எழுதுக்கள்

Tamil Equivalent	Arwi Letter	English Equivalent	Pronounciation	Unicode
ச்ச	ڇ	chā	'chā' in 'chance'	0686
ட	ڊ	dā	'dā' in 'dawn'	068A
ட்ட	ڍ	tā	'tā' in 'top'	068D
ர	ڔ	Ra	'R' (soft ر)	0694
ழ	ۻ	'zha'	Unique to Arwi	06FB
ப	ڣ	pa	'pa' in 'pause'	06A3
ண	ڹ	nā	Unique to Arwi	06B9
ஞ	ݧ	gnā	Unique to Arwi	0767
ஒ	◌ٗ	o	'o' in 'pot'	0657
ள	ص	Ḷā	Strong L	Work in Progress to Encode these 4 characters
ங	ڠ	'nga'	'ng' in 'bang'	
க	ڬ	gā	'go' in 'gold'	
எ	◌ٖ	e	'e' in 'men'	

அரபு தமிழ் பங்காற்றிய துறைகள்

இம்மொழியில் கலை அறிவியல் சார்ந்த பல்வேறு துறைகளில் அரியவகை நூல்கள் வெளியாயின,அத்துறைகளின் எண்ணிக்கை மட்டுமே 31யை கடக்கிறது அத்துறைகள் பின் வருமாறு:

கட்டிட கலை, கணிதம், வானவியல், இஸ்லாமிய கொள்கைகள், சீராபுராணம், ஹதீஸ் விளக்கவுரை, அகராதி, நபிபுகழ் மாழை, துக்க அனுசரனை, காரணிகளும் அதன் வரலாறும், சொத்துரிமை, கதைகள், இஸ்லாமிய சட்டதிட்டங்கள், வரலாறு, தோட்டக்கலை, சூபியிஸம், தர்க்கவியல், மருத்துவம், முனாஜாத்,வசைபாடுதல், ஒழுக்கவியல், பாலியல் அறிவியல், உடற்பயிற்சி விளையாட்டு, தஃப்ஸீர், தஜ்வீத், பயண குறிப்புகள், யுத்த தந்திரங்கள், யோகாசணம், மொழி இலக்கியம் வரை. இதுவென்றி இன்னும் இதை சார்ந்த துறைகளில் பல்வேறு நூல்களும் எழுதப்பட்டுள்ளன. மிக குறுகிய காலத்திலே இம்மொழி தமிழகம் மற்றும் இலங்கை வாழ் மக்களின் அன்றாட பயன்பாட்டிற்கு வந்தது.

அரபு தமிழ் தோன்ற காரணம்:

இம்மொழி தோன்ற பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் இவை அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக உள்ளன. அரேபிய முஸ்லிம்கள் தென்னகத்தில் குடியேறிய போது, வணிகம் சார்ந்து அல்லது இஸ்லாமிய மார்க்கத்தை கற்று கொடுக்க தமிழ் மொழியுடன் அவர்கள் இணக்கமாவது அவசியமானது, எனவே தமிழை கற்றுக் கொண்டு அதை தங்களது அரபிஎழுத்துகளால் எழுத தொடங்கினார்கள். அரபுக்கும் தமிழுக்கும் இடையே வலுவான தொடர்பை கட்டமைத்தார்கள்,அதுவே அரபு தமிழானது.

இதை பறை சாற்றும் விதமாக Dr.Sulaiman umari அரபிகள் கோரமண்டல் கடற்கரை பகுதியில் வசிக்க துவங்கிய சமயம் தமிழ்மொழியை புரியமுடியவில்லை, காலவாக்கில் அவர்களுக்கு பேச்சு வழக்கு சாத்தியமானது. ஆனால் எழுத இயலவில்லை எனவே தமிழை அரபு எழுத்துக்களால் எழுத தொடங்கினர் இவ்வாறே அரபு தமிழ் உருவானது என்கிறார் ..

இக்கருத்தை டாக்டர் அசதுல்லா கான் (former HOD of History Dept. New College)ன் ஆய்வு கட்டுரை (Muslims connection with Tamil nadu) உறுதிப் படுத்துகிறது.

The muslims settled in various parts of the coastal regions of tamil nadu. These muslim settlements gradually developed and let to the formation of different mixed communities like labbais, marakayars, rawuthers, etc., the social interaction between the muslim settlers and the natives let to the growth of a common language called as Arab-Tamil.

சிந்திக்கத்தக்க காரணங்களில் ஒன்று அரபி மற்றும் இஸ்லாமிய வார்த்தைகளில் சில ஆழமான, தனித்துவ பொருள் கொண்டவை,அதனை வேறு எந்த மொழியிலும் மொழி பெயர்க்க இயலாது. உதாரணம்: அல்லாஹ், பரகத், தவ்ஃபீக், ஹஷ்ர், பர்ஸக், ஜன்னத், பர்ளு, ரிஸ்க், நிஃமத், ஸப்ர் அஸ்ஸலாமு அலைக்கும், இன்ஷா அல்லாஹ், மாஷா அல்லாஹ், etc... நாம் அன்றாட பயன்படுத்துவதுப் போல், இதற்காக தமிழக மற்றும் இலங்கை உலமாக்கள் பொது மக்களுக்கு இலகுவாக புரிய வேண்டும் என்ற நோக்கோடு இஸ்லாமிய சட்டதிட்டங்களை,அரபு தமிழில் வெளியிட்டார்கள் இதுவும் இம்மொழி உருவாக ஓர் காரணமென கூறப்படுகிறது.

மேலும் சிலர் அக்கால தமிழ் முஸ்லிம் பெண்கள் தமிழ் எழுத படிக்க தெரியாதவர்களாக இருந்தனர். ஆனால் அவர்கள் குர்ஆனுடன் கொண்ட தொடர்பால் அரபியை எழுத படிக்க தெரிந்து வைத்திருந்தனர். எனினும் அவர்களுக்கு

இஸ்லாமிய சட்ட திட்டங்களை அறிய முடியாதவர்களாய் இருந்தனர். எனவே தமிழக அறிஞர்கள் இவைகளை பெண்கள் இலகுவாக புரியும் படியான ஓர் மொழியை உருவாக்க முனைந்தார்கள்.

அரபு தமிழின் முன்னேற்றம்:

ஹாபிழ் அப்துர் ரஹ்மான் தனது ஆங்கில கட்டுரையில் முதன் முதலாக அரபு தமிழின் போங்கை முறைபடுத்தியவரைப் பற்றி இவ்வாறு குறுப்பிடுகிறார்.

Four hundred years ago, a particulars procedure and a new literary style was adopted by Amir Wali a sufi saint of Kayalpatnam. This new style has purified the Arab-Tamil to a large extend. Amir Wali was praised for his remarkable contribution to Arab-Tamil Literature. Method of Arab-Tamil writing and speaking though existed even before Amir Wali, but was not systematized one. It was purely a colloquial one Hafiz Amir Wali was first man to systematize it.

நானூறு ஆண்டுகளுக்கு முன்பு, காயல்பட்டினத்தைச் சேர்ந்த சூஃபி துறவியான அமீர் வலியால் ஒரு குறிப்பிட்ட நடைமுறை மற்றும் ஒரு புதிய இலக்கிய பாணி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த புதிய பாணி அரபு-தமிழை பெரிய அளவில் தூய்மைப்படுத்தியுள்ளது. அமீர் வலி அரபு-தமிழ் இலக்கியத்தில் அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்பிற்காக பாராட்டப்பட்டார். அரபு-தமிழ் எழுத்து மற்றும் பேசும் முறை அமீர் வலிக்கு முன்பே இருந்தபோதிலும் முறைப்படுத்தப்படவில்லை. இது முற்றிலும் பேச்சுவழக்கில் இருந்தது ஹபீஸ் அமீர் வலி தான் அதை முறைப்படுத்திய முதல்மனிதர்.

முனைவர் தி.கா. ஷுஐயைப் கூறுகின்றார்: கி.பி 15க்கும் 16க்கும் இடைப்பட்ட காலம்(1501-1575) தமிழ்நாடு முஸ்லிம்களுக்கு துயரமானதாக அமைந்ததது. பிரிட்டிஷர்கள் தங்களது அரக்கத்தனத்தை இஸ்லாத்திற்கும், இஸ்லாமியர்களுக்கும் எதிராக கட்டவிழ்த்தனர். இஸ்லாமிய மத அடையாளங்களையும், புத்தகங்களையும் அழித்தனர். குர்ஆன் பிரதிகளை கூட எரித்துவிட்டனர். இதனால் அந்நூற்றாண்டிலும் அதற்கு முன்பும் எழுதப்பட்ட அரபு தமிழ் புத்தகங்கள் பெற்று கொள்ள முடியவில்லை.

அரபு தமிழின் பொற்க்காலம்

8ம் நூற்றாண்டுக்கும் 19ம் நூற்றாண்டுக்குப் இடைப்பட்ட காலப்பகுதி அரபு தமிழின் பொற்காலமென கருதப்படுகிறது. இந்த நீண்ட இடைவெளியால் அரபுதமிழ் முஸ்லிம்களின் உள்ளத்தில் நீங்கா இடத்தை பெற்றது . எட்டுத்திக்கும் அதன் பயன்பாடு விரிந்தது. ஓலை சுவடிகள், கையெழுத்து பிரதிகள், அரபு தமிழில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள், விலை பட்டியல்கள், கணக்கு வரவேடுகள், குறிப்பேடுகள், உற்றார் உறவினர்கள், நண்பர்களுக்கு கடித தொடர்புகளிலும் கூட

அரபு தமிழையே பயன்படுத்தி வந்தனர். இம்மொழி முஸ்லிம்களின் தனி அடையாளமாக மாறிப்போனது.

இக்கால இடைவெளியில் தங்கள் குழந்தைகளுக்கு ஆர்வத்தோடு இம்மொழியை கற்று தந்த பெண்களின் பங்கும் மறக்க முடியாது. இவ்வாறே கீழக்கரை, காயல்பட்டினம், இலங்கை மக்களின் அளப்பரிய பங்கையும் மறுக்கலாகாது.

அரபுதமிழின் வீழ்ச்சி:

19ம் நூற்றாண்டின் இறுதிவரை அரபுதமிழ் ஓர் பெரும் சகாப்தத்தை உருவாக்கியது. அதன் பாரம்பரியம் தொன்றுதொட்டு தலைமுறை தலைமுறையாக கட்டுக்காக்கப்பட்டு வந்தது. நாடெங்கும் பரவியிருந்தது. தினசரி நாளேடுகள் மாத இதழ்கள் வெளியாயின. பல்லாயிரக்கணக்கான நூல்கள் அச்சிடப்பட்டும், மொழிப்பெயர்க்கப்பட்டும் வந்தன. இந்நிலையில் இம்மொழி படிப்படியாக பின்நோக்கி செல்லலானது.

வீழ்ச்சியின் காரணங்கள்:

1. அறிஞர் பெருமக்கள் இம்மொழியை வளர்க்கவும், பாதுகாக்கவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.
2. தமிழ் நாடு மற்றும் இலங்கையில் இஸ்லாமிய மதரஸாக்களின் பாடத்திட்டத்தில் அரபு தமிழ் புத்தகங்கள் இடம்பெறவில்லை.
3. தமிழ் தட்டச்சு எழுத்துக்களின் ஆதிக்கம் வேகமாக வளர்ந்தது.
4. இம்மொழியை வளர்த்த உலமாக்கள் உலகை விட்டு கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தார்கள்.
5. சில புதிய சிந்தனை வாதிகளின் கருத்தியலில் இஸ்லாமிய நூல்களை தமிழிலே தொகுப்பது. அரபுதமிழில் தொகுப்பதை விட இலகுவானது மற்றும் கால சேமிப்பு எனப்பட்டது.

மேற்கூறிய இக்காரணங்களால் அரபு தமிழ் பயன்பாட்டிலிருந்து மறையத்தொடங்கியது..

பரிந்துரை

மக்தப் மதரசாகளிலும் இஸ்லாமிய மதரசாகளிலும் அரபு தமிழை பாட திட்டதில் சேர்க்கலாம். குறிப்பாக நிஸ்வான் மதரசாகளில் இதை பயிற்று விக்கலாம். மேலும் பள்ளிவாசல்களில் அறிவிப்பு பலகைகளிலும் முஸ்லிம்களின் விஷேசங்களிலும் நிகழ்ச்சிகளிலும் அறிவிப்பு செய்ய அரபு தமிழை பயன் படுத்தலாம் அரபி தமிழ் நூல்களை பற்றி ஆய்வு மேற்கொள்ள முயற்சிக்கலாம்.

பழைய அரபு தமிழ் கையெழுத்து பிரதிகளை நவீன அச்சிடும் முறையில் மாற்றலாம்.

மூல நூல்கள்

- அரபு தமிழ் இலக்கியங்கள் ஓர் ஆய்வு P.M பீர் முகமது பாகவி,
- அரபு தமிழ் எங்கள் அன்பு தமிழ் ஏ.எம்.ஏ அஜீஸ் (கொழும்பு)1966
- சரண்திப் மற்றும் தமிழ்நாட்டில் அரபு, அர்வி மற்றும் பாரசீகம் டாக்டர் தைகா ஷுஅய்ப் ஆலிம்.
- தமிழகத்துடன் முஸ்லிம் தொடர்புகள்.
- தமிழ்நாட்டில் அரபு-தமிழ் மொழியின் தோற்றம் மற்றும் வளர்ச்சி.
- இணையதளத்தில் இருந்து (http;//en.wikipedia.org/wiki/Arwi)

REFENCES

- Arab Tamil Ilakkiyangal -Oru Aaivu P.M Peer Mohammad Baqawi,
- Arabu Tamil Engal Anbu Tamil A.M.A Aziz (Colombu)1966
- Arabic, Arwi And Persian in Sarandib And Tamil Nadu Dr Taika shu'ayb Alim.
- Muslim Contact With Tamilagam.
- Orgin and Development Of Arab-Tamil Language in Tamil Nadu.
- from the website (http;//en.wikipedia.org/wiki/Arwi)

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303   ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023

திருமதி சே.அ.கா.முத்து மொகுதூம் பாத்திமா P: 195-210

அரபுத்தமிழ் தோற்றமும், வளர்ச்சியும்

Origin and Development of Arabic Tamil

திருமதி சே.அ.கா.முத்து மொகுதூம் பாத்திமா
ஆலிமா முஅஸ்க்கரிய்யா., அப்சலுல் உலமா., எம்.ஏ., எம்.ஏ., எம்.ஃபில்.,
அரபுத் துறைத்தலைவர்,
வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
காயல்பட்டணம்

Mrs. S.A.K. Muthu Mohudoom Fathima
Alima Muaskariyyah.,Afzalul Ulama., M.A.,M.A.,M.Phil.,
Head - Department of Arabic
Wavoo Wajeeha Women`s College of Arts and Science
Kayalpatnam

ஆய்வுச் சுருக்கம்

மொழி என்பது எண்ணங்களை எடுத்துரைக்கும் ஒரு கருவி. அம்மொழி தனித்துத் தோன்றி செல்வாக்கு பெற்றமையும் உண்டு; இரண்டு மொழிகள் இணைந்த கூட்டுமொழியாக இருந்து மொழியினத்தில் பெருமை பெற்றதும் உண்டு. அவ்வகையில் கடல் வழியாக இந்தியா வந்து தென்தமிழகத்தில் குடியேறிய இசுலாமியர்கள் தமிழகத்தில் காலூன்றிய இடங்களில் எல்லாம் பண்பாலும், கலையாலும் தமிழுடன் இரண்டறக் கலந்து தன்தேச அரபுமொழியையும் வாழ்விடத்தின் தமிழ்மொழியையும் இணைத்து அரபுத்தமிழ் என்னும் கூட்டுமொழியை உருவாக்கினர். அந்த அரபுத் தமிழ் மொழியின் தோற்றம் பற்றிய செய்திகளையும் அம்மொழி பரவி இருந்த இடங்கள் பற்றியும் அரபுத் தமிழ் மொழியின் அமைப்பு, இலக்கண அமைப்பு போன்றவற்றையும் இந்த ஆய்வுக் கட்டுரையும் தொகுத்துரைக்கின்றது. அதோடு அரபுத் தமிழ் மொழியில் படைக்கப்பட்ட பல்துறை நூல்கள் பற்றிய சில செய்திகள், அரபுத் தமிழ் செழித்து வளர்ந்த காயல்பட்டணத்தின் வரலாறு அரபுத் தமிழில் அமைந்துள்ள விதம், குர்ஆனுக்கு அரபுத் தமிழில் விளக்கவுரை எழுதி பெருமக்கள், இவை போன்ற தகவல்களையும் இக்கட்டுரை தருகிறது. அரபுத் தமிழின் வீழ்ச்சி, அதை மீட்டெடுக்க செய்யப்படும் சில முயற்சிகள் இவற்றையும் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

காயல்பட்டணத்தில் சிறுமுயற்சியில் சேகரிக்கப்பட்ட நூல்பட்டியலையும் இக்கட்டுரை தன்னுள் கொண்டுள்ளது.

திறவுச்சொற்கள் : அரபுத் தமிழின் அமைப்பு - தோற்றம் - பரவியுள்ள இடங்கள் - படைப்புகள் பயன்பாடு - வீழ்ச்சி

ABSTRACT

Language is a tool for conveying ideas. The language is unique and influential; It has also gained pride in the language as a combination of two languages. Similarly, the Muslims who came to India by sea and settled in South-East Tamilnadu, having settled in Tamil Nadu, mixed with Tamil in both manners and art, and created a composite language called Arabic Tamil by combining the native Arabic language and the Tamil language of their habitat. This research paper summarizes the news about the origin of the Arabic Tamil language and the places where the language was spread and the structure and grammar of the Arabic Tamil language. In addition to this, this article also portrays some news about the versatile books written in Arabic Tamil language, depicts the history of Kayalpatnam, where Arabic Tamil flourished, is located in Arabic Tamil, people who wrote commentaries on the Quran in Arabic Tamil, etc. The decline of Arabic Tamil and a few attempts to revive it are recorded here. The present article also contains a bibliography collected on a small scale project in Kayalpatnam.

Keywords : Structure of Arabic Tamil - Origin - Distribution - Works - Usage – Decline

முன்னுரை

அரபு நாடுகளில் வழக்கிலிருந்த இலக்கிய வளமிக்க ஒரு மொழியாக காணப்பட்ட அரபுமொழியானது, இஸ்லாத்தின் தோற்றத்திற்கு பின் குர்ஆனின் மொழியாகப் பரிணமித்து இஸ்லாமிய பண்பாட்டின் வளர்ச்சியோடு இஸ்லாமிய கலைகளை உள்ளடக்கிய மொழியாக மாறியது. இந்த வகையில் இஸ்லாத்தின் பரவலோடு அதன் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் எல்லாம் பரவிய அரபு மொழியானது, அப்பகுதியில் ஏற்கனவே வழக்கிலிருந்த மொழிகளில் தனது செல்வாக்கைப் பதித்தது. அரபுமொழிக்கும், இஸ்லாம் பரவிய பகுதியில் நிலவிய மொழிகளுக்கும் இடையில் தொடர்பின் அடிப்படையில் தோன்றிய மொழிமாற்றங்கள், அதன் விளைவுகள் ஆகியவற்றின் பின்னணியில் அரபுத்தமிழின் தோற்றம் அதன் வளர்ச்சி, வீழ்ச்சி, மற்றும் தற்கால நிலை பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
திருமதி சே.அ.கா.முத்து மொகுதூம் பாத்திமா P: 195-210

அரபுத்தமிழ்

அரபு முஸ்லீம்கள் இந்த வணிக பண்பாட்டுத் தொடர்பின் போது இப்பிரதேசங்களில் வழக்கிலிருந்த தமிழ்மொழியை எதிர்கொண்டனர். நீண்டகால இலக்கிய வளர்ச்சியைக் கொண்ட இலக்கியப் பாரம்பரியமிக்க தமிழ்மொழிக்கும் அதேபோன்ற இலக்கிய வளமிக்க அரபுமொழிக்கும் இடையில் நிகழ்ந்த கலாசாரக் கூட்டிணைப்பின் விளைவே அரபுத்தமிழின் தோற்றமாகும்.

இஸ்லாம் தென் இந்தியாவில் தமிழ் பேசும் முஸ்லீம்கள் மத்தியில் பரவிய போது மதக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அரபுமொழி அவசியமானதை அறிந்து, அரபுமொழியை பயின்றனர். பின்னர் அரபுமொழியோடு தமிழ்மொழியைக் கலந்து தமிழ்சொற்களை அரபுமொழியில் பெயர்த்து பயன்படுத்தினர். இஸ்லாமிய கோட்பாடுகளுடனும் மதச்செயல்பாடுகளுடனும் தொடர்புடைய அரபுச்சொற்களை தமிழ்மொழியோடு இணைத்து பயன்படுத்தத் தொடங்கினர். இவ்வாறு அரபுமொழிக்கும், தமிழ்மொழிக்கும் இடையில் ஏற்பட்ட இணைப்பின் அடிப்படையில் அரபுத்தமிழ் என்றமொழி தோன்றி வளர ஆரம்பித்தது. இது ஒரு கூட்டுமொழி. தென்னிந்தியாவில் உருவாக்கப்பட்டு இலங்கையில் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு மொழி மரபே அரபுத்தமிழ் எனப்படுகின்றது.

அரபுத்தமிழின் தோற்றம்

அரபுத் தமிழ் தோன்றுவதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. தமிழ் மொழி அரபு மொழியில் உள்ள அனைத்து ஒலிகளும் இதில் இல்லை. எனவே இஸ்லாத்தின் அடிப்படைப் கொள்கைகளை தமிழ் முஸ்லீம்களுக்கு தமிழ் மொழியில் விளக்கும்போது, அதைத் தமிழ் மொழியில் மொழி பெயர்க்க கடினமாக இருந்திருக்கலாம். எனவே அவர்கள் அதே போன்ற அரபுச் சொற்களைப் பயன்படுத்த வேண்டியிருந்தது, அரபுத்தமிழ் இதற்கு வழிவகுத்தது. அரபுத்தமிழ் பயன்பாட்டிற்கு வந்த காலக்கட்டத்தை குறிப்பது மிகவும் கடினம் என்றாலும், தைக்கா ஷீஐப் ஆலிம் அவர்கள் 9ஆம் ஆண்டிலேயே தமிழ் முஸ்லீம்களால் பயன்படுத்தப்பட்டதாகக் கூறுகிறார்.[1]

அரபுத்தமிழின் நோக்கம்

அரபுத்தமிழ் ‘லிஸானுல்அர்வி’ ‘அர்விமொழி’ எனவும் அழைக்கப்படுகின்றது. அர்வி என்பது அரபு எழுத்துகளில் உள்ள தமிழ் எழுத்துகளைக் குறிக்கும் ஓர் எழுத்து மொழியாகும். குர்ஆன் மற்றும் பிற அரபு இலக்கியப் படைப்புகளை வாசிப்பதில் தமிழ் முஸ்லீம்கள் அரபிமொழியைக் கற்க ஓர் இணைப்பு மொழியாக செயல்படுவதே அர்வியின் நோக்கமாகும்.

அர்வி அல்லது அரபுத்தமிழின் அமைப்பு

அரபுத்தமிழில் தமிழ்மொழியின் இலக்கண அமைப்பு இருந்தாலும் அது அரபியில் எழுதப்பட்டு அரபுச்சொற்கள் பெருமளவு பயன்படுத்தப்பட்டன.

எழுத்துஅமைப்பு

அர்வி அல்லது அரபுத்தமிழ் எழுத்துகள் நாற்பதாகும். இவற்றில் இருபத்து எட்டு அரபி மொழியிலிருந்து வந்தவை. மேலும் பன்னிரண்டு எழுத்துக்கள் தமிழுக்கு ஒலியை வெளிப்படுத்த அரபு எழுத்துக்களை அனுமதிக்கும் எழுத்துக்குறி ஆகும். தமிழில் உள்ள ங, ழ ஆகிய எழுத்துக்களுக்கு வெவ்வேறான எழுத்து வடிவங்களை உருவாக்கியுள்ளனர்.[2]

இலக்கணஅமைப்பு

அரபுத்தமிழ் பெரும்பாலும் தமிழ்மொழியின் இலக்கணத்தை அடியொற்றியே அமைந்துள்ளன. அரபுத்தமிழில் பயன்படுத்தப்பட்டுள்ள அரபுச்சொற்கள் தமிழ்மொழியின் விகுதிகளை அடிப்படையாகக் கொண்டே பெரும்பாலும் அமையப்பெற்றுள்ளன.[3]

பன்மையை உணர்த்துவதற்கு அரபுச்சொற்களுடன் ‘கள்’ என்னும் பன்மை விகுதி பயன்படுத்தப்படுகின்றன.

ஆயத் - ஆயத்துகள்

மலக் – மலக்குகள்

குறைஷி – குறைஷிகள்

அரபு இயற்பெயர்கள் சிலவற்றைக் கௌரவமாகக் குறிப்பிட அப்பெயர்களுடன் ‘அர்’ என்னும் பலர்பால் விகுதியைப் பயன்படுத்துவதுமுண்டு.

அலி – அலியார்

ஹசன் – ஹசனார்

பன்மையை உணர்த்தும் மற்றுமொரு விகுதி ‘இயர்’ . அதுவும் அரபுச் சொற்களுடன் பயின்று வந்துள்ளது.

அஸ்காப் – அஸ்காபியர்

குறைஷி – குறைஷியர்

அஜமி – அஜமியர்

இவை போன்று ‘மார்’ விகுதி (அஸ்ஹாபிமார்) மற்றொன்று ‘தனம்’ விகுதி (முனாபிக்தனம்) போன்ற தமிழ் விகுதிகளும் அரபுத்தமிழில் அரபுச்சொற்களில் அமைந்துள்ளன.

மொழிஅமைப்பு

அரபுத்தமிழில் பயன்படுத்தப்படும் தமிழ்ச்சொற்கள் அசல் தமிழ்ச்சொற்களாக அமைந்துள்ளன.

செவி
நெருப்பு
நீர்
உமக்கு

சில இடங்களில் பேச்சுத்தமிழ் சொற்களும் காணப்படுகின்றன.

இறங்கிச்சுது (இறங்கியது)

ஆராகிலும் (யாராகிலும்)

ஒன்னாயிருக்கும் (ஒன்றாயிருக்கும்)

அரபுத்தமிழில் றகரம் டகரமாக மாறியிருப்பதைக் காணலாம்.

நின்டும் (நின்றும்)

என்டு (என்று)

என்டபடி (என்றபடி)

இதற்கு பேச்சு வழக்கில் நகரத்தை டகரமாக மாற்றி உச்சரிக்கும் முறையும் ஒரு காரணமாக இருக்கலாம்.

தமிழ்மொழியில் ட,ற,ர,ல என்ற எழுத்துக்கள் சொல்லின் முதலில் வருவதில்லை. அவை 'இ' என்ற வார்த்தையை முதலில் கொண்டு எழுதப்படுகின்றன. அவ்வாறு இல்லாமலும் எழுதமுடியும். அரபுத்தமிழிலும் ராஜாங்கம், ரண்டு என 'இ' எழுத்தை பயன்படுத்தாமல் வழங்கப்படுகின்றன.[4]

இவை போன்றே வாக்கிய அமைப்பு, புணர்ச்சி, பயனிலை ஆகியன அமைப்பதிலும் தமிழ்மொழி மரபை பெரும்பாலும் அரபுத்தமிழ் கொண்டுள்ளது. ஆயினும் அரபுத்தமிழ் மொழியில் நிறுத்தற் குறியோ, மேற்கோள் குறியோ, காற்புள்ளி, அரைப்புள்ளி குறியோ அமையவில்லை.

வணிகத் தொடர்பும் குடியேற்றங்களும்

இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்னரே அரபுதேசம் இந்தியாவின் மேற்குக்கரைப் பிரதேசம், அரபிகள் மஃபர் என அழைத்த கிழக்குக்கரைப் பிரதேசம், இலங்கைத்தீவு ஆகிய இடங்களுக்கிடையில் வணிகத்தொடர்பு கொண்டிருந்தது. இந்த வணிகத் தொடர்பு காரணமாக இப்பிரதேசங்களில் அரபுக் குடியேற்றங்கள் தோன்றின.

இஸ்லாம் தோற்றத்தின் பின்னர் இந்த வணிகத் தொடர்பானது கலாச்சார, பண்பாட்டு உறவாக வளர்ச்சி அடைந்தது. இந்தியாவின் மஃபர் பகுதியில் காயல்பட்டணம், கீழக்கரைப் பகுதிகளிலும் அரபுக்குடியேற்றங்கள் காணப்பட்டன.

அரபுத்தமிழ் பரவியுள்ள இடங்கள்

இந்தியாவில் காயல்பட்டணம், கீழக்கரை போன்ற தென்னிந்திய பகுதிகள், இலங்கை, இந்தோனேசியாவின் தலைநகரான ஜகர்தாவிலும் அரபித்தமிழ் பரவியிருந்துள்ளது. காயல்பட்டணத்தை சேர்ந்த உமர்வொலி (ஹிஜ்ரி 1216 - கி.பி1801) அவர்கள் சுமித்திரா தீவில் இசுலாமியப் பிரச்சாரப் பணியாற்றிய காரணத்தால் அரபுத்தமிழ் தாக்கம் அங்கும் பரவியிருந்தது.[5]

காயல்பட்டணத்தில் அரபுத்தமிழ்

எட்டாம் நூற்றாண்டில் காயல்பட்டணத்தில் அரபுத்தமிழ் அதிகமாக பயன்பாட்டில் இருந்தது எனக் கீழ்க்கரை குறிப்பிடுகிறது. காயல்பட்டணத்தில் அரபுத்தமிழ் உருவாக்கத்தில் அரபியர்களும் சமமான பங்கை ஆற்றினர். காயல்பட்டணத்தை சேர்ந்த துறவியான ஹாஃபிள் அமீர் வலி அப்பாவால் தத்தெடுக்கப்பட்டது. அவர் அரபுத் தமிழை கச்சிதமாக்கினார். இது முற்றிலும் பேச்சு வழக்கமாக இருந்தது. ஹாஃபிள் அமீர் வலி அதை முறைப்படுத்தினார்.[6]

அரபுத்தமிழ் இலக்கியங்களில் காயல்பட்டணம் உருவான வரலாறு

அரபுத்தமிழ் அதிகம் செழுமையாக வளர்ந்துதழைத்த ஊர்களில் மிக முக்கியமான ஊர் காயல்பட்டணம். அந்த காயல்பட்டணத்தின் வரலாற்றையும் அழகு அரபுத்தமிழில் எழுதியுள்ளனர். காயல்பட்டணம் பாளையத்து லெப்பை ஆலிம் அவர்கள் அரபுத் தமிழில் ‘காயல்பட்டணம் காரண சரித்திரம்’ என்னும் பெயரில் இயற்றியுள்ளார். அந்த புத்தகம் அவரது சகோதரர் பாளையம் ஹபீப் முகம்மது லெப்பை ஆலிம் அவர்களால் 1947 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டுள்ளது. இந்நூலில்

- காயல்பட்டணத்தில் வாழ்ந்த பெருமைக்குரிய பெரியோரின் பெயர்கள்.
- 1947ல் ஊரின் அமைப்பு.
- ஹிஜ்ரி 228ல் அரபு தேசத்தின் மிஸ்ரை அடுத்த கராபத்துல் குபுரா ஊரில் இருந்து ஐந்து கப்பல்கள் கிளம்பிய செய்தி.
- பக்கிரி வம்ச தலைவர் செய்யது முஹம்மது ஹல்ஜியுடன் வந்தவர்கள் எண்ணிக்கை.
- காயல்பட்டணம் உருவான வரலாறு.
- காயல்பட்டணம் அருகாமையில் உள்ள ஊர்களுக்கான பெயர்க்காரணம்.
- முதல் கப்பலில் வந்தவர்களுக்கு பாண்டிய மன்னன் ஆதரவு தந்து உதவிய செய்தி
- ஹிஜ்ரி 728ல் மிஸ்ரு காஹிராவிலிருந்து சுல்தான் ஜமாலுதீன் காயல் வந்த செய்தி
- ஹிஜ்ரி 737ல் சுல்தான் ஜமாலுதீன் பிரதானமான பெரிய பள்ளிவாசலைக் கட்ட ஆரம்பித்த செய்தி
- சுல்தான் ஜமாலுதீன் காலம் சென்றபின் அவரது புதல்வன் பிரபுசுல்தான் நூருதீன் பூர்த்தி செய்து கட்டிமுடித்த செய்தி

- சுல்தான் ஜமாலுதீன் சகோதரர் சகியுத்தி நைனா சிறிய பள்ளிகட்டிய செய்தி
- 1865ல் அரசாங்கத்தால் ரெஜிஸ்டர் ஆபிஸ் உருவானது.
- 1886.ல் யுனியன் போர்டு ஏற்பட்ட செய்தி
- 1924ல் ரயில்வே ஸ்டேசன் திறக்கப்பட்ட செய்தி

போன்ற செய்திகள் அந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.[7]

அரபுத்தமிழ் படைப்புகள்

அரபுத்தமிழில் பிறமொழிகளைப் போல் பல்வகை இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. உரைநடை, கவிதை, மொழிபெயர்புகள், இதழ்கள் வானியல், தத்துவம், வரலாறு, மருத்துவம், அகராதி போன்ற இலக்கியப் பிரிவுகளிலும் அரபுத்தமிழ் நூல்கள் படைக்கப்பட்டுள்ளன. அரபிலக்கிய பாரம்பரியமும், தமிழிலக்கியமும் இணைந்த ஒரு புதிய இலக்கிய பாரம்பரியத்தை அரபுத்தமிழ் தோற்றுவித்தது.

உரைநடை

தமிழ் இலக்கிய உருவங்களோடு கசீதா, தக்மீஸ், மர்ஸியா மத்ஹூ போன்ற இலக்கிய படைப்புகள் அரபுத்தமிழில் காணப்படுகின்றன. அரபுத்தமிழின் கம்பீரமும் தமிழின்மென்மையும் இணைந்த சக்தியும் உயிரோட்டமும் மிக்க உரைநடையாக அரபுத்தமிழ் உரைநடை அமைந்தது.

கவிதை இலக்கியம்

அரபுத்தமிழ் தப்ஸீர், ஹதீஃத், ஃபிக்ஹ், அகாயித், தஸவ்வுப் போன்ற இஸ்லாமியக் கலைகள் சார்ந்த நூல்கள் கவிதை நடையில் எழுதப்பட்டன.

அரபுத்தமிழ் அகராதி

வானியல், தத்துவம், வரலாறு, மருத்துவம், போன்ற கலைகளுடன் தொடர்புடைய நூல்களும் எழுதப்பட்டன. அந்நூல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களின் விளக்கங்களைக் கொண்ட அரபுத்தமிழ் அகராதிகளும் தொகுக்கப்பட்டன. 1930களில் வெளியிட்ட நான்கு அர்வி அகராதிகள் உள்ளன.[8]

மொழிபெயர்ப்புகள்

அரபுமொழியில் காணப்படும் பல்வேறு இசுலாமியக் கலைகளைத் தழுவிய நூல்கள் அரபுத்தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன.

- இமாம் பைய்ஹகி(ரஹ்) எழுதிய ‘கல்ஃபுல் ஈமான்’ ஜமாலுத்தீன் ஆலிம் அவர்களால் அரபுத்தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.
- மிஷ்காதுல் மஸாஃபிஹ் (புகழ்பெற்ற ஹதீஃத் தொகுப்பு) ஹாஃபிஸ் அப்துர் ரஹ்மான் (ஹிஜ்ரி 1331) அவர்களால் “மின்ஹாதில் மஸாஃபிஹ் ஃபீ தர்ஜமத்தி மிஷ்காதில் மஸாபிஹ் என்ற பெயரில் அரபுத்தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.
- இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் ‘இன்ஸானுல் காமில்’ உட்பட எண்ணற்ற மூலநூல்கள் அரபியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டன.
- பைபிள் அரபுத்தழிழில் மொழிபெயர்க்கப்பட்டது.
- ஷாம் ஷிஹாபுத்தீன் அவர்கள் 1119 ஹதீஃத்களை இரண்டடியாய் கொண்ட செய்யுள் அமைப்பில் மொழிபெயர்த்து ‘பெரிய ஹதீஃத் மாலை’ என்றும் 118 ஹதீஃத்களை மொழிபெயர்த்து ‘சின்ன ஹதீஃத் மாலை’ என்றும் பெயரிட்டுத் தொகுத்தார்கள்.[9]

அரபுத்தமிழ் குர்ஆன்

அரபுத்தமிழில் எழுந்த தஃப்ஸீர்களின் முன்னோடியாக கருதப்படும் இலங்கையைச் சேர்ந்த ஷெய்கு முஸ்தபா அவர்கள் பத்ஹீர் ரஹ்மான் ஃபீ தர்ஜமத் தஃப்ஸீரில் குர்ஆன் என்ற பெயரில் அரபுத்தழிழில் இயற்றிய தஃப்ஸீர் நான்கு பாகங்களில் ஹிஜ்ரி1291 (கி.பி.1874)இல் வெளியிடப்பட்டது.[10]

காயல்பட்டணத்தைச் சேர்ந்த ஹபீப் முஹம்மத் ஆலீம் அவர்கள் ’புதூஹாதுர் ரஹ்மானியா ஃபீ தஃப்ஸீரி கலாமிர் ரப்பானியா என்ற பெயரில் அரபுத்தமிழில் குர்ஆன் விரிவுரை நூலை எழுதியுள்ளார் அந்நூல் ஹிஜ்ரி1297 (கி.பி 1879) இல் பம்பாயில் வெளியிடப்பட்டது.[11]

இதழ்கள்

1870ம் ஆண்டு சென்னையிலிருந்து ‘அஜாயிபுள் அக்பர்’ (அற்புதச் செய்திகள்) என்ற பெயரில் அரபுத்தமிழில் வாரஇதழ் வெளிவந்தது. இலங்கையில் 1889, 1890

ஆம் ஆண்டுகளுக்கிடையே 'கவ்புர் ரான் அன் கல்பில் ஜான் என்னும் பெயரில் அரபுத்தமிழ் பத்திரிக்கை ஒன்று வெளிவந்தது.[12]

புதின இலக்கியம்

இமாமுல் அரூஸ் என அழைக்கப்படும் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் கொழும்பு ஆலிம் என்னும் பெயர்களையுடைய அஷ்ஷெய்கு செய்யித் முஹம்மத் ஆலிம் அவர்கள் மதீனதுந் நுஹாஸ் என்ற பெயரில் அரபுத்தமிழில் ஒரு நாவல் எழுதியுள்ளார். அந்நாவலை ஹிஜ்ரி 1318 (கி.பி.1900) ஆம் ஆண்டில் முஹம்மத் சுலைமான் என்பவரால் இலங்கையில் வெளியிடப்பட்டது.[13]

1882ல் 174 பக்கங்கள் கொண்ட 'ஹகீகத்துல் இன்சான்' என்ற பெயரில் ரங்கூனில் ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது. மேலும் மூன்று புத்தகங்கள் பர்மாவில் மொஹ்மெய்ன் அக்யாப் என்பவர் எழுதி வெளியிட்டார்.[14]

ஹாலந்தில் உள்ள லைடன் பல்கலைக்கழகத்தில் பல அரபுத்தமிழ் புத்தகங்கள் எழுதப்பட்டன. லண்டனில் உள்ள இந்திய அலுவலக நூலகத்தில் 60 அரபுத்தமிழ் புத்தகங்கள் உள்ளன.[15]

அரபுத்தழில் பிறநூல்கள்

செய்யித் முஹம்மத் ஆலீம் அவர்கள் சிறுவர்களுக்கென சன்மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு பல நூல்களை அரபுத்தமிழில் எழுதியுள்ளார்கள். அவற்றுள் 'துஹ்ஃபதுல் அத்ஃபால்' 'மின்ஹாதுல் அத்ஃபால்' ஆகிய இரண்டு நூல்களும் குறிப்பிடத்தக்கன.[16]

அரபுத்தமிழில் 'தஸவ்வுப்' என்னும் இஸ்லாமிய ஆன்மீகவியல் பற்றி எழுதப்பட்ட நூல்களுள் சித்தி லெப்பை அவர்கள் எழுதிய 'அஸ்ராருல் ஆலம்' சிறப்பிடம் பெறுகின்றது.[17]

நூர்நாமா (முஹம்மது நபியின் வாழ்க்கை வரலாறு) சிம்ட்- உல்-சிபியான் (இளைஞர்களுக்கான ஞானத்தின் முத்துக்கள்), யா சையத் மாலை (நபியைப் புகழ்ந்து பாடும் பாடல்கள்) மற்றும் பெண் புத்தி மாலை ஆகியனவும் அரபுத்தமிழ் இலக்கியங்களில் சிறப்பிடம் பெறுகின்றன.[18]

மெட்ராஸ் ஆர்கைவ்ஸ் நூலகத்தில் பராமரிக்கப்படும் பட்டியல்களின் படி 1890-1915 வரையிலான 3000 அரபுத்தமிழ் புத்தகங்கள் பல்வேறு பாடங்களில் உள்ளன என்கிறார் சென்னை புதிய கல்லூரியின் பேராசிரியர் டாக்டர் கே.எம். அஹமதுசுபைர்.[19] அரபுத்தமிழின் பயன்பாடு

- அரபுத்தமிழ் சுதந்திரத்திற்கு முந்தைய இந்தியாவில் தமிழ் முஸ்லீம் சமூகத்தில் ஒரு பெரிய எழுத்தறிவு இயக்கத்தை தூண்டியது.
- பெண்கல்வி, மருத்துவம் மற்றும் அரசியலில் முக்கிய பங்கு வகிக்க இம்மொழியைப் பயன்படுத்தினர்.
- திருமணம் போன்ற பெரும்பாலான சமூக நிகழ்வுகளில் அரபுத்தமிழில் அழைப்பிதழ்கள் வழங்கப்பட்டன.
- பிரார்த்தனைப் பாடல்கள் மற்றும் நபியைப் போற்றும் பாடல்கள் இசுலாமிய நாட்டுப்புற மரபுடன் அரபுத்தமிழில் பதிவு செய்யப்பட்டுள்ளன.[20]

அரபுத்தமிழின்வீழ்ச்சி

19வது நூற்றாண்டின் தொடக்கத்தில், காலனித்துவ வாதிகள் மக்களைக் கண்டறிந்து குழுக்களாக வகைப்படுத்துவதற்காக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைமுறையைப் பயன்படுத்தினர். அவ்வாறு செய்யும்போது, காலனித்துவ வாதிகள் வட இந்தியர் அல்லது உருது முஸ்லீம்களை ‘உண்மையான’ அல்லது ‘தூய்மையான’ முஸ்லீம்கள் என்றும், தமிழக முஸ்லீம்கள் ‘தாழ்ந்த மதம் மாறியவர்கள்’ என்றும் பேசுகிறார்கள் (பேலி, 1992 மற்றும் மெகபெர்சன்,2010). 20களின் முற்பகுதியில், திராவிட இயக்கம் வேகம் பெற்றபோது, தமிழ் முஸ்லீம்கள் அதன் தாக்கத்தால் பாதிக்கப்பட்டனர். தமிழ் முஸ்லீம்களும் திராவிடர்களாக இருந்தனர். அவர்கள் திராவிட இயக்கத்துடன் தங்களை அடையாளப்படுத்தத் தொடங்கினர், அதன் விளைவாக அவர்கள் தமிழ் மொழியை நோக்கி நகர்ந்தனர். தமிழ் முஸ்லிம்களின் அடையாளத்தை மாற்றிய காலனித்துவ காலத்தில் ஏற்பட்ட சில மாற்றங்கள் இவை. இந்த மாற்றத்தில் அவர்கள் காலனித்துவ நிர்வாகத்தின் வகைப்பாடுகளுக்குள் பொருந்துவதற்காக, அரபுத்தமிழ்/அர்வி என்ற அடையாளக் குறிகளில் ஒன்றை இழக்க வேண்டியிருந்தது. அச்சு தொழில்நுட்பத்தின் அறிமுகம், மொழிகளின் தரப்படுத்தல் போன்ற பிற நவீன முன்னேற்றங்கள் அரபுத்தமிழ் அறிவின்

வீழ்ச்சிக்கும் பங்களித்தது, இறுதியில் அரபுத்தமிழ் தமிழ் முஸ்லீம்கள் மத்தியில் அதன் முக்கியத்துவத்தை இழந்தது. ஆரம்பநிலைக்கு அரபு மொழியைக் கற்பிப்பதற்காக இது அடிப்படை புத்தகங்களில் பயன்படுத்தப்படுகிறது. அரபுத்தமிழ்/அர்வி என அடையாளப்படுத்தப் படாவிட்டாலும், அரபு என்றே அறியப்படுகிறது.[21]

- ❖ இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு அரபுத்தழிழ் கிட்டத்தட்ட எல்லா வாழ்க்கைத் துறையிலும் ஆதிக்கத்தை இழக்கத் தொடங்கியது.
- ❖ தகுதியான கையெழுத்து எழுதுபவர்கள் கிடைக்காததால் பெரும்பாலான அச்சுப்பொறி அச்சகங்கள் அரபுத்தமிழ் புத்தகங்கள் வெளியிடுவதை நிறுத்திவிட்டன.
- ❖ அரபுத்தமிழ் மொழியில் நிறுத்தற்குறி, காற்புள்ளி, அரைப்புள்ளி போன்ற குறிகள் இல்லாததால் வாசிப்பதற்கு சிரமமாக இருப்பதுவும் இம்மொழி வீழ்ச்சியடைய ஒருகாரணமாக இருக்கலாம்.
- ❖ மாநிலம் முழுவதும் உள்ள பாடசாலைகளில் அரபிமொழியை போதிப்பதனால் அரபுத்தமிழ் மொழியின் அவசியம் குறைந்து விட்டது.

அரபுத்தமிழ் இலக்கியங்களை மீட்டெடுக்கும் முயற்சிகள்

அரபுத்தமிழ் இலக்கியம் தமிழ்பேசும் முஸ்லீம்களின் மிகப்பெருமதி வாய்ந்த ஒரு கலாசார கருவூலமாகும். ஆனால் இன்று இம்மொழி வழக்கொழிந்து, அதில் படைக்கப்பட்ட நூல்கள் பல அழிந்துவிடும் நிலையில் உள்ளன. அந்நூல்களைத் திரட்டி பாதுகாக்க வேண்டும்.

பல அமைப்புகள் அம்முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இலங்கையில் அமைந்துள்ள நளீமிய்யா பல்கலைக்கழகம், அரபுத்தமிழ்/அர்வியில் எழுதப்பட்ட படைப்புகளை சேகரித்து வகைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. காயல்பட்டணத்தில் அரபுத்தமிழ் நூல்களை பாதுபாக்க காப்பகம் அமைக்க திட்டமுள்ளது. வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் செய்யப்பட்ட துளி முயற்சியில் 21 அரபுத்தமிழ் நூல்கள் திரட்டப்பட்டுள்ளது. அதன்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இது போன்று பலரும் முயன்றால் ஆயிரத்துக்கு மேற்பட்ட நூல்களை திரட்ட முடியும்.

முடிவுரை

உலகம் முழுவதும் உள்ள மொழிகளோடு தனது மொழியினை இணைத்துக் கொண்டு தழைத்து வளர்ந்த அரபு மொழியின் தாக்கத்தினை இன்றும் பல மொழிகளால் காண முடியும். அது போன்றே தமிழ் முஸ்லீம்களின் சிறப்பு மொழியான அரபுத் தமிழ் மொழியாக இருந்து பிற மொழிகளை போன்று பல்வேறு இலக்கிய வளங்களைக் கொண்டதாக 19ஆம் நூற்றாண்டில் அம்மொழி தமிழ் முஸ்லீம்களிடம் கல்வி வளர்ச்சியையும் ஏற்படுத்தி, மார்க்க நெறிமுறைகளை எடுத்துரைக்கும் கருவியாக செயல்பட்டுள்ளது. இம்மொழியில் புலமை மிக்க பலர் காயல்பட்டணத்தில் இருந்துள்ளனர் என்பதை அவ்வூரில் கிடைக்கும் அரபுத் தமிழ் நூல்கள் வழி அறியலாம் . இத்தனை சிறப்புடைய ஆற்றல் மிக்க மொழியை மீட்டெடுத்து பாதுகாக்க வேண்டும் என்பது தமிழ் முஸ்லீம்கள் மட்டுமன்று மொழி ஆர்வலர்களின் அவாவும் அதுவே.

காயல்பட்டணத்தில் கிடைக்கப்பெற்ற அரபுத்தமிழ் நூல்கள்

வ. எண்	தலைப்பு	எழுதியவர்
1.	சலாத்துல் அர்கான் மாலை தக்கஷுருத்	ஷாம் நெய்னா லெப்பை ஆலிம் சாஹிபு - காயல்பட்டணம்
2.	அஹ்காமுல் முஸ்லிமீனு அஷ் ஷாஃபிய்யா	
3.	முஹ்யித்தீன் முனாஜத்தும் காஜா பன்தே நவாஜ் முனாஜாத்தும்	
4.	முஹ்யித்தீன் மாலை ஷாஹுல் ஹமீது மாலை புஹாரி மாலை	
5.	மஜ்லிஸ் சலவாத்	அல்ஹாஜ் குளம் அஹ்மது முஹியத்தீன் ஆலிம் – காயல்பட்டணம்.
6.	மஜ்முவுல் ஜவாஹிரி	அஹ்மது மஹ்தூம் முகம்மது புலவர் காயல்பட்டணம்.
7	மஆனி (அரபு- தமிழ்)	
8	அல் முனாஜாத்துல் பாத்திமிய்யா வ வஸிலத்தில் மர்ழிய்யா	ஆலிம், அல்ஹாஜ் ஷெய்கு அப்துல் காதிரி அலவி மகன் அல்ஆலிம்,

		அல்ஹாஜ் முஹம்மது அப்துல்லாஹ். கொழும்பு – மௌலவி அஷ்ஷெய்கு அப்துர் ரஹ்மான் ,இப்னு ஹக்கீமி மீரான் லெப்பை
9	தொழுகை அடவு	அல் ஆலிமுல் பாலில் ஷிஹாப்தீன் ஷாம் நெய்னா லெப்பை ஆலிம் - காயல்பட்டணம்
10	தலை பாத்திஹா	அல் ஆலிமுல் பாலில் ஷிஹாப்தீன் ஷாம் நெய்னா லெப்பை ஆலிம் - காயல்பட்டணம்
11	சில்சிலத்துல் முஹம்மதிய்யா மஅ தலாதிலி சாதாத்திய்யா	
12	சலாவத்துல் ஆலிய்யா	ஜெய்னுல் ஆப்தின் புலவர் அவர்கள் மகள் ஆயிஷா பீவியாள் வெளியிடப்பட்டது - காயல்பட்டணம்
13	சலவாத்தின் பைத்துகள்	அல் ஆலிம் அல் பாஹிமி முஹம்மது லெப்பை மகன் முஹம்மது சதக்கத்துல்லா காதிய்யில் காஹிரிய்யி
14	மின்ஹத்துல் அத்பால் லி துஹ்பலு ஜாதத்தில் அஃமால்	மௌலானா மௌலவி கொழும்பு ஆலிம் சாஹிபு
15	காயல்பட்டணம் காரண சரித்திரம்	பாளையம் ஹபீப் முஹம்மது லெப்பை ஆலிம் – காயல்பட்டணம்
16	ராத்திபத்துல் ரஹ்மனிய்யா பி மஹ்ழரத்தில் சைலானிய்யா ராராட்டு (தாலாட்டு)	மௌலவி முஹம்மது அப்துர் ரஹ்மான் மௌலானா.
17	நூர் நாமா	
18	ஸலாத்துல் மாஜ்மூஅத்	

19	பத்ரு மாலை	அல் ஆலிமுல் பாலில் ஷிஹாப்தீன் ஷாம் நெய்னா லெப்பை ஆலிம் - காயல்பட்டணம்
20	ரஸீல் மாலை மீரான் மாலை நாகை மணி மாலை	அல் ஆலிமுல் பாலில் ஷிஹாப்தீன் ஷாம் நெய்னா லெப்பை ஆலிம் - காயல்பட்டணம்
21	மௌலிது ஷெய்கு தாவுது (வலியுல்லாஹ்)	அல்ஹாஜ் முகம்மது பாஜீல் அஸ்ஹப்

அடிக்குறிப்பு

1. அரபுத்தமிழ்/அர்வி தமிழ் முஸ்லிம்களின் அடையாளம்.
   Identity of Arabic Tamil/Arvi Tamil Muslims
2. அரபுத் தமிழும் மொழி மரபும் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு 2016 ஆய்வுப் பொன்விழா, சிறப்புமலர்., பக்கம் 111
   Arabic Tamil and Linguistic Tradition World Islamic Tamil Literature Conference 2016 Study Golden Festival, Special.,Page 111
3. அரபுத் தமிழும் மொழி மரபும் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு 2016 ஆய்வுப் பொன்விழா, சிறப்புமலர்., பக்கம் 112
   Arabic Tamil and Linguistic Tradition World Islamic Tamil Literature Conference 2016 Study Golden Festival, Special., Page 112
4. அரபுத் தமிழும் மொழி மரபும் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு 2016 ஆய்வுப் பொன்விழா, சிறப்புமலர்., பக்கம் 116.
   Arabic Tamil and Linguistic Tradition World Islamic Tamil Literature Conference 2016 Study Golden Festival, Special., Page 116
5. அரபுத் தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்
   Cultural heritage of Arabic Tamil
6. அரபுத் தமிழின் எழுச்சி வலையொலி
   The rise of Arabic Tamil
7. காயல்பட்டணம் காரண சரித்திரம் - காயல்பட்டணம் பாளையத்து லெப்பை ஆலிம்
   Kayalpatnam Causal History - Kayalpatnam Palayathu Lebbai Aalim
8. அரபுத் தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்
   Cultural heritage of Arabic Tamil
9. அரபுத்தமிழின் பண்பாட்டுப்பாரம்பரியம்
   Cultural heritage of Arabic Tamil
10. அரபுத்தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்

Cultural heritage of Arabic Tamil

11. அரபுத்தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்
Cultural heritage of Arabic Tamil
12. அரபுத்தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்
Cultural heritage of Arabic Tamil
13. அரபுத்தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்
Cultural heritage of Arabic Tamil
14. அரபுத்தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்
Cultural heritage of Arabic Tamil
15. அரபுத்தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்
Cultural heritage of Arabic Tamil
16. அரபுத்தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்
Cultural heritage of Arabic Tamil
17. அரபுத்தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்
Cultural heritage of Arabic Tamil
18 . மறக்கப்பட்ட குலதெய்வம்
A forgotten heirloom
19. மறக்கப்பட்ட குலதெய்வம்
A forgotten heirloom
20. அரபுத்தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்
Cultural heritage of Arabic Tamil
21. அரபுத்தமிழ்/அர்வி தமிழ் முஸ்லிம்களின் அடையாளம்
Identity of Arabic Tamil/Arvi Tamil Muslims

துணைநின்ற நூல்கள் – கட்டுரைகள்

1. World Islamic Tamil Literature Conference 2016, Golden Festival of Studies (1966- 2016) Special Flower, Edition – November 2016, ISBN 978-955-7272-01-6
2. Kalanithi Shukri – Cultural heritage of Arabic Tamil Palichkahatowita. blogspot.com 2011- December 15, Thursday
3. NAHLA Nainar – A forgotten heirloom 2019 – May 24
4. Dr. K.M.A. Ahamed Zubair – The Rise and Decline of Arabu – Tamil Language for Tamil Muslims IIUC Studies ISSN 1813- 7733, Vol.10 &11, December -2014 (P263 -282)

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
திரு அ.முஹம்மது அபூதாஹிர் P: 211-219

அரபுத்தமிழ் - உருவாகியதும் சருகாகியதும்!

Growth and Decline of Arab Tamil

அ. முஹம்மது அபூதாஹிர்,

உதவிப் பேராசிரியர், அரபித்துறை , ஜமால் முகமது கல்லூரி, திருச்சி-20

Abstract

This article deals with the birth of Arabic Tamil, its specialty, Arabic Tamil books, the way it spread to the people, the way it became known as Arvi, the influence Arvi gained on the people, and the way it declined later.

Key Words : Arabic -Tamil, Specialitations, Growth, Decline.

ஆய்வுச் சுருக்கம்

அரபுத் தமிழின் பிறப்பு, அதன் சிறப்பு, அரபுத் தமிழ் நூல்கள், அது மக்களிடம் பரவிய விதம், அர்வி எனப் பெயர்பெற்ற முறை, மக்களிடம் அர்வி பெற்ற செல்வாக்கு, பின்னர் வீழ்ச்சியடைந்த விதம் ஆகியவற்றைக் கால வாரியாக எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

குறிப்புச் சொற்கள் : அரபுத்தமிழ், சிறப்பு, வளர்ச்சி, வீழ்ச்சி.

முன்னுரை:

தமிழ் அமிழ்து, பல்லாயிரமாண்டு கால விழுதும் மிக நீண்ட நெடிய பாரம்பரியமும் நிறைய நீதி நெறி நூல்களையும் கொண்ட மொழி, கீழடி வரலாற்றாய்வின் படி கிமு விற்கு முன்பு பிறந்த மொழி, திராவிடக் குடும்பத்தில் பிறந்து தென்னாட்டில் செழிப்போடும் இன்றும் இருக்கும் செம்மொழி.

அரபு நிலம் என்பது புல் பூண்டற்ற வறண்ட திடல். ஆனால் அரபு மொழி ஓர் அரபிக்கடல். செமிட்டிக் குடும்பத்தில் பிறந்து இன்றும் நீண்ட காலம் நெடு வாழ்வு கொண்ட மொழி, இஸ்லாத்தின் வருகைக்கு முன் அம்பும் காதலும் மதுவும் கவிதைகளில் கரை புரண்டோடிய மொழி இஸ்லாத்தின் பின்பு அன்பும், நீதியும் அறமும் அலைபாய்ந்து ஓடும் மொழி.

தமிழகத்திற்கும் அரபுலகத்திற்கும் இடையே நீண்ட நெடிய தூரம் இருந்தாலும் அரபு தேசத்தின் கடலோடிகள் இந்த இரு பகுதிகளையும் இஸ்லாம் தமிழகத்தில் வருவதற்கு முன்பே கடல் பயணத்தின் மூலம் ஒன்றிணைத்திருந்தார்கள். இஸ்லாத்தின் வருகைக்குப் பின்பு ஏற்கனவே சமத்துவம் சமூக நீதியின் விழுமியங்கள் கொண்ட தனது கொள்கைகளான பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்,

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
திரு அ.முஹம்மது அபூதாஹிர் P: 211-219

யாதும் ஊரே யாவரும் கேளீர், ஒன்றே குலம் ஒருவனே தேவன் ஆகியனவற்றில் தம்மை ஒத்த கொள்கை கொண்ட இஸ்லாத்தை தமிழகம் ஆமோதித்து வரவேற்றது, அன்போடு அரவணைத்தது.

தமிழகத்தின் கடற்கரையோரப் பகுதிகளான கீழக்கரை , காயல்பட்டினம், பரங்கிப்பேட்டை ஆகியவற்றில் அரபு தேசத்தின் வணிகச் செல்வர் கூட்டமும், இஸ்லாத்தை பரப்ப வந்த இறை நேசச் செல்வர் கூட்டமும் வந்தனர். சேரரும் பாண்டியரும் சோழரும் அவர்களுக்கு இம்மண்ணில் அடைக்கலம் தந்தனர், தம் மக்களை அவர்களுக்கு திருமணம் முடித்தும் தந்தனர்.

அரபு மொழியில் அளவளாவிய மேற்காசியாவின் மேன்மைமிகு மக்கள் பிற்காலத்தில் தமிழ் மொழியை நன்கு கற்று அறிந்தனர். அதனை தங்கள் மொழி வழியே எழுதினர். அங்கே ஒரு புதிய மொழி பிறந்தது. அரபு எழுத்துக்களும் தமிழ் வார்த்தைகளும் கொண்ட அம்மொழி அரபுத்தமிழ் அல்லது அர்வி மொழி என அழைக்கப் பட்டது.

அரபுத்தமிழின் பிறப்பு, அதன் சிறப்பு, அதில் உருவான நூல்கள் அவற்றின் குறிக்கோள்கள், அரபுத்தமிழ் வீழ்ச்சிக்கு காரணம் அதன் மீட்சிக்கான வழிகள் ஆகியன குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

அர்வி மொழி உருவாகிய காரணம் :

மணவை முஸ்தபா, “… அண்ணல் நபிகள் நாயகம் காலத்துக்குப் பின்னர் தமிழகம் வந்த அராபியர்கள் இசுலாமியக் கருத்துக்களைத் தமிழ் மக்களிடையே எடுத்துக் சொல்லும் கட்டுப்பாடு உடையவர்களானார்கள். அப்போது இஸ்லாமியச் சிந்தனைகளை இங்குள்ள மக்களிடையே எடுத்துச் சொல்வதற்கு அரபிமொழி வரிவடிவத்திலிருந்து தமிழே அவர்களுக்குப் பெருந்துணையாக இருந்தது என்கிறார்.

அல்லாஹ் நபி, ரசூல், ஆகிரா, மலாஇகா, ஜின், ஸாத், ஸிபாத், வுஜூத் போன்ற அரபுப்பதங்களுக்கு இணையான சொற்கள் தமிழில் இல்லை. மேலும், இவைபோன்ற அரபு வார்த்தைகளில் பொதிந்துள்ள ஆழமானகருத்துக்களை இன்னொரு மொழியில் புலப்படுத்தலும் சாத்தியம் அன்று. இத்தகைய ஒரு வரலாற்றுச் சூழ்நிலையிலேயே முஸ்லிம்கள் தமிழ்மொழியை அதன் இலக்கண அமைப்பை முற்றிலும் பேணி அரபி எழுத்து வடிவில் எழுதும் முறையைத் தோற்றுவித்ததோடு இஸ்லாமிய கோட்பாடுகளுடனும் மதக் கிரியைகளுடனும் தொடர்புடைய அரபுப் பதங்களை தமிழ்மொழியோடு இணைத்து பிரயோகிக்க ஆரம்பித்தனர்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்திற்கு வருகை புரிந்த அரேபியர்கள் தங்கள் கருத்துக்களையும் தகவல்களையும் பரிமாறிக் கொள்வதற்கு மொழிமாற்றம் தேவைப்பட்டுள்ளது. அதற்கு அடுத்த நூற்றாண்டிலேயே அரபுத்தமிழ் தோற்றம் பெற்றுள்ளது என்கிறார் சையது ஹஸன்

தைக்கா ஸூஐபு ஆலிம் கி.பி. எட்டாம் நூற்றாண்டிலேயே தோன்றியது என்றும், இலங்கையில் 15 ம் நூற்றாண்டிலிருந்து அரபுத்தமிழ் புழக்கத்திலிருந்தது என்பதைப் போர்த்துக்கீசியத் தளபதி 'ஒடரடோபார்பசா' என்பவர் எழுதி வைத்திருப்பதாகவும் மேற்கோள் காட்டுகிறார் செ. பசுலுமுகியித்தீன்

தமிழை அரபியில் பிழையின்றி வாசிப்பதற்கு 400 வருடங்களுக்கு முன்பு காயல்பட்டினத்தைச் சேர்ந்த அமீர்வலி என்ற இறைநேசச் செல்வர் அரபுத்தமிழ் எழுத்துக்களை அறிமுகம் செய்துள்ளார். இந்த எழுத்துக்களில் பிற்காலத்தில் இமாம் அல்அரூஸ் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் தமிழ் எழுத்துக்களின் ஒலி வடிவத்தின் இயல்புகளை பிரதிபலிக்கும் வண்ணம் சில மாற்றங்களை ஏற்படுத்தியதாகவும் பேரா. கோகன் கூறியதாகவும் ஆனால் அவை எந்த மாற்றங்கள் என்பதை அவர் குறிப்பிடவில்லையென டோஸ்டன் சாச்சர் என்ற ஜெர்மானிய அறிஞர் குறிப்பிடுகிறார்

தமிழ் கற்ற அரபிகள் அல்லது அரபு கற்ற தமிழ் முஸ்லிம்கள் அரபுத்தமிழைத் தோற்றுவித்தனர். தமிழைப் பேச மட்டுமே பழகிக் கொண்ட அரபிகளே தங்களுக்கு அரபி எழுத்துக்களைக் கொண்டு தமிழை எழுதத் தொடங்கியிருக்க வேண்டும். அதுவே அரபித் தமிழாக வளர்ச்சியடைந்திருக்கும் என அ. மா. சாமி கூறுகிறார்

<u>அரபுத்தமிழ் அளித்த நூல்கள் !</u>

அரபுத்தமிழில் குர்ஆன், ஹதீஸ் (நபிமொழி) மொழிபெயர்ப்புகள், தப்சீர்கள் (விளக்கங்கள்), பிக்ஹ் இஸ்லாமிய சட்டங்கள், வெண்பாக்கள் ஆகியன நிறைய நூல்களாக வெளிவந்துள்ளன. மாத இதழ்கள் வெளிவந்துள்ளது. மேலும் அன்றைய நாட்களில் கடிதப் போக்குவரத்துக்கூட அரபுத்தமிழில் நிகழ்ந்துள்ளது. கல்வெட்டுக்கள் கூட அரபுத்தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளதை கீழக்கரை ஜூம்ஆ பள்ளிவாசலில் இன்றும் பார்க்கலாம்.

அரபுத்தமிழில் வெளிவந்த சில நூல்களை நாம் இங்கு பார்ப்போம்.

- அரபுத் தமிழில் எழுந்த தப்ஸீர்களின்முன்னோடியாக இலங்கையைச் சேர்ந்த ஷெய்க்கு முஸ்தபா அவர்கள் கருதப்படுகின்றார்கள். பத்ஹுர்ரஹ்மான்பீ தர்ஜமதி தப்ஸீரில் குர்ஆன் என்ற பெயரில் அரபுத் தமிழில் அவர்கள் இயற்றிய தப்ஸீர் நான்கு பாகங்களில் ஹி 1291– (1874) ல் பிரசுரிக்கப்பட்டது.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
திரு அ.முஹம்மது அபூதாஹிர் P: 211-219

- காயல்பட்டணத்தைச் சேர்ந்த ஹபீப் முஹம்மத் ஆலிம் அவர்கள் 'புதுஹாதுர் ரஹ்மானிய்யா பீ தப்ஸீர் கலாமிர் ரஹ்மானிய்யா' என்ற பெயரில் அரபுத்தமிழில் எழுதிய குர்ஆன் விரிவுரை நூல் ஹி. 1297 கி.பி. 1879 இல் பம்பாயில் பிரசுரிக்கப்பட்டது.
- பத்ஹுர் ரஹ்மான் பீ தர்ஜுமதி தப்ஸீரில் குர்ஆன், புதுாஹாதுர் ரஹ்மானிய்யா பீ தப்ஸீரி கலாமிர் ரப்பானிய்யா, தப்ஸுர் பத்ஹுல் கரீம்,பத்ஹுர் ரஹீம் பீ தப்ஸீரி குர்ஆனில் கரீம், ரஹ்மதுல் மன்னான் அவல் முதஅல்லிமீன மினல் வில்தான், அல் மனாபிஉல் அதம பீ தப்ஸீரி அம்ம,அல் ஜவாஹிருஸ் ஸலீமா,தப்ஸுர் ஸுரதுல் அஸ்ர்,தப்ஸீரே அர்வி ஜுஸ்உ அம்மயத்,துரருத் தபாஸீர் ஆகியன அரபித்தமிழில் குர்ஆன் தர்ஜமாவுடன் (மொழிபெயர்ப்பு) வெளிவந்த தப்சீர் -விளக்க நூல்களாகும்.
- ஷாம் ஷஹாபுதீன் அவர்கள் 1119 ஹதீஸ்களை இரண்டடியாகக்கொண்ட செய்யுள்களின் அமைப்பில் மொழிபெயர்த்து பெரிய ஹதீஸ் மாலை என்னும் நூலைத் தொகுத்தார். 608 ஹதீஸ்கள் அவரால்'சின்ன ஹதீஸ் மாலை' என்ற பெயரில் தொகுக்கப்பட்டது.
- அஹ்ஸனுல் மவாஇள் வ அஸ்யனுல் மலாபிள் ,மௌஇளதும் முஸையனா வ முலப்பளதுல் முஹஸ்ஸனா,ஷுஅபுல் ஈமான்
  பத்ஹுல் மஜீத் பீ ஹதீதின் நபிய்யில் ஹமீது, நபாஹதுல் இத்ரிய்யா பீ ஷரஹில் வித்ரிய்யா,நஸ்ஹுல் ஹதீது வ பத்ஹுல் மஜீத்,அர்பஈன ஹதீதும் உரையும் ஆகியன அர்வி மொழியில் வெளிவந்த ஹதீஸ் நூல்களாகும்.
- இமாமுல் அரூஸ் என அழைக்கப்படும்மாப்பிள்ளை ஆலிம் அவர்கள் (செய்யித் முஹம்மத் ஆலித்) மதீனதுந் நுஹாஸ் என்ற பெயரில்அரபுத் தமிழில் ஒரு நாவலை எழுதியுள்ளார்கள். பாக்கிர் யெஸீத் இப்னு மலிக் அர் - தாயீஎன்பார் பாரசீக மொழியில் எழுதிய நாவலைத் தழுவி இது எழுதப்பட்டுள்ளது. மாப்பிள்ளை ஆலிமின்இந்நூல் ஹி. 1318 கி.பி. 1900 ஆம் ஆண்டளவில் முஹம்மத்சுலைமான் என்பவரால் இலங்கையில் பிரசுரிக்கப்பட்டது. அரபுத் தமிழில் எழுதப்பட்ட இந்நாவலை எம்.கே.ஈ மௌலானா என்பார் 1979ம் ஆண்டு தமிழில் வெளியிட்டார்.
- இமாம் அல்அரூஸ் அவர்களின் இரு கவிதைகள் அஹ்சனுள் மவாயிஸ் வ அஸ்யானுள் மலாபிஸ் என்னும் நூல் அரபி மற்றும் அர்வியில் 380 வரிகளை கொண்டதாகும். இவை ஹதீஸ்களை சாராம்சமாக கொண்ட நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

- அரபு மொழியில் காணப்படும் பல்வேறு இஸ்லாமியக் கலைகளைத் தழுவிய நூல்கள் அரபுத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. இமாம்பய்ஹகீ (ரஹ்) எழுதிய 'கஃபுல் ஈமான்' என்னும் நூல் ஜமாலுத்தீன் ஆலிம் அவர்களால் அரபுத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. அரபியில் உள்ள புகழ்பெற்ற ஹதீஸ்தொகுப்பான மிஷ்காதுல் மஸாபிஹ் என்னும் நூல் ஹாபிஸ் அப்துர்ரஹ்மான் (ஹி. 1331) அவர்களால் 'மின்ஹாதில் மஸாபிஹ்பீ தர்ஜமத்தி மிஷ்காதில் மஸாபிஹ் என்ற பெயரில் அரபுத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் 'இன்ஸானுல் காமில்' உட்பட எண்ணற்ற மூலநூல்கள் அரபியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டன. மிக ஆழமான தத்துவார்த்தங்களையும் விளக்கங்களையும் பதப்பிரயோகங்களையும் கொண்ட இத்தகைய நூல்கள் அரபுத் தமிழில் மொழிபெயர்க்கக் கூடிய அளவிற்கு இம்மொழி மரபு சொல்லாட்சி மிக்கதாகவும் வளமுடையதாகவும் காணப்பட்டதையே இது குறிக்கிறது
- 1870ம் ஆண்டு சென்னையிலிருந்து 'அஜாயிபுள் அக்பார்' (அற்புதச் செய்திகள்) என்ற பெயரில் அரபுத் தமிழில் வாராந்தப் பத்திரிகையொன்று பிரசுரமாகியது.
- 'கவ்புர் ரான் அன்கல்பில் ஜான்' என்னும் பெயரில் ஓர்அரபுத் தமிழ் பத்திரிகை 1889,1890 ஆம் ஆண்டுகளுக்கிடையில் பிரசுரமாகியது. இலங்கையில் அரபு எழுத்தில் பிரசுரிக்கப்பட்ட ஒரே பத்திரிகையாக இது கருதப்படுகிறது.
- கொழும்பு ஆலிம் அவர்கள் இளஞ்சிறார்களுக்கு சன்மார்க்கத்தின் அடிப்படைகளை விளக்கும் பல நூல்களை அரபுத் தமிழில் எழுதினார். இவற்றுள் 'துஹ்பதுல் அத்பால்', 'மின்ஹாதுல் அத்பால்' ஆகிய இரண்டு நூல்களும் குறிப்பிடத்தக்கன.
- அரபுத்தமிழ் வழக்கொழிந்த பின்னரும் அரபுத்தமிழ் மார்க்க நூலான சிம்த்துஸ் ஸிபியான் என்னும் ஹனபி மத்ஹபின் நூல் இன்றும் கூட அம்மொழியிலேயே பிரசுரமாகி வருவதும் அதனை மக்கள் படித்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்
- நூறு மஸ்அலா, ஆயிரம் நூறு மஸ்அலா ஆகியன மார்க்க சட்டங்களே வெண்பாக்களாக இயற்றப்பட்ட நூல்களாகும்.
- அபூஷஹ்மா மாலை, இராஜமணி மாலை, ஈடேற்ற மாலை, காசிம் படைப்போர், கோஷா நாமா, சக்ராத் நாமா, தலைபாத்திஹா, தவ்ஹீது மாலை, , பீர்சா அம்மாள் ஹதீது, மகிழ்மணி மாலை, ஸைத்துன் கிஸ்ஸா

ஆகியன அரபுத்தமிழில் வெளிவந்த வெண்பாக்கள், சம்பவங்கள், சட்டங்கள் அடங்கிய நூல்களாகும்.

- பெண்புத்திமாலை பெண்களுக்கென்றே பிரத்தியேகமாக எழுதப்பட்ட அறிவுரைகள் அடங்கிய அருமையான நூலாகும்.
- **அர்வி மொழியின் அருமை**

அர்வி மொழி உலகின் பாரம்பரியமிக்க அரபி மற்றும் தமிழ் ஆகிய இரு செம்மொழிகளை சேர்த்திருக்கிறது. இரு சமூகங்களை ஒன்று சேர்த்திருக்கிறது.

தமிழில் குர்ஆன் மொழிபெயர்க்கப்படுவதற்கு 200 ஆண்டுகளுக்கு முன்பே அர்வி மொழியில் குர்ஆன் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. எழுத்துக்கள் அரபியில் இருந்தாலும் அதன் வார்த்தைகள் தமிழில் இருப்பதால் உண்மையில் அது தமிழுக்கு செய்யப் பட்ட சேவையே ஆகும்.

அர்வி மொழி பெண்ணியத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளது. பெண்புத்தி மாலை இதற்கு சிறந்த உதாரணமாகும்.

இம்மொழியை ஆண்களை விட பெண்கள்தான் அதிகம் படித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரபி மொழியில் உள்ள தொழுகையில் ஓத வேண்டிய குர்ஆன் வசனங்கள், திக்ருகள், துஆக்கள் தமிழில் அதன் உச்சரிப்புடன் எழுதப் படுகிறது. தமிழில் அரபி மொழியில் உள்ள எழுத்துக்களில் சிலவற்றின் ஒலிகள் இல்லாததால் தமிழிலேயே அரபி வார்த்தைகளை எழுதி படிப்பதன் மூலம் உச்சரிப்பு மாறுபாட்டால் வார்த்தைகளின் பொருளே தவறாக புரிந்துக் கொள்ளக் கூடிய நிலை ஏற்படுகிறது .தற்காலத்தில் தமிழில் வெளியிடப்பட்டுள்ள தொழுகை மற்றும் துஆக்களின் நூல்கள் இதற்கு சரியான உதாரணங்களாகும். இந்தப் பிரச்சினையை அர்வி மொழி தீர்த்திருக்கிறது. அர்வி மொழியில் அரபி வார்த்தைகள் அரபி உச்சரிப்பிலேயே படிக்கப்படுவது மட்டுமல்லாமல் சில அரபி வார்த்தைகளையும் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யாமல் அப்படியே பயன்படுத்தப் படுவதன் மூலம் வார்த்தைகளின் பொருள் மாறுபடுவது தவிர்க்கப் படுகிறது.

அரபுத்தமிழ் வீழ்ச்சியின் காரணங்கள்

பிற்கால முஸ்லிம் அறிஞர்கள் தமிழ் மொழியில் புலமை பெற்றமையினாலும் தமிழ் கலந்த அரபை ஒதுக்கிய தூய அரபுமொழியை விரும்பியமையாலும் அரபுத் தமிழை புறக்கணித்தனர். இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட மதரஸாக்களில் அரபுமொழி ஒரு பாடமாகப் போதிக்கப்பட்டமையாலும் அரபுத்தமிழ் முஸ்லிம் மாணவர் மத்தியில் அறிமுகம் செய்யப்படவிலை

எகிப்து, சவூதிஅரேபியா போன்ற நாடுகளுக்குச் சென்று பட்டம் பெற்று வந்த உலமாக்கள் அரபுத்தமிழில் கருத்துப் பிழைகள் இருப்பதாகவும் தெளிவான மொழிகளிலேயே இஸ்லாமிய போதனைகள் நடத்தப்படவேண்டும் என்றும் கூறித் தமிழ் மொழியில் புத்தகங்கள் எழுத ஆரம்பித்தமையாலும் அரபுத்தமிழ் செல்வாக்கிழந்தது.

இலங்கை அரசுப் பாடசாலைகளிலும் இஸ்லாமிய பாடநூல் தமிழில் அறிமுகமாகியதாலும் அரபுத்தமிழ் செல்வாக்கு இழந்து விட்டது.

இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவில் ஆங்கிலேயரின் காலனியாதிக்கத்தால் அரபுத்தமிழின் இடத்திற்கு ஆங்கிலம் வந்தது.

புதிதாக கண்டுப்பிடிக்கப்பட்ட அச்சியந்திரங்களில் அரபுத்தமிழ் எழுத்துக்களை அச்சிடுவதில் நிறைய குறைபாடுகள் ஏற்பட்டதால் அரபுத்தமிழ் நூல்களை வெளியிடுவதில் தேக்கம் ஏற்பட்டது.

தமிழ்நாட்டில் இஸ்லாமியப் பாடத்திட்டத்தில் தெற்காசியாவின் பெரும்பான்மையான கலாச்சாரமும் பேச்சு வழக்குமுடைய உருது மொழி வைக்கப்பட்டதாலும் குறிப்பாக தமிழ்நாட்டின் முஸ்லீம் ஆட்சியாளர்களான நவாபுகள் உருதுவை பின்புலமாக கொண்டிருந்ததாலும் அரபுத்தமிழ் புறக்கணிக்கப்பட்டது .

அரபுத்தமிழில் வெளிவந்த நூல்கள் தமிழில் மட்டும் படிப்பவர்களுக்கு தனியாக அம்மொழியில் அச்சிடப்பட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே இது அதிக செலவையும் அனாவசிய நேர விரயத்தை யும் உண்டாக்கியது.

<u>முடிவாக ..</u>

உலகின் பல நாடுகளில் துருக்கி, ஜாவி, சுவாஹிலி புஷ்து உட்பட பல மொழி பேசும் முஸ்லிம்களும் அரபி எழுத்துக்களையே தங்களின் மொழிகளின் எழுத்து வடிவங்களாக பயன்படுத்தி வந்தனர்.பிற்காலத்தில் அரசியல் காரணங்களால் அரபி எழுத்து வடிவம் சில மொழிகளில் இருந்தும் நீக்கப்பட்டது.

இந்தியாவில் மலையாளம், சிந்தி மற்றும் வங்காள மொழி பேசிய முஸ்லிம்கள் தங்கள் மொழிகளுக்கு அரபி எழுத்து வரிவடிவத்தையே கொண்டிருந்தார்கள். ஆனால் தற்காலத்தில் அம்முறை வழக்கொழிந்து தங்கள் மொழிகளின் எழுத்துக்களின் வரி வடிவங்களையே எழுதுவதற்கு பயன்படுத்துகின்றனர். இதற்கு தமிழும் விதிவிலக்கல்ல.முஸ்லீம் சமூகம் அரபுத்தமிழிலிருந்து மரபுத்தமிழுக்கு மாறி அதிலிருந்தும் நவீனத் தமிழுக்கு நகர்ந்து ஏறத்தாழ ஒரு நூற்றாண்டை கடந்து விட்டது.அரபுத்தமிழ் அது அன்று எழுந்த காலத்தின் சூழ்நிலைக்கும் காலத்திற்கும் அன்று பொருத்தமானதே ஆகும். இன்று

பன்முக சமூகத்தில் வாழும் முஸ்லீம் சமூகம் பிறரிடம் பழக ஒரு மொழியையும் பாரம்பரியத்தை தொடர ஒரு மொழியையும் வைத்திருப்பது மற்ற சமூகத்தை விட்டு தனித்து இருக்கும் நிலையை ஏற்படுத்தும் .அதனை தனியாக கற்க நேரமும் தமிழில் வெளியிடும் நூலை அரபுத்தமிழிலும் அடுத்து வெளியிடுவதால் நிதி பாரமும் ஏற்படுவது முஸ்லீம் சமூக அறிவுலகில் அது தேக்கத்தை ஏற்படுத்தும்.தற்காலத்தில் ஒரு மொழியின் வார்த்தை உச்சரிப்பை வேறு மொழியில் உச்சரிக்க உச்சரிப்பு வரி வடிவம் வந்து விட்டது .

திருக்குறள் போன்று புனிதமாக கருதப்படும் நூல்கள் அல்லது மிகவும் உயர்ந்த இலக்கிய நூல்களை அரபுலகில் அறிமுகப்படுத்த அரபுத்தமிழை பயன்படுத்தலாம். ஜவஹர்லால் நேரு பல்கலை கழகத்தின் முன்னாள் அரபுத்துறை தலைவர் முனைவர் பஷீர் அஹ்மது ஜமாலி அரபியில் மொழிபெயர்த்து வெளியிட்ட திருக்குறளில் அரபு எழுத்து வரி வடிவில் தமிழில் திருக்குறளை இடம் பெற செய்துள்ளது இல்லை. அரபுத் தமிழின் மீட்சியாகவே பார்க்கலாம். அதில் அவரே அரபு மக்கள் தமிழ் உச்சரிப்பில் திருக்குறளைப் படிப்பதற்கு வசதியாக சில புதிய எழுத்து வடிவங்களை தனது நூலின் அறிமுகத்தில் சேர்த்துள்ளார். எதிர்க்காலத்தின் அரபு இலக்கிய உலகம் தமிழ் இலக்கியத்தை வாசிக்க அரபுத்தமிழை புதிய பரிணாமத்தோடு உருவாக்கினால் அது அரபுலகில் ஏற்புடையதாக இருக்கும். அறிவுலகில் வரவேற்புடையதாக இருக்கும்..

மாற்றங்கள் என்பது எல்லாவற்றிலும் ஓர் நியதியாகும். இதற்கு மொழிகளும் விதிவிலக்கல்ல , தமிழில் எழுத்து வடிவத்தில் சீர்திருத்தம் செய்யப் பட்டுள்ளது. அரபி எண்கள் தமிழ் மொழியில் ஏற்கப்பட்டுள்ளது. தற்காலத்தில் அரபுத்தமிழே அருகி போய் விட்டாலும் முஸ்லீம் தமிழ் உலகம் மார்க்கம் சம்பந்தமான அரபு வார்த்தைகளை தமிழில் எழுதி படிப்பது அரபுத்தமிழின் சிறிய பரிமாணம் என்றும் பொருள் கொள்ளலாம். இந்த மாற்றத்தை அறிவுலகம் அங்கீகரித்து விட்டது.

மேற்கோள் காட்டப்பட்ட நூல்கள்:

1. முனைவர் அ . நிகமத்துல்லாஹ் , திருக்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்புகள் ஓர் ஆய்வு, வெளியீடு : ஆசிரியர், 14/2 எஸ். என்.வி நகர், ஹைகிரவுண்டு, திருநெல்வேலி -627011., ஆண்டு :2021
2. மௌலவி அல்ஹாஜ் அப்சலுள் உலமா பி.எம்.கலீலுர் ரஹ்மான் மன்பஈ. எம். ஏ .எம். பில் ,தமிழகத்தின் தலை சிறந்த ஆலிம்கள், ,ஹமீதிய்யா பப்ளிஷர்ஸ், இராயப்பேட்டை ,சென்னை -14, முதல் பதிப்பு, ஆண்டு : 2013 ,
3. 'பழங்காசு' ப.சீனிவாசன், அல்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்புகளும் விரிவுரைகளும்,பாரதி ஆய்வு நூலகம், காட்டூர்(தெற்கு), திருச்சிராப்பள்ளி-620019, முதல் பதிப்பு, ஆண்டு:2007

4. அ.மா.சாமி, தமிழில் இஸ்லாமிய இதழ்கள், நவமணி பதிப்பகம், நகர வளர்ச்சிக்கு குடியிருப்பு ,சென்னை -600 004, முதல் பதிப்பு, ஆண்டு:1994

மேற்கோள் காட்டப்பட்ட கட்டுரைகள்:

1. கலாநிதி சுக்ரி அரபுத் தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம் ,அதிரை போஸ்ட் இணையம்
2. ரஹ்மத் ராஜகுமாரன் , அரபுத் தமிழ் இலக்கியங்கள்- முகநூல் பதிவு -16.6.22
3. பேராசிரியர் மு. அப்துல்காதர், தமிழ்த்துறை, ஹாஜி கருத்த ராவுத்தர் ஹவுதியா கல்லூரி, உத்தமபாளையம், தேனி மாவட்டம், அரபுத்தமிழின் காலமும் கருத்தும்,முத்துக்கமலம் இணையம்.
4. அழிவின் விளிம்பில் ‘அரபுத் தமிழ் - தி ஹிந்து -8.10.2015

Reference :

1. Torstar Tschacher, Islam in Tamilnadu – Vaira, Halle (Saale), ISBN 3-86010-627-9 ,.2001
2. Dr.Basheer Ahmad Jamali, Tirukkural.Central Institute of Classical Tamil,Chennai -600 100, 2022.
3. A forgotten heirloom – The Hindu -24.5.2019.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
முனைவர் அ.முஹம்மது அப்துல் காதர் ஹஸனி P: 220-231

அரபுத் தமிழில் அருள்மறை குர்ஆனின் விரிவுரைகள் ஓர் ஆய்வு
A Study on Arabic Tamil Explanations of The Holy Quran

Dr.A.Mohamed Abdul Khader Hasani,
Assistant Professor, Department of Arabic,
Jamal Mohamed College (Autonomous),Trichy.

முனைவர்.அ.முஹம்மது அப்துல் காதர் ஹசனி
உதவிப்பேராசிரியர், அரபு & ஆய்வுத்துறை,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி

Abstract

In this topic, a view of the rules of the Holy Quran in Arab Tamil, I have shared only a few things about Arab Tamil and mentioned how many Explanation of The Holy Quran in Arabic Tamil have been published, who did it first and where it was published. And I have shared some things about itself and I have taken some things about the influence of Arabic Tamil Quran explanations in The Islamic society at that period. I mentioned how they imparted Islamic culture with its basic features through Arabic Tamil, and the importance of religious education for women. I quoted how the Arabic Tamil admired Tamil Muslim at that time.

Key words :

தப்ஸீர் - interpretation, - *ஃபதஹுார் ரஹ்மான் ஃபீ தஃப்ஸீரில் குர்ஆன்* - Fath al-Rahman in the interpretation of the Qur'an, *புதூஹாதுர் ரஹ்மானிய்யா பீ தப்ஸீரி கலாமிர் ரப்பானிய்யா* - The Rahmani conquests in the interpretation of the words of God, *தப்ஸீருல் குர்ஆன் பி அஹ்ஸனில் புர்ஹான்* - Interpretation of the Qur'an in the best proof, *தப்ஸீர் பத்ஹுர் ரஹீம்* - Interpretation of the Merciful Conquest, *தப்ஸீரே பத்ஹுல் கரீம்* - Interpretation of the Noble Conquest, *அட்சரம்* - *எழுத்துரு* – font

ஆய்வுச்சுருக்கம்:

அரபுத்தமிழில் அருள்மறை குர்ஆனின் விரிவுரைகள் ஒரு பார்வை என்கிற இந்த தலைப்பில் அரபுத்தமிழ் பற்றி ஒரு சில விஷயங்களை மட்டும் பகிர்ந்து விட்டு அரபு தமிழ் விரிவுரைகள் எத்தனை வெளிவந்திருக்கிறது என்பதை பற்றியும், யார் அதை முதலில் செய்தார்கள் என்பதை பற்றியும், எங்கெல்லாம் வெளிவந்தது என்பதை பற்றியும் குறிப்பிட்டு இருக்கிறேன் அதேபோன்று அரபுத்தமிழ் மொழியின் மொழியாக்க விதம் எப்படி அமைந்திருக்கிறது என்பதை பற்றியும் எவ்வாறு

வார்த்தைகள் கையாளப்பட்டிருக்கிறது என்பதை பற்றியும் சில விஷயங்களை பகிர்ந்திருக்கிறேன் மேலும் இஸ்லாமிய சமூகத்தில் அரபுத்தமிழ் திருக்குர்ஆன் விரிவுரைகளில் தாக்கம் என்ன என்பது பற்றியும் சில விஷயங்களை எடுத்துத்துரைத்திருக்கிறேன். அரபுத்தமிழ் வாயிலாக இஸ்லாமிய கலாச்சாரத்தை அதன் அடிப்படை அம்சத்தோடு கற்றுத்கொடுத்தார்கள் என்பது பற்றியும் மேலும் பெண்களுக்கான மார்க்ககல்வி அதனுடைய முக்கியத்துவம் பற்றியும் குறித்திருக்கிறேன். அரபி எழுத்துருவான அரபுதமிழில் படிக்கும் போதுதான் அரபிமீதான பற்றும் தமிழ் மீதான ஈர்ப்பும் ஒருங்கே வெளிபடுகிறது என்பதையும் கூறியிருக்கிறேன்.

முன்னுரை

இறைவனால் வழங்கப்பட்ட வேதத்தில் திருமறை குர்ஆன் மனித வரலாற்றில் மிக முக்கியமான அங்கம் வகிக்கிறது இருபத்தி மூன்று ஆண்டுகள் பகுதி பகுதியாக தேவைக்கு ஏற்ப முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அருளப்பட்ட மனித வாழ்வியலுக்கான ஒரு மாபெரும் வழிகாட்டி தான் இந்த குர்ஆன்.

நபிக்கு அருளப்பெற்ற இந்த திருக்குர்ஆன் இறங்கி 1400 ஆண்டுகளுக்கு மேலாக வரலாற்றின் வழிநெடுகிலும் ஏற்படுத்திய நேர்மறை விளைவுகளும் கலாச்சாரத் தாக்கங்களும் எண்ணிலடங்காதவை.

அரபு நாட்டிற்கும் தமிழ் நாட்டிற்குமான தொடர்பு என்பது தொன்று தொட்டு விளங்கும் ஒரு வரலாற்று சிறப்புவாய்ந்த தொடர்பாகும். வணிகத்தால் கால் ஊன்றி கலாச்சார பண்பாட்டால் தடயம் பதித்து மொழியால் நீட்சி பெற்றது அதன் பெரும் அடையாளம் தான் அரபுத்தமிழ். இதைப்பற்றி பேசவேண்டும், கலந்தாய்வு நடத்த வேண்டும் என்ற அவா அவ்வபோது வந்து போவதுண்டு. ஆனால் இந்த கருத்தரங்கம் மூலம் அது கைகூடி இருக்கிறது. தமிழ் நாட்டிற்கும் அரபு தேசங்களுக்குமான தொடர்பை பாரதியார் குறிப்பிடும் பொழுது,

> **"சீனம் மிசிரம் யவனரகம்-**
> **இன்னும் தேசம்பலவும் புகழ்வீசக்-**
> **கலை ஞானம் படைத்தொழில்**
> **வாணிபமும் நன்று வளர்த்த தமிழ்நாடு**
> **எனப் பாடி மகிழ்கிறார்.**[1]

'மிஸ்ரு' (எகிப்து) என்பது 'மிசிரம்' என மறுவி வந்துள்ளது.

அது என்ன அரபுத்தமிழ் ?

தமிழகத்தில் தமிழை தாய்மொழியாகக்கொண்ட முஸ்லிம்களால் உருப்பெற்று இலங்கை முஸ்லிம்கள் வரை விரிவடைந்த பரவலாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு மொழி மரபே அரபுத்தமிழ் எனப்படுகின்றது. அர்வி மொழி என்றும் கூறுகிறார்கள். முஸ்லிம்களின் மார்க்க விழுமியங்களின் தேவை கருதிதான் இம்மொழி உருவாக்கப்பட்டது. சமய மரபு மொழியாக அரபி மொழி இருப்பதால்தான் சமய, பண்பாட்டுத் துறைசார்ந்த அநேக சொற்கள் அரபுமொழியில் பயன்படுத்தப்படுகின்றன.

முனைவர் எஸ் எம் எஸ் மஸாஹிர்[2] கூறும்பொழுது இரண்டு வரைவிலக்கணங்களை அரபு தமிழுக்கு ஒரு கூறுகிறார்.

- தமிழை அரபு அட்சரங்களில் எழுதுதல் அரபுத்தமிழாகும். பொதுவாக அரபுத் தமிழ் எனும் போது இவ்வரைவிலக்கணமே வழங்கப்படுகின்றது. இதுவே அடிப்படையான கருத்தாகும். தமிழ் மொழியை அரபு வரிவடிவத்தில் எழுதும் போது அரபு தமிழாகிறது. பேராசிரியர் எம்.ஏ. நுஃமான், அறிவியல் தமிழறிஞர் மணவை முஸ்தபா, அ.மா.சாமி, மயிலை சீனி வேங்கடசாமி போன்ற அறிஞர்கள் இவ்வரைவிலக்கணத்தையே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.
- அரபு வரிவடிவத்தை போலவே, தமிழ் வரிவடிவத்தில் அரபுச் சொற்களைக் கலந்து எழுதுதலும் அரபுத்தமிழாகும். முன்னைய வரைவிலக்கணத்தையும் உட்படுத்திய இந்த வரைவிலக்கணத்தின்படி சாதாரணமாக தமிழ் மொழியில் எழுதும் போது அரபுச்சொற்களைக் கலந்து எழுதுவதும் கூட அரபுத்தமிழாகிறது. இதனைக் கலாநிதி எம்.ஏ. எம். சுக்ரி, ஏ.எம்.ஏ அஸீஸ். எம்ஐஎம் அமீன் போன்ற ஆய்வாளர்கள் முன்வைத்துள்ளார்கள். ஆனால் அது பொருண்மையில் மாறுபடுகிறது.

அரபு தமிழ் விரிவுரைகள்

கி.பி. 1874 - ஃபதஹுர் ரஹ்மான் ஃபீ தஃப்ஸீரில் குர்ஆன்

இலங்கை பேருவளை என்ற ஊரைச் சேர்ந்த ஷேகு முஸ்தபா வலியுல்லாஹ் (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி ஹிஜ்ரி ஒன்பதாம் நூற்றாண்டை சார்ந்த முஜீருதீன் அல் ஹன்பலி எழுதிய ஃபதஹுர் ரஹ்மான் ஃபீ தஃப்ஸீரில் குர்ஆன் என்ற தஃப்ஸீரைத்தான் அதே பெயரோடு ஹிஜ்ரி 1291 (கி.பி 1874)இல் அரபி தமிழ்

தஃப்ஸீராக வெளியிட்டார்கள்.[3] இது பற்றி ஆய்வாளர் ப.சீனிவாசன் இவ்வாறு கூறுகிறார்.

தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் 18,19-ஆம் நூற்றாண்டுகளில் மிகச் சிறப்பாக கைகொள்ளப்பட்ட அரபுத் தமிழ், அதன் பழங்கால மொழிநடை மற்றும் பேச்சுவழக்குத் தமிழ் காரணமாக 20-ஆம் நூற்றாண்டுத் துவக்கத்தில் சில முஸ்லிம் தமிழ் எழுத்தாளர்களால் வன்மையான கண்டனத்திற்குள்ளானது. இதனால் தமிழகத்தில் வழக்கொழிந்தது. எனினும் இலங்கையில் நடைமுறையில் இருந்து வருகிறது என்பதற்கு இவ்விரிவுரையே சான்றாகும்.

திருவாளர் ஷைகு முஸ்தபா ஆலிம் என்ற இலங்கை முஸ்லிமால் எழுதப்பட்ட இந்த அரபுத் தமிழ் விரிவுரையில் அல்குர்ஆனின் முதல் ஐந்து அதிகாரங்கள் மட்டுமே அச்சில் வந்ததாகத் தெரிகிறது. இந்த **பத்ஹுர் ரஹ்மான் ஃபீ தப்ஸீருல் குர்ஆன் கி.பி. 1981-க்கு முன் (ஹிஜ்ரி - 1402க்கு முன்)** எழுதப்பட்டதாக குறிப்பிடுகிறார்.[4]

கி.பி.1878 - ஃபதஹுர் ரஹ்மான் (புதூஹாதுர் ரஹ்மானிய்யா பீ தப்ஸீரி கலாமிர் ரப்பானிய்யா)

பின்னர் காயல் பட்டிணத்ததைச் சேர்ந்த ஷேகு ஹபீப் முஹம்மது (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி 1296 கி.பி.1878 " **புதூஹாதுர் ரஹ்மானிய்யா பீ தப்ஸீரி கலாமிர் ரப்பானிய்யா** எனும் பெயரில் அரபு தமிழில் தப்ஸீர் எழுதினார்கள். இது **புதூஹாதுர் ரஹ்மான்** என்ற பெயரிலும் அழைக்கபட்டிருக்கிறது.

இம்மொழிபெயர்ப்பு 1878 ல் பம்பாய் ஹுஸைனி அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியானது. இதன் பிரதி கொழும்பு ஜாஹிரா கல்லூர் நூலகத்தில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது, தமிழ் நாட்டில் வெளியான முதல் அரபுத்தமிழ் விரிவுரை இதுதான். திருமறை வசனங்கள் அரபியிலும் பெரிய எழுத்திலுமாக எழுதப்பட்டு தமிழுரையும் விளக்கவுரையும் சிறு எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்த தஃப்ஸீர் என்னிடம் இருக்கிறது என்று “**தமிழகத்தின் தலைசிறந்த ஆலிம்கள்**”என்ற நூலின் ஆசிரியர் மௌலவி ஆலிம் அப்ஸலுல் உலமா **பி.ம்.கலீலுர்ரஹ்மான் மன்பஈ** அவர்கள் கூறுகின்றார்கள்.[5]

கி.பி.1885 - தப்ஸீருல் குர்ஆன் பி அஹ்ஸனில் புர்ஹான்

அது போல் வாணியம்பாடி ஆம்பூர் அருகே உள்ள குடியாத்தம் எனும் ஊரைச் சேர்ந்த மவ்லானா புர்ஹானுத்தீன் (ரஹ்) அவர்கள் கி.பி.1884க்கு பிறகு "தப்ஸீருல் குர்ஆன் பி அஹ்ஸனில் புர்ஹான்" எனும் பெயரில் அரபு தமிழில் தப்ஸீர் வெளியிட்டுள்ளார்கள் .

கி.பி. 1887 - தப்ஸீர் பத்ஹுர் ரஹீம்

அல்குர்ஆனுக்கு அரபுத் தமிழில் முதல் விரிவுரை வழங்கிய அதே காயல்பதி ஹபீப் முகம்மது ஆலிம்தான் இந்த விரிவுரையையும் எழுதியுள்ளார். இது புதிய விரிவுரையா, முந்தைய விரிவுரையின் மறுபதிப்பா என்பதை அறிய இயலவில்லை திருவாளர் ஆர்.பி.எம் கனி முதலியோர் இதனை மற்றொரு விரிவுரையாகவே குறிப்பிடுகின்றனர்.

கி.பி. 1899 - தப்ஸீரே பத்ஹுல் கரீம்

இந்த விரிவுரையும் காயல்பட்டினத்தைச் சேர்ந்த திருவாளர் அப்துல் காதர் அவர்களின் திருமகனார். திருவாளர் நூஹ்லெப்பை ஆலிம் அவர்களால் உருவாக்கப்பட்டதாகும். இதனுடைய மறுபதிப்புக்களும் வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. கி.பி. 1911-இல் ஒரு பதிப்பு வெளியிடப்பட்டிருந்ததாக மதுரை வி.எம்.ஏ. பாட்சாஜான் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டை அரபு தமிழின் பொற்காலம் என்று எழுத்தாளர் அ.ம.சாமி குறிப்பிடுகிறார்[6]. இந்த நூற்றாண்டில் தான் பெரும்பாலான திருமறை விரிவுரைகள் வெளிவந்துள்ளது.

கி.பி.1923 (ஹிஜ்ரி 1342) - தூர்ரருத் தபாஸீர்

புதுநகரம் கதீப், ஸயீத் முகம்மது ஆலிம் ஸாஹிப் அவர்களால் குர்ஆனின் முதல் ஐந்து பகுதிகள் (ஜுஸ்வு) மட்டும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. மற்ற பகுதிகள் வெளியிடப்பட்டதா என்பதை அறிய இயலவில்லை.

மேலும் தமிழகத்தில் இன்னும் பல அறிஞர் பெருமக்களால் ஃபுதூஹுல் கரீம், தப்ஸீர் ஃபுதூஹுர் ரஹீம், என்று பல்வேறு பெயர்களிலும் அரபு தமிழில் தஃப்ஸீர்கள் வெளிவந்தன.[7]

அரபுத்தமிழ் மொழியின் மொழியாக்க விதம்

அரபுத் தமிழ் மொழியின் மொழியாக்க விதம் இரண்டு விதமாக கையாளப்பட்டது முதலாவது சில அரபு மொழி வார்த்தைகளை மொழிபெயர்க்காமல் அப்படியே கையாளப்பட்டது.

இரண்டாவதாக சமகால தமிழ் நடையிலே அரபுத்தமிழின் மொழிபெயர்ப்பு அமைந்திருந்தது.

இது பற்றி முனைவர் நிஃமத்துல்லாஹ்[8] அழகுற விவரித்துள்ளார்.

அரபுத்தமிழ் மொழிபெயர்ப்பில் அரபிமொழி வாக்கிய அமைப்பு பெரும்பாலும் கடைப்பிடிக்கப்பட்டது. அரபிச் சொற்கள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன; சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கப்பட்டது என்று கூறுகிறார்.

உதாரணமாக,

நீராகுறவர் உம்முடைய நாயனுடைய நிஃமத்தைக் கொண்டு, நீர் பைத்தியக்காரனல்லை[9]

அதே வேறு ஒரு அரபுத்தமிழ் மொழிபெயர்ப்பில்

(நபியே!) நீர் உமதிறைவனருளால் பைத்தியக்காரரல்லர்

இதற்கு அடுத்து வெளிவந்த இரண்டு அரபுத்தமிழ் மொழிபெயர்ப்புகளுமே தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தைச் சேர்ந்த மார்க்க அறிஞர்களால் இயற்றப்பட்டவை.

புதுஹாதுர் ரஹ்மானிய்யத்தி பீ தர்ஜமதி தப்ஸீரி கலாமிர் ரப்பானிய்யா என்கிற தலைப்பில் ஹபீப் முஹம்மது ஆலிம் செய்த இந்த அரபுத்தமிழ்

இம் மொழிபெயர்ப்பின் தலைப்பிலும் "திருக்குர்ஆன் விரிவுரையின் மொழிபெயர்ப்பு என்றே குறிப்பிடப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. நடையிலும் தொனியிலும் ஷெய்க் முஸ்தபா (1874)வின் மொழிபெயர்ப்பை ஒத்து ஹபீப் முகம்மது ஆலிம் 1878) அவர்களின் மொழிபெயர்ப்பு அமைந்திருப்பதைக் காணலாம்,

எ.கா. திருக்குர்ஆனில் பிறிதொரு வசனத்திற்கு[10]

ஷெய்க் முஸ்தபாவின் மொழிபெயர்ப்பில்.

அவனாகிறவன் வஸ்தடங்களின் பேரிலும் வலிமை உள்ளவனாயிருக்கும். என்று கூறுகிறார்

இதே வசனத்திற்கு ஹபீப் முஹம்மது அவர்கள் மொழிபெயர்க்கும் போது,

அவனாகிறது வஸ்தடங்களின் பேரிலும் குத்ரத்து (ஆற்றல்) உடையவனாயிருக்கும்.

இதில் ஷெய்க் முஸ்தபா அவர்கள் கதீர் என்ற பதத்திற்கு வலிமையுள்ளவன் என்று மொழிபெயர்த்துள்ளார். ஆனால் ஹபீப் முஹம்மது அவர்கள் மொழிபெயர்க்கும் போது குத்ரத்து உடையவன் என்று மொழிபெயர்த்து அதை விளங்குவதற்கு ஆற்றல் என்ற வார்த்தையை அடைப்புக்குறிக்குள் இட்டுள்ளார்.

அதே போன்று, மற்றுமோர் வசனத்திற்கு[11]

ஷெய்க் முஸ்தபா அவர்களின் மொழிபெயர்ப்பில்

“அவர்களில் நின்றும் மிகுந்த பேர்கள் பாசிக் [பாவிகள்]கானவர்களாயிருக்கும்.” (5:81)

என்று மொழிபெயர்த்துள்ளார்.

ஹபீப் முஹம்மது அவர்கள் மொழிபெயர்க்கும் போது, “அவர்களில் நின்றும் மிகுந்தவர்களும் பாசிக் [பாவிகள்) கானவர்களாயிருக்கும்” என்று மொழிபெயர்த்துள்ளார்.

மேலும் ஹபீப் முஹம்மது ஆலிம் குர்ஆனின் அரபி வரிக்குக் கீழே நேரடியான பக்கக் குறிப்புக்களில் மறைமுகமான பொருளையும் கொடுத்துள்ளார்.

இதையடுத்து காயல்பட்டினத்தைச் சேர்ந்த நூஹ் லெப்பை ஆலிம் என்பவர் பத்ஹுல் கரீம் என்ற தலைப்பில் செய்த அரபுத் தமிழ் குர்ஆன் மொழிபெயர்ப்பும் ஷெய்க் முஸ்தபாவுடைய மொழிபெயர்ப்பும் ஏறத்தாழ ஒத்திருந்தது. மேலும் ஜலாலுத்தீன் சுயூத்தி (ரஹ்) அவர்களின் தப்ஸீர் போன்றுதான் அமைந்துள்ளது. அரபுத்தமிழுடைய மொழி நடையைப் பொறுத்தவரை ஒரு சில வார்த்தைகள் இயல்பான தமிழ்குர்ஆன் மொழிபெயர்ப்புகளில் இடம்பெறுவதில்லை உதாரணமாக

“அதாகப்பட்டது, அதாகிறது, அவனாகிறவன், அதுவாயிருக்கும் அவர்களாயிருக்கும்” இதுபோன்ற பத அமைப்பில்தான் அதன் மொழிநடை அமைந்திருக்கும். இந்த குர்ஆனின் அரபுத்தமிழ் மொழிபெயர்ப்புகள் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தின் தேவையை நிறைவேற்றிள்ளன என்பதை யாரும் மறுக்க முடியாது என்று முன்னாள் முஸ்லிம் லீக் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மர்ஹூம் ஆகா.அ. அப்துஸ் ஸமத் கூறியுள்ளார்.

சமூகத்தில் திருக்குர்ஆன் விரிவுரைகளின் தாக்கம்

சமூகத்தில் திருக்குர்ஆன் விரிவுரைகளின் தாக்கம் என்று எடுத்துக் கொண்டால் கண்டிப்பாக அது சில பல வார்த்தைகளை கொண்டு மாத்திரம் விவரித்து விட இயலாது பொதுவாகவே குர்ஆனுக்கும் குர்ஆனுடைய விரிவுரைக்கும் சமூகத்தில் மாபெரும் தாக்கம் உண்டு. அதை ஆரம்பத்திலேயே நான் குறிப்பிட்டு இருக்கிறேன் அரபுத் தமிழ் விரிவுரைகள் மூலமாக என்னென்ன தாக்கங்கள் ஏற்பட்டது என்கிற அம்சத்தை மட்டும் எடுத்துக் கொண்டால் கண்டிப்பாக இதிலே சில பேசப்படும் பொருண்மைகள் உண்டு.

இஸ்லாமிய கலாச்சாரத்தை அதன் அடிப்படை அம்சத்தோடு கொடுப்பது

குர்ஆன் என்பது இஸ்லாத்தில் அடிப்படை கோட்பாடு என்றால் அதன் கலாச்சார பகுதியாக குர்ஆன் விரிவுரைகள் விளங்குகிறது. இதில் அரபு தமிழ் விரிவுரைகள் மட்டும் விதிவிலக்கல்ல.

பெண்களுக்கான மார்க்கக்கல்வி

அன்றைய காலகட்டத்தில் பெண்களுக்கான கல்வி என்பது பெரும்பாலும் எட்டா கனியாகவே இருந்திருக்கிறது தாய்மொழி தமிழ் கூட எழுத படிக்க தெரியாத பெண்கள் இருந்திருக்கிறார்கள். ஏனென்றால் ஆண்களை போன்று பெண்களும் பள்ளி, கல்லூரிகளுக்கு சென்று கல்வி கற்றுக் கொள்ளக்கூடிய பொதுப்படையான வசதிகளும் குறைவாகவே இருந்தது. இதல்லாமல் பெண்களுக்கான பாதுகாப்பும் ஒரு பெரும் கேள்வி குறியாக இருந்தது. ஆங்கிலேயனுக்கு எதிரான சுதந்திர போரில் புரட்சிகளும் போராட்டங்களும் சமூகத்தின் அன்றாட பொழுதுகளாய் மாறிவிட்டதனால் பெண் கல்வியின் மீது குறிப்பாக பெண்களுடைய மார்க்க விழுமியங்கள் மீது உண்டான அக்கறை மிகுந்த தேவையாக இருந்தது. அந்த தேவையை யாருக்கும் இடர்யில்லாத வகையிலும் அதே சமயம் போதுமான அளவிலும் அந்த தேவையை அரபுத்தமிழ் நிறைவேற்றியிருக்கிறது.

ஆகவே கல்லூரிக்கும் பள்ளிக்கூடத்திற்கும் செல்ல முடியாத பெண்களுக்கு கூட அரபுத் தமிழ் வாயிலாக மார்க்க சட்டங்கள் நடைமுறைகள் பயிற்றுவிக்கப்பட்டது.

அரபிமீதான பற்றும் தமிழ்மீதான ஈர்ப்பும்

அரபி மூலம் திருக்குர்ஆனின் விரிவுரைகள், நபிகளாரின் ஹதீஸ்களை படிக்கும் ஆலிம்கள் அதே அரபி எழுத்துருவான அரபுதமிழில் படிக்கும் போதுதான் அரபி மீதான பற்றும் தமிழ் மீதான ஈர்ப்பும் ஒருங்கே வெளிபடுகிறது.

முக்கியமாக கூறுவதாக இருந்தால் குர்ஆன் விரிவுரையின் மூலமாக சமூகத்தின் கடைக்கோடிவரை அன்று மார்க்கத்தை குர்ஆனுடைய விளக்கத்தை எடுத்து செல்ல முடிந்திருக்கிறது என்றால் அது அரபுத்தமிழில் சாதனையாகவே பார்க்கப்படுகிறது.

அரபுத்தமிழின் தோற்றமும் தொழிற்பாடும் பற்றி மொழியியல் நோக்கில் ஆராய்ந்த பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக் கருத்தரங்கிற் சமர்ப்பித்த கட்டுரையொன்றில் அரபுத்தமிழின் `தோற்றத்துக்கு எடுத்துச் சொல்லும் காரணங்களில் மூன்று முக்கியமானவை என்று கூறி அவற்றை எடுத்துக் கூறியுள்ளார். அவை பின்வருமாறு[12]:

(i) "தமிழ் எழுத்தறிவில்லாத பெரும்பாலான பாமர முஸ்லிம்களுக்குச் சமய அறிவை ஊட்டுவதற்கு அது வாய்ப்பாக இருந்தது மதக்கடமை காரணமாக அரபு எழுத்துக்களை வாசிக்கப் பலரும் அறிந்திருந்தனர். அவர்களுக்கு அறபு மொழி தெரியாது. ஆனால் அறபு எழுத்துத் தெரியும். தமிழ் தெரியும் ஆனால், தமிழ் எழுத்தும் தெரியாது ஆகவே தெரிந்த மொழியை, தெரிந்த எழுத்துக்களைக் கொண்டு வாசிக்கப் பயிற்றுதல் எளிதானது."

(ii) "குர்ஆன் விளக்கவுரைகள் (தப்ஸீர்கள்) அரபு எழுத்தில் மாத்திரமே எழுதப்பட வேண்டும் என்ற கருத்து சமய அறிஞர்கள் மத்தியில் நெடுங்காலம் நிலவி வந்தது.

(iii) "அறபுச் சொற்களை ஒலிச்சிதைவும் பொருட் சிதைவுமின்றி எழுதுவதற்கு அறபுத்தமிழ் வாய்ப்பாக அமைந்தது.

பின்னாட்களில் தமிழ் மொழியின் பரிணாம வளர்ச்சியின் காரணமாக அரபுத் தமிழ் கண்டுகொள்ளப்படாமல் இருக்கலாம்.

முடிவுரை

அரபுத் தமிழின் இஸ்லாமிய இலக்கிய படைப்புகளை மீண்டும் அதே வடிவில் மக்களுக்கு கொண்டு செல்ல வேண்டும். குறிப்பாக அரபுத் தமிழ் குர்ஆன் விதிமுறைகள் மூல அரபுத் தமிழோடு தனித்தமிழில் விரிவாக்கம் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

அரபுத் தமிழை படிக்கத் தெரியாதவர் கூட அரபுத் தமிழோடு இருக்கக்கூடிய அந்த விரிவுரைகளை பார்க்கும் வாய்ப்பு கிடைக்கும். ஒரு காலத்தில் தனித்தன்மையால் கோலோச்சி நின்ற அரபுத்தமிழை அருங்காட்சியகங்கலோடு

நிறுத்திக் கொள்ளாமல், நூலகங்களோடு முடித்துக் கொள்ளாமல் இனிவரும் காலகட்டத்தில் அதை பயன்படுத்தக்கூடிய சூழலை உருவாக்குவது தான் இந்த அரபுத்தமிழ் கருத்தரங்கத்தின் நோக்கமாகும்

Referances : உசாத்துணைகள்

1. புனித அல்குர்ஆன்,

   The Holy Quran

2. மணவை முஸ்தபா, 1995, தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள், மீரா பப்ளிகேஷன்ஸ், , மதராஸ், தமிழ்நாடு.

   Maṇavai Mustafā, 1995, tamil̲il islāmiya ilakkiya vaṭivaṅkaḷ, mīrā papḷikēṣan̲s, , Madras, tamil̲nādu.

3. மசாஹிர், எஸ்.எம்.எம்., 2016, அரபு தமிழ் மொழியில் தமிழ் இலக்கணத்தின் பயன்பாடு, (தமிழ்), பிரவாகம் ஆராய்ச்சி இதழ், மொழிகள் துறை, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

   Mazāhir, S.M.M., 2016, Arabu tamil̲ mol̲iyil tamil̲ ilakkaṇattin̲ payan̲pāṭu, (tamil̲), Piravākam ārāycci ital̲, mol̲ikaḷ tur̲ai, ilaṅkai ten̲kil̲akku palkalaikkal̲akam.

4. பி.ம். கலீலுர்ரஹ்மான் மன்பஈ, 2013, தமிழகத்தின் தலைசிறந்த ஆலிம்கள், ஹமீதியா பப்ளிஷர்ஸ், தமிழ்நாடு.

   P.M. Khaleelur Rahman Manbyee, 2013, Tamil̲akattin̲ talaicir̲anta ālimkaḷ, Hameediya Publishers, Tamil̲nādu.

5. ப. சீனிவாசன் , 2008, இஸ்லாமிய தமிழ் இலக்கிய முதல் மாநில மாநாடு- ஆய்வு

   அல்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்புகளும் – விரிவுரைகளும், ப. சீனிவாசன், இஸ்லாமிய தமிழ் இலக்கிய கழகம், சென்னை,

   P. Sreenivasan, 2008, islāmiya tamil̲ ilakkiya mutal mānila mānāṭu- āyvu alkur'ān̲ tamil̲ mol̲ipeyarppukaḷum – virivuraikaḷum, pa. Cīn̲ivācan̲, islāmiya tamil̲ ilakkiya kal̲akam, Chennai,

6. முனைவர்.அ.நிகமத்துல்லாஹ் ,2021, திருக்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்புகள், , சென்னை

Munaivar.A.Nikamattullāh,2021, tirukkur'āṉ tamiḻ moḻipeyarppukaḷ, , Chennai.

அடிக்குறிப்புகள்

1. தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள், மணவை முஸ்தபா, , 1995 , பக்கம் - 194, மீரா பப்ளிகேஷன்ஸ், , மதராஸ், தமிழ்நாடு.
Tamiḻil islāmiya ilakkiya vaṭivaṅkaḷ, maṇavai mustapā, , 1995, pakkam - 194, mīrā papḷikēṣaṉs, , matarās, tamiḻnāṭu
2. மசாஹிர், எஸ்.எம்.எம்., 2016, அரபு தமிழ் மொழியில் தமிழ் இலக்கணத்தின் பயன்பாடு, (தமிழ்), பிரவாஹம் ஆராய்ச்சி இதழ், மொழிகள் துறை, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம், தொகுதி. 1, பக். 43-55
Macāhir, es.Em.Em., 2016, Arapu tamiḻ moḻiyil tamiḻ ilakkaṇattiṉ payaṉpāṭu, (tamiḻ), piravāham ārāycci itaḻ, moḻikaḷ tuṟai, ilaṅkai teṉkiḻakku palkalaikkaḻakam, tokuti. 1, Pak. 43-55
3. தமிழகத்தின் தலைசிறந்த ஆலிம்கள், மௌலவி ஆலிம் அப்ஸலுல் உலமா பி.ம்.கலீலுர்ரஹ்மான் மன்பஈ. M.A, M.Phil. பக்கம் - 8 & 9, ஹமீதியா பப்ளிஷர்ஸ், தமிழ்நாடு.
Tamiḻakattiṉ talaiciṟanta ālimkaḷ, maulavi ālim apsalul ulamā pi.M.Kalīlurrahmāṉ maṉpa'ī. M.A, M.Phil. Pakkam - 8& 9, hamītiyā papḷiṣars, tamiḻnāṭu.
4. ப.சீனிவாசன் , 2008, இஸ்லாமிய தமிழ் இலக்கிய முதல் மாநில மாநாடு- ஆய்வு அல்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்புகளும் - விரிவுரைகளும், பக்கம் : 390-401இஸ்லாமிய தமிழ் இலக்கிய கழகம், சென்னை
Pa.Srinivasan , 2008, islāmiya tamiḻ ilakkiya mutal mānila mānāṭu- āyvu alkur'āṉ tamiḻ moḻipeyarppukaḷum - virivuraikaḷum, pakkam: 390-401Islāmiya tamiḻ ilakkiya kaḻakam, ceṉṉai
5. தமிழகத்தின் தலைசிறந்த ஆலிம்கள், மௌலவி ஆலிம் அப்ஸலுல் உலமா பி.ம்.கலீலுர்ரஹ்மான் மன்பஈ. M.A, M.Phil. பக்கம் - 8 & 9, ஹமீதியா பப்ளிஷர்ஸ், தமிழ்நாடு.
Tamiḻakattiṉ talaiciṟanta ālimkaḷ, maulavi ālim apsalul ulamā pi.M.Kalīlurrahmāṉ maṉpa'ī. M.A, M.Phil. Pakkam - 8& 9, hamītiyā papḷiṣars, tamiḻnāṭu.
6. அ.ம.சாமி, 2008, இஸ்லாமிய தமிழ் இலக்கிய முதல் மாநில மாநாடு- ஆய்வுக்கோவை, அல்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்புகளும் - விரிவுரைகளும், பக்கம் : 305, இஸ்லாமிய தமிழ் இலக்கிய கழகம், சென்னை
A.Ma.Cāmi, 2008, islāmiya tamiḻ ilakkiya mutal mānila mānāṭu- āyvukkōvai, alkur'āṉ tamiḻ moḻipeyarppukaḷum - virivuraikaḷum, pakkam: 305, Islāmiya tamiḻ ilakkiya kaḻakam, ceṉṉai
7. தமிழகத்தின் தலைசிறந்த ஆலிம்கள், மௌலவி ஆலிம் அப்ஸலுல் உலமா பி.ம்.கலீலுர்ரஹ்மான் மன்பஈ. M.A, M.Phil. பக்கம் - 8 & 9, ஹமீதியா பப்ளிஷர்ஸ், தமிழ்நாடு.
Tamiḻakattiṉ talaiciṟanta ālimkaḷ, maulavi ālim apsalul ulamā pi.M.Kalīlurrahmāṉ maṉpa'ī. M.A, M.Phil. Pakkam - 8& 9, hamītiyā papḷiṣars, tamiḻnāṭu.

8. முனைவர்.அ.நிகமத்துல்லாஹ் ,2021, திருக்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்புகள், பக்கம் 22,23 , சென்னை.

Mun̲aivar.A.Nikamattullāh,2021, tirukkur'ān̲ tamil̲ mol̲ipeyarppukaḷ, pakkam 22,23, cen̲n̲ai

9. புனித அல்குர்ஆன், அல் கலம் அத்தியாயம் – 68 வசனம் – 2
Pun̲ita alkur'ān̲, al kalam attiyāyam – 68 vacan̲am – 2

10. புனித அல்குர்ஆன், அல் பகரா அத்தியாயம் – 2 வசனம் – 20
Pun̲ita alkur'ān̲, al pakarā attiyāyam - 2 vacan̲am - 20

11. புனித அல்குர்ஆன், அல் மாயிதா அத்தியாயம் – 5 வசனம் – 81
Pun̲ita alkur'ān̲, al māyitā attiyāyam – 5 vacan̲am – 81

12. பேராசிரியர் எம்.எம். உவைஸ் நினைவு மலர்.(தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையில் வெளியிடபட்டுள்ளது. வருடம் குறிப்பிடப்படவில்லை.)
Pērāciriyar em.Em. Uvais nin̲aivu malar.(Ten̲kil̲akkup palkalaikkal̲akam, ilaṅkaiyil veḷiyiṭapaṭṭuḷḷatu. Varuṭam kur̲ippiṭappaṭavillai.)

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023

Since 1951

திரு ஷா.முஹம்மது அஸ்ரின் & முனைவர் த.செல்வராசு P: 232-243

அதபு நாமாவில் இஸ்லாமிய மாதங்கள்
ISLAMIC MONTHS IN ATHABU NAAMA

ஷா. முஹம்மது அஸ்ரின் / S.Mohamed Azrin

முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலைத் தமிழாய்வுத்துறை

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி-20

முனைவர் த.செல்வராசு / Dr T.Selvaraju

ஆய்வு நெறியாளர் & இணைப்பேராசிரியர், முதுகலைத் தமிழாய்வுத்துறை,

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி - 20

ABSTRACT

The Hijri Calendar, known as the Islamic Calendar, Muslim Calendar, consists of twelve months namely, Muḥarram, Ṣafar, Rabīʿ al-Awwal, Rabīʿ al-Thānī, Jumādā al-Awwal, Jumādā al-Thānī, Rajab, Shaʿbān, Ramaḍān, Shawwāl, Dhū al-Qaʿdah, and Dhū al-Ḥijjah The Arabic-Tamil book Athabu Naama tells us to look at certain things and recite certain surahs (chapters) during these twelve months. It also emphasizes that certain historical events took place on certain days of these months and to follow fasting on those days. The scope and purpose of this article is to compile and classify these informations and explain them in a simple manner.

KEYWORDS: Islamic Months, Muḥarram, Ṣafar, Rabīʿ al-Awwal, Rabīʿ al-Thānī, Jumādā al-Awwal, Jumādā al-Thānī, Rajab, Shaʿbān, Ramaḍān, Shawwāl, Dhū al-Qaʿdah, and Dhū al-Ḥijjah

ஆய்வுச் சுருக்கம்:

இஸ்லாமிய நாட்காட்டி என்றும், முஸ்லிம் நாட்காட்டி என்றும் வழங்கப்படும் ஹிஜ்ரி நாட்காட்டியில் முஹர்ரம், ஸபர், ரபீயுல் அவ்வல், ரபீயுல் ஆகீர், ஜமாத்துல் அவ்வல், ஜமாத்துல் ஆகீர், ரஜபு, ஷஃபான், ரமலான், ஷவ்வால், துல்கஃதா, துல்ஹஜ் எனப் பன்னிரண்டு மாதங்கள் உள்ளன. இப்பன்னிரண்டு மாதங்களில் குறிப்பிட்ட பொருட்களைப் பார்க்குமாறும், குறிப்பிட்ட ஸூராக்களை ஓதுமாறும் அரபுத் தமிழ் நூலான அதபு நாமாவில் கூறப்பட்டுள்ளது. மேலும், சில மாதங்களில் குறிப்பிட்ட நாட்களில் சில வரலாற்று நிகழ்வுகள் நடைபெற்றதையும், அந்நாட்களில் நோன்பு நோற்குமாறும் அதபு நாமா வலியுறுத்துகிறது. இச்செய்திகளைத் தொகுத்து வகைப்படுத்தியும் எளிய முறையில் விளக்குவது இக்கட்டுரையின் களமாகவும் நோக்கமாகவும் அமைகின்றது.

குறிப்புச் சொற்கள்:

இஸ்லாமிய மாதங்கள், முஹர்ரம், ஸபர், ரபீயுல் அவ்வல், ரபீயுல் ஆகீர், ஜமாத்துல் அவ்வல், ஜமாத்துல் ஆகீர், ரஜபு, ஷஃபான், ரமலான், ஷவ்வால், துல்கஃதா, துல்ஹஜ்

முன்னுரை:

இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்து மதீனாவிற்கு இடம்பெயர்ந்த நிகழ்வு **'ஹிஜ்ரத்'** என்று அழைக்கப்படுகின்றது. அந்நிகழ்வினை அடிப்படையில் பன்னிரண்டு மாதங்களைக் கொண்ட நாட்காட்டி முறைக்கு **'ஹிஜ்ரி'** எனும் பெயர் சூட்டி இஸ்லாமியர்கள் பின்பற்றி வருகின்றனர். ஒவ்வொரு மாதங்களிலும் குறிப்பிட்ட பொருட்களைப் பார்க்குமாறும், குறிப்பிட்ட ஸூராக்களை (அத்தியாயங்களை) ஓதுமாறும், குறிப்பிட்ட நிகழ்வுகள் நிகழ்ந்த நாட்களில் நோன்பு நோற்குமாறும் அதபு நாமா குறிப்பிடுகிறது. இவற்றை இஸ்லாமிய மாதங்களில் பார்க்க வேண்டிய பொருட்களும் ஓத வேண்டிய ஸூராக்களும் (அட்டவணை-1), இஸ்லாமிய மாதங்களில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளன்று நோற்க வேண்டிய இதர நோன்புகள் (அட்டவணை-2) என இரு அட்டவணைகளாகக் கட்டுரையின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஹிஜ்ரி ஆண்டின் பன்னிரண்டு மாதங்கள் குறித்து அதபு நாமாவில் இடம்பெற்றுள்ள செய்திகளை வகைப்படுத்தி விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

இஸ்லாமிய மாதங்கள்:

முஹர்ரம், ஸபர், ரபீயுல் அவ்வல், ரபீயுல் ஆகீர், ஜமாத்துல் அவ்வல், ஜமாத்துல் ஆகீர், ரஜபு, ஷஃபான், ரமலான், ஷவ்வால், துல்கஃதா, துல்ஹஜ் ஆகிய பன்னிரண்டு மாதங்களைக் கொண்டதாக ஹிஜ்ரி நாட்காட்டி விளங்குகிறது. இம்மாதங்களின் எண்ணிக்கையினை இறைவன் தனது திருமறையான அல்குர்ஆனில் குறிப்பிட்டுள்ளதை,

"உண்மையாக இறைவனிடத்தில் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டாகும். வானத்தையும் பூமியையும் படைத்த நாள் முதல், இறைவனின் பதிவேட்டில் இவ்வாறே உள்ளது."[1]

என்பதால் அறிய முடிகின்றது. இப்பன்னிரண்டு மாதங்களில் துல்கஅதா, துல்ஹஜ், முஹர்ரம், ரஜப் ஆகிய நான்கு மாதங்களைப் புனிதமான மாதங்களாக

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
திரு ஷா.முஹம்மது அஸ்ரின் & முனைவர் த.செல்வராசு P: 232-243

இறைத்தூதரான முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹதீஸ்கள் காணப்படுகின்றன.

“வானங்களும், பூமியும் படைக்கப்பட்ட நாளில் இருந்த (பழைய) நிலைக்குக் காலம் திரும்பி விட்டது. வருடம் என்பது பன்னிரண்டு மாதங்களாகும். அவற்றில் நான்கு மாதங்கள் புனிதமானவை. (அவற்றில்) மூன்று மாதங்கள் தொடர்ந்து வருபவை. அவை துல் கஃதா, துல் ஹஜ் மற்றும் முஹர்ரம் ஆகியனவாகும். (மற்றொன்று) ஜமாதுல் ஆகிர், ஷஅபான் ஆகிய மாதங்களுக்கு இடையிலுள்ள ரஜப் மாதமாகும்.”[2]

மேற்கூறிய நான்கு புனிதமான மாதங்களோடு முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பிறந்து மரணித்த ரபீயுல் அவ்வல் மாதத்தை ஐந்தாகச் சேர்த்து, அம்மாதங்களில் நோன்பு நோற்குமாறு அரபுத் தமிழ் நூலான அதபு நாமாவில் கூறப்பட்டுள்ளது.


نَاضَاكَيْرُكَمْ اِنْتَقَّبْ وَرُشَتِّلْ اَيْنْتُ نُونْبُ وَيْتُّ
وَرَوِينُمْ يَاشَامُرُ وَرُكَضْ اِنْتَ نُونْبُكَجِيْ وَيْتَّالْ
اَللّٰهُ سُبْحَانَهُ وَتَعَالٰى فَتِنَايِرَمُ وَرُشَمْ نُونْبُ فِدِتَّ
نَنْمَيْمْ كَدُتُّ دِيْنْ دُنْيَاوُدَيْ كَارِيَعْكَجِيْ نِرَفَّمَاكِّ
وَيْقَّانْ

“இந்தப்படி வருஷத்தில் ஐந்து நோன்பு வைத்து வர வேணும். யாதாமொருருவர்கள் இந்த நோன்புகளை வைத்தால் அல்லாஹ் ஸுப்ஹானஹு தஅலா பதினாயிரம் வருஷம் நோன்பு பிடித்த நன்மையும் கொடுத்துத் தீன் துன்யாவுடைய காரியங்களையும் நிரப்பமாக்கி வைப்பான்”[3]

முஹர்ரம்:

ஹிஜ்ரி நாட்காட்டியின் முதல் மாதமாக முஹர்ரம் விளங்குகிறது. இம்மாதத்தின் 10ஆம் நாள் **‘ஆஷுரா நாள்’** எனப்படுகின்றது. முஸ்லிம்களுக்கு ரமலான் நோன்பு கடமையாக்கப்படும் முன்பே முஹர்ரம் மாதத்தில் நோன்பு நோற்பதை யூதர்கள் கடமையாகக் கொண்டனர். அவர்கள் பிறை 10 அன்று மட்டும் நோன்பு நோற்றார்கள். அவர்களுக்கு மாற்றமாக பிறை 9 மற்றும் 10 ஆகிய இரு நாட்கள் நோன்பு வைத்திடுமாறு இஸ்லாமியர்களை நபிகள் நாயகம் வலியுறுத்தினார். இந்த ஆஷுரா நாளில்தான் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின்

பிறப்பு, நம்ரூதின் எரிகுண்டத்திலிருந்து விடுதலை பெற்றது, இறைவனால் **'கலீல்'** என்னும் பட்டம் சூட்டப்பட்டது போன்ற வரலாற்று நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன. மேலும், நபி அய்யூப் (அலை) நோயில் இருந்து குணம் அடைந்தது, ஃபிர்அவ்ன் கூட்டத்தார் நீரில் மூழ்கடிக்கப்பட்டது, நபி ஈஸா (அலை) விண்ணில் உயர்த்தப்பட்டது, நபி ஆதம் மற்றும் ஹவ்வா ஆகியோர் படைக்கப்பட்டது, நபி நூஹ் (அலை) கப்பலில் இருந்து கரை இறங்கியது, நபி யூனுஸ் (அலை) மீன் வயிற்றிலிருந்து வெளிவந்தது, முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பேரரரான ஹல்ரத் ஹுஸைன் (ரலி) அவர்கள் கர்பலா களத்தில் இன்னுயிரைத் தியாகம் செய்தது ஆகிய வரலாற்று நிகழ்வுகளும் இந்த ஆஷுரா நாளிலே நிகழ்ந்துள்ளது. எனவே, இத்தகைய சிறப்புமிக்க முஹர்ரம் மாதத்தில் தங்கத்தைப் பார்க்குமாறும், அர்ரஹ்மான் சூராவை ஓதுமாறும், நோன்பு நோற்குமாறும் அதபு நாமா கூறுகிறது.

"முஹர்ரம் மாதம் பிறையை யாதாமொருவன் கண்டால் தங்கத்தைப் பார்க்கவும், அர் ரஹ்மான் ஸூராவை ஓதவும்"[4]

"முஹர்ரம் மாதம் இருபத்திரண்டாம் நாள் நோன்பு வைக்கிறதும் அதில் ஆண்டவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய நபிப் பட்டம் தரித்த நாளாயிருக்கும்"[5]

ஸபர்:

இது ஹிஜ்ரி நாட்காட்டியின் இரண்டாம் மாதமாக விளங்குகிறது. இம்மாதத்தின் இறுதி புதன் அன்று நபி ஹூத் (அலை) அவர்களை நிராகரித்த ஆத் சமுதாயம் புயலால் அழிக்கப்பட்டனர். இதன் காரணமாக இம்மாதத்தின் இறுதி புதன்கிழமைக்கு **'ஒடுக்கத்துப் புதன்'** எனப் பெயர் ஏற்பட்டது. இதனால் **'பீடை மாதம்'**, **'துன்பம் தரும் மாதம்'** எனக் கருதி முற்கால அரேபியர்கள் எவ்வித நற்செயல்களையும் இம்மாதத்தில் தொடங்குவதில்லை. முஹம்மது நபியின் தலைமையில் போருக்குச் சென்று முஸ்லிம்கள் வெற்றியுடன் திரும்பிய பிறகே **'ஸ்பருல் முளஃப்ஃபர்' (மகிழ்ச்சி அளிக்கக் கூடிய ஸபர்)** என வழங்கப்பட்டது. இத்தகைய சிறப்புமிக்க ஸபர் மாதத்தில் கண்ணாடியைப் பார்க்குமாறும், ஷூறா சூராவை ஓதுமாறும் அதபு நாமா கூறுகிறது.

"ஸபர் மாதம் பிறையைக் கண்டால் கண்ணாடியைப் பார்க்கவும், ஹாமீம் அய்ன்ஸீன்காஃப் உடைய ஸூராவை ஓதவும்"[6]

ரபீயுல் அவ்வல்:

இது ஹிஜ்ரி நாட்காட்டியின் மூன்றாம் மாதமாக விளங்குகிறது. இறுதித் தூதரான முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இவ்வுலகில் பிறந்ததும், இவ்வுலகை விட்டு மறைந்ததும் இம்மாதத்தில்தான். இத்தகைய சிறப்புமிக்க ரபீயுல் அவ்வல் மாதத்தில் ஓடுகிற தண்ணீரைப் பார்க்குமாறும், முஜாதலா சூராவை ஓதுமாறும், 12ஆம் நாளில் நோன்பு நோற்குமாறும் அதபு நாமா கூறுகிறது.

“ரபீயுல் அவ்வல் மாதம் பிறையைக் கண்டால் ஓடுகிற தண்ணீரைப் பார்க்கவும், முஜாதலாவுடைய ஸூறாவை ஓதவும்”[7]

“ரபீயுல் அவ்வல் மாதம் பன்னிரண்டாம் நாள் நோன்பு வைக்கிறதும் அதில் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வஃபாதான நாளாயிருக்கும்”[8]

ரபீயுல் ஆகீர்:

இது ஹிஜ்ரி நாட்காட்டியின் நான்காம் மாதமாக விளங்குகிறது. இம்மாதத்திலே நபிகள் நாயகத்தின் பேரரான ஹுசைன் (ரலி) அவர்களின் வழிவந்த **‘முஹ்யுத்தீன் ஆண்டவர்’** என அழைக்கப்டும் சூஃபி ஞானியான முஹ்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் மறைந்தார்கள். இம்மாதத்தில் செம்பலி ஆட்டைப் பார்க்குமாறும், முல்க் சூராவை ஓதுமாறும் அதபு நாமா கூறுகிறது.

“ரபீயுல் ஆகிர் மாதம் பிறையைக் கண்டால் செம்பலி ஆட்டைப் பார்க்கவும், தபாரகல்லதி பியதிஹில் முல்குடைய ஸூறாவை ஓதவும்”[9]

ஜமாத்துல் அவ்வல்:

இது ஹிஜ்ரி நாட்காட்டியின் ஐந்தாம் மாதமாக விளங்குகிறது. இம்மாதத்தில்தான் அன்னை கதீஜா (ரலி) அவர்களை முஹம்மது நபி (ஸல்) அவர்கள் திருமணம் செய்துக் கொண்டார்கள். இத்தகைய சிறப்புமிக்க ஜமாத்துல் அவ்வல் மாதத்தில் வெள்ளியைப் பார்க்குமாறும், முஜ்ஜமில் சூராவை ஓதுமாறும் அதபு நாமா கூறுகிறது.

“ஜமாத்துல் அவ்வல் மாதம் பிறையைக் கண்டால் வெள்ளியைப் பார்க்கவும், முஜ்ஜமில் உடைய ஸூறாவை ஓதவும்”[10]

ஜமாத்துல் ஆகீர்:

இது ஹிஜ்ரி நாட்காட்டியின் ஆறாம் மாதமாக விளங்குகிறது. இம்மாதத்திலேதான் அண்ணல் நபி (ஸல்) - கதீஜா (ரலி) தம்பதியினருக்கு ஃபாத்திமா (ரலி) அவர்கள் மகளாகப் பிறந்தார்கள். இத்தகைய சிறப்புமிக்க ஜமாத்துல் ஆகீர் மாதத்தில் வயதான மனிதர்களைப் பார்க்குமாறும், முத்தஸிர் சூராவை ஓதுமாறும் அதபு நாமா கூறுகிறது.

“ஜமாத்துல் ஆகிர் மாதம் பிறையைக் கண்டால் வயசு சென்ற மனிதர்களைப் பார்க்கவும், முத்தஸிர் உடைய ஸூராவை ஓதவும்”[11]

ரஜபு:

இது ஹிஜ்ரி நாட்காட்டியின் ஏழாவது மாதமாக விளங்குகிறது. **‘ரஜப்’** என்னும் சொல்லிலுள்ள மூன்று அரபி எழுத்துகள் **ரஹ்மத் (அருள்), ஜீத் (கொடை), பிர் (தயாளம்)** ஆகியவற்றைக் குறிக்கின்றன. மேலும், இறைவனின் அருள் இம்மாதத்தில் பொழிவதால் **‘பொழிதல்’** என்றும், இம்மாதத்தில் போர் நிறுத்தப்பட்டு ஆய்தம் ஒலிகள் கேட்காமையால் **‘செவிடு’** என்றும் **‘ரஜப்’** என்னும் சொல்லுக்குப் பொருள் கூறப்படுகின்றன. இம்மாதத்தின் 27ஆம் நாளிலேயே **‘மிஃராஜ்’** எனப்படும் விண்ணுலகப் பயணத்தை முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்டார்கள். இத்தகைய சிறப்புமிக்க ரஜப் மாதத்தில் குர்ஆனைப் பார்க்குமாறும், யாஸீன் சூராவை ஓதுமாறும், 27ஆம் நாளில் நோன்பு நோற்குமாறும் அதபு நாமா கூறுகிறது.

“ரஜபு மாதம் பிறையைக் கண்டால் குர்ஆனைப் பார்க்கவும், யாஸீன் உடைய ஸூராவை ஓதவும்”[12]

“ரஜபு மாதம் இருபத்து ஏழாம் நாள் நோன்பு வைக்கிறதும் அதில் நமது ஆண்டவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மிஃராஜுக்குப் போன நாளாயிருக்கும்”[13]

ஷஃபான்:

இது ஹிஜ்ரி நாட்காட்டியின் எட்டாவது மாதமாக விளங்குகிறது. **‘பங்கிடுதல்’** என்னும் பொருள் கொண்ட **‘முன்ஷப்’** என்ற சொல்லின் அடியாக **‘ஷஃபான்’** என்னும் சொல் தோன்றியது. இறைவனின் சோதனையால் வரலாறு காணாத தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டுக் குடும்பங்களை விட்டுத் தண்ணீர்த் தேடப் பிரிந்து சென்ற காரணத்தால், இம்மாதத்திற்குப் **‘பிரிந்துச் சென்றிடும் மாதம்’** என்ற பெயரும் உண்டு. இரண்டாம் கலீபாவும், நபிகள் நாயகத்தின் மாமனாருமான ஹல்ரத் உமர் (ரலி) அவர்கள்

இம்மாதம் 23-ஆம் நாளில் பிறந்துள்ளார்கள். 15-ஆம் இரவு சிறப்பு மிகுந்த **'ஷபே பராஅத்'** (பராஅத் இரவாக) இருப்பதால் இம்மாதம் **'அல்மு அள்ளம்'** என்றும் வழங்கப்படுகிறது. **'பராஅத்'** என்னும் சொல்லானது **'புரூஉ' (விடுதலைப் பெறுதல்)** என்ற சொல்லின் அடியாகத் தோன்றியது. இப்பராஅத் இரவானது பாவங்களில் இருந்து மன்னிக்கப்பட்டு விடுதலை பெறும் இரவாக உள்ளது. இத்தகைய சிறப்புமிக்க ஷஃபான் மாதத்தில் பச்சை புல் பூமியைப் பார்க்குமாறும், ஸாத் சூராவை ஓதுமாறும் அதபு நாமா கூறுகிறது.

"ஷஃபான் மாதம் பிறையைக் கண்டால் பச்சைப் புல் பூமியைப் பார்க்கவும், ஷாத் உடைய ஸூராவை ஓதவும்"[14]

ரமலான்:

இது ஹிஜ்ரி நாட்காட்டியின் ஒன்பதாவது மாதமாக விளங்குகிறது. **'கரித்தல்', 'பொசுக்குதல்'** ஆகிய பொருள்களை உணர்த்தும் **'ரமல்'** என்னும் சொல்லடியாகப் பிறந்தது **'ரமலான்'** என்ற சொல்லாகும். எனவே, இம்மாதமானது தீமைகளைப் பொசுக்கி மனிதர்களைக் காக்கும் மாதமாக விளங்குகிறது. இம்மாதம் முழுவதும் நோன்பு நோற்பது இஸ்லாமியர்களின் மூன்றாவது கடமையாகவுள்ளது. புனிதமிகு வேதமான குர்ஆன் வசனம் இம்மாத 27-ஆம் நாள் இரவில் நபிகள் நாயகத்திற்கு இறக்கப்பட்டதால், அவ்விரவு **'லைலத்துல் கத்ர்'** என்று அழைக்கப்படுகின்றது. இறைமறையான் அல்குர்ஆனிலும் இம்மாதம் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

"ரமலான் மாதம் எத்தகையதென்றால் அதில் தான் மனிதர்களுக்கு (முழுமையான வழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும் (நன்மை - தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல் குர்ஆன் இறக்கியருளப் பெற்றது ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும்"[15]

மேலும், இம்மாதத்தின் முதல் இரவன்று நபி இப்ராஹிம் (அலை) அவர்களுக்கு சுஹ்ஃபுகளும், 6-ஆம் நாளன்று நபி மூஸா (அலை) அவர்களுக்கு தௌராத் வேதமும், 24-ஆம் நாளன்று நபி தாவூத் (அலை) அவர்களுக்கு ஜபூர் வேதமும், 13-ஆம் நாளன்று நபி ஈஸா (அலை) அவர்களுக்கு இன்ஜீல் வேதமும், 27-ஆம் நாள் இரவில் நபி முஹம்மது (ஸல்) அவர்களுக்கு குர்ஆன் வேதமும் அருளப்பட்டன.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
திரு ஷா.முஹம்மது அஸ்ரின் & முனைவர் த.செல்வராசு P: 232-243

இறைத்தூதர்களுக்கு வேதங்கள் அருளப்பட்ட சிறப்புமிக்க ரமலான் மாதத்தில் கத்தியைப் பார்க்குமாறும், முஹம்மத் சூராவை ஓதுமாறும் அதபு நாமா கூறுகிறது.

“ரமலான் மாதம் பிறையைக் கண்டால் கத்தியைப் பார்க்கவும், முஹம்மதுடைய ஸூராவை ஓதவும்”[16]

ஷவ்வால்:

இது ஹிஜ்ரி நாட்காட்டியின் பத்தாவது மாதமாக விளங்குகிறது. அறியாமைக் காலத்தில் வாழ்ந்த முற்கால அரபிகள் இம்மாதத்தில் திருமணம் செய்வதைத் தீங்காகக் கருதித் தவிர்த்துவந்தனர். இம்மூடநம்பிக்கையைக் கட்டுடைக்கும் நோக்கில் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களின் மகளான அன்னை ஆயிஷா (ரலி) அவர்களை இம்மாதத்திலேயே நபிகளார் திருமணம் செய்தார்கள். மேலும், ரமலான் மாதக் கடமையான முப்பது நோன்பிற்குப் பிறகு இம்மாதத்தில் முதல் ஆறு நாட்கள் நோன்பு நோற்பதை நபிகளார் ஊக்குவித்துள்ளார்கள். இத்தகைய சிறப்புமிக்க ஷவ்வால் மாதத்தில் பச்சை புடவையைப் பார்க்குமாறும், ஃபத் சூராவை ஓதுமாறும் அதபு நாமா கூறுகிறது.

“ஷவ்வால் மாதம் பிறையைக் கண்டால் பச்சைப் பிடவையைப் பார்க்கவும், இன்னா ஃபதஹ்னா உடைய ஸூராவை ஓதவும்”[17]

துல் கஃதா:

இது ஹிஜ்ரி நாட்காட்டியின் பதினொன்றாம் மாதமாக விளங்குகிறது. இம்மாதத்தின் ஒரு நாளில் நோன்பு நோற்பவருக்கு **‘ஹஜ்ஜெம்ப்ரூர்’** (ஒப்புக் கொள்ளப்பட்ட ஹஜ்) உடைய நன்மைகளை அல்லாஹ் எழுதுவதாக நபிகளார் நவின்றுள்ளார்கள். இத்தகைய சிறப்புமிக்க துல் கஃதா மாதத்தில் சிறு ஆண் குழந்தையைப் பார்க்குமாறும், நூன் சூராவை ஓதுமாறும் அதபு நாமா கூறுகிறது.

“துல் கஃதா மாதம் பிறையைக் கண்டால் சிறு ஆண் குழந்தையைப் பார்க்கவும், நூன் வல்கலமி உடைய ஸூராவை ஓதவும்”[18]

“துல்கஃதா மாதம் இருபத்து அஞ்சாம் நாள் நோன்பு வைக்கிறதும் அதில் கஃபா ஷரீபுக்கு தளம் போட்ட நாளாயிருக்கும்”[19]

துல்ஹஜ்:

இது ஹிஜ்ரி நாட்காட்டியின் இறுதி மாதமாக விளங்குகிறது. நபி இப்ராஹிம் (அலை) அவர்கள் தனது மகனான இஸ்மாயில் (அலை) அவர்களை அறுத்துப் பலியிட முயன்ற நிகழ்வினை அடிப்படையாகக் கொண்டு இம்மாத 10-ஆம் நாள்

'ஈதுல் அல்ஹா' என்னும் பெயரில் ஈகைத் திருநாளாக இஸ்லாமியர்களால் கொண்டாடப்படுகின்றது. மேலும், இம்மாதத்தில்தான் நபி மூஸா (அலை) இறைவனுடன் உரையாடியது, நபி ஆதம் (அலை) அல்லாஹ்வினால் மன்னிக்கப்பட்டது, நபி ஹூத் (அலை) துன்பத்தில் இருந்து விடுதலைப் பெற்றது, நபிகள் நாயகத்தின் மகனான இப்ராஹிம் இறப்பு, முதல் நாளில் நபி இப்ராஹிம் (அலை) பிறப்பு, 26-ஆம் நாளன்று ஹல்ரத் உமர் (ரலி) மறைவு போன்ற வரலாற்று நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன. இத்தகைய சிறப்புமிக்க துல் ஹஜ் மாதத்தில் சிறு பெண் குழந்தையைப் பார்க்குமாறும், ஃபஜ்ர் சூராவை ஓதுமாறும் அதபு நாமா கூறுகிறது.

"துல் ஹஜ் மாதம் பிறையைக் கண்டால் சிறு பெண் குழந்தையைப் பார்க்கவும், வல் ஃபஜ்ரி உடைய ஸூராவை ஓதவும்"[20]

"துல்ஹஜ் மாதம் பதினெட்டாம் நாள் நோன்பு வைக்கிறதும் அதில் மேல்படி கஃபா ஷரீபை கட்டி முடித்த நாளாயிருக்கும்"[21]

முடிவுரை:

ஒவ்வொரு இஸ்லாமிய மாதத்திலும் வரலாற்று நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளதையும், ஓத வேண்டிய குர்ஆன் அத்தியாயங்களையும் அதபு நாமா வழி அறியமுடிகின்றது. அச்செய்திகளை அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் இரு அட்டவணைகளாகக் கட்டுரையின் இறுதியில் பகுத்துக் காட்டப்பட்டுள்ளன. தீமைகள் மன்னிக்கபப்டுவதற்கும், ஒழிக்கப்படுவதற்கும், தடுக்கப்படுவதற்கும் ஏற்றவையாகச் சில இஸ்லாமிய மாதங்கள் மதிக்கப்பட்டாலும், எந்தவொரு மாதமும் நற்செயல்கள் செய்வதற்குத் தகுதியற்ற மாதமாகக் கருதப்படவில்லை என்பதை இக்கட்டுரை முன்வைக்கின்றது.

சான்றெண் விளக்கம்:

1. அல்குர்ஆன் 9:36
2. நூல்: புஹாரி, ஹதீஸ் எண்கள்: 3197, 4406, 4662, 5550, 7447
3. பெரிய நூரு நாமா அதபு நாமா, ப.78
4. மேலது, ப.79
5. மேலது, ப.78
6. மேலது, ப.79
7. மேலது, பக்.79-80
8. மேலது, ப.79

9. மேலது, ப.80
10. மேலது, ப.80
11. மேலது, ப.80
12. மேலது, ப.80
13. மேலது, ப.79
14. மேலது, ப.80
15. அல்குர்ஆன் 2:185
16. பெரிய நூரு நாமா அதபு நாமா, ப.80
17. மேலது, ப.80
18. மேலது, ப.80
19. மேலது, ப.78
20. மேலது, பக்.80-81
21. மேலது, ப.78

முதன்மை நூல்:

1. பெரிய நூரு நாமா அதபு நாமா, பஷாரத் பப்ளிஷர்ஸ், சென்னை-01.

துணைநின்ற நூல்:

1. கமாலுத்தீன் ஆலிம். வா, 12 இஸ்லாமிய மாதங்களின் சிறப்புகள், பஷாரத் பப்ளிஷர்ஸ், சென்னை-01.

துணைநின்ற இணையதளங்கள்:

1. https://www.dinamani.com/weekly-supplements/vellimani/2016/jul/15/மாதங்களின்-மகத்துவம்-2541529.html
2. http://www.mailofislam.com/tm_article_-_muharram_mathathin_sirappugal
3. https://www.maalaimalar.com/devotional/islam/2018/09/04102055/1188789/islam-worship.vpf
4. https://sufimanzil.org/category/specialdays/
5. https://www.dinakaran.com/Aanmeegam_Detail.asp?Nid=28262
6. http://www.tharjuma.com
7. https://quranandhadis.com/ta/category/bukhari/

Reference Books & Websites:

1. Periya Nooru Naama Athabu Naama, Basharath Publishers, Chennai-01
2. Kamaluddhin Aalim. V, 12 Ilamiya Maathangalin Sirappugal, Basharath Publishers, Chennai-01

3. https://www.dinamani.com/weekly-supplements/vellimani/2016/jul/15/மாதங்களின்-மகத்துவம்-2541529.html
4. http://www.mailofislam.com/tm_article_-_muharram_mathathin_sirappugal
5. https://www.maalaimalar.com/devotional/islam/2018/09/04102055/1188789/islam-worship.vpf
6. https://sufimanzil.org/category/specialdays/
7. https://www.dinakaran.com/Aanmeegam_Detail.asp?Nid=28262
8. http://www.tharjuma.com
9. https://quranandhadis.com/ta/category/bukhari/

إِنِ مُحَرَّمْ مَاثَمْ فِرَيْ يَاثَامُرُوَنْ كَبْنْدَالْ تَچْكَتِّيْ فَارْ
كَوُمْ اَلرَّحْمٰنُ سُوْرَةْ وَيْ أُوثُوْمْ صَفَرْ مَاثَمْ فِرَيْ كَبْنْدَالْ
كَبَّادِيْ فَارْكَوُمْ حٰمٓ عٓسٓقٓ أُدَيْ سُوْرَةْ وَيْ أُوثُوْمْ
رَبِيْعُ الْاَوَّلْ مَاثَمْ فِرَيْيَكَّبْنْدَالْ أُوْدُكِرَتَنِّيْرَيْ فَارْكَوُمْ

مُجَادِلَة أُدَيْ سُوْرَةْ وَيْ أُوثُوْمْ رَبِيْعُ الْاٰخِرْ مَاثَمْ فِرَيْ
كَبْنْدَالْ چِمْقَلِ أُدَّيْ فَارْكَوُمْ تَبَارَكَ الَّذِيْ بِيَدِهِ الْمُلْكُ
أُدَيْ سُوْرَةْ وَيْ أُوثُوْمْ جُمَادُ الْاَوَّلْ مَاثَمْ فِرَيْيَكَبْنْدَالْ
وِتِّيْيَيْ فَارْكَوُمْ مُزَّمِّلْ أُدَيْ سُوْرَةْ وَيْ أُوثُوْمْ جُمَادُ
الْاٰخِرْ مَاثَمْ فِرَيْ كَبْنْدَالْ وَيَسْ چِنْرَ مَنِثْرْكَچَيْ
فَارْكَوُمْ مُدَّثِّرْ أُدَيْ سُوْرَةْ وَيْ أُوثُوْمْ رَجَبْ مَاثَمْ
فِرَيْ كَبْنْدَالْ قُرْآنْ فَارْكَوُمْ يٰسٓ أُدَيْ سُوْرَةْ وَيْ
أُوثُوْمْ شَعْبَانْ مَاثَمْ فِرَيْ كَبْنْدَالْ پِچِّيْ فُلْ بُوْمِيْ
فَارْكَوُمْ صٓ أُدَيْ سُوْرَةْ وَيْ أُوثُوْمْ رَمَضَانْ مَاثَمْ
فِرَيْ كَبْنْدَالْ كَتِّيْ فَارْكَوُمْ مُحَمَّدُ أُدَيْ سُوْرَةْ وَيْ
أُوثُوْمْ شَوَّالْ مَاثَمْ فِرَيْ كَبْنْدَالْ فَچِّيْ فِدْ وَيِيْ
فَارْكَوُمْ إِنَّا فَتَحْنَا أُدَيْ سُوْرَةْ وَيْ أُوثُوْمْ ذِي الْقَعْدَةْ
مَاثَمْ فِرَيْ كَبْنْدَالْ چِرُ ابْكُضَنْتَيْ فَارْكَوُمْ نٓ وَالْقَلَمِ
أُدَيْ سُوْرَةْ وَيْ أُوثُوْمْ ذِي الْحَجّ مَاثَمْ فِرَيْ كَبْنْدَالْ
چِرُفِنْ كُضَنْتَيْ فَارْكَوُمْ وَالْفَجْرِ أُدَيْ سُوْرَةْ وَيْ

வ.எண்	இஸ்லாமிய மாதம்	பார்க்க வேண்டிய பொருள்	ஓத வேண்டிய ஸூரா
1.	முஹர்ரம்	தங்கம்	ஸூரா அர்ரஹ்மான்
2.	ஸபர்	கண்ணாடி	ஸூரா ஷூறா
3.	ரபீயுல் அவ்வல்	ஓடுகிற தண்ணீர்	ஸூரா முஜாதலா
4.	ரபீயுல் ஆகீர்	செம்பலி ஆடு	ஸூரா முல்க்
5.	ஜமாத்துல் அவ்வல்	வெள்ளி	ஸூரா முஜ்ஜமில்
6.	ஜமாத்துல் ஆகீர்	வயதான மனிதர்கள்	ஸூரா முத்தஸீர்
7.	ரஜபு	குர்ஆன்	ஸூரா யாஸீன்
8.	ஷஃபான்	பச்சை புல் பூமி	ஸூரா ஸாத்
9.	ரமலான்	கத்தி	ஸூரா முகமது
10.	ஷவ்வால்	பச்சை புடவை	ஸூரா ஃபத்
11.	துல் கஃதா	சிறு ஆண் குழந்தை	ஸூரா நூன்
12.	துல்ஹஜ்	சிறு பெண் குழந்தை	ஸூரா ஃபஜ்ர்

அட்டவணை 1: இஸ்லாமிய மாதங்களில் பார்க்க வேண்டிய பொருட்களும் ஓத வேண்டிய ஸூராக்களும்

வ.எண்	இஸ்லாமிய மாதம்	நோன்பு நோற்க வேண்டிய பிறை	நடைபெற்ற முக்கிய நிகழ்வு
1.	முஹர்ரம்	22ஆம் பிறை	நபிகள் நாயகத்திற்கு நபிப்பட்டம் தரித்தது
2.	துல் கஃதா	25ஆம் பிறை	கஃபா ஷரீஃபிற்குத் தளம் அமைத்தது
3.	துல் ஹஜ்	18ஆம் பிறை	கஃபா ஷரீஃபைக் கட்டி முடித்தது
4.	ரஜப்	22ஆம் பிறை	நபிகள் நாயகம் மிஃராஜிற்குச் சென்றது
5.	ரபீயுல் அவ்வல்	12ஆம் பிறை	நபிகள் நாயகம் மரணித்தது

அட்டவணை 2: இஸ்லாமிய மாதங்களில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளன்று நோற்க வேண்டிய இதர நோன்புகள்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
திரு முஹம்மது ஆதில் முர்ஷித் ப.அ & முனைவர் க.சிராஜுதீன் P: 244-252

சிம்துஸ் ஸிப்யானில் உளூ தொடர்பான செய்திகள்

Ablution (Wudu’) related informations in Simthus Sibyaan

முஹம்மது ஆதில் முர்ஷித் ப.அ / Mohamed Adhil Murshidh P.A
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலைத் தமிழாய்வுத்துறை,
ஜமால் முகமது கல்லூரி (த), திருச்சிராப்பள்ளி-20.
adhilmurshidh003@gmail.com +91 7867941331.

முனைவர் க.சிராஜுதீன் / Dr.K.Sirajudeen
ஆய்வு நெறியாளர் & உதவிப்பேராசிரியர், முதுகலைத் தமிழாய்வுத்துறை,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-20
sirajudeensvmtamil@gmail.com +91 98657 21142

Abstract:

Cleanliness is essential for every humans. Many examples of cleanliness are mentioned in Islam. Keeping the body and mind clean before starting any activity is mandatory in Islam. Wudu’ is the name for cleaning the certain parts of the body with water. The Arabic-Tamil book Simthus Sibyaan deals with the duties of Islam, the breaking of ablution, the method of performing ablution, the importance of ablution, the actions that breaks ablution and the benefits of ablution.

Keywords: Arabu Tamil, Simthus Sibyan, Cleanliness, Wudu’

ஆய்வுச்சுருக்கம் :

மனிதனுக்குத் தூய்மை இன்றியமையா ஒன்று. இஸ்லாத்தில் தூய்மைக்கு பல சான்றுகள் கூறப்பட்டுள்ளன. எந்த ஒரு செயலைச் செய்ய தொடங்கும் முன்னர் உடலையும், உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருத்தல் இஸ்லாத்தில் கட்டாயக் கடமையாகும். உடலைச் சுத்தம் செய்வதற்கு உளூ என்று பெயர். இஸ்லாத்தின் கடமைகள், உளூவின் விளக்கம், உளூச் செய்யும் முறை, உளூவின் பர்ளுகள், உளூவை முறிக்கக் கூடிய செயல்கள், உளூவின் நன்மைகள் ஆகியவை குறித்துக் கூறும் அரபுத் தமிழில் எழுதப்பட்ட இஸ்லாமிய சட்ட விளக்க நூலான ஸிம்துஸ் ஸிப்யான் எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைகிறது.

குறிப்புச் சொற்கள் : அரபுத் தமிழ், ஸிம்துஸ் ஸிப்யான், சுத்தம், உளூ

முன்னுரை :

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் தூய்மை இன்றியமையா ஒன்றாகும். உலகில் உள்ள எல்லாச் சமயங்களும் மனிதன் தூய்மையைக் கடைபிடிக்க அறிவுறுத்துகின்றன. இஸ்லாம் மார்க்கமானது சுத்தத்திற்கு மிக முக்கியத்துவம் தருகிறது. சுத்தம், ஈமான் எனப்படும் இறை நம்பிக்கையில் பாதியாகக் கருதப்படுகிறது. உடலும், உள்ளமும் தூய்மையாக இருந்தால் இம்மை வாழ்விலும், மறுமை வாழ்விலும் உயர்வு பெறலாம் என மார்க்கம் சுட்டுகிறது. எந்த ஒரு செயலைச் செய்யும் முன்னும் உடலைத் தூய்மை செய்து கொள்வது இஸ்லாத்தில் கட்டாயக் கடமையாகும். இதற்கு **உளூ** என்று பெயர். இதனைத் **தமிழில் அங்கசுத்தி** என்றழைப்பர். இக்கட்டுரையானது, அரபுத்தமிழ் நூலான சிம்துஸ் ஸிப்யானில் உளூ தொடர்பாகக் கூறப்பட்டுள்ள செய்திகளைத் திருமறையான அல்குர்ஆனையும், நபிமொழிகளின் தொகுப்புகளான ஹதீஸ் நூல்களையும் சான்றாகக் கொண்டு விளக்கி ஆராய முனைகின்றது.

இஸ்லாத்தின் கடமைகளும் உளூவும் :

ஐந்து கடமைகளைக் கொண்டு விளங்கும் மார்க்கம் இஸ்லாம். அவை,

1. கலிமா
2. தொழுகை
3. நோன்பு
4. ஜகாத்
5. ஹஜ்ஜு

இத்தகு இஸ்லாம் மார்க்கத்தில் இரண்டாவது கடமையாகத் திகழ்வது தொழுகை. தினமும் ஐவேளை இறைவனைத் தொழுவது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கட்டாயக் கடமையாக்கப்பட்டுள்ளது. தொழுகை மனிதனின் உள்ளத்தையும் உடலையும் தீமைகளில் இருந்து காத்துத் தூய்மையாக்குகின்றது. இத்தொழுகையை நிறைவேற்றும் முன்பு தண்ணீரைக் கொண்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய வழியில் உடல் உறுப்புகளைச் சுத்தம் செய்வது ஒவ்வொரு இஸ்லாமியருக்கும் கடமையாகிறது. தண்ணீர் இல்லாத பட்சத்தில் “தயமம்” என்று கூறப்படும் முறையில் உடலைச் சுத்தம் செய்வது அவசியம்.

உளூவின் விளக்கம்:

அரபி மொழியில் **'உளூ'** என்ற சொல்லுக்கு **'வெளிச்சம்'**, **'பிரகாசம்'** ஆகிய பொருள்கள் உள்ளன. இச்சொல்லானது **'அங்கசுத்தி'** எனத் தமிழ்படுத்திப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. உளூ என்பது இஸ்லாமிய மார்க்கத்தில் அல்லாஹ்வை (இறைவனை) வணங்குவதற்கு முன்பாக, உடலில் குறிப்பிட்ட உறுப்புகளைத் தண்ணீரைக் கொண்டு சுத்தம் செய்வது ஆகும். இச்செயல்முறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் கற்றுத்தரப்பட்ட செயல். இறைவனை வணங்குவதற்கு (தொழுகைக்கு) முன் செய்யப்படும் வணக்கமாக இச்செயல் கருதப்படுகின்றது. எனவேதான்,

"அல்லாஹ் ஏவியபடி முழுமையாக உளூச் செய்து கடமையான தொழுகைகளை யார் நிறைவேற்றுகிறாரோ அவற்றுக்கு இடையேயுள்ள பாவங்களுக்கு அவை பரிகாரமாக அமைகின்றன"[1]

என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக அவர்களின் மருமகனான உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

உளூவின் பர்ளுகள் (கட்டாயமாகச் செய்ய வேண்டியவை):

இறைமறையான அல்குர்ஆனில் தொழுவதற்கு முன்னால் முகம், கைகள், கால்கள், தலைமுடிகள் முதலான உடல் உறுப்புகளைச் சுத்தம் செய்து கொள்ளுமாறுத் தனது அடியார்களுக்கு அல்லாஹ் பின்வருமாறு கட்டளையிட்டுள்ளான் என்பதை,

"விசுவாசிகளே உங்கள் (முன்னதாக) நீங்கள் தொழுகைக்கு தயாராகும்போது ! முகங்களையும் கைகளை முழங்கை வரையும் கால்களை கணுக்கால்கள் வரையும் தடவிக்கொள்ளுங்கள் (ஈரக் கையால்) உங்கள் தலைகளை .கழுவிக்கொள்ளுங்கள்"[2]

என்று அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ள உடல் உறுப்புகள் சுத்தம் செய்யும் முறையினை சிம்துஸ் ஸிப்யானில் நான்காகப் பகுத்து **'உளூவின் பர்ளுகள்'** (உளூவில் கட்டாயமாக்கப்பட்டவை) எனக் குறிப்பிடப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
திரு முஹம்மது ஆதில் முர்ஷித் ப.அ & முனைவர் க.சிராஜுதீன் P: 244-252



“உளூவுடைய பர்ளு நாலு. ஒன்னாவது முகம் கழுகுறது; இரண்டாவது இரண்டு முழங்கை மொலி உள்பட கழுகுறது; மூனாவது தலையில் நாலத்தொரு பங்கு மஸ்ஹு செய்யுறது; நாலாவது இரண்டு காலையும் இரண்டு பிரண்டை மௌலி உள்பட கழுகுறது”[3]

மேலும், உளூவைப் பேணிச் செய்வதால் அசுத்தத்தில் இருந்து மட்டுமின்றி பாவங்களில் இருந்தும் உடல் உறுப்புகள் தூய்மை அடைகின்றன. இதனை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்,

“யார் உளூச் செகிறாரோ அதையும் அழகாகச் செய்கிறாரோ அவரது பாவங்கள் அவரது உடம்பிலிருந்து ஏன் அவருடைய நகக்கண்கள் வழியாகக்கூட வெளியேறிவிடுகின்றன”[4]

என நவின்றதாக உஸ்மான் (ரலி) அவர்கள் கூறியுள்ள செய்தி ஷஹீஹான ஹதீஸ் நூல்களுள் ஒன்றான முஸ்லிம் நூலால் அறியமுடிகின்றது.

உளூவில் செய்ய வேண்டியவை:

ஒவ்வொரு செயல் செய்யத் தொடங்குமுன் இன்ன செயலைச் செய்யப்போகின்றேன் என மனதளவில் எண்ணம் கொள்வது அல்லது உறுதி கொள்வது **‘நிய்யத்’** எனப்படும். அவ்வாறு ஒருவர் வெளிப்படையாகச் செய்யவிருக்கும் செயல்கள் அனைத்தும் அவரின் மனதில் இருக்கும் எண்ணங்களின் வெளிப்பாடாகவே அமையும். இதனை,

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
திரு முஹம்மது ஆதில் முர்ஷித் ப.அ & முனைவர் க.சிராஜுதீன் P: 244-252

“அமல்கள் யாவும் எண்ணங்களைப் பொறுத்தே”[5]

என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக உமர் (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். உளூ என்னும் செயலைத் தொடங்குமுன் வைக்கப்பட வேண்டிய நிய்யத்தை,



“அல்லாஹுத் தஆலாவுடைய ஏவலுக்கு வழிப்பட்டுத் துடக்கை நீக்குறதற்காக உளூ செய்ய நிய்யத் செய்தேன்”[6]

என சிம்துஸ் ஸிப்யானில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு நல்ல அமல்கள் (செயல்கள்) செய்வதற்கு முன்பு அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது முஸ்லீம்களின் வழிமுறையாக உள்ளது. இதனை **‘பிஸ்மில்லாஹ்’** என்ற சொல்லால் அழைப்பர். இச்சொல்லானது சிம்துஸ் ஸிப்யானில் البسملة**‘பஸ்மலாஹ்’**[7] எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இறைவனின் பெயரைக் கொண்டு உளூ செய்யுமாறு இறைத்தூதரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வலியுறுத்திய செய்தியும் ஹதீஸ் நூல்களில் காணக் கிடைக்கின்றது.

“அல்லாஹ்வின் பெயரால் உளூச் செய்யுங்கள்”[8]

உளூவினைச் செய்யத் தொடங்கும்போது முதலில் செய்ய வேண்டிய செயல் மணிக்கட்டு வரை இரு கைகளையும் தண்ணீரைக் கொண்டு சுத்தம் செய்வதாகும். இது உளூவின் போது செய்ய வேண்டிய மூன்றாவது செயலாக



“மூனாவது இரண்டு கையும் மணிக்கட்டு வரையில் கழுகுறது”[9] என சிம்துஸ் ஸிப்யானில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து நபிகளார் கூறியதாக அம்ர் பின் அபஸா (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
திரு முஹம்மது ஆதில் முர்ஷித் ப.அ & முனைவர் க.சிராஜுதீன் P: 244-252

“நீ உளூச் செய்யும் போது இரு முன் கைகளையும் கழுவி தூய்மையாக்கினால் உனது சிறு பாவங்கள் விரல் நுனியிலிருந்து வெளியேறுகின்றன”[10]

இரு கைகளையும் மணிக்கட்டு வரை கழுவிய பின் வாயையும், மூக்கையும் சுத்தம் செய்ய வேண்டும். இவை உளூவின் ஐந்தாம் மற்றும் ஆறாம் செயல்களாக உள்ளன என்பதை,



என்ற வரிகள் உணர்த்துகின்றன.

“ஐந்தாவது மூனு விடுத்தம் வாய் கொப்பளிக்கிறது; ஆறாவது மூனு விடுத்தம் நாசிக்குத் தண்ணீர் செலுத்துவது”[11] என சிம்துல் ஸிப்யானில் கூறப்பட்டுள்ளது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு உளூச் செய்தார்கள் என்பதற்கு உஸ்மான் (ரலி) அவர்கள் செயல் விளக்கம் புகாரீ ஷரீஃபில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

“தமது இரு கைகளையும் மூன்று தடவை கழுவி விட்டு, (தண்ணீர் எடுத்து) வாய் கொப்புளித்து, மூக்கையும் சுத்தம் செய்தார்கள்”[12]

இதன் பின்னர் முகத்தை முழுவதுமாகக் கழுகுவதும், இரு கைகளை முட்டுவரை முழுமையாகக் கழுகுவதும், தண்ணிரைக் கொண்டு மஸஹு செய்வதும் அடுத்ததடுத்த செயல்களாகும். இவற்றை நபிகள் நாயகம் செய்தததாக ஹதீஸ் நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. விரலைக் கொண்டு தலைமுடி, பிடரி, காதுகள் ஆகிய உறுப்புகளைத் தண்ணீரால் சுத்தம் செய்வது ‘மஸ்ஹு செய்தல்’ எனப்படும்.

“நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உளூச் செய்த முறையை அப்துல்லாஹ் பின் ஸைத் (ரலி) அவர்கள் விளக்கும் போது, தம் இரண்டு கைகளையும் தலையின் முன்பகுதியில் வைத்து பிடரி வரை கொண்டு சென்று பிறகு அப்படியே எந்த இடத்திலிருந்து தடவ ஆரம்பித்தார்களோ அந்த இடத்திற்குத் திரும்பக் கொண்டு வந்தார்கள்”[13]

“நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உளூச் செய்த போது தலைக்கு மஸ்ஹ் செய்தார்கள். தமது ஆட்காட்டி விரல்களைக் காதுகளின் உட்பகுதியிலும், கட்டை விரலை காதுகளின் வெளிப்பகுதியிலும் வைத்து காதுகளுக்கும் மஸஹ் செய்தார்கள்”[14]

போன்ற ஹதீஸ்களால் மஸஹு செய்தல் குறித்துத் தெளிவான விளக்கம் கிடைக்கப் பெறுகின்றது. இச்செயலானது சிம்துஸ் ஸிப்யானில் பத்து மற்றும் பதினொன்றாவது செயல்களாகக் கூறப்பட்டுள்ளன.

உளூவை முறிக்கும் செயல்கள்:

உளூ முறிவது என்றால் உடலின் தூய்மை கெடுதல் எனக் கொள்ளலாம். கண்களுக்குப் புலப்படும் திரவப் பொருளோ, திடப் பொருளோ அல்லது கண்களுக்குப் புலப்பட்டாத பின்துவார வாயுப் பொருளோ உடலில் இருந்து இயற்கையாகவோ, மனித முயற்சியாலோ வெளிப்பட்டுவிட்டால் உடலின் தூய்மை கெட்டுவிடும். இதனையே உளூ முறிதல் என்றும், உளூ நீங்குதல் என்றும் இஸ்லாம் கூறுகிறது. தொழுகைக்கு அடிப்படையாக அமையும் உளூ முறிந்துவிட்டால் இறைவனிடத்தில் தொழுகை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இதனை,

“உங்களில் ஒருவருக்கு உளூ நீங்கிவிட்டால் மீண்டும் உளூச் செய்து தொழாதவரை அவரது தொழுகையை அல்லாஹ் ஏற்றுக் கொள்வதில்லை”[15]

என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்களின் அறிவிப்பு ஷஹீஹான ஹதீஸ் நூல்களால் அறியமுடிகின்றது. மேலும், உளூ முறிவதற்குக் காரணமாக அமையும் நிகழ்வுகள் சிம்துஸ் ஸிப்யானில் எளிமையாகவும், சுருக்கமாகவும் கூறப்பட்டுள்ளது.


چلوٗبَنْزُنْمُ | وُضُوْمُرِتّلِنْ بَيَانْ | مَكْرُوْه

مُنْتُوْارَمْ فِنْتُوْارَتّلِ نِنْبُمْ يَاثُبُّ فُرَقْبُ كُرُنْشُمْ جِرِبِّرْتِلِ
نِنْبُ يِرَتَّمْ چِيْ چِلَمْ فُرَقْبُ وَايِيْوُدُ وَضِيْرَنْتُمْ وَآيِ نِرْمَعِيْ
چِتَيْمُ نِتِّرِيْمُ فِيْتِّيَمُمْ فُوْتُكِيْبُمْ مَسّتَمْ رُكُوْعْ سُجُوْدْ دِيْ

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
திரு முஹம்மது ஆதில் முர்ஷித் ப.அ & முனைவர் க.சிராஜுதீன் P: 244-252



“முன் துவாரம் பின் துவாரத்தில் நிண்டும் யாதொன்னு புறப்படுகிறதும்; சரீரத்தில் நிண்டு இரத்தம், சீல், சலம் புறப்பட்டு வாய்விட்டு வழியிறதும்; வாய் நிரம்பிய சத்தியும், நித்திரையும், பைத்தியமும், போதகேடும், மஸ்தும், ருகூஉ சுஜூதுடைய தொழுகையில் வெடிசிரிப்பும் உளூவை முறிக்கும்”[16]

என்பதால் உளூவை முறிக்கும் செயல்களையும் காரணிகளையும் அறிய முடிகின்றது.

முடிவுரை:

இஸ்லாம் மார்க்கத்தில் சுத்தம் என்பது ஈமானின் ஒரு பகுதியாகவும், சுத்தத்தோடு தொடர்புடைய உளூவானது தொழுகைக்கு முன் நிறைவேற்றக் கூடிய முதன்மைச் செயலாகவும் விளங்குகிறது. அல்லாஹ் தனது திருமறையான குர்ஆன் வாயிலாக உளூவின் இன்றியமையாமையினை முஸ்லீம்களுக்கு வலியுறுத்துள்ளான். அவனது தூதரான நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களும் உளூவின் முக்கியத்துவதை உணர்ந்து உளூ செய்யும் முறையை மக்களுக்குக் கற்றுக் கொடுத்தார். இதனை ஹதீஸ் நூல்களில் இடம்பெற்றுள்ள செய்திகளால் அறிய முடிகின்றது. இவற்றை சான்றாகக் கொண்டு அரபுத்தமிழ் நூலான சிம்துஸ் ஸிப்யானில் உளூ தொடர்பாகக் கூறப்பட்டுள்ள செய்திகளும், கருத்துகளும் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளன.

சான்றெண் விளக்கம்:

1. நூல்: முஸ்லிம், ஹதீஸ் எண்-231
2. அல்குர்ஆன்: 5:6
3. சிம்துஸ் ஸிப்யான் (அர்வீ), ப.22
4. நூல்: முஸ்லிம், ஹதீஸ் எண்-245

5. நூல்: புஹாரி, ஹதீஸ் எண்-1
6. சிம்துஸ் ஸிப்யான் (அர்வீ), ப.23
7. மேலது, ப.23
8. நூல்: நஸாயீ, ஹதீஸ் எண்-77
9. சிம்துஸ் ஸிப்யான் (அர்வீ), ப.23
10. நூல்: நஸாயீ, ஹதீஸ் எண்-147
11. சிம்துஸ் ஸிப்யான் (அர்வீ), பக்.23-24
12. நூல்: புஹாரி, ஹதீஸ் எண்கள்-160, 164
13. நூல்: புஹாரி, ஹதீஸ் எண்-185
14. நூல்: நஸாயீ, ஹதீஸ் எண்-101
15. நூல்: புஹாரி, ஹதீஸ் எண்-6954 & நூல்: முஸ்லிம், ஹதீஸ் எண்-225
16. சிம்துஸ் ஸிப்யான் (அர்வீ), பக்.27-28

முதன்மை நூல்:

1. அபுல் பர்காத் ஆலிம், சிம்துஸ் ஸிப்யான் (அர்வீ), மத்ராஸ்.

துணைமை நூல்கள்:

1. அர்ஷத் அலி (மொ.ஆ), அல்ஹத்யுஸ் ஸ்விய்யு ஃபீ ஸலாத்தின் நபிய்யி (ஸல்), தாருல் ஹுதா பதிப்பகம், சென்னை-01, முதற்பதிப்பு: 2020.
2. இப்னு முஹ்யித்தீன் (மொ.ஆ), சிம்துஸ் ஸிப்யான் (தமிழ்), இரட்டை மஸ்தான் வெளியீட்டகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு: 2015.

References:

1. Abul Barkath Aalim, Shimthus Sibyaan (Arwi), Madras.
2. Arshad Ali (Trans), Alhadyus Sawiyyu fee salatin nabiyyi (Sal), Dharul Hudha Publications, Chennai – 01. First Edition 2020.
3. Ibnu Mohideen (Trans), Shimthus Sibyaan (Tamil), Irattai Masthan Publishers, Tanjore. First Edition 2015.
4. http://www.tharjuma.com
5. https://quranandhadis.com/ta/category/bukhari/
6. https://quranandhadis.com/ta/category/muslim/
7. https://quranandhadis.com/ta/category/nasaayi/

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr A.Mohamed Ismail P: 253-259

An Analytical study of Arabic Tamil Literature

அரபுத் தமிழ் இலக்கியங்கள் – ஓர்ஆய்வு

Dr.A. MOHAMED ISMAIL
Assistant Professor of Arabic & Research Supervisor,
Jamal Mohamed College(Autonomous),
Tiruchirappalli – 620 020 South India

Abstract :

Muslims consider Arabic language as sacred, and it is a obligation for every Muslim to learn it because of three reasons: The Quran is in Arabic language, the Prophet Mohammed (Pbuh) spoke in Arabic language and the language of the Heaven will be in Arabic. So, wherever Islam spread the Arabic language also accompanied and similarly it reached Tamil Nadu too. The Tamil Muslims started learning Arabic in order to perform their Islamic duties. But the Tamil culture or the Dravidian culture which the Tamil Muslims belonged before their conversion was very ancient and powerful with its own literature and language. Therefore the Tamil Muslims were not able to leave their Tamil culture behind and adopt Islam completely.

Key Words: Islam – Arabuthamil – Literature – Arabic - Tamil

ஆய்வுச்சுருக்கம் :

சுவைமிகு அரபுக்கும் சுந்தரத்தமிழுக்குமிடையே உறவுப் பிணைப்பை உருவாக்க, உலகின் சிறந்த மொழி இனங்களான செமித்திய திராவிட இனத்திற்கிடையே இணைப்புப் பாலம் ஏற்படுத்த உருவானதே அரபுத்தமிழ். அரபுத் தமிழ் மீண்டும் மலர்ந்து, மனம் பரப்பி, மக்களின் வாழ்வில் வசந்தத்தைச் சிந்த வேண்டும் அதற்கான வழிமுறைகள் கீழ்க்காணும் கட்டுரையில் காண்போம்.

திறவுச் சொற்கள்: இஸ்லாம் - அரபுத்தமிழ் - இலக்கியம் – அரபு மொழி - தமிழ் மொழி

ஆய்வுச் சிக்கல்:

“முஸ்லீம் பெயருடைய ஒருவர் இயற்றும் இலக்கியமெல்லாம் இஸ்லாமிய இலக்கியமாகுமா? ஆகாது என்பது சொல்லாமலேயே புலனாகும் முஸ்லீம்களின் கலாச்சாரத் தனித்துவத்தைப் பிரதிபலித்துக்காட்டும் தமிழ் இலக்கியமே இஸ்லாமியத் தமிழ் இலக்கியமாகும் ஆகவே இது மொழியியல் துறைக்கு மாத்திரம் சொந்தமானதல்ல” என்ற சிக்கலை மையமாகக்கொண்டு இந்த ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr A.Mohamed Ismail P: 253-259

Since 1951

ஆய்வு முறையியல் :

ஈழத்து இஸ்லாமியத் தமிழ்ப் பேரறிஞர் ஏ.எம்.ஏ. அஜீஸ் அவர்களின், இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பற்றிய அழுத்தமான கருத்தோட்டமாகும். நந் தமிழகத்தைப் பொறுத்தவரை, இஸ்லாமியக் கலாச்சாரத்தைப் பிரதிபலித்தல் அதை மக்களின் வாழ்க்கையில் ஏற்றியதில் அரபுத் தமிழ் இலக்கியங்கள் அரும்பணியாற்றியுள்ளன என்பதை ஆய்வோர் எவரும் மறுத்திடார். இன்று, இஸ்லாம் பற்றிய எண்ணற்ற நற்றமிழ் நூற்கள் அலைத் தொடராய் வெளிவரலாம். ஆனால், அச்சுக்ககலை, அவ்வளவாக வளர்ந்திராத அன்றைய நாளில் இஸ்லாம் பற்றிய இனிய செய்திகள்-கொள்கைப் பிரகடனங்கள், சட்டம் வரலாறு போன்ற பல்வேறு அம்சங்களை மக்களுக்கு வழங்கியதில் அரபுத் தமிழ் இலக்கியங்களின் பங்களிப்பு என்றும் எண்ணிப் போற்றத்தக்கதாகும். ஆகியன போன்ற குறிப்புகள் அடிப்படை முறையிலாகவும் பின்பற்றப் பட்டுள்ளது.

இஸ்லாம் :

நபிகள்நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹிவஸல்லம் அவர்களது சொல், செயல், சிந்தனைகளில் வாய்மை தூய்மை நேர்மையினைப் பளிச்சிடச் செய்தது இஸ்லாம். புதியபாதையில், புனிதவாழ்க்கையின் பேரின்பத்தை மனநிறைவைப் பெற்ற அப்பெருமக்களை “யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்னுமாப் போல, உலகெங்கனும் பரந்து வாழும் மனித இனத்துக்கு அறிவிக்கப் புறப்பட்டார்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹிவஸல்லம் அவர்கள் புனிதப்பயணம் தொடர்ந்தது. உலகில் இஸ்லாம் வேரூன்றி நிழல் தரத் துவங்கியது அறியாமை வெப்பத்தால் அலைக்கழிந்த மனித சமுதாயம் அந்நிழலில் தங்கி இளைப்பாறி நிம்மதிப் பெருமூச்சுவிடலாயிற்று.

பணியும் பயனும் :

நம் தமிழ் மண்ணுக்கும் அன்றைய அரேபிய முஸ்லிம்களுக்குமிடையிலான உறவு, தொன்றுதொட்டு இருந்து வந்ததைப் பண்டைய தமிழ் வரலாற்று இலக்கியங்கள் சாற்றுகின்றன அவர்கள் மூலம் பெற்ற பேரறிவை அடிப்படையாகக்கொண்டு, நம் தமிழகத்து முஸ்லீம் பெருமக்கள் கட்டிக்காத்து வந்த பாரம்பரிய அறிவுச் செல்வங்களை, விட்டுச்சென்ற இஸ்லாமியக் கருவூலங்கள் உன்னத மரபுகள் என்றென்றும் ஏற்றிப் போற்றத்தக்கவையாகும்.

கலாச்சார மரபு :

“மரபு காக்காத சமுதாயம் தன் பண்பாட்டுச் சிறப்புகளை இழந்து விடும்” என்பது உலக வரலாறு கூறும் உண்மையாகும். தமிழகத்தில் குடியேறிய அரேபிய முஸ்லிம்கள் தமிழ் மொழியைக் கற்று, அதன் மீதுகொண்ட அழியாக்காதலால் தமிழ் வார்த்தைகளை அரபு லிபியில் எழுதலாயினர். இதுவே அரபுத்தமிழானது. அறிவார்ந்த பழமையான பண்பாட்டுத் தொடர்பு அறுபடாமலிருக்க, சுவைமிகு

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr A.Mohamed Ismail P: 253-259

அரபுக்கும் சுந்தரத்தமிழுக்குமிடையே உறவுப் பிணைப்பை உருவாக்க, உலகின் சிறந்த மொழி இனங்களான செமித்திய திராவிட இனத்திற்கிடையே இணைப்புப் பாலம் ஏற்படுத்த உருவானதே அரபுத்தமிழ் என்பர் ஆய்வாளர்கள்.

அரபுத் தமிழ் :

அரபுத் தமிழ் தோன்றிய காலம், எழுதப்பட்ட முதல் கையெழுத்துப் பிரதி, வரலாற்று ஒளியில் தெளிவாகத் தெரியவில்லை. இறைத் திருநபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மறைவுக்குப்பின் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இது வழக்கில் வந்திருக்கலாம் என சில அறிஞர்கள் சாற்றுவர்

ங் ஞ் ட் ச் ண் போன்ற எழுத்துக்கள் அரபியில் இல்லாததால் இவற்றுள் நெருங்கிய ஒலிவடிவமுள்ள எழுத்துக்களில் சிற் சில மாற்றங்களை ஏற்படுத்தி, மேலும் கீழும் சில அடையாளக் குறியீடுகளை அமைத்து, அரபுத்தமிழ் உருவாக்கப்பட்டது“ “அரபுத்தமிழின் முன்னோடியாக அரபு வங்காளம் திகழ்ந்துள்ளது” என வரலாற்று விற்பன்னர் இப்னு கல்தூண் இயம்புகிறார். அரபுத்தமிழ் போன்ற மொழியினைப்பு நம் தமிழகத்தில் மட்டும் புதிதாக உருவாக்கப்பட்டதன்று. உலகின் பல பகுதிகளில் வதியும் மக்கள் தத்தம் மொழிகளில் அரபுமொழியினை எழுதத்துவங்கிய செய்தியினை வரலாற்றுக் குறிப்புகள் உணர்த்தி நிற்கின்றன.

கிழக்கு ஆப்பிரிக்க கறுப்பின மக்கள் இஸ்லாத்தை ஏற்று, தம் “ஸ்வாஹிலி” மொழியை அரபு லிபியில் எழுதினர். மலாய் மொழி, அரபு எழுத்தில் எழுதப்பட்டு “ஜாவி” என அழைக்கப்படுகிறது. அரபு மலையாளத்தில் பல இலக்கியங்கள் பிறந்துள்ளன. ஆங்கிலம் அரபு மொழியில் எழுதப்பட்டுள்ள செய்திகளை டாக்டர் முகமது ஹமீதுல்லா “இஸ்லாம் ஓர் அறிமுகம்” எனும் தமது நூலில் சான்றோடு குறிப்பிடுகிறார் ஆக அரபுத்தமிழ் என்பது எவ்வித முன்மாதிரியுமில்லாமல் திடீரெனத் தோன்றிய அடிப்படையற்ற புதிர் மொழி என கொள்ளையிடவில்லை உலக மக்களிடையே உன்னதமான இஸ்லாமிய கலாச்சாரத்தின் தாக்கமும், செழுமையான அரபுமொழியின் செல்வாக்கும் எத்தகு சிறப்பைப் பெற்றிருந்தன என்பதற்கான சான்றுகளாகும்.

அரபுத் தமிழும் அன்றைய முஸ்லீம்களும் :

அரபுத்தமிழை வளர்ப்பதில் அன்றைய முஸ்லிம் பேரறிஞர்களும் பெருமக்களும் காட்டிய ஆர்வம் ஆற்றிய பணி பங்களிப்பு எண்ணியெண்ணி வியக்கத்தக்கதாகும். காயல்பதியில் வாழ்ந்த ஹபீப் முஹம்மத் ஆலீம், புதுகாதூர் ரஹ்மானியா பீ தப்ஸீர் கலாமிர் ரப்பானியா எனும் பெயரில் வான்மறை குர்ஆனுக்கு அழகிய விளக்கத்தை அரபுத் தமிழில் தந்துள்ளார். தப்சீருல் பத்ஹில் கரீம்” எனும் பெயரில் அரபுத் தமிழில் ஒரு தப்ஸீர் வெளிவந்துள்ளது மொழி பெயர்ப்பாசிரியர் மௌலானா அப்துல் காதர் காஹிரி அல்லாஹ்வின் அருள் மறையின் ஆயத்துக்களாம் அரபோடு வேற்று மொழி கலந்துவிடக்கூடாது என்பதில் கவனமாகவும் கண்டிப்போடும் இருந்து வந்த நம் முன்னோர் அமிழ்தினுமினிய அருந்தமிழை அரபாக்கி இணைத்து விளக்கம் தந்துள்ளார்களென்றால் அரபுத்தமிழ் மீது

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr A.Mohamed Ismail P: 253-259

Since 1951

அவர்களுக்கிருந்த அழுத்தமான பற்று எத்தகையது என்பது எளிதில் விளங்கும். அரபுத் தமிழ் தப்ஸீர்கள் அன்றைய முஸ்லிம்களிடம் மிகுந்த வரவேற்பையும் செல்வாக்கையும் பெற்றன. தமிழகத்தில் முதன் முதலாக அரபு தமிழிலேயே தப்ஸீர் வெளி வந்திருப்பது அரபுத் தமிழுக்குக் கிடைத்த மிகப்பெரும் சிறப்பாகும் நம்முன்னோர்கள், பல்துறைகளிலும் 150 க்கும் மேற்பட்ட அரபுத் தமிழ் நூற்களை எழுதி அரபுத் தமிழ் இலக்கியத்திற்கு அணி சேர்த்துள்ளனர்.

இன்று, முஸ்லிம் அறிஞர்கள், சிந்தனையாளர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், இஸ்லாமியக் கருத்தோட்டங்கள், இலக்கியங்கள், அறிவுக் கருவூலங்களை எல்லாம் அழகுத் தமிழில் அருமையாகத் தந்து கொண்டிருக்கின்றன. இஸ்லாமிய பத்திரிகைகள் .... அமைப்புகள் .... நிறுவனங்கள் ஆங்காங்கே சமய, சமுதாய, இலக்கியப்பணிகளைச் செவ்வனே சிறப்பாகச் செய்து வருகின்றன. இன்றைய காலத்தை இஸ்லாமிய மறுமலர்ச்சிக் காலம் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களின் பொற்காலம் என்றே சொல்லலாம்.

அரபுத் தமிழின் பொற்காலம் :

அன்றும் அரபித்தமிழின் பொற்காலம் ஒன்று இருந்தது கி.பி.எட்டாம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டு வரை, இந்நெடிய காலத்தில் நம தமிழகத்தில் அரபுத் தமிழ் இலக்கியங்கள் இஸ்லாமிய இதயங்களை ஆட்கொண்டன, சுடர் விட்டுப் பிரகாசித்தன அரபுத்தமிழின் பழைய நூற்களையும், சிதைத்து செல்லரித்துப் போய்க் கிடக்கும் பழஞ் சுவடிகளையும் பார்க்கும்போது, அரபுத் தமிழுக்கு இருந்து வந்த செல்வாக்கு அருமையாகப் புலப்படுகிறது. அடேயப்பா .... அரபுத் தமிழ் இந்த அளவுக்கா அன்றைய மக்களை ஆட்கொண்டிருந்தது என அதிசயத்துப் போகிறோம். கடைகளில் பொருள்கள் வாங்குவதற்குரிய சிட்டை பேரேடு கணக்கு விபரங்கள் சலவைத் துணிக் குறிப்புகள்........ டைரிக் குறிப்புகள் போன்றவற்றையும் அரபுத் தமிலிலேயே எழுதி வந்திருப்பதை அறிய முடிகிறது. அரபுத் தமிழில் கடிதங்கள் வரைந்து கொள்ளும் நடைமுறை அன்றிருப்பதை பழைய கடிதங்கள் உறுதிப்படுத்துகின்றன..

பெண்கள், அரபுத்தமிழில் ஆர்வமும் அதைப் பயன்படுத்துவதில் அதிக அக்கறையும் செலுத்தி வந்துள்ளனர். தம் குழந்தைகளுக்கு முனைப்புடன் கற்றுத் தந்துள்ளனர் இன்றுகூட இவ்உணர்வு சிற் சில கிராமங்களில் வதியும் பெண்களிடம் மேலோங்கி இருப்பதைக் காணமுடிகிறது. அரபுத்தமிழைக் கற்பது அரபுமொழியையே கற்பது போன்றதெனக்கருதி பெருமிதம் கொண்டனர். இலங்கை, காயல் மாநகர், கீழக்கரை வாழ் இஸ்லாமியப் பெருமக்கள் அரபுத் தமிழுக்கு ஆற்றிய பங்களிப்பு அளவிடற் கரியது நன்றி கூறத்தக்கது.

அரபுத் தமிழ் இலக்கியங்கள் :

காயல் ஷாம் ஷிகாபுதீன் வலியவர்கள், அரபுத் தமிழில் பல அரிய கருத்தாழமிக்க பாக்களைத் தொடுத்து சிறப்புச் சேர்த்துள்ளார்கள், புரட்சிகரமான எழிலார்ந்த இஸ்லாமியக் கருத்துக்களைக் கருவாய்க்கொண்டு ஒலி விடும்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr A.Mohamed Ismail P: 253-259

இப்பாடல்கள், தேன் துவைத்த பலாச்சுளையாய் தித்திக்கின்றன, இதயத்தை ஈர்த்து எண்ணத்தைப் பண்படுத்துகின்றன

இஸ்லாமியச் சட்டங்களான பிஃஹ் அரபுத்தமிழில் வடிக்கப்பட்டு நூலுருவில் வந்திருக்கின்றன. "**அஹ்காமுல் முஸ்லிமின்**" "**சிம்துஸ் சிப்யான்**" போன்ற நூற்கள் இன்றும் சில ஆரம்பப்பள்ளிகளில் பாடநூலாக இடம் பெற்று, பிள்ளைகளால் பெரிதும் விரும்பி கற்கப்படுகின்றன. இந்நூற்களில் சில அரிய சட்ட விளக்கங்களும் நடை முறைப் பண்பாடுகளும் இடம் பெற்றிருப்பினும், நலிந்து சில கொச்சையான வழக்குச் சொற்களும் ஆதாரமற்ற பல வீனமான சில செய்திகளும் அரபு-மலையாளச் சொற்களும் கலந்திருப்பது இதன் சிறப்பை மங்கச் செய்துவிட்டது. இதனால் தேர்ந்த மார்க்க விற்பன்னர்கள் இவற்றில் கவனம் செலுத்துவதில்லை.

அச்சுக்கலை அவ்வளவாக வளர்ச்சியடையாத அன்றைய நாளில், கையால் எழுதி கல்லச்சு மூலம் பதிக்கப்பட்டு கி.பி. 1886 இல் "**கஷ்புர்றான் ஃபீ கல்பில் ஜான்**" எனும் பெயரில் ஒரு வார இதழும் கி.பி.1906 இல் "**அஜாயிபுல்அக்பர்**" (அதிசயச் செய்திகள்) எனும் பெயரில் ஒருவார ஏடும் வெளிவந்து கொண்டிருந்ததை அறிகின்ற போது அரபுத் தமிழின் பொற்காலம் எத்தகையது என தெரிய முடிகின்றது. கை வண்ணத்தால் தீட்டப்பட்டு கல்லச்சு மூலம் உருவான அப்பதிப்புகள் கலை அம்சம் மிளிரப் படிப்போரை ஈர்த்தன.

தமிழகத்தின் சில கிராமங்களின் குர்ஆன் மதரஸாக்களில் மட்டுமே இன்று அரபுத் தமிழ் ஓரளவு பயிற்றுவிக்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக மாணவர்களைக் காட்டிலும் மாணவிகளே கவனம் செலுத்துகின்றனர் மற்றபடி இது மங்கி மறைந்து வருகிறது என்று தான் சொல்ல வேண்டும்.

அரபுத் தமிழின் ஆர்வலர்கள் :

அரபு மொழியின் செழுமையான அபரிமிதமான வளர்ச்சி, தனித்தமிழின் விரைந்து ஆட்கொள்ளும் காந்த சக்தி அரபுத் தமிழைக் குன்றச் செய்து விட்டது

அரபுத் தமிழை உருவாக்கி வளர்த்ததில் ஆலிம்களின் பங்கு மிக உன்னதமானது. அரபு மொழியைக் கசடறக் கற்றறிந்த அப்பெருமக்களுக்கு அரபுத் தமிழ் எழுதுவது எளிதாக இருந்ததால் அவர்களது எழுத்து - சேவைகள் மூலம் அரபுத் தமிழ் வளர்ந்தது என்பதே தெரிந்த உண்மை.

பன்னூலசிரியரும் இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் தந்தவருமான அறிஞர் எம்.ஆர்.எம். அப்துர் ரஹீம் அரபுத் தமிழ் பற்றிய அரிய குறிப்புக்களைத் தந்துள்ளார். பேராசிரியர். டாக்டர்.செ.பசுலு முஹ்யுத்தீன் அரிய நூலொன்றை வெளியிட்டுள்ளார்.

ஈழத்துத் தமிழ் முஸ்லீம்களின் பங்களிப்பு :

இலங்கை வாழ் தமிழ் முஸ்லிம்கள் அரபுத் தமிழுக்கு அருஞ்சேவை புரிந்துள்ளனர் முன்னோர் உருவாக்கிக் கட்டிக் காத்து வந்த அரபு தமிழ் இலக்கியங்களைக் கண்னெனப் பேணிப் போற்றி வருகின்றனர் இன்றும் அங்கு

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr A.Mohamed Ismail P: 253-259

அரபுத் தமிழ் செழித்து வளர்ந்து பசுமையாய் நிலை பெற்றிருப்பதைக் காணலாம். **“அரபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ்”** என நெஞ்சினிக்க நாவினிக்க கூறுகின்றனர்

இந்த நூற்றாண்டின் ஏற்ற மிகு ஈழத்துப் பேரறிஞர் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துக்கு அளப்பரும் சேவையாற்றிய இலக்கியச் செம்மல்“ இலங்கையில் இஸ்லாம்” எனும் உன்னத நூலை உருவாக்கிய மேதை மர்ஹூம் ஏ.எம்.ஏ. அஜீஸ் அரபுத் தமிழ் பற்றி ஆழமாக ஆய்வு செய்துள்ளார். ஒலிக்குறிப்பு ஒருமைப்பாடு – அரபுத் தமிழ் அகராதி - அரபுத் தமிழ் இலக்கியக் கோவை இம்மூன்றும் அரபுத் தமிழின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவை எனச் சுட்டுகிறார்.

ஈழத்தில் பிறந்திட்ட ஏற்றமிகு பெருமேதை சன்மார்க்க சாத்வீகசீலர் ஆரம்ப மதரசாக்களுக்குப் புத்துயிர் தந்த அறிஞர் பெருந்தகை கொழும்பு ஹஜ்ரத் என செல்லமாக அழைக்கப்படும் **அல்லாமா சையது முகமது ஆலீம்** அவர்கள் அரபுத் தமிழில் பல அரிய கருவூலங்களை எளிய இனிய நடையில் தந்துள்ளார்கள். ஒலு தொழுகை பற்றிய இஸ்லாமியச் சட்டங்களை அரபுத்தமிழ் பாக்களில் வடித்துக் குழைத்துப் பிஞ்சு நெஞ்சங்களில் ஊட்டி வந்த நிகழ்ச்சிகள் ஊரறிந்த ஒன்றாகும்.

“தர்பியதுல் அத்பால்” எனும் சங்கம் “துஹ்பதுல் அத்பால்” எனும் எளிய பாடல்கள் உரைநடையில் உரைநடையோடிணைந்த அரபுத் தமிழ் நூலை உருவாக்கி வெளியீட்டு அருந்தொண்டாற்றியுள்ளார்கள்

மழைக்காக இறைவனிடம் மனம் உருகி வேண்டும் பாடலும் **“மழை பைத்து”** எனும் பெயரில் அரபுத் தமிழிலேயே அமைந்துள்ளது. ஆக அன்றைய தமிழ் முஸ்லீம்களின் வாழ்வில் சகல நிலைகளிலும் அரபுத் தமிழ் பயன்படுத்தப்பட்டே வந்துள்ளது.

அரபுத் தமிழின் தொய்வு :

ஒன்றை மொழி என ஏற்றுக் கொள்ள வேண்டுமானால் அதற்கெனத் தனித்தன்மை வாய்ந்த அடிப்படை இலக்கண அமைப்புகள் - மொழியியல் மரபுகள் இருந்தாக வேண்டும். அரபுத் தமிழைப் பொறுத்தவரை அதற்கெனத் தனியான இலக்கணம் எதுவுமில்லை. எனவே இதற்குத் தனி மொழி அந்தஸ்தை அளிக்க முடியாது என்கின்றனர் ஆய்வாளர்கள். ஆர்வத்தில் விளைந்திட்ட கிளை மொழியாக வேண்டுமானால் இதனைக் கொள்ளலாம் என்றும் கருத்து தெரிவிக்கின்றனர்

தென்னிந்திய அரபுத்தமிழ் இலக்கியங்களில் பார்ஸீ, ஹிந்தி, உருது, மலையாளச் சொற்கள் கலந்திருப்பதைக் காணலாம் நவாபுகள்- சுல்தான்களின் ஆட்சியினால் இச்சொற்கள் வழக்கில் வந்திருக்கின்றன

இஸ்லாமியப் பேரறிஞர்கள் இலக்கிய விற்பன்னர்கள் இதன் வளர்ச்சியில் கவனம் செலுத்தாமை செல்வாக்குப் பெற்ற அரபுக் கல்லூரிகளில் இடம் பெறாமை அச்சு எழுத்துக்களின் அலைத் தொடரான ஆக்கிரமிப்பு, ஆங்கில மொழியின் மீது கொண்ட அளவிடற்கரிய மோகம், பண்பாட்டுப் பாரம்பரிய மரபை கட்டிக்காத்த அரபிய தமிழ் முஸ்லீம்களின் மறைவு; அரபுத் தமிழில் எழுதி காலத்தை விரயமாக்குவதைவிட தனித்தமிழில் எழுதுவது எளிது சிறந்தது என்ற கருத்தோட்டம்

ஆகியன அரபுத்தமிழ் சிதைந்து செல்வாக்கிழந்தமைக்குக் காரணங்களாகக் கொள்ளலாம்

அரபுத் தமிழ் இலக்கியங்களுக்காக எடுத்தாளப்பட்ட சொல் சாதாரண பாமர மக்களின் பேச்சு வழக்குச் சொற்களாக இருந்தமையால், இலக்கியத் தமிழ் எழுத்தாளர்களின் வன்மையான தாக்குதல்களுக்கும் தூற்றுதலுக்கும் இலக்கானது. நடுவானின் கதிரவனாய் சுடர் விட்ட அரபுத் தமிழ் மங்கி ஒலியிழந்து எழுந்து மறைகதிராய்த் தணிந்து போனது.

முடிவுரை :

மீண்டும் ஒளிவிட

ஒன்று அரபுத் தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த ஈடுபாடும், புலமையும் பெற்ற அறிஞர் பெருமக்களை ஒருங்கிணைத்து, குறியீடுகள் எழுத்து முறைகளில் ஒருமைப்பட்டு சீர்திருத்தம் உருவாக்குவது நடைமுறை இலக்கண மரபுகளை அமைப்பது போன்று சிந்தனைகள் செய்ய வேண்டும்.

சிற் சில அரபுத் தமிழ் நூற்களில் எப்படியோ இடம் பெற்று விட்ட ஆதாரமற்ற செய்திகள் கொச்சையான வார்த்தைகள் அவசியமற்ற பகுதிகளை அகற்றி விட்டு புத்தம் புதிய செய்திகளையும் இணைத்து அரிய ஆக்கங்களாக அரபுத்தமிழ் இலக்கியங்களை வெளிக்கொணரலாம். மக்கள் மன்றத்தில் காட்சிகளாய் வைத்து நம் முன்னோர்களின் சீர்மிகு சேவையை இன்றைய இளைய தலை முறைக்கு நினைவூட்டி ஆர்வமூட்டலாம். ஏனெனில் ஆரம்பத்தில் நம் தமிழகத்தில் இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட அரபுத்தமிழ் அதிகம் பயன்பட்டது என்பதை மறந்திடல் கூடாது.

குறிப்புகள்:

1. ஷுஐப் தைக்கா அரபிக் ஆர்வி மற்றும் பாரசீகம் சரண்தீப் & தமிழ்நாடு, மதராஸ் இனாமுல் அரூஸ் டிரஸ்ட்
2. எம்.ஆர்.எம்.அப்துற்றஹீம்,இஸ்லாமிய கலைக்களஞ்சியம், முதற்பாகம்
3. முனைவர் கே. எம். ஏ அகமது ஜுபைர் அரபுத்தமிழ் முஸ்லிம்களின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் ஐ ஐ யு சி இஸ்டீஸ்
4. யூனுஸ் அஹமது முஹமது ஷரீப் அரபுத்தமிழ் ஆர்வி தமிழ் முஸ்லீம்களின் அடையாளங்கள் டி ஜே பி ஆர் சி , பப்ளிக்கேசன்
5. முனைவர் எஸ் எஸ் எம் மஜாகிர். அறபுத் தமிழும் அறபுத்தமிழ் ஆக்கங்களும்,

References :

1. Shu'ayb, Tayka. *Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu*. Madras: Imāmul 'Arūs Trust,
2. M.R.M. Abdur Raheem, Islamiya Kalai kalanjiyam – First Voliume.
3. Dr. K. M. A. Ahamed Zubair. *The Rise and Decline of Arabu–Tamil Language for Tamil Muslims.* IIUC STUDIES
4. Yunush Ahamed Mohamed Sherif *ARABUTTAMIL/ARWI: The Identity Of The Tamil Muslims,* TJPRC Publication
5. DR. S.M.M Mazahir. Arabuthamilum Arabuthamil Aakkangalum

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.Maideen P: 260-266

Distinction of Arabu Language and Origin of Arabu Tamil

அறபு மொழியின் தனிச்சிறப்பும் அறபுத் தமிழின் தோற்றமும்

Dr. K. Maideen, M.A., M.A., M.Phil., Ph.D.,
Assistant Professor & Head i.c.,
Department of Islam and Islamic Tamil Studies,
Madurai Kamaraj University, Madurai -21.

Abstract

In Muslim-populated areas of the world, Arabic, their religious language, has a special influence. Based on this effect Arabic language got the opportunity to communicate with other languages in different parts of the world. As a result of this, the history shows that the mixed language of Arabic and other languages has developed in various places in the world. The new language that emerged in this way can be called Arabu Tamil. This article explains about the origin of Arabic Tamil in Tamil Nadu and the religious influence that was the precursor to the emergence of Arabic Tamil.

Key Words: Origin of Arabic Tamil, Muslims, Female education, Semitic language, Arab country.

ஆய்வுச்சுருக்கம்

உலகில் முஸ்லீம்கள் வசிக்கும் பகுதிகளில், அவர்களின் மத மொழியான அறபுக்கு சிறப்பான செல்வாக்கு உண்டு. இந்த விளைவின் அடிப்படையில் உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள பிற மொழிகளுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு அறபு மொழிக்கு கிடைத்தது. இதன் விளைவாக உலகில் பல்வேறு இடங்களில் அறபு மற்றும் பிற மொழிகளின் கலப்பு மொழி உருவாகியிருப்பதை வரலாறு காட்டுகிறது. இவ்வாறு தோன்றிய புதிய மொழியை அறபுத் தமிழ் எனலாம். தமிழகத்தில் அறபுத் தமிழின் தோற்றம் பற்றியும், அறபுத் தமிழ் தோன்றுவதற்கு முன்னோடியாக இருந்த சமயச் செல்வாக்கு பற்றியும் இக்கட்டுரை விளக்குகிறது.

திறவுச் சொற்கள்: அறபுத் தமிழின் தோற்றம், இஸ்லாமியர்கள், பெண் கல்வி, செமித்திய மொழி, அரபு நாடு

முன்னுரை

உலகில் இஸ்லாமியார் வாழும் பகுதிகளில் அவர்களது சமய மொழியான அறபு மொழித் தனிச் செல்வாக்கைப் பெற்றிருக்கும். இச்செல்வாக்கின் அடிப்படையில் உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள பிற மொழிகளுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பினை அறபு மொழி பெற்றது. இதன் பயனாக அறபும்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.Maideen P: 260-266

பிறமொழிகளும் கலந்த மொழிக் கலப்பு நிலை உலகில் பல்வேறான இடங்களிலும் உருவாகி இருப்பதை இன்று வரலாறுகள் உணர்த்துகின்றன. இவ்வகையில் தோன்றிய புதிய மொழிக் கலப்பே அறபுத் தமிழ் எனலாம். இக்கட்டுரை தமிழகத்தில் அறபுத் தமிழின் தோற்றம் பற்றியும் அறபுத் தமிழின் தோற்றத்திற்கான முன்னோடியாக விளங்கும் சமயச் செல்வாக்கு பற்றியும் விளக்குகிறது.

பண்பாட்டுக் கலப்பும் மொழிக் கலப்பும்

சமூகத்தில் மனிதர்கள் தொடர்ச்சியான நகர்தலுக்கு உள்ளாகிறார்கள். பல்வேறு காரணிகள் மனிதர்களின் புலம்பெயர்தலுக்கு அடிப்படையாக அமைகின்றன. படையெடுப்பு, பஞ்சம், இயற்கையின் இடர்கள் போன்றவற்றால் இடம்பெயர்ந்தவர்களை விட வணிகத்தின் பொருட்டு புலம்பெயர்ந்தவர்கள் மிகுதியாக இருக்கின்றனர். தமிழகத்திற்கும் அறபு நாடுகளுக்கும் பண்டைய காலத்திலிருந்தே வணிகத் தொடர்புகள் இருந்து வந்திருக்கின்றன. அறபு தேசத்து வணிகர்களை **"யவனர்"** என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இஸ்லாமியச் சமயம் தமிழகத்தில் தோற்றம் பெற்ற பின்னரும், தமிழகத்தில் இஸ்லாமிய அரசர்களின் படையெடுப்பிற்குப் பின்பும் இஸ்லாமியர்கள் வாழும் பகுதிகள் ஆங்காங்கு தோன்றின. எனினும் மக்களுடனான உறவாடல் நோக்கில் தமிழும் கற்றனர் எனலாம். அந்த வகையில் அறபும், தமிழும் கலந்த மொழிகள் உருவாவதற்கு ஏதுவான நிலை ஏற்பட்டது. சமஸ்கிருதமும் தமிழும் கலந்து மணிப்பிரவாள நடை உருவானது போல, அதில் ஒரு பகுதி மலையாள மொழியை ஒத்ததாகவும் காணப்படுகிறது. இதுபோன்று உருது மொழியும் சமஸ்கிருதமும் கலந்து இந்தி மொழி உருவானதாகக் கருதப்படுவதுண்டு. அதனடிப்படையில் அறபுத் தமிழ் என்பதும் அமைகிறது.

அறபு மொழியின் தோற்றப் பின்னணி

அறபுத் தமிழ் என்பது அறபு மொழிக்கும் தமிழ் மொழிக்கும் பாலமாக விளங்கிய தனித்ததொரு பிரிவாக விளங்குகிறது. இது ஒலியால், எழுத்தால் அறபாகவும் மொழியால் தமிழாகவும் அமையும். எழுதும் முறை அறபு மொழியைப் பின்பற்றி வலமிருந்து இடமாக எழுதப்படும். அறபும் தமிழுமான இரு மொழிக் கலப்பால் உருவான அறபுத்தமிழின் தோற்றத்திற்கு நீண்டதொரு பின்னனி இருத்தல் வேண்டும். அறபு மொழிக்கும் தமிழ்மொழிக்குமான தொடர்பினை விளக்கும் முன்பு இஸ்லாமியச் சமய அடிப்படையில் அறபு மொழிக்குரிய தனிச் செல்வாக்கை இங்குச்

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.Maideen P: 260-266

சுட்டுதல் இன்றியமையாததாகும். இஸ்லாம் சமயத்தில் அறபு மொழிக்குரியத் தனிச்சிறப்பே உலகில் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளிளெல்லாம் அறபு மொழி ஆதிக்கம் பெற அடிப்படைக் காரணமாக அமைந்தது.

இஸ்லாம் சமயத்தில் அறபு மொழிக்குரிய தனிச் சிறப்பும் செல்வாக்கும் சமயத்தோடியைந்த தன்மையில் வெளிப்படுவதாகும். அவற்றை தனித்தனியே பிரித்தறிய முடியாதவாறு சமயமும் மொழியும் இரண்டறக் கலந்திருக்கின்றன. அறபு நாடு இஸ்லாமியச் சமயத்திற்கு ஆன்மாவாகத் திகழ்வதற்குப் பற்பல காரணங்கள் இருந்தாலும் அவற்றுள் மிகமிக முக்கியமானதாகக் குறிப்பிடத்தக்கன இரண்டாகும். ஒன்று இஸ்லாமியச் சமயத்தை இவ்வுலகிற்கு முழுமையுடையதாக செய்த பெருமானார் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பிறந்து, இவ்வுலகிற்கு அவர்கள் முன் மாதிரியாக வாழ்ந்து காட்டுவதற்குரிய இடமாக அமைந்தது என்பதாகும். பிறிதொன்று இஸ்லாமியர்களின் முழு முதல் இறை ஆலயமாகத் திகழும் கஃபத்துல்லா அமைந்துள்ள இடம் என்பதாகும். எனவே அறபு நாடு இஸ்லாமியச் சமயத்தின் வராலாற்று மையமாகத் திகழ்கிறது எனலாம். இஸ்லாம் பிற்காலத்தில் அந்நாட்டை மையமாகக் கொண்டு உலகெங்கும் பரவினாலும் கூட அன்று முதல் இன்று வரையில் இஸ்லாமியர்களின் புனித இடமாகவே திகழ்வது அறபு நாடே.

இஸ்லாமியச் சமய வரலாற்றில் அறபு நாடு எங்ஙனம் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறதோ அதைப்போல் அந்நாட்டில் வழங்கும் அறபு மொழியும் இஸ்லாமியர்களிடம் செல்வாக்கும் தனிச்சிறப்பும் பெற்று விளங்கி வருகிறது என்பதில் ஐயமில்லை. இஸ்லாமியர்களின் மறை நூலாம் அல்குர்ஆன், அல்லாஹ்வால் பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அறபு மொழியில்தான் அருளப்பட்டது. எனவே அறபு மொழி இஸ்லாமியர்களின் சமய மொழியாகவே அன்றிலிருந்து இன்று வரை இருந்து வருகிறது. அறபு மொழி குறித்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறும்போது "மூன்று காரணங்களுக்காக அறபுப் பாஷையை நேசியுங்கள் எனக் கூறியுள்ளார். ஒன்று அறபு பாஷை பேசுபவனாயிருக்கின்றேன். இரண்டு பரிசுத்த குர்ஆன் ஷரிபு அறபு பாஷையிலே இறக்கப்பட்டுள்ளது. மூன்று மறுமை நாளையில் சுவன பதியினர் பேசப்போகும் பொதுப் பாஷை அறபு பாஷையே" (ஹதீஸ் ஷரிபு) என்று கூறியுள்ளார். நபிகளார் கூறிய இக்கூற்றுகள் அறபு மொழியின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக அமைகிறது. அல்குர்ஆன் உலகினுக்களித்த நாகரிகத்தை உணர்த்துவதிலும், ஊமையாக்களின் ஆட்சி மொழியாக நின்று நிலைபெற்றதிலும், அப்பாஸியாக்களின்

அறிவியல் மொழி பெயர்ப்புக்கு வளைந்து கொடுத்தமையும் அறபு மொழியின் பெருமைக்குச் சான்றுகளாக அமைந்தன.

அறபுமொழி செமித்திய மொழிக் குழுவின் தொன்மையான மொழியாக இருந்தாலும்கூட அல்குர்ஆனின் வருகைக்குப்பின் அறபு மொழிச் சிந்தனைகள், ஒழுங்கு முறையுடைய இஸ்லாமியச் சிந்தனைகளாக உலகில் மலர்ந்தன. இதன் பயனாக அறபு மொழியும், அதனை எடுத்தோதும் அறபு எழுத்துக்களும், உலக முஸ்லிம் மக்களிடம் உயர் தனிச்சிறப்பிடத்தைப் பெற்றது என்பது நிதர்சனம். உலகில் உள்ள ஒவ்வொரு முஸ்லிம்களிடமும் அறபு மொழி இரண்டறக் கலக்கும் வாய்ப்பினைப் பெற்றது. ஒவ்வொரு முஸ்லிம் சமூகத்தவருக்கும் அறபு மொழியிடத்தில் "புனித மொழி" என்ற அபிமானம் ஏற்பட்டது. இதன் விளைவாக ஒவ்வொவரும் அறபு மொழியைச் கற்பதைச் சமயக் கடமையாகக் கொண்டனர். இஸ்லாத்தின் மீது பற்றும் பிடிப்பும் கொண்டவர்கள் அறபு மொழியைக் கற்கவும், குறைந்த பட்சம் அல்குர்ஆனை ஓதுவதற்காகவாவது பயிற்சி பெற முற்பட்டார்கள். மேலும், இஸ்லாமியர்கள் பலர் அவரவரின் தாய் மொழியில் இல்லாத பயிற்சியையும் பாண்டித்தியத்தையும் அறபு மொழியில் பெற்றுள்ளார்கள். இதற்குச் சான்றாகக் தமிழகத்திலுள்ள குழுவைக் கூறலாம்.

தமிழகத்தில் உள்ள இஸ்லாமியப் பெண்களுள் தமிழ்ப் படிக்கத் தெரியாத பலரும் அறபு மொழியை நன்குப் படிக்கவும் பேசவும் தெரிந்திருப்பார்கள். இந்நிலை அறபு மொழியின் செல்வாக்கு இஸ்லாமிய சமூகத்தவர்களிடம் எத்தகைய நிலையைப் பெற்றுள்ளது என்பதற்குச் சான்றாக அமையும். அறபு மொழியைப் படிக்கத் தெரியாதவர்களும் கூட அறபு எழுத்துக்கள் பதித்த ஏதாவது ஒரு காகிதத்துண்டு கீழே கிடந்தாலும் அதை எடுத்து என்ன என்று அறியாத நிலையிலும் கண்ணில் ஒற்றிப் பத்திரப்படு வைக்கும் நிலையை ஒவ்வொரு முஸ்லிம் குடும்பங்களிலும் பார்க்கலாம். எனவே அறபு மொழி உலகில் முஸ்லிம்கள் எங்கெங்கு இருந்தாலும் அங்கெல்லாம் தொடர்பினையும் செல்வாக்கினையும் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் முஸ்லீம்களும் அறபு மொழியும்

சமய அடிப்படையில் செல்வாக்கைப் பெற்ற அறபு மொழி, தமிழ் மொழியுடனும் தமிழ் நாட்டுடனும் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டதைச் சுட்டிக் காட்டும் முன் அறபு மொழி உலகில் எங்ஙனம் பரவல் ஆக்கம் பெற்றுத் தனித்தன்மையுடன் திகழ்ந்தது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்களது வாழ்க்கைக் காலத்திலும், முதலாவது கவிபாவான

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.Maideen P: 260-266

ஹஸரத் சித்திக் (ரலி) அவர்களது காலத்திலும் முழுமையான செல்வாக்கினை அறபு நாட்டிற்குள்ளேயே பெற்று வந்தது அறபு மொழி. இது நாளடைவில் இஸ்லாம் உலகில் எங்கெல்லாம் பரவியதோ அங்கெல்லாம் சமயத்துடன் இணைந்தே பரவத் தொடங்கியது. கி.பி.632 இல் அல்குர்ஆன் மூலமாக இவ்வுலகில் பூரணத்துவம் பெற்ற இஸ்லாம் சமயமானது, இரண்டாம், மூன்றாம் கலிபாக்களின் காலங்களில் அறபு நாடுகளைக் கடந்த பாரசீக, எகிப்திய, உரோமானிய நாடுகளில் வியாப்பிக்கலாயிற்று. வேற்று நாட்டவர்களின் தொடர்பால் அங்குள்ள கலாச்சாரக் கலப்பிற்கும் மொழித் தொடர்பிற்கும் வழிவகை செய்தது. இக்காலக் கட்டத்தில் எகிப்தில் மொழி நிலையில் இஸ்லாமிய சமயச் செல்வாக்கின் பயனாக பெரும் மாற்றம் ஏற்பட்டது. அன்றைய காலகட்டத்தில் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர் அம்ர்புனுல் ஆன் (ரலி) அவர்களால் கைப்பற்றப்பட்ட மிஸ்து என்னும் எகிப்து தேசத்தில் வழங்கப்பட்டு வந்த கிப்தி என்னும் மொழி நாளடைவில் இஸ்லாமியச் செல்வாக்கினால் வழக்கிழந்து உமவரிய்யா அமீர் வலித் இப்கு அப்துல் மாலிக் அவர்களது காலமான ஹிஜ்ரி 86இல் மிஸ்து தேசத்தின் பொது மொழியாகப் பிரகடனம் செய்யப்பட்டது. இந்நிலை அறபு மொழியை வேற்று நாட்டு மக்கள் தம் மொழியாக முழுமையாக ஏற்றுக்கொண்ட நிலையாகும்.

வேற்று நாடுகளில் அறபு மொழியின் பரவல்

இதற்கடுத்த நிலைகளில் இஸ்லாம் பாரசீகம், உரோமேனியா, துருக்கிஸ்தான் குக்திஸ்தான் போன்ற பகுதிகளில் ஹிஜ்ரி முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் பரவத் தொடங்கிய போது அங்குள்ளவர்கள் இஸ்லாமியச் சமயத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும், இஸ்லாமியச் சமயத்தின் அடிப்படையில் அல்குர்ஆனின் மீதுள்ள ஆர்வத்தையும், பற்றையும் காட்டுதற்பொருட்டு தத்தம் மொழிகளையே அறபு எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதத் தொடங்கினார்கள். பிறிதொரு மொழியான அறபு எழுத்துக்களால் எழுதும் நூதன முறை உலகில் பாரசீக, உரோமானியப் பகுதிகளிலேயே முதல் முதலாகத் தொடக்கம் பெற்றன. இயற்கையிலேயே சமயச் சிந்தனைகளில் அறபு மொழியிடத்து வளர்த்துக் கொண்ட பாரசீக மக்களுக்கு அம் மொழியைப் பயன்படுத்தியே அவர்தம் தாய்மொழித் கல்வியை அமைத்துக் கொள்வது வெகு எளிதாகவே இருந்திருக்கவேண்டும். பாரசீகத்தில் தொடக்கம் பெற்ற அறபு எழுத்து முறையும் பிற மொழித் தொடர்புமே அறபுத் தமிழ் தோற்றத்திற்கான முன்னோடியாக அமைந்தது. பாரசீகத்தில் தோன்றிய இம்மொழி மாற்றத்தைத் தொடர்ந்து ஈரானை முஸ்லிம்கள் வெற்றி கொண்டபோது

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.Maideen P: 260-266

ஈரானிய மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் எழுத்துக்களுக்குப் பதிலாக அறபு எழுத்துக்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். இவ்வாறு உலகில் பல்வேறு இடங்களிலும் அறபு மொழிப் பரவலாக்கம், பெற்று, முஸ்லிம்களுடன் ஒன்றித்துள்ள அறபு மொழியைப் பிரித்தெடுக்க இயலாத ஒன்றாக மாறியது. இத்தகு முறையில் இஸ்லாமியர்களின் தொடர்பினால் மொழிக் கலப்பின் வழி தோன்றிய மொழி நிலையே அறபுத் தமிழாகும்.

இஸ்லாமியத் தமிழலக்கிய வரலாறு தோன்றிய சில நூற்றாண்டுகளுக்குப் பின்பு அறபுத் தமிழ் என்னும் புதுமுறையை தமிழக முஸ்லிம்கள் உருவாக்கினார்கள். இந்தியத் துணைக் கண்டத்தை பொருத்தவரையில் அறபுத் தமிழுக்கு முன்மாதிரியாக அமைந்தது அறபு வங்காளம் ஆகும். அறபு வங்காளத்தின் தோற்றம் பற்றி இன்று சுல்தான் என்னும் ஆசிரியர் தமது வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார். அறபு வங்காளத்தைத் தொடர்ந்து முஸ்லிம் புலவர்கள் அறபு எழுத்துக்களைப் பயன்படுத்தி தமிழலக்கியங்களைப் படைத்து இஸ்லாமியத் தமிழிலயக்கியங்களுள் புதியதொரு அத்தியாயத்தைத் தொடங்கி வைத்தார்கள். இதன் பின்னர்தான் மாப்பிள்ளை முஸ்லிம்களால் உருவாக்கப்பட்ட அறபு மலையாளம் தோன்றியது.

முஸ்லீம் பெண்களின் கல்வியும் அறபுத் தமிழும்

தமிழக முஸ்லிம்கள் அறபுத் தமிழை உருவாக்க காரணம் இஸ்லாமியச் சமயக் கருத்துக்களை அறபு எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதுவதைப் புனிதமான செயலாகக் கருதி இருக்கலாம். இதன் பயனாக இஸ்லாமியச் சமயக் கருத்துக்களை புனித மொழியாகக் கருதும் அறபு மொழியில் எழுதி வெளியிட முனைப்பாக இருந்திருக்க வேண்டும். பிறிதொரு காரணம் அன்றைய மற்றும் இன்றைய முஸ்லிம்களின் கல்வி நிலை, குறிப்பாகப் பெண்களின் கல்வி நிலை அறபுத் தமிழ் தோன்றுவதற்கான வழிவகையினை ஏற்படுத்தக் காரணமாக இருந்திருக்க வேண்டும். முஸ்லிம் சமூகத்தில் பெண் கல்வி மிக அண்மைக் காலத்தில்தான் விழிப்புணர்வின் காரணமாக மேம்பட்டிருக்கிறது. இதனை முஸ்லிம்களின் கல்விநிலை தொடர்பாக நடத்தப்பட்ட கணக்கெடுப்புகள்கள் தெளிவுபடுத்துகின்றன. சமய அடிப்படையில் வெளியில் சுதந்திரமாக செல்ல அனுமதிக்கப்படாத முஸ்லிம் பெண்களுக்கு கல்வி வாய்ப்புக் கிடைப்பது அரிதாகவே இருந்தது. ஆனாலும் அவர்களுக்குரிய அறபு மொழிப் பயிற்சி என்பது கட்டாயக் கடமையாகும். இந்நிலை இன்றும் தொடர்கிறது. முஸ்லிம் குடும்பத்தில் உள்ள பெண்களுக்கு 95 விழுக்காடுக்கு மேல் அறபு மொழிப் பயிற்சியை நன்கு கற்றிருப்பார்கள். ஆனால் அதே நேரத்தில்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.Maideen P: 260-266

அவர்களது தாய்மொழிப் பயிற்சியை அல்லது தமிழ்மொழியைக் கற்றவர்கள் 15 விழுக்காட்டினரே பெற்றிருப்பார்கள். 20 ஆம் நூற்றாண்டில் இந்நிலை எனில் சில நூற்றாண்டுகளுக்கு முன் முஸ்லிம் பெண்களின் தமிழ்க் கல்வி எந்நிலையில் இருக்கும் என்பது சிந்தனைக்குரியது. எனவே இத்தகு சூழலில் தாய்மொழிப் பயிற்சியில்லாதவர்களுக்குச் சமய போதனை செய்யப்பட வேண்டுமானால் அவர்களுக்குத் தமிழ் வாசிக்கத் தெரிந்த வழிமுறையின்படியே போதிக்க வேண்டும் என்பதை அன்றைய தமிழக முஸ்லிம் அறிஞர்கள் நன்கு உணர்ந்திருக்க வேண்டும். இவ்வெண்ணமே அறபுத் தமிழ் என்ற புதியதொரு போதன மொழி தோன்றுவதற்கானத் தேவையை ஏற்படுத்தியது. எனவே ஏறத்தாழ கி.பி.பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த முஸ்லிம் பெரியார்கள், உலமாக்கள், புலவர்கள் பரிசுத்த குர்ஆன் மொழிபெயர்ப்புகளையும், பெருமானாரின் போதனைகளான "ஹதீஸ் உதுரிவு" களையும், இஸ்லாமிய மார்க்கத்தில் சட்டதிட்டங்களான விதிமுறைகளையும், சரித்திர வரலாறுகளையும், தூய அறபுத்தமிழிலே எழுதி அச்சிட்டு இஸ்லாமியச் சமூகத்திற்கு அளப்பறிய பணி செய்துள்ளார்கள்.

முடிவுரை

அறபுத் தமிழின் தோற்றம் வளர்ச்சியால் பிறிதொரு பெரும் பயன் சமய அடிப்படையில் கிடைத்தது. அறபு மொழியை வாசிக்கும் பெரும்பாலான முஸ்லிம்கள் அதனை புனிதமாக எண்ணி வாசிப்பார்களே தவிர அதனுடைய உண்மைப் பொருளைப் புரிந்த கொள்வதில்லை. காரணம் அவர்களது அறபு மொழிப் பயிற்சி வாசிக்கும் திறனை மட்டுமே பெற்றிருக்கும். ஆனால் அறபுத் தமிழ் மூலமாக அதன் உண்மைப் பொருளையும் அறிந்து கொள்ள உதவியாக இருக்கிறது. எனவே தமிழ் மொழியைப் பொருத்த வரையில் அறபுத் தமிழைப் புதியதொரு வார்ப்பாகக் கூறலாம். ஆனால் இதுவும் தமிழ் மொழிதான் என்பது குறிக்கத்தக்கது. வேண்டுமானால் அறபு மொழிக்கும் தமிழுக்கும் இணைப்பாக விளங்குவது அறபுத் தமிழ் எனலாம்.

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr Mrs V.Rama & Dr Mrs K.Maheswari P: 267-277

Kayalpatnam Kamil Oli Sam of Shihabuddin Nayagam (Rah) of Chinna Hadeeth Manika Malai

காயல்பட்டணம் காமில் ஒலி ஸாம் ஷிஹாபுத்தீன் நாயகம் (றஹ்) அவர்களின் சின்ன ஹதீது மாணிக்க மாலை

Dr. Mrs. V. Rama, M.Sc., M.Phil., Ph.D.,
Principal, Wavoo Wajeeha Women's College of Arts and Science, Kayalpatnam

Dr. Mrs. K. Maheswari, M.A., M.Phil., Ph.D., PDF (UGC),
Assistant Professor, Tamil Department,
Wavoo Wajeeha Women's College of Arts and Science
Kayalpatnam

Abstract

Arabic-Tamil related fundamental Islamic religious concepts should be inculcated in Tamil families. That is, in the early period of the 13th and 14th century, in families in Tamil Nadu, men and women were mostly illiterate. They had acquired the knowledge to read the Arabic language through the Holy Quran. Muslim Tamil poets created many literatures based on it. Among them is the Chinna Hadeeth of Kamil Oli Sam Shihabuddin Nayagam (Rah) which is the Manika Malai. His book was published in Arabic Tamil first edition 01.02.1385, reprint 1947, 02.06.1964. Chinna Hadeeth Manika Malai is the conten information.

1. A Kalima that ennobles God's worship
2. Five hours of prayer
3. fasting
4. Zakat
5. Hajj is a pilgrimage

It is the message of this book that anyone who fully reads and acts on these concepts contained in the Arabic Tamil book is sure to be a winner.

ஆய்வுச்சுருக்கம்

அரபு-தமிழ் அடிப்படையான இஸ்லாமிய மதக் கருத்துக்கள் தமிழ்க் குடும்பங்களில் புகுத்தப்பட வேண்டும். அதாவது, 13 மற்றும் 14 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், தமிழகத்தில் உள்ள குடும்பங்களில், ஆண்களும், பெண்களும் அதிகம் படிக்காதவர்களாகவே இருந்தனர். திருக்குர்ஆன் மூலம் அரபு மொழியை படிக்கும் அறிவைப் பெற்றிருந்தார்கள். முஸ்லிம் தமிழ்க் கவிஞர்கள் அதன் அடிப்படையில் பல இலக்கியங்களைப் படைத்தனர். அவற்றில் கமில் ஒளி சம் ஷிஹாபுத்தீன் நாயகம் (ரஹ்) அவர்களின் சின்ன ஹதீஸ் மாணிக்க மாலை ஆகும்.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr Mrs V.Rama & Dr Mrs K.Maheswari P: 267-277

இவரது நூல் அரபுத் தமிழில் முதல் பதிப்பு 01.02.1385, மறுபதிப்பு 1947, 02.06.1964 இல் வெளியிடப்பட்டது. சின்ன ஹதீஸ் மாணிக்க மாலை உள்ளடக்க செய்தி.

1. கடவுளின் வழிபாட்டை மேம்படுத்தும் கலிமா

2. ஐந்து மணிநேர பிரார்த்தனை

3. உண்ணாவிரதம்

4. ஜகாத்

5. ஹஜ் ஒரு புனிதப் பயணம்

அரபுத் தமிழ் நூலில் இடம் பெற்றுள்ள இந்தக் கருத்துக்களை முழுமையாகப் படித்துச் செயல்படுபவர்கள் வெற்றியாளர் என்பது உறுதி என்பது இந்நூலின் செய்தி.

Keywords: Kalima, Prayer, Fasting, Zakat, Hajj

திறவுச் சொற்கள்: கலிமா, தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ்

முன்னுரை

அரபுத் தமிழ் அடிப்படை இஸ்லாமிய சமயக்கருத்துக்கள் தமிழ் குடும்பங்களில் சேர வேண்டும். அதாவது இஸ்லாம் 13, 14 ஆம் நூற்றாண்டு ஆரம்ப காலக் கட்டத்தில் தமிழகத்திலுள்ள குடும்பங்களில் ஆண்கள் பெண்கள் பெரும்பாலும் தமிழ் படிக்கத் தெரியாதவர்களாக இருந்தார்கள். ஆனால், அவர்கள் அரபு மொழியை திருக்குர்ஆன் மூலமாக படிக்கக் கூடிய அறிவுத் திறனை பெற்றிருந்தனர். இந்நிலையில் தமிழகத்திலுள்ள முஸ்லீம் பெண்களுக்கு இஸ்லாம் சமய கருத்துக்களை புரிய வைப்பதற்காக தமிழ் மொழியில் இஸ்லாம் சமய கருத்துக்களை அரபு எழுத்துக்களைப் பயன்படுத்தி இங்குள்ள முஸ்லிம் தமிழ் புலவர்கள் பல இலக்கியங்களைப் படைத்தனர். அதுவே அரபுத் தமிழ் இலக்கியங்களாக தமிழகத்தில் பரவலாக்கத் தன்மை பெற்றது.

பெருமானார் நபிகள் நாயகன் (சல்) வாழ்க்கையில் அவர்கள் தம்முடைய வாழ்க்கையில் திருக்குர்ஆன் கருத்து உரைகளை அடிப்படையாக வைத்து நிகழ்த்திய சொற்பொழிவுகள் செயல்பாடுகள் இவைகள் அனைத்தும் தொகுத்து தரப்பட்டதே 'ஹதீது' எனப்படும். இதன் அடிப்படையில் அமைந்ததுதான் 'சின்ன ஹதீது மாணிக்க மாலை' எனும் நூலாகும்.

இந்நூலில் 1 முதல் 136 பாடல்கள் கொண்டுள்ளது. காப்பு செய்யுள் நீங்கலாக, அரபு தமிழிலிருந்து மொழிப்பெயர்த்து வெளியிடப்பட்ட நூலாகும். காயல்பட்டணம்

காமில் ஒலி ஸாம் ஷிஹாபுத்தீன் நாயகம் (றஹ்) அவர்களால் இயற்றப்பட்டது. கலிமா, ஐந்து நேரத் தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ் மேற்குறித்த ஐந்து கடமைகளும் இஸ்லாமிய நெறியில் மேற்கொள்ளப்படும். சம்பூர்ணமான வாழ்க்கை நெறிக்குரிய அடிப்படைத் தூண்களாக விளங்குகின்றது என்பதை 'சின்ன ஹதீது மாணிக்க மாலை' எனும் நூல் தெளளத் தெளிவாக விளக்குகின்றது.

திருக்குர்ஆன் கருத்துப்படி ஒரு மனிதன் தாம் வாழ்ந்து கொண்டிருக்கும் மனித சமூகத்திற்கு உண்மையானவராக இருக்க வேண்டும். கட்டாயக் கடமைகள் குறித்து இறைத்தூதர் பெருமானார் நபிகள் நாயகம் அவர்கள் கூறும் போது 'இஸ்லாம் என்றால் ஒருவர் ஓரிறைக் கொள்கையை ஏற்றுத் தொழுகை, கலிமா, நோன்பு, ஜக்காத், ஹஜ், ஆகிய கடமைகளை ஒழுங்காக நிறைவேற்ற வேண்டும் என்று மொழிவார்கள்.

எனவே இஸ்லாம் எடுத்துக் கூறும் இக்கட்டாயக் கடமைகள் அனைத்தும் உலகளாவிய கண்ணோட்டத்துடன் அமைக்கப்பட்டுள்ளன. மனித சமூகத்தின் வேற்றுமை உணர்வுகள் நீங்கி ஒற்றுமை தழைத்தோங்குவதற்கு இக்கட்டாயக் கடமைகள் அடித்தளமாகவும், ஆணிவேராகவும், இஸ்லாம் சமயத்தில் திகழ்கின்றன. இக்கடமைகள் ஒவ்வொன்றின் உண்மைப் பொருள் முக்கியத்துவம் நடைமுறையில் எங்ஙனம் இக்கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதனை 'சின்ன ஹதீது மாணிக்க மாலை' எனும் நூலில் விளக்கமாக கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

நூலின் ஆசிரியர் பற்றிய செய்திகள்

காயல்பட்டணம் காமில் ஒலி ஸாம் ஷஹாபுத்தின் நாயகம் (றஹ்) அவர்களால் 'சின்ன ஹதீது மாணிக்க மாலை' எனும் நூல் இயற்றப்பட்டது. அரபுத் தமிழில் எழுதப்பட்டுள்ள மூலநூலுடன் ஒப்பிட்டு திருத்தமுற இவை வெளியிடப்படுகிறது. யாவருக்கும் இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடிய முறையில் கருத்துக்களும், பதங்களும், அர்த்தங்களும் தரப்பட்டுள்ளன. இந்த பணியை எனது வேண்டுகோளின் மீது சிறப்பாக நிறைவேற்றித் தந்த எனது அன்பிற்குரிய அருமைச் சகோதரர் அல்ஹாஜ் மௌலவி மூ.முஹம்மது ஹஸன் காதிரி அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றி. அவர்களுக்கு இந்நூலின் முதற்பதிப்பை சிறப்பாக வெளியிட்ட ஸாம் ஷிஹாபுத்தீன் வொலி நாயகம் அவர்களது கந்தூரி கமிட்டியினருக்கும், பொது நலச் சேவையில் எனக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கக்கூடிய எல்லாமுமின் முஸ்லிம்களுக்கும் அல்லாஹுக்கு ஸஔிப்ஹான ஹீவதஆலா ஈருலக நற்பக்கியங்களையும் தந்தருள்வானாக ஆமீன். வஸ்ஸலாம்.

என்று சின்ன ஹதீது மாணிக்க மாலையின் நூலின் ஆசிரியர் பற்றிய செய்திகள் முகப்பு பகுதியில் இடம் பெற்றிருக்கின்றது.

மேலும் ஸாம் ஷிஹாபுத்தீன் வொலி நாயகம் அவர்களது கந்தூரித் கமிட்டியினரால் வெளியிடப்பட்ட முதற்பதிப்பின் முன்னுரை இச்சிறு கிரந்தம் இன்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்பு அரபு காயல்பட்டணம் காமில் ஒலி ஷெய்கு சுலைமான் லெப்பை ஆலிம் நாயகம் அவர்களின் அருந்தவப் புதல்வர், இந்நகர் சிறு நயினார் பள்ளியில் சமாதி கொண்டிலங்கும் ஹலரத் ஷம் ஸூத்தீன் ஒலி, தஞ்சை மாவட்டம் சமாதி கொண்டிலங்கும் லெப்பை ஆலிம் நாயகம், இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை ஜூம் ஆப் பள்ளிக்கருகே சமாதி கொண்டிலங்கும் மாதி ஹுர்ரஸுலும், பல அரிய அரபிக் கிரந்தகளுக்கு ஆசிரியரும், கொடை வள்ளல் சீதக்காதியின் மெஞ்ஞான குருவும், அவுரங்க ஜுப் மன்னரின் மதிப்பிற்குரிய மஹானும், அகில இஸ்லாமிய உலகம் போற்றும் அரபிக் கவியரசருமான காமில் ஒலி ஷெய்கு ஸதக்கத் துல்லாஹ் நாயகம் ஆகிய இம்மணிகளுக்குத் தம்பியும், நெல்லை மாவட்டம் (களக்காடு) ஏர்வாடியில் சமாதி கொண்டிருக்கும் ஷெய்கு ஸலாஹுத் தீன் நாயகம் அவர்களின் தமையனுமான இந்நகரில் அவதரித்து இஸ்லாத்தின் உயர்ந்த தத்துவங்களை வழிபாட்டிற்கு வேண்டிய சட்ட திட்டங்களையும், எல்லோரும் உணரும் படி எளிய தமிழ் உருவமாய் சுருங்கச் சொல்லி விளங்கத் தந்து தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட இஸ்லாமிய மக்களின் இதயத்தை மெஞ்ஞானப் பிரகாசமாக்க நற்தொண்டு செயல் .

காயல்பட்டணம் அப்பா பள்ளியில் சமாதி கொண்டிலங்கும் சன்மார்க்க சீர்திருத்த வள்ளலும், ஹதீது மாலை, ரசூல் மாலை, நபி மாலை, நான்குயார்கள் மாலை, அலியார் மாலை, நான்கு இமாம்கள் மாலை, உலமா மாலை, சூரத்துல் குர்ஆன் மாலை, நஸீஹத்து மாலை, அதபு மாலை, அனந்தரப் பிரிவு மாலை, குத்பா மாலை, ஹனபிமத்ஹப் மாலை, மஃரிபா மாலை, நெஞ்சறிவு மாலை, தொழுகை மாலை, அர்க்கான் மாலை, புகையிலை விலக்கு மாலை, மின் ஹாஜ் மாலை, காயத்துல் இஹ்திஸார் மாலை, ஜமாஅத் மாலை, மணம்புரி மஸ்அலா மாலை, கந்தூபித்அத் விலக்கு மாலை, இவை போன்ற ஆயிரம் கிரந்தங்களுக்குப் பேராசிரியருமான காமில் ஒலி ஸாம் ஷpஹாபுத்தீன் நாயகம் அவர்களின் திருக்கிரந்தங்களில் ஒன்றாகும்.

குறுகிய காலத்தில் மக்களுக்கு அறிவையூட்ட வழி தேடி பற்பல துறைகளிலும், அறிஞர்கள் முயற்சித்து வரும் இக்காலத்தில் நம் மகானுபாவரின் அரிய சேவை அபரிமிதமாய்ப் பாராட்டத்தக்கதென்பதை எவரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

பல ஆண்டுகளாக அரபியைக் கற்று இஸ்லாத்தின் புனித சட்ட திட்டங்களை அறியக் கடமைப்பட்டிருந்த நம் தமிழ் முஸ்லீம்களுக்கு மழலைகளுக்கு அமுதளிக்கும் அன்னையைப் போன்று எளிய தமிழில் இனிய நடையில் இஸ்லாத்தின் புனித சட்டதிட்டங்களை அறியக் கடமைப்பட்டிருந்தும் நம் தமிழ் முஸ்லிம்களுக்கு மழலைக்கு அமுதளிக்கும் அன்னையைப் போன்று எளிய தமிழில் இனிய நடையில் இஸ்லாத்தின் உயர்ந்த தத்துவங்களை அடக்கித் தந்த வள்ளல் ஸாம் ஷிஹாபுத்தீன் நாயகம் அவர்களுக்கு நம் தமிழ்நாடு என்றும் கடமைப்பட்டுள்ளது என்பது மிகையாகாது.

இப்பேறிஞரின் பல நூல்களையும் திரட்டி வெளியாக்க வேண்டுமென இந்நாயகத்தின் கந்தூரிக் கமிட்டியராகிய நாங்கள் பந்தெடு நாள் கொண்டிருந்த ஆவலைப் பூர்த்தி செய்ய எல்லாத் துறைகளிலும் எங்களுக்குதவி இந்நூலை சரிபார்த்துத் தந்த எங்களின் மதிப்பிற்குரிய அல்லாமா முப்தி நஹ்வி முகம்மது இஸ்மாயில் லெப்பை ஆலிம் அவர்களின் பேருதவியைப் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழ் முஸ்லீம் தோழர்கள் இந்நூலை முஸ்லிம் பாட சாலைகளில் கட்டாய வகுப்புப் பாடமாக வைத்து மக்களுக்கு ஊட்ட வசதியளிப்பதோடு மற்ற மாலைகளும் தொடர்ந்து வெளிவாக ஆதரவளித்து ஊக்கந்தர அன்புடன் வேண்டி நிற்கும் ஸாம் ஷிஹாபுத்தின் ஒலியுல்லா அவர்களின் கந்தூரிக் கமிட்டியார் காயல்பட்டணம் என்று நூலின் பதிப்பு பற்றி விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் முதற் பதிப்பு 01.02.1385, மறுபதிப்பு 1947, 02.06.1964 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கவையாகும்.

சின்ன ஹதீது மாணிக்க மாலையின் உள்ளடக்கச் செய்திகள்

சின்ன ஹதீது மாணிக்க மாலை எனும் தலைப்பு 'ஹதீது' என்பது பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் தம்முடைய வாழ்க்கையில் திருமறை குர்ஆன் உரைகளை அடிப்படையாக வைத்து கொண்டு நிகழ்த்திய சொற்பொழிவுகள் செயல்பாடுகள், இவைகள் அனைத்தும் தொகுத்துத் தரப்பட்டதே ஹதீது என்பதாகும். சிறிய அளவினை உடையது

மாணிக்கக் கற்கள் அதனுடைய மதிப்பினையும், தரத்தினையும், எண்ணிப் பார்த்தால் பொக்கிஷமாக மக்கள் மத்தியில் கருதிடுவர். அதைப் போன்று பன்மடங்கு போற்றக் கூடியதும், புகழக்கூடியதும், சின்ன ஹதீது மாணிக்க மாலையின் தத்துவங்கள் என்பதை படித்துதான் உணர முடியும். 'மாலை' என்பது ஒரு பொருள்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr Mrs V.Rama & Dr Mrs K.Maheswari P: 267-277

குறித்து பல செய்யுள்கள் பாடுவதை மாலை என்கிறார்கள். ஆகவே சின்ன ஹதீது மாணிக்க மாலை என்பது போற்றிப் புகழக்கூடியதும், இஸ்லாம், மக்களிடம் இதன் கருத்துக்கள் சென்றடைய வேண்டியதும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். முதலில் காப்பு செய்யுள் பாடப்பட்டுள்ளது அவை பின்வருமாறு.

'வானுலகும் வாகாய் அறுநலனில்
தானமுடனே படைத்த தக்கோனே ஈனமில்லா
மவ்லா நபியுடைய வண்மை ஹதீன் மாலை
கவ்லாக யானுரைக்கக் காப்பு' [1]

ஏக இறைவழிபாட்டை மெய்ப்பிக்கும் கலிமா.

ஏக இறைவழிபாட்டை மெய்ப்பிக்கும் கலிமா ஐந்து விதமான கடமைகளை பற்றி எடுத்துரைப்பதாக இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. அதில் இஸ்லாம் முதலாவது கட்டாயக் கடமையாக ஒவ்வொருவருக்கும் வலியுறுத்துகின்றது. இக்கடமையை இஸ்லாம் 'கலிமா' என்னும் சொல் மூலம் விளக்குகின்றது. கலிமா என்னும் அரபு சொல்லின் நேரடியான சொல், பொருள் வார்த்தை (அ) பேச்சு என்பதாகும். இஸ்லாத்தின் அடிப்படைத் தத்துவங்களை எடுத்துக் கூறும் திருவசனங்களையே சிறப்பு நிலையில் குறிக்கின்றது. இஸ்லாத்தின் மூல மந்திரமாகிய கலிமா ஓரிறைக் கொள்கையை எடுத்துக் கூறும் முறையில் இரண்டு சொற்றொடர்களால் ஆக்கப்பட்டுள்ளது அவை

'லா இலாஹ இல்லல்லாஹ்
முகம்மதுர் ரசூலுல்லாஹி'

இச்சொற்றொடர் கலிமா தையிபா என்று அழைக்கப்படுகின்றது. இதன் உண்மைப் பொருள் வணக்கத்துக்குரியவன் அல்லாஹவைத் தவிர வேறு எவருமில்லை முகம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய திருத்தூதர் ஆவர். இதனையே சின்ன ஹதீது மாணிக்க மாலைப் பாடலில் இடம் பெற்றிருப்பதையும் அறியலாம்.

வரிசைக் கலிமாவைத் தினங்கள் தோறும்
வன்மையுடன் நூறும் மட்டோதினால்
இரவில் ஒளிவு போல் நன்றாகவே
எவ்மல் கியாமத்தில் வருவானென்றே

அருக் கனழைப் பித்து அலிக்காகவே
அஸறு தொழ மட்டும் நிறுத்தி வைத்த
அரிய நபியுல்லா (றஹ்) உரைத்தாரென
அழகான யார்கள் அருட் செய்தார்.

எல்லா திக்ரிலும் வரிசையான
ஏற்றமுள திகிற் லா இலாஹ
இல்லல்லா (றஹ்) வென்று சொன்னரெங்கள்
இந்தையிரு பாதி யாயழைத்தோர் [2]

'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்னும் சொற்றொடரை ஒருவர் வாயால் மொழிந்து மனத்தால் முழுமையாக ஏற்றுக் கொள்வதே ஒவ்வொரு முஸ்லிமின் கட்டாயக் கடமையாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காலத்திலும் அல்லாஹ் தம் வேறுபட்ட தூதர்கள் மூலமாக மனித சமூகத்திற்கு அனுப்பி வைத்த அடிப்படைக் கடமையாகும். இது இஸ்லாத்தில் இறைமை பற்றிய சிந்தனையின் அடித்தளமாகவும் இச்சொற்றொடர் விளங்குகின்றது.

ஐந்து நேரத் தொழுகை

தொழுகை என்பது இஸ்லாம் மார்க்கத்தின் தூணாக இருக்கிறன்றது என்பது பெருமானார் முகம்மது நபி அவர்களின் வாக்காகும். இஸ்லாம் வலியுறுத்தும் தொழுகை மூன்று முக்கிய அம்சங்களைக் கொண்டிருக்கிறது.

1. இறைவனின் மகத்தான மாண்புமிக்க சன்னிதானத்திலிருக்கிற உணர்வினால் எழுகின்ற ஆன்மாவின் பணிவு.
2. சில சொற்களை வாயாலும் மனத்தாலும் மொழிவதால் மகத்தான இறைவனது பெருமைகளையும், மனிதனின் தாழ்வையும் அன்றாடம் நினைவு கூர்தல்.
3. தேவையான இறைவணக்கத்தின் மூலமாக மனிதனின் புறத் தோற்றங்களையும் அகத் தோற்றத்தையும் பக்தி நிலையில் இருக்கச் செய்தல்.

ஹத்தை நிறைவேற்றுமென ஒருவர்
லங்கி நபிபால் வந்துரைத்த வேளை
சத்தமழகான நபீயுரைத்தார்
ஸலாத்து நிஸ்காரம் எங்களுடன்

வெற்றி பெறத் தொழுதாயோ வென
விளம்பினரவர் தொழுதேனென்று
முத்திலுதிப்பானோர் மொழிந்தாரப்போ
முதலோன் பிழையெல்லாம் பொறுப்பானன்றே

அழகாய் உலுச் செய்து அகத்தாலஞ்சி
அன்பாகத் தொழுதால் தோசங்கள்
தெளிவாய் அகலு மென்றுரைத்தாரெங்கள்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr Mrs V.Rama & Dr Mrs K.Maheswari P: 267-277

தீனின் குருவான நபியிறசூல் [3]

நாள்தோறும் ஐவேளை தொழுகையை இஸ்லாம் கட்டாயக் கடமையாக்கியுள்ளது. இக்கருத்தினை எனக்கு வழிபட்டு என்னை வணங்குவதன்றி ஜூவன்களையும், மனித்ர்களையும் நான் சிருஷ;டிக்கவில்லை, அவர்களிடத்தில் நான் யாதொரு பொருளையும் விரும்பவில்லை. 'திருமறை குர்ஆன் (52–56–57) என்றும் திருவசனத்தின் மூலமாக இறைவன் உணர்த்தியுள்ளான். இக்கடமை பெருமானார் மூலமாக இறைவன் உணர்த்தியுள்ளான். இக்கடமை பெருமானார் முகம்மது நபி அவர்கள் விண்ணுலகம் சென்ற மிஃராஜ் பயணத்தின் போது அல்லாஹ்வால் கடமையாக்கப்பட்டது. இத்தொழுகை பல்வேறான அம்சங்களையும் நிறைவேற்றும் முறைகளையும் பெற்றுள்ளது.

நோன்பு

இது மூன்றாவது கட்டாயக் கடமையாகும். ஆண்டு தோறும் இஸ்லாமிய மாதமான ரமலான் மாதத்தின் முப்பது நாட்களும் பகற்பொழுதில் உணவருந்தாது விலக்கி, ஆன்மீக வாழ்வுக்குப் பொருந்தாத சிற்றின்பங்கள், வேறு இன்பங்கள் ஆகியவற்றைப் பற்றிய எண்ணங்களிலிருந்து முழுமையாகத் தம்மை விடுவித்துக் கொண்டு இறைவனது பெருமைதனை நெஞ்சில் நிலைநிறுத்தி மேற்கொள்ளும் சுயக்கட்டுப்பாட்டு விரதத்தையே இஸ்லாம் வலியுறுத்தும் மூன்றாவது கட்டாயக் கடமையான நோன்பு சுட்டுகிறது.

வரிசையுன குர்ஆனும் நோன்பும்
வல்லானிடத்திலே கொடுவந்தோர்க்கு
உரிமை ஷபா அத்துச் செய்யுமென
ஓதினாரெங்கள் நபியிறசூல்

ஆதிதனை நாடி றமலான் தன்னில்
அஞ்சி யலங்காரமாய்ப் பிடித்தால்
நீதமணுகாத முன் பிழைகள்
நீதி பொறுப்பானென்றாரிறசூல்

றமலான் தனில் நோன்பு வைத்த பின்பு
நெறியா யபம் நாக்கு வயிற்றைப் பேணி
சமதமுடனிருந்தோர்க்குச் சொர்க்கம்
தனக்குப் பிணையா னென்றாரிறசூல் [4]

ஒவ்வொருவரும் உன்னதமான ஆன்மீகப் பயிற்சிக்கு தம்மைத் தாமே உட்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அறவாழ்வின் வளர்ச்சிக்காகவே இஸ்லாம்

எடுத்துக் காட்டும் இந்த மூன்றாவது கட்டாயக் கடமையாக அமைந்துள்ளது. ஆன்மாவிற்கு உடலைப் பணிய வைப்பதற்கும், உடலின் வேகத்தைக் குறைத்து, ஒவ்வொரு மனிதனின் ஆன்மாவையும் புனிதமாக்குவதற்கும் உண்ணா நோன்பு உதவி புரியும் என்ற காந்தியடிகளின் கோட்பாடுகளை இஸ்லாம் எத்தனையே நூற்றாண்டு ஆண்டுகளுக்கு முன்பே அங்கீகரித்துள்ளது. இந்த அங்கீகாரமே மூன்றாவது கட்டாயக் கடமையான நோன்பின் உண்மையான நோக்கமாகும்.

ஜகாத்

செல்வம் என்பது மனித சமூகத்திற்கு அடிப்படையானதும் அவசியமானதும் என்பதை இஸ்லாம் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் இந்தச் செல்வம் ஒரு குறிப்பிட்டவர்களிடம் மட்டுமே சேர்ந்து பயனளித்துக் கொண்டிருப்பதைத் தடுக்கும் வகையில், இஸ்லாம் எடுத்துக் கூறும். விதிமுறையே ஜகாத் என்னும் நான்காவது கட்டாயக் கடமையாகும். ஜகாத் என்பது தூய்மைப்படுத்துதல், சுத்தப்படுத்துதல் என்றே பொருள்படும். ஒருவர் பெருகிக் கொண்டிருக்கும் தம்முடைய சொத்தில் ஒரு பகுதியை அதனைத் தூய்மைப்படுத்துவதற்காக ஏழைகளுக்கு வழங்க வேண்டும் என்பதையே ஜகாத் நான்காவது கடமையாக வலியுறுத்துகின்றது.

ஸகாத் தளிப்பது இஸ்லாம் தனில்
சிறப்பான் ஸிறாத்தாகுமென்று
ஷக்காம் உரைபேசார் சென்னாரென
தப்றானி உஸ்தாது செப்பினார்

கணக்கு நெறியாகப் பார்த்திறாமல்
கண்டபடி கொடுத்தால் ஸகாத்து
இணக்கமுடனிறு படாதெனவே
ஏற்றமுள உலமாக்கள் சொன்னார் [5]

திருக்குர்ஆனின் கருத்துப்படி ஒரு மனிதன் தாம் வாழ்ந்து கொண்டிருக்கும் மனித சமூகத்திற்கு உண்மையானவராக இருக்க வேண்டுமானால் அவர் வாழும் சமூகத்தில் உள்ள வறியோருக்கு, பொருள் தேவையுள்ளோருக்கும் தருமம் செய்பவராக இருக்க வேண்டும் என்ற உயர்ந்த கருத்தினடிப்படையிலே ஜகாத் ஒவ்வொருவருக்கும் கட்டாயக் கடமையாக்கப்பட்டுள்ளது.

ஹஜ் என்னும் புனிதப் பயணம்

ஹஜ் என்பதன் பொருள் இறைவனை நோக்கி மேற்கொள்ளும் பயணம் என்பதாகும். ஹஜ் என்பது பொதுநிலையில் 'யாத்திரை' என்று பொருள்பட்டாலும் இது சிறப்பு நிலையில் ஒவ்வொரு முஸ்லிமும் மக்காநகர் நோக்கி மேற்கொள்ளும் புனிதப் பயணத்தையே குறிக்கும். இஸ்லாமிய ஆண்டான துல்ஹஜ் மாதம் ஒரு குறிப்பிட்ட நாளில் மக்காவிலுள்ள இறை ஆலயமான கருபத்துல்லாவை நோக்கி

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr Mrs V.Rama & Dr Mrs K.Maheswari P: 267-277

மேற்கொள்ளப்படும் பயணமான ஹஜ் என்பது ஐந்தாவது கடமையாக விதிக்கப்பட்டுள்ளது. ஹஜ் என்பது ஐந்தாவது கடமையாக இஸ்லாம் விதித்துள்ள போதிலும் இதனை நிறைவேற்ற பொருளாதார வசதியற்றோருக்கும், நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் விதி விலக்களிக்கப்பட்டுள்ளது.

கபூலாம் ஹஜ்ஜுக்குக் கூலியில்லை
கனகபதி சொற்கம் தவிரவென
மவுலா நபினரத் தாரெனவே
மணமாய் ïவாஜிரில் nஷய் குரைத்தார்
நடந்து போய் ஹஜ்ஜு செய்யும் பேர்க்கு
நாளை கியாமத்தில் ஆதிய நாயன்
கடந்த அடிக்கேழு நூறு லட்சம்
கருணையள நன்மை கொடுப்பானென்றார் [6]

முடிவாக 'சின்ன ஹீதீது மாணிக்க மாலை' எனும் அரபுத் தமிழ் நூலில் இடம் பெற்றுள்ள கருத்துக்களை எவர் ஒருவர் முழுமையாக படித்துணர்ந்து செயல்படுகின்றாரோ அவர் ஒரு வாழ்வின் தத்துவத்தை உணர்ந்த 'பேரறிவாளன்' 'வெற்றியாளன்' 'சொர்க்கத்திற்கு சென்றடைவான்' என்பதில் ஐயமில்லை, எனவே இந்நூலில் இடம் பெற்றுள்ள கருத்துச் செறிவு, உண்மைத் தன்மை, பிற மொழிகளிடம் இரவல் வாங்காத தனித்துவம் போன்றவை இந்நூலிற்கு மென்மேலும் சிறப்பு சேர்க்கும் விதமாக அமைந்துள்ளது என்பது கவனிக்கத் தக்கவையாகும்.

அடிக்குறிப்புகள்

1. காயல்பட்டணம், காமில் ஒலி ஸாம் ஷஹாபுத்தின் நாயகம் (றஹ்) – சின்ன ஹதீது மாணிக்க மாலை – முதல் பாடல் - பக்கம் 1
2. காயல்பட்டணம், காமில் ஒலி ஸாம் ஷஹாபுத்தின் நாயகம் (றஹ்) – சின்ன ஹதீது மாணிக்க மாலை – 14, 15, 16 பாடல்கள் - பக்கம் 8
3. காயல்பட்டணம், காமில் ஒலி ஸாம் ஷஹாபுத்தின் நாயகம் (றஹ்) – சின்ன ஹதீது மாணிக்க மாலை – 24, 25, 26 பாடல்கள் - பக்கம் 10
4. காயல்பட்டணம், காமில் ஒலி ஸாம் ஷஹாபுத்தின் நாயகம் (றஹ்) – சின்ன ஹதீது மாணிக்க மாலை – 94, 95, 96 பாடல்கள் - பக்கம் 21, 22
5. காயல்பட்டணம், காமில் ஒலி ஸாம் ஷpஹாபுத்தின் நாயகம் (றஹ்) – சின்ன ஹதீது மாணிக்க மாலை – 85, 86 பாடல்கள் - பக்கம் 20

6. காயல்பட்டணம், காமில் ஒலி ஸாம் ஷஹாபுத்தின் நாயகம் (றஹ்) – சின்ன ஹதீது மாணிக்க மாலை – 106, 109 பாடல்கள் - பக்கம் 24

Reference

1. Kayalpatnam Kamil Oli Sam of Shihabuddin Nayagam (Rah) of Chinna Hadeeth Manika Malai - First song - p. 1
2. Kayalpatnam Kamil Oli Sam of Shihabuddin Nayagam (Rah) of Chinna Hadeeth Manika Malai - 14, 15, 16 songs - p. 8
3. Kayalpatnam Kamil Oli Sam of Shihabuddin Nayagam (Rah) of Chinna Hadeeth Manika Malai - 24, 25, 26 songs - p. 10
4. Kayalpatnam Kamil Oli Sam of Shihabuddin Nayagam (Rah) of Chinna Hadeeth Manika Malai - 94, 95, 96 songs - p. 21, 22
5. Kayalpatnam Kamil Oli Sam of Shihabuddin Nayagam (Rah) of Chinna Hadeeth Manika Malai - 85, 86 songs - p. 20
6. Kayalpatnam Kamil Oli Sam of Shihabuddin Nayagam (Rah) of Chinna Hadeeth Manika Malai - 106, 109 songs - p. 24

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303   ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr J.Raja Mohamed P: 278-292

Since 1951

‘Kayalpattanam Karana Charithiram” *A Book in Arabic Tamil*

- A Historical Overview

”காயல்பட்டணம் காரண சரித்திரம்”- -*அரபுத் தமிழ் நூல்*- ஓர் ஆய்வு.

Dr. J. Raja Mohamad
Director, Centre for Islamic Tamil Cultural Research
Jamal Mohamad College (Autonomous)
Tiruchirappalli – 620 020.   (94431 32922)
E-Mail ID: jrajamohamad@yahoo.com

Abstract

Kayalpattanam was one of the earliest settlements of Muslims on the Coromandel Coast. Through the settlement is of ancient founding adequate authentic historical evidences are wanting. Hence traditional and oral history walks over the historical facts. However it had a rich literary tradition on Islam and a number of literary works have emerged from this soil   in Tamil and Arabic Tamil on Islamic theology. Sufism, istory of Prophet Mohamed, Kalifas, Pirs etc. These works speak very less about the general history of the people. “Kayalpattanam Karana Charithiram”, a book in Arabic Tamil written in the year 1947, shed some light on the traditional history and as well as elements of historical facts. The paper is a discussion on the historical facts and fictions about Kayalpattanam as gleaned from this book.

Keywords : Kayalpattanam, Kayal, Ships, Arabs, Europeans, Sonakar, Marakkayar,Copper-plate, Maritime trade, Arab Tamil Literature.

ஆய்வுச் சுருக்கம்

காயல்பட்டணம் சோழமண்டல கடற்கரையில் காலத்தால் முற்பட்ட இஸ்லாமியக் குடியிருப்பாகும். குடியிறுப்பு பழமை வாய்ந்ததாக இருப்பினும் இவ்விடத்தின் வரலாற்றுப்பூர்வமான செய்திகள் தெளிவு பெறாத நிலையே உள்ளது. சரியான வரலாற்றுச் செய்திகளைவிட கர்ண பரம்பரைக் கதைகளே விஞ்சிநிற்கின்றன. இருப்பினும் கி.பி.19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து அரபுத்தமிழில் எழுதப்பட்ட இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் இங்கு நிறைய உருவாகின. நமது ஆய்வுக்குட்பட்டுள்ள **”காயல்பட்டண காரண சரித்திரம்”,** என்னும் நூல் 1947ஆம் ஆண்டு எழுதப்பட்டது. இவ்வூரில் பாரம்பரியமாக வழங்கும் செய்திகளோடு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சில செய்திகளையும் இந்த நூல்

தருகிறது. இதில் சொல்லப்பட்டுள்ள செய்திகள் குறித்ததொரு ஆய்வுரையாகும் இந்த கட்டுரை

திறவுச் சொற்கள்: காயல்பட்டணம், காயல், மரக்கலம், அரேபியர், சோனகர், மரக்காயர், ஐரோப்பியர், செப்பேடு, கடல் வாணிபம், அரபுத்தமிழ் இலக்கியம்.

முன்னுரை :

"காயல்பட்டணம் காரண சரித்திரம்" 1947ஆம் ஆண்டு அரபுத்தமிழில் எழுதப்பட்ட குறுநூலாகும். இதில் சொல்லப்பட்டுள்ள செய்திகளைத் குறித்ததொரு ஆய்வுரையாகும். இந்த கட்டுரை,

காயல்பட்டணத்தின் வரலாறு கூறும் நூல்களில் வரலாற்று வரைவியல் ரீதியான செய்திகளைவிட கர்ணபரம்பரையாக, காலம் காலமாக சொல்லப்பட்டு வரும் செவிவழிச் செய்திகளே முதன்மைப்படுத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளதைக் காணலாம். இதுபோன்ற வழக்காற்றுச் செய்திகளை உள்ளடைக்கியே 1950களுக்குப்பின்னர் வரலாற்று நூல்கள் சில தமிழில் வெளிவந்துள்ளன. எம்.கே.செய்யிது அஹமது எழுதியுள்ள "வான்புகழ் காயல்பட்டணம் சரித்திரம்"(1951),[1] ஆர்.எஸ். அப்துல் லத்தீப்பின், காயல்பட்டினம் (1993),[2] மற்றும் காயல்தான் காயல்பட்டணம் (2015),[3] காயல்பட்டணம் தேர்வு நிலைப் பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு சிறப்பு மலர் (1990),[4] மற்றும் காயல்பட்டணம் குறித்து கல்லூரிகளில் எழுதப்பட்டுள்ள ஆய்வுரைகள், பல்வேறு காலக்கட்டங்களில் பலரால் எழுதப்பட்டுள்ள கட்டுரைகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.[5] இத்தகைய எழுத்தாக்கங்களைப் பலரும் படித்திருக்கக்கூடும்.

கி.பி. 9ஆம் நூற்றாண்டளவிலிருந்து காயல்பட்டணத்தில் காணப்படும் திராவிடக்கட்டடக் கலைப்பாணியில் கட்டப்பட்டுள்ள பள்ளிவாசல்கள் பலவற்றிலும் தொடர்ச்சியாக 13, 14, 15ஆம் நூற்றாண்டு கால வரையறைவரையில் இப்பகுதியை ஆண்ட இந்து மன்னர்கள் மேற்படி பள்ளிவாசல்களுக்கு அளித்துள்ள நில மானியங்கள் குறித்த கல்வெட்டுகள் பல காணப்படுகின்றன.[6] மேலும் இங்குள்ள மைய வாடிகளில் காணப்படும் மீசான் பலகைகளிலும் வரலாற்றுக் குறிப்புகள் பல காணப்படுவது[7] குறிப்பிடத்தகதாக இருந்த போதிலும் இவற்றைக் குறித்தெல்லாம் மேற்கண்ட நூல்களில் சொல்லப்பட்டிருப்பது மேலோட்டப்படுத்தப்பட்டு, தங்களது

பாரம்பரியம் என பல செய்திகள் பெருமைப்பட பேசப்படுவதைக் காண முடிகிறது. இவற்றிலெல்லாம் இங்குள்ள மக்கள் தங்களை அரேபிய தேசத்து பாரம்பரியத்துடனும், மக்கடளுடனும், நேரடியாக அடையாளப்படுத்திக் கொள்வதில் மிகவும் பெருமையடைகின்றனர். பிற ஊர்களில் உள்ள முஸ்லிம்களை விட தாங்கள் பிறப்பால் உயர்ந்தவர்கள் எனவும், நபி பெருமானார் அவர்கள், மற்றும் அவர்கள் பின்னால் வந்த கலீபாக்கள், இந்நாட்டில் இஸ்லாம் மதம் வேரூன்றக் காரணமாக விளங்கிய இறைநேசர்கள் ஆகியோரின் வழிவந்தவர்கள் என அவரவரும் ஒரு கொடிவழி ஜாபிதாவை காட்டுவதையும் காண முடிகிறது. மானிடவியல் ரீதியான ஆய்வுகள் இத்தகைய செய்திகளை நாட்டார் வழக்காற்றியல் என்று கூறுகிறது. இருப்பினும் இவ்வாறு பாரம்பரிய செய்திகளும் கூட எதை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுகின்றன என்பதும் நமது தேடலில் இருந்துவந்து கொண்டிருக்கிறது. சமீபத்தில் அரபுத் தமிழில் எழுதப்பட்ட 'காயல்பட்டணம் காரண சரித்திரம்' ஹிஜிரி 1366 (கி.பி. 1947), எமது பார்வைக்குக் கிடைத்தது. சுமார் 67 பக்கம் கொண்ட இந்த குறு நூலினை காயல்பட்டணம் பாளையத்து லெப்பை ஆலிம் இயற்றி மதராஸ் (சென்னை) ஹமீதிய்யா அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. சிறிய நூலாகினும் இது முக்கியத்துவம் பெறுகிறது. இதற்குமுன் இப்படியான செய்திகளை உள்ளடக்கிய நூல் இருந்ததா என நமக்கு அறுதியாக தெரியவில்லை. ஆனால் இருந்திருக்கலாம். நமக்குக் கிடைக்கவில்லை. ஆகவே கிடைத்த இந்த நூலைக் கொண்டு காயல்பட்டணத்தின் தொன்மை வரலாற்றினைக் காண முற்படும் முயற்சியக இந்நூலில் காணப்படும் செய்திகள் சில இங்கு ஆய்வு செய்யப்படுகின்றன..

இஸ்லாம் தென்னிந்தியாவிற்கு வந்தது மற்றும் அரபுத்தமிழ் இலக்கியங்களின் தோற்றம் ஆகியவற்றில் காயல்பட்டணம் மிகவும் முக்கிய இடம் பெறுகிறது. அரபுத் தமிழில் இஸ்லாமிய மதம் சார்ந்த கருத்தாக்கங்களுக்கு இங்குதான் பன்முக வடிவங்கள் உருவாகின. இங்கு தோன்றிய அரபுத்தமிழ் இலக்கியங்கள்தான் அதிக எண்ணிக்கையில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். கி.பி. 17ஆம் நூற்றாண்டளவிலிருந்து தமிழ் போன்று அரபுத்தமிழும் முஸ்லிம்களின் தாய்மொழி நிலையிலிருந்தது எனலாம். இதன்மூலம் தமிழ் மொழிப் படிப்பில் பரிட்சயமில்லாத முஸ்லிம்கள், தமிழை அரபி லிபி வழியாகக் கற்று, எழுதப்பழகி தங்களது வியாபார

நடவடிக்கைகள் குடும்ப ஆவணங்கள், கடிதப் போக்குவரத்து ஆகியவற்றை மேற்கொண்டிருந்தனர். இதன் மூலம் அரபி மொழி மட்டுமே தெரிந்திருந்த பிற நாட்டு வருகையாளர்களும் இங்கிருந்த மக்களோடு தொடர்பு கொள்ள வாய்ப்பானது. அரபுத்தமிழ்தான் அக்கால இஸ்லாமிய சமுதாயத்தில் முஸ்லிம் பெண்களை அறிவு ஜீவிகளாக்கியது. அரபித் தமிழைக் கற்றுக் கொண்ட பெண்கள் தங்களது குடும்ப வரவு செலவு, குழந்தைகள் பராமறிப்பு, மற்றும் நல்ல மறபுகளை அறிந்து கொள்ள வாய்ப்பு ஆகியனவற்றைப் பெற்றிருந்தனர்.

அரபுத்தமிழைக் கற்றிருந்த அக்கால அறிஞர் பெருமக்கள் பெரும்பாலும் இஸ்லாம் மதம் சார்ந்த எழுத்தாக்கங்களையே உருவாக்கியுள்ளனர். திருக்குர்ஆன் மொழி பெயர்ப்பு மற்றும் அதன் விளக்கவுரை, இஸ்லாமிய வாழ்வியல் சட்டங்கள், வான சாஸ்திரம், மருத்துவம், தத்துவம், இறை நேசர்களின் மாண்பு அவர்களது பணிகள், இஸ்லாமிய விழுமங்கள், புதினங்கள் போன்ற நூல்களே அதிகம் வெளிவந்தன. இத்தொகுதியில் வரலாறு என்பது நபிமார்கள் வரலாறு, நபிகளார் அவர்களின் குடும்ப கிளையார் வரலாறு, இறைநேர்கள் வரலாறு ஆகிய கருப் பொருட்களைக் கொண்டே அமைந்திருந்தன. பெரும்பாலும் இத்தகைய நூல்கள் செய்யுள் வடிவிலும் இருந்தன. மேற்கண்ட நூல்களிலிருந்தெல்லாம், அவை இயற்றப்பட்ட நிலவியல், அங்கு வாழ்ந்த மக்கள், அவ்வக்கால அரசியல் ஆகிய செய்திகள் அரிதாகவே காணப்படும். அவையும் கூட வரலாற்றுச் சான்றுகளின் அடைப்படையிலானதா என்பதும் கேள்விக்குறியானதே. இந்நிலையில் 1947ல் அரபுத்தமிழில் எழுதப்பட்ட காயல்பட்டணம் காரண சரித்திரமும், அதனை அடியொற்றி 1951ல் எழுதப்பட்ட “வான்புகழ் காயல்பட்டணம் சரித்திரம்” என்ற நூலும் நமது ஆய்வுக்குட்பட்டன. இரண்டாவதாக எழுதப்பட்ட நூலுக்கு முதலாவதாக எழுதப்பட்டுள்ள அரபுத்தமிழ் நூலே பக்க பலமாக அமைந்திருப்பதை அறிய முடிகிறது. இதற்கு பின்னர் எழுதப்பட்ட நூல்கள் அனைத்திலும் இந்த நூல்களின் கருத்துக்களே எடுத்தாளப்பட்டுள்ளன எனலாம்.

‘காயல்பட்டணம் காரண சரித்திரம்’, அரபுத்தமிழ் நூலில் சொல்லப்பட்டுள்ள கருத்துச் சுருக்கம் வருமாறு:

1.“காயல்பட்டணத்தின் வரலாறு பழம்பெருமை வாய்ந்ததே. இவ்வூரில் தோன்றி மறைந்துள்ள ஆன்ரோர்கள், ஞானியர், இறைநேசர்கள் ஆகியோரின் அற்புதப்

பணிகள் குறித்த ஆதாரக் குறிப்புகள் அதிகம் காணப்படவில்லை. ஒருவாரக வெளிவந்துள்ள சில குறிப்புகளில் தன்னலமும், முரண்களும், பிழைகளும் மண்டிக் கிடக்கின்றன. இருப்பினும் எமக்குக் கிடைத்த அரபி மற்றும், தமிழ் நூல்கள் தரும் செய்திகள், கர்ண பரம்பரையாக வழங்கப்படும் கதைகள் ஆகிய அனைத்தையும் கொண்டு இந்த நூல் எழுதப்பட்டுள்ளது".

2."ஹிஜிரி 228ல் அப்பாஸிய கலிபா மன்னர், ஹாருன் அல்வாலிக் பில்லாஹ், மக்களுக்குக் கொடுத்துவந்த துன்பம் சகிக்க முடியாமல், மிஸ்ரு தேசத்து கராஃபித்துல் குப்ரா என்றும் ஊரிலிருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக, ஆண்களும் பெண்களும் ஐந்து கப்பல்களில் தப்பித்து பயணித்து, அதில் ஒரு கப்பல் பழைய காயல் பகுதிக்கு வந்து நங்கூறமிட்டுத் தங்கியது. பக்கிரி, பாருக், உமையா, ஹாஷிம் வம்சாவளிகளைச் சேர்ந்த ஆண்கள் 135 பேர், பெண்கள் 59 பேர், அடிமைத் தொழிலாளர்கள் 25 பேர், ஏனைய தொழிலாளர்கள் (சவரகன்) நான்கு பேர் ஆக 224 பேர் இக்கூட்டத்தில் அடங்குவர். இவ்வாறு பழைய காயலுக்கு வந்து சேர்ந்த அரேபியக்குழுவிற்கு, ஊரில் வழங்கும் பழம்பாடல் குறிப்பிடுவதுபோல், மேற்படி குழுவின் தலைவன் முகம்மது கில்ஜி பெயரில் செப்பேடு ஒன்று வழங்கப்பட்டது. செப்பேட்டு நகலாக, தூத்துக்குடி சீனா காவன்னா மரைக்காயர் அச்சிட்டிருக்கும் பிரதிகள் மூலம் மேற்குறிப்பிட்ட செப்பேட்டுச் செய்தி தெரிய வருகிறது".

3."பெருமானார் முகமது நபிகளார் ஹிஜிரி 204 ரஜபு மாதம் கடைசி வெள்ளிக்கிழமை இரவு இஷா நேரம் இறைவனடி சேர்ந்தார்கள். (இறைவனின் சாந்தியும் சமதானமும் அவர்கள் மீது உண்டாவதாக). அவர்கள் அடங்கி விளங்கிய நாளில், நாட்டிலுள்ள பாடசாலைகள் முழுவதும் மூடப்பட்டன. அது முதல் அரேபிய தேசத்தில் வெள்ளிக்கிழமை தோறும் விடுமுறை அனுசரிக்கும் வழக்கம் ஏற்பட்டது. இதனை ஒட்டி நமது நாட்டிலும் வெள்ளிக்கிழமை விடுமுறையாக அனுசரிக்கும் பழக்கம் கைக்கொள்ளப்பட்டது".

4."மிஸ்ரு தேசத்திற்கு (எகிப்து) காஹிரா என ஹிஜிரி 259ல் தான் பெயர் சூட்டப்பட்டது. அதற்குமுன் இல்லை".

5. "லப்பைய் என்ற பதமே லெப்பை என வழங்கலாயிற்று. லெப்பை என்பதன் அர்த்தம் இறைவனின் வழிபாட்டில் தரிப்பட்டவன், நிலைத்தவன் எனப்

பொருள்படும். சாஹிபு, மரக்காயர், ராவுத்தர் போன்ற செயற்கைப் பெயர்களைவிட இது சிறந்தது".

6. "காலப்போக்கில் இப்பகுதியின் ஆட்சியாளர்கள் இங்கு வாழ்ந்த முஸ்லிம் மக்களை மதிப்பு மிக்கவர்களாகக் கருதி காயலிலிருந்து சுமார் 8 மைல் வடக்கே விளங்கும் மக்தூம் வலி சமாதி வரை குடியிறுப்பு இடம் அளித்தனர். இதற்கும் பழமையான பெயரான காயல், காயல் ஃப்த்தான் என்று நாமம் சூட்டினார்கள். அதில் வசிப்பவர்களை 'காயில்' எனவும் அழைத்தனர்".

7.மாத்திஹுர்ரசூல் அஷ்ஷேய்க் ஸதக்கத்துலா வலி நாயகம், கவ்துநாயகம் முஹ்யித்தீன் (ரலி,) மஹ்மூது தீபி (ரலி), காஜி அலாவுதீன் ரலி, வல் ஜன்னி ஷம்சுதீன், ஹாபிழ் அமீர் நூஹு வலியுல்லாஹ் (ரலி), தைக்காசாஹிபு உமர் ரலி யுப்பாஹ் நாயகம், முத்துவாப்பா அப்பா (ரலி) ஷேக் அப்துல்காதர் நைனா லெப்பை போன்ற ஞானியர்கள், புலவர்கள், வலிமார்கள் ஆகிய சிலரின் பெயர்களும் பட்டியலிடப்பட்டிருக்கிறது".

8."இங்கு வாழும் மக்கள் சோனகர், சோழியரென்றும் அழைக்கப்படுகின்றனர்".

9. "இவ்வூர் கடற்கரையினை அடுத்து உப்பளம், கழிமுகம் ஓடையுள்ள இடமானது பற்றி காயல் என்று அழைக்கப்பட்டது. முன்னே ஏற்பட்ட காயலுக்கு பழைய காயல் என்றும் பின்னர் ஏற்பட்டதற்கு தென்காயல் என்றும் பெயர்".

10. "வள்ளல் சீதக்காதி காயல் துறையைச் சேர்ந்தவர்".

11."பாண்டிய அரச குலம் சார்ந்த 'செம்பி பவுத்திர மாணிக்கம்' என்னும் பெண்ணுக்கு தென்காயலை ஒட்டி தானமாக வழங்கப்பட்ட நிலப்பகுதி பவுத்திர மாணிககப்பட்டணம் என்று அழைக்கப்பட்டது. இப்பகுதியே பின்னர் காயல்பட்டணம் என அழைக்கப்படலானது."

12. "கொற்கைக்கு அருகே இருந்த கடல் விலகி உள்ளே சென்று விட்டதைப்போல், அதன் பின் துறைமுகமாக இருந்த காயலுக்கு அருகிலிருந்த கடல் விலகி கிழக்கே வெகுதூரம் சென்றுவிட்டபடியால் மரக்கலம் செலுத்தவும், நங்கூரமிடவும் இயலாமலாகி, வியாபாரம் பாதிக்கப்பட்டதால், அங்கிருந்த ஜனங்கள் இடம் பெயர்ந்து பின்காயலென்னும் பின்னைக்காயலுக்கு தெற்கே

கடையக்குடியிலிருந்து உதய மார்த்தாண்டன் நகருக்கு இடையே, தென் வடலோடிய ஒரே தெருவாக, மேற்கு கிழக்காக சந்து போட்டு, தெருவை பல பாகமாக பிரித்து அவற்றிற்கு வெவ்வேறு பெயர் கொடுத்து, இந்த புதிய குடியிருப்பு பகுதிக்கும் 'காயல்' என்ற பெயரையே சூட்டிக் கொண்டனர். (இப்பகுதியே பின்னர் காயல்பட்டணத்தின் ஒரு பகுதியானது.) இப்போதிருக்கும் கோமான் நெடுந்தெரு, சித்தர் தெரு, நைனார் தெரு, பரிமார் தெரு, காட்டுத் தெரு ஆகியன பழைய காலத்துத் தெருக்களாகும்".

13."எங்களது பாட்டனார் தைக்கா சாஹிபு உமர் வலியுல்லா அல்காயலி, முகமது கல்ஜி சந்ததியில் வந்தவர்".

14.சுல்தான் ஜமாலுதீன் ஹிஜிரி 728ஆம் ஆண்டு காகிராவலிருந்து இவ்வூர் வந்து, இவ்வூரை 12,000 பொன் கொடுத்து விலைக்கு வாங்கி, நகரில் புதிய வீதிகள் உருவாக்கி இங்குள்ள குத்பா பள்ளியினை (ஆயிரங்கால் பள்ளி) கட்டினார். பின்னர் அவரது மகன் மற்றும் தொடர் வம்சாவளியினர் இங்கு சிறப்பாக வாழ்ந்து வந்தனர்.

15. 1886ல் பஞ்சாயத்து யூனியன் போர்டு தொடங்கப்பட்டது. வீட்டுவரி முறை அறிமுகமானது. 1945 ஜுலை 12ல் வாரசந்தை திறக்கப்பட்டு பிரதி விழாயன் தோறும் கூடியது. 1923 பிப்ரவரி 23ல் திருநெல்வேலி திருச்செந்தூர் ரயில் தடத்தில் காயல்பட்டணம் ரயில்வே ஸ்டேஷன் உருவானது.

16."வாஸ்கோடகாமாவின் குறிப்புகள் காயல்பட்டணம் வணிக நகரமாகத் திகழ்ந்து எனவும் இது மூர்கள் (Moors)- முஸ்லிம்கள்- நிறைந்த ஊர் என்றும் குறிப்பிடுகிறது."

காயல்பட்டணம் காரண சரித்திரம்' அரபுத்தமிழ் நூலில் சுமார் 67 பக்கத்தில் கண்டுள்ள செய்திகளின் சாராம்சம் மேலே கொடுக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் கொடுத்துள்ள விவரங்கள் பல நாட்டு வழக்காறு எனலாம், சில செய்திகள் முரண்பட்டு நிற்கின்றன என்பதையும் ஆசிரியரே பல இடங்களில் குறிப்பிடுகிறார். இருப்பினும் காயல்பட்டணத்தின் தோற்றம் குறித்து சில முன்னோட்ட செய்திகளை ஆசிரியர் குறிப்பிடுவது வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறது. எடுத்துக்காட்டாக, மேலே வரிசை எண் 12ல் நாம் கொடுத்துள்ள செய்தியைக் குறிப்பிடலாம். இந்த நூலினை ஆதாரமாகக் கொண்டு பின்னாளில் எழுதப்பட்ட நாம் மேலே மேற்குறிப்பிட்ட ஏனைய நூல்களில், "காயல்தான் காயல்பட்டணம்" எனக்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr J.Raja Mohamed P: 278-292

கூறுவதைக் காண்கிறோம். ஆனால் நமது ஆய்வுக்குட்பட்டுள்ள காயல்பட்டணம் காரண சரித்திரம் நூலில் ஆசிரியர் இதற்கு சரியான விடையைக் கொடுத்திருக்கிறார். காயல், பின்னைக்காயல், வெவ்வேறு ஊர்களென்பதையும், அங்கிருந்து தென்பகுதிக்கு குடிபெயர்ந்த குடியிருப்புப் பகுதியை முதலில் 'காயல்' என நாமகரணம் செய்துக் கொண்டனரென்றும் குறிப்பிடப்படுவது வரலாற்று முக்கியம் வாய்ந்த செய்தியாகிறது. பின்னால் எழுதப்பட்ட நூல்களில் காயல்தான் காயல்பட்டணம் என பிழையான கருத்தை எழுதியுள்ளனர் என்பது தெளிவு.

இது குறித்து நமது ஆய்வுக் கருத்து வருமாறு--

1.காயல், காயல்பட்டணம் ஆகிய இரண்டு ஊர்களும் எல்லா காலக்கட்டங்களிலும் வெவ்வேறு ஊர்களாகவே இருந்து வந்துள்ளன.

2. காயல் காலத்தால் முந்திய துறை முகமாகும். துறைமுகமாக மறைந்து போகும் வரை, இந்த ஊர் காயல்பட்டணம் என எக்காலத்திலும் அழைக்கப்படவில்லை.

3. காயல் தாமிரபரணி ஆறு கடலில் சங்கமமாகும் இடத்தை ஒட்டியுள்ளது. காயலும், தற்போதைய காயல்பட்டணமும் சுமார் ஏழு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளன என்பது நோக்கத்தக்கது.

4. காயல்பட்டணத்தில் திராவிடக்கட்டடக்கலைப் பாணியில் கட்டப்பட்ட பழைய பள்ளிவாசல்கள் பல உள்ளன. இப்பள்ளிவாசல்களுக்கு இப்பகுதியை ஆண்ட இந்து மன்னர்கள் பலர் கொடை அளித்துள்ள செய்தி மேற்படி பள்ளிவாசல்களிலிருந்து பதிவு செய்யப்பட்டுள்ளன. கி.பி.10ஆம் நூற்றாண்டு காலத்திலிருந்து காலக்கிரமமாக காணப்படும் இக்கல்வெட்டுகள் எதிலும் காயல்பட்டணம் என்ற ஊர் பெயர் இல்லை.

5. காயல், புன்னைக்காயல், காயல்பட்டணம் ஆகிய மூன்று ஊர்களும் ஒன்றைஒன்று ஒட்டி அமைந்துள்ளது கொண்டு மட்டுமே காயல்பட்டணத்தைக் காயல் என்று சொல்லிவிடமுடியாது. இவ்வூர்கள் ஒவ்வொன்றும் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு சமுதாய அமைப்புகளுடன் தனித்தனியான அரசியல் பொருளாதார அமைப்புகளுடன் விளங்கியதை வரலாறு புலப்படுத்துகிறது.

6. கடல் வாணிபத்தில் சிறந்து விளங்கிய முஸ்லிம் வணிகர்களின் குடியிருப்பு பகுதியாக தற்போதைய காயல்பட்டணம் பகுதி விளங்கியுள்ளது. எனவே தொடக்க காலத்திலிருந்தே பன்னாட்டு வணிகப் பொருட்கள் விற்கப்படும் ஒரு சந்தையாக நிகழ்த்திருக்க வேண்டும். இத்தகைய வணிக மையங்கள் இங்கு பரவி இருந்ததன் காரணமாக அவை இருந்த இடங்களில் அக்கால வணிகப் பொருட்களின் எச்சங்களான ரோம பானை ஓடுகள், சீன பீங்கான் ஓடுகள், பழைய நாணயங்கள் இன்னபிர வணிகப் பொருட்களும் இங்கு கிடைப்பது இயல்பேயாகும்.

7. போர்ச்சுக்கீசியர் காயல் துறைமுகத்திற்கு வரும்முன் இப்பகுதி முஸ்லிம்களும் இத்துறைமுகத்திலிருந்தே கடல் வாணிபத்தில் ஈடுபட்டு வந்தனர். போர்ச்சுக்கீசிரியர் முஸ்லிம் வணிகர்களை தங்களது வணிகப் போட்டியாளர்களாகக் கருதி அவர்கள் மீது, தாக்குதல்களையும் அடக்கு முறைகளையும் கட்டவிழ்த்துவிட்டனர். 1528ஆம் ஆண்டு காயல் துறைமுகப்பகுதியில் இருந்த முஸ்லிம்களின் வீடுகளும், துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கப்பல்களும் போர்ச்சுக்கீசியரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. திக்கற்ற நிலையில், முஸ்லிம் வணிகர்கள், காயலை விட்டு விலகி, 1532ஆம் ஆண்டு வாக்கில் தற்போதைய காயல்பட்டணம் துறையை, துறைமுகமாக விரிவுபடுத்திக் கொண்டு அதனை காயல்பட்டணம் (Coilpatoe) என்று அழைக்கலாயினர் என போர்ச்சுக்கீசிரியரின் குறிப்புகளும், சமகாலத்தில் எழுதப்பட்ட ஏனைய வரலாற்றுக் குறிப்புகளும் தெரிவிக்கின்றன.

எனவே ‘காயல்பட்டணம் காரண சரித்திரம்’, காயல் காயல்பட்டணம் குறித்த வரலாற்றுச் செய்திகளை சரியாகவே குறிப்பிட்டுக் காட்டுவதாகக் கொள்ளலாம். பிற்காலத்தில் எழுதப்பட்ட எழுத்தாளர்களின் சான்றாதாரமற்ற முனைப்பால் காயலும் காயல் பட்டணமும் ஒன்றே என அழைக்கப்படலானது என்பது நமது ஆய்வின் நிறைவாகும்[8].

அடுத்து ‘காயல்பட்டணம் காரண சரித்திரம்’ கூறும், முஸ்லிம்களின் முதல் குடியேற்றம் மற்றும் குடியேறியவர்களுக்கு ஹிஜிரி 228ல் அளிக்கப்பட்ட செப்பேடு (மேலே வரிசை எண் 2-ல் கண்டபடி) குறித்த செய்தியாகும். ஊரில் வழங்கும் பழம்பாடல், பெரியோர்கள் கொடுத்த செய்திகள் அடிப்படையில் இது குறித்து எழுமியிருப்பதாக குறிப்பிடும் நூலாசிரியயரின் கருத்துகளை இங்கு பதிவு செய்ய

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr J.Raja Mohamed P: 278-292

Since 1951

வேண்டியது அவசியமாகிறது. ஏனெனில் இது நாள் வரை காயல்பட்டணத்தின் வரலாறு எழுதும் வரலாற்று ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் அனைவருமே இந்த செப்பேட்டுச் செய்தியையே முதன்மைப்படுத்துகின்றனர். இதுகுறித்து யாரும் மேலாய்வு செய்யவில்லை என்றே அறிகிறோம். இருப்பினும் இதுகுறித்ததொரு நிறைவான ஆய்வுக் கருத்து 2004ஆம் ஆண்டு வெளிவந்த எனது நூலில் கொடுக்கப்பட்டுள்ளது.[9] அதன் சுருக்கம் வருமாறு:

”காயல்பட்டணம் மரக்காயர் தங்களது தொன்மை வரலாற்றை எடுத்துக்கூற ஒரு செப்பேட்டினைச் சுட்டிக் காட்டுகின்றனர். கி.பி.9ஆம் நூற்றாண்டில் எகிப்து தேசத்து மன்னனின் கொடுங்கோலுக்கு அஞ்சி தப்பித்து முகமது கல்ஜி என்பார் தலைமையில் ஆண்களும் பெண்களுமாக மரக்கலத்தில் பயணித்து கைதுரூன்பட்டணம் என்னும் காயல்பட்டணத்திற்கு வந்து குடியமர்ந்த இந்த மக்களுக்கு இப்பகுதியை ஆண்ட மன்னன் பல சலுகைகளுடன் செப்பேடு ஒன்று அளித்ததாக சொல்லப்படுகிறது. செப்பேட்டின் காலம் ஹிஜிரி 228 (கி.பி.848) என காரண சரித்திரம் கூறுகிறது. (கி.பி.875 என செப்பேட்டு வாசகம் கூறுவதாக எம்.கே.சையத் அஹமது கூறுகிறார்). இச்செப்பேட்டு செய்தி அடிப்படையில் இங்குள்ள மரக்காயர்கள் தாங்கள் எகிப்து மற்றும் அரேபிய நாட்டு மக்களின் நேரடி வழித்தோன்றல்கள் என பெருமையுடன் கூறிக்கொள்கின்றனர்.

1916ஆம் ஆண்டு தூத்துக்குடி கான்சாகிப் மொகிதின் காதர்ஷா மரக்காயர் இச்செப்பேட்டின் வாசகங்கள் என ஒரு பிரசுரத்தை வெளியிட்டுள்ளார். (பிரசுர நகல் பின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் வாசகம் காயல்பட்டணம் பேரூராட்சி நூற்றாண்டு விழா மலரில் காணப்படுகிறது.) இந்த செப்பேட்டின் அசல் எங்கிருக்கிறது எனத் தெரியவில்லை எனவும் இந்த பிரசுரத்தில் சொல்லப்பட்டுள்ளது”.

“இச்செப்பேட்டு வாசகத்தைக் கூர்ந்து நோக்கும்போது இதன் வரலாற்று அடிப்படை மிகுந்த கேள்விக்குறியதாகிறது. தொல்லியல் ரீதியாக, செப்பேட்டின் காலம், சொல்லப்பட்டுள்ள செய்திகள், மன்னர்களின் பெயர்கள், கையாளப்பட்டுள்ள சொற்கள் என அனைத்தும் பிழைப்பட்டிருப்பதையும், முரணாக உள்ளதையும் காண முடிகிறது. எடுத்துக்காட்டாக செப்பேட்டில் காணப்படும், நாயக்கர், தளவாய் ஊர்க்காவல், நாட்டுக்காவல், பாளையத்தார் போன்ற 16ஆம் நூற்றாண்டு வழக்குச்

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr J.Raja Mohamed P: 278-292

சொற்கள், 9ஆம் நூற்றாண்டின் சொற்களாக ஏற்றப்பட்டு காலக்கணிப்பில் குழப்பம் பளிச்சிடுகிறது".

"காயல்பட்டணம் மரக்காயர்கள் பொருளாதார ரீதியாக வலுவானவர்கள். ஏனைய முஸ்லிம் பிரிவினரிடம் தங்களை உயர்த்திக் காட்டிக் கொள்ளவும் ஆட்சியாளர்களிடமும் ஐரோப்பியரிடமும் தங்களது தொன்மையான பாரம்பரிய உரிமையை நிலைநாட்டிக் கொள்ளவும் இச்செப்பேட்டு வாசகங்களை அவர்கள் முன்னிருத்தியிருக்கிறார்கள் என ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. எனவே இதனை ஒருவரலாற்றுப் பட்டயம் என்று சொல்லுவதைவிட ஓர் இனம் சார்ந்த மரபுப் பட்டயம் (Sociological Folk Charter) எனக் கூறலாம். செப்பேட்டின் காலம் கி.பி.875 அல்லது கி.பி. 848 என்பது வரலாற்று ரீதியாக பிழைபட்டதாகும்".

இதில் வேடிக்கை என்னவென்றால் இப்படியெல்லாம் சொல்லுவதற்குக் காரணமான செப்பேடு அசல் இதுவரை நமக்குக் கிடைக்கவில்லை. 1990களில் தமிழக முஸ்லிம்களின் கடல் வாணிப வரலாறு குறித்த எனது ஆய்வுப்பயணங்களின் போது கிழக்குக் கடற்கரைப்பட்டணங்களில் இந்த செப்பேட்டின் அசல் குறித்து பல இடங்களிலும் விசாரித்தேன். எந்த விதமான சரியான செய்திகளும் கிடைக்கவில்லை. சென்னை அருங்காட்சியகத்தில் இருப்பதாக சிலர் சொன்னார்கள். சென்னை அருங்காட்சியக உயர் அலுவலர் பொறுப்பில் நான் இருந்ததால் அங்குள்ள செப்பேடுகள் அனைத்தையும் (ஏறக்குறைய 3000) பார்வையிட்டதில் காயல்பட்டணம் செப்பேடு அங்கு இல்லை என்பது வியப்பான செய்தி. இன்றுவரையிலும் மேற்படி செப்பேடு நமது பார்வைக்குக் கிடைக்கவில்லை என்பதும் கூடுதல் செய்தி".

இவ்வாறாக நாட்டு வழக்காறாக கர்ணபரம்பரையாக சொல்லப்படும் செய்திகள் வரலாறாக காட்டப்படும் நிலையை இச்செய்திகள் உறுதிபடுத்துகின்றன தமிழக முஸ்லிம்களின் ஆதாரப்பூர்வமான ஏற்புடையதொரு வரலாற்றினை எழுதும் முயற்சியில் இது போன்ற தடைக்கதைகள் நிறைந்துள்ளதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

எவ்வாறாயினும் 1947ல் அரபுத்தமிழில் எழுதப்பட்ட 'காயல்பட்டணம் காரண சரித்திரம்' நூல் தொன்று தொட்டு வழங்கிவரும் செய்திகளோடு, வரலாற்று வடிவம்

கொண்ட செய்திகள் பலவற்றையும் நமக்கு அளிக்கிறது. சிறிய நூலாயினும் அதில் காணப்படும் செய்திகள் தொன்மை காலம் முதல் நவீன காலம் வரையிலான சரியான வரலாற்றையும் வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது. பாதுகாக்கப்பட வேண்டியதொரு ஆவணம்! மேலும் காயல்பட்டணம் குறித்து வரலாற்று வரைவியல் ரீதியில் ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

அடிக்குறிப்புகள்

1. எம்.கே.செய்யிது அஹமது, *வாண்புகழ் காயல் பட்டணம்*, முஸ்லிம் ஹயர் செகண்டரி ஸ்கூல் கமிட்டி, காயல்பட்டணம், 1951.
2. ஆர்.எஸ்.அப்துல் லத்தீபு, *காயல் பட்டினம்*, சம்சுதீன் அப்பா பதிப்பகம், காயல்பட்டணம், 1993.
3. ஆர்.எஸ்.அப்துல் லத்தீபு, *காயல்பட்டினம்தான் காயல்*, சம்சுதீன் அப்பா பதிப்பகம், காயல்பட்டணம், 2015.
4. காயல்பட்டனம், தேர்வுநிலை பேரூராட்சி நூற்றாண்டு நிறைவு, சிறப்பு மலர், (தொ.ஆ). காயல் மஹபூப், காயல்பட்டணம், 1990.
5. M.Mohamed Nazar, Arab Traders in Pandya country, unpublished Ph.D Thesis, M.S.University, Thirunelveli, 2007.
6. J.Raja Mohamad, *Islamic Architecture in Tamilnadu* Director of Museums, Chennai, 2004.
7. ARIE. No. 376, 1949-50; D.306-19, 1976-7
8. ஜெ.ராஜா முகமது காயல் காயல்பட்டணம் – ஓர் ஆய்வு, தமிழக தொல்லியல் கழக 13-வது கருத்தரங்கில் அளித்த ஆய்வுக் கட்டுரை, திருநெல்வேலி, ஜுலை, 2002.
9. J.Raja Mohamad, *Maritime History of Muslims of Coromandel Coast – A Socio Historical Study, 1750-1900,* Director of Museums, Chennai 2014.

Reference

1. M.K.Syed Ahamed, *Vanpugazh Kayalpattinam*, Muslim Higher Secondary School Committee, Kayalpattanam, 1951.
2. R.S. Abdul Lathiff, *Kayalpattinam*, Samsudin Appa Pathippagam, Kayalpattinam, 1993.
3. R.S. Abdul Lathiff, *Kayalpattinamthan Kayal*, Samsudin Appa Pathippagam, Kayalpattinam, 1993.
4. Kayalpattanam Selection Grade Town Panohayath centenary celebration souvenir, (ed) Kayal Mahabub, Kayalpattanam 1990.
5. M.Mohamed Nazar, Arab Traders in Pandya country, unpublished Ph.D Thesis, M.S.University, Thirunelveli, 2007.
6. J.Raja Mohamad, *Islamic Architecture in Tamilnadu* Director of Museums, Chennai, 2004.
7. ARIE. No. 376, 1949-50; D.306-19, 1976-7
8. J. Raja Mohamad, Kayal, Kayalpattanam Oor Aaivu – paper presented in the 13th Annual Session of the Tamilnadu Archaeological Society, Tirumelveli, July 2002.
9. J.Raja Mohamad, *Maritime History of Muslims of Coromandel Coast – A Socio Historical Study, 1750-1900*, Director of Museums, Chennai 2014.

(பின் இணைப்பு- செப்பேட்டு வாசகம்)

காயல்பட்டினம் மரக்காயர்களுக்கு வழங்கப்பட்டதாகச் சொல்லப்படும் செப்பேட்டு வாசக நகல்.

செங்கோல் செலுத்தும் தெஷணா பூமிக்கு தெற்கு, கன்னிக்கு வடக்கு, மன்னார் வடமேல் குதிரை மலைக்கு மேற்கு, கன்னி முதல் – சேலமகரம் ஒழுகுமலைக்குக் கிழக்கு, பாண்டி மண்டலம் (56) தேசத்திற்குத் தேசாதிபதி அபிராம ராம அதிராஜ ராஜ ஜெயவீர ராஜுகார் கர்த்தர்கள் (78) பாளையத்தாருக்கும் ஓர்குடைச் செங்கோல் செலுத்திச் திரையாதிக்கமுடைய மகாமண்டலேஸ்வரன். மூவராய கண்டன், பாண்டியமண்டல பரமேஸ்வரன் சோழமண்டலம் (24) காதமுடைய மன்னரை அரசு நிறுத்தித் திரைகொள்ளும் மஹாவிஷ்ணு கிரேகாயுதர்மன், பொதிய மாமலைப் பாரசுமுனி, மதுரை துரைத்தனம் அஷ்ட சம்பந்த ராஜாதிராஜன், திங்கள் சுத்த சம்மிசப் பிரும்ம தெஷணா பூமி செங்கோல் செலுத்தும் நாயனி, எழுந்தருளித் திருநகரி கொலுவீற்றிருக்குங் கர்த்தரை, அறபி நாட்டு மிசறு தேசாபதியின் கொடுங்கோலுக்கஞ்சி, மரக்கல, யாத்திரையாய்க் கர்த்தர்களிந்தேசச் செம்பி நாட்டில் பாசறை வகுத்துக் கர்த்தர்களின் சமூகங் கொடுத்து இந்நாட்டிற் குடியேறியிருக்கத்

தாமிரப்பட்டயமுங் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டவர்களின் வம்மிசமும் எண்ணிக்கையும்.

ஆசீம் வம்சத்தார் (23) நாச்சியார் பெண்டு (6) அடிமை (4) பக்கிரி வம்சத்தார் (36) நாச்சியார் பெண்டு (3) அடிமை (7) பாறுக்கு வம்மிசத்தார் (43) நாச்சியார் பெண்டு (34) அடிமை (12) உமையா வம்மிசத்தார் (14) நாச்சியார் பெண்டு (5) அடிமை (2) ராணுவ யுக்தர் (16) பெண் (6) கஷவரகன் (3) பெண் (1) இவர்கள் ஒருமனப்பட்டு, முகம்மதுகல்ஜிக்குத் தாமிரப்பட்டயங் கொடுக்க கேட்டுக்கொண்டபடியால் இந்தக் குடியானவர்கள் மிசறு தேசத்து காயிறான் ஊரில் வசித்து வந்தவர்களானபடியால், தாமிரப்பட்டயங் கொடுக்குமூருக்கு காயிறுன்பட்டணம் என்ற நாமமும், மரக்கல யாத்திரையாக வந்ததற்காக இவர்களுக்கு மரக்கலராயர் என்ற நாமமும், நாம் சூட்டித் தாமிரப்பட்டயங் கொடுக்க உத்தரவுமருளி அரண்மனையார் கற்பித்தது.

தூத்துக்குடி மாரியம்மன் கோயிலுக்கு மேற்கு, சிவந்தாகுளம், முத்தையாபுரம், முள்ளக்காடு, கோபுரங்காடு, மஞ்சனக்காயல், கொற்கை, குலைநெல்கரிசை, முக்காணி கொலுவுத்துரை, ஆற்றூர், அதைச்சோர்ந்த மங்கலம், சொக்கப்பிள்ளைகரை, பின்னைக்காயல், ஆவரங்காடு, தண்ணீர்பந்தல், கீரனூர், நல்லூர், அம்மன்புரம், பள்ளிப்பத்து மணற்காடு, ராஜமன்னியபுரம், வீரபாண்டியன், மங்கலபாடி, இவைகளடங்கிய குடிகளுக்கு, முகம்மது கல்ஜி மரைக்கலராயன் கற்பனையும் அவனுக்கு இறைவரி செலுத்தக் கடமையும்பளமும், பள்ளிப்பத்து, அம்மன்புரங்கண்டு முதல் லாபத்தில், ஜெய ஆலயங்கள் கட்டப் பாதியும், தண்ணீர் பந்தல் கண்டு முதலில் மரக்கலராயனுக்கு பாதியும்பளமும், கன்னி முதல் மன்னார் மணல் மேடு ராமேஸ்வரம்வரை இந்த குடியான ஜனங்கள், சலாப முத்துக்குளிக்க அம்பள உம்பளமும், தூதுகுடி, மாரியம்மன் கோவிலுக்கு தோணி 1க்கு (20) முத்துச்சிப்பியும் மரக்கரலாயனுக்கு தோனி 1க்கு (30) முத்துச்சிப்பியும், சித்தசன் லாசருக்கு (20) முத்துச்சிப்பியும் அம்பவும்பள நித்தமும். அந்தந்த வருஷமும் மகர மாசத்தையில் அரண்மனைக்கு மரக்கலராயன் (1000) பொன்னும் உப்பு லாபத்தில் (10) பொன்னுக்கு (25) பொன்னும் செலுத்திவிட கடமையும், ஒரு பொன் எடையும் அதற்கு மேற்பட்ட ஆணி முத்தும், வலம்புரிச் சங்கும், அகப்பட்டால் அவைகளை

மரக்கலராயன், அரண்மனைக்கு சகல மேள வாத்யங்களுடன், செலுத்திட அரண்மனைக் கற்பனையும்.

அரண்மனையார் உத்தரவிற்கு நாஞ்சி நாட்டு அதிபன் கொடுத்த வண்ணான் (5) ரெட்டியார் பட்டி பாளைய கிருஷ்ணன் நாயக்கன் கொடுத்த புதியமுத்தூர் மேள வாத்தியக்காரன் (5)க்கும், குடியானவர்கள் சிலவு கொடுத்துக் கொள்ளவும், பக்கிரி வம்மிசத் தலைவன் முகமது கல்ஜி மரக்கலராயன் தேசாதிபதி பாறுக்கு வம்சத் தலைவன் உமரு மஸ்கூறு நியாயாதிபன், ஆசிம் வம்சத் தலைவன் கமாலதீன், கடலதிபதி உமயா வம்சத் தலைவன், சுபைறு அடையல், முடையல், ஊர்மணியன் ராணுவ யுக்தர்கள், ஊர்க்காவல், நாட்டுக்காவல், கன்னி முதல் சேலமகரம் வரையுள்ள அரண்மனை குதிரைப்படிகளில் இந்தக் குடியானவர்கள் குதிரை விற்பனை செய்து கொள்வதை அரண்மனை காவலர், பாளையக் காவலர், தடை செய்யுக்கூடாது சந்திராதிக்கம் சந்திர சூரிய பிரவேசமுள்ளவரைக்கும் அம்பள உம்பள சுதந்தர ராசு.

முகம்மது கல்ஜி மரக்கலராயன் வசதியான தளங்கண்டு குடியேறி இருக்கும்படி கர்த்தனாகிய ஜெய வீர ராஜு காரு நாயனி, இந்தத் தாமிரப் பட்டயங் கொடுத்தோம் திருவண்ணாமலை, பழனிக்கார், மீனாக்ஷி, பத்மநாபர் நெல்லையப்பர், சுப்பிரமணி, மாரியம்மன், மும்மூர்த்தி, அகஸ்தியர், இராமச்சந்திரர் இந்த சுவாமிகளின் பேரில் சத்தியம் தப்பாது.

சகாப்தம் (798)ஆம் ஆண்டு கீலக வரும் மீன மாசம் சுக்கிர வாரம் உத்திர வேளையில் எலினவாரு சாமியானவர்கள் கையொப்பமிட்டுக் கண்ட வாசகத்தை, மதுரை ஜகந்நாத பிள்ளை கவிச் சக்கரவர்த்தி, கற்பகமடலில் வரிந்து ஏலினவாரு சாமி ஜக வீர ராஜு காரு நாயனி அவர்கள் வரந்தரு சித்தத்தின் பஞ்ச பூதமும் ஓம் என்ற ஒரு மொழிகொண்டு இருக்கும் வேளையில் தளவாய் பழனி நாயக்கர் உத்தரவாகி காயிறுான்பட்டணஞ் சகல குடியானவரடகளுக்கும் ஒருமனதாக ஒரு மொழிச்சொல்லுக்கு இந்த தாமிரப் பட்டயம் வெட்டி வரைந்து எழுதினேன். வீரநல்லூர் கனகமூர்த்தி யாசாரி.

ஒப்பம் : **ஜெகந்நாத பிள்ளை கவிச் சக்ரவர்த்தி**

ஒப்பம் : **(தெலுங்கில்) தளவாய் பழனி நாயக்கர்**

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023

பேரா. கலாநிதி எம்.எஸ்.எம் ஜலால்தீன் P: 293-308

இலங்கையில் அறபுத் தமிழ் தொடர்பான கருத்தாடல்கள்

பேராசிரியர், கலாநிதி. எம்.எஸ்.எம். ஜலால்தீன்

முன்னாள் பீடாதிபதியும், ஓய்வுநிலைப் பேராசிரியரும்

(இஸ்லாமிய கற்கை அறபு மொழிப்பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)

அலைபேசி எண்: 0094 768185610

புனை எண்: 0094 773613889

மின்னஞ்சல்: msmjalaldin@yahoo.com

ஆய்வுச் சுருக்கம்

அறபுத் தமிழ் எனும் போது, தமிழை அறபு லிபியைப் பயன்படுத்தி எழுதுவதைக் குறிக்கும். அறபிகள் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு வந்தபோது, தமிழ்மொழி பேசும் மக்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். அதனால் தமிழ் மொழியைப் பேசக் கற்றுக்கொண்டனர்; ஆனால், அவர்கள் பேசிய தமிழ்மொழியை எழுதத் தெரியாதவர்களாகக் காணப்பட்டனர். அதனால், தாம் அறிந்து வைத்திருந்த அறபு லிபியைப் பயன்படுத்தி தமிழை எழுதினர். அதனாலேயே அறபுத்தமிழ் உருவானது. அறபுத்தமிழ் என்பது ஒரு மொழியல்ல. ஒரு எழுத்து வடிவம் மட்டுமே.

தென்னிந்திய, இலங்கை முஸ்லிம்களின் பிற மொழிப்பரீட்சயமின்மை, முஸ்லிம்களின் அறபு மொழிப்பற்று, அறபுச் சொற்களை ஒலிச்சிதைவும், பொருட்சிதைவும் இன்றி எழுதுவற்கு அறபுத்தமிழ் வாய்ப்பாக அமைந்தமை முதலிய காரணங்களால் அறபுத்தமிழை அக்கால மக்கள் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டினர். அறபுத்தமிழ் பற்றி பல்வேறு அறிஞர்களும் கூறியுள்ள கருத்துக்கள், குறிப்பாக இலங்கை இலக்கியப் பரப்பில் முன்வைக்கப்பட்ட அறபுத்தமிழ் பற்றிய பல்வேறு வரைவிலக்கணங்களையும் கருத்தாடல்களையும் இவ்வாய்வு விமர்சன ரீதியாக முன்வைக்கும் என நம்புகிறேன்.

திறவுச் சொற்கள்

அறபுத்தமிழ், இலங்கை, தென்னிந்தியா, முஸ்லிம்கள், லிசானுல் அர்வி.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
பேரா. கலாநிதி எம்.எஸ்.எம் ஜலால்தீன் P: 293-308

ABSTRACT

Arabic Tamil refers to writing Tamil using the Arabic script. When monks came to countries like India and Sri Lanka, they established contacts with Tamil speaking people. So they learned to speak Tamil; However, they were seen as unable to write the Tamil language they spoke. So, they wrote Tamil using the Arabic script they knew. That is why Arabicthamil was formed. Arabic is not a language. It is only in letter form.

The people of that time showed interest in using Arabic Tamil due to the lack of other language tests of South Indian and Sri Lankan Muslims, Muslims' love of Arabic language, Arabic Tamil being an opportunity to write Arabic words without sound distortion and material distortion. I hope that this review will critically present the opinions of various scholars about Arabic Tamil, especially the various definitions and concepts of Arabic Tamil presented in Sri Lankan literature.

Keywords

Arab – Tamil, SriLanka, South India, Muslims, Lisaanul Arwi

ஆய்வு முறையியல்

ஆய்வுக்குத் தேவையான தரவுகள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளது. முதலாம் தரவுகள் துறைசார்ந்த ஆய்வாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் மூலமும், இரண்டாம் நிலைத்தரவுகள் ஆய்வுத்தலைப்போடு தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள் மூலமும் பெற்றுக்கொள்ளப்பட்டன.

ஆய்வுச் சிக்கல்

இரண்டு நூற்றாண்டுகளாக தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் தொடர்பூடல் ஊடகமாக பயன்படுத்தப்பட்ட அறபுத்தமிழ் மொழி, இன்று வழக்கொழிந்துள்ள நிலையில் அம்மொழி பற்றிய வரைவிலக்கணங்கள், கருத்தாடல்கள், கால, தேச வர்த்தமானத்துக்கேற்ப மாறுபட்டிருப்பதை ஆய்வாளரால் அவதானிக்க முடிகின்றது. இன்றுவரை அறபுத்தமிழின் வரைவிலக்கணம் பற்றி மொழியியலாளர்களால் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரமுடியவில்லை. எனவே குறிப்பாக இலங்கையில் அறபுத்தமிழ் பற்றி பல்வேறு துறைசார்ந்த மொழியியல் ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணங்களை தொகுத்து சமர்ப்பிப்பதன் மூலம் எதிர்காலத்திலாவது இவ்வூடகம் பற்றிய ஒரு தீர்க்கமான வரைவிலக்கணத்தை வகுத்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னுரை

கிடைக்கின்ற ஆதாரங்களின்படி 19ஆம் நூற்றாண்டில் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் தமிழ்பேசும் முஸ்லிம்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்த அறபுத்தமிழ், 20ஆம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கி, இப்போது அது ஒரு ஆய்வுப் பொருளாக மட்டும் மாறிவிட்டதை இதுபற்றி செய்யப்பட்ட ஆய்வுகள் காண்பிக்கின்றன. ஏ.எம்.ஏ அஸீஸ் போன்ற அறபுத்தமிழில் ஈடுபாடு கொண்ட சிலர், அறபுத் தமிழை காப்பாற்ற பல்வேறு ஆலோசனைகளைத் தெரிவித்து வழிகாட்டிய போதும் அறபுத் தமிழ் இன்று முற்றாக வழக்கிழந்து விட்டது. அறபுத்தமிழ் இலக்கியம் போதியளவு போற்றப்படாமலும், மக்கள் மத்தியில் பரப்பப்படாமலும் இருந்து வருவது வருந்தத்தக்க தொன்றாகும். இதன் காரணமாக முஸ்லிம்கள் மத்தியில் கூட அறபுத்தமிழ் இலக்கியத்தைப் பற்றிய அறிவு மிகக்குறைவாகவே இருந்து வருகின்றது.

'அறபுத் தமிழ்" - வரைவிலக்கணம்

அறபுத் தமிழ் பற்றிய வரைவிலக்கணம் இரண்டு வித்தியாசமான கருத்துக்களை உடையதாக காணப்படுகின்றது. அவை பின்வருமாறு:

01. தமிழ்ச் சொற்களை - வாக்கியங்களை – அறபு லிபியில் எழுதுவதற்கு அறபுத் தமிழ்' என்று கூறப்படும்.

02. முஸ்லிம்களின் தமிழ் உரையாடலில், அல்லது தமிழ் வசன அமைப்பில் அறபுச் சொற்கள் எவ்வித மொழிபெயர்ப்பும் இன்றி, எழுதப்படுவதற்கு அறபுத் தமிழ் என்று கூறப்படும். உதாரணமாக: மவ்த்து (மரணம்) வக்து (நேரம்)

இவ்விரண்டு கருத்துக்களும் ஏ.எம்.ஏ அஸீஸின் நூல்களிலும் காணப்படுகின்றன. “இலங்கை முஸ்லிம்களின் பேச்சு வழக்கிலும், தென்னிந்திய முஸ்லிம்களின் பேச்சு வழக்கிலும் பல அறபுச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுக்கான தமிழ் சொற்கள் காணப்பட்ட போதும் அவ்வறபுச் சொற்களே கையாளப்படுவது கவனிக்கத்தக்கது. எனவே முஸ்லிம்களின் தமிழ் வழக்கினை குறிப்பதற்கு அறபுத் தமிழ் என்ற தொடர் கையாளப்பட்டு வருகின்றது. முன்னர் அறபுத் தமிழை அறபிலேயே எழுதினர். அறபு மொழியில் இல்லாத ட, ச, ஞ, ப தமிழ்

ஒலிகளைக் குறிப்பதற்கு அறபு எழுத்துக்களோடு விசேட புள்ளிகளைச் சேர்த்து எழுதுவர். இக்காலத்தில் அறபுத் தமிழ் அதிகமாக தமிழிலேயே எழுதப்படுகின்றது. **(அஸீஸ், 1963)**

இவ்வாறு எழுதிய ஏ.எம்.ஏ அஸீஸ் அவர்களின், "இலங்கை முஸ்லிம்களும் அவர்களின் தாய்மொழியும்" என்ற கட்டுரையில் "அறபு எழுத்தில் - லிபியில் - எழுதப்படும் தமிழ் தான் அறபுத் தமிழ் **(அஸீஸ், 1941)** என்ற கருத்தை முன்வைத்திருக்கின்றார்."

ஆனால், அவரின் கட்டுரைகள் எழுதப்பட்ட கால வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது ஆரம்ப காலங்களில் (உதாரணம் 1948, 1958) முன்னைய கருத்தைக் கொண்டிருந்த அஸீஸ், பின்னைய காலங்களில் இவ்விரண்டு கருத்துக்களுக்கும் ஏற்புடைய வராகக் காணப்பட்டுள்ளமை தெளிவாகின்றது.

பேராசிரியர் உவைஸ், பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் நுஃமான் போன்றவர்கள் மேற்கண்ட இரண்டு கருத்துக்களிலும் முந்தியது மட்டுமே அறபுத் தமிழுக்குரிய சரியான வரைவிலக்கணம் எனக் கூறிய அதேவேளை, கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, எம்.ஐ.எம். அமீன், போன்றோர் இவ்விரண்டு வரைவிலக்கணங்களையும் ஏற்றுக்கொண்டுள்ளனர். கலாநிதி சுக்ரி அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

"கொரமண்டல கரையோரப் பிரதேசங்களிலும், தென்கிழக்கு இந்திய பிரதேசங்களிலும் தமிழ்மொழி, அறபுமொழியிலேயே, தமிழுக்கேற்ற முறையில் பொருத்தமான அறபு ஒலி கருத்து அமைவுகளுடன் எழுதப்பட்டு வந்தது. இந்த புதிய எழுத்து வடிவமும் பெருமளவு அறபுச் சொற்கள் கலந்து தமிழ் மொழியிலேயே எழுதப்பட்ட மொழிநடையும் "அறபுத்தமிழ்" என்று அறியப்படுகின்றது" **(Shukri, 1986)** என்று கூறுகின்றார்.

அறபுத் தமிழ் பற்றிய கலாநிதி சுக்ரி அவர்களின் விளக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது. "அறபுத் தமிழின் தோற்றத்துக்கு அடிப்படையாக அமைந்த வரலாற்று காரணிகளை நாம் விளங்குதல் அவசியமாகும். இஸ்லாம் தென் இந்தியாவில் தமிழ்பேசும் முஸ்லிம்களின் மத்தியில் பரவியபோது இஸ்லாத்தை

ஏற்றுக்கொண்டவர்கள் தொடர்ந்தும் தமிழ் மொழியையே பேசினர். ஆனால் இஸ்லாத்துக்கும் அறபு மொழிக்குமிடையில் நிலவிய இறுக்கமான தொடர்பு காரணமாக அவர்களது மதக்கடமைகளை நிறைவேற்று வதற்கு அறபு மொழியறிவு அவசியமாகியதால் நிச்சயம் அவர்கள் அறபு மொழியை வாசிப்பதற்கு பயின்றிருத்தல் வேண்டும். காலப்போக்கில் மதக்கோட்பாடுகள், கிரியைகளோடு தொடர்புடைய சில கருத்துப் பதங்களைப் பொறுத்தளவில் அவற்றில் அறபுப் பதங்களுக்கு இணையான தமிழ்ப்பதங்களைப் பெறுவதில் சில இடர்பாடுகள் இருப்பதை அவர்கள் உணர்ந்தனர். தமிழ்மொழியானது இந்து கலாசார பாரம்பரியத்தோடு இணைந்த கருத்துப் பதங்களைத் தமிழில் புலப்படுத்த முனையும் போது அதற்கு பொருத்தமான இஸ்லாமிய சிந்தனை மரபோடு இணைந்த சொற்கள் தமிழில் காணப்படாததை அவர்கள் உணர்ந்தனர். சிலபோது இத்தகைய கருத்துக்களைப் புலப்படுத்தத் துணைபுரியும் தமிழ் பதங்கள் அறபியில் அவை உணர்த்தும் மூலக்கருத்தைச் சிதைக்கும் வகையில், அமைந்திருப்பதை அவர்கள் அவதானித்தனர். உதாரணமாக அல்லாஹ், நபி, றசூல், ஆகிரா, மலாயிகா, ஜின், வுழூஃத் போன்ற அறபுப் பதங்களுக்கு இணையான சொற்கள் தமிழில் இல்லை. மேலும் இவை போன்ற அறபு வார்த்தைகளில் பொதிந்துள்ள ஆழமான கருத்துக்களை இன்னொரு மொழியில் புலப்படுத்துதலும் சாத்தியமன்று. இத்தகைய ஒரு வரலாற்றுச் சூழ்நிலையிலேயே முஸ்லிம்கள் - தமிழ்மொழியை அதன் இலக்கண அமைப்பை முற்றிலும் பேணி - அறபு லிபியில் எழுதும் முறையைத் தோற்றுவித்ததோடு, இஸ்லாமிய கோட்பாடுகளுடனும், மதக்கிரிகைகளுடனும், தொடர்புடைய அறபுப்பதங்களை தமிழ் மொழியோடு இணைத்துப் பிரயோகிக்க ஆரம்பித்தனர். இவ்வாறு சில வரலாற்று சூழ்நிலைகள் காரணமாக அறபு மொழிக்கும், தமிழ்மொழிக்கும் இடையில் ஏற்பட்ட இணைப்பினடியாக அறபுத் தமிழ் என்ற மொழி தோன்றி, வளர ஆரம்பித்தது. **(Shukri, 1992)**

கலாநிதி சுஹைப் ஆலிம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

அறபுத்தமிழ் என்பது அதன் பெயர் சுட்டிக்காட்டுவது போல், அறபும் தமிழும் கலந்து, அறபு எழுத்துக்களில் எழுதப்படுபவையாகும். தனது சொந்த எழுத்துக்களில்

எழுதப்படும் தமிழ் மொழியிலிருந்து இதை அடையாளப்படுத்துவதற்தாக இதை அர்வி (Arwi) என்றும் அழைக்கப்படுகின்றது". **(Shuayb Alim, 1993)**

எம்.ஐ.எம். அமீன் அவர்களின் அறபுத்தமிழ் பற்றிய கருத்து பின்வருமாறு "தமிழ் மக்கள் உபயோகிக்காத அளவில், ஏராளமான அறபுச் சொற்களையும், சில பாரசீக சொற்களையும் முஸ்லிம்கள் தம் பேச்சு மொழியிலும், கருத்து வடிக்கும்போது தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்களுக்கு பதிலாக அறபு மொழியிலும் கலந்து உபயோகித்தனர். தாம் பேசும் தமிழை எழுத்துருவில் நெடுங்கணக்கு எழுத்துக்களை உபயோகித்தனர். இதனால், அறபு மொழியை வாசிக்கத் தெரியாத முஸ்லிம்களாலோ, தமிழராலோ, முஸ்லிம்கள் எழுதும் தமிழை வாசிக்க முடியவில்லை.

தமிழ்பேசும் முஸ்லிம்கள் தாம் பேசும் மொழியை அறபுத்தமிழ் என்றழைத்தனர். இந்த அறபுத்தமிழ் அவர்களது பேச்சு மொழியாக மாத்திரம் அமையாது, அவர்களது கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் ஒரு மொழியாகவும் இருந்தது........"

"தமிழில் அச்சுக்கூடங்கள் பரவலாகியபோது, முஸ்லிம்கள் தம் ஆக்கங்களை அச்சேற்றும் வசதி கருதி, அறபு எழுத்துக்குப் பதிலாகத் தமிழ் எழுத்துக்களை உபயோகித்து புத்தகங்களையும், பத்திரிகைகளையும், அச்சிட்டு வெளியிட்டனர். இதனால் அறபுத் தமிழ் என்பது அறபு எழுத்தில் எழுதப்பட்ட தமிழையும் குறிக்கின்றதா? அல்லது தமிழ் எழுத்துக்களைக் கையாண்டு முஸ்லிம்களால் எழுதப்பட்ட தமிழையும் குறிக்கின்றதா? என்ற மயக்கம் ஏற்படுவது இயற்கையே. தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தி, தமிழ்மொழி மூலம் முஸ்லிம்கள் வெளியிட்ட ஆக்கங்களையும், முஸ்லிம் அறிஞர்கள் அறபுத் தமிழ் என்றே வழங்கினர். அறபு எழுத்தில் எழுதப்பட்ட தமிழை அறபுத் தமிழ் என்று வழங்குவதுடன் நில்லாது, தமிழ் எழுத்துக்களைக் கொண்டு எழுதியவற்றையும் அறபுத்தமிழ் என்பதாயின், பின்னையது தமிழ் இலக்கியத்தில் இருந்து பிரித்தறியக்கூடிய சில முக்கிய பண்புகளைக் கொண்டிருத்தல் அவசியமாகும்." **(அமீன், 1991)**

அதேநேரத்தில் அறபுத் தமிழ் ஆக்கங்கள் என்பது, அறபு லிபியில் வரிவடிவத்தில்- எழுதப்பெற்ற தமிழ் ஆக்கங்களே என்ற கருத்தை மட்டுமே பலர்

இன்றும் கொண்டிருப்பதை நாம் காணலாம். உதாரணமாக, எம்.ஆர்.எம். அப்துர் ரஹீம் தனது இஸ்லாமிய கலைக் களஞ்சியத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "தமிழ் நாட்டில் நிலையாகக் குடியமர்ந்த முஸ்லிம்கள், தமிழ் மக்களோடு மொழிவழியாக உறவுகொள்ள முற்பட்டனர். அதற்கு வசதியாக அறபி எழுத்துக்களில் தமிழை எழுதலாயினர். மொழி தமிழாகவும், எழுத்து அறபியாகவும், அமைந்தது. இதுவே அறபுத்தமிழ் என அழைக்கப்படுகின்றது. **(ரஹீம், 1976)**

ஆர்.பி.எம். கனி அவர்கள் அறபுத்தமிழ் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "அறபிக்கும் தமிழுக்கும் பாலமாக விளங்கியது அறபுத்தமிழ். லிபியால் அறபியாகவும், ஒலியால் தமிழாகவும் விளங்கிய இந்த அற்ப சாதனம், நம் முன்னோர்களான மார்க்க ஞான அறிஞர்களின் மேதமைக்கு ஒரு சான்றாகும்....... அறபுத்தமிழ் புதிய ஒரு மொழி அன்று. அது தமிழ்தான். எனவே, அது கண்ட இலக்கியமும் முற்றும் தமிழையே சாரும், அது இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் தான். இதனால்தான் தமிழ் அச்சு வசதிகள் அதிகரித்த பின் இவற்றுள் பல தமிழ் லிபியில், சுத்தத் தமிழ் நூற்களாக வெளிவந்து விட்டன. அறபுத் தமிழில் வெளிவந்த நூற்களைப் படித்துப் பழக்கப்பட்டவர்களுக்காகப் பின்னர் தமிழ் எழுத்துக்களில் அச்சான (சீறா புராண வசனம் போன்ற), பல நூற்கள் அறபித் தமிழிலும் வெளியிடப்பட்டுள்ளன." **(கனி, 1963)**

அ.மா. சாமி என்பவர் அறபுத் தமிழ் பற்றிக் கூறும்போது "அறபு மொழி எழுத்துக்களைக் கொண்டு, தமிழை எழுதுவதுதான் அறபுத் தமிழ் ஆகும.;" **(சாமி, 1994)** என்று குறிப்பிட்டார். பேராசிரியர் கே. சிவத்தம்பி, அறபுத் தமிழ் இலக்கியம் பற்றி பின்வருமாறு கூறுகின்றார். "அறபுத் தமிழ் ஆக்கங்கள் என்பன அறபு லிபியில் - வரிவடிவத்தில் எழுதப்பெற்ற தமிழ் ஆக்கங்களேயாகும். இவ்வறபுத்தமிழ் நூல்கள் பெரும்பாலும் உரை நூல்களே....... இவ்விடயத்தில் அறபுத் தமிழ் பற்றி ஏ.எம்.ஏ. அஸீஸ் கொண்டிருந்த கருத்து மொழி நிலையிலோ, பொருள் நிலையிலோ ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதன்று என்பதைக் கூறுதல் வேண்டும். அஸீஸ் அவர்களின் கருத்தினை உவைஸ் முதல், நுஃமான் வரையுள்ள முஸ்லிம் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியாளர்களும், மொழியியலாளர்களும் மறுத்துள்ளனர். அறபுத் தமிழின் தன்மை, அதன் வரலாற்றுப் பின்னணி ஆகியவற்றைப் பார்த்த நாம் மேலே

தரப்பட்டுள்ள இவ்விவரம் அறபுத் தமிழுக்குப் பொருந்தாது என்றே கொள்ளவேண்டும்." **(சிவத்தம்பி, 1994)**

பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் தனது அறபுத் தமிழ் பற்றிய கட்டுரை ஒன்றில், "தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட முஸ்லிம்கள் பேசும் தமிழினையே நாம் "முஸ்லிம் தமிழ்" என்கிறோம். இது தமிழர் பேசும் தமிழில் இருந்து ஒலியமைப்பு, இலக்கணம், சொற்தொகுதி, சொற்பொருள் முதலிய மொழியின் எல்லா நிலைகளிலும் வேறுபடுகின்றன. பேச்சு வழக்கில் மட்டுமன்றி, எழுத்து வழக்கிலும் இவ்வேறுபாடு காணப்படுகின்றது. முஸ்லிம் தமிழ், தமிழ் வரிவடிவில் மட்டுமன்றி, அறபு வரிவடிவிலும் எழுதப்படுகின்றது. அறபு வரிவடிவில் எழுதப் பட்டுள்ள முஸ்லிம் தமிழின் ஒரு வகை மொழியே (Linguistic) அறபுத் தமிழ் எனப்படுகின்றது. அறபுமொழி, தமிழ்மொழி மீது ஏற்படுத்திய முக்கியமான விளைவுகளுள் ஒன்றாக அறபுத் தமிழை நாம் கருதலாம். இஸ்லாத்துக்கும், அறபு மொழிக்கும் இடையே உள்ள பிரிக்க முடியாத உறவு காரணமாக, பண்பாட்டுத் தேவை கருதி, முஸ்லிம் தமிழில் சமய பண்பாட்டுத்துறை சார்ந்த நூற்றுக்கணக்கான அறபுமொழிச் சொற்கள் கடன் வாங்கப் பட்டுள்ளன. முஸ்லிம் தமிழை தமிழர் பேசும் தமிழில் இருந்து, வேறுபடுத்தும் முக்கிய பண்புக் கூறுகளில் ஒன்றாக இது அமைகின்றது. இதன் காரணமாகவே முஸ்லிம் தமிழை "அறபுத் தமிழ்" என்றும், சிலர் அழைப்பர். அதாவது அறபுச் சொற்கள் கலந்த தமிழையே "அறபுத் தமிழ்" என்பார்….. ஆயினும்" அறபுத் தமிழ்" பற்றிய அஸீஸ் அவர்களின் கருத்து, அறபுத் தமிழ் பற்றிய பொதுவான கருத்திலிருந்து வேறுபட்டது. கடந்த நூற்றாண்டுகளில், பல்வேறு காரணங்களால் முஸ்லிம்கள் தமிழ் மொழியை தமிழ் எழுத்துக்களில் எழுதியதோடு மட்டுமன்றி, அறபு எழுத்துக்களிலும் எழுதி வருகின்றனர். அதாவது, அறபு எழுத்தில் எழுதப்பட்ட தமிழே ஏற்கனவே கூறியது போல் அறபுத் தமிழ் என்றும் கருதப்படுகின்றது." **(நுஹ்மான், 1981,1982)**

மேற்படி கூற்றில் பேராசிரியர் நுஃமான் "முஸ்லிம் தமிழ்" என்ற புதிய சொற்றொடரையும் அறிமுகப்படுத்துகின்றார். அ.மா. சாமியும் "அறபுத் தமிழுக்கு தமிழ் நாட்டில் "முஸ்லிம் தமிழ்" என்றும், இலங்கையில் சோனகர் தமிழ் என்றும் இதற்கு வேறுபெயர்கள் வழங்கின." **(சாமி, 1994)** என்று குறிப்பிடுவதில் இருந்தும்

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
பேரா. கலாநிதி எம்.எஸ்.எம் ஜலால்தீன் P: 293-308

தமிழ்நாட்டில் **"முஸ்லிம் தமிழ்"** என்று வழங்கப்படுவதை அறிய முடிகின்றது. மேற்படி நுஃமானின் கருத்துக்களின் அடிப்படையில் அறபுத் தமிழ், முஸ்லிம் தமிழை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம். அறபுச் சொற்கள் கலந்த முஸ்லிம்களின் தமிழ்பேச்சு முஸ்லிம் தமிழ். அறபுச் சொற்கள் கலந்த முஸ்லிம் களின் தமிழ் எழுத்து வசனநடை முஸ்லிம் தமிழ். அறபு வரிவடிவில் எழுதப்பட்ட தமிழ் வசனம் - அறபுத் தமிழ்.

இவ்வாறு 'அறபுத் தமிழ்' பற்றிய ஆய்வில் ஈடுபட்டோருடைய கருத்துக்கள், முக்கிய இரண்டு விதமான வரைவிலக்கணங்களை தருவனவாக அமைந்துள்ளன. உண்மையில். இலங்கை, தென்னிந்திய முஸ்லிம்கள் வரலாற்று ரீதியாக தமிழையே தமது தாய் மொழியாகக் கொண்டு தொடர்ந்து பேசிவந்துள்ளனர். ஆனால் அவர்களது இஸ்லாமியக் கோட்பாடுகளோடும், கிரிகைகளோடும், குர்ஆன், ஹதீஸ் போன்ற இஸ்லாத்தின் மூலாதார நூல்களோடும் கொண்ட தொடர்பின் காரணமாக அவர்களது தமிழ் பேச்சு வழக்கில் நூற்றுக்கணக்கான அறபுச் சொற்கள் விரவிக்காணப்பட்டன. 'சமய, பண்பாட்டுத் தேவைகளுக்காக நூற்றுக்கணக்கான அறபுச் சொற்களும், தொடர்களும் முஸ்லிம்களின் அன்றாடப் பேச்சில் பயன்படுத் தப்படுகின்றன. இவை மொழிமூலமான சமூக உறவுகளுக்கு அவசியமானவை. இவற்றைப் பயன்படுத்தாமல் முஸ்லிம்கள் தமக்குள் செய்தித் தொடர்பு கொள்வது எளிதல்ல. அவ்வகையில் இவை முஸ்லிம்களின் பண்பாட்டுடன் இரண்டறக் கலந்துள்ளன. முஸ்லிம் அல்லாதவர்கள், முஸ்லிம்களின் பேச்சை புரிந்துகொள்வதில் இடையூறாக அமைகின்ற முக்கியமான மொழியியல் அம்சமாகவும் இவை அமைகின்றன." **(நுஹ்மான், 1982)**

இவ்வாறு அறபுச் சொற்கள் முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் ஆரம்ப காலங்களில் இருந்தே விரவி வந்த போதும், அதை 'அறபுத் தமிழ் என்றோ, 'முஸ்லிம் தமிழ் என்றோ அடையாளப் படுத்தும் அளவுக்கு மொழியியல் ரீதியான அக்கறை செலுத்தப்படவில்லை. இதனைத் தொடர்ந்து அறபு லிபியில் தமிழ்ச் சொற்களை, வசனங்களை, சொற்றொடர்களை எழுதும் நடைமுறை, இலங்கை, தென்னிந்திய முஸ்லிம்களின் மத்தியில் ஏற்பட்டபோதுதான், எழுத்துப் பயிற்சி இந்நாட்டு முஸ்லிம்களின் மத்தியில் பரவலாகக் காணப்பட ஆரம்பமாகி இருக்க வேண்டும்.

இவ்வெழுத்துப் பயிற்சியும் வெவ்வேறான இரு மொழிகளின் கலப்பாக, அறபுத் தமிழாக தோன்றியது. ஏனெனில் இந்நாட்டு முஸ்லிம்கள் தமிழை பேசப்பழகி இருந்தார்கள். ஆனால் எழுத, வாசிக்க தெரிந்திருக்கவில்லை. எனவே எழுதத் தெரிந்த மொழியில், பேசத் தெரிந்த மொழியை எழுதத் தொடங்கினார்கள். அது அவர்களின் கருத்து பரிமாற்ற மொழியாக மட்டுமன்றி, சமய, கலாசார, தொழில்சார் மொழியாகவும் காலப் போக்கில் வளர்ந்து வந்தது.

இதுபற்றி ஆய்வு செய்த பின்வந்த ஆய்வாளர்களே இதை அறபுத் தமிழ் என்று பெயர்சூட்டி அழைக்கலாயினர். அதே நேரத்தில் முஸ்லிம்களின் தமிழ் பேச்சு வழக்கில் அறபுச் சொற்கள் விரவிக்காணப்படும் நடைமுறை தொடர்ந்திருப்பதையும் அவதானித்த மொழியியலாளர்கள், அதை எப்படி அழைப்பது? என்பதை மொழியியல் ரீதியாக ஆய்வு செய்த போதுதான், அதை முஸ்லிம் தமிழ் என்று அழைக்கவும், அறபு லிபியில் எழுதப்படுவதை அறபுத் தமிழ் என்று அழைக்கவும் முடிந்தது. ஆனால் இம்முடிவு தனியொருவரால் அல்லது ஓரிருவரால் எடுக்கப்பட்டதால், அறபுத்தமிழ் ஆய்வில் ஈடுபட்டுள்ள பலரது ஒப்புதலை பெறமுடிய வில்லை. இதன் காரணமாக, மொழியியல் ரீதியான இம்முடிவு ஓரிரு கட்டுரைகளோடு மட்டும் சங்கமமாகிவிட்டது. இது ஓர் ஆரோக்கியமான நிலை அல்ல. எனவே அறபுத் தமிழ் ஆய்வாளர்களும், இத்துறையோடு தொடர்புடைய மொழியியல் ஆய்வாளர்களும் இது பற்றிய ஆய்வுரீதியான முடிவைத் தரவேண்டிய கடப்பாடுடையவர்களாகும்.

'அறபுத்தழிழ்" - 'லிசானுல் அர்வி"

அறபுத்தமிழ் அறிஞர்கள் அறபுத் தமிழை லிசானுல் அர்வி (அர்வி மொழி) எனவும் லிசானுல் அர்விய்யா எனவும் அழைக்கின்றனர். இவ்விரண்டும் ஒரே கருத்தேயே தருகின்றன. இச்சொற்றொடரில் உள்ள லிசான் என்பது நாவு, மொழி என்ற கருத்தை தரும் அறபு சொல்லாகும். ஆனால் அறபு மொழி சொல்லல்லாத அர்வி, அர்விய்யி என்ற சொற்கள் பற்றி பின்வரும் தகவல்கள் கிடைக்கின்றன.

“முன்னைய காலத்தில் தெலுங்கு மொழி வழக்கிலிருக்கும் ஆந்திரா (தென்னிந்தியா) பிரதேசத்தில் சிறுபான்மையாக வாழ்ந்த தமிழ்பேசும் மக்களை

ஆந்திர மக்கள் அறுவர். (Aruwar) என அழைத்ததாக கால்ட் வெல்ட் **(Cald Well,1961)** கூறுகின்றார்.

தமிழ்நாட்டை அறுவர் நாடு என்றும் அதன் மொழியை அறுவம் (Aruwar) என்றும் தெலுங்குதேச மக்கள் அழைத்ததாகவும் இச்சொல் கலிங்கத்துப் பரணி என்ற பிரபல தமிழ் இலக்கிய நூலிலிருந்து பெறப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. “கலிங்கத்துப் போரில் சோழர் படையைக் கண்ட அந்நாட்டு சேனை அருவர், அருவர் (தமிழர், தமிழர்) என அஞ்சி நடுங்கினர்” என பேராசிரியர் சேதுப்பிள்ளை குறிப்பிடுகிறார். **(சேதுப்பிள்ளை, 1962)** எனவே, தெலுங்கு மொழிச் சொல்லான அறுவர் என்பது அர்வி என மருவி வந்திருக்கலாம். தமிழ்மொழி பேசுவோரை அறுவர் என அழைத்த தெலுங்கு நாட்டவர், தமிழ்பேசும் முஸ்லிம் களையும் அறுவர் என அழைத்திருக்கலாம். எனவே அவர்கள் பேசும் அறபும் தமிழும் கலந்த மொழியானது. அர்வி என அழைக்கப்பட்டிருக்கலாம், **(Shukri. 1992).**

வேறொரு கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. “கொடுந் தமிழ் நாடுகளில் அறுவர்” நாடும் ஒன்று. “கொள்ளிடத்”துக்கு வடக்கே (இன்றைய தென்னார்க்காடு - செங்கல்பட்டு மாவட்டங்கள்) அறுவர் நாடு இருந்தது. **(தமிழ் அகராதி, 1962)** அங்கு வாழ்ந்த மக்கள் “அரவாளர்” என்று அழைக்கப்பட்டார்கள். இன்றும் கூட ஆந்திரர்கள் தமிழர்களை “அரவாடு” என்று சொல்கிற வழக்கம் இருக்கிறது. அரவாமு என்ற தெலுங்குச் சொல்லுக்கு தமிழ்மொழி என்று பொருள். “அருவம்” என்ற தமிழே “அரவய்யா” என்று மருவியது. அறபு எழுத்துக்களைக் கொண்டு எழுதினாலும் தமிழ் (அரவையா) என்றே அறபியர் கூறினார்கள் என்பதைத்தான் “லிசானுல் அறிவிய்யா” என்ற சொல் காட்டுகிறது. சுத்தத் தமிழில் இருந்து அறபுத் தமிழை வேறுபடுத்திக்காட்ட (லிசானுல் அறிவிய்யா) என்று அறேபியர் கூறினார்கள். அரேபியருக்கு மொழி என்றாலே அறபி மொழிதான் என்பதனால். லிசானுல் (மொழி) என்பதை அறபி என்று எடுத்துக் கொண்டு. “லிசானுல் அறிவிய்யா என்பதை “அறபுத் தமிழ்” என்று அழைத்திருக்கலாம்.” **(சாமி, 1994)**

தமிழுக்கு அர்வி என்ற கூறப்படுவதை மெய்ப்பிக்கும் வகையில் தமிழ் நாட்டில் சென்னை போன்ற நகரங்களில் உருதுமொழி பேசிவாழும் அனேக முஸ்லிம்கள், தமிழ் மொழியை அர்வி என்றே அழைக்கின்றார்கள். கலாநிதி எஸ். முஹம்மது

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
பேரா. கலாநிதி எம்.எஸ்.எம் ஜலால்தீன் P: 293-308

அசைன் நெய்னார் அவர்களால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட (Bahar-I-Azam Jahi)) என்ற உருது மொழி நூலில் தமிழ் மொழி அர்வி என்றே கூறிப்பிடப்படுகின்றது. **(Ghulam Abdul Qadir, 1950).**

மொழியியல் நோக்கில் அறபுத்தமிழ்

அறபுத்தமிழின் மொழியியல் ரீதியான அந்தஸ்து பற்றி பலர் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இவர்களில் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள், "தமிழ் இலக்கணம் தவிர தனக்கென வேறான இலக்கணம் இல்லாமையால், அதனை தனி மொழியென்று சொல்லுவது சாத்தியமன்று. ஆனால் மறுபுறத்தில் பார்த்தால், பிரிட்டிஸ் இங்கிலீஷ்க்கும், அமெரிக்க இங்கிலீஷ்க்கும் உள்ளதிலும் அதிக வேறுபாடு தமிழுக்கும், அறபுத் தமிழுக்கும் உண்டு. எனவே கிளைமொழி என்னும் அந்தஸ்தை அதற்கு தங்கு தடையின்றி அளிக்கலாம்" **(அஸீஸ், 1968)** என்று கூறினார். ஆனால் பேராசிரியர். உவைஸ் அவர்களோ, "அறபுத் தமிழ் என்றொரு மொழி இல்லை" **(உவைஸ், 1976)** எனக்கருதினார். கலாநிதி சுக்ரி, அறபுத் தமிழை "அறபும் தமிழும் இணைந்த ஒரு கூட்டுமொழி **(சுக்ரி, 1992)** என்று வகைப்படுத்தினார். மற்றொரு தமிழ்நாட்டு எழுத்தாளர் பின்வருமாறு கூறுகிறார். "ஒன்றை மொழியென ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், அதற்கென தனித்தன்மை வாய்ந்த அடிப்படை இலக்கண அமைப்புக்கள், மொழியியல் மரபுகள் இருந்தாக வேண்டும். அறபுத் தழிழைப் பொறுத்தவரை அதற்கென தனியான இலக்கணம் எதுவுமில்லை. "இதற்கு தனிமொழி அந்தஸ்து தரமுடியாது", என்கிறார்கள் ஆய்வாளர்கள். "ஆர்வத்தில் பிறந்திட்ட கிளை மொழி"யாக வேண்டுமானால் கொள்ளலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர்." (முஹம்மது பாக்கவி) கலாநிதி சுஐப் ஆலிம் "அறபுத்தமிழ், சர்வதேச மொழிகளில் ஒன்றேதான் என்று கூறுகின்றார். "அறபுத் தமிழ்மொழி, ஒரு காலத்தில் கவிதை, வசனநடை இரண்டிலுமே கலந்து, இலக்கிய அந்தஸ்து பெற்று, ஒரு மொழியில் ஊடகத்துக்கு தேவையான அனைத்து அடிப்படை களையும் பெற்று, மிக விருத்தியடைந்திருந்தது. உண்மையில் அறபுத்தமிழ் மொழி, இன்று உலகில் காணப்பட்ட அறியப்பட்ட அனைத்து மொழிகளுக்குமுடைய மொழியியல் (Phonetic) வரைவிலக்கணங்களைப் பெற்ற ஒரு மொழியாகும். சுருக்கமாகச் சொல்வதானால், அறபுத் தமிழில் பாண்டித்தியம் பெற்ற

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
பேரா. கலாநிதி எம்.எஸ்.எம் ஜலால்தீன் P: 293-308

ஒருவர், உலகின் எந்த மொழியிலும் உள்ள எந்த வார்த்தையை எவ்வித தவறுமின்றி மொழியக்கூடிய வல்லமை பெறமுடியும்.” **(Shuayb Alim, 1993)** என்று கூறினார்.

கலாநிதி நுஃமான் அறபுத் தமிழை சமூகக்கிளை மொழிகளுள் (Social Dialects) ஒன்றாக குறிப்பிடுகின்றார். (**நுஹ்மான், 1981,1982**) கலாநிதி நபீஸா சலீம் போன்றோர் அறபுத் தமிழை ஒரு மொழியாக கருதமுடியாது எனக்கூறுகின்றார்கள். இதற்கான காரணம், ஒரு பிரதேசத்தை சேர்ந்த அனைத்து முஸ்லிம்களும் இம்மொழியை பேசுவதில்லை என்று கூறுகின்றனர். **(Shuayb Alim, 1993)**

வேறு சிலர் அறபுத்தமிழ் என்பது அது முழுவதும் தமிழ் மொழிதான். எழுத்து மட்டுமே அறபு. எனவே அதை அறபுத்தமிழ் என்று அழைக்க முடியாது என்று கூறுகின்றனர். அறபுத்தமிழின் மொழி அந்தஸ்து பற்றி, மவ்லானா அப்துல் வஹ்ஹாப், நாகூரைச்சேர்ந்த பேராசிரியர் முஹம்மது றாபிஉ, பேராசிரியர் எஸ். பஸலா முஹியித்தீன் போன்றோர், மிக உறுதியாக அறபுத்தமிழ் “ஒரு தனியான அந்தஸ்து பெற்ற மொழியாக வரை விலக்கணம் செய்துள்ளார்கள். **(Shuayb Alim, 1993)**

அறபுத் தமிழின் வரைவிலக்கனத்தை வரையறுப்பதில் எவ்வாறு ஆய்வாளர்கள், பல்வேறு கருத்துக்களை முன்வைத்தார்களோ, அவ்வாறே அறபுத் தமிழை ஒரு மொழியாக வரையறுப் பதிலும், பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளனர். உண்மையில் அறபுத் தமிழுக்கு தனி மொழி அந்தஸ்து வழங்க முடியாது. காரணம் அதற்கென தனியான இலக்கண அமைப்பு எதுவும் கிடையாது. எம் மொழியும் இலக்கணம் இன்றி அமைய முடியாது என்பது மொழியியலாளர்களின் முடிவாகும். எனினும் அறபுத்தமிழை ஒலி, பொருட்சிதைவின்றி எழுதுவதற்கு வாய்ப்பாக சில எழுத்து நடைமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவைகள் மட்டுமே சில விதி முறைகளாக அறபுத் தமிழில் காணப்படுகின்றன. இவற்றைத்தவிர வேறு எவ்வித இலக்கண வரம்புகளும் அறபுத் தமிழுக்கு கிடையாது. எனவே, கிளை மொழி அல்லது சமூகக் கிளைமொழி என்று அழைப்பதில் மொழியியல் ரீதியான பிரச்சினை எதுவும் இல்லை”. (ஆய்வாளர்)

முடிவுரையும் விதந்துரையும்

அறபுத்தமிழ் ஊடகம் பற்றிய பல்வேறு கருத்தாடல்கள், வரைவிலக்கணக்கங்களை இவ்வாய்வில் தொகுத்து தந்தோம். இக்கருத்தாடல்கள் அனைத்தும் கால, தேச மற்றும் ஆய்வாளர்களின் தன்மைக்கேற்ப மாறுபட்டிருப்பதை ஆய்வாளரால் அவதானிக்க முடிகின்றது. இம்மொழி ஊடகம் தற்கால நூற்றாண்டில் வழக்கொழிந்து காணப்படுகின்ற போதிலும், தென்னிந்திய, இலங்கை முஸ்லிம்களின் சமய, சமூக, இலக்கிய தொடர்பூடகமாக சுமார் இரண்டு நூற்றாண்டு காலம் கோலோச்சியதை வரலாறு எமக்கு நிரூபிக்கின்றது. கலாநிதி சுக்ரி ஊறுவது போல், "அறபுத்தமிழ் இலக்கியம் தமிழ்பேசும் முஸ்லிம்களின் மிகப்பெறுமதி வாய்ந்த ஒரு கலாசாரமுதுசமாகும். **(Shukri. 1992)**

ஆனால் அறபுத்தமிழ் வழக்கொழிந்தவுடன் பல்வேறு இடங்களிலும் சிதறிக் கிடக்கும் அறபுத் தமிழ் நூல்கள் கவனிப்பாரற்று தூர்ந்து அழிந்துவிடும் நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளன. எனவே இந்நூல்களை ஒன்றுதிரட்டிப் பாதுகாக்கும் முயற்சி மேற்கொள்ளப்படல் மிக அவசரமான, அவசியமான ஒரு பணியாகும். இன்றைய காலகட்டத்தில் இத்தகைய ஒரு முயற்சி மேற்கொள்ளப்படாவிடின், தமிழ்பேசும் முஸ்லிம்கள் மிக விரைவில் அவர்களது மூதாதையர்களின் மிகக் காத்திரமான கலாச்சாரப் பண்பாட்டு பங்களிப்பினைப் பிரதிபலிக்கும் ஒரு செல்வத்தினை இழந்து விடுவர்.

அவ்வாறு பாதுகாக்கும் பொறுப்பினையும் அறபுத்தமிழ் ஊடகத்தை மீண்டும் உயிர்ப்பிக்கும் பணியிலும் இந்த சர்வதேச ஆய்வு மாநாடு தீர்க்கமான முடிவுகளையும் செயற்திட்டங் களையும் மேற்கொள்ளுமாயின், அதுவே இம்மாநாட்டின் பெரு வெற்றியாகும்.

உசாத்துணை நூல்களும், அடிக்குறிப்புகளும்

(References and Foot Notes)

1. அஸீஸ் ஏ.எம்.ஏ., (1963). இலங்கையில் இஸ்லாம், யாழ்ப்பாணம்,
2. Shukri M.A.M., (1986), "Muslims of Sri Lanka - A cultural Perspective", Muslims of Sri Lanka, Jamiya Naleemiyah, Beruwala.

3. சுக்ரி, எம்.ஏ.எம். 01.11.1992, “அறபுத் தமிழின் தோற்றமும், அதன் பண்பாட்டுப் பாரம்பரியமும்” (கட்டுரை), தினகரன் வாரமஞ்சரி, லேக் ஹவுஸ்,
4. Takya Suayb Alim, (1993), “Origin and Development of Lisanul Arwi”, Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu, Imamul Arus Trust, Madras, 1993.
5. அமீன். எம்.ஐ.எம் “இலங்கை முஸ்லிம்களின் வரலாறும், கலாச்சாரமும் - 1870 - 1915” (1991), (எம்.ஏ. ஆய்வுக்கட்டுரை), பேராதனைப் பல்கலைக் கழகம்,
6. அப்துல் ரஹீம் எம்.ஆர்.எம்., (1976, இஸ்லாமிய கலைக்களஞ்சியம், சென்னை.
7. கனி ஆர்.பி.எம், (1963), இஸ்லாமிய இலக்கியக் கருவூலம், அருள் நூல் நிலையம், தென்காசி, தென்னிந்தியா,
8. சாமி. அ.மா. (1994), தமிழில் இஸ்லாமிய இதழ்கள், நவமனி வெளியீடு, சென்னை,
9. சிவத்தம்பி. கே., (1994), “தமிழலக்கிய வரலாற்றில் இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள்” தமிழலக்கியத்தில் மதமும் மானுடமும், நியூசெஞ்சரி புக் ஹவுஸ் சென்னை.
10. நுஹ்மான் எம்.ஏ.எம்., (1982), “அறபுத்தமிழ் - ஒருவிவரண ஆய்வு” இன்கிலாப், தொகுதி 4, 1981/82, முஸ்லிம் மஜ்லிஸ், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.
11. சேதுப்பிள்ளை ஆர்.பி., (1962), தமிழகம் ஊரும் பேரும், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை,
12. மதுரைத் தமிழகராதி சென்னை, 1962.
13. Ghulam Abdul Qadir, (1950), Sources of the u;istory of the Nawabs of the Carnatic, Vol - 5 , University of Madras, Chennai.
14. அஸீஸ் ஏ.எம்.ஏ., (1968), ‘அறபுத் தமிழ் எங்கள் அன்புத்தமிழ்’, இஸ்லாமிய தமிழ் இலக்கிய சொற்பொழிவுகள், மருதமுனை,
15. உவைஸ் எம்.எம்.,(1976), இஸ்லாமும் இன்பத்தமிழும், சென்னை.

References

1. Azeez (1963).Ilankaiyil Islam, Yazhpanam.
2. Shukri M.A.M., (1986), "Muslims of Sri Lanka - A cultural Perspective", Muslims of Sri Lanka, Jamiya Naleemiyah, Beruwala.
3. Sukri, M.A.M. 01.11.1992, 'Arabu Thamizhin Thottramum, adhan Panpattu Paaramapariyamum' (Katturai), Dinakaran Weekly Magazine, Lake House.
4. Takya Suayb Alim, (1993), "Origin and Development of Lisanul Arwi", Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu, Imamul Arus Trust, Madras.
5. Ameen, M.I.M.. 'Ilankai Muslimkalin varalarum, kalacharamum – 1870 – 1915 (1991), M.A., Thesis, University of Peradhana.
6. Abdul Rahim., M.R.M., (1976, Islamic Encyclopedia, Chennai.
7. Gani R.P.M. (1963), Islamiya Ilakkiya Karuvulam, Arul Nool Nilayam, Tenkasi.
8. Sami. A.M. (1994), Thamizhil Islamiya Idhazhgal, Navamani Veliyeedu, Chennai.
9. Siva Thambi., (1994), 'Thamizhilakkiya varalaatril Islamiya Thamizhilakkiyankal', Thamizh Ilakkiyathil Madhamum Maanudamum, NCBH, Chennai.
10. Nuhman M.A.M., (1982) (Arab-Tamil – Oru Vivarana Aaivu' Ingulab, (Vol-4), 1981/82, Muslim Majlis, University of Yaazh.
11. Sethu Pillai, RP, (1962), Thamizhagam Oorum Perum, Pazhaniyappa Brothors, Chennai.
12. Madurai Thamizh Dictionary. 1962
13. Ghulam Abdul Qadir, (1950), Sources of the history of the Nawabs of the Carnatic, Vol - 5 , University of Madras, Chennai.
14. Azeez (1968_), Arabu Tamil Engal Anbu Thamizh. (1968), Islamiya Thamizh Ilakkiya Chorpozhivugal. Maruthamunai.
15. Uvais M.M., (1976), Islamum Inba Thamizhum, Chennai.

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr A.Jawahar Basha & Dr A.Syed Zakir Hasan P: 309-323

A HISTORICAL VIEW OF THE GREAT TAMIL POETS

அறபுத் தமிழ் கவிஞர்களின் வரலாற்று நோக்கல்

A. Jawahar Basha,
Research Assistant, Centre for Islamic Tamil Cultural Research,
Jamal Mohamed College (Autonomous), Tiruchirappalli - 620 020.
jmcajbphd@gmail.com - 97151 90456

Dr. A. Syed Zakir Hasan,
Assosiate Prof. & Head, PG & Research Department of Tamil,
Jamal Mohamed College (Autonomous), Tiruchirappalli - 620 020.
profhasan27@gmail.com - 9442740254

Abstract

At the time when man appeared, he began to express his language through communication and gestures and explained it through sculpture. After that he recorded his history through inscriptions, copper plate, leaf trace etc. to record his religion, culture and notes. Then, when we look at the history of the origin of Islam, what comes before our eyes is the Arab country. Arabs who came to Tamil Nadu from Arab countries for business got married. Arabic Tamil may have been formed due to such an event where a person who knows Arabic teaches Arabic to a Tamil and an Arab who does not know Tamil learns Tamil. After the Arabs, their children became the natives of this country. Islam was spread to many regions through Valimars, Auliyas and Sufi sages. In such a situation, in the coastal areas of Tamil Nadu and Sri Lanka, masala, poetry, tafseer, stories evenings, medicine, aqait, qissa, nama, munajatu, credovar, lame drama, marriage greetings and Arabic Tamil. From the eighth century to the nineteenth century, the development of Arabic Tamil has been high. Through this article it will be helpful to know not only the biographies of the famous Tamil poets but also the list of books.

Keywords: Arabu Tamil, Historians, Shihabuddin, Kannakumat Mahudum Muhammad, Asia Umma, Mappilai Lebbai, Uwais

ஆய்வுச்சுருக்கம்

மனிதன் தோன்றிய காலத்திலேயே, தன் மொழியைத் தொடர்பு மற்றும் சைகைகள் மூலம் வெளிப்படுத்தத் தொடங்கி, சிற்பம் மூலம் விளக்கினான். அதன் பிறகு அவர் தனது மதம், கலாச்சாரம் மற்றும் குறிப்புகளை பதிவு செய்ய கல்வெட்டுகள், செப்பு தகடு, இலை சுவடு போன்றவற்றின் மூலம் தனது வரலாற்றை பதிவு செய்தார். அப்போது இஸ்லாம் தோன்றிய வரலாற்றைப் பார்க்கும் போது நம் கண் முன்னே வருவது அரபு நாடுதான். தொழில் நிமித்தமாக அரபு நாடுகளில் இருந்து

தமிழகம் வந்த அரேபியர்கள் திருமணம் செய்து கொண்டனர். அரேபிய மொழி தெரிந்தவன் தமிழனுக்கு அரபி கற்பிப்பதும், தமிழ் தெரியாத அரேபியன் தமிழ் கற்றுக்கொள்வதும் போன்ற ஒரு நிகழ்வால் அரபு தமிழ் உருவாகியிருக்கலாம். அரேபியர்களுக்குப் பிறகு அவர்களின் குழந்தைகள் இந்நாட்டின் பூர்வீகக் குடிகளாக மாறினர். வலிமார்கள், அவுலியாக்கள் மற்றும் சூஃபி ஞானிகள் மூலம் இஸ்லாம் பல பகுதிகளுக்குப் பரவியது. வலிமார்கள், அவுலியாக்கள் மற்றும் சூஃபி ஞானிகள் மூலம் இஸ்லாம் பல பகுதிகளுக்கு பரவியது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தமிழகம் மற்றும் இலங்கையின் கடலோரப் பகுதிகளில் மசாலா, கவிதை, தப்சீர், கதை மாலைகள், மருந்து, அகைத், கிஸ்ஸா, நாமா, முனாஜாத்து, கிரெடோவர், நொண்டி நாடகம், திருமண வாழ்த்து, அரபித் தமிழ். எட்டாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை அரபுத் தமிழின் வளர்ச்சி அதிகமாக இருந்தது. இக்கட்டுரையின் மூலம் தமிழ்ப் புகழ்பெற்ற கவிஞர்களின் வாழ்க்கை வரலாற்றை மட்டுமின்றி நூல்களின் பட்டியலையும் தெரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

திறவுச் சொற்கள்: அறபுத் தமிழ், வரலாற்று அறிஞர்கள், ஷிஹாபுத்தீன், கண்ணகுமது மகுதூம் முகம்மது, ஆசியா உம்மா, மாப்பிள்ளை லெப்பை, ம.மு.உவைஸ்

முன்னுரை

மனிதன் தோன்றிய காலத்தில் தன்னுடைய மொழி பரிவர்த்தனை உணர்ச்சியின் காரணமாகவும் சைகைகளின் வழியாகவும் வெளிப்படுத்த ஆரம்பித்து சிற்பத்தின் மூலமாகக் கூறித் தெளிவுப்படுத்தினான். அதன் பிறகு தன்னுடைய சமயம், கலாச்சாரம், குறிப்புகள் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்காகக் கல்வெட்டு, செம்புப் பட்டயம், ஓலைச் சுவடி போன்றவற்றின் மூலமாகத் தன்னுடைய வரலாற்றைப் பதிவு செய்தான். பிறகு, இஸ்லாம் தோன்றிய வரலாற்றை உற்றுநோக்கும்போது நமது கண்முன் வருவது அரபு நாடு. அரபு நாட்டிலிருந்து வணிகம் நிமித்தமாகத் தமிழ்நாட்டிற்கு வந்த அரேபியர்கள் திருமணம் என்ற பந்தத்தில் இணைந்தனர். அரபி தெரிந்தவர் தமிழனுக்கு அரபியைக் கற்றுத் தருவதும், தமிழ் தெரியாத அரபியருக்கு தமிழ் கற்றுத் தந்ததும் இப்படிப்பட்ட நிகழ்வு நடந்ததின் காரணமாக அரபுத் தமிழ் உருப்பெற்றிருக்கலாம். அரபியர்கள் பிறகு அவர்களின் குழந்தைகள் இந்நாட்டு பூர்வகுடிகளாக மாறினர். பல பகுதிகளுக்குச் சென்று வலிமார்கள், அவுலியாக்கள், சூபி ஞானிகள் மூலமாக இஸ்லாம் பரப்பப்பட்டது.

அப்படிப்பட்ட நிலையில் தமிழ்நாட்டு பகுதியில் இருக்கும் கடலோரப்பகுதியிலும், இலங்கை நாட்டிலும் மசலா, கவிதை, தப்ஸீர், கதைகள் மாலை, மருத்துவம், அகாயித், கிஸ்ஸா, நாமா, முனாஜாத்து, படைப்போர், நொண்டி நாடகம், திருமண வாழ்த்து மற்றும் அரபுத் தமிழ் போன்ற இலக்கியங்களின் மூலமாக அறபுத் தமிழ் வளரத்தொடங்கின. எட்டாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை அறபுத் தமிழின் வளர்ச்சி அதிகமாக இருந்து வந்துள்ளது.

இக்கட்டுரையின் மூலம் அறபுத் தமிழ் கவிஞர்கள் வாழ்க்கைக் குறிப்புகளை அறிவதுமட்டும் அல்லாமல் நூல்களின் பட்டியலையும் அறிந்துக்கொள்வதற்குப் பெறுதுணையாக இருக்கும்.

அறபுத் தமிழ் எழுத்து முறை

அறபுத் தமி ்லிஸானுல் அர்வி, அர்வி என்றும் அழைக்கப்படுகிறது. அரபியைத் தமிழ் வரி வடிவத்தில் கொண்டு வந்தனர். திருக்குர்ஆனை தமிழாக்கம் செய்வதற்கு மார்க்க அறிஞர்கள் ஒலி உச்செரிப்பில் தவறு ஏற்பட்டுவிடுமோ என்று பயந்தனர். பிறகு காலம் செல்லச் செல்ல தமிழ் சொல்லாக்கங்களை அரபியில் சரளமாக எழுதத் தொடங்கினர். பிறகு, அரபி எழுத்துக்களைத் தமிழில் படிக்க தொடங்கியபோதுதான் சில இடர்பாடுகளைக் கண்டறிந்தனர். ங, ச, ஞ, ட, ப, ள, ழ, ண என்ற எழுத்திற்கான இடர்பாடை நீக்கும் வகையில் எ, ஏ, ஒ, ஓ எழுத்துக்கான ஒலியைப்பெற அரபி எழுத்தில் மேலும் கீழும் கொம்புக் குறிகளைப் பயன்படுத்தி நிறைவு செய்தனர். பிறகு அறபுத் தமிழின் வளர்ச்சி முஸ்லிம் மக்களின் திருமண நிகழ்ச்சிக்குக்கூட அழைப்பிதழை அறபுத் தமிழில் அடிக்கத் தொடங்கினர். தமிழ் வளர்ச்சியில் ஆர்வமுடன் இருந்த முஸ்லிம் பெருமக்களை சாமந்தர் என வழங்கப்பட்ட சிற்றரசர்களாக இருந்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

“அரபு அரிச்சுவடியில் இருந்து கூடுதலாக 13 எழுத்துகள் சேர்க்கப்பட்டதே அர்வி அரிச்சுவடி ஆகும், தமிழில் உள்ள "ே" "ோ" குறியீடுகள் மற்றும் சில தமிழ் உச்சரிப்புகளுக்கு ஒப்பான எழுத்துக்கள் அரபு மொழியில் இல்லாததால் அவை கூடுதலாக சேர்க்கப்பட்டது.[1]

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr A.Jawahar Basha & Dr A.Syed Zakir Hasan P: 309-323

Tamil Equivalent	Arwi Letter	IPA	English Equivalent	Pronunciation	Unicode
க	ࢴ	g	Gā	'go' in 'gold'	U+08B4
ங	ࢳ	ŋ	Ngā	'ng' in 'bang'	U+08B3
ச்ச	چ	t͡ʃ	Chā	'cha' in 'chance'	U+0686
ஞ	ݧ	ɲ	Gnā	Unique to Arwi	U+0767
ட	ڊ	ɖ	Dā	'da' in 'dawn'	U+068A
ட்ட	ڍ	ʈ	Tā	'to' in 'top'	U+068D
ண	ڹ	ɳ	Nā	Unique to Arwi	U+06B9
ப	ڣ	p	Pā	'pa' in 'pause'	U+06A3
ற	ڔ	r	Rā	Soft ر (r)	U+0694
ள	ڞ	ɭ	Ḷā	Strong ل (ḷ)	-
ழ	ۻ	ɻ	Zhā	Unique to Arwi	U+06FB
ெ◌	◌ࣣ	e	E	'e' in 'men'	U+08E3
ெ◌ா	◌ٗ	o	O	'o' in 'pot'	U+0657

இவை <u>அரபு அரிச்சுவடி</u>யில் இல்லாத அர்வி எழுத்துகளாகும்

அர்வி உயிரெழுத்துகள் தமிழ் ஒழுங்கின் படி வரிசைப் படுத்தப் பட்டுள்ளது (வலமிருந்து இடமாக)

ஔ	ஓ	ஒ	ஐ	ஏ	எ	ஊ	உ	ஈ	இ	ஆ	அ
اَو	او	اٗ	اَی	ای	اࣣ	اُو	اُ	اِی	اِ	آ	اَ
au	ō	o	ai	ē	e	ū	u	ī	i	ā	a

அர்வி எழுத்துகள் ஹிஜாஸி அரபு அமைப்பில் வரிசைப் படுத்தப் பட்டுள்ளது

	ள்		ஷ்	ஸ்	ஃ ஜ்	ர்	ற்		ட் ட்	ட்	த்			ச் ச்	ஜ்		த் த்		ஆ
ض	ص ◌̣	ص	ش	س	ز	ڔ	ر	ذ	ڍ	ڊ	د	خ	ح	چ	ج	ث	ت	ب	ا
ḍ	L	ṣ	sh	s	z	r	R	d h	T	D	d	k h	ḥ	ch	j	t h	t	b	ā

ய்	வ்	ஹ்	ஞ்	ண்	ந்,ன்	ம்	ல்	க்	க்க்		ப்	ஃப்		ங்				ழ்
ي	و	ه	ݧ	ڹ	ن	م	ل	ࢴ	ك	ق	ڣ	ف	غ	ࢳ	ع	ظ	ط	ۻ
y	w	h	gn	N	n	m	l	g	k	q	p	f	gh	ng	‘	ẓ	ṭ	zh

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303   ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr A.Jawahar Basha & Dr A.Syed Zakir Hasan P: 309-323

அரபுத் தமிழ் நூல்களில் இம்மொழிமரபு அருவி மொழி (லிஸானுல் அருவி) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டு:

விளக்கம்:

தொங்கல்

எல்லாம் படைத்தவன் கிருபையாலே இரசூல் முஹம்மது நபியைப் போற்றி
நல்லோர் யார்களோடஸ்ஹாபிமார் நாதர் தலையெல்லா முவந்து வாழ்த்தி
ஸல்வி மலர்வாச முஹ்யித்தீனி மலரடி என்றன் சிரமேல் வைத்து
வல்லோனுதவியால் மணிமாலையில் வரலாறதனை உனர செய்வோம்
இந்த மணிமாலை படித்த பேறு இன்பமாகவே கேட்ட பேர்களும்
அந்த மில் ஹக்கனுதவியாலே ஆலந்தனிலுள்ள முஸ்லிம்களை
இந்த நாளிலும் பறக்கத்தாக இரசூல் ஷஃபா அத்தும் சுவர்க்கபதி....

(ஃபக்கீர் மதார் புலவர் அவர்கள் இயற்றிய முஹ்யித்தீன் மாலையின் துவக்க வரிகள், பக்கம்.49)

வரலாற்று அறிஞர்கள்

அரபுத் தமிழ் வளர்வதற்குக் காரணமாக இருந்தவர்களின் பட்டியலை அடிக்கிக்கொண்டே போகலாம். அந்த அளவிற்கு அரபுத் தமிழ் ஒரு காலக்கட்டத்தில் பெரும்பங்களிப்பு செய்துகொண்டு இருந்தது. 1850 முதல் 1900 வரையுள்ள காலக்கட்டத்தில் அரபுத் தமிழில் எழுந்த இலக்கியங்கள் தமிழுலகத்தில் பெரும் பங்கு

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr A.Jawahar Basha & Dr A.Syed Zakir Hasan P: 309-323

ஆற்றியுள்ளது. இதே போன்று அரபு மலையாளம், அரபு கன்னடம், அரபு மலாய், என்று பல மொழிகளின் மூலமாக நூல்கள் அதிகப்படியாக வருவதற்குக் காணரமாக இருந்ததற்கு மிகவும் முக்கிய பங்காற்றியுள்ளது அரபுமொழி. அறபுத் தமிழ் என்பது எழுத்தில் அரபியாகவும், வாசிக்கும்போது தமிழ் உச்சரிப்புகளைக் கொடுப்பது அறபுத் தமிழாகும் (இதே போன்று பிறமொழிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்). அறபுத் தமிழின் வளர்ச்சிக்குக் காரணமானவர்கள் ஹழரத் சாமு ஷிஹாபுத்தீன் வலி ரலியல்லாஹு அன்ஹு, கண்ணகுமது மகுதூம் முகம்மது புலவர், சூஃபிக் கவிஞர் அல்ஆரிபு செய்யிது ஆசியா உம்மா, மௌலானா ஷெய்க் ஸெய்யித் முஹம்மத் (மாப்பிள்ளை லெப்பை) ரஹ்மதுல்லாஹி அலைஹி, செய்ஹு முஸ்தபா வலியுல்லாஹ், செய்கு முஹம்மது லெப்பை ஆலிம், அம்மாப்பட்டணம், முகமது யூஸுப், அப்துல் காதிர் இபின் மதார், முகம்மது சாகிபு இபின் ஹபீப் முகம்மது, முகமது தமீம் இபின் முகமது, தமீன் இபின் சுல்தான், சதகத் அப்பா அல் காஹிரி, அல் காதிரீ முகமது இபின் அஹமத் மற்றும் ம.முகம்மது உவைஸ் இன்னும் பெயர்களை அடிக்கிக்கொண்டு போகலாம். அவர்களில் சிலரைப்பற்றி மட்டும் இக்கட்டுரையின் மூலமாக அறிந்துக்கொள்ளலாம்.

அறபுத் தமிழ் வளர்ச்சிக்குப் பெண்களும் ஒரு முக்கிய காரணமாக இருந்துள்ளனர். அறபுத் தமிழில் அரபி வார்த்தைகள் இருந்ததின் காரணமாக குர்ஆனுக்கு நிகராக வைத்து அறபுத் தமிழை வாசித்து வந்துள்ளனர். கீழக்கரையில் மதரஸாக்களின் மூலமாகவும் வீடுகளின் மூலமாகவும் இன்னும் அப்பழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது.

ஹழரத் சாமு ஷிஹாபுத்தீன் வலி ரலியல்லாஹு அன்ஹு

அறபுத் தமிழ் இலக்கியத்திற்குப் பெரும்பங்கு ஆற்றியவர்களில் ஒருவராக விளங்குபவர். இவர் ஷெய்கு சுலைமான் வலியுல்லாஹ் ரலியல்லாஹீதஆலா அன்ஹு அவர்களுக்கு ஐந்து மகன்கள் உள்ளனர். அவர்களில் நான்காவது மகனாக ஹழரத் சாமு ஷிஹாபுத்தீன் ஒலி நாயகம் ஆவார்கள். அவர் அறபுத் தமிழில் அதிகமான பாடல்களை எழுதி சிறப்பித்த பெருமை சாமு ஷிஹாபுத்தீன் வலியுல்லா அவர்களையே சாரும். பாமாலைகளை நூற்றுக்கும் அதிகமாக அறபுத் தமிழில் ஏற்றியுள்ளபோதிலும் அதில் 25 மட்டும் அச்சில் ஏற்றப்பட்டுள்ளன. அவர்கள் எழுதிய மாலைகளில் சில,

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr A.Jawahar Basha & Dr A.Syed Zakir Hasan P: 309-323

1) “ரஸுல் மாலை

2) அதபு மாலை

3) நெஞ்சறிவு மாலை

4) தோகை மாலை

5) பெரிய ஹதீது மாணிக்க மாலை

6) சின்ன ஹதீது மாலை

7) நான்கு யார்கள்

8) நூயதுல் இக்திஸார் மாலை

9) உலமா மாலை

10) நபி மாலை

11) ஸுரத்துல் குர்ஆன் மாலை

12) பெண்புத்தி மாலை

13) கல்யாண பித்அத்து மாலை

14) நஸீஹத்து மாலை

15) குத்பா மாலை

16) ஹனபிமத்ஹபு மாலை

17) மஃரிபா மாலை

18) புகையிலை விலக்கு மாலை

19) அற்கான் மாலை

20) மின்ஹாஜ் மாலை

21) தன்பாக் மாலை

22) பித் அத்து விலக்கு மாலை

23) மீறான் மாலை

24) ஹதீது மாலை.”2

இது போன்று பல்வேறு மாலைகளை இயற்றியுள்ளார். அறபுத் தமிழ் வரலாற்றில் முக்கியமானவராகக் கருதப்படுபவர்களின் இவரும் ஒருவராக கருதப்படுகிறார்.

கண்ணகுமது மகுதூம் முகம்மது புலவர்

ஹிஜ்ரி 1270இல் தொடங்கி 40 ஆண்டுகளில் அறுபதுக்கும் மேற்பட்ட இஸ்லாமிய இலக்கியங்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். இவர் சென்னை நூலகராகப் பணிபுரிந்துள்ளார். நூலகராக இருந்த காரணத்தினால் பல நூல்கள்

பதிப்பிக்கப்பட்டும் அவரால் இயற்றப்பட்டும் இஸ்லாமிய உலகிற்கு இலக்கியங்களை உருவாக்கியுள்ளார். அவர்களின் படைப்புகளில் சில,

1) **“நூறு மசாலா (911 திருப்பாக்கள்)**
2) **பத்ஹுல் மிஸ்ரு**
3) **ஹக்குபேரில் புகழ்பத்து**
4) **ஹக்கு பேரில் சத்நாமத்துதி**
5) **ஹக்குபேரில் பதிகம்**
6) **மக்காப் பதிகம்**
7) **பகுதாதுப் பதிகம்**
8) **நாகூர்ப்பதிகம்**
9) **காதிறூர்ப் பதிகம்**
10) **முஹ்யித்தீன் ஆண்டவர்கள்பேரில் ஒருபா பஃது**
11) **முஹ்யித்தீன் ஆண்டவர்கள்பேரில் திருப்புகழ்**
12) **திருஞானப்பத்து”3**

என்ற நூற்களை இயற்றியுள்ளார்.

சூஃபிக் கவிஞர் அல்ஆரிபு செய்யிது ஆசியா உம்மா

தந்தை பெயர் ஹபீபு முகம்மது மரைக்காயர். அவர்களின் முன்னோர்கள் கப்பலுக்கு உரிமையாளராகவும் கடல் வணிகத்திலும் ஈடுபடுத்திக்கொண்டனர். ஹபீபு மரைக்காயரின் இளைய சகோதரியின் பேர்த்தி ஆசியா உம்மா ஆவார். ஆசியா உம்மா அவர்கள் சூஃபிசம் என்றால் என்ன என்று கேட்டதற்கு,

’அகமது இபின் அசிபா’ எனும் சூஃபி ஆசிரியர் இதனை விளக்க முனையும் பொழுது, “சூஃபியிசம் என்பது இறைவனை அடையும் வழியைத் தெரிந்து கொள்வதற்கும், ஒருவர் தனது உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்வதற்கும், அதனைப் போற்றத்தக்கப் பண்புகளால் அழகுபடுத்துவதற்கான ஒரு அறிவியல்” என்கிறார். இந்த சூஃபிசத்தை ‘தரீக்கா’ என்று அழைத்தனர்.

தனிமை, இறைப்பற்று, ஞானத்தேடல் ஆகியவற்றால் யாருடனும் பேசாமல் இருந்த ஆசியா உம்மா அவர்களை அவ்வூரார், ‘**மேல் வீட்டுப் பிள்ளை**‘ என்று அன்புடன் செல்லப் பெயரிட்டு அழைத்தனர். அவர்கள் இயற்றிய நூல்களில் சில,

1. **“மெய்ஞானத் தீப ரத்தினம்**
2. **மாலிகா இரத்தினம்**
3. **அஸ்மாவுல் ஹுஸ்னா முனாஜாத்து**

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr A.Jawahar Basha & Dr A.Syed Zakir Hasan P: 309-323

4. **99 நாமங்கள்**
5. **ஹபீபு அரசர் மாலை**
6. **கல்வத்து நாயகம் முனாஜாத்து**
7. **கல்வத்து நாயகம் துதி**
8. **கல்வத்து நாயகம் இன்னிசை**
9. **பல்லாக்கு தம்பி முனாஜாத்து**
10. **பல்லாக்கு ஒலி துதி**
11. **ஞான ரத்தினக் கும்மி”4**

அவருடைய பாடல்கள் அனைத்தும் கன்னி, விருத்தம், துதி, இன்னிசை, ஆனந்தக்களிப்பு, கும்மி, வெண்பா, பதிகம், மாலை, தாலாட்டு ஆகிய சிற்றிலக்கிய வகைகளில் எழுதப்பட்டுள்ளன. ஆசியா உம்மா எண்பது வயதில் 1948-ஆம் ஆண்டில் கீழக்கரையில் காலமானார், குடும்ப முன்னோர் ஹபீப் அரசரின் நினைவு வளாகத்தில் அவர் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

மௌலானா ஷெய்க் ஸெய்யித் முஹம்மத் (மாப்பிள்ளை லெப்பை) ரஹ்மதுல்லாஹி அலைஹி

“காயல்பட்டணம் மொகுதூம் தெருவில் ஹிஜ்ரி 1232 முஹர்ரம் பிறை 18 (கி.பி.1816) செவ்வாய்க் கிழமை அன்று வெள்ளை அஹ்மது லெப்பை ஆலிம் அவர்களின் மகனாக, மாதிஹுர் ரஸூல் சதக்கத்துல்லாஹில் காஹிரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் வமிச வழியில் மகான் இமாமுல் அரூஸ் செய்யித் முஹம்மது ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் பிறந்தார்கள். இவர்களது இரண்டாம் வயதில் இவர்களின் குடும்பம் கீழக்கரை சென்று குடியேறியது.”[5]

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் என்ற பெயர் வருவதற்கான காரணம் தனது ஆசிரியரின் மகளான சாரா உம்மாளை திருமணம் செய்துக்கொண்டதால் ஏற்பட்டது. இவர் மாமனாரிடம் பைஅத்தும், கிலாபத்தும் பெற்றார்கள். அரூஸிய்யா மத்ரஸாவை உருவாக்கி அங்கு நூலகம் ஒன்றையும் அமைத்துக்கொடுத்தார்கள். இலங்கையிலும் தமிழகத்திலும் அதிகமா மார்க்க ரீதியாக சேவைகளை ஆற்றியுள்ளார்கள். மேலும் இலங்கையில் 355 பள்ளிவாசல்களையும் தைக்காக்களையும் நிறுவினார்கள். இவர்களின் சேவை மிகவும் மகத்தானமாக அமைந்துள்ளது. அறபுத்தமிழில் எழுதிய நூல்களில் சில,

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr A.Jawahar Basha & Dr A.Syed Zakir Hasan P: 309-323

1) மஙானீ
2) பத்ஹுத் தைய்யான்
3) நனீமத்துஸ்ஸாலிஹீன்
4) மின்ஹத்து ஸரன்தீப்
5) ஹதிய்யா மாலை
6) ஹத்யா ஷரீப்
7) ராத்திபத்துல் ஜலாலிய்யா
8) பத்ஹுத்தையான்
9) தலைபாத்திஹா

போன்ற எண்ணற்ற கிரந்தங்களை நமக்குத் தந்துள்ளார்கள். இவர் மறைந்த நாள் 84 ம் வயதில் ரஜப் பிறை 5 ஹிஜ்ரி 1316 சனிக்கிழமை மாலை (கி.பி. 1898) ஆகும். இவரின் சமாதி கீழக்கரை தைக்காவில் அமைந்துள்ளது.

சின்ன உவைஸீனா

இவர் ஷேக் அப்துல் காதரின் மகனும், பெரிய உவைஸ்னா லெப்பை ஆலிமின் பேரனும் ஆவார். அவர் ஹிஜ்ரி 1214 இல் இறந்தார் மற்றும் கொடிமாரா சிறுநைனார் பள்ளிவாசல் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார். இவர் இயற்றிய அறபுத் தமிழில் வெளிவந்த நூல் ஹக்கீகத் மாலை ஆகும்.

கசாவத்தை ஆலிம்

இவர் அக்குறணையின் கசாவத்தை என்ற இடத்தில் 1829ஆம் ஆண்டு பிறந்தார்கள். இவர்களது இயற்பெயர் செய்கு முஹம்மத் ஆகும். ஆரம்பக் கல்வியை இலங்கையில் முடித்துவிட்டு இந்தியாவிற்கு உயர்கல்விக்காக இந்தியாவில் உள்ள காயல்பட்டினத்திற்கு சென்றார்கள். தைக்கா ஸாஹிப் வலி(றஹிமஹுல்லாஹ்) அவர்களின் மிக முக்கிய மாணவர்களில் ஒருவராக கசாவத்தை ஆலிம் அப்பா (றஹிமஹுல்லாஹ்) அவர்கள் விளங்கினார்கள். அரபு மற்றும் தமிழ்மொழியில் கவிபாடும் ஆற்றலைக் கொண்டவர். மார்க்க அறிஞரும், சூபி மகானும், எழுத்தாளரும், கவிஞரும் ஆவார். இவர் இயற்றிய அறபுத் தமிழ் தீன்மாலை மிகவும் புகழ்பெற்றதாக விளங்குகிறது.

இலங்கையில் இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்கள் அஷ்செய்க் ஹஸன் இப்னு உஸ்மான் மக்தூமி(றஹிமஹுல்லாஹ்), அஷ்செய்க் முஸ்பா இப்னு பாவா ஆதம் (றஹிமஹுல்லாஹ்), கசாவத்தை ஆலிம் அப்பா (றஹிமஹுல்லாஹ்) ஆவார்கள். மேலும், இலங்கை முஸ்லிம் கல்வித்துறையில் விளங்கக்கூடிய சித்திலெப்பை அவர்களுக்கு ஆன்மீக வழிகாட்டியாகவும் விளங்கியுள்ளார்கள்.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr A.Jawahar Basha & Dr A.Syed Zakir Hasan P: 309-323

”கசாவத்தை ஆலிம் அப்பா (றஹிமஹுமுல்லாஹ்) அவர்கள் அரபிலும், அரபுத் தமிழிலும் பல கவிதைகளை இயற்றியுள்ளார்கள். நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹுு அலைஹிவஸல்லம்) அவர்களின் வரலாற்றை அரபியில் கவிநடையாகவும் உரைநடையாகவும் இயற்றியுள்ளார்கள். தமது ஆன்மீக வழிகாட்டியான காயல்பட்டிணம் தைக்கா ஸாகிப் வலி (றஹிமஹுமுல்லாஹ்) அவர்கள் பற்றி ஒரு பாமலையைப் பாடியுள்ளார்கள்.

ஹிஜ்ரி 1310 (கி.பி. 1893) றமழான் மாதம் பிறை 19 வெள்ளிக்கிழமை தனது 63ஆவது வயதில் இறையடி சேரந்தார்கள். அவர்கள் அக்குறணை பெரிய பள்ளிவாசலில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.”

முனைவர் ம. மு. உவைஸ்

ம.மு. உவைஸ் அவர்கள் ஜனவரி 15, 1922 அன்று இலங்கையில் உள்ள கொறக்கானை என்ற இடத்தில் பிறந்தார். இவரின் பெற்றோர்கள் மகுமூது லெப்பை, சைனம்பு நாச்சியார் ஆவார்கள். தந்தை ஏற்படுத்திய தமிழ் கல்விக்கூடத்தில் பயின்று, “உவைஸ் ஹேனமுல்ல அரசினர் முஸ்லிம் பாடசாலையில் கற்றார். ஆங்கிலக் கல்வியை சரிக்கமுல்லையில் அமைந்திருந்த தக்சலா வித்தியாலயத்தில் பயின்றார். அதே வித்தியாலயத்தில் சிங்களத்தையும் பாளியையும் பயின்றார். தொடர்ந்து பாணந்துறை அர்ச். யோவான் கல்லூரியில் சேர்ந்து உயர்தரப் படிப்பை முடித்தார். மேலும், பல்கலைக்கழகத்தில் சேர்ந்து சுவாமி விபுலாநந்தர் அடிகள் மற்றும் க.கணபதிப்பிள்ளையின் உதவியுடன் முதுகலைப்ப ட்டத்தை **"தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம்களின் பங்களிப்பு"** என்ற தலைப்பில் முடித்து 1951 ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1962 ஆம் ஆண்டு தமது முனைவர் பட்ட ஆய்வுக்காக, ‘**தமிழ் இலக்கியத்தில் இஸ்லாமியக் காப்பியங்கள்**’ என்னும் தலைப்பை பதிவு செய்தார். 1971 ஆம் ஆண்டு தமது ஆய்வைத் தொடர்ந்து மேற்கொண்டு 1975 ஆம் ஆண்டு ஆய்வை சமர்ப்பித்து முனைவர் பட்டம் (கலாநிதி) பெற்றார். இவர் எழுதிய நூல்களில் சில

1) இஸ்லாமும் இன்பத்தமிழும்
2) இஸ்லாமியத் தென்றல்
3) நம்பிக்கை
4) ஞானசெல்வர் குணங்குடியார்
5) நீதியும் நியாயமும்
6) நெஞ்சில் நிறைந்த சுற்றுலா (பயணக் கட்டுரை)
7) இஸ்லாம் வளர்த்த தமிழ்
8) தமிழ் இலக்கியம்

9) அரபுச் சொல் அகராதி

இவற்றுடன்

1) இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு
2) இஸ்லாமியத் தமிழ் காப்பியங்களின் வரலாறு
3) இஸ்லாமியத் தமிழ் சிற்றிலக்கியங்களின் வரலாறு
4) சூபி மெய்ஞ்ஞானிகளின் வரலாறு
5) அறபுத் தமிழ் இலக்கிய பற்றிய வரலாறு
6) இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய வசன நூல்கள்
7) தற்கால கவிதை நூல்கள் என ஆறு தொகுதிகளாக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றினை முனைவர் பீ.மு. அஜ்மல்கானுடன் இணைந்து எழுதினார்.

மொழிபெயர்ப்புகள்

1) டி. என். தேவராஜனின் வணிக எண்கணிதம் எனும் தமிழ் நூலை வணிக அங்க கணிதய என சிங்களத்தில் மொழி பெயர்த்தார்.
2) நபிகள் நாயகம், தித்திக்கும் திருமறை என்பன இவரால் தமிழில் இருந்து சிங்களத்திற்கு முறையே நபிநாயக சரிதய, அல்குர்ஆன் அமாபிந்து என மொழிபெயர்த்திருக்கிறார்.
3) மார்ட்டின் விக்கிரமசிங்கவின் கம்பெரலிய என்ற புதினத்தைக் கிராமப் பிறழ்வு என மொழிபெயர்த்திருக்கிறார்.

இஸ்லாமிய தமிழ் வளர்ச்சிக்கு இரண்டாயிரத்திற்கும் அதிகமான நூல்களை உலகறியும் வண்ணம் செய்துள்ளார். இவரின் பங்களிப்பு தமிழ் முஸ்லிம்களின் பங்களிப்பு எப்பற்பட்டது என்பதை ஆங்காங்கே சிதறிக்கிடந்ததை எடுத்து அதனை பதிப்பித்தும், நூல்களை எழுதியும் நிரூபித்துள்ளார்கள்.

பணியாற்றிய இடங்கள் : இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பகுதி நேர விரிவுரையாளர், கொழும்பு சாஹிராக் கல்லூரியிலும், வித்தியோதயாப் பல்கலைக் கழகத்திலும் விரிவுரையாளர் நவீன கீழைத்தேய மொழித்துறையின் தலைவர், இலங்கை சாகித்திய மண்டல உறுப்பினராகவும் செயற்பட்டார், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 1979 ஆம் ஆண்டு இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துறையின் தலைவராகவும், பேராசிரியராகவும் தமிழக அரசால் நியமிக்கப்பட்டார். கள ஆய்வின் மூலமாக அதிக இஸ்லாமிய நூல்கள் மற்றும் கட்டுரை சமர்ப்பித்தல் போன்ற பணிகளைச் செவ்வனே செய்துமுடித்த பேராசிரியர் உவைஸ் 1996 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் நாள் மறைந்தார்.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr A.Jawahar Basha & Dr A.Syed Zakir Hasan P: 309-323

அறபுத் தமிழ் எழுத்திலுள்ள நூல்கள்

1) 1868 மீஸான் மாலை – செய்ஹுு முஸ்தபா வலியுல்லாஹ்
2) 1878 தீன்மாலை – செய்கு முஹம்மது லெப்பை ஆலிம் (கசாவத்தை ஆலிம் அப்பா)
3) 1880 அல்துரர் அல்ஹிஸான் – அம்மாப்பட்டணம், முகமது யூஸுப் இபின் காதர் அகமது, சென்னை
4) 1884 குர்ஆனை தமிழ் விரிவுரையுடன் முதல் அரபு-தமிழில் தப்ஸீர் ஹாபிஸ் முஹம்மது புஹாரீ (இரண்டாவது அரபுத்-தமிழ் தப்ஸீர் 1911ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது)
5) 1890 ஃபுதுஹுுஷாம் – அப்துல் காதிர் இபின் மதார், பம்பாய்.
6) 1891 துர்பாத் அல் நஹவ் – அரபுமொழி இலக்கணச் சுருக்கம், முகமது காசிம் இபின் ஸித்திக் லப்பை, கண்டி
7) 1891 உஸுல் அல் கிரா அத் அல் அரபீயத் (அரபுத் தமிழ் முதல் வாசகம்) தமிழ் விளக்கத்துடன் 2 பாகம்) – முகமது காஸிம் இபின் சித்திக் லப்பை, கண்டி,
8) 1891 மிஃப்தாஹ் அல் ரஹ்மான் – முகம்மது சாகிபு இபின் ஹபீப் முகம்மது, சென்னை.
9) 1891 உம் தத் அல் ஸிபியான் – முகமது தமீம் இபின் முகமது, சென்னை
10) 1892 துஃபத் அல் அஹ்பாப் – தமீன் இபின் சுல்தான், சென்னை
11) 1893 துர்ரத் அல்-மா-பப்கிர் – அஹ்மத் இபின் முகம்மது ஹசன், கொழும்பு
12) 1893 துஃபத் அல் கிராம் – தாஹ் இபின் அப்துல் காதிர் அல் காஹிரி, பம்பாய்
13) 1896 அல் வித்ரீயஹ் – அரபுச் செய்யுளும் தமிழ் உரையும், சதகத் அப்பா அல் காஹிரி, பம்பாய்.
14) 1897 ரஹ்மத் அல் மன்னான் (திருக்குரான் சூரா 78-114) தமிழ் உரை – சுலைமான் இபின் முகமது அல் சைலானீ, கொழும்பு
15) 1898 பஃத் அல் தையான் – அல் காதிரீ முகமது இபின் அஹமத், பம்பாய்.
16) 1898 ஹிதாயத் அல் ஸாலின் கீன் – முகம்மது இஸ்மாயில் இபின் முகம்மது மதீனா, சென்னை.
17) 1878 சீறா நாடகம்–லண்டனிலுள்ள இந்திய அலுவலக நூலகத்தில் உள்ளது.

18)1878 தீன்மாலை – கண்டி ஷெய்கு முகம்மது லெப்பை ஆலிம் புலவர்

19)கள்வரை – சிறுவர்களுக்கான சின்னஞ்சிறு உரைநடை நூல்

20)இல்மு நிஸா – காமக்கலை பற்றிய நூல்

இன்னும் பல அறிய அறபுத் தமிழ் நூல்கள் கண்ணுக்கு புலப்படாமல் இருக்கிறது. அதனை ஒவ்வொரு வரலாற்று அறிஞர்களின் மூலமாகவும் கவிஞர்களின் மூலமாகவும் கிடைத்துக்கொண்டே இருக்கின்றது. இக்கட்டுரையில் சில வரலாற்று கவிஞர்களை மட்டும் இடம்பெற்றுள்ளனர். ஆனால் இன்னும் அதிகப்படியான அறபுத் தமிழ் எழுதக்கூடிய கவிஞரும் மொழிப்பெயர்ப்பு கவிஞர்கள் இருக்கிறார்கள்.

முடிவுரை

- ❖ கள ஆய்வின் மூலமாக அறபுத் தமிழ் புத்தகங்களை சேகரித்தல்.
- ❖ அரபுத் தமிழில் இதழ்கள், சென்னையில் இருந்து கி.பி.1889-ம் ஆண்டில் ‘கஷ்பூர் ரான் பீ கல்பில் ஜான்’ என்ற ஒரு வார இதழும், கி.பி. 1906-ம் ஆண்டில் சென்னையில் இருந்து `அஜாயிபுல் அக்பர்’ என்ற வார இதழும் அரபுத் தமிழில் வெளிவந்தன. ஆங்கிலேயரின் காலத்தில் அச்சு இயந்திரம் வந்ததின் காரணமாக அறபுத் தமிழ் எழுதும் முறைந்தது. பிறகு பேச்சு வழக்காக மாறி மறைந்து போனது. அதனால் அறபுத் தமிழில் வார இதழாகவோ அல்லது மாத இதழாகவோ வந்தால் அறபுத் தமிழின் அழிவின் தாக்கத்திலிருந்து விடுபடலாம்.
- ❖ அறபுத் தமிழில் உள்ள புத்தகங்களை தமிழ் வரிவடிவத்திற்கு மொழிப்பெயர்ப்பு செய்துவந்தால் அறபுத் தமிழின் வரிவடிவம் வீறுநடைபோட்டு வரும்.
- ❖ மதரஸாக்கல், பள்ளிவாசல்கள் போன்ற இடங்களில் சொல்லிக்கொடுக்கும் அலிப் ஸுஸ், அல்ஹம்து, அறபுத் தமிழ், குர்ஆன் என்ற அடிப்படையில் சொல்லிக்கொடுத்தால் அறபுத் தமிழின் மீட்டுருவாக்கம் செய்ய முடியும்.
- ❖ அறபுத்துறையில், அறபுத் தமிழில் எழுதப்பட்டுள்ள நூல்களை ஒரு பாடமாக வைக்கலாம்.

அடிக்குறிப்புகள்

1. அரபுத் தமிழ் எழுத்துமுறை - விக்கிப்பீடியா
2. ஹழரத் சாமு ஷிஹாபுத்தீன் வலி ரலியல்லாஹு ... - இணையம்
3. மு.சாயபு மரைக்காயர், இஸ்லாமிய தமிழ்த் தொண்டு, முதற் பதிப்பு, டிசம்பர் 1986, பக்.116-117.
4. செய்யிது ஆசியா உம்மா - Tamil Wiki
5. மாப்பிள்ளை லெப்பை ஆலிம் - தமிழ் விக்கிப்பீடியா
6. இஸ்லாமியத் தமிழ்ப் பேரறிஞர் ம.மு.உவைஸ்! - Keetru - இணையம்

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr A.Jawahar Basha & Dr A.Syed Zakir Hasan P: 309-323

Reference

1. Arabu Tamil Yeluthumurai - Wiki
2. Halrath Samu Shihabudeen Vali Raliyallahu…. - Internet
3. M.Sayabu Marraikayar, Islamiya Tamil Thondu, Frist Edition, December 1986, pp. 116-117.
4. Syed Ashiya Umma - Tamil Wiki
5. Mappillai Lebbai Alim - Tamil Wiki
6. Islamiya Tamil Peraringar M.M.Uwais - Keetru - Internet

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
'ஆலிம் கவிஞர்' தேங்கை ஷற்புதீன் மிஸ்பாஹி P: 324-331

இனிய அரபித் தமிழின் இன்றியமையாத் தேவை!
Essential requirements of Arab-Tamil

'ஆலிம் கவிஞர்' தேங்கை ஷற்புத்தீன் மிஸ்பாஹி
பேராசிரியர், J.M.K. அரபிக் கல்லூரி, அவணியாபுரம்

முன்னுரை :

அனைத்துலகங்களையும் படைத்தாளும் அல்லாஹ், தன்னுடைய இறுதி வேதத்தை- அரபி மொழியில்- அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு ஏழாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் இறக்கிவைத்தான். அன்றிலிருந்து, அரபிமொழியில் அமைந்த குர்ஆனை வாசிப்பதற்கு வசதியாக அரபி மொழியின் அரிச்சுவடி (ALPHABET) கற்பதை உலக முஸ்லிம்கள் தமக்குரிய கடமையாக்கினர். இதைப் போன்று தமிழ்நாட்டு முஸ்லிம்களும் மத்கபு எனப்படும் மறை ஓதும் பயிற்சிப் பள்ளிகளில் அரபி எழுத்துக்களைக் கற்கத் தொடங்கினர்.

அவ்வாறு கற்கும்போது அரபிமொழியிலுள்ள 28 எழுத்துக்களில் 12 எழுத்துக்களுக்கு உரிய உச்சரிப்பு தனினத்தமிழிலோ – வடமொழிக் கலப்பு மொழியிலோ – ஆங்கிலத்திலோ இல்லை என்பதைத் தமிழ் முஸ்லிம்கள் தெரிந்து கொண்டனர். அந்த 12 எழுத்துகள் பின்வருமாறு,

ث(ح(خ(د(ذ(ص(ض(ط(ظ (ع(غ(ق(

இந்த 12 எழுத்துகளுக்குமுரிய முறையான உச்சரிப்பு தமிழிலோ ஆங்கிலத்திலோ வடமொழியிலோ இல்லை என்பதால் இவற்றை, நேரடியாக ஓர் ஆசிரியர் மூலம் உச்சரிக்கக் கற்றுக்கொள்வது அவசியமாகும். அரபி எழுத்துகளில் ب என்பதற்கு B என்றும் ز என்பதற்கு Z என்றும் ف என்பதற்கு F என்றும் ஆங்கில எழுத்துகள் சரியான உச்சரிப்பைப் பெறுகின்றன.

இதைப்போன்று ج என்ற எழுத்தையும் س என்ற எழுத்தையும் ش என்ற எழுத்தையும் ه என்ற எழுத்தையும் வடமொழி எழுத்தின் துணையினால் எளிதில் உச்சரித்துவிடலாம். எனவே வடமொழி சில கலவாத தனித்தமிழில் இத்தகைய சொற்களை நாம் எழுத முற்பட்டால் இவற்றின் ஒலிவடிவங்கள் எந்த அளவுக்கு உருக்குலைந்து விடும் என்பதற்கு கீழ்க்கண்ட எடுத்துக்காட்டு வரிகளைப் படித்துப் பாருங்கள்.

அன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும்! நீடூர் ஜாமிஆ மிஸ்பாஹுல் ஹுதா அரபிக் கல்லூரி வளாகத்திலுள்ள ‘தாஜுஷ் ஷரீஅத்’ ஷம்ஸுல் ஹுதா ஹஜ்ரத் அரங்கில் ஹிஜ்ரி 1444 ரஜபு பிறை 27ல் மிஃராஜு விழா நடைபெற்றது! – என்ற சமுதாயத் தகவல் வரிகளை வடமொழி கலவாத தனித்தமிழில் எப்படி எழுதுவோம்? பாருங்கள்!

“அன்புடையீர்! அச்சலாமு அலைக்கும்!

நீடூர் சாமியா மிச்பாகுல் குதா அரபிக் கல்லூரி வளாகத்திலுள்ள ‘தாசுச் சரீஅத்’ சம்சுல்குதா அச்ரத் அரங்கில் கிசுரி 1444 ரசுபு 27ல் மிகுராசு விழா நடைபெற்றது.” என்றல்லவா எழுத நேரிடும். இதனால், வடமொழி கலந்த ‘ஸ-ஷ-ஜ-ஹ’ ஆகிய 4 எழுத்துகள் அரபிச் சொற்களை தமிழில் எழுத எந்த அளவுக்குத் தேவை என்பதை எண்ணிப்பாருங்கள்.

அரபியிலுள்ள 28 எழுத்துகளில் 9 எழுத்துகள் மட்டுமே தமிழில் மிகச்சரியான உச்சரிப்புகளைப் பெறும். அவை பின்வருமாறு,

1) ا 2) ت 3) ر 4) ك 5) ل 6) م 7) ن 8) و 9) ي

இந்த 9 எழுத்துகளால் உருவான பல வாக்கியங்களை நாம் தமிழில் எளிதாக எழுதிவிடலாம். இதற்கு எடுத்துக்காட்டுகள் சில பின்வருமாறு,

. **ஆசிரியரை மதிக்கவும்** - آسِرِيَرَيْ مَدِكَّوُم
2. **அந்த மனிதர் மிகவும் நல்லவர்** - اَنْدَ مَنِدَرْ مِكَ نَلَّوَر
3. **இந்தியா நமது நாயகம்** - إِنْدِيَا نَمَدُ نٰايَكَم
4. **வாகனத்தைக் கவனமாக நிறுத்து** - وَاكَنَتَّيْ كَوَنَمَاكَ نِرُت
5. **உன் உயர்வு உனது கையில் !** - أُنْ أُيَرْوُ أُنَدُ كَيَّل
6. **மனதில் நிற்கும் மகத்தான நகரம்** - مَنَدِلْ نِرْكُمْ مَكَتَّانَ نَكَرَم
7. **மலிவான விலையில் காய்கறி** - مَلِوَانَ وِلَيِلْ كَايْكَر
8. **மறை வந்த மாதம் இதுவாகும்** - مَرَيْ وَنْدَمَادَمْ إِدُوَاكُم
9. **இறைவா! அறிவை அதிகமாக்கு!** - إِرَيْوٰا أَرِوَيْ اَدِكَمَاك
10. **நான் உன்னை துதிக்கிறேன்** - نَانْ أُنّيْ تُدِكِّرون

இந்தப் பட்டியலில் இடம்பெற்ற முதல் வரியில் ஆசிரியர் என்ற சொல் வந்துள்ளது. இதிலுள்ள 2ஆம் எழுத்து ‘சி’ என்றிருந்தாலும், அது முதலெழுத்தாக

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
‘ஆலிம் கவிஞர்’ தேங்கை ஷற்புதீன் மிஸ்பாஹி P: 324-331

வராமல் 2ஆவது எழுத்தாக வந்திருப்பதால் ‘சி’ என்பது ‘ஸி’ என்ற உச்சரிப்பில் வந்திருப்பதைக் கவனிக்கவும்.

இதைப்போன்றுதான் 3ஆவது வரியிலுள்ள இந்தியா என்ற சொல்லில் இடம்பெற்ற ‘தி’ என்ற எழுத்து ‘ந்’ என்ற சொல்லுக்குப் பிறகு வந்திருப்பதால் இந்த எழுத்து அரபியிலுள்ள ذ என்ற எழுத்துக்குப் பொருத்தமான உச்சரிப்பைப் பெற்றுள்ளதைக் கவனிக்கவும்.

தமிழிலுள்ள 12 உயிரெழுத்துகளில் எ, ஏ, ஒ, ஓ ஆகிய நான்கு உயிரெழுத்துகளும் அரபியில் இல்லையென்பதால் இந்த நான்கு எழுத்துகளுக்குப் பதிலாக ‘அலிஃப்’ என்ற எழுத்துக்கு மேல் ‘டிக்’ (√) செய்வது போன்ற எழுத்தை ‘எ’, ‘ஏ’ ஆகிய இரண்டிற்கும் அரபித்தமிழில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், நெடில் எழுத்தில் அலிபிற்குப் பிறகு ي என்ற எழுத்து இணைந்து வரும்.

இதைப்போல், ‘அலிஃப்’ என்ற எழுத்துக்கு மேல் ‘தலைகீழ் காற்புள்ளி’ (Inverted Comma) (‘) போன்ற எழுத்தை ‘ஒ’, ‘ஓ’ ஆகிய இரண்டிற்கும் அரபித்தமிழில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் நெடில் எழுத்தில் அலிபிற்குப் பிறகு و (வாவ்) என்ற எழுத்து இணைந்து வரும்.

தமிழிலுள்ள உயிர்மெய் எழுத்துகளில் அடிப்படை எழுத்துகள் 9, அரபியில் உரிய உச்சரிப்பைப் பெறுவதில்லை ‘க-ச-ட-த-ப-ற’ எனும் வல்லின எழுத்துகளில் ‘ச’-‘ட’-‘ப’ ஆகிய 3 எழுத்துகளும் ‘ங’-‘ஞ’-‘ண’-‘ந’-‘மன’ எனும் மெல்லின எழுத்துகளில் ‘ங’ ‘ஞ’ ‘ண’ எனும் 3 எழுத்துகளும் ‘ய’-‘ர’-‘ல’-‘வ’-‘ழ’-‘ள’ எனும் இடையின எழுத்துகளில் ‘ர’-‘ழ’-‘ள’ ஆகிய 3 எழுத்துகளும் அரபியில் உரிய உச்சரிப்பைப் பெறாமையால் எழுந்த ஒரு புதுவகை மொழிவடிவமே அரபித்தமிழ் ஆகும்.

இந்த 9 எழுத்துகளுக்கும் மாற்றாக அமைக்கப்பட்ட அரபித்தமிழ் எழுத்துகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைக் கீழ்க்கண்ட பட்டியல் மூலம் தெரிந்துக் கொள்ளலாம்.

1. ‘ச’ எனும் எழுத்து ج (ஜீம்) என்ற எழுத்துக்குள் மூன்று புள்ளிகளைச் சேர்ப்பதால் உருவாகும்.
2. ‘ட’ எனும் எழுத்து د (தால்) எனும் எழுத்துக்குக் கீழ் ஒரு புள்ளியைப் போடுவதால் உருவாகும்.

3. 'ப' எனும் எழுத்து ف (ஃபாஃ) எனும் எழுத்துக் கீழ் ஒரு புள்ளியைப் போடுவதால் உருவாகும்.
4. 'ங' எனும் எழுத்து ع (அய்ன்) எனும் எழுத்துக்குக் கீழ் 3 புள்ளிகளைப் போடுவதால் உருவாகும்.
5. 'ஞ' எனும் எழுத்து ں (நூன்) எனும் எழுத்துக்குக் கீழ் 2 பள்ளியைப் போடுவதால் உருவாகும்.
6. 'ண' எனும் எழுத்து ں (நூன்) எனும் எழுத்துக்குக் கீழ் ஒரு புள்ளியைப் போடுவதால் உருவாகும்.
7. 'ர' எனும் எழுத்து ر (றே) எனும் எழுத்துக்குக் கீழ் ஒரு புள்ளியைப் போடுவதால் ஒருவாகும்.
8. 'ழ' எனும் எழுத்து ض (ழாது) எனும் எழுத்துக்குக் கீழ் ஒரு புள்ளியைப் பொடுவதால் ஒருவாகும்.
9. 'ள' எனும் எழுத்து ص (ஸ்வாது) எனம் எழுத்துக்குக் கீழ் ஒரு புள்ளியைப் போடுவதால் உருவாகும்.

"அரபிகள், வர்த்தக நோக்கில் தமிழ்நாட்டுக்கு வந்த நாளிலேயே 'அரபித்தமிழ்' எனும் கலப்புமொழி உருவாகியிருக்கலாம்" என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கி.பி.2ஆம் நூற்றாண்டில் பிற்பகுதியில் 'அரபியத்-தமிழர்' வர்த்தகத் தொடர்பு ஏற்பட்டு விட்டதாக கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார் தன்னுடைய A History of South India என்ற நூலில் குறிப்பிடுகிறார். இந்தக் கருத்து, பிலிப். கே. ஹிட்டி என்ற வரலாற்றாசிரியராலும் வழிமொழியப்பட்டுள்ளது.

வர்த்தக நோக்கில் தமிழ்நாட்டுக்கு வந்த ஏராளமான அரபிகள் – இன்றைய நேரளக் கரையாகிய அன்றைய சேர மண்டலக் கடற்கரைப் பகுதிகளில் நிலையாகத் தங்கியிருந்து, சேரநாட்டுப் பெண்களைத் திருமணம் செய்து வாழ்ந்ததாக 'ஸ்ட்ரோக்', 'தாராசந்த்' போன்ற வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

எனவே, அரபித்தமிழ் தமிழ்நாட்டில் அரும்பத் தொடங்க முதற்காரணம் – தமிழர்களுடன் அன்றைய அரபிகள் வைத்திருந்த வர்த்தகத் தொடர்பும், அவர்கள் தமிழ்ப் பெண்களை மணம்புரிந்து வாழ்ந்த திருமணத் தொடர்புமே ஆகும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்ப் பேராசிரியராகவுள்ள வரலாற்று ஆய்வாளர் திருமலர் மீரான் பிள்ளை அவர்கள் ஓர் ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிடும்போது, "கி.பி.12ஆம் நூற்றாண்டில்தான் சேரநாட்டுப் பகுதியில் 'மலையாளம்' எனும் மொழி உருவானது. எனவே, அரபித்தமிழ் எனும் கலப்புமொழி 'அரபிமலையாளம்' எனும் கலப்பு மொழிப்பு முந்தியது என்று சுட்டிக்காட்டுகிறார்.

அரபித்தமிழின் உதயம், சூரிய வெளிச்சம்போல் தமிழ்நாடு முழுவதும் ஓங்கி ஒளிவீசத் தொடங்கியது. தமிழ் முஸ்லிம்கள் தமது சமய நூல்களைக் கற்கத் தொடங்கிய கால கட்டம்தான். 17ஆம் நூற்றாண்டிலிருந்து சமயப் பணியாற்றிய அரபித்தமிழ், இந்த 21ஆம் நூற்றாண்டில் ஒளி மங்கிக் காணப்படுவது வேதனைக்குறியதுதான்.

19ஆம் நூற்றாண்டில் அரபுத்தமிழுக்குப் புத்துயிர் வழங்கிய அறிஞர்களில் புகழ்பெற்றவர்கள் காயல்பட்டினத்தில் பிறந்து கீழக்கரையில் அடங்கி வாழும் மகான் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் வலியுல்லாஹ் (ரஹ்) மற்றும், அம்மாப் பட்டினத்தில் பிறந்து சென்னையில் அடங்கி வாழும் மகான் அஷ்ஷெய்கு முஹம்மது யூசுப் ஆலிம் (ரஹ்) ஆகியோர் ஆவர். இவர்கள் இயற்றிய மஙானி மற்றும் ஸிம்துஸ் ஸிப்யான் ஆகிய மார்க்கச் சட்ட நூல்கள் தமிழ் முஸ்லிம்களிடையே மிகவும் புகழ்பெற்றவையாகும்.

இதுபோன்ற அரபித்தமிழ் நூல்கள் மூலம் தமிழ் முஸ்லிம்களிடையே வழக்கிலிருந்த அன்றைய தமிழ்ச் சொற்கள் சிலவற்றைக் கீழ்கண்ட பட்டியல் காட்டுகிறது.

1. அடங்கலையும் – அனைத்தையும்
2. அடர்ந்தேறினான் – படையெடுத்தான், பாய்ந்தான்
3. அடைய வளைந்தான் – சூழ்ந்து கொண்டான் (உடலைச் சுற்றி வைக்கப்படும் கபன் என்ற சவக்கோ, இச்சொல்லால் சுட்டப்படுகிறது)
4. அந்தியும் சந்தியும் – மாலையும் காலையும்
5. அல்லத் தட்டினவன் – மறுத்தவன்
6. அவனளவில் – அவனை நோக்கி, அவனிடத்தில்
7. அழிச்சாட்டியம் – அழிவேற்படுத்துதல், குழப்பம் விளைவித்தல்

8. ஆதரவு வைத்தல் – ஆவலுடன் எதிர்பார்த்தல்
9. ஆனபோதே – ஆகவே
10. இடம்பாடு – வாய்ப்பு, சாத்தியக் கூறு
11. இரட்சகன் – காக்கும் இறைவன்
12. இரணம் (எரணம்) – உணவு
13. உசும்புதல் – அசைதல்
14. ஊழிப்பதியாய் – காலமெல்லாம்
15. எடுப்பு – கட்டிடம்
16. எத்தி வைத்தல் – அடையச் செய்தல்
17. எழுவான், படுவான் – கிழக்கு மேற்கு
18. எப்பேர்க் கொத்த – எத்தகைய
19. ஏத்தம் – சிறப்பு (ஏற்றம்)
20. ஒடுக்கம் – முடிவு, இறுதி (உ.ம். ஒடுக்கத்து நாள் – இறுதிநாள் (உலமெல்லாம் அழியும் நாள், ஒடுக்கத்து புதன் – அரபி 2ஆம் மாதம் வரும் இறுதி புதன்கிழமை
21. ஒன்றுகில் – ஒருக்கால் (ஒரு வேளை)
22. ஒஜீவனம் – உணவு
23. கனவான் – கண்ணியமுடையவர்
24. கார்மானம் – அடைக்கலம், பாதுகாப்பு
25. காரணம் – அற்புதம் (இறைநேசர்கள் நிகழ்த்தும் அற்புதம்)
26. குடல்வாய் ஜனங்கள் – உறவினர்கள்
27. குபாடம் – வஞ்சகம்
28. சத்தி – வாந்தி
29. சவரட்சனைக்கார் – (பிள்ளைகளின்) காப்பாளர்
30. சர்வலோகம் – அனைத்துலகம்
31. சாட்டி விடாதே – ஏவி விடாதே
32. சாளயப்பாடு – பணிவு

33. சிருஷ்ட்டிகள் – (இறைவனின்) படைப்புகள்
34. சீதேவி – நற்பேறு பெற்றவர்
35. சுகண்டி – இன்பம்
36. சோபனம் – நல்வாழ்த்து (மங்களம்)
37. தங்கடம் – இடையூறு, (விதிவிலக்கு பெறக் காரணம்)
38. தரித்திரம் – வறுமை
39. தரிபட்டது – தரிபாடு – நிலைபெற்றது – நிலைப்பாடு
40. தரிபடுத்துவாயாக – உறுதிபெறச் செய்வாயாக
41. தவிழ்ந்து கொள்வது – விட்டு விடுவது (தவிர்த்துக் கொள்வது)
42. திராணி – சக்தி
43. திருவுளமானான், திருவுளம் பற்றினான் – கூறினான் (கண்ணிமானவர்களைக் குறிக்கும் சொல்)
44. துலாம்பரமாக – வெளிப்படையாக, தெளிவாக
45. தூராக்கு – அகற்றிவிடு
46. தெண்டித்தான் – முயன்றான்
47. தொட்டும் – பற்றி, அல்லது சொன்னதாக (உம், அல்லாஹ்வைத் தொட்டும் – அல்லாஹ்வைப் பற்றி, அலியாரைத் தொட்டும் அறவிக்கப்பட்டுள்ளது – அலியார் சொன்னதாக அறிவிக்கப்பட்டுள்ளது.)
48. தொடக்கு – தூய்மையற்ற நிலை
49. சிறுதொடக்கு – ஒளு செய்வது கடமையான தூய்மையற்ற நிலை
50. பெருந்தொடக்கு – குளிப்பது கடமையான தூய்மையற்ற நிலை
51. தொயர்ந்தான் – பின்பற்றினான்
52. நன்மாராயம் – நற்செய்தி
53. நிரப்பமாக – நிறைவாக, (நிறப்பமானவர் – முழுமையானவர்)
54. நேமமாக – தொடர்ச்சியாக
55. பட்டவர்த்தனமாக – அப்பட்டமாக – வெளிப்படையாக
56. பறஞ்சாற்றுதல் – நம்பி ஒப்படைத்தல்

57. பாத்திரவான் – பாத்திரமானவன் – உரிமையும் தகுதியும் உடையவன்
58. பிசகற – ஐயமின்றி
59. பிச்சளம் – வாரிசுகள், குழந்தைகள்
60. புழங்குதல் – பயன்படுத்துவது
61. பேதமானது – நிலை மாறியது
62. பொடுபோக்கு – அலட்சியப் போக்கு
63. பொதிந்து கொண்டது – உள்ளடக்கியது
64. போங்கு – நடை
65. மட்டிடுதல் – வரையறுத்தல், (மட்டிடாமல் – கணக்கில்லாமல்)
66. மிடிமை – வறுமை
67. மேலெண்ணம் – ஆசை
68. முழுக்கு – குளித்தல்
69. வட்டுருக்கமாக – மிகச் சுருக்கமாக
70. விடுத்தம் – முறை
71. விதர்ப்பம் – கருத்து வேறுபாடு
72. விருட்சம் – மரம்
73. வெடிப்பு - தூய்மை

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.M.A.Ahamed Zubair P: 332-353

ARWI LANGUAGE AND ITS COMPUTATIONAL PERSPECTIVE: ENCODING ISSUES AND SOLUTIONS

Dr. K M A Ahamed Zubair
Associate Professor of Arabic, The New College,
Chennai- 600 014, Tamilnadu, India.
E-mail : ahamedzubair@thenewcollege.edu.in arabic.zubair@gmail.com

Abstract

The Arab Muslim traders and the native Tamil converts to Islam in Tamil Nadu state of India, and Sri Lanka came into closer contact as a result of their commercial activities. They were bound by a common religion, but separated by two different languages. They felt the necessity for a link language. They started to write Tamil in an adapted Arabic script called Arwi. From eighth century to nineteenth century, this language enjoyed its popularity among Tamil speaking Muslims of Tamil Nadu and Sri Lanka. The valuable and useful ideas of Tamil Muslim minds were conveyed in Arabicized Tamil called Arwi. It rendered a most useful service for the advancement and progress of Arab and Tamil cultures. However, the beginning of the twentieth century saw the decline of *this* language. And no step was taken to arrest this decline. Computational Study of Arwi Language was analyzed in this article with its encoding issues and solutions with special reference to *Unicode.*

Key words: Arwi, Tamil, Arabic, Tamil Nadu, Muslims, Computational Study, Unicode, Encoding Issues.

1.0 Introduction:

Arwi was used extensively by the Muslims of Tamil Nadu of India and Sri Lanka. This language was devised as a means of communication and interaction of the settled Arabs of Tamil Nadu with the Tamil people. It is a result of the cultural synthesis between seafaring Arabs and the native Tamil-speaking Muslims. It was popular in Tamil Nadu and Ceylon. It has a rich body of literature of which some of them were preserved. There are historical records of the prevalence of Arwi in far Eastern countries, such as Indonesia and Thailand.

Arwi served as a medium of transformation of the Muslim Tamil society of Tamil Nadu and Sri Lanka in their daily affairs to write many religious, literary and poetry texts for communication. The Arwi script represents the Tamil language (having left-to-right script) using an Arabic style of script (having right-to-left script). The Arwi script was widely used by the Muslim Tamils of Asia for their day-to-day communication. From the eighth century to the nineteenth century, this language enjoyed its popularity among Tamil-speaking Muslims of Tamil Nadu and Ceylon. It continues to enjoy the same popularity with the Muslims of Ceylon even today. The Tamil-speaking Muslims of Ceylon consider this Arwi literature as their most beloved literature **(Rahim, 415-16).**

The similarities of the socio-religious paradigms of the Muslims of South India and Sri Lanka are quite enormous. These may be summarized as follows **(Maharoof, 409)**:

a. The home language of Sri Lankan Muslims and those of Tamil Nadu is Tamil.

b. The Muslim Tamil (spoken at home) in Sri Lanka and Tamil Nadu is a dialect in that it has substantial number of Turko-Perso-Arabic loan words

c. There are close cultural systems between the Muslims of Sri Lanka and Tamil Nadu

d. Muslim Missionaries in Tamil Nadu throughout the ages have entered Sri Lanka and helped shape the religious thinking of the Muslims of Sri Lanka. These Muslim missionaries helped in the establishment of Tariqa. Most of the Qadiriyyah sub-fraternities in Sri Lanka originate from their headquarters in Kilakarai, Kayalpattanam and Kottaru. Kilakarai and Kayalpattanam are ports in Ramnad and Tirunelveli districts respectively. Kottaru is a town in Tamil Nadu, close to the Kerala state.

2.0 Origin of Arwi:

Arwi was used by the Arabs who came and settled in Tamil Nadu. The settled Arabs in Tamil Nadu learnt Tamil through Arabic Script and wrote Tamil in Arabic script. It is believed that the origin of Arwi is as old as contact of Arabs with Tamil Nadu **(Rahman, P. 23)**. The Muslim communities of Sarandib (Sri Lanka) and Tamil Nadu were able to use this language as an effective shield for the preservation of their cultural identity. They were able to safeguard their culture without sacrificing their religion **(Shuaib, 91)**. Arwi was the product of the cultural synthesis between the Arabs and the Tamil speaking Muslims. It is a combination of Arabic and Tamil, but written in Arabic script. After the advent of Islam the Arabs who already settled down in the area naturally became the representatives of Islam in these areas. In course of time, there were also converts to Islam from among the native population. When two communities, bounded by a common religion but separated by two different languages, came into closer contacts, a result of their commercial activities, they felt the necessity for a link-language. This ultimately gave birth to the Arwi language. Arwi represents the fusion of two great languages, belonging to the great ethnic groups, one being the Semitic-Arabic and the other the Dravidian-Tamil.

The Arabs of Tamil Nadu wanted to learn Tamil, which was also an ancient language like Arabic. They started learning Tamil with the help of their own Arabic script. Having learnt this, they started conveying their ideas in this newly originated and newly blended language. In early days, the Arabs were accustomed with colloquial style, when they adopted this they completely ignored Tamil Grammar. They used Tamil Language in daily life as the English men used it in later days. It must be noted that the Arabs before writing the Tamil in Arabic script, used to remember orally most of the words of daily use. Later they put the same in Arabic script. This way the Arwi language was originated in Tamil Nadu **(Samuel, 273)**. In the beginning, the Arabians conveyed their ideas in words and the Tamilians absorbed, grasped and adopted these words and used them in their daily life and these words were considered to be most important ones for commercial purposes. Even today most of these words are in use. They are used not only by the Tamilians but also by the people of India. Following are the words of Arabic which are in common use **(Rahman, 25)**: Amul (عمل), Asal (أصل), Aajar (حاضر), Kaidi (قيدي), Kajana (خزانة), Mahajar (مهجر), Jamin (ضامن), Diwan (ديوان), Dawa (دواء), Jilla (جيلا), Taluk (تعلق), Nakal (نقل), Mile (ميل), Jabthi (ضبط), Ameena (أمينة), Masoda (مسودة), Munsif (منصف), Wakkil (وكيل), Inam (إنعام), Sharathu (شرط), Mahsool (محصول), Wasool (وصول), Mirasa (ميراث), Varisu (وارث), Layak (لائق), Baqi (باقي),

Jawabu (جواب), Kamm (كم), Sharbath (شربت), Jubba (جبات), Faisal (فيصل), Thakararu (تكرار), Raseedu (رصيد), Pasali(فصلي), Maamul (معمول), Maidanam [(Maidan)(ميدان)], Vagaiyera (وغيره)...etc.

Again, Tamil words lack the capacity to convey the full significance of the Islamic terms like Rasul (رسول), Sahabah (صحابه), Wajib (واجب), Jannath (جنة), Jahannam (جهنم), Iman (إيمان), Taqwa (تقوى) etc., (their respective meanings are Messenger, Companions of the Prophet, Obligatory, Paradise, Hell, Belief, Piety...etc). Therefore Arwi words are used in these cases for better expression and understanding. Hence the Tamil Muslims naturally preferred the Arwi Language. The new language was shaped in a manner that retains all the basic aspects of the finest spoken Tamil, and all of its grammatical forms, put on the beautiful garb of the Arabic script. Arabic letters with suitably added diacritical marks were devised. Arwi still has a place among the more traditional Indian Tamil Muslim and Sri Lankan Moor families. Today, it exists only informally in the speech of the Tamil spoken Muslims, as many words unique to it are used in their spoken Tamil. Some of these words that constitute daily conversations among Muslims for example are: Museebah (مصيبة), Mowth (موت), Janazah (جنازة), Raahat (راحة), Shifaa (شفاء), Khair (خير), Wallahi (والله), Ta'lim (تعليم), Kitaab (كتاب), Shaitaan (شيطان), Sharbath (شربت), Sahan (صحن), Baith (بيت), Bi’ath (بيعة), Shirk (شرك), Tayyib (طيب) and Ikhlaas (إخلاص).

3.0 Place of Origin:

The fact that Arwi was prevalent in Colombo, Kayalpattinam, Kilakarai indicates that it was in use, as early as the eighth century of the Christian era **(Samuel, 275).** The Arabs and the Tamil Muslim might have played their role equally in the formation of Arwi It is the logical result of joint efforts of the Arabs and the Tamil Muslims. It originated in South-West Coast of Ceylon as well as in the South-East Coast of India, more particularly in Kayalpattinam. This language was enriched, promoted and developed in Kayalpattinam. It rendered a most useful service for the advancement and progress of Arab culture and Tamil culture.

4.0 Tamil, Arabic and Arwi Scripts:

Arabic follows a consonantal system.ie it has distinct symbols or letters only for consonants, while the vowels are optional and not represented by separate letters but by a few diacritical marks without which Arabic texts can still be readable and understood. Arabic has 28 consonants and it is written usually from right to left.

Tamil has 30 basic letters comprising 12 vowels 18 consonants and follows essentially a syllabic system of writing, the combination of the consonant and the vowel is represented by a syllabic symbols or letters. Tamil has 216 syllabic symbols or letters apart from the basic symbols or letters of vowels and consonants and it is written from left to right.

The Arwi script represents the Tamil language using an Arabic style of scripts. In addition to Arabic script, 12 characters were added. It is conveniently written with vowels. For those vowels which also exist in Arabic, that is -a-, -i-, -u-, -aa-, -ii-, -uu-, and the diphthongs -ai- and -au-, the same signs are in use that are used in Arabic, i.e. *fatha*, *qasra* and *damma* for the short vowels , long vowel being indicated by additional *alif*, *yaa* and

waaw, respectively, and the diphthongs being written with *fatha* (-a-) plus *yaa* or *waaw*. In addition to the basic Arabic letters, several characters have been introduced to write Tamil sounds not found in Arabic.

The Arwi consists of 40 letters, out of which 28 letters are from Arabic and 12 letters are devised by adding some marks and dots to the original Arabic Alphabet. Eighteen Arabic letters do not have their equivalents in Tamil from the phonetic point of view and similarly ten Tamil letters and two vowel sounds have no equivalents in Arabic. Thus the Arwi alphabet is the Arabic alphabet with the devised twelve additional letters to represent the Tamil vowels and several Tamil consonants that could not be mapped to Arabic sounds.

Arwi Script

There are eighteen Arabic letters which do not have their equivalents in Tamil from the phonetic point of view. There are seven Arwi letters which have their equivalents in English language.

ش	ز	ذ	د	خ	ح	ج	ث	ب
ه	ق	ف	غ	ع	ظ	ط	ض	ص

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.M.A.Ahamed Zubair P: 332-353

5.0 Arwi letters, Its Equivalent Tamil Letters and Phonetic Sound Equivalents in English - A Glance:

The 11 Tamil letters and two vowels sounds which have no equivalent in Arabic are:
ச, ச, ட, ட (as in படம்), ட (as in பட்டம்) , ள, ட,ா (as a different from ற) ப, க (as in சங்கம்) and the two vowels are எ & ஒ

Tamil	Arwi	English	Pronunciation
ச்ச	چ	Cha	Cha in Chance
ட	ڊ	Da	Da in Dawn
ட்ட	ڍ	Ta	Ta in Top
ா	ڔ	Ra	R (soft ر)
ழ	ڞ	Zha	Unique in Arwi
ப	ڣ	Pa	Pa in Pause
ண	ڹ	Na	Unique in Arwi
ஞ	ڽ	Gna	Unique in Arwi
ஒ	◌ٚ	O	O in Pot
ள	ڝ	La	Strong L
ங	ڠ	Nga	Ng in Bang
க	ڬ	Ga	Go in Gold
எ	ٜ	E	E in Men

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.M.A.Ahamed Zubair P: 332-353

6.0. Formation and Construction of Eleven Arwi letters and Two vowel marks from the existing Arabic Alphabet (Zubair,2014,60-62):

1. To the already existing dot ج , two more dots are added to make the Tamil ச thus چ (pronounced as the 'ch' in much).

2. Below the letter د is added a dot, to make it the equivalent of Tamil ட (as in படம்) thus ڊ (pronounced a as the 'd' in 'Burden').

3. By placing two dots under د , the sound of ட (as in பட்டம்) may be obtained, which is equivalent to 'T' in English. It is written as ڐ

4. While for the Tamil ற the Arabic is used in its original form, for the Tamil ர, a dot is put under the same Arabic letter thus ڔ , which is 'R' in English.

5. A dot added below ض gives the sound of ழ, in Tamil (as in பழம்). It is obtained thus ۻ This letter has no equivalent in English but the two English letters, 'zh' convey the sound when written together.

6. By placing a dot below ص the Tamil sound ள is obtained, (as in பள்ளம்) This letter is writen as ڝ and it also has no equivalent in English.

7. By adding three dots under the Arabic letter ع the Tamil letter ங is produced thus ࢳ (pronounced as the 'ng' in 'Going').

8. By adding a dot below ف the soft Tamil ப (as in பசி) is obtained thus ڣ equivalent of P (This shows that Arwi was never influenced by Persian at all in its evolution because, the 'p' in Persian language is made by adding two more dots to ب thus پ

9. The sound of 'G' (as in சங்கம்) has been obtained by placing a dot below ك resulting in ࢴ which is 'G' as in 'God'.

10. The sound of the Tamil letter ண (which has no English equivalent) is obtained by adding below ن dot thus ڹ

11. By adfing two dots below the letter ن in the Arabic alphabet, we Get ஞ (as in Tamil தஞ்சம்). This letter is written thus ن and it also has no equivalent in English but the sound may be indicated by using the English letters 'g' and 'n' together as 'gn' (as in 'sign').

12. For producing the vowel sound of ஒ (pronounced as the 'o' in 'wonder'), the sign ٚ is put on top of any letter. This is called Ko Pesh).

13. By putting the same sign ٜ under a letter, the vowel sound of எ (pronounced as the e in Men) is produced. This is called Ko Zayr

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.M.A.Ahamed Zubair P: 332-353

Arwi vowels arranged according to the Tamil order (right to left)

ஔ	ஓ	ஒ	ஐ	ஏ	எ	ஊ	உ	ஈ	இ	ஆ	அ
أَو	أُو	أُ	آي	إي	إ	أُو	أُ	إِي	إِ	آ	أَ
au	ō	o	i	ē	e	ū	u	ī	i	ā	a

Arwi letters arranged according to the Arabic Alphabetical order

ض	ڝ	ص	ش	س	ز	ڔ	ر	ذ	ڍ	ڊ	د	خ	ح	چ	ج	ث	ت	ب	ا
	ள		ஷ	ஸ	ஃஜ	ர	ற		ட்ட	ட	த	ஃக		ச்ச	ஜ		த		அ
ḍ	ḷ	ṣ	sh	s	z	r	ṛ	dh	T	D	d	kh	ḥ	ch	j	th	t	b	a
	ي	و	ه	ڽ	ڹ	ن	م	ل	ڮ	ك	ق	ڣ	ف	غ	ڠ	ع	ظ	ط	ڞ
	ய	வ	ஹ	ஞ	ண	ன	ம	ல	க	க்க		ப	ஃப		ங				ழ
	y	w	h	ñ	ṇ	n	m	l	g	k	q	p	f	gh	ng	ʻ	ẓ	ṭ	zh

There are seven Arwi letters, which have their equivalents in English Language. These letters are:

م	mīm	M	As in English
ن	nūn	N	As in English
و	wāw	W	As in English
ه	hey	H	As in English
لا	lām alif	LA	As in English
ي	ya or yey	Y	As in English
ء	hamzah	A	As in English

Since 1951

7.0 Specimen of Arwi writing (Hand written) (Zubair, 2014, 65-66):



(Transliteration of the above Invitation in Tamil)

சோனக இஸ்லாமிய கலாச்சார நிலையம் (அமைக்கப்பட்டது)

தங்களுக்கு எமது நல்வாழ்த்தும் சோபனமும் கூறுவதோடு கொழும்பு கோட்டை பிரிஸ்டல் வீதி, 27 ஆம் நம்பர் இல்லமாகிய இஸ்லாமிய கலாச்சார நிலைய புதுக்கட்டிட திறப்பு விழாவிற்கு 1965, மே மாதம் 30 ஆம் தேதி, ஹிஜ்ரா 1385 முஹர்ரம் 28 பிறை ஞாயிறு பிற்பகல் 4:15 மணிக்கு சங்கமிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

கௌரவ பிரதமர் திரு.டட்லி சோனானாயக அவர்கள் ஞாபகார்த்த பலகையை திரை நீக்கம் செய்வார்கள். தலைமை நிலையத் தலைவர் ஜனாப் சர் ராஜிக் ஃபரீத் அவர்கள் புதுக்கட்டிடத்தை திறந்து வைப்பார்கள்.

(Translation of the above Invitation in English)

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.M.A.Ahamed Zubair P: 332-353

Since 1951

Sonaga[1] Islamic Cultural Centre (Established)

We send you our felicitations, greetings and cordially invite you to attend the opening ceremony of our new building at No. 27 Bristol Street, Fort, Colombo, on the 30th May, 1965, the 28th Day of Muharram 1385, Sunday afternoon, 4:15 pm.

Honourable Prime Minister Mr. Dudley Senanayake will unveil the commemoration block. The President of the centre, Sir Razik Fareed will open the building.

8.0 Specimen of Arwi writing (Computer encoded):

The following are the few couplets of an Arwi poem written by Syed Mohammed Imam al-Aroos (1816-1898 A.D):



(Transliteration of the above couplet in Tamil)

என்னை ஆளும் வல்லோனே ஏகாந்த நாதா

தன்னை அறியும் தவத்தை தந்தாள்குவாய் நீ

(Translation of the above couplet in English)

O Almighty Who rules over me! O my Master who is the only Lord! Bless me with the boon of realizing the insignificance of myself.



(Transliteration of the above couplet in Tamil)

உன்னை அல்லாது வேறு யாரை விளிப்பேன்

என்னை விட்டும் ஹக்காக உன்னில் ஒளிப்பேன்

(Translation of the above couplet in English)

Whom can I beseech except Thee! I will [leave my wretched self and] annihilate in Thee!

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.M.A.Ahamed Zubair P: 332-353

Since 1951

9.0 Specimen of Arwi writing (in Manuscript Form):



10.0 Specimen of Arwi writing (Printed Book):

The following is the table of four Tamil letters and their Arwi equivalents

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303   ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.M.A.Ahamed Zubair P: 332-353

Tamil Letter	Arwi Letter	Tamil Letter	Arwi Letter	Tamil Letter	Arwi Letter	Tamil Letter	Arwi Letter
த்	تْ	ந்	نْ	ம்	مْ	ல்	لْ
த	تَ	ந	نَ	ம	مَ	ல	لَ
தா	تَا	நா	نَا	மா	مَا	லா	لَا
தி	تِ	நி	نِ	மி	مِ	லி	لِ
தீ	تِيْ	நீ	نِيْ	மீ	مِيْ	லீ	لِيْ
து	تُ	நு	نُ	மு	مُ	லு	لُ
தூ	تُوْ	நூ	نُوْ	மூ	مُوْ	லூ	لُوْ
தெ	تٟ	நெ	نٟ	மெ	مٟ	லெ	لٟ
தே	تيٟ	நே	نيٟ	மே	ميٟ	லே	ليٟ
தை	تَيْ	நை	نَيْ	மை	مَيْ	லை	لَيْ
தொ	تٝ	நொ	نٝ	மொ	مٝ	லொ	لٝ

11.0 Specimen of Arwi Appreciation Certificate of Participation /Presentation Given in a Competition

The following certificate is issued to the participants by a welfare organization called **"Mad'harul Faizeen Society"** at Kayalpattinam. The proof of this prepared certificate is corrected by me, and the corrections were carried out and issued to the winners and participants of this programme.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.M.A.Ahamed Zubair P: 332-353

مَظْهَرُالْفَائِزِيْن سَغْكَمْ
MADH'HARUL FA'IZEEN SOCIETY
فَـارَاڊْ چَـانْـرِتَضْ
Certificate Of Appreciation

This Certificate is Presented to　　　　إِنْتَ فَارَاڊْ چَانْرِتَضْ

_______________　　　　آوَرْكَڞُكْ _______________

اِبِّيُوضْ قِرَاءَةْ / ڢِيـچُ ڢُوڊِّيل ڢِغِيْرْتِي ڢَارَاچِمْ وِثَمَلْك
كَايَلْڢَڊِّنَمْ مَظْهَرُ الْفَائِزِيْنْ سَغْكَتَّالْ وَڞِغْكَڢْڊُكِرَتْ

For participating Online Qira'at / Elocution competition Conducted
by Madh'harul Fa'izeen society, Kayalpattinam
On ________

Secretary / سِيَلَالَرْ　　　　Asst. Manager / اُڊَوِ مِيلَالَرْ

The transliteration of the above in Tamil script is as follows:

12.0 Status and Recognition of Arwi:

மத்ஹர் அல்-ஃபாயிஜீன் சங்கம்　　　　பாராட்டுச் சான்றிதழ்	
இந்த பாராட்டுச் சான்றிதழ் ______________ அவர்களுக்கு இணைய வழி கிராஅத் / பேச்சு போட்டியில் பங்கேற்றதை பாராட்டும் விதமாக காயல்பட்டணம் மத்ஹர் அல் - ஃபாயிஜீன் சங்கத்தால் வழங்கப்படுகிறது	
உதவி மேலாளர்	**செயலாளர்**
(கையொப்பம்)	(கையொப்பம்)

The UNO has accepted Arwi as one of the approved languages of the world. **"The UNESCO COURIER"** published by the UNESCO, in August – September 1981, has published an article on the life of the Prophet, written by Mohammed Yasinn **(Shuaib, 90).**

13.0 Development of Arwi Language and Literature:

This new language became the mother tongue of the Muslim community. It is developed as the medium for their day-to-day affairs including business, property dealings, correspondence, and all other social transaction.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.M.A.Ahamed Zubair P: 332-353

Literature produced in prose and poetry in this unique language covers a vast field of subjects like:

1. Architecture	2. Astronomy	3. Creed
4. Biography	5. Commentary on Quran	6. Dictionary
7. Elegy	8. Fiction	9. Islamic Jurisprudence
10. History	11. Horticulture	12. Logic
13. Medicine	14. Moral science	15. Satire
16. Sexology	17. Sports	18. Mysticism etc.

This language was developed during the early medieval ages. Its literature is mostly of religious character. Tamil scholars, through their works, contributed immensely to the development of this language and literature. In the words of Edgard Thurston, *Arwi* is a literature which was developed for the purpose of the education of Labbai[2] and Maraikayar [3]children. The Koran and other books were published in this language.

The origin of this literature may be traced to Kayalpattnam[4], Melapalayam and other unimportant Labbai Towns in the Tirunelveli District **(Samuel, P. 271).** The orthographic practices adopted by the many authors who wrote in Arwi were not all alike. The consequent variations are noticeable in their writings. In linguistic term the language is composed of more than one set of grammars and vocabularies that a speaker may switch back and forth, depending on the situation. As a written language it employs an invented orthography for a creolized, or mixed, system of speech patterns. The structure and principles of its development are possibly related to similar systems known for other similar Islamic speech and writing systems such as Swahili language of Tanzania of East Africa, Jaawi language of Malaysia and languages of other countries namely Turkey, Uzbek, Berber, Somali and Malay.

Four hundred years ago, a particular procedure and a new literary style was adopted in Arwi writing. This new literary style was adopted by Hafiz Amir Wali Appa, a saint of Kayalpattinam. He is considered to be the first person who re-introduced Arwi after the Portuguese devastation in around 1600 **(Zubair,2006,189).** His tomb is available in the weaver's street, in Kayalpattinam. The style of Hafiz Amir Wali Appa perfected the Arwi to a large extent. Method of its writing and speaking, though existed even before Hafiz Amir Wali Appa, was not systematic. It was purely a colloquial one. Amir Wali was the first man to systematize it. Its literature flourished even in Burma and the Far Eastern countries where the Tamil Muslims lived. A book in Arwi by the name **"*Haqiqatul Insan*"** was printed in Rangoon, in 1882. The book contains 174 pages. Three more books were written and published from Akyab, Mohmein of Burma (Presently Myanmar). According to A.M.A. Azeez of Sri Lanka, the Leiden University in Holland has several Arwi books written by Muslims of Tamil Nadu and Sri Lanka. There are Arwi schools functioning on an elaborate scale in Malaysia, Singapore, Burma and Pakistan (Karachi) even today. According to Aziz, out of 15,000 books kept in the Indian Office Library in London, nearly 60 are in Arwi; famous among them are Nondi Nadagam (1872) and Sira Nadagam (1878).

Arwi Periodicals were as follows (Shuaib, 103):

a. *Allamat Lankapuri* – A Journal which was published in Colombo from 1869.
b. *Ajaibul Akhbar* - A Weekly which was published in Madras (Chennai) in 1870's.
c. *Muslim Nesan*- A Newspaper which was published in Colombo from 21-12-1882.
d. *Kashfurran an Qalbil Jan* which was published in Colombo from 1889.

14.0 Contribution of Arwi:

The religious revival of the Muslims was made possible because of this voluminous literature in Arwi produced by the Muslim Savants after the devastating cultural onslaught by the Portuguese in this area in sixteenth century. This onslaught took place in 1528 and in 1537. Literature produced in this language covered the fields of Jurisprudence, Sufism, Law, Medicine, and Poetry. Arwi was also used as a bridge language for Tamil Muslims to learn Arabic. Compositions of devotional songs used in certain Islamic ceremonies were originally written in Arwi by their authors. *Thalai Fathiha* - a well known Arwi song is devotionally sung by women in ceremonies.

There are thousands of Arwi books on different subjects. Names of the various books on different subjects with their authors are systematically organized, in the Madras Archives Catalogues. These catalogues are maintained from 1890. Periods of the catalogues are as follows: 1890-1901; 1901-1910; 1911-1915 and 1921-25. According to the catalogues, there are more than 3,000 Arwi books. The most important book is Arwi *Dictionary* in four bulky volumes written by Hakkim Muhammed Abdullah Sahib. This literature helped the Tamil Muslims to know about their religion and their culture. And in a way this literature also made the Arabic literature simpler **(Samuel, 277).**

15.0 Issues in Encoding Arwi Language with Special Reference to Unicode: A Computational Perspective

Unicode is an industry standard character set encoding developed and maintained by the Unicode Consortium. The Unicode character set is able to support over one million characters, and is being developed with an aim to have a single character set that supports all characters from all scripts, as well as many symbols, that are in common use around the world. Currently, it supports over 94,000 characters representing a large number of scripts. The benefits of a single, universal character set and the practical considerations for implementation that have gone into the design of Unicode have made it a success, and it is well on the way to becoming a dominant one.

For users working with multilingual data, products were often tied to a single encoding; this did not allow users to work with multilingual data or with data coming from incompatible systems. Developers were also required to support multiple versions of their products to serve different markets, making development and deployment for multiple markets a difficult process. In order to support data created using others' products, developers had to support a variety of different standards for a single language. In order to work with multilingual data, they needed to support several standards simultaneously since no one standard supported more than a handful of languages. In turn, it was impossible to

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.M.A.Ahamed Zubair P: 332-353

support multilingual data in plain text. Developing software that had anything to do with multilingual text have become incredibly difficult.

There were four key original design goals for Unicode:

1. To create a universal standard that covered all writing systems.
2. To use an efficient encoding that avoided mechanisms such as code page switching, shift-sequences and special states.
3. To use a uniform encoding width in which each character was encoded as a 16-bit value.
4. To create an unambiguous encoding in which any given 16-bit value always represented the same character regardless of where it occurred in the data.

With the rapid integration of Unicode into various software products, the Unicode caters the entire operating systems. All of the characters that you need in Arwi language should be available in Unicode. Unicode effectively puts all characters on the same playing field or level; specifically all characters are given equal treatment. Unicode is an evolving character set which typically means that more and more characters are being added in general and four symbols (three letters and one vowel mark) of Arwi language in particular to its row rather repertoire. Unicode has wide support by various operating systems, software and browsers and thus there is no need to install any new fonts. Instead of developing a font for this Arwi language, we can use the existing Unicode characters from the Semitic group of languages, in order to type in Arwi language. From the Unicode characters present from U+0600 to U+06FF in the range of Arabic and an another character U+0767 available in the range of Syriac language, we can type or encode the entire Arwi language.

The Arwi script faces the encoding problems while typing this Arwi character on computer. And this issue directly affects the printing of Arwi language books. Thus even the printing system demands such common encoding solutions to Arwi language in general, and Unicode characters in particular. So now we analyze the issues pertaining to encode the Arwi scripts in the forthcoming pages.

The Arabic Unicode characters utilized for Arwi script are as follows:

ا	0627	ص	0635	و	0648
ب	0628	ض	0636	ى	0649
ت	062A	ط	0637		
ث	062B	ظ	0638		
ج	062C	ع	0639		
ح	062D	غ	063A		
خ	062E	ف	0641		
د	062F	ق	0642		
ذ	0630	ك	0643		
ر	0631	ل	0644		
ز	0632	م	0645		
س	0633	ن	0646		
ش	0634	ه	0647		

The nine Arwi letters which have no equivalents in Arabic and their Unicode numbers.

For four Arwi letters, Unicode characters are not available:

Hence the following Unicode Substitutional characters for the four non-available characters in Arwi script are suggested by me as follows:

Suggested Arwi Character	Tamil Equivalent Character	Specification of the Substitutional Unicode Characters
ڝ	ள	**-Arabic letter *Saad* with two dots below (U+069D)**
ڠ	ங	**-Arabic letter *Ayn* with three dots above (U+06A0)**
ڬ	க	**- Arabic letter *kaaf* with dot above (U+06AC)**
◌۪	எ	**- Arabic *Empty Centre Low Stop* (U+06EA)**

Thus the Arwi script encoded in Unicode should be as follows:

No.	Arwi Alphabet	Writing / Encoding Remarks
1.	ا	An Arabic Alphabet. Available in Unicode.
2.	ب	An Arabic Alphabet. Available in Unicode.
3.	ت	An Arabic Alphabet. Available in Unicode.
4.	ث	An Arabic Alphabet. Available in Unicode.
5.	ج	An Arabic Alphabet. Available in Unicode.
6.	چ	An Arwi Alphabet Available in Unicode. Used in Persian and Urdu languages also.
7.	ح	An Arabic Alphabet. Available in Unicode.

8.	خ	An Arabic Alphabet. Available in Unicode.
9.	د	An Arabic Alphabet. Available in Unicode.
10.	ڊ	An Arwi Alphabet. Available in Unicode. Used in Sindhi and Early Persian languages also.
11.	ڍ	An Arwi Alphabet. Available in Unicode. Used in Sindhi language also.
12.	ذ	An Arabic Alphabet. Available in Unicode.
13.	ر	An Arabic Alphabet. Available in Unicode.
14.	ڔ	An Arwi Alphabet. Available in Unicode. Used in Sindhi and Early Persian languages also.
15.	ز	An Arabic Alphabet. Available in Unicode.
16.	س	An Arabic Alphabet. Available in Unicode.
17.	ش	An Arabic Alphabet. Available in Unicode.
18.	ص	An Arabic Alphabet. Available in Unicode.
19.	ض	An Arabic Alphabet. Available in Unicode.
20.	ۻ	An Arwi Alphabet. Available in Unicode. It is an Extended Arabic letter.
21.	ڝ	An Arwi Alphabet. Available in Unicode. Instead of the Arabic letter *Saad* with one dot below, we can employ the Arabic letter *Saad* with two dots below. Used in Turkish language also.

22.	ط	An Arabic Alphabet. Available in Unicode.
23.	ظ	An Arabic Alphabet. Available in Unicode.
24.	ع	An Arabic Alphabet. Available in Unicode.
25.	ڠ	An Arwi Alphabet Available in Unicode. Instead of the Arabic letter *Ayn* with three dots below, we can employ the Arabic letter *Ayn* with three dots above. Used in old Malay language also.
26.	غ	An Arabic Alphabet. Available in Unicode.
27.	ف	An Arabic Alphabet. Available in Unicode.
28.	ڣ	An Arwi Alphabet. Available in Unicode. Used in Ingush language spoken in Ingushetia and Uzbekistan
29.	ق	An Arabic Alphabet. Available in Unicode.
30.	ك	An Arabic Alphabet. Available in Unicode.
31.		An Arwi Alphabet. Available in Unicode. Instead of the Arabic letter *Kaaf* with one dot below, we can employ the Arabic letter *Kaaf* with one dot above. Used in old Malay language also.
32.	ل	An Arabic Alphabet. Available in Unicode.
33.	م	An Arabic Alphabet. Available in Unicode.
34.	ن	An Arabic Alphabet. Available in Unicode.
35.	ڹ	An Arwi Alphabet. Available in Unicode. Extended Arabic letter also.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303   ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.M.A.Ahamed Zubair P: 332-353

36.	ڹ	An Arwi Alphabet. Available in Unicode. Developed exclusively for Arwi language.
37.	و	An Arabic Alphabet. Available in Unicode.
38.	ه	An Arabic Alphabet. Available in Unicode.
39.	ى	An Arabic Alphabet. Available in Unicode.
40.	ك۪	எ/ An Arwi Vowel. Available in Unicode. Instead of the Vowel sign (the symbol like of Apostrophe) placed below the Consonant, we can employ an Arabic *Empty Centre Low Stop* symbol. Used as a Quranic Annotation Sign also.
41.	◌ٗ	ஒ/ An Arwi Vowel. Available in Unicode. It is a Symbol of Arabic inverted *Dammah* called *Ko Pesh* or *Ulta Pesh*.Used in Kashmiri and Urdu Languages also.

16.0 Arwi Keyboard for Mobile Android Users:

This keyboard is developed by my Post Graduate student Mr. Anees Ahmed of Kayalapattinam, pursuing M.A Arabic in the New College, Chennai under my suggestion with due consultation from me.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303   ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr K.M.A.Ahamed Zubair P: 332-353

\Updated Android Version

17.0 Decline of Arwi Language:

Arwi language originated in 8th century, flourished during the medieval ages and saw its decline from the beginning of the twentieth century. In the Globalizational Era, no step was taken to arrest this decline of this language which had the south Asia based cultural and historical background. Today Arwi is known to be a matter of least scholarly interest in some parts of Tamil Nadu state of India and Sri Lanka. This literature did not receive much attention in the later part of the 20th century. Other languages such as English replaced it in many contexts. One most important reason for its decline is the lack of competitive printing facilities. Printing of Arwi books is a very complicated and tedious process. Therefore, people preferred printing their religious books in Tamil rather than in Arwi language. During the early 20th century the adoption of Urdu as the dominant Islamic school curriculum, which is ethnocentrically unconcerned with Arwi which has a different South Asia based cultural and historical background, is also an another reason for its decline.

18.0 Remarks:

In the system of modern education, Muslim children failed to learn Arwi language, as it was out of the school curriculum. In the system of religious educational institutions, the north Indian syllabus known as *Silsilatun Nizamiyyah* was adopted by the *Madrasahs* in the beginning of the twentieth century in Tamil Nadu. Arwi as a language and subject did not find a place in that syllabus.

The decline of Arwi language is a great loss to the Tamil Muslim community as this was their religious language. It had safeguarded the interest of this community. It was fondly and reverently nurtured by noble savants. Therefore, its necessity must be felt by the present Tamil Muslim community. Its revival and renaissance is badly needed. The following steps are suggested to arrest its decline and revitalize its literature for the cultural benefit of particularly the Tamil Muslim Community:

a. All the Arwi language books available should be collected and re-printed. Unpublished manuscripts also should be collected and printed.

b. Arwi language should be made compulsory in all the *Madrasahs* of Tamil Nadu and Sri Lanka.

c. Arwi books must be taught to children attending schools as a part of school curriculum.

d. Arwi community must be encouraged to use it in their daily affairs.

e. Periodicals and magazines in this language should be re-introduced.

With these measures taken we may witness the period of renaissance in Arwi language and literature in the years to come.

19.0 Conclusion

The important reason for the unfamiliarity of Arwi is the lack of competitive printing facilities. Printing of Arwi books is a very complicated and tedious process. The early 20th century adoption of Urdu as the dominant Islamic school curriculum, ethnocentrically unconcerned with Arwi which has a different, southern South Asia based cultural and historical genesis is also an another reason for its decline. This literature has not received much attention in the later part of the 20th century.

The issues and challenges in encoding Arwi can be solved by adopting Unicode characters to type Arwi language. Today the printing system needs such encoding solutions, in order to make the task of printing and publishing the Arwi books as easier ones. There are only few hundreds of Arwi books were published, so far in different parts of Asia, and more than 4000 books were unpublished and these books were available in handwritten or in manuscript form. To publish these literary works, we are badly in need of printing and encoding solutions. If they got published, then these works may be introduced as OSS (open source software) products to all readers of the world such as Wikipedia and others.

References

1. Maharoof, M M M. Spoken Tamil dialect of the Muslims of Sri Lanka: Language as Identity classifier. Karach: IRI, 1995. Print.
2. Rahim, M R M Abdul.: Islamia Kalai Kalanjiam. Madras: Universal Publishers, 1976. Print.
3. Rahman, H Abdul. Origin and Development of Arabu-Tamil in Tamil Nadu. Madras: University of Madras, 1985. M Phil Dissertation.
4. Samuel, G John. Tamil as a classical Language. Chennai:Institute of Asian Studies, 2010. Print.
5. Shuaib, Tayka. Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu. Chennai:Aroosia Trust, 1993. Print.
6. Zubair, K M A Ahamed. al-Lisan al-Arwi.New Delhi: ICCR, 2006. Print.
7. Zubair, K M A Ahamed. Arwi or Arabu-Tamil. Saarbrucken: Lambert Academic Publishing, 2014. Print.

Online available sources

1. http://www.unicode.org/versions/Unicode6.0.0/
2. http://en.wikipedia.org/wiki/Arabic_%28Unicode_block%29
3. http://en.wikipedia.org/wiki/Arabic_Presentation_Forms-A
4. http://en.wikipedia.org/wiki/Arabic_Presentation_Forms-B
5. http://en.wikipedia.org/wiki/Arabic_Mathematical_Alphabetic_Symbols
6. http://en.wikipedia.org/wiki/Arabic-Indic_digits#Symbols
7. http://www.unicode.org/charts/PDF/U0600.pdf
8. http://en.wikipedia.org/wiki/Arwi

Paper presentation:

1. A Paper entitled "Linguistic Traditions and Islam: Cultural Landscape of Arwi" presented by Dr.K.M.A.Ahamed Zubair, in the International Conference on "Islamic Traditions and Practices in South India", held on 2nd March 2020, organized by the New College, Chennai, Tamil Nadu.
2. A Paper entitled "Arwi Language and Its Historical Landscape: an Overview" presented by Dr.K.M.A.Ahamed Zubair, in the National Conference on "Correlation between History and Literature", held on 26th June 2021, organized by Shri S H Kelkar College of Arts, Commerce and Science, Devgad, Sindhudurg, Maharashtra.
3. A Paper entitled "Linguistic Landscape of Arabic-Tamil Language: Language as an Islamic Identity" presented by Dr.K.M.A.Ahamed Zubair, in the National Seminar on "India and the Arab world: Civilization and Prispects ", held on 16-17 March 2021, organized by Jamia Millia Islamia, New Delhi.
4. A Paper entitled "Arabu-Tamil: An Islamic and Cultural Language of the Muslim Tamils" presented by Dr.K.M.A.Ahamed Zubair, in the Interational Conference on " Contribution of Tamils to the Composite Culture of Asia", held on 16-18 January 2011, organized by the Institute of Asian Studies, Chemnancherry, Chennai, India.
5. A Paper entitled "Islamic Cultural Values of Arwi Dialect" presented by Dr K M A Ahamed Zubair, in the International Symposium on "Towards the integration of Islamic Knowledge with Human Science", held on 5th January 2014, organized by the South Eastern University of Sri Lanka (SEUSL).

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303   ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Dr L Noor Asma P: 354-57

WHY ARABIC - TAMIL HAS BECOME AN UNPERTURBED LANGUAGE IN RECENT DAYS

Dr. L. NOOR ASMA
Assistant Professor & Head, Department of Economics,
Wavoo Wajeeha Women's College, Kayalpatnam. Thoothukudi District.

Abstract

Arabic-Tamil (Arwi) language originated in 8th century and flourished during the medieval ages. But nowadays its usage has been declined. It is necessary for us to understand the historical factors underlying the origin of Arabic Tamil[1]. When Islam spread among the Tamil-speaking Muslims in South India, those who accepted Islam continued to speak the Tamil language. However, due to the tight connection between Islam and Arabic, knowledge of Arabic was necessary to fulfill their daily religious duties, so they must learn to read Arabic. In recent days the usage Arabic Tamil language has declined rapidly. In this paper, the origin and the usage of Arabic Tamil among Tamil speaking Muslims has been focused. Also this study attempts to analyse why Arabic Tamil has become an unperturbed language in recent days.

Keywords: Arabic-Tamil, language, origin, Quran

Introduction:

Arabu-Tamil (Arwi) language originated in 8th century and flourished during the medieval ages. Arwi (Arabic: اللِسَانُ الْأَرْوِيُّ, Alisan al-Awiyy) is a dialect of the Tamil language written in an extended Arabic script, with extensive lexical and phonetic influences from Arabic. It is used by Tamil Muslims in the Indian state of Tamil Nadu and in Sri Lanka. But nowadays its usage has been declined. It is necessary for us to understand the historical factors underlying the origin of Arabic Tamil[1]. When Islam spread among the Tamil-speaking Muslims in South India, those who accepted Islam continued to speak the Tamil language. However, due to the tight connection between Islam and Arabic, knowledge of Arabic was necessary to fulfill their daily religious duties, so they must learn to read Arabic.

In recent days the usage Arabic Tamil language has declined rapidly. In this paper, the origin and the usage of Arabic Tamil among Tamil speaking Muslims has been focused. Also this study attempts to analyse why Arabic Tamil has become an unperturbed language in recent days.

Arabic and Tamil

Arabic language is a wonderful language that created literary justice. It is the language of heaven. The fact that Arabic has chosen as the language for the Holy Quran is an example of its excellence and the structure. Grammatical form and literary elegance of this language cannot be found in other languages. Arabic is the official language of about 25 countries and it is the mother tongue of 19 crore people. Nearly 25 million people can speak and write in Arabic. Arabic is one of the official languages of the United Nations, and is the second most used language in world trade after Chinese.

The truth is that we do not need to tell about Tamil language because we are tasting its sweetness. Tamil is an ancient language which was spoken by about 76 million people across the world. It is the official language of the Indian state of Tamil Nadu and the union territory of Puducherry (Pondicherry). It is also an official language in Sri Lanka and Singapore and has significant numbers of speakers in Malaysia, Mauritius, Fiji, and South Africa. In 2004 Tamil was declared a classical language of India, meaning that it met three criteria: its origins are ancient; it has an independent tradition; and it possesses a considerable body of ancient literature. In the early 21st century more than 66 million people were Tamil speakers[2].

Origin of Arabic Tamil language

From AD 650, Arab traders set foot in India by sea in Tamil Nadu and through Turkey and Afghanistan. Their history continued as first business, then rule. Thus the influence of Arabic on many Indian languages increased. Even in Tamil the administrative terminology we use today is significantly influenced by Arabic.

However, the Muslims of Tamil Nadu considered the Arabic language as a religious language only and confined it within the mosque. Over time, they realized that there were some difficulties in getting Tamil words equivalent to Arabic words in terms of some conceptual terms related to religious concepts and practices. For example, there are no words equivalent to Arabic words such as Allah Nabi, Rasool, Aahirah, Jinn, Sahabah, Wajib, Jannath, Jahannam, Iman, Taqwa etc. in Tamil. Moreover, it is also possible to express the deep ideas embedded in such Arabic words in another language.

It was in such a historical situation that the Muslims created the system of writing Tamil in Arabic script while maintaining its grammatical structure and started using Arabic words related to Islamic doctrines and religious practices in Tamil language.

Thus the whole world is interested in learning Arabic because the true common sense philosophies and theological principles are all embodied in the Arabic language in the Holy Quran, Hadith and the best Arabic books. As this situation is increasing among the Tamil people, many ancestors have guided the translation of Arabic into Tamil as a bridge between the two languages

Arabic Tamil has been widely used over time and has seen great growth as the mother tongue of the Muslims living in Tamil Nadu and Sri Lanka and as a medium for cultural and cultural expression.

Place of origin

The fact that Arabu-Tamil was prevalent in Colombo, Kayalpattinam, Kilakarai indicates that it was in use, as early as the eighth century of the Christian era. Arabic - Tamil originated in South-West Coast of Ceylon as well as in the South East Coast of India, more particularly in Kayalpattinam. This language was enriched, promoted and developed in Kayalpattinam. It rendered a most useful service for the advancement and progress of Arab culture and Tamil culture. Arabic Tamil helped to preserve their cultural identity while Muslims used Tamil as a medium to express themselves[3].

Status and recognition of Arabu-Tamil

The UNO has accepted Arabu-Tamil as one of the approved languages of the world. "The UNESCO COURIER" published by the UNESCO, in August – September 1981, has published an article on the life of the Holy prophet, written by Mohammed Yaasin.

Development of Arabu-Tamil Language and Literature

This new language became the mother tongue of the Muslim community. It is developed as the medium for their day-to-day affairs including business, property dealings, correspondence, and all other social transaction. Literature produced in prose and poetry in this unique language covers a vast field of subjects like 1. Architecture 2. Astronomy 3. Creed 4. Biography 5. Commentary on Quran 6. Dictionary 7. Elegy 8. Fiction 9. Islamic Jurisprudence 10. History 11. Horticulture 12. Logic 13. Medicine 14. Moral science 15. Satire 16. Sexology 17. Sports 18. Mysticism etc.

Current Scenario of Arabic Tamil

About one hundred and fifty religious books have been published in Arabic Tamil. Tafsirs and other Islamic texts were published in Arabic Tamil due to the strong insistence of religious sellers not to write commentaries on the Holy Quran in Tamil.

In general, women were more knowledgeable in Arabic Tamil than men. It was popular in Tamil Nadu and Sri Lanka. While in Tamilnadu many Persian and Urdu words were mixed in it, in Sri Lanka it remained unchanged.

From the 8th century AD to the 19th century Arabic Tamil became prominent. Its value faded after the advent of the printing press. And because the words used in it were ordinary colloquial words and its style was ancient, some Muslim Tamil writers attacked it violently in the beginning of the twentieth century. Printing of Arabu-Tamil books is a very complicated and tedious process. Therefore, people preferred printing their religious books in Tamil rather than in Arabu-Tamil language.

Due to its spread in Arabic madrasahs, the Muslim general public and women in Tamil Nadu lost interest in reading these books. However, it is still valued by the Muslims of Sri Lanka, and the Muslims there praise it as "Arabic Tamil is our beloved Tamil".

Suggestion

The following steps are suggested to arrest its decline and revitalize its literature for the cultural benefit of particularly the Tamil Muslim Community. All the Arabu-Tamil language books available should be collected and re-printed. Unpublished manuscripts also should be collected and printed. Arabu-Tamil language should be made compulsory in all the Madrasahs of Tamilnadu and Sri Lanka. Arabu-Tamil books must be taught to children attending schools as a part of school curriculum. Arabu-Tamil community must be encouraged to use it in their daily affairs. Periodicals and magazines in this language should be re-introduced. With these measures taken we may witness the period of renaissance in Arabu-Tamil language and literature in the years to come.

Conclusion

Although the use of arvi has come the close to common usage, it is not only in circulation among traditionalists of the Islamic Zubi tradition, but also in the curriculum of some Islamic madrassas. In the system of religious educational institutions, the north Indian syllabus known as Silsilatun Nizamiyyah was adopted by the Madrasahs in the beginning of the twentieth century in Tamil Nadu. Arabu-Tamil as a language and subject did not find a place in that syllabus. The decline of Arabu-Tamil language is a great loss to the Tamil Muslim community as this was their religious language. It had safeguarded the interest of this community. It was fondly and reverently nurtured by noble savants. Therefore, its necessity must be felt by the present Tamil Muslim community. Its revival and renaissance is badly needed.

Reference

1. http://en.wikipedia.org/wiki/Arwi_language
2. https://www.britannica.com/topic/Tamil-language
3. https://muslimmirror.com/eng/muslims-of-tamil-nadu-history-social-structure-and-current-status/
4. Abdur Rahman, H. (April 1985), Origin and Development of ArabuTamil in Tamil Nadu,Chennai,pp.23.
5. Shuyab Alim, Dr. Tayka (1993), Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu, Chennai,pp.91.
6. Dr. K. M. A. Ahamed Zubair, The Rise and Decline of Arabu–Tamil Language for Tamil Muslims, IIUC Studies, Vol. 10 & 11, December 2014 (p 263-282)

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303   ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
ஆலிமா ஆமினா பேகம் கைரிய்யா P: 358-370

அரபுத் தமிழ் பக்தி இலக்கியங்கள் வாயிலாக இஸ்லாத்திற்குப் புத்துயிர் ஊட்டியது அரபுத் தமிழ் கவிதைகள்.

ARABIC TAMIL POETRY REVIVED ISLAM THROUGH ARABIC TAMIL DEVOTIONAL LITERATURE

ஆலிமா A. ஆமீனா பேகம் கைரிய்யா M.A., M.Phil.,

முன்னுரை :

அரபுத்தமிழுக்கு அர்வி மொழி (اللغة الاروية) என்ற பெயரும் உண்டு. அரபு வங்காள மொழியே அரபுத்தமிழுக்கு முன்னோடியாகும். இப்னு கல்தூண் அவர்கள் தனது உலக வரலாற்று நூலில் ஆப்ரிக்காவில் தன்ஸானியா நாட்டில் சுவாஹிலி மொழி அரபி எழுத்துக்களினால் எழுதப்பட்டு வந்தது. மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, புருனை போன்ற நாடுகளில் “ஜாவி” மொழி அரபி எழுத்துக்களால் எழுதப்பட்டு வந்தது. இந்த வரிசையில் இந்தியாவின் நமது அண்டை மாநிலமான கேரளாவிலும் அரபு மலையாளத்தில் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஏறத்தாழ ஐம்பதுக்கும் மேற்பட்ட அரபுத் தமிழ் நூல்கள் வெளிவந்துள்ளன.

கீழக்கரை அரூஸிய்யா அரபிக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் இமாமுல் அரூஸ் - மாப்பிள்ளை லெப்பை மகான் சய்யிது முஹம்மது அவர்கள் தாம் பொது வாழ்வில் ஈடுபட்டு ஊர் ஊராகச் சென்று பள்ளிவாசல்களில் பயான் செய்து வந்த ஆரம்ப காலத்தில் ஸ்ரீலங்கா (இலங்கை) வில் களித்துரை என்ற ஊருக்குச் சென்றார்கள். அங்கு அவர்களுக்கு பயான் செய்ய அனுமதி கிடைக்கவில்லை, யாரும் உபசரிக்கவுமில்லை மனம் நொந்தவர்களாக:-

“கான கதீமன் , களித்துரை
அல்ஆன, பழித்துரை”

பொருள்:

மகிழ்ச்சியின் பிறப்பிடமாக இருந்த களித்துரை
பழிப்பின் பிறப்பிடமாக “பழித்துரை” யாக
மாறிவிட்டது.

என்று அந்த ஊர் பள்ளிவாசல் சுவற்றின் மீது எழுதி வைத்து விட்டு அடுத்த ஊருக்குச் சென்று விட்டார்கள்.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
ஆலிமா ஆமினா பேகம் கைரிய்யா P: 358-370

ஒரு சமயம் வியாபாரம் நிமித்தமாக தனது மூத்த மகனார் கல்வத் நாயகம் என்ற சய்யிது அப்துல் காதிர் அவர்களுடன் நாகப்பட்டணம் சென்று விட்டு திரும்பி வந்துக் கொண்டிருந்த சமயத்தில் கடலோரப் பகுதியில் உள்ள புதுப்பட்டினம் என்ற ஊரில் தங்கினார்கள். அங்கு இமாமுல் அரூஸ் மாப்பிள்ளை லெப்பை ஸய்யிது முஹம்மது அவர்கள் சிறு தூக்கத்தில் இருந்த போது:

ஃப ஸாரத் பி ஹுக்மில்லாஹி ஸாரத்து, ஸவ்ஜதீ ,

இலா ஜன்னதில் ஃபிர்தௌஸி , அய்யத ஜன்னதீ

பொருள்:

இறைவனின் கட்டளைப்படி எனது மனைவி ஸாரா, ஃபிர்தௌஸ் எனும் சுவனத்திற்கு சென்று விட்டாள். அந்த சுவனத்தின் அழகே அழகு.

தந்தையின் நாவிலிருந்து வந்த இந்த வரிகளை கேட்டவுடன் மகன் சப்தமின்றி அழைத்துவந்துவிட்டார். தந்தையும் மகனும் கால்நடையாக கீழக்கரை வந்தடைந்த போது ஸாரா அம்மாவின் ஜனஸா மண்ணரையில் அடக்கம் செய்து கொண்டிருந்தனர்.

சென்ட் ஆலிமும் அரபுத்தமிழ் கவிதைகளும்

அக்லாமா அஹ்மது முஹ்யித்தீன் செண்டு ஆலிம் நபின் புனித குடும்பத்தார்களான **" அஹ்லுல் பைத் "** கள்

மாதாலிவுல் அன்வார் ஃபீ மனாதிபி அஹ்லி பைதில் அத்ஹார் என்ற பெயரில் மௌலிது ஷரீபை (கவிதைகளை) கோர்வை செய்துள்ளார்கள்.

இறுதி இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்)அவர்களின் பேரக்குழந்தைகளான இமாம் ஹஸன் மற்றும் இமாம் ஹுஸைன் (ரவி) ஆகியோர்களை போற்றிப் புகழ்ந்து

குஹ்லுல் அய்னைனி ஃபீ மகாரிமில் ஹஸனைனி என்ற பெயரில் ஒரு மௌலிதை (கவிதைகளை) கோர்வை செய்துள்ளார்கள்.

இஸ்லாத்தின் நான்கு கலீஃபாக்களை புகழ்ந்து கன்ஜுல் காஸிதீன் ஃபீ மனாதிமில் குலஃபாயிர் ராஷிதீன் என்ற பெயரில் அல்லாமா நூஹு லெப்பை அவர்களால் கோர்வை செய்யப்பட்ட நீளமான கவிதைகளை சுருக்கித் தந்துள்ளார்கள். நாகூர் ஷாகுல் ஹமீது நாயகம் அவர்கள் மீதும் ஒரு மௌலிது ஷரீபை கோர்வை செய்துள்ளார்கள்.

மீஸான் மாலை

மீஸான் மாலை எனப்படும் அரபுத் தமிழ் கவிதை நூல் ஷேக் முஸ்தபா என்ற அறிஞரால் இயற்றப்பட்டதாகும். ஷேக் முஸ்தபா அவர்கள் தஃப்ஸீர், ஹதீஸ், ஃபிக்ஹ் தஸவ்வுஃப் போன்ற கலைகளில் பாண்டித்தியம் பெற்று சிறந்து விளங்கினார். இவாது மீஸான் மாலையே இவருக்கு கவித்துவம் என்ற கவிதைகள் எழுதும் ஆற்றல் இருந்தது என்பதற்கு சான்றாக அமைந்துள்ளது. 151 கவிதைகளைக் கொண்ட இந்த மீஸான் மாலை கி.பி. 1868 (ஹிஜ்ரி 1285)ல் வெளியீடு செய்யப்பட்டது. இந்நூலின் முழுப்பெயர் **"இழ்ஹாருல் ஹக்கி அனில் பாத்தினி ஃபீ பயான் முராதில் மீஜானில் ஆதிலிஷ் ஷைக் முஸ்தபா இப்னு பாவா ஆதமுஸ் ஸைலானில் ஃபழிலி"** என்பதாகும். முஹம்மதிப்னு அப்துல் லதீப் ஷாஃபி என்பவரின் ஃபத்ஹுல் வஹ்ஹாப் ஃபீ மஹ்ரி ஃபதில் இதர வஸ்ஸவாப் என்ற நூலின் கவிதை வடிவிலான மொழிப் பெயர்ப்பாகவே இந்நூல் அமைந்துள்ளது.

ஆதி இஸமைக் கொண்ட பதிதாஉ
அங்கீகார மீஸான் மாலையை
ஓதிப் புகழ்ந்து நன்னபி மீதில்
உரைத்தேன் ஸலவாத்தும் தஸ்லீமும்
சோதி நபி கிளையார் மீதிலும்
தூய அஸ்ஸாபிமார் மீதுமே
பேதணுகாத தீனோர்களுக்கும்
பெரியோன் ரிழ்வா னுண்டாக ஆமீன்
உலமாக்களில் மிக வலுப்பமுள்ள
உடையோன் பொருந்து மோர் அஹ்லுஸ் ஸுன்னா
அல் ஜமாஉ கூட்டத்தாரில்
அதிக கணம் சேரும் இமாம்களினால்
பலன்கள் மிகுந்தேனும் சொற்கள் கொண்டு
பத்ஹுல் வஹ்ஹாயை உறைப்படுத்தி
நமாஸ் தீனெறி நடக்கவென
நாடிக் கவிதையாய் சேர்க்கலுற்றேன்

என்று ஆரம்பம் செய்கிறார்.

மாதிஹுர் ரஸூல் சதக்கதுல்லா அப்பா

இதுபற்றி சதக்கத்துல்லாஹ் அவர்களின் இளைய சகோதரரான ஸாம் ஷிஹாபுத்தீன் அவர்கள் தாம் பாடிய "ரசூல் மாலையில்" கீழ்க்கண்ட விதமாகப் பாடியுள்ளார்கள்.

அன்னங் கொடுத்தும், அழகாம் கலை கொடுத்தும்
மின்னும் கலையோதிவைத்த வீறுடையோரைப் புகழ்வேன்
ஷேய்கப்துல் காதிரெனும் சின்னீனா லெப்பைதனை,
ஜாஹுடைய ஷெய்குதன்னைச் சாத்திப் புகழ்வேனே.
"ஜஅஹ்மது ரப்பீ ஃபீல் முஹிம்மாதீ .."

எனத்தொடங்கும் பாடலில், அப்பா அவர்கள் தனது ஆசான் சின்னீனா லெப்பை ஆலிம் பற்றி பின்வருமாறு கூறுகிறார்கள்.

"என் தந்தையும் (சுலைமான் வலி), எனது தந்தையின் நெருங்கிய நண்பரான சின்னீனா லெப்பை ஆலிமும், காயல்பட்டினம் ஷம்ஸுத்தீன் என்ற மஹானிடத்தில் கல்வி கற்றார்கள். எனது ஆசான் சின்னீனா லெப்பை செருப்பின்றி வெறும் காலால், கால்நடையாகவே நபிகளாரின் அடக்கவிடத்தைத் தரிசித்ததார்கள். சின்னீனா லெப்பையின் பெற்றோர் தங்களது கடைசிக் காலத்தில் கீழக்கரையில் குடியிருப்பதற்காக வந்தார்கள். சிறிது காலம்தான் கீழக்கரையில் வாழ்ந்தார்கள். நோயால் பீடிக்கப்பட்டு இறைவனடி சேர்ந்துவிட்டார்கள். கீழக்கரையிலே அன்னாரின் தாயும் தந்தையும் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்."

சதக்கத்துல்லாஹ் அவர்கள் மக்தூம் சின்னீனா லெப்பை அவர்களிடமிருந்தே இஸ்லாமிய கலை ஞானங்களை யெல்லாம் கற்று முழுமையானார்கள்.

சதக்கத்துல்லாஹ் அவர்கள் தாம் பாடிய "மர்திய்யா லாமிய்யா" ("மர்திய்யா" என்றால் இரங்கற்பா எனப் பொருள்) 'ல' கரத்தை கொண்டு முடியும் கவிதை என்பதால் 'லாமிய்யா' எனக் கூறுவது மரபு. "மர்திய்யா லாமிய்யா" என்றால் 'ல' கரத்தை கொண்டு முடியும் இரங்கற்பா எனப் பொருள். சின்னீனா லெப்பை அவர்களைப் பின்வருமாறு குறிப்பிட்டுத் தங்களின் நன்றிக் கடனை ஆற்றுகின்றனர்.

"வகத்கான ஃபில் ஃபிக்ஹீ ஷெகுன் முஅஜ்ஜமுன்
ஜவாதுன் ஸகிய்யுன் அஃபகஹு_ல் கவ்மி அஃமலா
வஅல்லமனி ஃபிக்ஹன் வல்பஸனி அமாமதன்

வகமீஸன் பில்இஜாஸ்தி முக்மிலா”

(சின்னீனா லெப்பை) அவர்கள் எனக்கு மார்க்கத்தின்

சட்ட ஞானங்களைப் போதித்து மாமேதை

அவர்கள் கொடைவள்ளல், மதிநுட்பமிக்கவர்,

இறைசேவையில் சிறந்தவர்கள்

அவர்கள் எனக்கு மார்க்க சட்டஞானங்களை கற்றுத்தந்து

மட்டுமின்றி எனக்கு கௌரவச்சட்டையும் தலைப்பாகையும்

அணிவித்து

நல்ல அதிகாரத்தைக் கொண்டு எனக்கு முழுமைத்துவம்

அளிக்ககூடியவர்களாகவும் இருந்தார்கள்.

ஹிஜ்ரி 982-ஆம் வருடம் பிறந்த சின்னீனா லெப்பை ஆலிம், தங்களின் 89-வது வயதில் ஹிஜ்ரீ 1071-ஆவது வருடம் இம்மண்ணுலக வாழ்வை விட்டு வபாத்தானார்கள். கீழக்கரை பழைய ஜும்ஆ பள்ளியில் அடக்கம் செய்யப்படமாட்டார்கள்.

சதக்கத்துல்லாஹ் அவர்கள் கல்வி கற்க வந்தபின் அவ்விரு குடும்பத்தினருக்கும் இடையே முன்னிருந்த உறவைவிட, உறவு பெருகி வளர்ந்தது. தன் ஆசானின் மீது அவர்கள் கொண்ட நட்புக்கு அளவேயில்லை.

அப்பா அவர்களின் பெற்றோர், சகோதரர்கள் அனைவரும் பயபக்தியுடைய இறைநேசச் செல்வர்களாய் விளங்கினர். இக்கூற்றை “ரசூல்மாலை” யின் துவக்கப் பாடல்கிளல் ஸாம் ஷஹாபுத்தின் பின்வருமாறு பாடுகிறார்கள்.

வங்காளம், சீனம், மலாக்கா, பர்மா, அரபு

எங்கும் திசையானமதி எங்கள் பிதாவைப் புகழ்வேன்

ஷெய்கு கலைமானை செப்பமாய் நான் புகழ்வேன்

வாகாயவர் மக்களை வாழ்த்திப் புகழ்வேனே

அலைபோலறிவுடைய அண்ணல் ஷம்சுத்தீனை

நிலையால் புகழ்ச்சி செய்வேன் நைனாரை யெப்பொழுதும்

மலைபோல் கலையுடைய வள்ளல் அஹ்மதரை

துலையா புகழ்ச்சி செய்வேன் துய்ய எங்கள் உஸ்தாதை

மக்கம் மதீன மெங்கும் வாகாய் திசையுடைய

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
ஆலிமா ஆமினா பேகம் கைரிய்யா P: 358-370

மிக்க சதக்கத்துல்லாஹ்வை மிகுதியாய் நான் புகழ்வேன்
வருசை மிகுதியுள்ள வள்ளல் சதக்கத்துல்லாஹ்வை
உருஷியாய் ஸாமென்பவன் ஓதிப்புகழ்வேனே
அறிவுக் கடலாம் ஆன சலாஹுத்தீனை
திறமாய்ப் புகழ்ச்சி செய்வேன் சின்ன அகீயானவரை

மல்லித் இலக்கியத்திற்கு ஆற்றிய பணி:

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது அளவற்ற அன்பு செலுத்திய சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்கள், நபிகளார் மீது தான் பாடிய புகழ்ப்பாக்கள் மட்டும் போதாதென்று கருதி அரபு நாட்டில் வீடுதோறும் ஓதப்பட்டு, பாடப்பெற்று வந்த "சுப்ஹான மல்லிகை" நம் நாட்டிற்குக் கொண்டு வந்து வீடுதோறும், பள்ளி வாசல்கள் தோறும் ஓதவும், பாடவும் வைத்தற்கு முக்கிய காரணகர்த்தாவாக விளங்கினார்கள். சுபுஹான மல்லிதுவை அதைப்போல் பல பிரதிகள் எழுத ஏற்பாடு செய்து, பல ஊர்களிலும், வழக்கமாக ஓத ஏற்பாடு செய்து, பல ஊர்களிலும், வழக்கமாக ஓத ஏற்பாடு செய்தவர்களாவர். ஆக, சுப்ஹான மவ்லிதுவை அரபு நாட்டிலிருந்து நம் நாட்டிற்குக் கொண்டு வந்து பரப்பியவர்கள் இவர்களேயாவர். அம்மவ்லிதைச் சரிப்பார்த்து, அதில் சில இடங்களிலே ஒரு சில பாடல்களும் சேர்த்துள்ளார்கள்.

மவ்லித் எனும் அரபிச் சொல்லின் பொருள் பிறந்த இடம் பிறந்த நாள் என்பதாகும். ரபியுல் அவ்வல் 12 ஆம் நாள் அன்று அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது. அம்மாதம் முதல் நாள் தொடங்கி 12 ஆம் நாள் வரையிலும் பள்ளிவாசல்களிலும், இல்லங்களிலும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் புகழ்ப்பாக்கள் படிக்கப்படுகின்றன. அந்தப் புகழ்ப்பாக்களே மல்லிது எனப் பெயர் பெற்றன. துருக்கி, எகிப்து, இந்தியா, அரேபியா ஆகிய நாடுகளில் மவ்லித் ஓதும் வழக்கம் இருந்து வருகிறது.

ஸாம் ஷிஹாபுத்தீன்

பிறப்பு ஹிஜ்ரி 1044 இறப்பு 1121. காயல்பட்டினம் அப்பா பள்ளியில் அடக்கவிடம் அமைந்துள்ளது. தமிழில் இஸ்லாமிய மார்க்க சம்பந்தமான, ஆதாரப்பூர்வமான அநேக அறிவுப் பாடல்களை இயற்றியுள்ளார்கள். முதல் அரபுத் தமிழ் கவிஞர் எனக் கருதப்படுகின்றார். 'இரசூல் மாலை' என்னும் பெயரில் 496

இசைப் பாடல்களையும் 'மீரான் மாலை' என்னும் பெயரில் 175 இசைப்பாடல்களையும் இவர்கள் இயற்றியுள்ளார்கள். மேலும் பின்வரும் பாடல்களையும் யாத்து தமிழ் மொழியை வளப்படுத்தி உள்ளனர்.

1. தொழுகை மாலை
2. இஹ்யா மாலை
3. மின்ஹாஜ் மாலை
4. நால்வர் மாலை
5. ஆறு இமாம் மாலை
6. கல்யாண பித்அத் மாலை
7. தோகை மாலை
8. சீறா மாலை
9. ஹதீது மாணிக்கம் மாலை
10. பேரிய ஹதீது மாலை (1119 ஹதீதுகள் நாவடி பாக்களாக பாடப்பட்டுள்ளது)
11. சின்ன ஹதீது மாலை (608 ஹதீதுகள் பாக்களாக பாடப்பட்டுள்ளது.
12. அதபு மாலை
13. அம்ரு மாலை
14. ஷீரூத் மாலை
15. நஸீஹத் மாலை (பெரியது, சிறியது)
16. பராயிலு மாலை
17. தம்பாகு மாலை (புகையிலையின் தீமைபற்றி விளக்குவது)
18. மஃரிபத் மாலை
19. முஹ்யித்தின் மாலை
20. மின்ஹாஜ் மாலை
21. பெண்புத்தி மாலை
22. இக்திலாஃப் மாலை (ஷாஃபி, ஹனஃபீ)
23. மத்ஹபுக்களுக்கிடையில் உள்ள வேறுபாடுகளை விளக்குவது)

அண்ணல் நபி (ஸல்) ஸாம் ஷஹாபுத்தீனை நோக்கி அரபி தெரியாத தமிழ் முஸ்லிம் மக்களுக்கு விளங்கும் எண்ணம் இஸ்லாமிய மார்க்கச் சட்டத்திட்டங்களை

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
ஆலிமா ஆமினா பேகம் கைரிய்யா P: 358-370

எளிய தமிழில் பாடும் எனக் கனவில் பணித்தனர். இதனை அவர்கள் தாம் பாடிய பெரிய ஹதீது மாணிக்கமாலையில்,

“கனவுதனில் கண்டேன் ஒருவர் வந்து
கல்வாய் உரைத்திட்டார் என்னுடனே”

என்று அடக்கத்துடன் பாடுகின்றார்கள். மேலும் அவர்கள்,

“ஏற்றமுள்ள ஆதிநாமம் கொண்டும்
இலங்கும் நபி ஸலவாத்துக் கொண்டும்
பார்த்துத் தெளிந்துயான் இர்ஷதிலும்
பார மிகவுள்ள இஹ்யாவிலும்
சீர்த்தி அணுகிய ஜவாஹிரிலும்
சிறப்பான துர்ருல் மன்தூரிலும்
கோத்துத் தெரிந்துயான் ஹதீது மாலை
கூறியுறைத்திட குதாதுணையே”

இம்மாலையை எழுதுவதற்கு ஆதாரமாய் அமைந்த நூல்களைக் குறிப்பிட்டு இறைகாவல் தேடுகிறார்கள் அந்நூல்கள் கோடிட்டு மேல் காட்டப்பட்டுள்ளன.

ஸலாஹுத்தீன்

பிறப்பு ஹிஜ்ரி 1051 ஆம் ஆண்டு, இறப்பு: ஹிஜ்ரி 1098 ஆம் ஆண்டு களக்காடு ஏர்வாடியில் அடக்கவிடம் அமைந்துள்ளது. அப்பா அவர்கள் தனது இளைய சகோதரர் பற்றி பின்வருமாறு பாராட்டுகின்றனர்:

உடன் பிறந்தோர் எங்கள் ஐவருள்
உயரிய ஐந்தாம் முத்து ஸலாஹுத்தின்
திடமாய் அவரே எங்களில் இளையர் வயதால்
திறன்மிகு அறிவிலோ அவரே பெரியர்

சகோதரர் சதக்கத்துல்லாஹ் அவர்களிடம் கல்வி கற்றார்கள். இவர்கள் அரபிக் கல்வியில் மிகத் திறமை வாய்ந்தவர்கள். “உம்தத்துல் ஹுஜ்ஜாஜ்” என்ற அரபி நூல், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ‘தர்ரபல் ஆலம்’ என்ற அரபி மவ்லிது, இன்னும் அவர்கள் இயற்றியுள்ள அரபி, தமிழ்க்கவிதைக் கோவைகள் அநேகம். மேலும் 205 தமிழ்க்கவிதைகளை அரபியில் கவிதை வடிவில் மொழிபெயர்த்து அரபியை வளப்படுத்தியுள்ளார்கள். அத்தமிழ்க் கவிதைகளிலிருந்து சில வரிகள் இதோ:

"செறிவுறு கனிகள் ஈர்க்க செழுங்கிளை வளைதல் ஒத்தே
அறிவெனும் சுமையாற் சான்றோர் அடைகுவர் பணிவின் மாட்சி"
"கற்பிலோ டொப்பர் கயவர் கருஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பரும் போல்வாரே – விற்பிடித்து"

தலைப்பாத்திஹா:

தலைப்பாத்திஹா என்பது மகான் மாப்பிள்ளை ஆலிம் அவர்கள் என்று வழங்கப்பட்ட செய்து முஹம்மது ஆலிம் அவர்களால் பாடப்பட்ட ஒரு கவிதைத் தொகுப்பாகும். நபி (ஸல்) அவர்களின் மகளார் பாத்திமா (ரழி) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்ட இது ஒரு பிரார்த்தனை நூலாகவே அமைந்துள்ளது. பாடல்களும் அவற்றுக்கான உரையும் அரபுத் தமிழிலேயே அமைந்துள்ளன.

தலைப்பாத்திஹா என்ற நூலின் முன்பகுதியிலும், பின்பகுதியிலும் அதே ஆசிரியரால் பாடப்பட்ட கஸீதாக்கள் சில காணப்படுகின்றன. முந்திய கஸீதா இவ்வாறு ஆரம்பிக்கின்றது.

பீ புத்தி தலைப்பாத்திஹல் முனழ்ழம்
பிஸ்மி அல்ஹம்து ஸலாத்தைச் சொல்வோம்
பாவையர் திலகமான பைங்கிளி
பாத்திமத்தைப் புகழ்ந்தேன் துதிப்போம்
யாக்கூது மர்ஜானைப் பழித்திடும்
யாஸீனின் முத்தினையாம் புகழ்வோம்
காடு மலை கடல் கானகங்களில்
தேடும் பொருளமைப் போலே காணோம்
ஆலா அபீக்கி தவாமன் ஸல்லா
அல்லாஹு காலிகுனா வஸல்லம்

இப்பகுதியில் 23 ஈரடிக் கன்னிகள் காணப்படுகின்றன. அடுத்த பகுதி 21 கன்னிகளைக் கொண்டுள்ளது. அது பின்வருமாறு ஆரம்பிக்கின்றது.

அல்லாஹ்வி னாமம் கொண்டும்அவன்தன் புகழ்ச்சி கொண்டும்
சொல்லும் ஸலாத்து ஸலாம் சொல்லித் தொடங்குகிறேன். 1

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
ஆலிமா ஆமினா பேகம் கைரிய்யா P: 358-370

மலையுச்சி தீபமொவ்வா மஹ்மூத் மகள் புகழால்
தலைப் பாத்திஹா ஓத சௌக்காய் தொடங்குகிறேன். 2
தேடாத்திரவியமே தேனின்ப கற்பகமே
கோடான கோடி தவம் கொண்டோ ருமதடியில் 7
சூரியனும் சந்திரனும் சொல்லும் அப்லாக்கனைத்தும்
வாரியெனம் பஹ்ரதுவும் வாழ்த்துமெங்கள் பாத்திமத்தே 9
சொர்க்கத்தின் பாலகரும் சோபனிக்கும் ஹூருகளும்
பர்கத்து மத்ஹு செய்யும் பைங்கனியே பாத்திமத்தே 11
ஷாம் ரூம் இராக்கு யமன் ஸாரே ஜஹான் அனைத்தும்
தூம் நின் றிலங்கு மெங்கள் தாபரமே பாத்திமத்தே 14
ஸைலான் சரன்திபில் சகலரும் நும்புகழை
மயலாக ஓதுவதை மனங்குளிரும் பாத்திமத்தே 15
காயல்பதி பிறந்தோர் காமில் அஹ்மது ஆலிம்
சேயாம் முஹம்மதென்போர் செய்கின்ற இந்த துஆ 17

தலைப்பாத்திஹாவின் கவிதைகள் அரபியிலும் , கவிதைக்கான உரை விரிவாக அரபுத்தமிழும் காணப்படுகின்றன.

முதற்பாடல்:-

லகல்ஹம்து மில்அல் கவ்னி ரப்பில் பரிய்யதீ பஸுப்ஹான
கல்லாஹும்ம யாரப்பி இஜ்ஜத்தி

என்றவாறு உள்ளது. இதற்கான உரை கீழ்வருமாறு கொடுக்கப்படுகிறது.

“சொல்வதற்கரிதான சிறப்புடைய நாயனே, உன்னை நாங்கள் தூய்தாக்கி தஸ்பீஹ் செய்கிறோம். பற்பல விதமான படைப்புகள் எறும்பு கடையானை முதல் எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவ ஜந்துகளையும் அமைத்து அவைகளுக்கு இரணமும் பானமுமூட்டி அன்னை தங்கையினும் அதிக கிருபையால் ஆளும் ஆண்டவா றஹ்மானே!”

இரண்டாவது அரபுக் கவிதைக்கான உரை:-

எழுவான், பூமி, அர்சு, குர்சு, லவ்ஹு, கலம், சொர்க்கம், நரகம் அகண்ட வெளி அனைத்தும் நிரம்பிய புகழ்ச்சியின் வகையைனைத்தும் உனக்கே உரியது.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
ஆலிமா ஆமினா பேகம் கைரிய்யா P: 358-370

ஆகையால் அவைகளில் நாங்களும் ஒரு வகையாய் நின்று உன்னை நாவினாலும் இதயத்தாலும் செயலாலும் புகழ்கிறோம்.

லீ ஹழ்ரதிகல் உல்யா ... என்று தொடங்கும் நான்காவது கவிதைக்கான உரை:-

அபேட்சையோடும், ஆசையோடும், தாழ்மையோடும், பயங்கரத்தோடும் உன்னுடைய தூய்மை பூத்து மேலான சமூகத்தளவில் எங்களுடைய கைகளை ஏந்தி துஆ இரக்கினோம். ஆகையால், இந்தக் கைகளை சீர்கேடென்னும் துக்கம் பிடித்த நாய் தட்டிவிடாமல் தேடிய தேட்டத்தையும் நாடிய நாட்டத்தையும் நிறைவேற்றி இரட்சித்து காப்பாற்றியருள் சங்கையாளனே.

இவ்வாறு பெயர் குறிப்பிட்ட சுமார் 75 நபர்கள், பெயர் குறிப்பிடாத நபிமார்கள், ஸஹாபாக்கள், தாபிஈன்கள், இமாம்கள், பெரியார்கள் முதலானோர் வஸீலாக நிறுத்தப்பட்டு பிரார்த்திக்கப்படுகின்றது.

இதைத் தொடர்ந்து தலைப்பாத்திஹா இடம் பெறுகிறது. அதில் ஈரடி கொண்ட 25 கன்னிகள் உள்ளன. சில வருமாறு.

மாதர் நாயகி மாகதிஜா பெருமானே – எங்கள்
மாமதியே நிதியே மஹ்முதருள் தேனே – 2
அங்கம் குளிர் தரும் ஆயிழையே மடமானே – எங்கள்
சிங்கப் புலி அலி செவ்வியரே செழும் தேனே – 5
ஹல் அதா சூரத்தில் கல்லாகுமே புகழ்நதானே – அது
சொல்லத்தகும் உமக்கே சொன்னேன் ஹலிபன் நானே – 11
மாணிக்கமே பச்சை மரகதமே மயின் அனமே – எங்கள்
காணிக்கையால் வரும் காரணத்தின் பொருள் முனமே – 17

தக்க சுருத் (ஸலாத்துல் அர்கான் மாலை)

கலிமா விளக்கமும் விரிவான உரையும் கொண்ட ‘தக்க கருத்’ எனும் ஸலாத்துல் அர்கான் மாலை, ஹாபிஸ் பீ. ஏ. சாஹுல் ஹமீத் லெப்பை என்பவரால் சீர்திருத்தி விரிவுபடுத்தி மஜீதிய்யா பிரஸில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள ஓர் அரபுத்தமிழ் கவிதை நூலாகும். இதன் ஆசிரியர் காயற்பட்டினம் சாம் சிஹாபுத்தீன் நைனார் லெப்பை ஆலிம் என்பவர். இவரால் வேறு பல நூல்களும் ஆக்கப்பட்டுள்ளன.

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
ஆலிமா ஆமினா பேகம் கைரிய்யா P: 358-370

காப்பு : தக்க கருத்தின் ஸலாத்துல் அர்கானை
மிக்க தமிழ் நூலால் விளக்கவே ஹக்காகவே
யோதும் புர்கானுரையை யோத வெளியேன் மனத்தி
னீதி யுறவே யருள்வாய் நீ

சிறப்பு பாயிரம் :-

ஆலம் தனையெலாமத் படைத்தாள்கிற
அல்லாஹ் தனக்கெலா புகழ்ச்சியுமாம்
ஆல நபிக்கும் அவர் கிளைக்கும்
அவர்தம் தோழமா ரனைவருக்கும்
ஆல நபி உம்மத் தானவருக்கும்
அல்லாஹ் கிருபையை யுண்டாகவுமே
சால நபி தம்மை மிக போற்றிப்பின்
ஸலாத்துல் அர்கானை சாற்றுவனே
அல்லாஹ் ஸுப்ஹான ஹுத்தஆலா
அருளின்படி அன்பாய் தொழும் தொழுகை
எல்லா அமலிலும் ஏற்றமுமாய்
இஸ்லாம் தனக்காணி வேருமாகும்
சொல்லும் தொழுகைதான் வுழுவன்றியே
துருஸ்தாகா ரென்றபடியா முன் தொடக்கின்
வல்ல தொழுகைக்கு முன் தொடக்கின்
வரலாறுரைத் திட்ட வகைகேளீர்

என்று ஆரம்பித்து, முழுக்கின் வரலாறு, பர்ளுகள், சர்த்துக்கள், ஸுன்னத்துகள், முழுக்காளர் செய்யலாகாத கருமங்கள், வுழுவின் ஷர்த்து, பர்ளு, ஸுன்னத், முப்திலாத், வுழுவின்றி செய்யக்கூடாதவை, தொழுகையின் ஷர்த்து, பர்ளு நிய்யத்தின் ஷர்த்துகள், பாத்திஹா ஷர்த்து, றுகூஉ, ஸுஜூது, தரிப்பு, இடையிருப்பு, கஜூதின் பிற்பட்ட அத்தஹிய்யாத், ஸலாவத், ஸலாம், அப்ஆளு அலங்கார கன்னத்துக்கள், மக்றூஹ், முப்திலாத் ஆகிய விடயங்கள் கவிதை வடிவில் தரப்பட்டுள்ளன. உதாரணமாக வுழுவின் பர்ளுகள் பற்றிய கவிதையைப் பார்ப்போம்.

நிய்யத்தும் அவ்வல் தக்பீரும் நிற்கும் நிலையும் பின் பாத்திஹாவும்

மெய்யும் ருகூஉ உடனதன் தரிப்பும் சேர்ந்த அடியிருப்பதன் தரப்பும்

தொய்யும் பின் கஜூதிதன் தரிப்பும் சொல்லும் பர்ளிது பதினாலாமே

மற்ற பர்ளைந்தும் ஒடுக்கத்தினில் வரும் அத்தஹிய்யாத் தினிலாகுமே

வுற்ற விருப்பம் அத்தஹ்யாத்தும் ஓதும் ஸலாவத்தும் ஒரு ஸலாமும்

பற்றி பர்ளெலா, மடவடவாய் பாங்காய் முடித்திட லாகும் பின்னர்

முற்றும் பர்ளு பத்தொன்பதிலும் மொழியும் ஆர்த் தெடுத்தோதுமே

வுழுவின்றிச் செய்யக் கூடாத காரியங்கள் பின்வருமாறு கூறப்படுகின்றன.

செரியும் வுழுவிலார் மூன்று செயல்

செய்ய ஹரா மாகுமென செப்பினான்

மறையாம் புர்கானை தொடவே தொழ

மக்கா கஃபாவை தவாபு வர

நெறியாம் முழுக்குடன் வுழுவடையும்

நிகழ்த்தி முடிந்த பின் தொழுகைக்கு முன்

அறியவிதி பத்து ஷர்த்துண்டென

அருளினா ரிமாம் அதனைக் கேளீர்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr IM. Thalib P: 371-386

இலங்கையில் "அறபு தமிழ்" ஊடாக அறபு மொழி கற்பித்தலில் ஓ.எம். பாஸி ஆலிமின் வகிபங்கு

Mr. IM.Thalib,
Senior Lecturer in Arabic,
Department of Arabic,
Faculty of Arts and Culture,
Eastern University, Sri Lanka.
thalibm@esn.ac.lk
whatsapp: +94773818616

முன்னுரை:

இலங்கை வாழ் முஸ்லிம்கள் இயல்பாகவே தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஒரு இனமாகும். தமிழ் மொழியானது பிரதேச ரீதியாக பேசப்படும் பாணியில் வேறுபட்டாலும், முழு இலங்கைத் தீவிலும் முஸ்லிம்களால் பேசப்படுகின்றது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் மத்தியில் பரவி வாழும் முஸ்லிம்கள் கூட தமது வீடுகளில் சிங்கள மொழியுடன் தமிழையும் கலந்தே பேசுகின்றமை குறிப்பிடத்தக்கது. இது அவர்களது தாய்மொழியான தமிழ் மொழி மீதான அதீத பற்றையே எடுத்துக்காட்டுகிறது. "ஆங்கிலேயர் காலத்து இலங்கை முஸ்லிம்கள், ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளுடன் தொடர்பு கொண்டிருந்த போதும், தமிழைத் தாய்மொழியாக மட்டுமன்றி, இலக்கிய மொழியாகவும் கொண்டிருந்தனர். வட மாகாணத்திலும். கிழக்கு மாகாணத்திலும் தமிழ் மக்களுடன் கலந்து வாழ்ந்த முஸ்லிம்கள் மட்டுமன்றி ஏனைய மாகாணங்களில் சிங்களவர்களுக்கு மத்தியில் சிதறி வாழ்ந்த முஸ்லிம்களும் தமிழையே தாய்மொழியாக கொண்டிருந்தனர். அயலில் வாழ்ந்த சிங்களவர்களுடன் கலந்துறவாடுவதற்காக பேச்சு மொழியாக அவர்கள் சிங்கள மொழியை பயன்படுத்திய போதும், தமிழ் பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம்களைப் போல அவர்களும் தம் இலக்கிய படைப்புக்களைத் தமிழ் மொழியிலேயே படைத்தனர்."[1]

இலங்கை முஸ்லிம்களுக்கும் தென்னிந்திய தமிழக முஸ்லிம்களுக்கும் இடையே மொழி, கலாச்சார, வர்த்தக தொடர்புகள் ஏற்பட்டமைக்கு இவ்விரு சமூகமும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தமையே உண்மையான

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr IM. Thalib P: 371-386

Since 1951

காரணமாகும். அதனால் இவ்விரு சமூகங்களும் ஒரே மாதிரியான பிரச்சினைகளைச் சந்திக்க நேரிட்டது. "தென்னிந்திய முஸ்லிம்களில் பெரும்பாலோர் தமிழ்மொழி பேசுவர். அதே போல் இலங்கை முஸ்லிம்களில் பெரும்பான்மையினரும் தமிழையே தாய்மொழியாகக் கொண்டவர்கள். இவ்விதமாகச் சமூக கலாசார மொழித் துறைகளிலே ஒற்றுமைப் பட்டுள்ள நமக்கு, நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளிற் பலவும் பொதுவானவையாகவே அமைந்துள்ளன. இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காண்பதில் இருவரும் ஒருவரிடமிருந்து மற்றவர் பல கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளக் கூடியவர்களாயிருக்கின்றோம்."[2]

இவ்வாறு தமிழைத் தாய்மொழியாக் கொண்டிருந்தாலும் பல்வேறு காரணிகளால் முஸ்லிம்கள் அறபு மொழியில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. "முஸ்லிம்களின் தாய்மொழி தமிழ் மொழியாக இருக்கும் அதேவேளை தவிர்க்க முடியாத நிலையில் சமயம் சார்ந்த அறபு மொழித் தொடர்பு வலுவடைந்துள்ள நிலையில் அது முஸ்லிம்களின் நாளாந்த வாழ்வில் தாக்கம் செலுத்துகின்றது."[3] இந்த தாக்கம் இலங்கை முஸ்லிம்கள் அறபு மொழியைக் கற்கவும் அதனை தமது அன்றாட வாழ்வில் பயன்படுத்தவும் இட்டுச் சென்றது. அது மட்டுமன்றி முஸ்லிம்களினால் ஆக்கப்படும் இலக்கிய வடிவங்களிலும் செல்வாக்குச் செலுத்தியது. இச்செல்வாக்கினை அதிகளவில் உரையாடலைக் கொண்ட சிறுகதைகளில் காணலாம். ஆயினும் முஸ்லிம்கள் தமது தாய்மொழி தமிழ் என்பதிலிருந்து விலகிச் செல்லவில்லை. "சமய மொழியாகிய அறபு மொழியையும், பொருளறியாது வாசிக்க மட்டும் முஸ்லிம்களுள் பலர் அறிந்திருந்தனர். சமய அறிஞர்களாகக் கணிக்கப்பட்ட உலமாக்கள்[4] மட்டுமே அறபு மொழியை அறிந்திருந்தனர். அவர்களுள்ளும் விரல்விட்டு எண்ணத்தக்க ஒருவர் ஒன்றிரண்டு அறபு நூல்களை எழுதிய போதும் தமது முக்கிய ஆக்கங்களைத் தமிழிலேயே தந்துள்ளனர். இலங்கை முஸ்லிம்களில் சிலர் தமிழ், ஆங்கிலம், சிங்களம், அறபு ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்த போதும், தாய்மொழியாகிய தமிழில் இலக்கியங்களைப் படைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது."[5]

இந்த தாக்கம் புதிய மொழிக்கலப்பு ஒன்றை உருவாக்கியது. அதுதான் அறபுத் தமிழ் இலக்கியமாகும்.

Since 1951

“பிள்ளை பிறந்து வளர்ந்தவுடன் எமது முன்னோர் அரச பாடசாலைகளில் சேர்க்க விரும்பவில்லை. அதற்கு வசதியும் இருக்கவில்லை. இதனால் மதரஸாக்களில் சேர்த்தனர். அக்காலத்தில் அறபுத் தமிழ்தான் மதராஸாக்களில் போதிக்கப்பட்டது. காயல்பட்டணம் போன்ற தென்னிந்திய பகுதிகளில் இருந்து இம்மொழி எம்மை வந்தது. அறபுத்தமிழில் உள்ள புத்தகங்களே எழுதப்பட்டன. இயல்பாகவே நாம் தமிழ் பேசும் மக்களுடன் வாழ்ந்தாலும் அறபு மொழித்தாக்கம் மூன்று நான்கு வயதிலேயே வந்து விடுகின்றது. எனவே பெரும்பாலான சொற்களெல்லாம் அறபு மொழிதான். அது பேச்சு வழக்கில் வந்துள்ளது. இப்பாவனை மூலம் இச்சொற்கள் என்ன கருத்தைத் தருகின்றன என்பது இன்று சாதாரண தமிழ் மக்களுக்குக் கூட தெரியும்.”[6]

இந்த அறபுத் தமிழை கலாநிதி கே.எம்.ஏ. அஹ்மத் சுபைர் பின்வருமாறு வரைவிலக்கணம் செய்கிறார்: “அறபு மொழியின் பரந்த சொல்லியல் மற்றும் ஒலியியல் தாக்கங்களினால் அவ்வெழுத்துக்களைப் பயன்படுத்தி விரிவாக எழுதப்பட்ட அதன் செல்வாக்குப் பெற்ற தமிழ் மொழியிலுள்ள பிரதேச மொழி வழக்கு ஆகும்”[7]. இது அர்வி என்றும் அழைக்கப்பட்டது. “அறபு மொழியில் இருந்து அறபி எழுத்தைப் போலவே உள்ள ஒருவிதப் புதிய எழுத்தை தமிழ் நாட்டு முஸ்லிம்கள் அமைத்துக் கொண்டார்கள். அந்த எழுத்துக்கு அறபுத் தமிழ் என்பது பெயர். அறபுத் தமிழுக்கு “அர்வி” என்று வேறு பெயருமுண்டு. அறபுத் தமிழ் எழுத்து அறபி எழுத்துப் போலவே இருக்கும்.”[8]

இவ்வாறு தமிழ் பேசும் முஸ்லிம்களிடத்தில் செல்வாக்குப் பெற்ற அறபு மொழி அவர்களின் பால்யப் பருவத்திலிருந்தே அவர்களால் கற்கப்படுகின்றது. இது குர்ஆன் மதரஸா எனப்படும் ஆரம்பப் பள்ளிகளில் தொடங்கி பல்கலைக்கழகம் வரை தொடர்கின்றது. இன்று இலங்கையில் அறபு மொழிக்கற்பித்தலில் குர்ஆன் மதரஸாக்கள், அறபுக் கல்லூரிகள், அரசாங்கப் பாடசாலைகள், தேசிய பல்கலைக்கழகங்கள் என்பன ஈடுபடுகின்றன. அத்துடன் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கூட, அறபு மொழிப் போதனைப் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆயினும், அத்தகு அறபு மொழிப் போதனையில் தமிழ்மொழி பாரிய செல்வாக்கினைக் கொண்டுள்ளது. குறிப்பாக ஆரம்பக் கல்விப் பருவத்தைக் கொண்ட மாணவர்கள் அறபு மொழியில் அமைந்துள்ள அல்-குர்ஆனை ஓதக் கற்றுக்

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr IM. Thalib P: 371-386

கொள்கையில் அவர்களுக்கு தமிழ் மொழியின் செல்வாக்கு பாரியளவில் பிரயோகிக்கப்படுகின்றது.

இலங்கையில் அறபு மொழிசார் முஸ்லிம் எழுத்தாளர்களில் கிழக்கிலங்கை சம்மாந்துறையைச் சேர்ந்த ஓ.எம். பாஸி ஆலிம் அவர்கள் மிக முக்கியமானவர். இவரால் எழுதப்பட்டு சுமார் 56 வருடங்களாக குர்ஆன் மதரஸாக்களில் பாடநூலாக பயன்படுத்தப்பட்டுவரும் "தத்ரீஸுல் குர்ஆன்" என்ற நூல் இவ்வாய்வுக்காக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

குறித்த நூலில் உள்ள பாடப்பிரவேசங்கள் மற்றும் அலகுகள் அறிமுகம் செய்யப்பட்டு அதன் கற்பித்தல் முறைமை ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் எந்தளவு தூரம் தமிழ் மொழிச் செல்வாக்கு அறபு மொழிக் கற்பித்தலில் காலூன்றியுள்ளது என்பதனை இவ்வாய்வு தெளிவுபடுத்துகிறது.

ஆய்வு நோக்கம்

இவ்வாய்வு பின்வரும் நோக்கங்களைக் கொண்டுள்ளது.

- இலங்கையில் அறபு மொழிக் கற்பித்தலுக்கான தேவையினை கண்டறிதலும் அதன் செல்வாக்கினை அறிமுகப்படுத்தலும்
- அறபு மொழிக் கற்பித்தலில் தாய் மொழியின் வகிபங்கினை ஆராய்தல்
- ஓ.எம். பாஸி ஆலிம் அவர்களின் அறபு மொழிக் கற்பித்தலுக்கான வகிபங்கினை வெளிக்கொணர்ந்து கற்பித்தல் முறைமையில் தமிழின் செல்வாக்கினை தத்ரீஸுல் குர்ஆன் பாடநூலுக்கூடாக வெளிப்படுத்தல்.

ஆய்வு முறையியல்

மேலே குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக விவரண மற்றும் பகுப்பாய்வியல் முறைகள் பயன்படுத்தப்பட்டன. முதலாம் நிலைத்தரவான நேர்காணல் முறை பயன்படுத்தப்பட்டு தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இவ்வாய்வுக்காக பல்வேறு இலக்கிய கர்த்தாக்களிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டன. மூத்த எழுத்தாளர் "மக்கத்துச் சால்வை" புகழ் எஸ்.எல்.எம். ஹனீபா, பிரதேச கலாசார உத்தியோகத்தர் எம்.எச்.எம். நியாஸ், அறபுமொழித்துறை பட்டதாரி ஆசிரியர் எச்.எல்.எம். முகைதீன், கிழக்குப் பல்கலைக்கழக அறபு மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பீ.எம். ஹம்தூன் ஆகியோர்

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr IM. Thalib P: 371-386

நேர்காணலுக்குட்பட்டனர். இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இணையம் போன்றவற்றின் மூலம் தரவுகள் பெறப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

கருத்துரையாடல்களும், பெறுபேறுகளும்

01) அறபு மொழியும் இலங்கை முஸ்லிம்களும்

இலங்கை முஸ்லிம்கள் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். ஆயினும் சமய ரீதியாக அனைத்து வணக்க வழிபாடுகளும் அறபு மொழியை அடிப்படையாகக் கொண்டவை. உதாரணமாக தினமும் செய்யப்படும் ஐந்து நேரத் தொழுகையைக் குறிப்பிடலாம். அதில் ஓதப்படும் அனைத்து அம்சங்களும் அறபு மொழியில் அமைந்தவை. எனவே முஸ்லிம்கள் அறபு மொழியை விட்டு விலகிச் செல்ல முடியாதவாறு அதன் செல்வாக்குக் காணப்படுகின்றது. இதனால் முஸ்லிம்கள் சிறுபராயத்திலிருந்தே அறபு மொழி கற்க ஆரம்பிப்பர். இது அவர்களது வாழ்வுடன் கலந்த ஒன்றாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. “இலங்கையில் அறபு மொழியின் பரவல் வலிந்து மேற்கொள்ளப்பட்ட ஒரு விடயமல்ல. அது இலங்கையில் இஸ்லாத்தின் வருகையுடன் வந்த ஒன்று. அது இலங்கை முஸ்லிம்களின் மத, கலாசார, விழுமியங்களுடன் தொடர்புபட்ட ஒன்றாக இருப்பதுடன் இறைவேதம் அல்-குர்ஆன் அறபு மொழியில் அருளப்பட்டுள்ளதாலும் அதனை புரிந்து கொள்வதற்காக அதிகமாக இதனை பயன்படுத்துகின்றனர்”.[9] இந்தப்பின்னணியில் முஸ்லிம்கள் அறபு மொழியைக் கற்றுக் கொள்வதில் அதிக கவனம் செலுத்தினர்.

02) அறபு மொழி முஸ்லிம்களிடையே செல்வாக்குப் பெற இன்றியமையாத காரணிகள்

1. **சமயம் சார்ந்த காரணிகள்**

முஸ்லிம்கள் தமது சமய கிரியைகளை நிறைவேற்ற அறபு மொழி சமயரீதியான செல்வாக்கைக் கொண்டுள்ளது. இஸ்லாத்தின் மூலாதாரங்கள் அல்-குர்ஆனும் நபிகள் நாயகத்தின் பொன்மொழிகள் கொண்ட ஹதீஸ் இலக்கியமும் அறபு மொழியில் அமையப் பெற்றுள்ளமை அதன் பால் முஸ்லிம்களின் தேவையை மிகைப்படுத்தியுள்ளது. இதனால் அறபு மொழியை ஓரளவேனும் வாசிப்பதற்கேனும் கற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர். “வணக்கங்கள், விவாகம்,

விவாகரத்து, சொத்துப்பங்கீடு, சமூக வாழ்வு முதலான அம்சங்களில் இஸ்லாமிய விதிமுறைகளைப் பின்பற்றி வாழ முஸ்லிம்களை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. ஆதலால், இஸ்லாமிய சட்டவிதிகளை நன்கு அறிந்தவர்கள் மிகச் சிலரேனும் ஒவ்வொரு ஊரிலும் இருப்பது அவசியமாகிறது. குர்ஆனின் மொழி அறபு என்பதனால் நன்மை கருதிப் பக்தி சிரத்தையுடன் அறபு மொழியைக் கற்க முஸ்லிம்கள் விரும்பினர்.”[10]

2. பொருளாதாரம் தொடர்பான காரணிகள்

இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரின் விளைவாக விவசாயத்தையும் வியாபாரத்தையும் மட்டுமே வாழ்வாதாரமாக நம்பியிருந்த முஸ்லிம்கள் மாற்றுவழி குறித்து சிந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால் மத்திய கிழக்கு அறபு நாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்ல ஆரம்பித்தனர். இது அவர்களிடையே அறபு மொழிப் பிரயோகம் ஏற்படவும் அது செல்வாக்குச் செலுத்தவும் மிக முக்கியமான காரணமாயிற்று. அது தவிர ஆரம்ப காலத்தில் அறேபியர் வணிகத்துக்காக இலங்கையுடன் கொண்டிருந்த தொடர்பும் இங்கு அறபுமொழி செல்வாக்குப் பெற ஏதுவாயிற்று. “பாரசீக வளைகுடாப் பிராந்தியத்திலிருந்து, இந்து சமுத்திரத்திலுள்ள இலங்கை மற்றும் ஏனைய நாடுகளுக்கு வந்த அறேபிய வணிகர்கள் தம்முடன் இஸ்லாம் சமயத்தையும் அறபு மொழியையும் கொண்டு வந்தனர். ஏனெனில், அங்கிருந்த முஸ்லிம்கள் இயல்பாகவே அறபு மொழியை ஓர் அறிவார்ந்த வெளிப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தியதுடன் சமய ரீதியாக இஸ்லாத்தையும் மொழியியல் ரீதியாக அறபு மொழியையும் அவர்கள் பிரதிநிதித்தவப்படுத்தினர்.”[11]

3. சமூகம் சார்ந்த காரணிகள்

“அறபு மொழிச் செல்வாக்கிற்கு சமூகச் சூழலே பெரிதும் காரணம்”.[12] முஸ்லிம் சமூகத்தில் அறபு மொழி கற்றவர்கள் அறிஞர்களாக (சமயப் பெரியார்களாக) மதிக்கப்படும் ஒரு நிலையுள்ளது. சமயக் கிரியைகளை இவர்களே தலைமை தாங்கி நடத்துவர். இதனால், அறபு மொழி மீதான கவர்ச்சி மக்களிடையே வலுவடைந்துள்ளது. இது அதனைக் கற்பதின் பால் இட்டுச் செல்லும் ஒன்றாகும்.

அத்தடன் "முஸ்லிம் உலகுடனான கலாசாரத் தொடர்பும் அறபுமொழி கற்கும் ஆர்வத்தை அவர்களிடையே உந்தியது"[13]

4. மொழியியல் ரீதியான காரணிகள்

"அறபு மொழியைப் பொறுத்தவரைக்கும் சில சொற்கள் அதற்கு பொருத்தமான பொருள் தரக்கூடிய சொற்கள் தாய் மொழியில் இல்லாததன் காரணமாக மூல மொழியான அறபு மொழியிலேயே பாவிக்கப்படுகின்றது. உதாரணமாக ருகூவு, ஸஜ்தா, தக்பீர் போன்றவற்றைக் குறிப்பிடலாம்."[14] இச்சொற்கள் முஸ்லிம்களின் அன்றாட வாழ்வுடன் தொடர்புடையவை என்பது குறிப்பிடத்தக்கது.

03) கற்பித்தலில் தாய்மொழிச் செல்வாக்கு

கற்றல் என்பது அது உளவியல்சார் செயன்முறை. ஒரு பிள்ளையின் வளர்ச்சியில் உளவியல் அதிக பங்களிப்பைக் கொண்டுள்ளது. பிள்ளை கற்கவும் அதனை பிரயோகிக்கவும் தான் வாழும் சமூகச் சூழலுடன் இணைந்தே கற்க வேண்டும். இதற்கு அதன் தாய்மொழியே முக்கிய பங்காற்றுகிறது. தாய்மொழியில் கற்கும் பிள்ளைகளே அதிகம் கற்றல் எண்ணக்கருக்களை இலகுவாக விளங்கிக் கொள்ள முயலுவர். எனவே, கற்றலில் தாய்மொழிக்கே அதிக பங்குண்டு என்பது திண்ணம்.

இன்றைய சமூக மாற்றம் ஏற்படுத்திய மிக பாதகமான விளைவுகளில் ஒன்று தாய்மொழி மீதான பற்றின்மை எனலாம். அதிகரித்த தொழில்நுட்ப வளர்ச்சி தாய்மொழியின் செல்வாக்கினை குன்றச் செய்து அந்நிய மொழி மீதான மோகத்தை விதைத்துச் செல்வதைக் காணமுடிகிறது. உலகமயமாதலின் நேரடித் தாக்கம் தமிழையும் தமிழ் பேசும் மக்களையும் பாதித்ததன் விளைவு ஆங்கில மொழிக் கவர்ச்சியும் தாய் மொழியில் தேர்ச்சியுமற்ற சமூகம் உருவாகி வருகின்றமை கவனிக்கத்தக்கது.

ஆயினும், தாய்மொழி வழிக் கற்றலே மிகப் பொருத்தமானது. "தாய்மொழியில் கல்வி பற்றி ஐ.நா. சபையின் யுனெஸ்கொ அமைப்பு பல்லாண்டு காலமாக ஆராய்ச்சி செய்து வருகின்றது. அந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் சில தகவல்கள் மற்றும் வழிமுறைகளை வெளிப்படுத்தியுள்ளது. முதலாவதாக தாய்மொழியில் கல்வி பயிலும்

குழந்தைகளே மிகவும் ஆழமாக கல்வி கற்கின்றனர். இது அனைத்து வயதினருக்கும் அளிக்கப்படும் கல்விக்கும் பொருந்தும்.

- கல்வியின் தரத்தை உயர்த்த தாய்மொழியில் கல்வியை ஆதரிப்பது மற்றும் மேம்படுத்துவது
- பள்ளிகளில் அனைத்து நிலைகளிலும் இரு மொழிகளில் அல்லது பன்மொழிகளில் கல்வியை கற்றுத் தர ஊக்கப்படுத்துவது
- கலாச்சாரம் பரிமாற்ற கல்வியில் மொழியை முன்நிறுத்துவது"[15]

இதன்படி அறிய முடிவது, கற்றலில் தாய்மொழியின் செல்வாக்கு இன்றிமையாததாகும். இதனால் தான் நமது முன்னோர் கற்றல் அனுபவம் தாய்மொழிக்கூடாக அல்லது தாய்மொழியுடன் இணைந்ததாக வர வேண்டும் என்பதில் கவனம் கொண்டிருந்தனர்.

04) ஓ.எம். பாஸி ஆலிம்

இலங்கை முஸ்லிம்களிடையே அறபு மொழி வளர்ச்சிக்கு பாரியளவில் பங்காற்றிய அறிஞர்களுள் இவர் முதன்மையானவர். இவருடைய அறபு மொழி கற்பித்தல் நூலைப் படிக்காத எவருமே இருக்க முடியாது என்று கூறுமளவு பிரபல்யமான ஒருவர். சிறுவயது முதலே இவரது பெயர் அனைவர் மனதிலும் பதிவாகிவிடும் அளவு பெயர் பெற்றவர். "தென் இந்தியா கோபால பட்டினத்தில் பிறந்த உமர் ஆலிம் பாஸி ஆலிம் அவர்கள் தனது தந்தையுடன் 10வது வயதில் இலங்கை குருணாகல் பகுதியில் தங்கி இருந்த போது காலியில் இரண்டு வருடங்கள் மார்க்க கல்வியைக் கற்ற பின்பு இந்தியா சென்று வேலூர் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் அறபுக் கல்லூரியில் கற்று ஆலிமாகி மீண்டும் இலங்கைக்கு வந்தார். களுத்துறைப் பகுதியில் இப்றாஹிம் ஹாஜியாரின் நட்பு எமது பாஸி ஆலிம் அவர்களுக்குக் கிடைத்தது. ஈ.எல். ஹாஜியாரின் ஆலோசனைப் படி இலங்கை பூராகவும் உள்ள அறபு மதரஸாக்களை மேற்பார்வை செய்து ஆலோசனை வழங்கும் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். எல்லா மதரஸாக்களும் பொதுவான "தத்ரீஸுல் குர்ஆன்" எனும் பாடநூலை 1963ல் பிரபல்யம் பெற்ற பிரபல தொழிலதிபர் ஈ.எல். இப்றாஹிம் ஹாஜியாரினால் அச்சிட்டு வெளியிட்டார்."[16]

அறபு மொழி கற்பித்தலில் அதீத ஆர்வம் கொண்டதன் காரணமாக பல்வேறு பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் அச்சுத் துறை இலங்கையில் விருத்தியடையாத அந்நாட்களில் பல அறபு மொழிசார் கற்பித்தல் நூல்களை வெளியிட்டார். “1960 ஆம் ஆண்டு இவருக்கு மௌலவி ஆசிரிய நியமனம் கிடைத்தது. இதன் மூலம் இலங்கை முஸ்லிம் பாடசாலைகளுக்குத் தேவையான “தஃலீமுல் அறபிய்யா” எனும் அறபு பாடநூல் 8 பாகங்களை வெளியிட்டார். மேலும், அஹ்காமுல் இஸ்லாம், தொழுகை அடவு, தொழுகை ஷாபி, அண்ணலாரின் அழகிய துஆக்கள் போன்ற பல நூல்களை எழுதி வெளியிட்டார். இவரிடன் ஆலோசனைகள் பெறவும் துஆப் பிரார்த்தனை[17] பெறவும் அரசியல்வாதிகள், ஊர்ப்பிரமுகர்கள் பலர் அடிக்கடி வந்து செல்வார்கள். இறை விசுவாசமும் இபாதத்துடனும்[18] இவர் அமைதியாக தனது வாழ்க்கையைக் கழித்தார். சம்மாந்துறை உலமா சபையினரும் தப்லீகுல் இஸ்லாம் அறபுக் கல்லூரியும் இணைந்து இவருக்கு “செய்குத் தத்ரீஸ்”[19] எனும் சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவித்தார்கள். தனது 90வது வயதில் 14.03.2013 ஆம் திகதி வெள்ளி இரவு இறையடி சேர்ந்தார்கள்.”[20]

05) தத்ரீஸுல் குர்ஆன்

ஓ.எம். பாஸி ஆலிம் அவர்களினால் எழுதப்பட்ட இந்நூல் 1963ல் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டது. இது அக்காலம் முதலே குர்ஆன் மதரஸா எனப்படும் திண்ணைப் பள்ளிகளில் போதிக்கப்பட்டு வந்துள்ளது. அப்போதிருந்த ஒரு பிரபல்யமான நிறுவனம் அதனை வெளியிட்டிருந்தது. ஆயினும், காலப்போக்கில் ஏற்பட்ட புத்தாக்கம் தொடர்பான சட்டமாற்றங்களினால், குறித்த நூல் நேரடியாக எம்.எப்.எம். சாலிஹ் அவர்களால் பதிப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்காக 52வது பதிப்பாகிய 2017ம் ஆண்டின் வெளியீடு உசாத்துணையாக எடுக்கப்பட்டுள்ளது.

இந்நூலின் சிறப்பம்சம், முறையான கற்பித்தல் நுட்பங்களைக் கொண்டமைந்ததாகும். அதாவது பாடநூல் என்ற வகையில் அது ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையில் இடைத்தொடர்பினை வலுவூட்டுகின்றது. இது பிள்ளைமையக் கல்வியின் பிரதான இலக்குகளில் உள்ளதாகும். “பாடநூல்கள் கற்றலில் அந்யோன்ய (அன்னியோன்ய) செயற்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன.

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr IM. Thalib P: 371-386

பாடநூல்கள் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலும், மாணவர்கள் - மாணவர்களுக்கும் இடையிலும் அந்யோன்ய (அன்னியோன்ய) செயற்பாடுகளுக்கு உறுதியான பங்களிப்பை வழங்குகின்றன. இதன் விளைவாக கற்றலைக் குழுக்களாக மேற்கொள்ள முடிகிறது."[21] இந்நூலைப் பயன்படுத்துகையில் தினமும் ஆசிரியர் மாணவர்களுடன் நேரடியாகக் கலந்துரையாடி அவர்களை கற்றல் செயற்பாட்டில் ஈடுபடச் செய்கின்றார். ஆசிரியரின் இடைத்தொடர்பு போலவே மாணவர்களும் இந்நூலைப் பயன்படுத்துகையில் ஏனைய மாணவர்களுடன் குழுக்கற்றலில் ஈடுபடுவதைக் காணலாம்.

ஆசிரியர் தனது தத்ரீஸுல் குர்ஆன் என்ற நூலில் பல இடங்களில் அறபுத் தமிழ் குறிப்புக்களை பயன்படுத்தியுள்ளார். சில எடுத்துக்காட்டுக்கள்:

எடுத்துக்காட்டு: 1



மூலம்: பாஸி ஆலிம் ஓ.எம்., 2017, பக்: 44

"இக்பாவென்றால் மறைக்குதல். சுகூனுடைய நூனுக்குப்பின் அல்லது தன்வீனுக்குப் பின் இக்பாவுடைய ஹர்புகளில் ஒன்று வந்தால், குன்னாவுடன் இக்பா செய்து ஓதவேண்டும். இக்பாவுடைய ஹர்புகள் 15."

எடுத்துக்காட்டு: 2



மூலம்: பாஸி ஆலிம் ஓ.எம்., 2017, பக்: 39

“இத்காம் என்றால் ஒரு சுகூன் செய்யப்பட்ட ஹர்பை, ஹரகது செய்யப்பட்ட ஹர்பில் நுழைக்கிறது சுகூனுள்ள ஹர்புக்கு பின் ஷத்துள்ள ஹர்பு சேந்திட்டால், அந்த சுகூனுள்ள ஹர்பை விட்டு விட்டு, அதற்கு முந்தின ஹர்பை அடுத்துள்ள ஹர்புடன் இத்ஙாம் செய்யவேண்டும்.”

இதேவேளை கற்பித்தலில் மிக முக்கிய அம்சம் இலகுவில் இருந்து கடினத்தை நோக்கிச் செல்வதாகும். இந்நூலில் ஆசிரியர் இந்நுட்பத்தைக் கையாண்டுள்ளார். ஆரம்பத்தில் அறபு எழுத்துக்களை தனித்தனியாக அறிமுகம் செய்து அதன் ஒலியன்களை விளக்குகின்றார். பின், அவ்வொலியன்கள் மூலம் தோற்றம் பெறும் உருபன்களை விளக்கிச் செல்வதைக் காணலாம். ஈற்றில் பல உருபன்கள் மூலம் பெறப்படும் வாக்கியங்களை விளக்குவது குறிப்பிடத்தக்கது. இது இவரது கற்பித்தலின் மிக முக்கி அம்சம். இங்கு கவனிக்கத்த மற்றொரு அம்சம் யாதெனில், ஒலியன்களை விளக்கும் போது அதற்கு ஒத்த தமிழ் மொழி ஒலியன்களை சேர்த்துள்ளமையாகும். பின்வரும் உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

அவர்	**இவர்**	**அவன்**	**இவன்**	**உரல்**	**விரல்**
மரம்	**ஜூரம்**	**நிறம்**	**உரம்**	**புரம்**	**திறம்** [22]

போன்ற சொற்களைப் பயன்படுத்துகின்றார். இங்கு, ஆசிரியர் விளக்க வருவது ஒலியன்களையும் அது மாற்றொலிகளில் பிரயோகமாகும் விதத்தினையுமாகும். ஆனால், அதற்கு குறித்த பாடப்பகுதியில் அறபுச் சொற்களைக் கொண்டு விளக்கும் அதேவேளை, தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளமை மாணவர் இலகுவாக ஒலியன்களை விளங்கிக்கொள்வதற்காகும். இதன் மூலம் அறபு மொழிக் கற்பித்தலில் தமிழின் பங்கு விளங்குகின்றது.

அத்துடன் சிலவேளை தமிழில் உள்ள வட்டாரச் சொற்களையும் பயன்படுத்தி விளக்கியுள்ளார்.

வயல்	**அயல்**	**மிசின்**	**பிசின்**	**சுவர்**	**கவர்** [23]

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr IM. Thalib P: 371-386

Since 1951

இங்கு மிசின் என்பது உளவு இயந்திரத்தையும் பிசின் என்பது மரத்திலிருந்து எடுக்கப்படும் ஒருவகை பசைத்தன்மை கொண்ட நீரையும் கவர் என்பதன் மூலம் கடித உறையும் கருதப்படுவது. இச்சொற்கள் கிழக்கிலங்கையில் முஸ்லிம்களால் பெரிதும் பயன்படுத்தப்படும் சொற்களாகும்.

இவ்வாறே, நேரடியாக அறபுச் சொற்களைக் குறிப்பிட்டு அதற்கு ஒத்த ஒலிகொண்ட தமிழ்ச் சொற்களை சிறிய திரிபுடன் கொண்டு வந்துள்ளார். உதாரணமாக,

தய்ரு வய்ரு தவ்ரு பவ்ரு லிமன் பமன் [24]

இங்கு இவர் குறித்த பாடப்பகுதியில் தவ்ரு, பவ்ரு என்ற அறபுச் சொற்களை விளக்கும் போது அதற்கு ஒத்த ஓசையுடைய தய்ரு, வய்ரு என்ற பதங்களைக் கொண்டுவருகின்றார். அடிப்படையில், தய்ரு என்பது தயிர் என்பதிலிருந்தும், வய்ரு என்பது வயிற்றுப் பகுதியைக் குறிக்க பயன்படும் வயிறு என்ற சொல்லிருந்தும் மருகியவையாகும்.

அதேபோல்,

குர்னல் கர்னல் இன்பம் துன்பம்[25]

இங்கும் குர்னல் என்பது, அரிசியின் இடிந்த சிறு துகள்களைக் குறிக்க பயன்படும் வார்த்தை. அதேபோல் இன்பம், துன்பம் என்பவையும் ஆசிரியரின் நோக்கத்தை எடுத்துக்காட்டுவதுடன் அறபு மொழியைக் கற்பிக்க அவர் தமிழைக் கையாளும் விதம் தெளிவாகப் புரிகின்றது.

ஓ.எம். பாஸி ஆலிம் அவர்கள் தனது தத்ரீஸுல் குர்ஆன் நூலின் மூலம் அறபு மொழியைக் கற்பிக்க விளையும் போது அது தொடர்பான விளக்கக் குறிப்புக்களை அடிக்குறிப்புக்களாக அறபுத் தமிழில் முன்வைத்துள்ளமை மிக முக்கிய அம்சமாகும். குறித்த நூலின் எல்லாப் பக்கங்களிலும் இந்த அடிக் குறிப்புக்களை காண முடியும். முதலாம் பக்கத்திலேயே “நுக்தா பாடம்”[26] என்று ஆரம்பிக்கிறார். நுக்தா என்பது புள்ளி என்று பொருள்படும். அதாவது அறபியில் சில எழுத்துக்களின் மேல் அல்லது கீழ் புள்ளியிட்டு அவை அடையாளப்படுத்தப்படும். இத்தகைய புள்ளிகளை விளக்கும்

பாடம் என்பதனால் அதற்கு இப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றொரு உதாரணம், நூலின் 20ம் பக்கத்தில் "மத்துடைய ஹர்புகளை விபரிக்கும் பாடம்"[27] என பெயரிடப்பட்டுள்ளது. அதாவது, அறபியில் நெடில் ஒலியன்கள் பற்றிய விளக்கம் இங்கு குறிப்பிடப்படுகிறது. "மத்து" என்றால் நெடில் என்று பொருள். ஹர்பு என்றால் எழுத்து என்று பொருள்படும்.

வேறுபல இடங்களில் நீண்ட விளக்கங்களையும் அறபுத் தமிழில் கையாண்டுள்ளதைக் காணலாம். "இத்காம் என்றால் ஒரு சுக்கூன் செய்யப்பட்ட ஹர்பை ஹரகத் செய்யப்பட்ட ஹர்பில் நுழைக்கிறது. சுகூனுள்ள ஹர்புக்குப் பின் ஷத்து உள்ள ஹர்பு சந்தித்தால் அந்த சுகூன் உள்ள ஹர்பை விட்டுவிட்டு அதற்கு முன்னுள்ள ஹர்பை ஷத்து உள்ள ஹர்புடன் இத்காம் செய்ய வேண்டும்."[28] இது குர்ஆனை வாசிப்பது தொடர்பான ஒரு விதியாகும். அவ்விதியை அறபுத் தமிழிலில் விளக்கியுள்ளார்.

நூலின் முழுப்பகுதியிலும் இத்தகு தமிழ் மொழி விளக்கக் குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அறபு மொழிக் கற்பித்தல் என்பது வெறுமனே அம்மொழிக் கூடாக மாத்திரம் நிகழ முடியாது. மாற்றமாக, தமிழ் பேசும் மக்களின் தாய்மொழியான தமிழுக்கூடாகவே நிகழ முடியும் என்பதனை இந்நூலின் மூலம் ஆசிரியர் உணர்த்தி நிற்கிறார்.

முடிவுரை

தத்ரீஸுல் குர்ஆன் என்ற ஓ.எம். பாஸி ஆலிமின் அறபுத் மொழி கற்பித்தல் பாடநூலை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அறபு மொழிக் கற்பித்தலில் தமிழ் மொழியின் செல்வாக்கு குறித்த இவ்வாய்வானது இலங்கை முஸ்லிம் மக்களுக்கும் அறபு மொழிக்குமிடையிலான மிக நெருங்கிய தொடர்பினை புலப்படுத்துவதுடன் அதனை கற்பிக்கும் முறைமையில் தமிழின் செல்வாக்கும் பயன்பாடும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு கண்டறியப்பட்டுள்ளது. எனவே, அறபு மொழி கற்பிக்கும் நிறுவனங்கள், கல்விக் கூடங்கள் எதிர்காலத்தில் தாய்மொழி தொடர்பான தேர்ச்சிகளை மாணவர் மத்தியில் ஏற்படுத்தி வலுவூட்டும் கலைத்திட்டங்களை உருவாக்க வேண்டும் என்றும் தமிழ் மொழி வழிக் கற்பித்தலை

முதன்மைப்படுத்த வேண்டுமென்றும் இவ்வாய்வு பிரேரிக்கின்றது. இவ்வாய்வு சர்வதேச தாய்மொழி தினமான பெப்ரவரி 21- 2023ல் முத்தாய்ப்பு பெறுகிறது.

சான்றெண் விளக்கம்:

1. அமீன் எம்.ஐ.எம்., இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும், (ஹெம்மாதகம அல்ஹஸனாத் பதிப்பகம், 2000) பக்.194
2. Aziz A.M.A., Ilankayil Islam, Edited with Introduction by Dr. M.S.M. Anas, (Colombo: Kumaran Book House, 2007), p. 91.
3. முகைதீன் எச்.எல்.எம்., பட்டதாரி ஆசிரியர், அறபுமொழித்துறை. (நேர்காணல்), 2022.12.20
4. மார்க்க அறிஞர்கள் அல்லது மௌலவிமார் என்பவர்கள். இங்கு உலமா என்ற சொல் ஆலிம் என்ற அறபுச் சொல்லின் பன்மையாகும். ஆலிம் என்றால் அறிஞன் என்று பொருள்படும்.
5. அமீன் எம்.ஐ.எம்., இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும், (ஹெம்மாதகம: அல்ஹஸனாத் பதிப்பகம், 2000) பக்.194
6. ஹனீபா எஸ்.எல்.எம்., மூத்த எழுத்தாளர், ஓட்டமாவடி, இலங்கை, (நேர்காணல்), 2022.12.18
7. Dr. Ahmed Subair K.M.A., The Rice and Decline of Arabu - Tamil Language for Tamil Muslims, IIIUC Studies, (2014) ISSN 1813 - 7733, Vol 10 &11
8. வேங்கடசாமி ம.சி., பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், (சென்னை: 1962), பக்.156
9. நியாஸ் எம்.எச்.எம்.- கலாசார உத்தியோகத்தர், கோ.ப.மேற்கு ஓட்டமாவடி. (நேர்காணல்) 2022.12.22
10. அமீன் எம்.ஐ.எம்., இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும், (ஹெம்மாதகம: அல்ஹஸனாத் பதிப்பகம், 2000) பக்.55
11. Dr. Shukri M.A.M., “Muslims of Sri Lanka - A Cultural Perspective”, Muslims of Sri Lanka Avenues to Antiquity, (Beruwela: Jamiah Naleemia Inst. 1986), Page.340
12. ஹனீபா எஸ்.எல்.எம்., மூத்த எழுத்தாளர், ஓட்டமாவடி, இலங்கை, (நேர்காணல்), 2022.12.18
13. அமீன் எம்.ஐ.எம்., இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும், (ஹெம்மாதகம: அல்ஹஸனாத் பதிப்பகம், 2000) பக்.55

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Mr IM. Thalib P: 371-386

Since 1951

14. முகைதீன் எச்.எல்.எம்., பட்டதாரி ஆசிரியர், அறபுமொழித்துறை. (நேர்காணல்), 2022.12.20
15. ரகு சின்னசாமி, தாய்மொழிக் கல்வியின் அவசியம், (SCRIBD: 2017) https://www.scribd.com
16. அல்-ஹாஜ் முஸ்தபா எஸ்.எச்.எம்., சரித்திரம் கூறும் சம்மாந்துறை, (சம்மாந்துறை: கலாபிவிருத்திக்கழகம், 2014), பக்.156
17. மதப்பெரியார்களிடம் சென்று இறை ஆசிக்காக பிரார்த்தனை செய்ய வேண்டுதல்
18. வணக்க வழிபாடுகளில் ஈடுபடல்
19. "செய்கு" என்ற பதம் ஐம்பது வயதுக்கு மேற்பட்ட வயோதிகர், தலைவர், மேதை போன்ற கருத்துக்களைக் கொண்டுள்ளது. "தத்ரீஸ்" என்பது கற்பித்தல் என்ற பொருளைத்தரும். இதன்படி, செய்குத் தத்ரீஸ் என்பதன் மூலம் கற்பித்தல் மேதை என்று பொருள் கொள்ளலாம். இதன் மூலம் கௌரவப்படுத்தலே எதிர்பார்க்கப்படுகின்றது.
20. அல்-ஹாஜ் முஸ்தபா எஸ்.எச்.எம்., சரித்திரம் கூறும் சம்மாந்துறை, (சம்மாந்துறை: கலாபிவிருத்திக்கழகம், 2014), பக்.156
21. கல்வித் தொழினுட்பம் (நுகோகொட: கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், 2009) பக்.88
22. பாஸி ஆலிம் ஓ.எம்., தத்ரீஸுல் குர்ஆன் (சம்மாந்துறை: எம்.எப்.எம். சாலிஹ், பாஸிலேன், 2017) பக்.18
23. மேலது. பக்.18
24. மேலது. பக்.18
25. மேலது. பக்.18
26. மேலது. பக்.1
27. மேலது. பக்.20
28. மேலது. பக்.39

உசாத்துணைப் பட்டியல்

நூல்கள்

1. அமீன் எம்.ஐ.எம்., (2000), இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும், ஹெம்மாதகம: அல்ஹஸனாத் பதிப்பகம்.
2. அல்-ஹாஜ் முஸ்தபா எஸ்.எச்.எம்., (2014) சரித்திரம் கூறும் சம்மாந்துறை, சம்மாந்துறை: கலாபிவிருத்திக்கழகம்,

3. கல்வித் தொழினுட்பம், (2009) நுகோகொட: கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
4. பாஸி ஆலிம் ஓ.எம்., (2017), தத்ரீஸுல் குர்ஆன், சம்மாந்துறை: எம்.எப்.எம். சாலிஹ், பாஸிலேன்.
5. வேங்கடசாமி ம.சி., (1962), பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், சென்னை:
6. Aziz A.M.A., (2007), Ilankayil Islam, Edited with Introduction by Dr. M.S.M. Anas, Colombo: Kumaran Book House.
7. Dr. Ahmed Subair K.M.A., (2014), The Rice and Decline of Arabu - Tamil Language for Tamil Muslims, IIIUC Studies, ISSN 1813 - 7733, Vol 10&11

நேர்காணல்கள்

1. முகைதீன் எச்.எல்.எம்., பட்டதாரி ஆசிரியர், அறபுமொழித்துறை. (நேர்காணல்), (2022.12.20)
2. ஹம்தூன் பீ.எம். (18.12.2022) - சிரேஸ்ட விரிவுரையாளர், அறபு மொழித்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம், நேர்காணல்.
3. நியாஸ் எம்.எச்.எம். (14.12.2022) - கலாசார உத்தியோகத்தர், கோ.ப.மேற்கு ஓட்டமாவடி, நேர்காணல்.
4. ஹனீபா எஸ்.எல்.எம். (18.12.2022) - மூத்த எழுத்தாளர், நேர்காணல்

இணையதளம்

1. ரகு சின்னசாமி, (2021), தாய்மொழிக் கல்வியின் அவசியம், SCRIBD: https://www.scribd.com

Text Books & Websites References

1. Ameen M.I.M., (2000), Ilangai Muslimkalin Varalaarum Kalachaaramum, Alhasanath Publishers, Hemmaathagama.
2. Alhaj Musthafa S.H.M. (2014), Sarithiram Koorum Sammanthurai, Kalaabiviruthikkazhakam, Sammanthurai.
3. Kalvi Thozinutpam, (2009), Kalvipeedam, SriLanka Open University, Nukokota.
4. Baasi Alim O.M., (2017), Thathreesul Quran, M.F.M. Salih, Baasiilen, Sammanthurai.
5. Venkatasami M.C., (1962), Pathonpathaam Nootraandil Tamizh Ilakkiyam, Chennai.
6. Aziz A.M.A., (2007), Ilankayil Islam, Edited with Introduction by Dr. M.S.M. Anas, Colombo: Kumaran Book House.
7. Dr. Ahmed Subair K.M.A., (2014), The Rice and Decline of Arabu - Tamil Language for Tamil Muslims, IIIUC Studies, ISSN 1813 - 7733, Vol 10&11.
8. Muhaideen H.L.M., Graduate Teacher, Dept of Arabic, Interviewed on 20.12.2022
9. Hamthoon B.M., Guest Lecturer, Dept of Arabic, Eastern University, Interviewed on 18.12.2022
10. Niyas M.H.M., Cultural Worker, West Ottamavadi, Interviewed on 14.12.2022
11. Haneefa S.L.M., Senior Writer, Interviewed on 18.12.2022
12. Ragu Sinnasamy, (2021), Thaimozhik Kalviyin Avasiyam, SCRIBD: https://www.scribd.com

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
Since 1951
பேராசிரியர் A.ஷம்சுத்தீன் ஜமாலி P: 387-400

அரபுத் தமிழ் பக்தி இலக்கியங்கள் வாயிலாக இஸ்லாத்திற்கு புத்துயிர் ஊட்டியது - இஸ்லாமிய உரைநடை நூல்கள்

The revival of Islam through Arabic Tamil Devotional Literature – Islamic prose texts

பேராசிரியர் A. ஷம்சுத்தீன், ஜமாலி M.A., M.Phil., Ph.D.,
துணைப் பேராசிரியர், அரபித் துறை
புதுக்கல்லூரி, சென்னை – 600 014

அரபுத் தமிழ் என்பது அரபு எழுத்துக்களைப் பயன்படுத்தி தமிழ் வார்த்தைகளை எழுதுவதாகும். தமிழ் நாட்டில் குடியேறிய அரபுகள் தமிழ்மொழியைக் கற்றுக் கொண்டதுடன், அதனை அரபு எழுத்துக்களில் எழுதினர். தமிழில் உள்ள ள, ழ, ண, ட போன்ற எழுத்துக்களுக்கு அரபியல் ஒலி இல்லாததால், அவற்றிற்குச் சற்று முன்பின் சம ஒலியுள்ள அரபு எழுத்ததுக்களுக்குச் சில அடையாளங்களை அதிகப்படியாகச் சேர்த்து அவ்வொலிகள் இதில் ஏற்படுத்தப்பட்டடுள்ளன.

தமிழில் 247 எழுத்துகள் இருக்கின்றன. ஆனால் அரபுத் தமிழிலோ அரபி எழுத்துக்கள் 28 உடன் 8 எழுத்துக்கள் மேற்கொண்டும் சேர்க்கப்பட்டுள்ளுன. கி.பி 8 – ஆம் நூற்றாண்டு முதல் 19 – ஆம் நூற்றாண்டு வரை அரபுத் தமிழ் சிறப்புற்று விளங்கியது. அரபுத்த தமிழ் நூல்கள், இம்மொழி மரபை “லிஸானுல் அர்வி” என்றே குறிப்பிடுகின்றன. அரபி என்ற சொல் மருவி “அர்வி” என வந்திருக்கின்றது.

இஸ்லாம் தென்னிந்தியாவில் தமிழ் பேசும் முஸ்லிம்கள் மத்தியில் பரவியபோது, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மக்கள், தொடர்ந்தும் தமிழ் மொழியையே பேசி வந்தனர். சில நாடுகளைப் பொறுத்தவரை அவர்கள் தமது தாய் மொழிகளை மறந்து அரபியை முதல் மொழியாக மாற்றிக் கொண்டனர். அல்லது தாய் மொழியை முதன் மொழியாகவும், அரபியை இரண்டாவது மொழியாகவும் மாற்றிக் கொண்டனர். ஆனால் தென்னிந்திய தமிழ் நாட்டு முஸ்லிம்கள் இஸ்லாத்துக்கும் அரபி மொழிக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததால் அவாக்களின் அன்றாட சன்மார்க்க காரியங்களை நிறைவேற்றுவதற்கு அரபு மொழி தேவை

என்பதால், அரபு மொழியயை படிப்பதற்காகவே தெரிந்திருக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்துக்கு ஆளாகினர்.

அரபுத் தமிழில் ஏறத்தாழ நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட மார்க்க நூல்கள் வெளிவந்துள்ளன. அரபுத் தமிழில் தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹு, அகாஇத், தஸவ்வுப் போன்ற இஸ்லாமிய கலைகள் சார்ந்த ஆயிரக்கணக்கான நூல்களும் வானியல், தத்துவம், மருத்துவம், வரலாறு போன்ற கலைகளுடன் தொடர்புடைய எண்ணற்ற நூல்களும் எழுதப்பட்டுள்ளன. உலமாப் பெருமக்கள் திருக்குரானுக்கு விளக்கவுரை தமிழில் எழுதக் கூடாது எனக் கூறி வந்ததன் காரணமாக அரபுத் தமிழில் தஃப்ஸீர்களும், ஏனையை இஸ்லாமிய நூல்களும் வெளிவரலாயின.

குர்ஆனின் அரபுத் தமிழ் விரிவுரைகளான

தஃப்ஸீர் ஃபதஹுல் கரீம், تفسير فتح الكريم

தஃப்ஸீர் ரஹீம் تفسير الرحيم

புதூ ஹாத்துர் ரஹமானிய்யா ஃபீத ஃப்ஸீரி கலாமிர் ரப்பானிய்யா

فتوحات الرحمانية في تفسير كلام الربانية

ஆகியவை பிரபல்யாமான நூல்களாகும்.

மஙானீ مغاني (மார்க்க சட்டக் கருவூலம்) (ஃபத்ஹுத்தையான்)

مغاني ملاحظ التبياني في شرح معاني فتع الديان

மஙானீ முலாஹித் திப்யானி ஃபீ ரஹி மஆனி ஃபத்ஹீத் தையான் என்பதே இதன் முழுப் பெயராகும்.

மார்க்க சட்டக் கருவூலம் "மஙானீ" எனும் இந்நூல் 19-ஆம் நூற்றாண்டில் கீழக்கரையில் வாழ்ந்த தமிழ் முஸ்லிம் மார்க்க மேதை அல்லாமா "மாப்பிள்ளை லெப்பை ஆலிம்" இமாமுல் அரூஸ் (الاماما العروس) எனும் மார்க்க மேதையால் அரபுத் தமிழில் தொகுக்கப்பட்ட "மஙானீ" என்னும் நூலாகும்.

ஹனஃபீ, மாலிகீ, ஷாஃபியீ, ஹன்பல் ஆகிய நான்கு மத்ஹபுகளில் ஏதாவதொரு மத்ஹபைப் பின்பற்றுபவர்களுக்கு சுன்னத்து வல்ஜமாஅத்தைச்

சோந்தவர் என்று கூறப்படும். 'மஙானீ' என்னும் இந்நூல் ஷாஃபியீ மத்ஹபின் சட்ட திட்டங்களை விளக்கிக் கூறக் கூடியதாக இருப்பினும், ஹனஃபீ மதஹபீன் சட்டங்களையும், பல இடங்களில் இந்நூலில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. தற்போது இந்த நூல் நடைமுறைத் தமிழில் அச்சிடப்பட்டடு க.செ.மு. ஷாஹீல் ஜமாலி அவர்களால் வெளியிட்பட்டுள்ளது.

இந்நூல் ஆசிரியர் மார்க்க மேதை, மஙானீ 'மாப்பிள்ளை லெப்பை ஆலிம்' அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள காயல்பட்டினத்தில் ஹிஜ்ரி 1232 முஹாரம் பிறை 18 – ல் (கி.பி. 1816) வெள்ளை அஹ்மது லெப்பை ஆலிம் - ஆமினா உம்மா தம்பதியருக்குப் பிறந்தார்கள். இவர்களுக்கு எட்டு சகோதரர்களும், நான்கு சகோதரிகளும் இருந்தனர். இவருக்கு பெற்றோர் வைத்த பெயர் செய்யிது முஹம்மது என்பதாகும். இவருடைய தந்தை, தாய் இருவருமே திருக்குர் ஆணை மனனம் செய்த ஹாஃபிள்களாக இருந்தனர். இந்நூல் ஆசிரியரும் தனது பத்தாவது வயதில் குர்ஆனை மனனம் செய்த ஹாபிள் ஆவார்கள். இருவருக்கும் இரண்டு வயது இருக்கும் போது, இவரது பெற்றோர் கீழக்கரைக்கு சென்று குடும்பத்துடன் குடியேறினார்க்ள.

ஹிஜ்ரி 232-ல் எகிப்திலிருந்து அகதிகளாகக் கிளம்பி காயல்பட்டினத்தில் வந்திறங்கி அங்கேயே குடியேறிய குழுவினருக்குத் தலைமை தாங்கி வ்நத முஹம்மது கில்ஜியின் வழித் தோன்றலாக இருப்பததால், இஸ்லாத்தின் முதல் கல்ஃபாவாகிய செய்யிதுனா அபூபக்கர் ஸித்திக் (ரவி) அவர்களின் வழித் தோன்றலாகவும் இவர் ஆகின்றனர்.

காயல் பட்டினத்தில் பிறந்து கீழக்கரை சென்று குடியேறி பெரும் செல்வந்தர் வீட்டில் திருமணம் செய்து கீழக்கரையிலேயே 'தைக்கா' வெனும் தவச்சாலை ஒன்றை அமைத்து, அதில் ஒரு மதரஸவை (அரபி பாடசாலையை) யும் நிறுவி, நடத்தி வந்த மார்க்க மாமேதை அல்லாமா ஹாஜி ஹாப்பீஸ் "கீழக்கரை தைக்கா ஸாஹிபு' வென்று பெயர் விளங்கிய மஹான் செய்யிது அப்துல்காதீர் வலீ அவர்களின் மாணவராக நம் செய்யிது முஹம்மது (இமாமுல அரூஸ்) அவர்கள் ஆனார்கள்.

கல்வி பயின்று கொண்டிருக்கும் பொழுதே இவருடைய நல்லொழுக்கமும், நற்பண்புகளும், மதிநுட்பமும் அவர் தம் ஆசிரியர் தைக்கா சாஹிபு அவர்களைப் பெரிதும் கவர்ந்தமையால் தமது நான்காவது பெண்ணான சாராவை அவருக்கு திருமணம் முடித்து வைத்தார்கள். செய்யிது முஹம்மது - ஸாரா இவர்களின் திருமணம் ஹிஜ்ரி 1253 ரபீஉல் ஆகிர் பிறை 12-ல் இனிதே நடந்தேறியது. அன்று முதல் நம் நூல் ஆசிரியர் செய்யிது முஹம்மது அவர்கள் "மாப்பிள்ளை லெப்பை ஆலிம்" என்ற பெயரில் அழைக்கப்படலாயினர்.

கீழக்கரை அரூஸிய்யா (المدرسة العروسية) :

தமது மாமனார் தைக்கா சாஹிபு அவர்கள் இறந்தப் பிறது தைக்கா மத்ராஸாவைத் தாமே நிர்வகித்து நடத்தி வரலாயினர். பின் அந்த மதரஸா "அல் மத்ரஸதுல் அரூஸிய்யா" என்ற பெயரில் அழைக்கப்படலாயிற்று. அரபியில் அரூஸ் என்றால் மாப்பிள்ளை என்பது பொருளாகும்.

ஃபத்ஹீஸ் ஸலாம் (فتح السلا)

ஃபதஹீல் மத்தீன் (فتح المتين)

ஃபத்ஹீத் தய்யானா (فتح الديان)

போன்ற பல ஃபிக்ஹீ (மார்க்க சட்ட) நூல்களையும், "ஙனீ மத்துஸ்ஸாலிகீன்" (عنيمة السالكين) என்னும் மெஞ்ஞான நூலையும், பல கவிதை நூல்களைஞம், கட்டுரை நூல்களையும், அரபுத் தமிழிலும் அரபியிலும் இயற்றியுள்ளளார்கள். இன்றளவும் இஸ்லாமியத் திருமணச் சபைகளில், ஷமஙானீ" யில் குறிப்பிட்டுள்ள சுருக்கமான நிக்காஹ் குத்பாவே பெருமளவில் ஓதப்பட்டு வருகிறது.

இந்நூலில் தீன் எனும் சொல், ஈமான், மீஜான், சிராத்துல் முஸ்தகீம், ஹவ்லுல்கவீஸர், லிவாவுல் ஹம்து கொடி, இஸ்லாம், மஃரிஃபா (இறை ஞானம்) தொழுகை , துப்புறவு, நிஃபாஸ், குளிப்பு, உ;, தயம்மம், மோஜா, நஜுஸ், தொழுகை , மானத்தை மறைப்பது, பாங்கு, குனூத், மஸ்ஜிதின் ஒழுக்கங்கள், களாத் தொழுகை, சுன்னத்துத் தொழுகைகள், ஜமாஅத் தொழுகை, ஜும் ஆத் தொழுகை, ஜனாஸா கப்ரு, ஜியாரத்து, ஜகாத், நோன்பு, ஹஜ்ஜு, உம்ரா, உள்ஹிய்யா , அஜீகா,

மிருகங்களை வேட்டையாடுதல், போதை உண்டுபண்ணும் பொருட்கள் நேர்ச்சை, ரித்தத் (மதம் மாறுதல்) வியாபாரம், வட்டி, கடன், அடகு, வகாலத், தலாக், இத்தா, கத்னா, நிக்காஹ் ஆகியவற்றின் விவரங்கள் விரிவாகத் தௌ;ளத் தெளிவாக யாவருக்கும் விளங்கும் வகையில் குறிப்பிட்பட்டடுள்ளன.

ஃபத்ஹுர் ரஹ்மான்

ஃபத்ஹுர் ரஹ்மான் ஃபீ தர்ஜமதி தஃப்ஸீரில் குர்ஆன் அரபுத் தமிழில் வெளிவந்த முதல் திருக்குர்ஆனின் விரிவுரை நூல் ஆகும். இலங்கை (ஸ்ரீலங்கா) யில் உள்ள பேருவளை என்ற ஊரைச் சேர்ந்த ஷைகு முஸ்தஃபா அவர்கள் கி.பி.1874 (ஹிஜ்ரி129)ல் இந்நூலை வெளியிட்டார்கள். குர்ஆனில் உள்ள ஜஸ்வுக்களுக்கும் விரிவுரைகளை கையெழுத்து பிரதிகளாக எழுதி முடித்தார்கள்.

நூல் ஆசிரியர் - வரலாற்றுச் சுருக்கம்:

ஆதம் மரைக்காயார் - தங்க முத்து நாச்சிசயார் தம்பதிகளுக்கு இலங்கிய்ன தென் மாகாணத்திலுள்ள பேருவளை என்ற ஊரில் “மாளிகாச் சேனை” என்ற பகுதிய் கி.பி. 1836 (ஹிஜ்ரி 1252) ம் வருடம் மகனாக பிறந்தார்கள். சிறுவயதிலேயே தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்த ஷைகு முஸ்தபா அவர்களுக்கு ஒரு சகோதரரும் இரண்டு சகோதரிகளும் இருந்தனர்.

சன்மார்க்க கல்வி:

சிறுவயதிலேயே இயல்பாகவே இஸ்லாமிய மார்க்க கல்வி மற்றும் அரபி மொழிக் கல்வியில் அதிக ஆர்வம் கொண்டிருந்து ஷைகுமுஸ்தா ஸ்ரீலங்கா - இலங்கை – கொழும்பு பள்ளிவாசலில் காயல்பட்டிணத்தைச் சோந்த ஒரு பணக்காரருடன் இவருக்கு சந்திப்பு ஏற்பட்டது. அவரின் உதவி கொண்டு காயல்பட்டிணத்திற்கு வந்து தனது 13-வது வயதில் ஹபீப் முஹம்மது ஆலிம் அவர்களிடம் கற்று தஃப்ஸீர், ஹதீஸ் ஃபிக்ஹ், மன்திக், மஆனி போன்ற கலைகளில் தேற்சி பெற்றார்கள். பிறகு தனது தாய் நாட்டிற்கு திரும்பி வந்து கற்ற கல்வியை எத்திவைக்கும் முயற்சியில் ஈடுபட்டும் தானே ஒரு மதராஸா நிறுவி ஆசிரியராக பணி செய்தார்கள். புகாரி ஷரீபை ஓதி பாராயணம் செய்யும் முறையை முதன் முதலில் ஹிஜ்ரி 1301-ஆம் ஆண்டில் துவங்கி வைத்தார்கள்.

இலக்கியப் பணி:

பவாரிகுல் ஹிதாயா என்ற அரபு மொழி சன்மார்க்க சட்ட நூலை "சஹ்லுத் தவ்லா" என்ற மூல நூலிலிருந்து அரபித் தமிழில் மொழிபெயர்தார்கள்.

- ஸபீனதுந் நஜாத் என்ற அரபி நூலை அரபித் தமிழில் மொழிபெயர்த்தார்கள்.
- இஹ்யா உலூமித்தீன் என்ற நூலில் உள்ள "ஃபவாயிதுல் அகாயித்" (فوائد العقائد) என்ற பாடத்தை அரபித் தமிழில் மொழிபெயர்தார்கள்.
- பத்ஹுல் முஈன் (فتح المعين) என்ற நூலுக்கு ஹரியா – ஒரக்குறிப்பு எழுதியுள்ளார்கள்.

பத்ஹுர் ரஹ்மான் فتح الرحمان

பத்ஹுர் ரஹ்மான என்ற இவரது தஃப்ஸீர் நூலில் அரபி சொற்கள் அதிகம் கூறப்பட்டுள்ளது. இந்நூலின் முன்னுரை சுமார் 700 சொற்களை கொண்டு அமைந்திருந்தாலும் அதில் 15மூ சதவிகிதம் அரபி வார்த்தைகளாகும்.

சில இடங்களில் தஃப்ஸீர் விரிவுரை எழுத ஆரம்பிக்கும் போது எஃனி (நாடுகிறார்-يعني) என்ற அரபிச் சொல்லைக் கொண்டே விரிவுரையை ஆரம்பித்துள்ளார். பிரபல தஃப்ஸீர் நூலானா தஃப்ஸீh ஜலாலைனி என்ற நூலைப் பின்பற்றி அதன் அமைப்புகளுக்கு ஏற்ப அரபுத்தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

- **பத்ஹுர் ரஹ்மான் – பெயர்காரணம்**

فتح الرحمن في ترجمة تفسير القرآن

நூலாசிரியர் ஃபத்ஹுர் ரஹ்மான் ஃபீ தர்ஜமதி தஃப்ஸீரில் குர்ஆன் என பெயர் வைத்துள்ளார். இதன் பொருள் குர்ஆனுக்கு விரிவுரையை மொழியாக்கம் செய்வதில் அளவற்ற அருளாளன் அல்லாஹ்வின் வெற்றி என்பதாகும். இந்நூலாசிரியர் திருக்குர்ஆனின் மொழிப்பெயர்ப்பு என்று கூறாமல் விரிவுரையின் மொழிபெயர்ப்பு எனக் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து குர்ஆனை யாரும் எந்த மொழியிலும் மொழியாக்கம் செய்யமுடியாது விரிவுரையைத்தான் மொழியாக்கம் செய்ய முடியும்

என்பதை உம்மதுக்கு உணர்த்தியுள்ளார். மொத்தம் 10க்கும் மேற்பட்ட பாகங்கள் ஒவ்வொரு பாகத்திலும் 150க்கும் மேற்பட்ட பக்கங்கள் உள்ளன.

துஹ்பா تحفة

துஹ்பா என்ற இந்நூல் இமாம் ஷாஃபி (ரஹ்) அவர்களுடைய மத்ஹபின் அடிப்படையில் சன்மார்க்க சட்ட மேதை இமாம் இப்னு ஹஜருல் ஹைதமி அவர்களின் மாணவர் அஷ்ஷைகு ஜைனுத்தீன் பொன்னானி (ரஹ்) அவர்களால் தொகுத்தளிக்கப்பட்டுள்ள ஃபத்ஹுல் முயீன் (فتح المعين) என்ற நூலை காயல்பட்டினம் செண்டு ஆலிம் என அழைக்கப்பட்டு வந்த அஹ்மது முஹ்யித்தீன் ஆலிம் அவர்களால் அரபத் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டமதாகும். ஃபத்ஹுல் முஈன் என்ற நூலின் அரபுத் தமிழாக்கமே துஹ்ஃபா என்ற நூலாகம். ஆலிமல்லாதவரும் அறிந்துணர்ந்து அமல் செய்யும் வகையில் அரபுத் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டடுள்ளது.

ஃபத்ஹுல் முஈன் என்ற அரபி நூலை காயல்பட்டிணம் செண்டு ஆலிம் என்ற அஹ்மது முஹ்யித்தீன் ஆலிம் அவர்கள் அரபித் தமிழில் தந்துள்ள நூலிலிருந்து மூன்று பாகங்களை காயல்பட்டிணம் பெரிய பள்ளி கதீப், முஅஸ்கருர் ரஹ்மான் அரபிக் கல்லூரியின் முதல்வர் ர்.யு. அஹ்மது அப்துல் காதிர் ஆலிம் மஹ்லரி அவர்கள் தற்கால நடைமுறைத் தமிழ் எழுதியுள்ளார்கள். ஆதனை சென்னை ஃபஹீமிய்யா பப்ளிஷர்ஸ் அச்சிட்டு சென்னை அங்கப்ப நாயக்கன் தெருவிலுள்ள KAS ஜெய்னுல் ஆபிதீன் கம்பெனி வெளியீடு செய்துள்ளது. இந்த “துஹ்ஃபா” என்ற நூலில் பின்வரும் விஷயங்கள் தெளிவாக, விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளன அவை:-

1. அல்லாஹ், அல்லாஹ்வின் தூதர், தொழுகை உ;, குறிப்பு, தயம்மும், மாதவிடாய், பிள்ளைப்பேறு தொடக்கு, மலஜல உபாதைகளை சுத்தம் செய்வது, அப்ஆழு சுன்னத், சஜ்தா திலாவத், தஸ்பீஹ் தொழுகை, வித்ரு தொழுகை, லுஹா தொழுகை, பெருநாள் தொழுகை, கிரகணத் தொழுகை, தராவீஹ் தொழுகை, தஹஜ்ஜீத் தொழுகை, கூட்டுத் தொழுகை, ஜனாஸா தொழுகை, ஸகாத், கனீமத் பொருட்கள், நோன்பு , இஃதிகாஃப் ஹஜ், உம்ரா, ஸியாரத், உள்ஹிய்யா, அகீகா, நேர்ச்சை, வியாபாரம், வட்டி, கொடுக்கல் வாங்கல், அடமானம் வைத்தல், கண்டெடுக்கப்பட்ட பொருள் இரவல், அபகரித்தல், கத்னா, மற்றவை.

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
பேராசிரியர் A.ஷம்சுத்தீன் ஜமாலி P: 387-400

இந்நூலை அரபுத் தமிழில் எழுதியவரின் நோக்கமும் அவரது கூற்றிலிருந்து சில வரிகளும்:-

இக்கிரந்தம் மலைதனில் ஏற்பட்ட தீபம் போன்று உலகமன்றில் பிரபல்யமானபோது அறிவும் அமலும் அற்ற இந்த அடிமையிடத்தல் (என்னிடத்தில்) அன்பர்களில் சிலர் அரபு மொழி தெரியாத உடன் பிறப்புக்களுக்கு இதனை (அரபுத் தமிழில்) உரை செய்யும்படி பலமுறை வேண்டியதின் நிமித்தம் , இதனை உரை செய்திட தகுதி என்னிடத்தில் இல்லை என்பதை உணர்ந்து மனதில் பல உளைச்சல்கள் ஏற்பட்ட போதிலும் மனிதனில் மரணத்திற்குப் பின் இது போன்ற காரியங்கள் பலன் தரவல்லது.

اذا مات الانسان انقطع ماله الا من ثلاث صدقة جارية او علم ينتفع به او ولد صالح يدعو له

ஒரு மனிதன் இறந்து விட்டால் மூன்று காரியங்களைத் தவிர அவன் எல்லா செயல்பாடுகளும் நின்று விடுகிறது. (1) நேமமான தர்மம் (2) பயனள்ள கல்வி (3) தனக்க குத்பா - இப்னு நுபாதா

இலங்கையின் கரையோர நகர்களிலும், மதுரையிலும், ஏனையை நகர்களிலும் வாழ்ந்த முஸ்லீம்கள் அரபு மொழியை விளங்க முடியாத நிலையில் இருந்தனர். எனினும் சமய சட்டங்களையும் ஞானங்களையும் விளக்கிக் கொள்ள வேண்டுமென்ற தாகம் அவர்களிடமிருந்தது. சுமயக்கலைகளை அறிய வேண்டுமென்ற உணர்வும், அவாவும் அவர்களிடம் காணப்பட்டன. இதனை மாப்பிள்ளை லெப்பை ஆலிம் நன்கு அறிந்திருந்தார். எனவே அரபுத் தமிழ் இலக்கியங்களுக்கூடாக அவர்களுக்கு உதவ முன்வந்தார்.

இதன் ஒரு வழிமுறையாக ஜும்ஆப் பிரசங்கம் செய்வதற்காக பல குத்பாக்களை எழுதினார். அவற்றுள் ஒன்பது குத்பாக்களைத் தான் வாசித்திருப்பதாக, அவரது பேரன் கலாநிதி, தைக்கா சுஐபு ஆலிம் தனது நூலில் குறிப்பிடுகிறார். அவற்றுள் குத்பா ஒன்றின் ஒவ்வொரு வாக்கியமும் “நூன்” எனும் எழுத்தில் முடிகின்றது. இதனை குத்பா “நூனிய்யா” என்றனர். மற்றொன்று “றா” வில் முடிகின்றது. இதனை ‘றாஇய்யா” என்றனர்.

இவ்வாறு இலங்கை முஸ்லிம்களின் சமயத் தேவையை அறிந்து சில குத்பாக்களை எழுதிய மாப்பிள்ளை ஆலிம் அவர்கள், தமக்கு ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முந்திய இப்னு நபாதா (கி.பி. 946-984) என்பாரின் குத்பாக்களை அரபுத் தமிழில் ஏன் மொழி மாற்றம் செய்தார்.

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஓர் அரபுக்கவிஞர், அரபுத் தமிழிலும் கவிபாடும் வல்லமை உடையவர். எனவே இப்னு நூபதாவின் குத்பாக்கள் அமைந்திருந்த மொழி நடை அவரைக் கவர்ந்திருக்கலாம். நூனிய்யா, றாஇய்யா போன்ற அமைப்புக்ள இப்னு நுபாதாவின் குத்பாக்களில் பரவலாகக் காணப்படுகின்றன. மேலும், இப்னு நுபாதாவின் குத்பாக்களின் கருத்துக்ககள் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் (ஆலிமுல் அரூஸ்) கருத்துக்களை ஒத்திருக்கின்றன. அவர்களின் நூல்களைப் படிப்பவர்கள் இதனை அவதானிக்கலாம்.

குத்பாத் இப்னு நுபாத், ஒவ்வொரு மாதத்துக்குமென ஐவந்து குத்பாக்களைத் தருகின்றது. இரண்டு பெருநாள்களுக்கும் தனித்தனி குத்பாக்களும் தரப்பட்டுள்ளன. எல்லா ஜும்ஆவுக்குமான பொதுவான இரண்டாவது குத்பா இறுதியாக அமைந்திருக்கிறது. உலமாக்கள் அரிதாக இருந்த கால கட்டத்தில் - பரம்பரைக் கதீப்மார் பணியாற்றிய போது இந்த குத்பாக்கள் பயன்பட்டிருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

குத்பா - இப்னு நுபாதா

இலங்கையின் கரையோர நகர்களிலும், மதுரையிலும், ஏனையை நகர்களிலும் வாழ்ந்த முஸ்லீம்கள் அரபு மொழியை விளங்க முடியாத நிலையில் இருந்தனர். எனினும் சமய சட்டங்களையும் ஞானங்களையும் விளக்கிக் கொள்ள வேண்டுமென்ற தாகம் அவர்களிடமிருந்தது. சுமயக்கலைகளை அறிய வேண்டுமென்ற உணர்வும், அவாவும் அவர்களிடம் காணப்பட்டன. இதனை மாப்பிள்ளை லெப்பை ஆலிம் நன்கு அறிந்திருந்தார். எனவே அரபுத் தமிழ் இலக்கியங்களுக்கூடாக அவர்களுக்கு உதவ முன்வந்தார்.

இதன் ஒரு வழிமுறையாக ஜும்ஆப் பிரசங்கம் செய்வதற்காக பல குத்பாக்களை எழுதினார். அவற்றுள் ஒன்பது குத்பாக்களைத் தான்

Since 1951

Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
பேராசிரியர் A.ஷம்சுத்தீன் ஜமாலி P: 387-400

வாசித்திருப்பதாக, அவரது பேரன் கலாநிதி, தைக்கா சுஐபு ஆலிம் தனது நூலில் குறிப்பிடுகிறார். அவற்றுள் குத்பா ஒன்றின் ஒவ்வொரு வாக்கியமும் “நூன்” எனும் எழுத்தில் முடிகின்றது. இதனை குத்பா “நூனிய்யா” என்றனர். மற்றொன்று “றா” வில் முடிகின்றது. இதனை ‘றாஇய்யா” என்றனர்.

இவ்வாறு இலங்கை முஸ்லிம்களின் சமயத் தேவையை அறிந்து சில குத்பாக்களை எழுதிய மாப்பிள்ளை ஆலிம் அவர்கள், தமக்கு ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முந்திய இப்னு நபாதா (கி.பி. 946-984) என்பாரின் குத்பாக்களை அரபுத் தமிழில் ஏன் மொழி மாற்றம் செய்தார்.

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஓர் அரபுக்கவிஞர், அரபுத் தமிழிலும் கவிபாடும் வல்லமை உடையவர். எனவே இப்னு நூபதாவின் குத்பாக்கள் அமைந்திருந்த மொழி நடை அவரைக் கவர்ந்திருக்கலாம். நூனிய்யா, றாஇய்யா போன்ற அமைப்புக்ள இப்னு நுபாதாவின் குத்பாக்களில் பரவலாகக் காணப்படுகின்றன.

மேலும் இப்னு நுபாதாவின் குத்பாக்களின் கருத்துக்ககள் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் (ஆலிமுல் அரூஸ்) கருத்துக்களை ஒத்திருக்கின்றன. அவர்களின் நூல்களைப் படிப்பவர்கள் இதனை அவதானிக்கலாம்.

குத்பாத் இப்னு நுபாத், ஒவ்வொரு மாதத்துக்குமென ஐவந்து குத்பாக்களைத் தருகின்றது. இரண்டு பெருநாள்களுக்கும் தனித்தனி குத்பாக்களும் தரப்பட்டுள்ளன. எல்லா ஜூம்ஆவுக்குமான பொதுவான இரண்டாவது குத்பா இறுதியாக அமைந்திருக்கிறது. உலமாக்கள் அரிதாக இருந்த கால கட்டத்தில் - பரம்பரைக் கதீப்மார் பணியாற்றிய போது இந்த குத்பாக்கள் பயன்பட்டிருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

பெற்றோருக்காகப் பிரார்த்திக்கும் பிள்ளை என்ற ஹதீஸின் அடிப்படையை ஆதரவைத்தும் வேண்டியவர்களின் அபிலாஷையை பூர்த்தி செய்திட நாடியும், இக்கிரந்தமதின் ஃபத்ஹுல் முஈன் விரிவாக்கமாகிய இஆனதுத் தாலிபீன் (إعانة الطالبين) என்பதனினை நோட்டமிட்டு உரை எழுதுகிறேன்.

எனவே, சட்ட நிபுணர்கள் யாராவது இந்த உரையில் பிழை காண நேரிட்டால் அவர்களது பொறுமையை கொண்டு என்னைப் பொறுத்து, இதன் அடிப்படைக்

கிரந்தத்தைப் பார்த்துத் தாமிஈன் ஃபீ தர்ஜமதி ஃபத்ஹில் முயீன் (فتح المعين) என்று பெயரிட்டுள்ளேன்.

இந்நூல் ஆசிரியர் முஹம்மது நபியின் பேரக்குழந்தைகளான இமாம் ஹஸன், இமாம் ஹுஸைன் (ரலி) ஆகியோரை புகழ்ந்து "குஹ்லுல் அய்னைனி ஃபீ மகாரிமில் ஹஸனைனி كحل عينين في مكارم الحسنين என்ற பெயரில் சிறப்பான மௌலிதை – கஸீதாவை கோர்வை செய்துள்ளார்கள். எனவே இவர்களுக்கு மாதிஹீ ஸிப்தைன் مادح السبطين என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

சிம்துஸ் ஸிப்யான்:

ஹனபீ மத்ஹபின் சட்டங்களை சிறுவர் சிறுமிகளுக்கு கற்றுக் கொடுக்கும் நோக்கில் அ;லாமா அஷவைகு முஹம்மது யூசுப் அல் ஹனஃபி அவர்களால் அரபுத் தமிழில் தொகுக்கப்பட்ட நூலே சிம்துஸ் ஸிப்யான் ஆகும். தற்போது இந்த நூல் அபுல் பர்காத் ஆலிம் அவர்களால் நடைமுறைத் தமிழில் எழுதி வெளியிடப்பட்டுள்ளது.

فقيه واحد اشد على اللشيطان من الف عابد

ஒரு (ஷரீஅத்) சட்ட அறிஞர் ஷைத்தானிடம் ஆயிரம் வணக்க சாலிகளை விட கடினமானவர் என இந்நூலின் முகப்பில் எழுதப்பட்டுள்ளது.

காமூஸ் அரபிவ தமிழ் (அரபுத் தமிழ் அகராதி)

ஜமாலிய்யா செய்யிது யாஸீன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹாஷிமிய்யி அவர்களால் அரபு தமிழில் எழுதப்பட்ட இந்த அகராதி தற்போது நடைமுறைத் தமிழில் எழுதப்பட்டு திருச்சி, ஜமாலிய்யா பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

அரபுத் தமிழ் வார்த்தைகள்

- வாரிசு - وارث
- பாக்கி - باقي
- நகல் - نقل
- ஷரத் - شرط
- தரப்பு - طرف
- நபர் - نفر

- தாஸில்தார் - تحصيل الدار
- ஜில்லா - ضلعة
- தாலுகா - تعلقة
- ஜேப் - جيب
- வகீல் - وكيل
- வாயிதா - واعدة
- ஜாமின் - ضامن
- மூலம், அசல் - اصل
- தாகீது - تأكيد
- பைசல் - فيصل
- அத்து (மீறுதல்) عد
- ரத்து - رد

இது போன்ற அரபு வார்த்தைகள் இன்றளவும் நமக்கிடைய நடைமுறைத் தமிழில் சுழன்று வருவதும் நமது புழக்கத்தில் நிலைத்து வருவதும் மற்றற்ற மகிழ்ச்சியை தருகிறது. ஆகமகிழ்வை கொடுக்கிறது.

குத்பா - இப்னு நுபாதா

இலங்கையின் கரையோர நகர்களிலும், மதுரையிலும், ஏனையை நகர்களிலும் வாழ்ந்த முஸ்லீம்கள் அரபு மொழியை விளங்க முடியாத நிலையில் இருந்தனர். எனினும் சமய சட்டங்களையும் ஞானங்களையும் விளக்கிக் கொள்ள வேண்டுமென்ற தாகம் அவர்களிடமிருந்தது. சுமயக்கலைகளை அறிய வேண்டுமென்ற உணர்வும், அவாவும் அவர்களிடம் காணப்பட்டன. இதனை மாப்பிள்ளை லெப்பை ஆலிம் நன்கு அறிந்திருந்தார். எனவே அரபுத் தமிழ் இலக்கியங்களுக்கூடாக அவர்களுக்கு உதவ முன்வந்தார்.

இதன் ஒரு வழிமுறையாக ஜூம்ஆப் பிரசங்கம் செய்வதற்காக பல குத்பாக்களை எழுதினார். அவற்றுள் ஒன்பது குத்பாக்களைத் தான் வாசித்திருப்பதாக, அவரது பேரன் கலாநிதி, தைக்கா சுஐபு ஆலிம் தனது நூலில் குறிப்பிடுகிறார். அவற்றுள் குத்பா ஒன்றின் ஒவ்வொரு வாக்கியமும் “நூன்” எனும் எழுத்தில்

முடிகின்றது. இதனை குத்பா "நூனிய்யா" என்றனர். மற்றொன்று "றா" வில் முடிகின்றது. இதனை 'றாஇய்யா" என்றனர்.

இவ்வாறு இலங்கை முஸ்லிம்களின் சமயத் தேவையை அறிந்து சில குத்பாக்களை எழுதிய மாப்பிள்ளை ஆலிம் அவர்கள், தமக்கு ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முந்திய இப்னு நபாதா (கி.பி. 946-984) என்பாரின் குத்பாக்களை அரபுத் தமிழில் ஏன் மொழி மாற்றம் செய்தார்.

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஓர் அரபுக்கவிஞர், அரபுத் தமிழிலும் கவிபாடும் வல்லமை உடையவர். எனவே இப்னு நூபதாவின் குத்பாக்கள் அமைந்திருந்த மொழி நடை அவரைக் கவர்ந்திருக்கலாம். நூனிய்யா, றாஇய்யா போன்ற அமைப்புக்ள இப்னு நுபாதாவின் குத்பாக்களில் பரவலாகக் காணப்படுகின்றன.

மேலும் இப்னு நுபாதாவின் குத்பாக்களின் கருத்துக்ககள் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் (ஆலிமுல் அரூஸ்) கருத்துக்களை ஒத்திருக்கின்றன. அவர்களின் நூல்களைப் படிப்பவர்கள் இதனை அவதானிக்கலாம்.

குத்பாத் இப்னு நுபாத், ஒவ்வொரு மாதத்துக்குமென ஐவந்து குத்பாக்களைத் தருகின்றது. இரண்டு பெருநாள்களுக்கும் தனித்தனி குத்பாக்களும் தரப்பட்டுள்ளன. எல்லா ஜும்ஆவுக்குமான பொதுவான இரண்டாவது குத்பா இறுதியாக அமைந்திருக்கிறது. உலமாக்கள் அரிதாக இருந்த கால கட்டத்தில் - பரம்பரைக் கதீப்மார் பணியாற்றிய போது இந்த குத்பாக்கள் பயன்பட்டிருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

இமாம் சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களால் இயற்றப்பட்ட உரைநடை இலக்கியம்

1. தக்தீப்புல் ஜானி இலா தஸ்ரீஃபீ ஜன்ஜானீ تقتيب الجاني الى تصريف زنجاني

இந்த உரைநடை புத்தகம் அரபிவினைச் சொற்களுக்கான அணி இலக்கணத்திற்குப் பெயர் பெற்ற ஜன்ஜானியின் புத்தகத்திற்கு விளக்க உரையாக அமைந்துள்ளது.

2. தவ்ளீஹுஃத்தலாலா ஃபீ தஸ்ஹீஹில் ஜலாலா توضيح الدلالة في تصحيح الجلالة

குர்ஆனில் உள்ள சில சொற்களை குறிப்பாக "அல்லாஹ்" என்ற பதத்தை எவ்வாறு சரியான முறையில் உச்சரிக்க வேண்டும் என்ற விளக்கம் இந்நூல் மூலம் தரப்பட்டுள்ளது. நூற்றியிருபது பக்கங்களைக் கொண்டுள்ள கீழக்கரையில் உள்ள

Since 1951
Jamal Academic Research Journal – An Interdisciplinary
ISSN (P) : 0973-0303 ISSN (O) : 2582-5941
JARJ-Vol-4-1-March-2023
பேராசிரியர் A.ஷம்சுத்தீன் ஜமாலி P: 387-400

அரபி பாடசாலைகளில் பயிற்றுவிக்கப் படுகிறது. "லஃப்ளுல் ஜலாலா" என்ற "அல்லாஹ்" எனும் திருநாமத்திலுள்ள 'லாம்' என்ற எழுத்தை எவ்வாறு விதிகளுக்கு உட்பட்டு உச்சரிக்க வேண்டும் போன்ற விளக்கங்கள் இந்நூலில் உள்ளன.

3. இஸ்தித்ஆஉல் அஃலாம் இலா துஆஇ உத்பத்தில் அல்லாம்

استدعاع الاعلام الى دعاء ادعية العلام

இச்சிறிய உரைநடை நூலில், இறைநேசர்களுக்கு அன்றாடம் தேவைப்படும் துஆக்கள் அடங்கியுள்ளன

4. அல்ஹவாஷீ அலா அல்பைளாவீஇ வத்திம்யுரீ வத்துர்ருல் மன்தூர்

இந்நூல் பின்வரும் நூல்களுக்கு விளக்கவுரையாக எழுதப்பட்டுள்ளது.

இமாம் நாஸிருத்தீன் அபுல் ஃகைர் அப்துல்லாஹ் இப்னு உமர் அல்காளீ அல் பைளாவீ (இறப்பு ஹிஜ்ரீ 6851 கி.பி. 1282) அவர்களின் 'அத்தஃப்ஸீர் அல்பைளாவீ" என்ற குர்ஆனின் விரிவுரைக்கு விளக்கவுரை. அஷ்ஷெய்கு ஜலாலுத்தின் அஸ்ஸீயூத்தீ (ஹிஜ்ரீ 849- 911 ஹிஜ்ரீ ஃ யுர் 1445 - 1505) அவர்களின் "அத்துர்ருல் மன்தூர்" என்ற குர்ஆனின் விரிவுரைக்கு விளக்கவுரை. முஹம்மது இப்னு மூசா அத்திம்யுரீ (732-808 ஹிஜ்ரி ஃ கிபி 1331 -1405) அவர்களின் "ஹயாத்துல் ஹயவான்" என்ற நூலுக்கு விளக்க உரை அமைந்துள்ளது.

தர்ஜமத்துல் பஹ்ஜா: (சீரத்துந்நபி) நபிகள் நாயகத்தின் வாழ்க்கைச் சரித்திரம், தமிழில் உமறுப்புலவர் "சீறாப்புராணம்" இயற்றுவதற்கு சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்கள் தமிழில் எழுதிக் கொடுத்த உரை இதுவே ஆகும்.

முதலில் இவ்வுரை தர மறுத்தபோது உமறுப்புலவர் மனம் வருந்தி அண்ணல் நபி (ஸல்) மீது 83 கவிதைகள் பாடிய வண்ணமே உறங்கி விட்டனர். அதுவே "முதுமொழிமாலை" என்னும் பெயருடன் விளங்குகிறது.

ஆய்விதழை மின் வடிவில் (**E - Form**) பார்க்க இந்த விரைவு
எதிர்வினைக்குறியை (**QR code**) வருடவும் (**Scan**).

Printed & Published by Dr. S. Ismail Mohideen, Principal, Jamal Mohamed College, (Autonomous) and published from Jamal Mohamed College, 7 Race Course Road, Tiruchirapalli-20. and Printed by Mrs. Zeenath Beevi at The Printing House, 6, Khajamalai Main Road, (Near Collectors Bungalow), Kajamalai, Tiruchirappalli -620023.
Editor-in-Chief: **Dr. S. Ismail Mohideen**